HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings

Under every main heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question. In the case of Bills and Financial Business, the entry will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill (s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee (s)', 'Council (s)', 'Corporation (s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the table of the house are indexed only under the Main heading "Papers laid on the table."

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair."

A list of abbreviations used in the Index is given below :—

A.M./Ad. Motion	Adjournment Motion.
Ann.	Announcement.
B.O.H.	Business of the House.
C.A.	Calling Attention to a Matter of Urgent Public Importance.
C.A.St.	Calling Attention Statement.
Consid.	Consideration stage of a Bill. This stage includes— (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.
Consid. Cl.	Consideration of clauses of a Bill.
D.E.E.	Demands for Excess Expenditure.
Dis. S.D.	Discussion for Short Duration on an urgent matter of Administration.
D.S.G.	Demands for Supplementary Grants.
G.A.	Governor's Address.
G.D.	General Discussion.
H.A.H. Dis./H.H.D. ..	Half-hour Discussion.
Int.	Introduction stage of a Bill.
L.A.	Legislative Assembly.
L.C.	Legislative Council.
M.	Motion.
P.M.	Privilege Motion.
R/Res.	Resolution.
St.	Statement.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 23rd July 1964

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the Clock Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I. OBITUARY REFERENCE TO SRI A. K. HANUMANTHA RAYA GOUNDER, EX-M.L.A.

MR. SPEAKER : I regret to inform the House about the death, on 1st June 1964, of Sri A. K. Hanumantha Raya Gounder, a Member of the Assembly from 1952–57 representing Vaniambadi Constituency.

I request the hon. Members to stand in silence for two minutes as a mark of expressing our sorrow and showing our respect to the departed soul.

The Members stood in silence for two minute.

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

THE HON. SRI R. VENKATARAMAN : The Short Notice Question and Question 670-A may be taken up together.

Explosion Incident (Madras City).

* 5 *S.N.Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any investigation was made into the causes of the explosion of godown in Madras City on 19th May 1964;

(*b*) the extent of loss of life and number of persons injured due to the explosion; and

(*c*) the action to be taken against the owner of the godown?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) Twenty-nine persons were injured in the accident (28 men and one woman). Twenty one persons (20 men and one woman) died in the hospital. Six persons have been discharged from the hospital and who are still in the hospital.

(*c*) A case of ' Fire Accident ' was first registered by the Police. This has since been altered and it is proposed to take action under Section 304-A, I.P.C.—causing death by negligence As the owner of the building had violated the conditions under which a licence was granted to him for storing explosives, he is liable under the Indian Arms Act.

[23rd July 1964

திரு. இராம. அரங்கண்ணல்: இவ்வளவு கொடுமையான விபத்து ஏற்பட்ட பிறகு இப்படி மக்கள் அதிகமாக வாழுகிற நெருக்கடியான இடங்களில் இத்தகைய வெடி மருந்துகள் வைக்கப் படக்கூடாது, நகருக்கு வெளியே வைக்கப்படவேண்டும் என்ற காரணத்தினால். வேறு யாராவது இந்த மாதிரி வெடி மருந்து வைத்திருக்கிறார்களா என்று அரசு கண்டறிந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த விபத்து ஏற்பட்ட வுடனே என்னுடைய சகா அமைச்சர்—ஹெல்த் மினிஸ்டர்—தன்னுடைய அறையில் அதிகாரிகளை அழைத்து 25—5—1964-ம் தேதியிலும், 30—5—1964-ம தேதியிலும் ஆலோசனை செய்து எந் தெந்த இடங்களில் இந்த மாதிரி இருக்கிறது என்று அவர்கள் கண்டுபிடிக்க பரிசோதனை செய்ய உத்திரவிட்டிருக்கிறார்கள். அந்த விதமாக பல இடங்களும் பரிசோதனை செய்யப்பட்டிருக் கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த விபத் திலே சிக்கி இறந்த குடும்பங்களுக்கு நிவாரணம் ஏதேனும் அளிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி அளிக்கப்பட்டிருந்தால் எவ் வளவு, எப்போது அளிக்கப்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நிவாரணம் கோர வேண்டியது யாரிடம் என்றால் யார் தவறாக வைத்திருந்தார்களோ அவரிடம் கோரவேண்டும். அந்த முறையில் அவர்கள் கோரு வார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த விபத்திலே 21 பேர்கள் இறந் திருக்கிறார்கள். இரண்டு மாத காலம் ஆகியும், இன்னும் இரண்டு பேர்கள் ஆஸ்பத்திரியில் இருப்பதாக அமைச்சர் விவரம் கொடுத் தார்கள். நிவாரணம் கோரி சொந்தக்காரர்கள் மீது சிவில் தாவா போடவேண்டுமென்று அரசாங்கம் தன் பொறுப்பைத் தட்டிக் கழிக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அரசாங்கத்திற்குப் பொறுப்பு இருந்தால் அதைத் தட்டிக் கழிக்காது. தனியார் செய் கிற தவறுகள் எல்லாவற்றினாலும் ஏற்படுகிற விபத்துக்கும் சர்க்கார் பொறுப்பு ஏற்று சர்க்கார் நிவாரணம் கொடுக்க வேண் டும் என்ற கொள்கையை ஏற்படுத்தி விட்டால் தனியார் எத்தனை கஷ்டம் உண்டாக்க வேண்டும் என்றாலும் உண்டாக்கிக் கொண்டி ருப்பார்கள். எல்லாவற்றிற்கும் சர்க்கார் தான் நிவாரணம் கொடுக்க வேண்டும். இதிலே பொறுப்பு யார் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். வைத்திய வசதிக்கு உதவ வேண்டும், பணம் இல்லை, வசதி இல்லை என்றால் சர்க்கார் அனுதாபத்துடன் கவனிக்கும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இதிலே அரசாங்கத்தினுடைய பொறுப்பு மறைமுகமாக இருக்கிறது. ஏனென்றால் சில இலாகா அதிகாரிகள் அஜாக்கிரதையாக இருந்ததால் தான் அது விபத்தில் முடிந்திருக்கிறது. பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு என்ன

23rd July 1964]

சலுகை கொடுக்க முடியுமோ கொடுக்கலாம் என்று அமைச்சர் சொன்னார்கள். அப்படியானால், அவர்கள் தாவா போடுவதற்கு ஸ்டாம்ப் ட்யூட்டியிலிருந்து, கோர்ட் கட்டணங்களிலிருந்து விதி விலக்கு செய்ய உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சிவில் ப்ரோசீஜர் கோடினால் கவர்ண் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு பணம் போட்டு தாவா போடுவதற்கு வசதி இல்லை என்று தெரிந் தால் 'இன்ஃபார்மா பாப்பரிஸ்' சூட் போடலாம்.

திரு. ப. உ. சண்முகம்: சில நகராட்சிகளில் குடியிறுப்புப் பிராந்தியங்களில் வெடி மருந்து தயாரிக்கும் இடங்களையும், சேகரித்து வைக்கும் கோடவுன்களையும் அமைத்திருக்கிறார்கள். இனிமேலாவது அந்த முறையில் நகர எல்லைக்குள் இருக்கக் கூடாது என்று அரசாங்கம் உத்திரவு பிறப்பிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போதே அந்த விதமான உத்திரவு இருக்கிறது. அதாவது லைசென்ஸ் பெற்றுத் தான் அவர்கள் இந்தவிதமான எக்ஸ்ப்ளோசிவ்ஸ் வாங்க வேண்டும் என்று இருக்கிறது. லைசென்ஸ் கொடுக்கிற போது அவர்கள் குடி யிறுப்பு பகுதிகளில் வைத்துக்கொள்ளக் கூடாது என்ற விதிகளும் இருக்கின்றன. விதிகளை இன்னும் கடுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னால் நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன் : ஒருவர் வெடி மருந்து போன்ற ஆபத்தான பொருள்களை ஒரு இடத்தில் ஸ்டோர் செய்ய லைசென்ஸ் வாங்கும் போது, அந்த இடத்திலே தான் வைக்கப்பட்டிருக்கிறதா, ஆபத்து இல்லாமல் வைக்கப்பட்டிருக்கிறதா என்று இன்ஸ்பெக்ஷன் செய்ய சட்டத்தில் ப்ரொவிஷன் இருக்கிறதா ? அப்படியானால் இது சம்பந்தப்பட்ட மட்டில் அந்த மாதிரி இன்ஸ்பெக்ஷன் செய்யப் பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இன்ஸ்பெக்டர் ஆஃப் எக்ஸ் ப்ளோசிவ்ஸ் அவர்களுடைய பல கடமைகளில் முக்கியமான ஒன்று ஸ்டோர் செய்கிற இடத்தில் சரியான பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருக்கிறதா, குறித்த இடத்தில் தான் வைத்திருக் கிறார்களா என்று பார்ப்பது ஆகும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Government frame rules for the purpose of allowing these merchants to store explosives in a particular area, as is being done to-day in the case of the location of industrial areas?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அது சாதாரணமாக செய்யப்படுகிறது. உதாரணமாக சாத்தூர், சிவகாசி முதலிய இடங்களில் போய் பார்த்தால் வெடி மருந்து வைக்க ஊருக்கு வெளியில் தனியாக இடம் ஒதுக்கி, அந்த இடத்தில் தான் வைக்க வேண்டும் என்று விதி செய்திருக்கிறார்கள். நகரப் புறங்களில், மக்கள் வசிக்கின்ற இடங்களில் வைக்கக்கூடாது என்று விதிகளும்

[23rd July 1964

திரு. இராம. அரங்கண்ணல்: 'இல்லை' என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அடிப்பட்ட கவுன்சிலர் அந்த அதிகாரிகளின்மீது வழக்கு தொடர்வதற்கு, அதற்காக டாக்டர் சர்டிபிகேட் முதலிய எல்லாவற்றையும் வைத்திருக்கிறார். ஆகையினால், எந்தக் காரணத்தைக் கொண்டு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொன்னார்கள்.

கனம் திரு. கோ. பூவராகன்: அவரை 22-ம் தேதி 'அரெஸ்டு' செய்தார்கள். 25-ம் தேதி விடுதலை செய்தார்கள். 6-ம் தேதி அன்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இது சம்பந்தப்பட்ட நான்கு, ஐந்து பேர்களுடைய பெடிஷனோடு, அவர்களுடைய கோரிக்கையையும் அனுப்பி வைத்தார்கள். அதற்கு மேலே விசாரணைக்கு 8-ம் தேதி வரும்படியாக அவர்கள் கோரப்பட்டார்கள். 8-ந் தேதி ஒருவருமே வரவில்லை. திரும்பவும் அடிஷனல் ஐ.ஜி. அவர்களை போன்மூலம் காண்டாக்ட் செய்ததிலே இரண்டு பேர்கள் வந்திருக்கிறார்கள். திரு. கிருஷ்ணன், திரு. துளசிங்கம் இரண்டு பேர்களும் ஸ்டேட்மெண்டு கொடுத்திருக்கிறார்கள். அந்த ஸ்டேட்மெண்டுகளின் பேரில் ஐ.ஜி. ஒரு முடிவுக்கு வந்து, இது உண்மையில்லை, அவ்வாறு நடக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த உறுப்பினர் தாக்கப்பட்ட நேரத்தில் நான் சிறைச்சாலையில் இருந்தேன். அப்பொழுதே இந்தப் புகார் வந்தது. இது சம்பந்தமாக விசாரணை நடந்த பொழுது, சிறைச்சாலை அடிஷனல் சூபரிண்டெண்டெண்டு அவர்களும், மற்றவர்களும் விசாரணை செய்யப்பட்டார்களா? அவர்கள் என்ன விவரங்கள் சொன்னார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

கனம் திரு. கோ. பூவராகன்: இந்தப் புகாரில் என்னென்ன காரணங்கள் கூறப்பட்டனவோ, அது சம்பந்தப்பட்டவர்களெல்லாம் விசாரிக்கப்பட்டார்கள். அந்த விசாரணையிலிருந்து நான் வைத்திருக்கிற, எனக்குக் கிடைத்திருக்கிற விவரங்களிலிருந்து சொன்னது, அவ்வாறு ஒன்றும் நடைபெறவில்லை என்பதுதான்.

திரு. இராம. அரங்கண்ணல்: இது மிகவும் முக்கியமான சம்பவம். சிறைச்சாலையில் கைதிகளை அடிக்கக்கூடாது என்பது ஒன்று. இரண்டாவது ரிமாண்டு கைதிகளை அடிப்பது மிகவும் மட்டரகம். இது முக்கியமான பிரச்சனையாக இருப்பதால், ஒரு 'ஜுடிஷியல் என்குயரி' வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் தயாராக இருப்பார்களா?

கனம் திரு. கோ. பூவராகன்: இதை விசாரிப்பதற்கு 'ஜுடிஷியல் என்குயரி' ஒன்றும் அவசியமில்லை என்று நான் கருதுகிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, 'ஐ.ஜி. ஆப் பிரிசன்ஸ்' அவர்கள் விசாரணை செய்ததாக கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சில அதிகாரிகள்

23rd July 1964]

அதிகாரிகளை மட்டுமே விசாரித்து ஐ.ஜி. ஆப் பிரிசன்ஸ் இந்த முடிவுக்கு வந்தார்களா? மற்றவர்களையும், அந்தக் கட்சியைக் கண்டவர்களையும் விசாரித்து அதன் பேரில் ஐ.ஜி. ஆப் பிரிசன்ஸ் ஒரு முடிவுக்கு வந்தார்களா என்பதை அறியலாமா?

கனம் திரு. கோ. பூவராகன்: எல்லோருக்கும் அழைப்புக் கொடுத்தார்கள். ஆனால் வரவில்லை, இரண்டு பேர்கள்தான் வந்தார்கள். அவர்கள் சொன்னதை வைத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரிகளை வைத்து, விசாரணை செய்து, இவ்வாறு ஒன்றும் நடைபெறவில்லை என்று ஐ.ஜி. ரிபோர்ட்டு அனுப்பியிருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: சிறைச்சாலைக் கைதிகளை சாதாரணமாக நடத்துவதற்குப் பதிலாக, இப்படி பிரம்பினால் அடிக்கிற காட்சி தினந்தோறும் நடைபெற்றுவருகிறது. இதை . . . . .

MR. SPEAKER: We are now concerned with a particular case.

SRI K. A. MATHIALAGAN: I saw the particular incident.

MR. SPEAKER: The hon. Member may please give notice of another question.

SRI K. A. MATHIALAGAN: I was very near the block.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்பொழுது கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட கேள்வியில் . . . . . .

SRI K. A. MATHIALAGAN: I want to correct it please.

THE HON. SRI R. VENKATARAMAN. Then all right.

SRI K. A. MATHIALAGAN: It happened near my block.

MR. SPEAKER: We are concerned with a particular incident. There is no meaning in going on making general allegations. If the hon. Member wants anything about this particular case, he can ask but not on other matters.

SRI K. A. MATHIALAGAN: Daily they used to beat.

MR. SPEAKER: The Hon. Member may please resume his seat.

திரு. இராம அரங்கண்ணல்: ஐ.ஜி. ஆப் பிரிசன்ஸ் சம்பந்தப்பட்டவர்களுக்கெல்லாம் அழைப்பு அனுப்பியிருந்தார்கள், வரவில்லை என்று சொன்னார்கள். எனக்கு நன்றாகத் தெரியும். இரண்டு கவுன்சிலர்களை திரு. எஸ். எம். கிருஷ்ணன், திரு. துளசிங்கம் என்பவர்களை வரச்சொல்லி ஐ.ஜி. ஆப் பிரிசன்ஸ் விசாரணை நடத்தினார்கள். அந்த விசாரணையில் இரண்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் வாக்குமூலம் கொடுத்ததை

[23rd July 1964

அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்களா? இதுவரையில் பார்வையிடாமல் இருந்தால், அவர்களை பார்வையிட தயாராக இருக்கிறார்களா?

கனம் திரு. கோ. பூவராகன்: அவர்கள் எல்லோரும் கொடுத்த ஸ்டேட்மெண்டை நான் பார்வையிட்டேன். அதற்குப் பிறகு ஐ.ஜி. ஆப் பிரிசன்ஸ் அவர்களுடைய குறிப்பில் 'இவர்கள் வேண்டுமென்றே கற்பனையாக அடிஷனல் சூபரண்டெண்டு பேரில் இவ்வாறு சொல்லுகிறார்கள் என்று எழுதி இம்மாதிரி நடந்ததாகத் தெரியவில்லை, மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு அவசிய மில்லை என்று அரசாங்கத்திற்கு ரிபோர்ட்டு எழுதி அனுப்பியிருக் கிறார்கள்.

MR. SPEAKER: Both the question and answer relate to a document which is not before the House. The hon. Member is asking about a particular document. The Speaker does not know anything about it. Nobody knows about it.

SRI M. KALYANASUNDARAM: I want to make a submission Sir. This is a very important matter. So I would request the Hon. Speaker to call for the file and examine the records, viz., the statement given by the complainants and the method by which the Inspector-General of Prisons enquired. The file may be called for by the Hon. Speaker and the matter may be examined in the presence of the acting Leader of the House and the Leader of the Opposition.

MR. SPEAKER: Is there any rule under which the Speaker can call for any file of Government? I don't think there is any such rule.

SRI M. KALYANASUNDARAM: Now the matter has not been placed before the House. The Hon. Minister has referred to an enquiry and report by the Inspector-General of Prisons. When he has made a reference, the House is entitled to know it.

MR. SPEAKER: It must come under proper procedure. Under what authority is the hon. Member entitled to know the contents of the document?

SRI M. KALYANASUNDARAM: Whatever is referred to by Hon. Ministers in this House, the House is entitled to know all the particulars. So, I would suggest that the Hon. Speaker may call for the papers and examine the matter.

THE HON. SRI R. VENKATARAMAN: I do not think the hon. Member Sri M. Kalyanasundaram, with all his experience as a legislator is right. If an Hon. Minister 'quotes' (I repeat the word 'quote') from any document, the whole document should be placed before the House. But if an Hon. Minister refers to something, it should not be placed before the House. There is no such rule to place the same on the table of the House.

MR. SPEAKER: The hon. Member Sri Rama Arangannal has also made reference to a statement.

23rd July 1964]

SRI M. KALYANASUNDARAM: When we are on this question if a particular reference is made to any papers pertaining to any department, the Hon. Speaker can demand that it should be produced before the House. The Hon. Minister must be prepared to produce it. Otherwise he should not refer to it. That is the procedure.

THE HON. SRI R. VENKATARAMAN: I want to know the authority for his proposition which the hon. Member Sri M. Kalyanasundaram has enunciated. There are definite rules of procedure for all legislatures. There are rules of procedure which we have adopted from the House of Commons. The rule is, if I 'quote' any portion from any document, the document may contain portions which are favourable to the other side. Therefore I am bound to place the whole document before the House. If I say that I have received information from the report of same Government Officers, then it is not the practice in any Parliament to call for placing of that document as a document of the House.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத்தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சனையில் ஈடுபட்டிருக்கிற திரு. எஸ். எம். கிருஷ்ணன் அவர்கள் தாக்கப்பட்டார்கள் என்றும், தாக்கப்படும்பொழுது மற்றொரு மாநகர ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. துளசிங்கம் பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றும் நான் ஐ.ஜி. ஆப் ப்ரிசன்ஸ் அவர்களிடம் புகார் செய்திருந்தேன். அதன் பேரில் தக்க நட வடிக்கை எடுக்கப்படும் என்று அவர்கள் கூறினார்கள். அவர்கள் இருவரையும் அனுப்பி வைக்கும்படி சொல்லியதன் பேரில் அவர்கள் இருவரையும் அனுப்பி வைத்தேன். அதற்குப் பிறகு விசாரணை நடந்திருக்கிறது. அதற்குப் பிறகு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற விவரம் என்னிடம் வரவில்லை. இந்த மன்றத்தில் கனம் அமைச்சர் அவர்கள் அவ்வாறு தாக்கப்பட வில்லை என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

அவற்றின் முழு விவரங்களையும் அறிய வேண்டிய நிலைமையில் இந்தப் பிரச்சனை இருக்கிறது. ஆகவே ½ மணி நேரம் இதைப் பற்றி விவாதத்திற்கு ஒதுக்கித் தரவேண்டும் என்று கோறுகிறேன். அப்பொழுது இந்த விவரங்களை வைத்து முழு நிலைமையையும் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே, ½ மணி நேர விவாதத்திற்கு ஒத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம். சபாநாயகர் அவர்களே, இது சம்பந்தமாக மேலும் என்னென்ன விவரங்கள் வேண்டுமோ அவைகளைக் கேள்வி மூலம் தெரிந்து கொள்ளலாம். இப்பொழுது சர்க்காருக்கு வந்திருக்கிற அறிக்கையிலே இந்த வித மான சம்பவம் ஏற்படவில்லை என்று இருக்கிறது. அது சரியல்ல என்று சொல்லுவதற்கு நம்முடைய 'ரூல்ஸ் ஆப் ப்ரொசிஜரில்' எந்தவிதமான இடமும் கிடையாது. விவாதிக்க வேண்டுமென்று சொன்னால் சர்க்கார் கொடுக்கிற தகவலை வைத்து அதற்கு மேற் கொண்டு என்ன விவரம் வேண்டுமென்று சொல்லக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இருந்தால் தான் விவாதத்திற்கு இடம் இருக்கும்.

சர்க்கார் தகவல்படி இந்த விதமான சம்பவம் ஏற்படவில்லை என்று சொல்லுகிறோம். மேற்கொண்டு விவாதத்திற்கு என்ன இடம் இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. கனம் அங்கத்தினர் ஒரு புறத்தில் இது நடந்தது என்று சொல்லுவார்கள். கனம் மந்திரி அவர்கள் இது நடக்கவில்லை என்று சொல்லுவார்கள். திருப்பி திருப்பி மீண்டும் நடந்தது, நடக்கவில்லை என்று பேசுவதற்கு விவாதம் தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

9.00 a.m. திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்த விஷயத்திலே தக்க விசாரணையை நடத்தி, தக்க தீர்ப்புக் கிடைக்கும் என்ற எண்ணத்தில் நாங்கள் இருந்துகொண்டு இருந்தோம். இப்பொழுது அப்படி நடக்கவில்லை என்று தெரிவதால், மேற்கொண்டு என்ன முயற்சிகள் எடுக்கலாம் என்பதைக் கண்டறிய, மீண்டும் ஒரு விசாரணை நடத்தி தக்க தீர்ப்புக் கூறுவதற்கு இதிலே இடமிருக்கிறது. ஆகவே இந்தப் பிரச்சனையை நன்கு விவாதிக்க ஒரு அரை மணி நேர விவாதத்திற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று மீண்டும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Has the party gone to the Court of Law? Has the party got the complaint, medical certificate and other documents? If the party is not satisfied with the police investigation, then he can go to a Court of Law. Therefore, I want to know whether the party has gone to Court of Law.

திரு. இராம. அரங்கண்ணல்: அவர்கள் கோர்ட்டுக்குப் போனதாகத் தெரியவில்லை. நான் சமர்ப்பிக்க விரும்புவது என்னவென்றால், அமைச்சர் அவர்களே நீதிபதியாக இருந்து, இரண்டு பார்ட்டிகளையும் கூப்பிட்டு விசாரித்தாலும், அதை ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

MR. SPEAKER: The Hon. Minister is telling that the enquiry is made by the Police Officers. According to him, no such occurrence took place. According to the councillor, he was assaulted. If he has got the complaint, medical certificate, etc., the proper procedure according to the law of the country is that he should go to the Court of law. Has he gone to the Court?

SRI M. KALYANASUNDARAM: This has not happened outside. We cannot expect every person to know the rules and procedures. If I was there, from inside the jail itself, I would have addressed the Court and dragged the concerned officer. Probably in this case, the party might have been ignorant.

MR. SPEAKER: Under the circumstances, I do not think he is ignorant.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த சம்பவம் சிறையிலே நடந்ததினால் இங்கு கேள்வி போடமுடிகிறது.. வெளியிலே நடந்தால் சட்டசபையில் கேள்விபோட முடியாது. ஊரிலே இரண்டு பேர்கள் அடித்துக்கொண்டால், அதற்கு சட்டசபையில் கேள்வி போடமுடியாது. சிறையிலே நடந்தது உண்மையா என்று விசாரிக்கப்பட்டது. சர்க்கார் தரப்பிலே இன்ஸ்பெக்டர்

ஜனரல் ஆப் பிரிசன்ஸ் விசாரணை செய்து ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். மந்திரி அவர்கள் அந்தவிதமான சம்பவம் நடக்கவில்லையென்று தெரிவித்தார். அது தவறு என்று சொன்னால் கோர்ட்டுதான் அதைத் தீர்மானம் செய்யவேண்டுமே தவிர, கனம் சபாநாயகர் அவர்களோ அல்லது நாங்களோ தீர்மானம் செய்யமுடியாது. மாறுபட்ட அபிப்பிராயம் இருப்பதால் அதை ஏதாவது வேறு ஸ்தாபனத்தின் மூலமாக தீர்த்துக் கொள்ளவேண்டுமென்றால், கோர்ட்டு மூலமாகத்தான் தீர்த்துக்கொள்ளவேண்டும்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் பிரிசன்ஸ் விசாரணை செய்தார்கள் என்று சொல்லப்பட்டது. இதை விசாரிக்கவேண்டுமென்று நான்தான் புகார் செய்தேன். அந்த விசாரணையின் முடிவு என்னவாயிற்று என்று எனக்குத் தெரிவிக்கப்படவில்லை; விசாரிக்கப்பட்டவர்களுக்கும் தெரிவிக்கப்படவில்லை. இம்மாதிரியான ஒரு சம்பவம் நடக்கவில்லையென்று இங்கே தான் அமைச்சரவர்களால் கூறப்படுகிறது. இதற்கு மேல்தான் கோர்ட்டுக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்படும். தக்க பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நாங்கள் இருந்தோம். மேற்கொண்டு விசாரணை செய்வதற்கும் நிலைமைகளை நன்கு ஆராய்வதற்கும் அரை மணிநேர விவாதத்திற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The matter should go to the Court. What is the use in wasting the time of the House over it.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்தப் பிரச்சனையைப்போல் இது மாதிரி சிறைச்சாலைகளில் பல சம்பவங்கள் ஏற்பட்டு மற்றவர்களுக்கும் அபாயம் ஏற்படுவதினால் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்ன யோசனையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கனம் சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தாங்களே ஆளுங்கட்சித் தலைவரையும், எதிர்க்கட்சித் தலைவரையும் அழைத்து வைத்து ஒரு விசாரணை நடத்தலாம். சிறைச்சாலைகளில் யாரை வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் அடிக்கலாம் என்ற நிலைமை இருப்பதினாலே திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்ன யோசனையை ஏற்றுக்கொண்டு இது சம்பந்தமான தஸ்தாவேஜுகளை வரவழைத்து, மேற்கொண்டு விசாரணைச் செய்யவேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: If the hon. Member gives me that power, I will be too glad to possess it. Of course it is an additional power to the Speaker of which I will be proud.

SRI M. KALYANASUNDARAM: This is a very serious matter concerning Jail Administration. Irrespective of . . .

(Some hon. Members were murmuring)

MR. SPEAKER: There should not be any murmuring or any speech, unless the matter comes under the rules of procedure.

[23rd July 1964

விறகு பற்றாக்குறை

* 645 கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் விறகுப் பற்றாக்குறை இருக்கிறதா?

(இ) ஆமெனில், அதைப்போக்க அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன?

கனம் திரு. ந. நல்ல சேனுபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) இல்லை.

(இ) வினு எழ இடம் இல்லை.

Cancer

* 646 Q.—SRI V. S. S. MANI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) what is the incidence of Cancer Cervix and Cancer body uterus in the Erskine Hospital, Madurai;

(b) whether any Radium was supplied to that hospital for treatment; if not the reasons therefor;

(c) the ratio of incidence of Cancer Cervix cases in Madurai Hospital when compared to Madras Maternity Hospital, Egmore for Radium treatment; and

(d) the measures taken so far to, supply Radium to Madurai Hospital?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM:

(a) The incidence of cancer cervix and cancer body uterus ranges from 4.22 to 4.74 per cent and from 0.02 to 0.08 per cent respectively.

(b) Radium needles supplied to the hospital in 1956 are being used for treatment of cancer. For want of radium tubes, they have not been supplied to the institution for treatment of Cancer cervix.

(c) The ratio is about 2:5.

(d) The question of purchasing radium tubes was examined and given up as it involved considerable expenditure. The Government have decided that old and broken radium needles of 392.83 mgms. should be got repaired and remade by the Chemical Service Company, London. The needles are being despatched to the firm.

Degree course in Nursing

* 647 Q.—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government are in receipt of a resolution from the Government Nurses' Association urging for the starting of degree courses in Nursing leading to B.Sc. and M.Sc. qualifications; and

23rd July 1964]

(b) if so, the action taken theron?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இது சம்பந்தமாக ஒரு தீர்மானம் மருத்துவத் துறை டைரக்டருக்கு வந்துள்ளது.

(இ) அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மூலிகைப் பண்ணை

* 650 கேள்வி—திரு. வி. ஆர். பெரியண்ணன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குற்றாலம், கொடைக்கானல், ஏற்காடு முதலிய இடங்களில் உள்ளதுபோல கொல்லிமலையில் ஒரு மூலிகை கூட்டுப்பண்ணை அமைக்க அனுமதி வழங்க உத்தேசமுண்டா?

(இ) தனியார்களுக்கு மூலிகைப் பண்ணை அமைக்க அனுமதி வழங்க உத்தேசமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) இல்லை.

திரு. வி. ஆர். பெரியண்ணன்: தலைவர் அவர்களே, கொல்லிமலை பகுதிகளில் மூலிகைகள் கிடைக்கின்றன என்று புலவர்கள்கூட, எழுதியிருக்கிறார்கள். ஆகவே அங்கு ஒரு பண்ணையை நல்ல முறையிலே அமைக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், அதைக் குற்றாலத்தில் ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். ஆகவே, மற்ற இடங்களில் வைக்கலாமா என்பதைப் பற்றி ஆராய சந்தர்ப்பம் இல்லை.

கிராமக் குடிதண்ணீர்த் திட்டம்

* 651 கேள்வி.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் கிராமங்களில் ஏற்படும் தொத்து நோய்களைத் தடுப்பதற்கு ஐந்து மைல் சுற்றளவில் உள்ள பல கிராமங்களை இணைத்து ஒரே இடத்தில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டத்தை உருவாக்கி விநியோகம் செய்யும் திட்டம் ஒன்றை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா?

(இ) மதுரை ஜில்லா, நிலக்கோட்டை தாலூகா, பாலமேடு பிர்க்காவில் மேலே கூறிய இலைப்புத் திட்டம் வேண்டுமென்று சோழவந்தான் தொகுதி எம்.எல்.ஏ. இடமிருந்து அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் வந்ததா?

(உ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) அத்தகைய திட்டம் எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

[23rd July 1964

(இ)—(உ) : குடிநீர் வழங்கல் துப்புரவு தேசிய (கிராமத்) திட்டத்தின் கீழ் பாலமேடு கிராமத்தில் மேல்நிலைத் தொட்டிகளை அமைக்கலாம் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் 1963 ஏப்ரலில் முறையீடு செய்துகொண்டார். இத்திட்டத்தின் கீழ்ப் புதிய வேலைத் திட்டம் எதுவும் எடுத்துக்கொள்ள முடியாததால், இந்தக் கிராமத்தில் மேல் நிலைத் தொட்டிகளை அமைக்கும் வேலைத்திட்டம் கிராமப் பணிகள் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டு நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று கனம் அங்கத்தினருக்கு 1964 ஜனவரியில் பதில் கொடுக்கப்பட்டது.

சினிமாப்பட தணிக்கை

*652 கேள்வி.—திரு. மா. இராசாங்கம் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் சினிமாப் படங்கள் தணிக்கை செய்யப்படவேண்டிய விதிமுறைகளைப் பற்றி தமிழ்நாடு அரசாங்கத்திடம் தணிக்கை குழு கலந்து ஆலோசித்ததா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

திரு. மா. இராசாங்கம் : சார், தமிழ்ப் பட தணிக்கையாளர்கள் சிங்கார காட்சி பொருத்தமட்டில் இந்தியபட தணிக்கையாளர்களை விட கண்டிப்பாக நடக்கிறார்களே, அதற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை.

பிச்சைக்காரர்கள் விடுதி

*654 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரத்தில் பிச்சைக்காரர்கள் விடுதி ஒன்று திறக்கப்பட்டு இருக்கிறதா ?

(இ) ஆமெனில், தனியார் கட்டிடத்திலா அல்லது அரசாங்க கட்டிடத்திலா ? வாடகை என்ன ?

(உ) தற்சமயம் தங்கி இருக்கும் பிச்சைக்காரர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM :
(a) Yes.

(b) The Beggar Home is located in a private building on a rent of Rs. 200 per month subject to the certificate of reasonableness of rent being furnished by the Executive Engineer, Public Works Department.

(c) Four.

23rd July 1964]

காலரா (திண்டிவனம் தாலூகா)

*658 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம் மைலதைச் சுற்றியுள்ள ஆலக் கிராமம், வீடூர் முதலிய சிற்றூர்களில் காலரா கண்டு அநேகர் இறந்தது உண்மையா ?

(இ) மைலம் பங்குனி உத்திர திருவிழாவில் எட்சக்கணக்கான மக்கள் கூடுவதால் காலராவால் பாதிக்கப்படுவார்கள் என்று கருதி சப்-கலெக்டரும், மாவட்ட கலெக்டரும் மேற்படி திருவிழா நடைபெறக்கூடாது என்று உத்திரவிட்டது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(உ) மேற்படி கோவில் சாமியார் அரசாங்கத்தை அணுகி மேற்படி உத்தரவை ரத்து செய்து உற்சவம் நடைபெற அனுமதி வாங்கப்பட்டது உண்மையா ?

THE HON. SRI S. M. A. MAJID :
(a) No.

(b) Considering the then prevalent Cholera infection in the Mailam Panchayat Union area, the District Health Officer, South Arcot had requested the Tahsildar, and Taluk Magistrate (Executive), Tindivanam to ban the festival. But since there were no cases of Cholera from 15th March 1964 near about the festival area and the Commissioner, Panchayat Union Council and the temple trustee agreed to provide the necessary arrangements, the District Health Officer, South Arcot addressed the Tahsildar, and Taluk Magistrate (Executive), Tindivanam, to cancel the orders banning the festival.

(c) The temple trustee addressed the District Health Officer in this regard.

State Transport

*659 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) Whether it is a fact that Sri R.S. Veerappa Chettiar, M.L.A. has brought to the notice of the Government during November, 1963 for the stoppage of the Madras-Coimbatore, Krishnagiri-Madurai State Transport buses at Karimangalam for the convenience of the public; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN :
(a) Yes.

(b) The suggestion is not acceptable.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : சார், கரிமங்கலம் கிராமம் ஒரு முக்கியமான வியாபார ஸ்தலம், மேஜர் பஞ்சாயத்தாக இருக்கிறது. அது கிருஷ்ணகிரி, தர்மபுரி முதலிய இடங்களிலிருந்து

[23rd July 1964

15 மைல் தூரத்தில் இருக்கிறது. ஆகவே ஸ்டேட் பஸ்ஸுகளை அங்கே நிறுத்த மறுபரிசீலனை செய்து ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மோட்டார் வாகன விதிகளின் படி எக்ஸ்பிரஸ் பஸ் 25 மைலுக்கு ஒரு இடத்தில்தான் நிறுத்தலாம். அந்த முறைப்படி சென்னையிலிருந்து கோவைக்குப் போகும் வழியில் 25 மைல்கள் கணக்கிடப் பட்டு எவ்வளவு இடங்களில் நிறுத்த முடியுமோ, அவ்வளவு இடங்களில் நிறுத்துகிறோம்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : பல இடங்களில் 10, 15 மைல் தூரத்தில் கூட நிறுத்துகிறார்கள். ஆற்காட்டிலிருந்து வேலூருக்கு 13 மைல்தான். அங்கே நிறுத்தப்படுகிறது. அந்த மாதிரி சலுகை இங்கேயும் தர சர்க்கார் முன்வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மொத்தத்தில் எவ்வளவு தூரம் இருக்கிறதோ அதை 25-ஆல் வகுத்து எவ்வளவு இடத்தில் நிறுத்தலாமோ அவ்வளவு இடங்களில் நிறுத்துகிறோம். 10, 15 மைலில் நிறுத்துகிறார்கள் என்று சொன்னால், அடுத்த ஸ்டாப் 35. 40 மைலில்தான் இருக்கும். அந்த இடம் அவ்வளவு முக்கியத்துவம் ஆனதும் இல்லை, எக்ஸ்பிரஸ் பஸ்ஸை அங்கே நிறுத்தவும் எங்களுக்கு வசதி இல்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, will the Government come forward to waive the rules so that the importance of the places may be taken into consideration and buses may be stopped at those places?

THE HON. SRI R. VENKATARAMAN : If we waive the rules, the express buses will become ordinary buses.

*660 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னைப் பல்கலைக் கழக பொருளாதார ஆராய்ச்சிப் பகுதி மாணவர்களின் பயிற்சிக்காக சென்னை நகர பஸ் போக்குவரத்துக் கணக்குகளைப் பார்க்க அனுமதி கோரப்பட்டதா?

(இ) ஆமென்றால், அனுமதி தரப்பட்டதா?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) A request to consult the State Transport records in connection with a research project was received.

(b) The particulars required were furnished in answer to a questionnaire.

*661 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரசாங்க பஸ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததன் காரணங்கள் யாவை?

23rd July 1964]

THE HON. SRI R. VENKATARAMAN : On the night of 28th April 1964 at about 9 p.m. a bus of Kanyakumari Branch of the Madras State Transport Department and a private lorry were involved in an accident near Sucheendram. The Sub-Inspector of Police, Sucheendram who made an investigation arrested the driver of the State Transport bus. The driver was kept in the lock up in the Police station until he was released on bail a few hours later. The driver had alleged that he was ill-treated by the Sub-Inspector while he was in the Police station. Because of the driver's allegations the workers of the Kanyakumari Branch went on strike from 9 a.m. on 29—4—1964. The services were resumed in the early morning of 1st May 1964.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அந்தத் தொழிலாளர் கூறிய புகார் பற்றி சப்-இன்ஸ்பெக்டர் இல்-ட்ரீட் செய்தது பற்றி விசாரிக்கப்பட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுபற்றி விசாரிக்கப்பட்டது, அவர் ஒன்றும் இல்-ட்ரீட் செய்யவில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சார், விசாரணை செய்கையில், சம்பந்தப்பட்ட டிரைவரையும் அவரோடு இருந்த கண்டக்டரையும் விசாரித்தார்களா? அடித்த காயங்கள் இருந்ததன் காரணங்களை விசாரணை செய்பவர்கள் பரிசீலனை செய்தார்களா?

கனம் திரு. ஆர். கவங்கட்டராமன் : விசாரணை செய்த அதிகாரிகள் என்னென்ன செய்தார்கள் என்று என்னால் சொல்ல முடியாது. விசாரணை செய்ததில் தவறு இருந்தால், நான் முதல் கேள்வியில் சொன்னது போல், கோர்ட்டிலே தாவா கொடுக்கலாம்.

திரு. இரா. பொன்னப்ப நாடார் : எத்தனை மணி நேரம் அந்த டிரைவர் போலீஸ் ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருந்தார் என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைப்பற்றி இரண்டு கருத்து சொன்னார்கள். சிலர், நான்கு மணி நேரம் வைத்திருந்ததாகச் சொன்னார்கள். சிலர், இரண்டு, இரண்டரை மணி நேரம் வைத்திருந்ததாகச் சொன்னார்கள். இரு சாராரும் மணி பார்க்கவில்லை என்பது தான் தெரிந்தது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தப் பிரச்னையிலும், 'கோர்ட்டுக்குப் போகலாம்' என்று அமைச்சர் அவர்கள் வக்கீல் யோசனை மாதிரி கூறுகிறார்கள். ஜெயில் கஸ்டடி என்றால் அது வேறு விஷயம். போலீஸ் கஸ்டடியில் இருக்கிறபோது, போலீசின் மீது 'டார்ச்சர் கம்ப்ளெயின்ட்' செய்தால், அந்த கம்ப்ளெயின்டை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டை வைத்து விசாரிக்க அரசாங்கம் உத்தரவிடவேண்டும் என்பது விதி. அப்படியிருக்க, அந்த விதியின்படி இதில் ஏன் அம்மாதிரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

[23rd July 1964

திருவண்ணுமலை, ஒகெனேக்கல், கன்னியாகுமரி ஆகியவைகளில் மூன்ரும் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மாநில அரசாங்க நிதியைக் கொண்டே சுற்றுலா மாளிகைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டது. தேசிய நெருக்கடி நிலைமை காரணமாக இந்த வேலை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

திரு. ப. உ. சண்முகம்: தேசிய நெருக்கடி நிலைமை காரணமாக சில இடங்களில் சுற்றுலா மாளிகைகள் கட்டும் வேலை ஒத்திப் போடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நேற்றையதினம் மராமத்திலாகா அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, தேசிய நெருக்கடி நிலைமை காரணமாக ஒத்திப்போடப்பட்ட பல கட்டடங்களைக் கட்டி முடிப்பது பற்றி ஆலோசித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, இந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

கனம் திரு. கோ. பூவராகன்: எது அவசரமாகக் கவனிக்கப் படவேண்டுமோ அதற்கெல்லாம் கவனம் காட்டப்படுகிறது. அவசியம் என்று கருதுகிறபோது, நிதி இடம் தருகிறபோது, இது கவனிக்கப்படும்.

பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டிடம்

* 667 **கேள்வி—திரு. சீ. சிவசுப்ரமணியன்:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா, குமராட்சி பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அலுவலகம் கட்ட வேண்டியதன் அவசியம் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) & (இ) குமராட்சி பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்ட வேண்டிய தேவை குறித்து எதுவும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. ஆயினும், தேசிய நெருக்கடியை உத்தேசித்து புதுக் கட்டிடங்கள் கட்டுவதற்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது. இத்தடை படிப்படியாக நீக்கப்பட்டு வருகிறது. 1964–65-ல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்ட அனுமதி வழங்குவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. ப. உ. சண்முகம்: இந்த மாநிலத்தில் இன்னும் எத்தனை பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கட்டடங்கள் கட்டப்படாமல் இருக்கின்றன என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

23rd July 1964]

திரு. எம். தண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து, ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இரண்டு கூட்டுமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கு உத்தேசம் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், ஒரு வருஷம் ஆகியும் இன்னும் உத்தரவு கிடைக்கவில்லை. கலெக்டரவர்கள் சிபார்சு செய்து அனுப்பிய கட்டடங்களையாவது உடனடியாகக் கட்ட அரசினர் உத்தரவிடுவார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஒவ்வொரு டெவலப்மென்ட் டிஸ்ட்ரிக்டுக்கும் ஒரு கட்டடம் வீதம் கட்டவேண்டுமென்ற உத்தேசத்தில், எந்த பஞ்சாயத்து யூனியனுக்கு அவசரமாகவும் அவசியமாகவும் கட்டடம் தேவையாக இருக்கிறதோ, அதைக் குறிப்பிடும்படி கலெக்டரைக் கோரியிருக்கிறோம். தகவல் வந்தவுடனே அனுமதி வழங்கப்படும்.

திரு. எம். தண்டாயுதபாணி: ஜில்லா அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் கலெக்டரைக் கேட்டபோது, ஏழு மாதங்களுக்கு முன்பு அவர் சிபார்சு செய்து அனுப்பிவிட்டதாகவும், அரசினரின் ஆணையை எதிர்பார்த்திருப்பதாகவும் கூறினார்கள். அதுபோல் அனுப்பியிருந்தால், அதன் மீது உடனடியாக உத்தரவிட அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அம்மாதிரி தகவல் இல்லை. தாமதம் இருந்தால் கவனிக்கலாம்.

கூட்டுறவு சாகுபடி

* 668 **கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சர்க்கார் புறம்போக்குகள், அளம்புறம்போக்கு நிலங்கள் கடற்கரை ஓரப்பகுதிகளில் நாகை, திருத்துறைபூண்டி தாலூக்காக்களில் உள்ள நிலங்கள் ஆகிய இவைகளில் கூட்டுறவுச் சாகுபடி செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார்: தஞ்சாவூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி அல்லது நாகப்பட்டிணம் தாலூகாவில் எந்த வகையான கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களையும் அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை. தஞ்சாவூர் மாவட்டத்தில் அத்தகைய பண்ணைகள் வெற்றிகரமாக செயல்படக்கூடிய சந்தர்ப்பம் உள்ள இடங்களில் பண்ணைச் சங்கங்களை அமைப்பதுபற்றி கூட்டுறவுத் துறை ஆலோசிக்கும்.

திரு. ஆ. கு. சுப்பையா: திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம் தாலுகாக்களில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் சாகுபடிக்கு லாயக்கான நிலையில் இருக்கின்றன. அந்த நிலங்களில் கூட்டுறவு சாகுபடிப் பண்ணை அமைத்து உணவு உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் மீண்டும் ஆலோசிக்குமா?

[23rd July 1964

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அம்மாதிரி நிலங்கள் இருக்கின்றன என்று சொன்னுல், ஆட்சேபணை இல்லை. ஆனுல், இப்பொழுது அங்கிருக்கும் நிலங்களெல்லாம் களர் நிலங்களாக இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலங்கள்தான் சுமார் மூவாயிரம் ஏக்கர் அங்கு இருக்கின்றன.

திரு. ம. கமலநாதன் : கூட்டுறவு சாகுபடி முறை வெற்றிகரமாக நடைபெறுகிறதா? எங்கெங்கு வெற்றிகரமாக நடைபெறுகின்றது? எங்கெங்கு வெற்றிகரமாக நடைபெறவில்லை?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இப்பொழுது என்னிடம் அந்தத் தகவல் இல்லை. வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய அவாவும் கூட.

அரிசன நல இலாகா ஆசிரியர்கள்

*** 669 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு கல்வி விஸ்தரிப்பு அதிகாரிகளாக (Education Extension Officers) உத்தியோக உயர்வு கொடுப்பது போல் நம் மாநிலத்தில் அரிசன நல இலாகாவில் ஆசிரியர்களாக வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தற்போதுள்ள விதிகளின்படி, பொது விதிகளைச் சேர்ந்த அட்டவணையில் நிர்ணயித்துள்ள குறைந்த அளவு பொதுக் கல்வி பெற்றிருக்கும் அரிஜன நலப் பள்ளி ஆசிரியர்கள், கல்வி வளர்ச்சி அதிகாரிகளாக நியமிக்கப்படலாம். காலியாகும் இடங்களுக்கு ஏற்ப அத்தகைய ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : அரிசன நல இலாகாவினர் நடத்தும் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படும் என்று சொன்னுர்கள். அதுபோல், அரிசன நல இலாகா மூலமாக நடத்தப்படும் கம்யூனிடி சென்டர்களில் வேலை பார்க்கும் சோஷியல் ஒர்கர்களுக்கும் எக்ஸ்டன்ஷன் ஆபீசர் பதவி உயர்வு கொடுக்க ஏதாவது தடை இருக்கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. கொளந்தைசாமி கவுண்டர் : மலைஜாதி மக்களுக்காகப் பள்ளிக்கூடம், பஞ்சாயத்து ஆபீஸ் முதலியவை கட்டுவதுபற்றி ஒன்றரை வருஷமாக நானும் சட்டசபையில் கேட்டுக்கொண்டு வருகிறேன். கலெக்டரையும் கேட்டிருக்கிறேன். தாசில்தாரிடம் எழுதிக் கொடுத்தால், தாசில்தார் வந்து பார்க்கிற வழியாகத் தெரியவில்லை. தாசில்தார் ஆபிசுக்குப் போனுல் ஒன்றுமே தெரிய

23rd July 1964]

வில்லை. மலைஜாதியினர் வசிக்கும் இடத்தில் பஞ்சாயத்துக் கட்டடம், பள்ளிக்கூடக் கட்டடம் கட்டுவதற்கு சர்க்கார் உடனடியாக ஏற்பாடு செய்யுமா? புறம்போக்கு நிலம் இருக்கிறது. அந்த நிலத்தில் வசதி படைத்த ஒருவர் ஒட்டிக்கொண்டு விடமாட்டேன் என்கிருர். ஆகவே, கலெக்டர், தாசில்தாருக்கு உடனடியாக உத்தரவு அனுப்ப அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாக எழுதியனுப்பினுல், சிறந்த முறையில் அரசாங்கம் கவனம் செலுத்தி, அதைக் கவனிக்க முயற்சி செய்யப்படும்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

III. DISPOSAL OF NOTICE OF A PRIVILEGE MATTER.

SRI K. A. MATHIALAGAN : On a point of order, Sir, I have given notice of a Privilege matter. **9-30 a.m.**

MR. SPEAKER : I have disallowed it in my Chamber itself. It is not at all a point of order.

SRI K. A. MATHIALAGAN : The Privilege matter has got precedence over Rule 41. The decision has not been communicated to me.

MR. SPEAKER : I have already announced my decision.

SRI K. A. MATHIALAGAN : With great respect, I submit to the Chair that Privilege matters cannot be disallowed in the Chamber itself.

MR. SPEAKER : The hon. Member can write to me about it. I will look into it. First of all, I must convince myself that it is a matter to be raised as a Privilege matter. I am not convinced

SRI V. KRISHNAMOORTHY : The hon. Members of this House are entitled to know the details of the matter and then only the Hon. Speaker is permitted to disallow it.

MR. SPEAKER : The hon. Member is not entitled to know it. He should know the rules first.

SRI V. KRISHNAMOORTHY : I know the rules.

MR. SPEAKER : Rule 185 of the Madras Assembly Rules clearly states that a member may, with the consent of the Speaker, raise a question involving a breach of privilege either of a member or of the House. The words used are " with the consent of the Speaker". The Speaker ' may ' or ' may not ' give his consent I request the hon. Member to read the rules.

[23rd July 1964

IV. CALLING ATTENTION TO DIFFICULTIES IN SECURING ADMISSION IN COLLEGES.

திரு. செ. மாதவன் : கனம் சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் கல்வி ஆண்டில் கல்லூரிப் புதுமுக வகுப்பிலும், பி.ஏ., பி.எஸ்ஸி., வகுப்புகளிலும் சேர்ந்து படிக்கக் கல்லூரிகளில் இடம் கிடைக்காமையால் மாணக்கர் அடையும் இடுக்கண்நிலை பற்றிய அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை, கனம் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : The strength of classes in colleges and the sanction of additional strength in them are decided by the University of Madras.

In view of the greater demand for admission in 1964-65, the University has sanctioned an increase of over 6,000 seats in the Pre-University Course classes in all the colleges in this State by permitting additional batches in P.U.C., increasing five more seats in each existing batch and granting affiliation to new P.U.C. Colleges.

The Government also anticipated greater rush for admission in P.U.C. and, to meet the rush, have opened four new P.U.C. Colleges this year under their management with University affiliation. The other new P.U.C. Colleges opened this year are under private management and they number six.

The exact total number of seats permitted in the P.U.C. including the seats in the newly opened ten colleges, is 32,173 as against 26,123 during 1963-64.

The number of students who have qualified for admission to the P.U.C. this year is about 69,000 including the candidates who passed the S.S.L.C. Examination in October 1963. Not all the 69,000 who have passed the S.S.L.C. Examination would be seeking admission to colleges. These students constitute a reservoir from which streams of technical and professional training as well as employment in ministerial posts under Government and private establishments have to be fed. In all, about 16,000 would be absorbed in Polytechnics, Training Schools, Industrial Training centres and Commercial Courses. The extent to which S.S.L.C candidates are absorbed in employment under all managements cannot be estimated correctly, but the number may run into several thousands. So, the provision of 32,173 seats in P.U.C. cannot be considered inadequate. This provision is fairly adequate to meet the demand for admission to colleges from such candidates, as may be able to benefit by higher education. If candidates with low marks or, are not otherwise fit, are not successful in getting admission to the P.U.C. in any college, it does not justify the inference that there is denial of admission.

As regards B.A. and B.Sc. courses, no difficulty has been experienced and the University has granted permission to the colleges to admit, according to conditions, the students who sought admission provided they are eligible for such courses. The total number of seats permitted is 5,845 in B.A.; 7,710 in B.Sc. and 980 in B.Com.

23rd July 1964]

V. ANNOUNCEMENTS.

MADRAS GENERAL SALES TAX (SECOND AMENDMENT) BILL, 1964

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1964.

With the consent of the House, two minutes are allowed for moving for leave to introduce a Government Bill and for the moving of two Government Resolutions, because to-day is a non-official day.

VI. GOVERNMENT BILL.

MADRAS GENERAL SALES TAX (SECOND AMENDMENT) BILL, 1964.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That leave be granted for the introduction of the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1964. "

MR. SPEAKER : The question is—

" That leave be granted for the introduction of the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1964. "

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

VII. GOVERNMENT RESOLUTIONS.

(1) ASSOCIATION OF COUNCIL MEMBERS WITH THE COMMITTEE ON ESTATES.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That this House recommends to the Legislative Council that they do nominate five members of the Council to associate with the Committee on Estimates of this House for the year 1964-65 and communicate to this House the names of the Members so nominated."

The Resolution was put and carried.

(2) ASSOCIATION OF COUNCIL MEMBERS WITH THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That this House recommends to the Legislative Council that they do nominate five members of the Council to associate with the Committee on Public Accounts of this House for the year 1964-65 and communicate to this House the names of the Members so nominated. "

The Resolution was put and carried.

[23rd July 1964

VIII. NON-OFFICIAL BUSINESS—(i) BILLS.

(1) DISCLOSURE OF ASSETS OF THE MEMBERS OF THE LEGISLATURE BILL 1964.

SRI S. MADHAVAN : Sir, I move—

" That leave be granted for the introduction of the Disclosure of the Assets of the Members of the Legislature Bill, 1964. "

The motion was duty seconded.

MR. SPEAKER : Does the Hon. Minister want to say anything?

THE HON. SRI R. VENKATARAMAN : This is only introduction of a Bill. According to the convention, Government will not oppose the introduction of any Bill.

The motion was put and carried.

SRI S. MADHAVAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS INDUSTRIAL ESTABLISHMENTS (NATIONAL AND FESTIVAL HOLIDAYS) AMENDMENT BILL, 1964 (L.A. BILL NO. 5 OF 1964).

PULAVAR K. GOVINDAN : Sir, I move—

" That the Madras Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964 (L.A. Bill No. 5 of 1964) be taken into consideration. "

The motion was duly seconded.

MR. SPEAKER : Motion moved—

" That the Madras Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964, (L.A. Bill No. 5 of 1964) be taken into consideration. "

* **புலவர் கா. கோவிந்தன் :** கனம் சபாநாயகர் அவர்களே, பொங்கல் விழாவைத் தொழிலாளர்களுக்கு சம்பள உரிமையோடு கூடிய விடுமுறை நாளாக ஆக்கவேண்டுமென்று செய்கிற இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கோருகிற நேரத்தில் சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். நம்முடைய நாட்டில் விழாக்கள் பல இருக்கின்றன என்று சொன்னாலும் பொங்கல் விழா தனிச் சிறப்பு வாய்ந்தது என்பது இந்த மன்றத்திலுள்ள அங்கத்தினர்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்ட ஒன்றாகும். இந்த விழா எந்தவிதமான மதச் சிறப்பு உடையதும் அன்று. எந்தவிதமான இனச் சிறப்பும் உடையதன்று. எல்லா மதத்தினராலும், எல்லா இனத்தவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விழா ஆகும். அதுமட்டுமல்லாமல், பொங்கல் விழா, தமிழ் நாட்டுக்கே உரிய, தமிழர் பண்பாட்டுக்கே உரிய ஒரு பெரிய விழாவாகும். இதைச் சங்கராந்தி என்ற பெயரால் வேறு வகையாகக் கொண்டாடுகிற முறை இருந்தாலும் அந்த விழாவின்

23rd July 1964] [புலவர் கா. கோவிந்தன்]

அடிப்படைத் தத்துவத்தை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் இது தொழிலாளர்கள் கொண்டாட வேண்டிய ஒரு விழா என்பது நன்றாகத் தெரியும். தமிழகத்தில் சிறப்புடைய தொழில் அன்றும் இன்றும் உழவுத் தொழில்தான். அந்த உழவுத் தொழிலில் வெற்றி கண்ட மக்கள் கொண்டாடுகிற விழாதான் இந்தப் பொங்கல் விழா என்பதை அனைவரும் அறிவார்கள். ஆவணி, புரட்டாசியில் கார்காலம் தொடங்க, பெய்த மழையைக் கொண்டு உழவன் நிலத்தை உழுது, மார்கழி, தை மாதத்தில் பயன் காண்கிறான். அப்படிப்பட்ட நேரத்தில் தான் பெரும்பயன் பெற்றதை மகிழ்ச்சியோடு கொண்டாடும் நாள்தான் பொங்கல் விழாவாகும். பழைய காலத்தில் பண்ட மாற்று முறை இருந்த நேரத்தில், நெல்லைக் கொடுத்துத்தான் மற்றப் பொருள்களை வாங்க வேண்டும்; மற்றப் பொருள்களைக் கொடுத்துத்தான் நெல்லை வாங்க வேண்டுமென்ற நிலைமை இருந்தது. அதன் காரணமாக உழவர்கள் மட்டுமல்லாமல் மற்றத் துறையிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களும் அந்த நாளை மகிழ்ச்சிக்குரிய விழாவாகக் கொண்டாடி வந்திருக்கிறார்கள். இந்த விழா பண்டைநாளில் இந்திர விழா என்றும் கொண்டாடப்பட்டு வந்தது. பொங்கல் என்பது மேகம் என்பதையும் குறிக்கும் ஒரு சொல்லாகும். பொங்கல் நாள் மேகம் அளிக்கின்ற பயனைப் பெறுகின்ற நாளாதலால், இந்திரன் மேகத்திற்குத் தலைவன் என்ற முறையிலே இந்திர விழாவாகப் பழைய காலத்திலே கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் அந்த நாளை இன்றைய தினம் விடுமுறை நாளாகப் பெற்றிருக்கிறோம் என்று சொன்னாலும் அது தொழிலாளர்களுக்கு சம்பளம், ஊதியம் தருகிற உரிமையோடு கூடிய நாளாக ஆக்கப்பட்டிருக்கிறதா என்று சொன்னால் இல்லை. தொழிலாளர்களுக்கு விடுமுறை அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டம் 1958-ல் வந்தபோது அதிலே விடுமுறை நாளாக் தேசிய விழாக்களுக்கு என்று இரண்டு நாட்களையும், மற்ற பண்டிகைகளுக்காக ஐந்து நாட்களும் என்று நிர்ணயிக்கப்பட்டன. ஆனால் அந்த ஐந்து நாட்களும் இன்னின்ன விழாக்களுக்குத்தான் என்று சொல்லவில்லை. அந்த ஐந்து நாட்களிலே அந்தத் தொழில் நிறுவனத்தினரும் தொழிலாளரும் ஒப்புக்கொண்டால் மே முதல் நாளைப் பண்டிகை விடுமுறை நாட்களில் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் பண்டிகை நாட்களாக மிஞ்சுவது நான்கு நாட்கள்தான். அந்த நான்கு நாட்களையும் எந்த விழாக்களுக்காக எடுத்துக் கொள்ளலாம் என்பதைப்பற்றி அந்தத் தொழில் நிறுவனத்தினரும் தொழிலாளரும் கலந்து எந்த விழாக்களுக்கு விடுமுறை விட வேண்டுமென்று முடிவு செய்கிறார்களோ அந்த விழாக்களுக்குத்தான் விடுமுறை என்ற நிலை சட்டப்படி இருக்கிறது. ஆகவே, பொங்கலுக்கென்று தனியாக இடம் இல்லை. அடுத்து, 1962-ல் அந்தச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டு தேசிய விழாக்களுக்கு விடுமுறை நாட்களில் எண்ணிக்கை இரண்டிலிருந்து மூன்றாக உயர்த்தப்பட்டு காந்தியாருடைய நினைவுநாளாக ஒரு நாள் விடுமுறை விடவேண்டுமென்பதை இந்த மன்றத்திலே நமது மதிப்புக்குரிய முதலமைச்சர்

அவர்கள் நிறைவேற்றினார்கள். அதோடு தொழில் நிறுவனத்தினர் மொத்தம் ஏழு நாட்களை, எட்டு நாட்களாக உயர்த்துவதையே முதலில் ஒப்புக்கொள்ளவில்லை; ஆகவே, மேலும் ஒரு நாள் சேர்த்து மொத்தம் 9 நாட்களாக ஆக்குவதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை; அதனை நியாயம் என்று தானும் ஏற்றுக் கொண்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆகவே, தேசிய விடுமுறை நாட்கள் 3 எனவும், பண்டிகை நாட்கள் 5 எனவும் முடிவு செய்யப்பட்டு அந்த ஐந்து நாட்களிலேதான் மே முதல் நாளுக்கும் விடுமுறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நிலைமையில் சட்டம் உருவாக்கப்பட்டது. இந்த தேசிய விழா நாட்கள் இந்த மூன்றோடு நின்று விடாது வருகிற ஆண்டுகளில் கூடுகிற நிலைமை கூட இருக்கிறது. இப்போது குழந்தைகள் தினம் கொண்டாடுகிற வழக்கம் இருந்து வருகிறது; ஜனநாயக சோஷலிச வாரம் கொண்டாடும் சூழ்நிலை உருவாகி இருக்கிறது. இந்த நிலைமைகளை மனதில் வைத்துப் பார்க்கும்போது ஆளும் கட்சியினர் மேலும் தேசிய விடுமுறை நாட்களை அதிகப்படுத்துவதற்கு சட்டம் கொண்டு வந்தாலும் அதிசயப்படுவதற்கில்லை. அப்படி ஒரு நிலைமை வந்தால், தொழில் நிறுவனத்தினர் விடுமுறை நாட்களை அதிகப்படுத்துவதை ஏற்றுக் கொள்ளாத நிலையில் பண்டிகை நாட்கள்தான் மேலும் குறைய வேண்டிய நிலை ஏற்படும். மேலும் இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற நான்கு நாட்களிலும் அகில இந்திய விழாக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்ற நிலையில் பொங்கலுக்கு விடுமுறை இல்லாது போகும் நிலை உண்டாகவும் கூடும். பொங்கலுக்கு அரசாங்க விடுமுறை அளித்து சிறப்பை அளிக்கவேண்டுமென்ற காரணத்தால்தான் நான் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறேன். இந்தக் கருத்தை இந்த மன்றத்திலே இருப்பவர்கள் யாரும் மறுக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் இதை ஒருமனதாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டு, பொங்கலுக்கு அந்தச் சிறப்பை அளிக்க வேண்டுமென்று இந்த மன்றத்தில் இருப்பவர்கள் அனைவரையும் உங்கள் சார்பாகக் கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன்.

* **திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, தொழிலாளர்களுக்கு தேசிய திருவிழா விடுமுறைகள் அளிக்க வேண்டுமென்பதற்காகக் கொண்டுவரப் பட்டிருக்கிற திருத்த மசோதாவை நான் எதிர்க்கிறேன். புலவர் கோவிந்தன் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதா அவசியமற்றது. தொழிலாளர்களுக்கு ஏழு நாட்கள் விடுமுறை கொடுக்கவேண்டுமென்ற சட்டம் முதலிலேயே நிறைவேற்றப்பட்டு, பிறகு அது எட்டு நாட்களாக உயர்த்தப்பட்டு காந்தி மகானுடைய நினைவு நாளாக ஒரு நாள் தேசிய விடுமுறையில் சேர்க்கப்பட்டது. புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்போது பொங்கலுக்கு என்று தனியாக ஒரு நாள் விடுமுறை விடவேண்டுமென்று பேசினார்கள். தமிழகத்தில் தொழிலாளர்களாக வேலை செய்கிறார்கள் என்றால், தமிழர்கள் மாத்திரந்தான் வேலை செய்கிறார்கள் என்ற குறுகிய மனப்பான்மை

இருப்பதன் காரணமாகத்தான் பொங்கலுக்கு விடுமுறை வேண்டுமென்று அவர்கள் கூறுகிறார்கள். தொழிலாளர்களில் தமிழர்கள் மட்டுமல்லாது கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும், மற்றும் பலதரப்பட்டவர்களும் இருக்கிறார்கள். அந்த மாதிரி ஒரு இடத்திலே பொங்கலுக்கு மாத்திரம் விடுமுறை கொடுக்கவேண்டுமென்று சொன்னால், கிறிஸ்தவர்கள் டிசம்பர் மாதம் 25ம் தேதியை விடுமுறையாக விடவேண்டுமென்று கேட்பார்கள். அப்படி ஒவ்வொரு மதத்தினரும் கேட்டுக்கொண்டே போனால் என்ன நிலைமை உருவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தேசியம் என்று சொன்னால் தமிழ் நாட்டை மட்டுமே வைத்துக் கொண்டு குறுகிய நோக்குடன் பார்க்கிறார்கள். தேசியம் என்று சொன்னால் அது இந்த பாரத நாட்டிலுள்ள எல்லோருக்கும் உரிய நாளாக இருக்கவேண்டும். அதே போன்று இன்றைக்குப் பண்டிகை நாள் குறைந்து விட்டது என்று சொல்வது தவறு. மொத்த விடுமுறை நாட்கள் ஏழு நாட்களாக இருந்தது. பின்னர் எட்டு நாட்களாக உயர்த்தப்பட்டது. அதிலே ஐந்து நாட்கள் பண்டிகை நாட்கள்; மூன்று நாட்கள் தேசிய விடுமுறை நாட்கள்.

ஆனால் இந்த ஐந்து நாட்களுக்குள்ளே வேலை செய்யும் தொழிலாளர்கள், யார் எந்த மதத்தின் அடிப்படையில் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்தெந்த மதத்தினர் எந்தெந்த பண்டிகைகளுக்கு தங்களுக்கு விடுமுறை வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்கிறார்களோ அவர்கள் அந்த நாட்களை விடுமுறை நாட்களாக கொடுத்து விடுகிறார்கள். ஒரு தொழிற்சாலையில் கிருஸ்தவ மதத்தினர் அதிகமாக ஈடுபட்டிருந்தால் அவர்கள் எங்களுக்கு டிசம்பர் மாதம் 25-ம் தேதி விடுமுறை வேண்டுமென்று தொழிற் சங்கம் மூலம் எழுதிக் கேட்டால் அந்த நாளில் விடுமுறை கொடுத்து விடுகிறார்கள். தமிழர்கள் அதிகமாக வேலை செய்யும் இடங்களில் எங்களுக்கு பொங்கலுக்கு லீவ் வேண்டுமென்று கேட்டால் அன்று விடுமுறை கொடுத்து விடுகிறார்கள். இன்றும் அது நடைமுறையில் இருக்கிறது. ஆக, தமிழர்கள் அதிகமாக இருக்கும் இடங்களில் பொங்கலுக்கு விடுமுறை கொடுத்துக் கொண்டிருக்கும்போது குறிப்பிட்டு பொங்கலுக்கு விடுமுறை கொடுக்க வேண்டுமென்று நாம் சட்டம் செய்தால் மற்ற மதத்தினருக்கு இடைஞ்சல் செய்யுமளவிற்கு நாம் செய்து விடுவோம் என்று குறிப்பிட விரும்புகிறேன். எந்த ஒரு காரணத்திற்காக கொடுத்தாலும் அவரவர்களுக்கு பிரியப்பட்ட நாட்களில் விடுமுறை கொடுக்கவேண்டுமென்று ஏற்கெனவே சட்டம் செய்திருப்பதால் மறுமுறையும் இந்தச் சட்டத்திற்கு அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அமெண்ட்மென்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'For the words "On any other day", the words "on one of the three days immediately before or after the day on which he so works" shall be substituted.'

[திரு. ஜே. மாதா கவுடர்] [23rd July 1964

மூன்று நாட்களுக்குப் பிறகு அல்லது முன்பு உடனடி கொடுத்து விடவேண்டுமென்பது திருத்தம். திங்கள் கிழமை விடுமுறை என்றால் அதற்கு மூன்று நாட்கள் முன்னதாக என்றால் வியாழக் கிழமை அன்று சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. சாதாரணமாக 7-ம் தேதி சம்பள நாளாக வைத்து என்னென்ன நாட்களுக்கு விடுமுறை கொடுக்கவேண்டுமென்று பார்த்து ஏற்பாடு செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வாரச் சம்பளம் வாங்குவதற்கு முன்பு அவ்வாரத்தில் படிச் செலவிற்காக தொழில் அதிபர்கள். . . . .

புலவர் கா. கோவிந்தன்: ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர், திரு. மாதா கவுடர் அவர்கள் இப்போது பேசுகிற பேச்சுக்கும் சபை முன் வந்திருக்கும் மசோதாவிற்கும் சம்பந்தமேயில்லை. வேறு மசோதாபற்றி அவர்கள் பேசுகிறார்கள். நான் கொண்டு வந்திருக்கும் மசோதாபற்றி அல்ல.

திரு. ஜே. மாதா கவுடர்: தொழிலாளர்களைக் கலந்து ஆலோசிக்காமல், தொழிலாளர்களின் நிலையைப்பற்றி தெரிந்து கொள்ளாமல் ஏதோ சொல்லிவிட்டோம், ஏதோ செய்து விட்டோம் என்ற காரணத்திற்காக எதையும் கொண்டு வர முடியாது என்று ஸ்ருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் நாட்டை மட்டும் வைத்துக்கொண்டு அகில இந்திய ரீதியில் நடக்கும் விடுமுறை நாட்கள் சட்டத்தின் அடிப்படையில் இதைக்கொண்டு வருவது சரியல்ல. நாஷனல் பெஸ்டிவல் ஹாலிடேஸ் ஆக்ட் அகில இந்திய ரீதியில் உள்ள சட்டம். அதை இங்கு நிறைவேற்றியிருக்கிறோம். அச்சட்டத்தின் அடிப்படையில் இந்தச் சட்டத்தையும் செய்யவேண்டுமே அல்லாது அதற்கு முரண்பாடாகவிருக்கும் சட்டத்தைச் செய்வது சரி அல்ல என்று கூறிக்கொண்டு இந்த மசோதா அவசியமற்ற மசோதா என்று சொல்லி இதை ஏற்கக் கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

***திரு. சா. கணேசன்:** கனம் தலைவர் அவர்களே, பொங்கல் திருநாள் என்பது சிலர் எண்ணுகிறதைப் போல ஜாதி, மத அல்லது வேறுவிதமான கொள்கை அடிப்படையில் அமைந்த ஒன்றல்ல என்பதை நாம் முதலில் மனத்தில் கொள்ளவேண்டும். பொங்கல் திருநாள் போன்ற திருநாள் பிராபல்யமாக வழங்கப்பட்டாலும் கூட அது தமிழர் திருநாள் மட்டும் அல்ல, விவசாயிகளுக்குரிய ஒரு சிறந்த, புனிதமான நாள் என்று கணிக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு மட்டுமல்ல. அது விவசாயத் திருநாளே தவிர விவசாயித் திருநாள்கூட அல்ல. விஞ்ஞான ரீதியாகவும், தத்துவ ரீதியாகவும் நாம் கணித்துப் பார்க்கிறபோது சூரியன் காய்கிறது, கடல் நீர் ஆவியாக மாறுகிறது, மேகமாகத் திரிகிறது, மழையாகப் பொழிகிறது, அருவியாகக் குதிக்கிறது, ஆறுகளாக ஓடுகிறது, கால்களாகப் பொசிகிறது. இதன் மூலம் நிலம் செழிக்கிறது. சூரியனிடமிருந்துதான் நிலத்திற்கு வேண்டிய போஷாக்குகள் எல்லாம் கிடைக்கின்றன. இத்தியாதி காரணங்

23rd July 1964] [திரு. சா. கணேசன்]

களால் உழவன் தன் பணியை முடித்த பிறகு—இது பற்றி பேசிக் கொண்டே போகலாம், ஆனால் இப்போது நான் அதுபற்றி தொட்டு விட்டுச் செல்கிறேன்—தனக்கு பேருதவியாக இருந்த சூரியனுக்கு நன்றி செலுத்துகிறான். சூரியன் பல சமயத்தினரால் ஏற்றுக்கொள்கிற கடவுளாக இருக்கலாம். இயற்கை நீதியை வைத்துப் பார்த்தால் சூரியன் எல்லாவற்றையும் ஆகர்ஷித்துக் கொண்டிருக்கிற ஈர்ப்பு மையம் என்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டதொன்று. அதற்கு நன்றி தெரிவிக்கும் முறையில் கோடீஸ்வரனாகையிருந்தாலும் முற்றத்தில்தான் பொங்கல் வைப்பது வழக்கம். அதேபோன்று இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கல் என்று சொல்லப்படும். மனிதனைப் போல் மாடும் உழைத்து பங்காளியாக நின்று பாடுபட்ட பேர் உண்மையை உணருகிறான் மனிதன். தமிழன் என்று கூட சொல்லவில்லை. மனிதன் அழுத்துகிறான், மாடு இழுக்கிறது, நிலம் பிளக்கிறது, நெல் விளைகிறது. பிறகு மனிதன் அறுக்கிறான், மாடு சுமக்கிறது, பின் மனிதன் அடிக்கிறான், மாடு மிதிக்கிறது, ஆக மனிதனும் மாடும் உழைத்து விளைந்ததின் மேற் பகுதியான தான்யத்தை மனிதனும், கீழ் பகுதியான வைக்கோலை மாடும் பிரித்துக் கொள்ளும் அற்புத முறையைக் காண்கிறோம். பருத்தியை எடுத்துக் கொண்டால் பஞ்சு மனிதனுக்கு, விதை அவற்றிற்கு. எண்ணை வித்துக்களை எடுத்துக் கொண்டாலும் எண்ணை மனிதனுக்கு, அதில் இருந்து கிடைக்கும் பிண்ணாக்கு அவைகளுக்கு. இப்படிக் கணித்துத்தான் திருநாளை நடத்துகிறோமே அல்லாது திரு. மாதா கவுடர் அவர்கள் சொன்னது போல் இதில் இந்து, முஸ்லிம் என்று பிரிப்பது நியாயமும் அல்ல, சரியும் அல்ல. பிழையான ஒரு வாதமுமாகும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்நிலையில் இது மனிதவர்க்கத்திற்கே புனிதமான ஒரு திருநாளாகும். யார் யார் உணவு கொள்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் புனிதமான ஒரு திருநாளாகும் இது. திரு. மாதா கவுடர் அவர்கள் சொல்கிற போது, தமிழர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள், கிருஸ்தவர்கள் இல்லையா, இஸ்லாமியர் இல்லையா என்று கேட்டார்கள். தமிழர் என்பது மொழி அடிப்படையில் பிறந்தது. கிருஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என்பது மத அடிப்படையில் பிறந்தது. ஆகவே தமிழர்கள் என்று கூறும்போது கிருஸ்தவர்கள் வேறு, இஸ்லாமியர் வேறு என்று சொல்வது புரியாத ஒரு புதிர். தமிழ்நாட்டில் இந்துக்கள் மட்டும்தான் பொங்கல் திருநாள் கொண்டாடுகிறார்கள் என்பது சரியல்ல. தீபாவளி முழுக்க முழுக்க இந்து புராண அடிப்படையில் அமைந்த ஒரு பெருநாள். தத்துவம் சிறப்பாக இருக்கும். அதுபற்றி யாரும் குறை கூறவில்லை. கிருஸ்தவர்கள் இஸ்லாமியர் அந்தத்துவத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்நிலையில் தீபாவளி போன்ற நாட்கள் பொது விடுமுறை நாட்களாக இருக்குமானால், ஜாதி சமய அடிப்படையில் இல்லாமல் முழுக்க முழுக்க விஞ்ஞான ரீதியில் இருக்கும், முழுக்க முழுக்க பாட்டாளி மக்களின், உழைப்பாளிகளின் நன்றி உணர்வைக் காட்டுவதாக அமைந்திருக்கும். இந்தத் திருநாளை விடுமுறை

[திரு. சா. கணேசன்] [23rd July 1964

யாகக் கொள்ளக் கூடாது என்று மறுப்பது நியாயமல்ல. பொங்கல் திருநாளை ஒரு விடுமுறைநாளாகக் கொள்வது எல்லா வகையிலும் பொருத்தமுள்ளதாகவும், பெருமையுடையதாகவும் இருக்கும் என்று மட்டும் கூறி என் உரையை முடிக்கிறேன்.

10-00 a.m. **திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய நண்பர் கனம் கணேசன் அவர்கள் பொங்கல் விழாவைப்பற்றிய பெருமைகளைச் சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களும் பொங்கல் விழாவினுடைய பெருமையைப்பற்றி ஆட்சேபிக்க மாட்டார்கள், ஏற்றுக்கொள் கொள்வார்கள். ஆனால் இருக்கிற பிரச்னை என்னவென்றால், தொழிலாளிக்கு சம்பளத்தோடு விடுமுறை கொடுக்கவேண்டும் என்பதுதான். அதுதான் இதில் முக்கியமான பிரச்னை. அமைச்சர் அவர்கள் எழுந்து பதில் சொல்வார்கள், "இப்போது இருக்கின்ற சட்டத்திலேயே மூன்று நாட்கள் கட்டாயமாக விடுமுறையாக விடப்படவேண்டும் என்றும், அதாவது ஜனவரி 26-ம் தேதி குடியரசு தினமாகவும், ஆகஸ்ட் 15-ம் தேதி சுதந்திர தினமாகவும், அக்டோபர் இரண்டாம் தேதி காந்திஜி பிறந்த தினமாகவும் கொண்டாடப்படவேண்டும் என்று. இந்த மூன்று நாட்களுக்கும் சம்பளத்தோடு தொழில் நிறுவனங்கள் விடுமுறை கொடுக்தாக வேண்டும். அதற்கு மேல் ஐந்து தினங்கள் கொழிலாளிகளும், முதலாளிகளும் ஒத்துக்கொள்ளுகின்ற முறையில் பண்டிகைக்காகவோ, அல்லது அரசியல் காரணம் என்ற முறையில் மே தினத்திற்காகவோ பொங்கல் நாளுக்காகவோ விடுமுறை விடலாம் என்று சட்டத்தில் இடமிருக்கிறது" என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். இருக்கிற ஐந்து நாட்களில் இதையும் பங்கு போட்டுக்கொள்ளவேண்டும் என்றால், அதற்கு அரசாங்கத்தின் உதவி தேவையில்லை. முன்னால் தொழிற்சாலைகளில் எல்லாம் ஏழு நாட்களாகத்தான் இருந்தது, இப்போது தான் எட்டு நாட்களாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதிலும் காந்திஜிக்கு மரியாதை செய்யவேண்டும் என்ற எண்ணத்தில், காந்திஜியினுடைய பிறந்த நாளை தேசிய விடுமுறை நாளாக விட வேண்டும் என்று தொழிலாளர்கள் ஆலோசனை மூலு சிபாரிசு செய்தது. அதற்கு முன்னாலேயே அரசாங்கம் இதை தாங்கை கொண்டு வரவில்லை, நாங்கள் சிபாரிசு செய்ததின் அடிப்படையில் தான் அரசாங்கம் பின்னால் ஒத்துக்கொண்டது. அந்த முறையில் இப்போது மூன்று நாட்கள் தேசிய விடுமுறை நாட்களாகவும் ஐந்து நாட்கள் தாங்களாகவே முடிவு எடுத்து விடுமுறைநாளை எடுத்துக்கொள்ளலாம் என்றும் ஆக எட்டு நாட்கள் இருக்கின்றன. மொத்தம் எட்டு நாட்கள் என்றிருப்பது போதாது என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். அதனால்தான் இந்தத் திருத்த மசோதாவிற்கு முக்கியத்துவம் ஏற்படுகிறது. அரசாங்கம் தங்களுடைய ஊழியர்களுக்கு கொடுப்பது போன்ற விடுமுறை நாட்கள் தனியார் துறையிலும் இருக்கவேண்டும். தொழிற்சாலைகளில் கஷ்டப்பட்டு வேலை செய்கின்ற தொழிலாளிக்கு போதுமான

23rd July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

அளவுக்கு விடுமுறை வசதி இருக்கவேண்டும். விடுமுறை கேட்பது என்பது சோம்பேறித்தனமாக வீட்டில் இருப்பதற்காக அல்ல. தான் இழந்த சக்தியை மீண்டும் பெற்று, மீண்டும் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு தொழிலாளி தயாராக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை என்று கொடுத்திருக்கிறோம். விடுமுறை நாட்களில் எல்லாம் உழைக்கக் கூடிய மக்கள் உல்லாசத்தோடு இருக்கிறார்கள் என்று எண்ணுவதற்கில்லை. வீட்டில் போனவுடனேயே குடும்பங்களில் இருக்கின்ற பல தொல்லைகள் வந்துவிடுகின்றன. அந்த முறையில்தான் நம்முடைய நாட்டில் அமைப்பு இருக்கிறது. அதிலும் தினசரி சம்பளம் என்ற அடிப்படையில் நடத்தப்படும் தொழில் நிறுவனங்களில் ஞாயிற்றுக் கிழமைக்கும் சம்பளம் கிடையாது. என்னுடைய அபிப்பிராயம் இப்போது எட்டு நாட்கள் என்றிருப்பதை குறைந்தது 12 நாட்கள் என்றாவது ஆக்க வேண்டும். இப்போது வந்திருக்கின்ற மசோதாவை ஏற்றுக்கொள்வதின் மூலம் இப்போது ஐந்து பண்டிகை நாட்கள் என்றிருப்பதை மாற்றாமல், மூன்று தேசிய விடுமுறைகள் என்றிருப்பதை நான்கு விடுமுறை தினங்கள் என்று மாற்றி, மொத்தம் 9 நாட்கள் என்று ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த மசோதாவை இப்போது எதிர் கட்சியினர் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதற்காக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அரசாங்கமே இதற்கென்று தனியாக திருத்த மசோதா கொண்டு வந்து பொங்கல் விழாவை தேசிய விடுமுறை நாளாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்:** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, பொங்கல் திருநாளை தேசிய விடுமுறை நாளாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மசோதாவை ஆதரித்துச் சில கருத்துகளை கூற விரும்புகிறேன். இதற்கான காரணங்களை கனம் அங்கத்தினர்கள் பலர் தெளிவுபடக் கூறியிருக்கிறார்கள். தேசிய விடுமுறை நாளாக பொங்கல் திருநாளை ஆக்குவதின் மூலமாக, தமிழ்நாட்டுக்கு ஒரு சிறப்பு ஏற்படுகிறது. சம்பளத்தோடு இப்போது எட்டு நாட்கள் விடுமுறையாக கொடுப்பதற்கு விதிகள் இருக்கின்றன என்றாலும், அரசியல் காரணத்தை ஒட்டி, நாட்டினுடைய அரசியல் அமைப்பை ஒட்டி நாட்டிலுள்ள சிறப்பை ஒட்டி இதைத் தேசிய விடுமுறை நாளாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அண்ணல் காந்தியார் பிறந்த நாளை நாம் தேசிய விடுமுறையாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதே போன்று பொங்கல் திருநாளையும், தேசிய விடுமுறையாக ஏற்றுக்கொள்வதின் மூலம், தமிழகத்தின் தனிச் சிறப்புக்கு தமிழகத்தின் அரசுக்கு, மதிப்பு ஏற்படுகிறது. இது குறித்து, ஜாதி, இனம் என்றெல்லாம் வருவதற்கே இடமில்லை, இங்கு மட்டும் இது கொண்டாடப்படுவதில்லை, பொதுவாக எல்லா இடங்களிலுமே கொண்டாடப்படுகிற விழா இது. தொன்று தொட்டே நமது நாட்டில் இது கொண்டாடப்பட்டு வருகிறது என்பதை நமது

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [23rd July 1964

பண்டை இலக்கியங்களிலிருந்தும் மற்றவைகளிலிருந்தும், இந்த விழா, விடுமுறை நாளாக கொண்டாடப்படவேண்டிய நாள் ஒன்று என்பது புலப்படுகிறது. "ஹார்வெஸ்ட் ஃபெஸ்டிவெல்" என்று மேல் நாடுகளிலும், மற்ற நாடுகளிலும் இந்த நாளைக் கொண்டாடுகிறார்கள். இந்த அரசைப் பொருத்தவரையில் இதற்கு தனிச் சிறப்பு கொடுக்கின்ற வகையில் இது தேசிய விடுமுறை நாளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலமாக இரண்டு பலன்கள் கிடைக்கின்றன. ஒன்று தொழிலாளர்களுடைய கோரிக்கைகளில் ஒன்றாக இருக்கின்ற அவர்களுடைய விடுமுறை நாட்களை அதிகப்படுத்துகிற நிலைமை ஏற்படுகிறது. அதே நேரத்தில் இந்த நாளுக்கு விடுமுறை கொடுப்பதின் மூலமாக, தமிழகத்திற்கு தனிச்சிறப்பை ஏற்படுத்துகின்ற பயனும் கிடைக்கிற்து. இந்த முறையில், இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதாவை ஏற்று பொங்கல் நாளை தேசிய விடுமுறை நாளாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதில் கொள்கை, குறிக்கோள் பேதங்கள் வருவதற்கு நியாயமில்லை. ஆகவே இதைத் தள்ளிவிடுவதற்கு எந்தவிகமான காரணமும் இல்லை. அதற்கான அவசியமும் இல்லை. எதிர்க்கட்சிகளுக்கும் ஜனநாயக அடிப்படையில் மதிப்பு கொடுக்கிறோம் என்கிற முறையில், இதை ஏற்றுக்கொள்வதன் மூலமாக நல்லதொரு நிலைமையை உருவாக்குவதற்கு இது பயனுள்ளதாக இருக்கும். இதில் யாருக்கும் எந்த விதமான கருத்துவேறுபாட்டுக்கும் இடமிருக்கத் தேவையில்லை. இப்போது பொங்கல் திருநாளை, பண்டிகை விடுமுறையின் கீழ் அனுபவித்துக் கொள்வதற்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும், அதாவது "டிஃபாக்டோ" முறையில் இருப்பதை "டிஜுரே" முறையில் கொண்டு வந்துவிட்டால் சிறப்பாக அமையக்கூடும். இதில் அரசியல் காரணங்கள் இருக்கின்றன என்று எடுத்துக் கொள்வதற்கு தேவையில்லை. நம்து நாட்டின் பழக்க வழக்கத்தை ஒட்டி, நமது நாட்டின் நாகரீகத்தை ஒட்டி, இதில் தனிச்சிறப்பு இருக்கிறது என்கிற முறையில் பொங்கல் திருநாளை தேசிய விடுமுறை நாளாக ஆக்கவேண்டும் என்று கோருகிற இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*களம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது இருக்கின்ற சட்டத்தின்படி மூன்று நாட்கள் கட்டாயமான விடுமுறை நாட்கள், ஐந்து நாட்கள் தொழிலாளர்கள் விரும்பினால், மானேஜ்மென்டோடு ஒத்துக் கொண்டு விடுமுறையாக எடுத்துக் கொள்ளலாம் என்ற முறையில் இருந்து வருகிறது. ஐந்து நாட்கள் விடுமுறை எடுத்துக் கொள்வதில், தாங்கள் விரும்பும் நாளை விடுமுறையாக தரவேண்டும் என்று சொல்லலாம். அப்படியில்லை என்றால் அது விஷயமாக இன்ஸ்பெக்டரிடத்தில் சொன்னால், அவர் இதில்

23rd July 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

தலையிட்டு தீர்ப்பு சொல்லி இந்த நாளை சேர்க்க வேண்டும் அல்லது சேர்க்கவேண்டாம் என்று சொல்லுவார்கள். இன்றைய நிலைமையில் லேபர் கமிஷனரிடத்திலிருந்து வந்திருக்கின்ற ரிப்போர்ட்படி பார்க்கும்போது, பொங்கல் நாளுக்கென்று கேட்டு விடுமுறை மறுக்கப்பட்டதாக ஒரு கேஸ் கூட கிடையாது என்பதை என்னால் நிச்சயமாக சொல்லமுடியும். ஆனால் பொங்கல் திருநாளை இப்போது சட்டத்தில் சேர்த்து, அதாவது இப்போது "டிஃபாக்டோ" வாக இருப்பதை "டிஜுரே" யாக மாற்ற வேண்டும் என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அபிப்பிராயப்பட்டதுபோல் ஆக்கவேண்டுமென்றால், இந்த மசோதா தேவையில்லை. அப்படி செய்யவேண்டுமென்றால், இன்றைக்கு பண்டிகைகளுக்கு ஐந்து நாட்கள் என்றிருப்பதை நான்கு நாட்கள் என்று குறைத்துக்கொண்டால் செய்யலாம், செய்யவும் முடியும். இப்போதுள்ள முறைப்படி மொத்தம் எட்டு நாட்கள் பண்டிகை விடுமுறையும், தேசிய விடுமுறையுமாக கிடைத்துக் கொண்டிருக்கிறது. இதற்குள்ளேயே பண்டிகை நாட்களை குறைத்து தேசிய விடுமுறை நாட்களில் சேர்க்கவேண்டுமென்றால் அது வேறு விஷயம். ஆனால் புலவர் கோவிந்தன் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்தம் இப்போது இருக்கின்ற எட்டு நாட்களை ஒன்பது நாட்களாக உயர்த்தவேண்டும் என்பது. அதாவது இப்போது தேசிய விடுமுறை நாட்கள் மூன்று என்று இருப்பதை நான்கு என்று ஆக்கவேண்டும். ஐந்து பண்டிகை விடுமுறை நாட்கள் அப்படியே இருக்கவேண்டும், அப்படிப் பார்க்கும்போது, இப்போது எட்டு என்றிருப்பதை ஒன்பதாக ஆக்கவேண்டும் என்பதுதான் திரு. புலவர் கோவிந்தன் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய மசோதாவின் நோக்கம். அதைத்தான் திரு. கல்யாணசுந்தரம் அவர்களும் சொன்னார்கள். . . (திரு. மீ. கலியாணசுந்தரம்: நான் 12 நாட்கள் வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன் . . .) எத்தனை நாட்கள் வேண்டுமென்றாலும் கேட்கலாம். . . 29 நாட்கள் காஷ்வல் லீவ் வேண்டுமென்று கேட்கலாம், 11 மாதத்திற்கு ஒரு மாதம் லீவ் வேண்டுமென்று கேட்கலாம். . . (திரு. மீ. கலியாணசுந்தரம்: அதைக் கொடுப்பதற்கு நீங்கள் வழிகாட்டியாக இருந்தால் என்ன. . .) நான் வழிகாட்டியாக இருந்ததால்தான் இந்த மசோதா வந்தது. இப்போது இருக்கின்ற பிரச்னை இப்போது இருக்கின்ற எட்டு நாட்களை ஒன்பது நாட்களாக ஆக்கவேண்டும் என்பது. அவ்விதம் உயர்த்தவேண்டும் என்று நினைப்பார்களே யானால் இப்போது நம்முடைய ராஜ்யத்தில் இருக்கின்ற சம்பிரதாயப்படி, இதைப்பற்றி முக்கூட்டு கமிட்டியில் சொல்லவேண்டும். அதில் முதலாளிகள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள், சர்க்கார் பிரதிநிதிகள் இவர்கள் எல்லோரும் இருப்பார்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்து பரிசீலனை செய்து முடிவு எடுத்தால், அதை சர்க்கார் ஏற்றுக்கொண்டு சட்டம் கொண்டுவர வேண்டும். அதே போலத்தான் 7 நாள் என்று இருந்ததை 8 நாள் ஆக்க வேண்டுமென்று சொன்னபோது அந்த விதமான முக்கூட்டு

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [23rd July 1964

கமிட்டியின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு நாம் செய்தோம். அந்த விதமாக முக்கூட்டுக் கமிட்டியில் 8 நாள் என்று இருப்பது 9 நாள் ஆகவேண்டும் என்று தீர்ப்பு செய்யவில்லை. எட்டு நாள் என்று இருப்பதை 8 நாள் என்றே வைத்துக்கொண்டு, 5 நாள் என்பதை 4 நாளாக பண்டிகை நாட்களைக் குறைக்கவேண்டும் என்று சொல்லுவதில் அர்த்தம் இல்லை. யாராவது கேட்டு கொடுப்பதற்கு மறுக்கப்பட்டிருந்தால்தான், எங்களுக்கு மறுத்தார்கள் ஆகையால் கட்டாயமாக்கவேண்டும் என்று சொல்லவேண்டும். அப்படி எங்கும் யாரும் மறுக்கவில்லை. அந்த முறையில் மறுத்ததாக எந்த விதமான புகாரும் வரவில்லை. அப்படி மறுத்தாலும் கூட, சட்டத்தில் இடம் இருக்கிறது, இன்ஸ்பெக்டர் பார்த்து விடவேண்டுமென்று சொன்னால் அந்தத் தொழில் அதிபர் எதிர்த்தாலும் விடவேண்டும். ஆகையால் இந்தச் சட்டம் தேவையில்லை.

ஒன்பது நாளாக உயர்த்தவேண்டுமென்றால், அதற்கு வழிகள் இருக்கின்றன, அந்த வழிகளைக் கடைபிடிக்கவேண்டுமென்று சொல்லி இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன்.

*புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே ஆளும் கட்சியிலே இருக்கிற ஒருவர் மறுக்க, எதிர் கட்சியிலே இருக்கிற அத்தனை பேர்களும் ஏற்றுக்கொள்ள, அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிற தொனியில் பேசி முடித்திருக்கிறார்கள். அவர்கள் பேசும்போது இந்தத் திருத்த மசோதாவின் நோக்கம் இருக்கிற விடுமுறை நாளை 9 ஆக உயர்த்துவதாக இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த நோக்கத்தில் இந்த மசோதா கொண்டு வரப்படவில்லை என்று இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திருவாளர் கல்யாண சுந்தரம் அவர்கள் சொன்னதைப் போல தொழிலாளர்களுக்கு விடுமுறை நாட்களை அதிகப்படுத்தவேண்டும் என்பது நோக்கமாக இருந்தாலும், அத்தகைய கோரிக்கையை வைத்தால் அது மறுக்கபட்டுவிடும் என்ற காரணத்தினால், இருக்கிற 5 நாட்களிலேயே ஒரு நாள் அப்படிப்பட்ட கட்டாய விடுமுறை நாளாக ஆக்கவேண்டுமென்று இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் விடுமுறை நாள் கேட்டு மறுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். என்னுடைய வேண்டுகோள் எல்லாம் கேட்டுப் பெறுகிற விடுமுறையாக இது இருக்கக் கூடாது, உரிமை பெற்ற விடுமுறையாக இருக்கவேண்டும் என்பதுதான். எந்த வகையில் 9 நாள் ஆக ஆக்கவேண்டும் என்று இந்த மசோதா இருக்கிறது என்று அமைச்சர் சொன்னார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"Provided that Pongal shall be one of the five festival holidays" என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன். ஆக, 5 க்கு மேல் தனியாக ஒரு நாள் என்ற கருத்திலே இது வரவில்லை என்ற கருத்தை ஏற்றுவது, அப்படி இல்லை என்று சொன்னால் ஏற்றுக் கொள்ள சங்கடமில்லை என்று ஏற்று இதைச் சட்டமாக ஆக்கித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

23rd July 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இன்றைக்கு 8 நாள் 8 நாள் ஆக இருககவேண்டும் என்றால் இந்த மசோதாவிற்கு அவசியம் இல்லை. இப்போது இருக்கிற விதிப்படி, சட்டப்படி பொங்கலுக்கு விடுமுறை வேண்டும் என்று கேட்டால் கொடுகக வேண்டும். கேட்டு கொடுப்பதற்கு மறுத்ததாக எந்தவித புகாரும் வரவில்லை. ஆகையால் இந்தச் சட்டத்திற்கு அவசியம் இல்லை என்று சொல்லிக்கொளகிறேன். அந்தநத நிதாபனத்தில் இருக்கிறவர்கள் நேரடியாகப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய வஷயம் இது. ஆகையால் இதற்கு அவசியம் இல்லை என்று சொலலிக் கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the Madras Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964 (L.A. Bill No. 5 of 1964) be taken into consideration."

The motion was put and lost.

(3) The Hindu Marriage (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 6 of 1964).

SRI S. MADHAVAN: Sir, I move—

"That the Hindu Marriage (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 6 of 1964) be taken into consideration."

The motion was duly seconded.

MR. SPEAKER: Motion moved—

"That the Hindu Marriage (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 6 of 1964) be taken into consideration."

*திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, முதலிலேயே எதிர்க் கட்சி அங்கத்தினரால் கொண்டுவரப்பட்ட மசோதா என்ற நிலை வந்துவிடுமோ என்ற அச்சத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனுடைய அடிப்படைக் காரணங்களை அமைச்சரும் அரசாங்கமும் பரிசீலிக்க வேண்டும் என்று முதலிலேயே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய மசோதாவை ஏற்காவிட்டாலும், நான் விசாரித்த வரையில் இப்படிப்பட்ட மசோதாக்கள் வரும்போது அந்தக் கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் அரசாங்கமே பரிசீலனை செய்து அந்தச் சட்டத்தை மீண்டும் கொண்டுவருவது முறை என்று தெரிகிறது. அந்த முறையையும் அமைச்சர் யோசிக்க வேண்டுமென்று முதலிலேயே நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்து மதச் சட்டம் 1955-ம் ஆண்டு பாராளுமன்றத்திலே கொண்டுவரப்பட்டது. ஆனால் அதிலே சொல்லப்பட்டிருக்கும் சில கருத்துக்கள் நம் மாநிலத்தைப் பொறுத்த அளவுக்கு 1949-ம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. 1955-ம் ஆண்டு, பாராளுமன்றத்தில் செய்யப்பட்ட மத்திய சட்டத்தில் சில குறைபாடுகள் இருப்பதாக நம்முடைய சென்னை உயர் நீதி மன்றம் 2, 3 தீர்ப்புகளில் சுட்டிக் காண்பித்திருக்கிறது. இந்தக் குறைபாடுகளை

மற்ற மாநில உயர் நீதி மன்றங்களும் இந்திய தலைமை நீதி மன்றமும் சுட்டிக் காண்பித்ததா, பிரபலித்ததா என்று இது வரையில் எனக்குத் தெரியவில்லை. ஆனால் நம்முடைய சென்னை உயர் நீதி மன்றம் மூன்று தீர்ப்புகளால் சுட்டிக் காண்பித்திருக்கிறது. அதன் விளைவு, பொதுவாக வழக்கு மன்றங்களுக்குச் செல்லுவதில் சில கஷ்டங்களைத் தருகிற சில குறிப்புகள் இருக்கின்றன. அதன் காரணமாகத்தான் இந்த மசோதாவை நான் தயாரித்து இந்த மன்றத்திலே சமர்ப்பித்திருக்கிறேன். இதிலே மூன்று பிரச்னைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. முதல் பிரச்னை 1955-ம் ஆண்டு மத்திய சட்டத்திலே உள்ள 11-வது பிரிவைப் பொறுத்த அளவுக்கானது. அந்தப் பிரிவிலே எந்தெந்தத் திருமணங்கள் வாய்ட் மேரேஜஸ், அப்-இனிஷ்யோ வாய்ட் மேரேஜெஸ் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வாய்டபிள் மேரேஜெஸுக்கும், வாயட் திருமணங்களுக்கும் வேறுபாடு இருக்கிறது என்று சட்ட அமைச்சருக்குத் தெரியும் என்று நம்புகிறேன். 11-வது பிரிவைப் பொறுத்த அளவுக்கு வாய்ட் மேரேஜெஸ் பற்றிய பிரிவு ஆகும். அதன் விளைவு என்ன என்றால் திருமணம் செய்தவுடனே, அந்த நிமிஷத்திலேயே அந்தத் திருமணம் சட்ட பூர்வமாகச் செல்லாத நிலை ஏற்பட்டு விடுகிறது. கோர்ட்டுக்கே செல்லவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் மத்திய சட்டத்திலே ஏதோ காரணத்தைக்கொண்டு கோர்ட்டுக்குச் சென்று இந்தத் திருமணம் செல்லாது என்று டிக்ளரேஷன் பெறவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஜுடிஷ்யல் வ்யூ, இது போன்ற அப்-இனிஷ்யோ வாய்ட் திருமணங்களை இக்னோர் செய்து விடலாம் என்பது. நீதி மன்றங்களுக்குச் சென்று டிக்ளரேஷன் பெற வேண்டியதில்லை என்பது ஜுடிஷ்யல் வ்யூ. அப்படி இருந்த போதிலும் கூட, இரண்டாவது திருமணத்திற்கு ஈடுபட்ட நபர்கள் கோர்ட்டுக்குச் சென்று டிக்ளரேஷன் பெறலாம் என்ற வாய்ப்பை மத்தியச் சட்டம் கொடுத்திருக்கிறது. இதனுடைய விளைவு என்ன என்றால், 11-வது பிரிவிலே உள்ள வார்த்தைகளைப் படித்துப் பார்த்ததில் அதிலே சில டெக்னிக்கல் டிஃபிகல்ட்டிஸ் வரும் என்று நான் கருதுகிறேன். நம் உயர் நீதி மன்றமும் அந்த முறையில் ஒத்துக்கொண்டிருக்கிறது. இந்தப் பிரிவிலே "Any marriage solemnised after the commencement of the Act shall be null and void" என்று இந்த முதல் பகுதியில் எந்தெந்த திருமணங்கள் வாய்ட் என்று டிக்ளேர் செய்திருக்கிறார்கள். இரண்டாவது பகுதி "And may on petition presented by either party there to" என்பதில் எய்தர் பார்ட்டி தேர்டு என்ற வார்த்தை ஆட்சேபணைக்கு உரிய வார்த்தை என்று கருதுகிறேன். இந்த வார்த்தைகள் இந்தச் சட்டத்தில் இருக்கிற காரணத்தினால் அதனுடைய விளைவு முதல் மனைவியோ அல்லது பல மனைவிகளோ இருந்தால்கூட இந்தச் சட்டத்தின்மூலம் எந்தத் திருமணம் செல்லாது என்று ஏற்படுகிறதோ அந்தத் திருமணத்திற்கு யார் யார் பார்ட்டிகளோ அவர்கள்தான் கோர்ட்டுக்குச் சென்று மனு தாக்கல் செய்யலாம் என்ற நிலை ஏற்படுகிறது. ஆனால், இந்தச் சட்டத்தினுடைய மூல நோக்கம் என்னவென்றால், இரண்டாவது திருமணம் செல்லாது.

அப்படிச் செல்லாத நிலை ஏற்பட்டால், அதனால் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு நீதி மன்றத்திற்குச் செல்ல பரிகாரம் இருக்க வேண்டும். இது தான் பாராளுமன்றத்தின் நோக்கம், மத்திய சட்டத்தின் நோக்கம். இந்த நோக்கம் இந்தப் பிரிவின்கீழே நிறைவேற்றப்படவில்லை. இந்தப் பிரிவின்கீழே முதல் மனைவி நீதிமன்றத்திற்குச் சென்று மனுச்செய்வதற்கு வாய்ப்பு இல்லை. நமது உயர் நீதிமன்றத் தீர்ப்பிலே ஒரு 'ஆப்ஸெர்வேஷன்' இருக்கிறது. அந்த 'ஆப்ஸெர்வேஷன்' என்ன என்பதை படிக்க விரும்புகிறேன். His wife is not left remedyless முதல் மனைவிக்கு பரிகாரம் இல்லை என்று கூறுவது தவறு. எப்படி என்றால் "She can file a suit under the ordinary law for a declaration that the marriage of her husband with second wife is illegal and void under Act XXV of 1955." முதல் மனைவிக்கு அந்த உரிமை இருக்கிறது. ஆனால், அவள் சிவில் கோர்ட்டிற்குச் செல்ல வேண்டும். காமன் லாவின் கீழே சிவில் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டும். இந்த 11-வது பிரிவின்கீழ் மனு தாக்கல் செய்ய முடியாது. அதே தீர்ப்பில் உயர்நீதி மன்ற நீதிபதி குறிப்பிட்டிருக்கிறார் "She must pursue the costly remedy of filing a suit under the ordinary law என்று சிவில் கோர்ட்டில் சாதாரணமாக சூட் போடுவது என்றால், அதிலுள்ள கஷ்ட நஷ்டங்களை நமது சட்ட அமைச்சர் அவர்கள் உணர்வார்கள். அந்தக் 'காஸ்டிலி ரெமிடிக்கு' ஏன் செல்ல வேண்டும்? இந்த 11-வது பிரிவின்கீழே அந்த முதல் மனைவிக்கு அந்த உரிமையைக் கொடுக்கக்கூடாதா? இதுதான் என்னுடைய பிரச்னை. இந்தப் பிரச்னையை அமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே ஒரு கேள்வியைக் கிளப்பலாம். எதற்காக முதல் மனைவிக்கு இந்த உரிமையைக் கொடுக்கவேண்டும் என்று கேட்கலாம். இதைப்பற்றி நானும் யோசித்துப் பார்த்தேன். என்னால் சொல்லக்கூடிய பதில் எல்லாம், இந்த 'டெக்லரேஷன்' வாங்கிய தேதியிலிருந்து இரண்டாவது மனைவி 'லீகல் ஸ்டேடஸை' இழக்கிறாள். அது ஒரு காரணம். இரண்டாவது காரணம், அந்த டெக்லரேஷன் டேட்டுக்குப் பின்னாலே பிறக்கக் கூடிய குழந்தைகள் 'இல்லெஜிடிமேட்' ஆகிறார்கள். 'லெஜிடிமேட்' என்ற உரிமை கொடுக்கப்படமாட்டாது என்பதை இரண்டாவது காரணமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். மூன்றாவது, இந்த முதல் மனைவிக்கு உள்ள 'செண்டிமெண்டல் பீலிங்'. இந்த சட்டம். வந்ததற்குக் காரணம் இரண்டாவது கலியாணம் கூடாது, முதல் மனைவியை எங்கேயோ தவிக்கவிட்டு விட்டு, இரண்டாவது திருமணத்தைச் செய்துகொண்டு ஒருவர் வாழ்வதற்கு அனுமதிக்கக்கூடாது என்பதுதான் நம்முடைய திட்டத்தினுடைய உள்நோக்கம். அந்த நோக்கம் பறிக்கப்படுகிறது. அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முதல் மனைவிக்கு அந்த உரிமையைக் கொடுக்கவேண்டும். இந்த 11-வது பிரிவைப் பொறுத்த அளவிற்கு என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதைக் கொண்டு வருவதற்குத்தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

[திரு. செ. மாதவன்] [23rd July 1964

அடுத்து, இன்னொரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதை 11-ஏ என்ற பிரிவாகச் சேர்க்கவேண்டும் என்றுதான் நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். பொதுவாக இந்த சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், என்னுடைய திருத்தத்தில் சில 'பார்மல் அமெண்டுமெண்ட்ஸ்' தேவைப்பட்டாலும், அவைகளைக் கொண்டுவருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைக் காரணம் காட்டி இந்த மசோதாவைத் தள்ளி விடக்கூடாது என்பதுதான். 11-ஏ பிரிவு ஒரு முக்கியமான பிரச்னையை நமக்கு நினைவூட்டுகிறது. மத்திய சர்க்கார் சட்டம் கொண்டு வந்தது 1955-ம் ஆண்டில். ஆனால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவுக்கு 1949-ம் ஆண்டில் இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இரண்டாவது திருமணம் செய்யக்கூடாது என்று Hindu Prevention of Bigamy and Divorce Act, 1949' -ல் சொல்லப்பட்டிருக்கிறது. 1949-ம் ஆண்டிலிருந்தே இரண்டாவது திருமணம் செய்யக்கூடாது என்று நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவுக்கு இருக்கிறது. இந்த 11-வது பிரிவு செல்லாத திருமணங்களுக்கு மனுக் கொடுப்பதற்கு இருக்கிறது. ஆனால், 1955-ம் ஆண்டுக்குப் பின்னாலே உள்ள திருமணங்களுக்குத்தான் அது பயன்படுகிறது. ஆனால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவுக்கு 1949-ம் ஆண்டிலிருந்து 1955-ம் ஆண்டு வரைக்கும், 6 ஆண்டுகளாக இப்படிப்பட்ட செல்லாத திருமணங்கள் இருக்கலாம், 'வாய்டு மாரியேஜஸ்' இருக்கின்றன. என்னுடைய ஒரு அனுபவத்தில் பார்த்தேன். ஒரு திருமண சம்பந்தமான வழக்கில் பார்த்த பொழுது இந்த நிலை என்ன என்பது பரிசீலிக்கப்பட்டது. 1955-ம் ஆண்டு மத்திய சர்க்கார் சட்டத்தில் இந்த 1949-ம் ஆண்டு நம்முடைய சட்டம் 'ரிபீல்' செய்யப்பட்டிருக்கிறது. அப்படி "ரிபீல்" செய்யப்பட்ட காரணத்தினால், இடைக்காலத்திலே 6 ஆண்டுகளாக ஏற்பட்ட திருமணங்களுடைய கதி என்ன? அதிலே செல்லாத திருமணங்கள் இருக்கின்றன. அந்த செல்லாத திருமணங்களுடைய பார்டிகள், அந்த நபர்கள், கணவன், மனைவியினுடைய கதி என்ன? இதை சிவில் கோர்ட்டு ஆராய்ந்தது. என்ன முடிவுக்கு வருவது என்று சிவில் கோர்ட்டுக்குப் புரியவில்லை. ஆகையால் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். 11-ஏ என்ற திருத்தத்தின்மூலம் இந்த 6 ஆண்டுகளாகச் செய்யப்பட்ட திருமணங்கள் 'வாய்டு' என்று 1955-ம் ஆண்டு சட்டத்தில் ஆக்கப்பட்டிருந்தால், அந்த நபர்களுக்கு இந்த 1955-ம் ஆண்டு சட்டத்தில் 11-வது பிரிவிலே மனுச் செய்வதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். ஆகவே 11-ஏ என்ற பிரிவை இதில் சேர்க்கவேண்டுமென்று நான் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறேன்.

என்னுடைய மூன்றாவது திருத்தம் 16-வது பிரிவைப் பொறுத்த அளவுக்கு இருக்கிறது. 16-வது பிரிவு மிக முக்கியமான பிரிவு. இது ஏதோ தவறுதலாக மத்திய சர்க்காருடைய சட்டம் கொண்டு வந்தபொழுது ஏற்பட்டுவிட்டது. அதை நிச்சயமாக திருத்த வேண்டுமென்று நான் சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக்

23rd July 1964] [திரு. செ. மாதவன்]

கொள்கிறேன். நம்முடைய சட்ட அமைச்சர் பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை உருவாக்கியதிலே அவர்களும் பங்கு பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய பேச்சுக்களையெல்லாம் நான் படித்துப் பார்த்தேன். அவர்கள் ஏதாவது இதைப்பற்றி வாதம் செய்திருக்கிறார்களா என்று பார்த்தேன். மற்ற அங்கத்தினர்கள்கூட இந்தப் பிரிவிலே ஏற்படக்கூடிய 'அனுமலி' என்ன என்பதை புரிந்து கொண்டார்களா என்று என்னாலே இந்த பாராளுமன்ற 'ப்ரொஸீடிங்ஸ்'-லிருந்து தெரிந்துகொள்ள முடியவில்லை.

பதினாறாவது பிரிவு, 11-வது பிரிவின்படி 'வாய்டு மாரியேஜஸ்' ஆகிவிட்டால், அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளின் நிலையைப் பற்றியதாகும். அந்த நிலை எப்படியிருக்கிறது என்றால், 11-வது பிரிவின்கீழ் எந்தத் திருமணமாவது செல்லாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டால், அந்தத் திருமணத்தினுடைய கணவன், மனைவி கோர்ட்டுக்குச் சென்று 11-வது பிரிவிலே ஒரு மனுப்போட்டு 'நல் அண்டு வாய்டு டெக்லரேஷன்' வாங்கிவிட்டிருந்தால்தான், அதற்கு முன்னாலே அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் 'லெஜிடிமேட்' ஆக்கப்படுகிறார்கள். இதிலுள்ள அனுமலி என்ன இருக்கிறது என்றால், அவர்கள் இறுதிவரை கணவன், மனைவியாக சந்தோஷமாக வாழ்ந்துவிட்டு இறந்துவிட்டால், அவர்களுடைய குழந்தைகள் என்ன ஆகிறது என்றால், இன்றைக்கு இருக்கிற 11-வது பிரிவின்படி அந்தக் குழந்தைகள் 'லெஜிடிமேட்' ஆகாது. அவர்கள் சண்டை போட்டுக்கொண்டு கோர்ட்டுக்குச் சென்றால், அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் 'லெஜிடிமேட்' ஆகின்றன. அவர்கள் சந்தோஷமாக வாழ்ந்துவிட்டு இறந்தால், அவர்களுடைய குழந்தைகள் 'இல்லெஜிடிமேட்' ஆகின்றன. இதுதான் 'அனுமலி' என்று நம்முடைய உயர்நீதி மன்றம் கூறுகிறது.

" It is obvious that obtaining of a decree of nullity is a pre-requisite to the grant of legitimacy of children under Section 16 of the Act is anomalous and could work a great deal of hardship in some cases. என்று நம்முடைய உயர்நீதி மன்றம் கூறியிருக்கிறது. ஆகவே தான் இந்தத் திருத்தத்தை நான் கொண்டு வந்திருக்கிறேன்.

இந்த 'அனுமலி' ஏற்பட்டது, இந்தத் தவறு எப்படி ஏற்பட்டது என்பதையும் நான் ஆராய்ந்து பார்த்தேன். நம்முடைய 'ஹிந்து மாரியேஜ் ஆக்ட்', மத்திய சர்க்கார் சட்டம் இங்கிலாந்திலுள்ள சட்டத்தை பின்பற்றி 'டிராப்ட்' செய்யப்பட்டது. இங்கிலாந்து சட்டத்தின் 9-வது பிரிவை அப்படியே பின்பற்றி இருக்கிறார்கள். " Section 9 of the English Matrimonial Causes Act, 1950-ஐ அப்படியே பின்பற்றியிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பிரிவு 'வாய்டபிள் மாரியேஜ்'-க்காக போடப்பட்ட பிரிவு. 'வாய்டு மாரியேஜஸ்'-க்காக போடப்பட்ட பிரிவு அல்ல. நம்முடைய பாராளுமன்றம் 'வாய்டு மாரியேஜஸ்'-க்காக இந்தப் பிரிவை நீட்டியிருக்கிறார்கள், 'எக்ஸ்டெண்டு' செய்திருக்கிறார்கள். ஆகையால் தான் இந்தத் தவறு ஏற்பட்டது. 'வாய்டபிள் மாரியேஜஸ்' என்றால் நிச்சயம்

'டெக்லரேஷன்' பெறவேண்டும். ஆனால் 'வாய்டு மாரியேஜ்' என்றால் 'டெக்லரேஷன்' பெறத் தேவையில்லை. இது 'ஜூடிஷியல் வியூ'. ஆனால், பெறலாம் 'மே' என்று போட்டிருக்கிறார்கள். Section 9 of the English Matrimonial Causes Act, 1950"-ஐப் பின்பற்றிய ஒரே காரணத்தினால் இந்த வார்த்தைகள் 16-வது பிரிவிலே சேர்க்கப்பட்டன என்று தான் கருதுகிறேன். இந்த 16-வது பிரிவில் 'Where a decree of nullity is granted என்று இருக்கிறது. அப்பொழுது கோர்ட்டுக்குச் செல்லவேண்டும் என்ற நிலை இருக்கிறது. கோர்ட்டுக்குச் சென்று 11-வது பிரிவின்கீழும், 12-வது பிரிவின் கீழும் இந்தத் திருமணம் தவறு, செல்லாது என்று ஒரு 'டெக்லரேஷன்' வாங்கினால் செக்ஷன் 16 செல்லும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இது இங்கிலீஷ் பாரம்பரியத்தைப் பின் ஏற்பட்டிருக்கிறது. இது இங்கிலீஷ் பாரம்பரயத்தைப் பின் பற்றிய காரணத்தினால் ஏற்பட்ட சிறு தவறு. இதை மாற்றி அமைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பமாகும். என்னுடைய குறிக்கோள் என்னவென்றால், அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றாலும் சரி, செல்லாவிட்டாலும் சரி, இரண்டாவது திருமணத்தின் மூலமாக பிறந்த குழந்தைகள் லெஜிடிமேட்டாக ஆக்கப்படவேண்டும், அதன் மூலமாக இந்த அனுமலி தீர்க்கப்படவேண்டும் என்பதுதான். இதை உயர்நீதி மன்றம் கீழ்க்கண்டவாறு சுட்டிக்காட்டியிருக்கிறது. "What has been said above is sufficient to indicate the necessity for suitable amendment of Section 16 of the Act" 16-வது பிரிவுக்கு திருத்தம் செய்யப்படவேண்டுமென்பதை உயர்நீதி மன்றம் சுட்டிக் காட்டியிருக்கிறது. 75, லாவீக்லியில் இந்த கேஸ் ரிப்போர்ட்டாகி இருக்கிறது. சட்டம் ஏற்படுத்தா விட்டாலுங்கூட இந்தக் கொள்கைகளையெல்லாம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி ஹிந்து லா திருமணங்களைப் பொறுத்தவரையில் நமக்கும் ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிறது. இந்த மன்றத்திற்கும் ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிறது. ஆகவே, ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவரலாம். ஆனால் அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது, இந்தக் கொள்கை பொதுவாக இந்திய நாடு பொழுது, இந்தக் கொள்கை பொதுவாக இந்திய நாடு முழுவதிலும் இருப்பதினால் மத்திய சர்க்காரின் கருத்தைக் கேட்டுக் கொள்வது நல்லதென்று சொல்வார்கள். நமது சட்ட மன்றத்திற்குள்ள உரிமையை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். அப்படிச் செய்ய விரும்பாவிட்டால் இந்தத் திருத்தங்களை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்வதற்காகவாவது அமைச்சரவர்கள் முயற்சிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கும் எங்களுடைய கழகத்தைச் சார்ந்த திரு. மாதவன் அவர்கள் இதிலே இருக்கிற நுணுக்கங்களையெல்லாம் சபை முன்பு எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் ஒரு சமுதாய சீர்திருத்தச் சட்டமாகும். இதனால் மிகவும் பாதிக்கப்படுகிறவர்கள், நிவாரணம்

அளிக்கப்பட வேண்டியவர்கள் பெண்பாலர்தான். பெண்களுடைய நலனுக்காகத்தான் இந்த மசோதா இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர, வேறு காரணத்திற்காகவல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நாகரிகம் வளர வளர இத்தகைய சட்டங்களும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகின்றன. பழங்காலத்தில் ஒருவர் பல மனைவிகளை மணக்கலாமென்று சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் பெண்கள் சமுதாயம். இதனை எதிர்த்துப் போராடிய பிறகு ஒருவருக்கு ஒருத்தி தான் என்ற சட்டத்தை நம்முடைய நாட்டிலே இப்பொழுது பின்பற்றி வருகிறோம். 1955-ஆம் ஆண்டிலே இந்து விவாகச் சட்டத்தை நமது பாராளுமன்றம் இயற்றியிருக்கிறது. இரு தாரத்தைத் தடை செய்யவேண்டும். ஒரு நபர் ஏற்கெனவே திருமணமாகியிருந்து அவர் ஒரு மனைவியோடு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிற சமயத்தில் அவர்களுக்குள்ளே ஏற்படுகின்ற மனச் சங்கடங்கள் காரணமாகவும், அந்த மனைவி பிடிக்கவில்லை, வேறு ஒரு இளம் மனைவி தேவையென்ற நப்பாசைக் காரணமாகவும் முன்பிருக்கிற மனைவியை மறைத்துவைத்துவிட்டு புதிய மாப்பிள்ளையாக வந்து புதிய திருமணம் செய்துகொள்கிறார்கள். இது சமுதாயத்தில் ஏற்படுகிற ஒரு குறைபாடு. இதை நிவர்த்திக்கவேண்டுமென்று தான் பாராளுமன்றத்திலே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நமது சட்டசபையிலுங்கூட 1949-வது ஆண்டில் மதராஸ் பிரிவென்ஷன் ஆப் பிகமி ஆக்ட் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சட்டம் என்று போட்டுவிட்டால் எல்லோரும் அதன்படி நடப்பார்கள் என்ற நியதியல்ல. சில இடங்களிலே தவறுகள் ஏற்படலாம். ஒரு ஆள் ஒரு மனைவியை மணந்துவிட்டு அல்லது இரண்டு மனைவிகளை மணந்துகொண்டு விட்டு, மூன்றாவது தடவை மணக்க விரும்புகிறார் என்று வைத்துக் கொள்வோம். என்ன காரணத்திற்காக அவர் அவ்வாறு செய்கிறார் என்று பார்த்தால் பணத்தின் காரணமாக அப்படிச் செய்யலாம்.

MR. SPEAKER: Effect of the marriage may be left to the concerned parties.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: பல காரணங்கள் இருக்கலாம். ஒன்று ஆசையின் காரணமாக இருக்கலாம், அல்லது பணத்தின் காரணமாக இருக்கலாம்.

MR. SPEAKER: The hon. Member need not dilate on that point.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: பெண்களுக்கு இழைக்கப்படுகிற கொடுமைகளை ஒழிப்பதற்குத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. இப்படி இரண்டாவது மூன்றாவது திருமணங்கள் செய்துகொள்வது முதல் மனைவிக்கு இழைக்கின்ற துரோகம் ஆகும். முதல் மனைவியை ஒதுக்கிவைத்துவிட்டு ஒரு ஆண் இன்னொரு மனைவியோடு திருமணம் செய்துகொள்கிறார் என்றால், அந்த முதல் மனைவிக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி இந்தத் திருமணம் சமபந்தமாக வரும் வழக்குகளை விசாரிக்கவேண்டிய பொறுப்பை ஜில்லா நீதிபதிக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதிகச் செலவில்லாமல் ஒரு பெட்டிஷன போட்டால் அதை விசாரிக்கலாம். டைவோர்ஸ் பெட்டிஷனோ அல்லது ரெஸ்டிட்யூஷன் ஆப் காஞ்சுகல் ரைட்ஸ் என்பதற்கோ மனுப்போடலாம். 10 ரூபாய் கட்டணம் செலுத்தி மனுப்போட்டால் போதும். அவவாறு பத்து ரூபாய் கட்டணத்தில் நியாயம் வழங்க வேண்டும் எனபதறகாக ஏற்படுத்தப்பட்ட ஒரு சட்டம் அது. இரண்டாம் தரம் மணம் செய்துகொள்கிறார் என்றால், ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, முதல் திருமணத்தை மறைத்து விட்டு முதல மனைவிக்குத் துரோகம் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில்தான் செய்கிறார்கள். அப்படி இரண்டு பேர்களும் சேர்ந்து செய்கிற ஒரு காரியத்திற்கு அவர்களே எப்படி மனுப் போடுவார்கள்? ஒரு லட்ச ரூபாய் கிடைக்குமென்று இருந்தால் முதல் மனைவியை மறைத்து வைத்துவிட்டு இரண்டாவது மனைவியை ஒருவன் கட்டிக்கொள்கிறான் என்றால், கணவன் எப்படி அந்த லட்ச ரூபாயை இழப்பதற்கு முன்வருவான்? இரண்டாவது மனைவியும் எப்படி நாங்கள் இரண்டு பேரும் முதல் மனைவியிருக் கும்பொழுதே கல்யாணம் செய்துகொண்டோமென்று சொல்ல முன்வருவாள்? ஆகவே, இந்த உரிமை யாருக்குக் கொடுக்க வேண்டுமென்றால், பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத்தான் கொடுக்க வேண்டும். இரண்டு பேரும் சேர்ந்து சூழ்ச்சி செய்து அந்தத் திருமணம் நடப்பதால், இரண்டாவது திருமணத்தை செய்து கொள்கிறவருக்கு இந்த உரிமையைக் கொடுப்பதில் நியாயமில்லை. இதை உயர்நீதிமன்றம் நன்கு சுட்டிக் காட்டி இந்த உரிமையை பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லி யிருக்கிறது. இரண்டாவது திருமணம் செய்வதினாலே பயன் அடைகிற பார்ட்டி ஒருபொழுதும் கோர்ட்டுக்குப் போக மாட்டார்கள். ஆகவே தான் திரு. மாதவன் அவர்கள் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது ஒரு சிறந்த திருத்தம் ஆகும். திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்த வர்கள் கொடுத்திருக்கிறார்களே, எதிர்க்கட்சிகள் எதைக் கொடுத் தாலும் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்ற மனப் பான்மையில் இதை எடுத்துக்கொள்ளாமல், அரசாங்கத் தரப்பிலே கூட நாங்கள் இம்மாதிரி ஒரு திருத்தத்தைக் கொண்டுவருவதாக இருக்கிறோம், நீங்கள் இதை வற்புறுத்தவேண்டாமென்று சொன்னாலும், அதை நாங்கள் போற்றுவோம். அரசாங்கத் தரப்பிலே இதைப் பரிசீலனை செய்து ஒரு திருத்த மசோதாவைக் கொண்டுவரவேண்டும். அதற்கு சட்ட அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹிந்து மேரிஜ் சட்டத்தில் உள்ள 16-வது பிரிவுக்கு ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு கல்யாணம் நடைபெறுகிறது என்று வைத்துக்கொள்வோம். அது சட்டப்படி நடந்தாலும் அல்லது வேறுவிதமாக நடந்தாலும், ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து திருமணத்தை நடத்திக் கொள்கிறார்கள். சட்டத்தின் வாயிலாக அது செல்லாமல் இருக்

கலாம்; சமுதாயம் அதை அங்கீகரிக்காமல் இருக்கலாம். வேறு ஜாதியைச் சேர்ந்தவர்களைக் காதல் புரிந்து திருமணம் செய்து கொண்டிருக்கலாம். ஆனால் அவர்களுக்குப் பிறக்கிற குழந்தை களை சட்டத்தின் எல்லைக்குட்பட்டு நடைபெறுகிற திருமணத்தின் வாயிலாகப் பிறக்கும் குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டியது சமுதாயத்தின் கடமையாகும். அது அரசாங்கத்தின் கடமையும் ஆகும். ஒரு தகப்பனோ அல்லது தாயோ தவறு செய்தால் அவர் களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அந்தத் தண்டனையை அனுபவிக்க வேண்டுமென்றால் அது நாகரிகம் வளர்ந்த ஒரு சமுதாயத்தில் ஒப்புக்கொள்ள முடியாத ஒரு கொள்கையாகும். ஆகையினால்தான் தவறு செய்கின்றவர்களைத் தண்டிக்கலாம் என்று இருக்கிறது. இருதார மண சட்டத்தை மீறி செய்திருந்தால் இண்டியன் பீனல் கோட்படி வழக்குப் போடலாம். பெட்டிஷன் போட்டு டைவர்ஸ் செய்யலாம். ஆனால் பிறக்கின்ற குழந்தைகள் என்ன ஆவது? அவர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசாங் கத்தின், சமுதாயத்தின் பொறுப்பு அல்லவா? திருமணம் சட்ட பூர்வமாக நடக்காமல் இருக்கலாம். முறைப்படி நடக்காமல் இருக்கலாம். ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு மனைவியாக பல பெண்களை மணந்து ராஜாக்களைப்போல் இருக்கலாம். ஆனால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. திருமணம் சட்டப் பூர்வமானதாக இல்லாமலும் சம்பிரதாயப்படி இல்லாமலும் சமூகத்தில் ஒப்புக்கொள்ளப்படாததாகவும் இருக்கலாம். அப்படிப்பட்ட குற்றங்களைத் தாய் தந்தையர்கள் செய்தார்கள் என்பதற்காக பிறக்கின்ற குழந்தைகளைத் தண்டிக்க முடியாது. அவைகள் பிறக்கும்போதே கிரிமினல் மைண்டோடு பிறக்கவில்லை. அப்படிப் பட்ட மேரேஜுகள் வாய்டு, அப் இனிஷியோ என்று தீர்ப்புகள் கொடுத்த பிறகு பிறக்கின்ற குழந்தைகளைத் தண்டிக்காமல் அந்தக் குழந்தைகளுக்கு சமுதாயத்திலே அந்தஸ்து கொடுத்து தகப் பனின் சொத்துக்கு வாரிசுகளாக ஆக்க வேண்டும் என்று நண்பர் மாதவன் கூறுகிறார்கள். ஆகவேதான் இந்தப் பதினோராவது, 16-வது செக்ஷன்களைத் திருத்த வேண்டும் என்று கொடுத்திருக் கிறோம். அப்படிப்பட்ட திருத்தங்களைப் பாராளுமன்றத்திலே செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம். பாராளு மன்றத்திலே செய்வது என்றால் அதற்குப் பல முறைகள் இருக் கின்றன. ஆனால் இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் நமக்கு இருக்கக்கூடிய தகராறுகளைத் தீர்க்க தக்க திருத்தங்கள் செய்ய இந்த மாமன்றத்திற்கு நிறைய அதிகாரம் இருக்கிறது. ஆகையினால் பாராளுமன்ற சட்டத்திற்கு ஒரு அமெண்டிங் சட்டத்தை இந்த மாமன்றத்திலே ஏற்றுக்கொள்வதன் மூலம் நம்முடைய மாநிலத்திற்கும் மக்களுக்கும் அரசாங்கம் நல்ல பெயர் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கும் கனம் அங்கத்தினர் மாதவன் அவர்களுடைய நோக்கங்களை மிகவும் வரவேற்கிறேன். அவர் இந்தத் திருத்தங்கள் எல்லாம் மிக்க தேவையானது என்று காட்ட

பெருமுயற்சி எடுத்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு நான் ஆதரவு கொடுக்க முடியவில்லை. காரணம் என்னவென்றால் இப்படிப்பட்ட திருத்தங்கள் வரவேண்டிய ஃபோரம் பெரும்பாலும் பார்லிமெண்டில்தான். இங்கே கொண்டு வருவது அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக இப்பொழுது இந்துச் சட்டத்தையே கோடிஃபை பண்ண வேண்டும். எல்லா இடங்களுக்கும் அது ஒன்றாக இருக்கவேண்டும். தனித்தனியாக இருக்கக் கூடாது என்று எடுக்கப்படுகிற முயற்சியை எல்லோரும் ஒத்துக்கொண்டிருக்கிறோம். அகில இந்தியாவுக்கும் இந்துச் சட்டம் ஒரே மாதிரியாக செய்ய வேண்டும் என்பது பார்லிமெண்டின் நோக்கம். அதை எல்லோரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தங்கள் மெயின் சட்டத்துக்குச் செய்ய வேண்டியவை. அதை சென்னை மாகாணத்துக்கு மட்டும் என்று செய்து கொள்ளாமல் வேற்றுமைக்கு இடம் கொடுக்காமல் அகில இந்தியாவுக்கும் ஒன்றாக இருக்கும் வகையில் பாராளுமன்றத்தில் திருத்தலாம். நோக்கங்கள் நல்லவைதான். ஆனால் சென்னை ஹைகோர்ட்டிலே லாகுனாவை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அது அகில இந்திய சட்டத்திலே உள்ள லாக்குனா. மெட்ராசுக்கு மாத்திரம் இருக்கும் ஓட்டை இல்லை. பாராளுமன்றத்திலும் திரு. மாதவன் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் பூரண அவகாசம் இருக்கிறது. இவைகள் நியாயமான திருத்தம் என்பதனால் இதில் ஆளும் கட்சி ஆளாத கட்சி என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. பாராளுமன்றத்திலேயே கண்டிப்பாக நிறைவேற்ற முடியும். அவர்கள் கோருகிற 11, 11(எ), 16 ஆகிய மூன்று செக்ஷன்களும் திருத்தப்படலாம்.

இன்னொன்று, 49-ல் பிகமி என்பது சட்ட விரோதம் என்று சட்டம் செய்திருக்கிறோம். பின்னால் 55-ல் மத்திய சட்டம் வந்த பொழுது இந்த சட்டம் ரிபீல் ஆகிவிட்டது. இதற்கிடையே இந்த 6 வருஷ காலத்தில் நடந்து இருக்கக் கூடிய அபன்ஸ்கள் என்ன ஆவது என்று கேட்டார்கள். இவ்வளவு நாட்களில் நடவடிக்கை எடுக்காமல் இருந்து இருக்க மாட்டார்கள். 100-க்கு 95 பேர் நடவடிக்கை எடுத்திருப்பார்கள். திரு. மாதவன் அவர்களுடைய நோக்கம் நல்லதுதான். ஆனால் சென்ட்ரலைஸ்ட் ஆக்ட் ஆக இருப்பது நல்லது. விட்டுப் போன கேஸ்கள் இருக்கலாம். அதற்கு என்ன செய்வது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். ஒரே சென்ட்ரல் ஆக்டாக இருப்பதுதான் நல்லது. ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஏற்றபடி ஆளுக்கு ஒன்றாகச் செய்து கொண்டு போவது என்பதனால் சட்டத்தின் ஆப்ஜக்ட் ஃப்ரஸ்ட்ரேட் ஆகிவிடும். ஆகவே அந்த முறையில் பாராளுமன்றத்திலேயே திருத்தம் செய்யலாம் என்று சொல்லி இதற்கு நான் ஆதரவு கொடுக்க முடியவில்லை என்று சொல்லிக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, முதன் முதலிலே கனம் மாதவன் அவர்கள் இவ்வளவு கருத்தாக இந்தச் சட்டத்தை அலசிப்பார்த்து, கொண்டு

வந்திருக்கக்கூடிய பல திருத்தங்களும் எந்த முறையில் அமைந்திருக்கின்றன என்று விளக்குகிறேன். அதற்குப் பிறகு சர்க்காருடைய நிலைமை என்ன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதலிலே அவர்களுடைய பில்லிலே கிளாஸ் ஒன்றை எடுத்துக் கொண்டால் 1949-ம் வருஷத்திய சட்டப்படி மறு விவாகம் செய்து கொண்ட தம்பதி ஒருவருக்கு அப்பொழுது கொடுக்கப்பட்ட உரிமை கோர்ட்டுக்குச் சென்று "நல்லிடி" வாங்கலாம் என்பது. பிறகு 1955-வது வருஷ சட்டப்படி, அந்தச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, நல்லிடி பெட்டிஷன் மூலமாக வாங்கலாம் என்பது நாம் செய்திருப்பது. திரு. மாதவன் அவர்கள் கோருகிறார்கள். 1955-ம் ஆண்டில் இருக்கும் சட்ட உரிமை 1949-ல் இருந்து ஏற்பட்ட திருமணங்களுக்கு, தம்பதிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பது Have I understood you correctly, Madhavan?

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, 1949-ம் ஆண்டில் இருந்து 1955 வரைக்கும் பல வாய்ட் மாரிஜஸ் இருக்கின்றன அந்த சட்டம் ரிபீல் ஆகி விட்டதால் அதன் விளைவாக இடையில் 6 ஆண்டுகளில் நடந்த. . . .

THE HON. SRI R. VENKATARAMAN: That is the second point which you have raised. May I speak in English, because it is a legal question. The first point is that the marriages solemnised before the commencement of the 1955 Act, which could be set aside as nullity under the 1949 Act is without remedy. So far as the remedy is concerned, Sri V. Sankaran has explained that between 1949 and 1955, if there was sufficient time to take recourse to the remedies available, and if they did not take recourse to such remedies that are available, it would be presumed that they did not want any remedy. That is another point and it is a valid point. In spite of the repeal of 1949 Act, under Section 6 of the General Clauses Act any rights which have accrued before repeal are always to be found even now. That is what I want to clearly point out to Sri S. Madhavan. I shall read Section 6 of the General Clauses Act—

"Effect of repeal: 6 Where this Act, or any (Central Act) or Regulation made after the commencement of this Act, repeals any enactment hitherto made or hereafter to be made, then, unless a different intention appears, the repeal shall not—

(c) affect any right, privilege, obligation or liability acquired, accrued or incurred under any enactment so repealed;"

Therefore, my submission is that the rights that existed in the 1949 Act are preserved in the Hindu Marriages Act. Therefore, it is not necessary to amend this law and provide remedy which is already there. I trust that I have made myself clear. The point here is whether the people who had the right under the 1949 Act to make the marriage declared void can continue to have their right in spite of the repeal of 1949 Act and Hindu Marriages Act 1945. They are governed by the General Clauses Act, Section 6

which provides notwithstanding repeal any rights obligation which have already accrued can still be agitated. Then they will to agitate according to the procedures laid down in the original Act.

SRI S. MADHAVAN : Is there any provision in 1949 Act for declaring marriages void?

THE HON. SRI R. VENKATARAMAN : It is only by suit. That is what the High Court has also held in the case of Lakshmi-ammal versus Ramaswamy. The rights already existed in the 1945 Act could have been agitated between 1949 and 1955. Now, even after the repeal, any rights, obligation or liability acquired, accrued or incurred between the years 1949 and 1955, it is still open by virtue of Section 6 of the General Clauses Act. It can be agitated and got remedied by way of suit. Therefore, my submission is that it is neither necessary to amend it nor would it be right to amend a particular section of the Hindu Marriages Act.

So far as amendment to Section 16 is concerned, it has got to be separated into two folds. Void marriages come under Section 11 and voidable marriages come under Section 12. So far as marriages which are voidable under Section 12 is concerned, one must get a declaration that the marriage is void, otherwise law presumes not only marriages valid, but also children born out of that marriage valid. The legal presumption is that they are valid and legitimate. So far as Section 16, which deals with section 11, viz., void marriages are concerned, there is a valid point which Sri S. Madhavan has made. Because if we say that the marriage is *ab initio* void, there is no declaration that the children are legitimate. The children born out of such a union will be deemed to be legitimate. My respectful submission is that it not only affects Madras but the whole of India. The matter relating to marriages throughout the country should be raised in the Parliament and not here. The hon. Member belongs to a party, which has got its representatives in the Parliament. Easily they can agitate there. It is not possible for the State to do it. We have to get the concurrence of the Government of India and the question will have to be examined. Therefore, I submit that the proper forum for raising the point about the void marriages is the Parliament and therefore, I request the hon. Member to see the usefulness of bringing it in the Parliament and not in this House. If anything has to be done by this Government, we will certainly write to the Government of India and point out that during the discussions in the Madras Legislature, this lacuna has been brought out and it may be taken note of by the Government of India and they may do something to rectify the lacuna.

SRIMATHI T. N. ANANDANAYAKI : With regard to the *ab initio* marriages, there is provision in the Criminal Procedure Code for maintenance. . .

SRI V. KRISHNAMOORTHY : Maintenance is quite different.

MR. SPEAKER : The hon Lady Member is asking whether the Hon. Minister would clarify the position. The hon. Member Sri V. Krishnamoorthy is not the Minister. Therefore, I request the hon. Member to resume his seat.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I am afraid the hon. Member, Sri Madhavan, has not looked into Section 16 of the Hindu Marriage Act. It arises in a different context altogether. The context there is that unless by a suit it was declared legitimate, it would be deemed to be illegitimate and in the case of void marriages, no suit may be laid and parties may continue to live as spouses in spite of the fact that it is a void marriage. But what is to happen to the children of those parties whose marriage has been declared void when they claim the property of their fathers or the persons concerned? Also another agnate or cognate of those parties will come and say that these are illegitimate children and they are not entitled to property rights except maintenance. My view is that they are entitled to a share in the property. They are not merely asking for some maintenance rights. Therefore, there is a lacuna, as they have combined sections 11 and 12 which are two sections. Section 11 deals with the void marriage and section 12 deals with the voidable marriages. So this is a matter which may be taken up with the Government of India.

SRI S. MADHAVAN : Sir, the Hon. Minister has not answered my first point. Under section 11, who are the parties who can file a petition?

THE HON. SRI R. VENKATARAMAN : Parties are spouses. That is what the 1949 Act says. We cannot, by a subsequent legislation, enlarge the scope of an Act which has been repealed. The spouses there only means husband and wife and nobody else.

SRI S. MADHAVAN : Sir, the Hon. Minister has not read Section 11. I have moved an amendment to Section 11. It refers only to the 1955 Act and not to the 1949 Act. Who are the parties who can file the petition?

THE HON. SRI R. VENKATARAMAN : The 1955 Act provides that the second wife or the next spouse can file a petition. If we look at section 11, we will find that either party, that is husband or wife, may present a petition. Section 11 says—

'Any marriage solemnized after the commencement of this Act shall be null and void and may, on a petition presented by either party thereto, be so declared by a decree of nullity if it contravenes. . .'

So, according to this provision, husband or wife can file it. What the hon. Member wants is that the first wife should file it. As I said, this is a matter in which the Government of India has laid down a policy for the whole of India and we cannot by any legislation think of changing the structure of the Hindu Marriage Act.

[23rd July 1964

SRI S. MADHAVAN : Mr. Speaker, Sir, will the Hon. Minister give an assurance that he will take up this matter with the Central Government?

THE HON. SRI R. VENKATARAMAN : There is no such assurance. All that I can say is that in a discussion which arose in the Legislative Assembly of Madras, a lacuna to a part of Section 16 of the Act—the only point which I accept—has been brought to our notice and the Government of India may examine this matter and let us know their position.

SRI S. MADHAVAN : Sir, in view of what the Hon. Minister has stated just now, I beg leave of the House to withdraw the motion.

The motion was by leave withdrawn.

(ii) RESOLUTIONS.

(1) AMENDMENT OF THE CONSTITUTION OF INDIA FOR REMAINING THE STATE OF MADRAS AS TAMILNAD.—*cont.*

MR. SPEAKER : The next item is the Resolution regarding Amendment of the Constitution of India for re-naming the State of Madras. This resolution was taken up for consideration on 24th January 1964 and the hon. Member, Sri Dakshinamoorthy Gounder stopped his speech half-way. Now if he wants to say anything more, he can continue his speech.

11-00 a.m.

* திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : சட்டமன்ற தலைவர் அவர்களே, தமிழ் கூறும் நல் உலகத்துக்கு தமிழ் நாடு என்று பெயரிட்டு அழைக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் திரு. இராம அரங்கண்ணல் கொண்டு வந்த தீர்மானத்தைப்பற்றி நான் என்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

இருந்தாலும்கூட அதைத் தொடர்ந்து சில கருத்துக்களை இன்று சொல்ல ஆசைப்படுகிறேன். நாடு என்ற சொல் இலக்கிய வழக்கிலோ பேச்சு வழக்கிலோ பலவகையாக உபயோகத்தில் இருந்து வந்திருக்கிறது என்பதை சில ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டி அன்று இந்தச் சபை முன்னே சொல்லியிருக்கிறேன்.

சாதாரணமாக நாடு என்ற சொல் சிறிய நிலப் பரப்புக்கும், அதே சமயத்தில் ஒரு பெரிய நிலப் பரப்புக்கும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை பல இலக்கியங்களில் பார்க்கிறோம். பேச்சு வழக்கிலும் பார்க்கிறோம் என்றாலும்கூட இன்றைக்கு இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றால் அதன் நோக்கம் என்ன? என்ன உணர்ச்சியோடு இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நாம் ஆலோசித்துப் பார்த்தோமானால் இந்தத் தீர்மானத்தை இப்போது கொண்டு வரவேண்டிய

23rd July 1964] [திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]

அவசியம் இல்லை என்று அன்றும் வலியுறுத்தி இருக்கிறேன், இன்றும் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். காரணம் இந்தத் தீர்மானம் ஒரு பிரிவினை உணர்ச்சியின் அடிப்படையில் உருவாக இருக்கிறது. இந்தப் பிரிவினை உணர்ச்சியின் அடிப்படையில் இந்த மாமன்றத்தின் முன்பு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர முடியும். ஆகவேதான் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லாத நிலையில் நாம் இருக்கிறோம்.

முன்னொரு சமயத்தில் கனம் அங்கத்தினர் திரு. கருணாநிதி அவர்கள் என்னைப்பற்றிப் பேசுகின்ற போது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என் மேல் ஒருவித தனி உரிமை உண்டு என்று முன்னேற்றக் கழகத்தின் தோற்றுவாயே என்னுடைய ஊர்தான். கூறினார்கள். அதை வரவேற்கிறேன். காரணம் திராவிட ஈரோடு; ஈரோடிலே திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்தது என்பதை நான் அறிவேன். அந்த ஒரு வகையில் அவர்களுக்கும் என் மேல் ஒரு உரிமை உண்டு. எனக்கும் அவர்கள் மேல் ஒரு உரிமை உண்டு. அதை மறுக்கவில்லை. இருந்தாலும் கூட அன்று நாங்கள் சொல்லிக்கொண்டு இருந்ததையே இன்றும் தொடர்ந்து விடாப்பிடியாக பிடித்துக்காண்டு இருப்போம் என்று சொல்வது நாட்டு நலனுக்கு உகந்ததாக இருக்க முடியாது என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அன்று எங்கள் ஊர் பெரியார் அவர்கள், ராஜாஜி அவர்கள் இடத்தில் ஏற்பட்ட மனத்தாங்கலின் காரணமாக திராவிட உணர்ச்சியை, மொழி உணர்ச்சியை, பிரிவினை உணர்ச்சியை தூண்டிவிடும் வகையில் திராவிட கழகத்தை துவக்கினார்கள். அன்றைய தினம் அவர் எந்த உணர்ச்சியோடு அந்தக் கழகத்தை துவக்கியிருந்தாலும்கூட இன்றைய தினம் அவர் முழுமையாக தேசீய ஒருமைபாட்டு உணர்ச்சியோடு தொண்டாற்றி வருகிறார். அவரோடு சிஷ்ய பாவத்தில் அமைந்த இந்த திராவிட முன்னேறக் கழகம் இன்னமும் பிரிவினை உணர்ச்சியை வைத்து செயல்பட்டு வருவது, குரு சிஷ்ய பாவத்திற்கே நல்லதாக அமையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திருவாசகத்திலே ஒரு எடுத்துக்காட்டு உண்டு. அதை அப்படியே நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டாம். உதாரணத்திற்குச் சொல்கிறேன். உடும்பு என்று ஒன்று உண்டு. அது தான் பற்றியது நல்லதோ, கெட்டதோ கடைசிவரை விடாது. காலத்திற்கும், உலக இயல்புக்கும், தற்கால சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு தங்கள் கருத்தைத் திருத்திக் கொள்வது அறிவுடைமையாகுமே அல்லாது முன்னர் எப்போதோ இயக்கம் ஆரம்பித்தபோது இருந்த கருத்தையே இன்னும் உடும்புப் பிடியாக வைத்துக் கொண்டிருப்பது நாட்டின் நலனுக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

"கொடிறும் பேதையும்

கொண்டது விடாது"

[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [23rd July 1964

என்று திருவாசகத்தில் வருகிறது. நான் பேதை என்று சொல்ல முன் வரவில்லை. உடும்புப் போக்கு தயவு செய்து வேண்டாம். தமிழகத்திற்குத் தமிழ் நாடு என்று இந்தத் தீர்மானத்தின் மூலமாகத்தான் அழைக்கவேண்டுமென்ற நிலை இல்லை. தமிழ் என்ற ஒன்று என்று மக்கள் வாயிலே நின்று ஒலித்ததோ, அந்த மக்கள் எந்த நிலப்பரப்பிலே குடியிருந்தார்களோ அந்த நிலப் பரப்புக்குத் தமிழ் நாடு என்ற பெயர் முன்பே வந்துவிட்டது.

"என்றுமுள தென் தமிழ்
இயம்பி இசை கொண்டான்"

என்று சொல்வதற்கு ஏற்ப தமிழ் என்றுமே இருந்தது என்ற நிலைமையில் நோக்குவோமானால் 'தமிழ் நாடு' என்ற பெயர் என்றுமே இருந்திருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியும். ஆகவே, அதற்கு ஒரு புதிய தீர்மானத்தை இந்தச் சட்ட மன்றத்தில் கொண்டு வரவேண்டிய அவசியமில்லை. ஏற்கெனவே உள்ள ஒன்றுக்கு சட்டசபையிலே தீர்மானம் கொண்டுவர வேண்டிய அவசியம் என்ன? அதற்கு ஒரு காரணம் அரசியல் காரணமாகத்தான் இருக்க முடியும். அது என்ன அரசியல் காரணம்? ஆளுகின்ற கட்சி இந்த நிலப் பரப்பினுடைய பெயரை, மொழியை, இந்த நிலப் பரப்பினுடைய மக்களை, அவர் களுடைய பண்பாட்டை உதாசீனம் செய்து கொண்டிருக்கிறது என்ற, இல்லாத நிலைமையை எடுத்துக் காட்டி விளம்பரப்படுத்து வதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக் கிறார்கள். ஏற்கெனவே தமிழ் நாடு சட்டசபை என்று இருக் கிறது. அரசாங்கத் தமிழ் ஏடுகளில் "தமிழ் நாடு" என்றே பொறிக்கப்படுகிறது.

திரு. ப. உ. சண்முகம்: அதைச் சட்டமாக்குவதிலே என்ன தவறு? அதை எதிர்ப்பானேன்?

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: என்னுடைய பெயர் 'தக்ஷிணாமூர்த்தி' என்று எழுதி ஒட்டிக் கொள்ளவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? என்னுடைய பெயரை உடலிலே ஒட்டிப் பார்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அது போன்று இதற்கென்று தனியாக ஒரு தீர்மானம் அவசியமில்லை என்பதுதான் என்னுடைய உறுதியான கருத்து.

திரு. இராம. அரங்கண்ணல்: கனம் தக்ஷிணாமூர்த்தி அவர்களைக் கருப்பையா என்று சொன்னால் ஏற்றுக்கொள்வார்களா?

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: அதன்றியும் நாடு என்ற சொல்லுக்கு வேறு அடிப்படையில் பொருள் கொண்டி ருக்கிறார்கள் என்பதைப்பற்றி நாம் கொஞ்சம் ஆராய்ச்சி செய்தால் பரவாயில்லை என்று நினைக்கிறேன். முக்கியமாக திருக்குறளிலேதான் நாடு என்ற தனி அத்தியாயம் காணப்படு கிறது. அந்த 'நாடு' என்ற அத்தியாயம் தொடங்குவதற்கு முன்பாக பரிமேலழர் தோற்றுவாயாக "இனி", அவ்வரசனாலும்

23rd July 1964] [திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]

அமைச்சனாலும் கொண்டுய்க்கப்படுவதாய், ஏனைய அரண் முதலிய நாடு என்ற சொல்லானது ஒரு அரசனை அல்லது அரசைக் கூறுகின்றார்" என்று கூறுகின்றார். பரிமேலழகர் கூறுவதன்படி அங்கங்கட்கு இன்றியமையாச் சிறப்பின்னாய நாடு ஓரதிகாரத் கொண்டு, அதனை ஆளுகின்ற அரசனுடைய ஆக்ஞைக்கு உட்பட்ட நிலப்பரப்பு என்ற நிலைமையில் இருக்கிறது. ஆகையினாலே நாடு என்ற பெயரை இன்றைக்கு நோக்கும்போது நம்முடைய பாரதியார் சொல்வதுபோல்

'பேரிமய வெற்புமுதற் பெண்குமரி யீறாகும்
ஆரிய நாடென்றே யறி'

என்கின்ற ஒரு கூற்றுக்கு இணங்க நாடு என்ற சொல்லுக்குப் பொருள் காணவேண்டும்.

"வடாது பனிபடு இமையத்தின் வடக்கும்,
தெனாது உருகெழு குமரியின் தெற்கும்,
குணக்கும், குடக்கும் தொன்று முதிர் பௌவம்"

என்பதற்கேற்ப, இமயமலையிலிருந்து தெற்கே குமரிமுனைவரை, மேல் கடலிலிருந்து கீழ் கடல் வரை பரந்து கிடக்கும் பாரத தேவியைப் பாராட்டுவோம் என்று கூறுமாப்போலே, இந்தப் பெரிய நிலப் பரப்பை 'நாடு' என்று அழைப்பது சாலப் பொருந்தும் என்பது என்னுடைய உறுதியான கருத்து. அதன்றி யும் இதே பாரதியார், 'பாரத தேவியின் திருத்தசாங்கம்' என்ற தலைப்பிலே கிளியைப் பெயர் கேட்டு விடை சொல்லுகின்ற வகையிலே 'பாரதமா தேவியெனப்பாடு' என்று கூறுகிறார். அதற்கு மேலே அவளுடைய நாடு எது என்று கேட்டு அதற்குப் பதிலாக

"பேரிமய வெற்புமுதற் பெண்குமரி யீறாகும்
ஆரிய நாடென்றே யறி"

என்று இந்த நாட்டினுடைய பரப்பளவை, எல்லையைக் கூறுகின்றார். இதனைச் சற்றுக் கூர்ந்து ஆராய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மேல் அந்தப் பாரத தேவியினுடைய ஆறு எது, அந்த ஆற்றினுடைய பெயரைச் சொல் கிளியே என்று கேட்கிறார். அதற்குப் பதில் சொல்லும் முகத்தான்

"தான் போம்வழியெலாந் தன்மமொடு பொன் விளைக்கும்
வான் போந்த கங்கையென வாழ்த்து"

என்று கங்கை நதிதான் இந்த நாட்டினுடைய நதி என்று கூறுகின்றார். அவ்வாறு அறுதியிட்டு இந்த நாட்டினுடைய, பாரத நாட்டினுடைய அரும்பெரும் செல்வம் என்று கங்கை நதியைக் கூறுவதை நாம்—குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தினர்—கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்

[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [23rd July 1964

கிறேன். நான் 'பார்ட்டி பேஸிஸில்' பேசவில்லை. உண்மையான நிலைமையைச் சொல்கிறேன். அதற்கு மேல் பாராதியார் சொல்கிறார்

"முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்
சிந்தனை யொன்றுடையாள்".

இது உணர்ச்சி பூர்வமான நம்முடைய நாட்டு நிலைமை. வடக்கே இமயமலை; தெற்கே குமரிமுனை; மேற்கே மேல்கடல்; கிழக்கில் கீழ் கடல் என்பதுதான் இந்த உணர்ச்சி பூர்வமான பாரத நாட்டின் எல்லைகள் என்பதைச் சற்று உணரவேண்டும். புறநானூறு கூறுகிறது—

"வடாது பனிபடு . . ."

இன்னொரு செய்யுள்

"வடாது பெருங்கல் . . ."

இவ்வாறு பல செய்யுள்கள் இருக்கின்றன. இலக்கிய வகையிலே பார்த்தாலும் நாம் நாடு என்று வழங்குவது உணர்ச்சி பூர்வமாக இந்த பாரத தேசத்தைத்தான் கொள்ளவேண்டும். அந்தப் பெரிய நாட்டிலே ஓர் உறுப்பாக இருக்கின்ற தமிழ் மா நிலத்திற்குத் 'தமிழகம்' என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். அந்தச் சொல் பெரிய உறுப்பிலே ஒரு சிறிய உறுப்பு அல்லது ஒரு அங்கம் என்ற கருத்தை எடுத்துக் காட்டுவ தாக அமைகிறது.

திரு. ப. உ. சண்முகம்: அதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர் களா?

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: நான் அதனை யோசனையாகத்தான் சொல்கிறேன். என்ன இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழக நண்பர் அரங்கண்ணல் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதில் அவசியம் ஒன்றுமில்லை. அதை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன். அதற்குக் காரணம் பிரிவினை உணர்ச்சி என்பதால்தான். நான் காங்கிரஸ் என்பதால் கூட அதனை நான் ஆட்சேபிக்கவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: கனம் உறுப்பினர் அவர்கள் 'பிரிவினை உணர்ச்சியின் காரணமாகத்தான் நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்' என்று சொன்னார்கள். நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த உணர்ச் சியின் அடிப்படையில் நான் தரவில்லை. ஆகவே, அதை ஏற்றுக் கொண்டு என்னுடைய தீர்மானத்தை ஏற்றுக்கொள்கிறார்களா?

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: இந்தத் தீர்மானத் திற்கே இப்போது அவசியமில்லை. நடைமுறையில் இப்போதே 'தமிழ் நாடு' என்று இருக்கிறது. தமிழில் சட்டப்படி எழுதப் படுகிறது.

23rd July 1964] [திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]

ஆங்கிலத்தில் தமிழ் நாடு என்று சொல்வது, அப்படியே மொழி பெயர்ப்பது மிகமிக அபாயமானது. அப்போது தமிழ் நாடு என்று சொல்ல மாட்டான். "டமிள் நாட்" என்று சொல்வான், எழுதுவான். தீந்தமிழ் சொல்லாக இருக்கிறது திருச்சிராப்பள்ளி என்பது. திருஞானசம்பந்தர் அவர்களே பாடுகிறார்:

"திருச்சிராப்பள்ளிக் குன்றுடையானைக்
கூறஎன் உள்ளம் குளிருமே"

என்று. ஆனால், நாம் திருச்சிராப்பள்ளி என்று சொல்லாது, ட்ரிச்சி என்று சொல்கிறோம். இது தமிழா? தூத்துக்குடியை டூட்டுக்குரின் என்று சொல்கிறோம். இப்படி எழுதுவதால்தான் கெட்டது. திருச்சிராப்பள்ளி என்றோ அல்லது தூத்துக்குடி என்றோ நாமே உச்சரிக்க மாட்டோம் என்ற நிலைதான் இருக்கிறது. ட்ரிச்சி, டூட்டுக்குரின் என்றுதான் எழுதுகிறோம், சொல்கிறோம். தூத்துக்குடி என்ற பெயரையே மறந்து விட்டோம். ஆகவே, தமிழ் சொல்லை ஆங்கிலத்தில் அப்படியே ஆங்கிலச் சொல்லாக மாற்றுவது அபாயமானது. மெட்ராஸ் பிராவின்ஸ் Madras Province அல்லது சென்னை மாநிலம் என்று இருப்பதே தமிழுக்கும், தமிழ் பண்பாட்டிற்கும் நல்லது.

திரு. இராம. அரங்கண்ணல்: ஆங்கிலத்தில் எழுதினால் இந்த அவக்கேடு வரும் என்று தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் சொன்னார்கள். ஆங்கிலத்தை அகற்றி விட்டு இந்தியைக்கொண்டு வரவேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி இந்தி வந்தால் எப்படி எழுதுவார்கள்?

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: இந்தியில் தமிழை அப்படியே எழுதினால் இப்படித்தான் இருக்கும். அது பொருந் தாது. தமிழ் வார்த்தைக்கு வேறு ஒரு மொழியும் வராது. அரசாங்க வழக்கில், இலக்கிய வழக்கில் அல்லது பேச்சு வழக்கில் தமிழ்நாடு என்றுதான் இருக்கிறது. தமிழ் நாடு சட்டசபை, தமிழ்நாடு அரசாங்கம் என்றுதான் இருக்கிறது. நாடு என்ற சொல்லுக்கு விரிவான அர்த்தம் கொடுக்கும் வகையில் இந்திய நாடு, பாரத நாடு என்று ஆக்கிவிட்டு, தமிழ் கூறும் நல்லுலகத் திற்கு தமிழகம் என்று பெயர் வைப்பது மிகவும் நல்லதாக யிருக் கும் என்று அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்கிறேன். நான் ஒத்துக் கொள்கிறேன். இது என் சொந்தக் கருத்து. இந்திய நாடு என்று சொல்லும் வகையில்தான் ஒருமைப்பாடு உணர்ச்சி இருக் கிறது. அகம் என்று சொல்வது ஒரு சிறிய அங்கம். அந்த வகை யில் தமிழகம் என்று வைத்துக்கொள்வது அவர்கள் இஷ்டம். வைத்துத்தானாக வேண்டுமென்று ஒன்றுமில்லை. நாடு என்ற சொல் பரந்த விரிவான பொருள் கொண்டதும், உணர்ச்சி பூர்வமாக அமைந்த ஒரு பெரிய நிலப்பரப்புமாகும். இமயம் முதல் குமரி, மேல் கடல், கீழ்கடல் இந்த எல்லைக்கு உட்பட்ட பரந்த நிலப்பரப்பிற்கு நாடு என்று அழைப்பதுதான் சாலப் பொருந்தும். என் ஊர் பெயர் முடக்குறிச்சி. அங்கு ஒரு குக் கிராமத்தில் ஒருவன் இறந்து விட்டால் அவன் அஸ்தியைத் தூக்கிக் கொண்டு கங்கைக்குப் போகிறோம். காசியில் உள்ள

[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [23rd July 1964

மகன் ராமேஸ்வரத்திற்கு யாத்திரை வருகிறான். இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்தியா பல துண்டுகளாக இருந்திருக்கலாம். தமிழ்நாடு மட்டும் ஒன்றாக இருந்ததா? 900 பங்காக இருந்தது. சேர நாடு ஒன்றாக இருந்ததா? சோழ நாடு ஒன்றாக இருந்ததா? பாண்டிய நாடு ஒன்றாக இருந்ததா? சேலம், கோவை, திருச்சி மாவட்டத்தின் சில பகுதிகளைக் கொண்டதாக இருந்தது கொங்கு நாடு. காங்கிரஸ் ஆட்சியில், காந்திஜியின் வழியில், நேரு ஆட்சியில், பின்னர் திரு. காமராஜ் அவர்களின் செல்வாக்கில் எல்லாம் ஒன்று சேர்ந்திருக்கிறது. இதற்கு ஊறு விளைவித்தால் இந்திய நாட்டிற்கு நம்மைப்போல் பாதகம் செய்தவர்கள் வேறு யார் இருக்க முடியும்? எந்தக் காலத்தில் இப்படி இணைந்து பெரிய உறுப்பாக இருந்தது? வடபுலம், தென்புறம் என்று பேசுகிறோம். இது பொருத்துமா? தார்மீக வகையில் திரு. காமராஜ் அவர்கள் தற்காலத்தில் செய்த தொண்டு காரணமாகத்தான் இந்தியா ஒன்றாக இருக்கிறது. இதை திரு. எஸ். கே. பட்டீல் அவர்கள் சொன்னார்கள், கேட்டேன். ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் சொன்னார்கள், அசோக் மேத்தா அவர்கள் சொன்னார்கள், கேட்டேன். நாலைந்து நாட்களாக எல்லோர் சொன்னதையும் கேட்டேன். இந்தப் பச்சைத் தமிழன் இல்லை என்றால் இந்த ஒருமைப்பாடு இருக்கமுடியாது என்று அவர்களும் சொல்கிறார்கள். நம் செல்வாக்கு இன்று இமயத்தையும் கடந்து சென்றிருக்கிறது. நிலை இப்படியிருக்க தமிழ்நாடு என்று ஒரு சின்ன நிலப்பரப்பை சுட்டிக் காட்ட வேண்டுமென்று சொன்னால் அது எப்படி பொருந்தும்? இன்று டெல்லியில் எவ்வளவோ தமிழர்கள் இருக்கிறார்கள். அண்ணாத்துரை அவர்கள் ஜனாதிபதியாக வேண்டுமென்று விரும்பினேன். அதில் என்ன தப்பு? திரு. காமராஜ் அவர்கள் இன்று ஒரு பெரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். யார் வேண்டுமானாலும் போகலாம். நாடு என்ற சொல்லை சின்ன நோக்கத்தோடு அதற்கு பொருள் கற்பிப்பதை விட்டு விட வேண்டும். உலகம் பூராவும் ஒன்று, உலக சர்க்கார் ஏற்பட வேண்டுமென்று நம் ஜனாதிபதி அவர்கள் பேசியிருக்கிறார்கள். உலகம் குறுகிய ஒரு நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது. முன்பு எல்லாம் அமெரிக்காவில் நடப்பது ஈரோட்டிற்கு எப்படி தெரிய முடியும்? இப்போது, கென்னடி அவர்கள் இறந்து விட்ட செய்தி அடுத்த நாளைக்கு தெரிந்துவிட்டது. எங்கள் கிராமத்தில் உள்ள மக்கள் கேட்டார்கள், கென்னடி அவர்கள் இறந்து விட்டாராமே, ஏன் இறந்தார்கள் என்று கேட்கிற அளவு உலகம் சுருங்கி விட்டது. ஆகவே நமக்கு இந்தக் குறுகிய மனப்பான்மை வேண்டாம். பரந்த அடிப்படையில் இந்திய நாடு பாரத நாடு என்று வைத்துக்கொண்டு தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு வேண்டுமானால் தமிழகம் என்று பெயர் வைத்து அழைப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை, அப்படி வரவேண்டும் என்றும் இல்லை.

திரு. ப. உ. சண்முகம்: தமிழ் நாடு என்று சொல்வது குறுகிய மனப்பான்மையைக் காட்டுகிறது என்று சொன்னார்கள். அப்படியானால் இந்த சட்டமன்றத்தில் வைக்கப்படுகிற கேள்வித் தாள்

23rd July 1964] [திரு. ப. உ. சண்முகம்]

களில் தமிழ் நாடு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால் அரசாங்கத்திற்கு குறுகிய மனப்பான்மை இருக்கிறது என்று கிண்டல் செய்கிறார்களா, அது முறைதானா?

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: குறுகிய மனப்பான்மை யாருக்கு இருந்தாலும் கண்டிக்கத்தான் வேண்டும். நாடு என்ற சொல் பரந்த மனப்பான்மையில் விரிந்த பொருள் தருவதாக இருக்கவேண்டும். நான் நிறைய புத்தகங்கள் கொண்டு வந்திருக்கிறேன். அவற்றை எல்லாம் படிக்கவேண்டிய அவசியமில்லை. நமக்கு வேண்டியது ஒருமைப்பாடு, ஒருமைப்பாடு உணர்ச்சி. அதைக் கொடுக்கிற வகையில் எதையும் செய்ய வேண்டாம். நாம் பரந்த மனப்பான்மையில், தமிழ்நாட்டுப் பண்பிற்கு ஏற்றபடி நடந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: தமிழ் நாடு என்று சொல்வது குறுகிய மனப்பான்மை என்று சொன்னார்கள். அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியே தமிழ் நாடு காங்கிரஸ் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் குறுகிய மனப்பான்மையில் வைக்கப்பட்டதானா?

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: தமிழ்நாடு என்று சொல்லவேண்டாம் என்று சொல்லவில்லை. நாடு என்ற சொல்லை பரந்த, விரிந்த பொருளைக் கொண்டதாக இந்திய நாடு, பாரத நாடு என்று வைத்துக்கொண்டு, தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு வேறு என்ன பெயர் வேண்டுமானாலும் வைத்து அழைத்துக் கொள்ளுங்கள் என்றுதான் சொல்கிறேன்.

11-30 a.m.

***புலவர் கா. கோவிந்தன்:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, நாம் பிறந்த மண்ணுக்கு, தமிழர்களாகிய நாம் வாழ்கின்ற இடத்திற்கு தமிழர்கள் சேர்ந்து தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டும் என்று தமிழ்நாடு சட்டசபையில் தீர்மானம் கொண்டு வந்து விவாதிப்பது என்கின்ற நிலை இருக்குமானால் அது எவ்வளவு தாழ்வானது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். தமிழ்நாடு என்று இந்த நாட்டுக்கு பெயரிட வேண்டும் என்று தமிழர்கள் வாதாடுவதும், தமிழர்களாகவே இருக்கின்ற ஒருசிலர் தமிழ்நாடு என்று பெயரிடவேண்டாம் என்று பேசுவதும் ஆகிய இந்த நிலையைப் பார்த்து உலகமே எள்ளி நகையாடும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். கருப்பையும் சிவப்பையும் பார்த்து காளைகள் மிரளுவதைப்போல், நாங்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தைப்பார்த்து ஆளும் கட்சியினர் மிரளுகிறார்கள். நாடு என்பது மிகக் குறுகிய நிலமாகும் என்கிற பொருள்பட பெரியவர் (தட்சிணாமூர்த்தி கவுண்டர்) அவர்கள் கூறினார்கள். அவர்கள் எந்த அடிப்படையில் அப்படிக் கூறினார்கள் என்று தெரியவில்லை. . . . .

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: நான் கூறியது, நாடு என்பது பெரிய நிலப்பரப்பு என்றும் பொருள்படும், சிறிய நிலப் பரப்பையும் குறிக்கும். கொங்கு நாடு என்று சொல்லும்போது அதில் எத்தனையோ சிறிய நாடுகள் இருக்கின்றன. அது

[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [23rd July 1964

மட்டு; தேசம் என்று சொல்லுகிறோம், பெரிய நிலப்பரப்புத்தான் தேசம் என்று எடுத்துக்கொள்ள முடியாது. பிரம்மதேசம் என்ற ஒரு இடம் இருக்கிறது. அரை கிராம் அளவுக்குக்கூட வராது அந்த இடம். ஆகவே நாடு என்பது சிறிய பரப்புக்கும் பொருந்தும், என்பதைத்தான் நான் எடுத்துச் சொன்னேன் . .

புலவர் கா. கோவிந்தன்: நாடு என்று சொல்லும்போது, இமயம் முதல் குமரி வரைக்கும் இருக்கின்ற நாட்டைத்தான் நாடு என்று சொல்லமுடியும் என்ற கருத்தையும் பெரியவர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தமிழ்நாட்டைப்பற்றி பாரதியார் அவர்கள் சொல்லும்போது,

"செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே. . ."

என்று சொல்லிவிட்டு, மேலும் எல்லையைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில்,

"நீலத்திரைக்கடலோரத்திலே—நின்று
நித்தந் தவஞ் செய் குமரி யெல்லை—வட
மாவவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ் நாடு. . ."

என்று சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு நிலப்பரப்பும் தமிழ் நாட்டை சேர்ந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, தமிழுக்கு வழிகாட்டியாக இருந்த தொல்காப்பியர் அவர்கள். . .

"வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து. . ."

என்று வடவேங்கடத்தையும் குமரியையும் எல்லையாக சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப்பற்றி பாரதியார் பாடியிருப்பதையும், நாட்டைப்பற்றியும் சொல்லியிருக்கின்ற இலக்கியங்களை பெரியவர் அவர்கள் பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அதோடு மொழி நூல்களில் தமிழ்நாட்டைப்பற்றி தமிழ் மொழியைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியும் அவர்கள் படித்திருக்கவேண்டும், படித்திருப்பார்கள் என்றால் நான் அதை வரவேற்கின்றேன். கால்ட்வெல் என்கின்ற பேராசிரியர் எந்தெந்த நாட்டில் எந்தெந்த மொழி ஆட்சியில் இருந்தன, அம்மொழிகள் எவ்வாறு பிறந்தன என்பதைப்பற்றி விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள் ஆங்கிலத்தில். அதை நான் மொழிபெயர்த்திருக்கிறேன். அந்த நூலை வேண்டுமென்றால் நமது நூலகத்தில் கொண்டு வைக்கிறேன், இதுவரை அதை படிக்காத ஆளும் கட்சி உறுப்பினர்கள் அதை தயவு செய்து படிக்கவேண்டும் என்று மிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மதராஸ் என்ற சொல்லைத் தமிழில் பேசும்போது சொல்லுகிறோமே தவிர

23rd July 1964] [புலவர் கா. கோவிந்தன்]

ஆங்கிலேயர்கள் மதராஸ் என்று சொல்வதில்லை, மட்ராஸ் என்றுதான் சொல்வார்கள். அதுபோல் தமிழ் நாட்டை ஆங்கிலேயர் "டமில் நாட்" என்பார்கள் என்பதற்காக தமிழ்நாடு என்ற நல்ல பெயர் இருக்கும்போது, அதை மட்ராஸ் என்று சொல்வது நமக்கு கேவலமாக தெரியவில்லையா என்று கேட்கிறேன். பழைய இலக்கியங்களைப் பார்த்தாலும் தமிழ்நாட்டைப்பற்றி பெருமையாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். இராமாயணத்தில்கூட தமிழ் நாட்டைப்பற்றி பெருமையாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. பெரியார் அவர்கள் சொன்னார்கள், அகத்தியன்தான் இந்த நாட்டுக்கு தமிழைக் கற்றுக்கொடுத்தான் என்று. அதே அகத்தியன் வட நாட்டிலிருந்து தென்னாட்டை நோக்கி வருகின்ற நேரத்தில். . .

"விடைகொடு போவான் ஒன்றை வேண்டினன்; ஏரும்தேயம்
தொடைபெறு தமிழ்நாடு என்று சொல்லும்; அந்த நாட்டின்
இடையயில் மளித்தரெல்லாம் இன்தமிழ் ஆய்ந்து கேள்வி
உடையவர் என்ப; கேட்டார்க்கு உத்தரம் உரைத்தல் வேண்டும்"

என்று சொல்லி, தமிழ்நாடு என்பதுதான் அப்போதும் இருந்தது என்று அப்போதே சொல்லியிருக்கிறார். அது மட்டுமல்ல, அகத்தியனே ஆண்டவனிடமிருந்துதான் தமிழை கற்றுக் கொண்டான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் தமிழ்நாடு என்று பெயர் வைப்பதில் என்ன தவறு இருக்கிறது? தமிழ் நாடு என்று பெயர் வைக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியவுடனேயே, எதிர்கட்சியினர் மண் வெட்டியை எடுத்துக்கொண்டு போய், தமிழ்நாட்டை தனியாக வெட்டிவிடவேண்டும் என்று சொல்வார்கள் என்று நினைக்கின்றீர்களா?—தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி என்று வைத்திருப்பது போல் தமிழ்நாடு சட்டசபை என்று நாம் வைத்திருப்பது போல் அரசாங்க ரீதியாக தமிழ்நாடு என்று பெயர் வைப்பதால் என்ன கேடு வந்துவிடும் என்று கேட்க ஆசைப்படுகிறேன். மொழி சிதைந்திருக்கிறது மேலும் சிதைந்துவிடும் என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு கொங்கு நாட்டில் இருக்கின்றவர்கள் பேசுவதும், திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கின்றவர்கள் பேசுவதும் ஒன்றாக இருக்கிறதா? அந்த பேச்சுக்களில் உள்ள வார்த்தைகளில் கேடுபாடு இல்லையா? ஏதோ தமிழ்நாடு என்று பெயர் வைத்துவிட்டால், ஆங்கிலேயர்கள் எல்லாம் பேசும்போது "டமில் நாட்" என்று சொல்லிவிடுவார்கள் என்றும் சொல்லப்பட்டது. அவர்களுக்கு சரியாக தமிழ்நாடு என்று சொல்லுங்கள் என்று நாம் கற்பித்துக்கொடுக்கவேண்டும். தட்சிணாமூர்த்தி கவுண்டர் என்று என்னால் சரியாக சொல் முடியவில்லை என்றால் கே. டி. கவுண்டர் என்று சொல்லுகிறேன், என்பதால், தன் பெயர் தட்சிணாமூர்த்தி கவுண்டர் என வேண்டாம் எனச் சொல்ல முடியுமா?

[23rd July 1964

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் இப்போது நாம் தமிழில் திருச்சி என்று தமிழில் மாற்றின பின்னால்தான் "ட்ரிச்சி" என்று தமிழர்களே சொல்ல ஆரம்பித்துவிடுகிறார்கள். அதைத் தான் பொறுக்க முடியவில்லை. பொதுவாக திசைச்சொல் என்ற முறையில் சில வார்த்தைகள் வழக்கத்தில் வரும்போது மாறி வரலாம். . .

கனம் உதவி சபாநாயகர்: கனம் அங்கத்தினர் அவர்கள் இரண்டாவது பேச்சாக நினைத்து இப்போது இதை பேசக் கூடாது.

புலவர் கா. கோவிந்தன்: தமிழ்நாடு என்ற பெயர் பழைய காலத்திலிருந்தே வழங்கப்பட்டு வந்திருக்கிறது. ரோமாபுரியோடும், எகிப்து நாட்டோடும், வணிகம் செய்து கொண்டிருந்த காலத்திலேயே தமிழர்கள் பேரரசு செலுத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழ் என்பதும், தமிழர்கள் என்பதும், தமிழ்நாடு என்பதும் பழைய காலத்திலிருந்தே தோன்றுதொட்டு பெருமையாக இருந்து வந்திருக்கிறது என்பதை நம்மால் கண்டுகொள்ள முடியும். ஆகவே தமிழ்நாடு என்பது புதிய பெயர் அல்ல. அது மட்டுமல்ல, நம்முடைய நாட்டை வெள்ளைக்காரர்கள் ஆள்வதற்காக இங்கே வந்தபோது யாரிடமிருந்து இந்த நாட்டை வாங்கினார்களோ அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு சென்னைப் பட்டிணம் என்றும், மதராஸ் என்றும் மட்ராஸ் என்றும் அவர்கள் தங்களுடைய வசதிக்காக வைத்துக்கொண்டார்கள். ஆகவே அதை ஒரு வழக்கமாக வந்த பெயர் என்று காரணம் காட்டுவது சரியல்ல. ஏதோ எதிர்க்கட்சிக்காரர்கள் கொண்டு வந்து விட்டார்கள், ஆகவே இதில் பிரிவினை நோக்கம் இருக்கிறது என்ற காரணத்தை வைத்துக்கொண்டு இதை மறுக்கவேண்டிய தேவையில்லை. பாராளுமன்றத்தில் இவ்விதமாக தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டும் என்று கேட்ட நேரத்தில் சென்னை சட்டமன்றத்தில் இவ்விதமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி இங்கு வந்தால் நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்ன காரணத்தினால் தான் இப்போது இந்தத் தீர்மானம் இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர வேறு எந்த விதமான பிரிவினை எண்ணத்திலும் அல்ல. இந்தத் தீர்மானத்தை இந்த சட்டமன்றம் நிறைவேற்றி, அதை பாராளுமன்றத்திற்கு அனுப்பி நாம் பிறந்த மண்ணுக்கு பெருமைத் தேடி தருகின்ற வகையில் இந்த நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க ஆளும் கட்சி இதுவரை தவறிவிட்டது என்பதை நாங்கள் சுட்டிக் காட்டுகின்ற முறையில்தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அந்த முறையில் இதை ஏற்றுக்கொண்டு, தமிழர்களுடைய பண்பாட்டை பாதுகாக்கின்ற முறையில், தமிழர்களுடைய உணர்ச்சியைக் காட்டுகின்ற முறையில், தமிழர்களுக்கும், தமிழ் மொழிக்கும் பெருமையைத் தேடிக்கொள்கின்ற முறையில் இந்தத் தீர்மானத்தை ஆளுங்கட்சி ஏற்று செயலாற்ற வேண்டும் என்று தங்கள் மூலமாக கேட்டுக்கொண்டு நான் விடை பெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

23rd July 1964]

திருமதி சி. குழந்தையம்மாள்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எதிர்கட்சி உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை எதிர்த்து ஒருசில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இப்போது இருக்கின்ற பெயரை மாற்றிவிட்டு தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய புலவர் கோவிந்தன் அவர்கள், கருப்பையும் சிவப்பையும் பார்த்து எப்படி காளைகள் மிரளுமோ அப்படி ஆளும் கட்சியினர் மிரளுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி அஞ்சவேண்டியது காளையர்கள் அல்ல. காங்கிரஸ்காரர்கள் வெள்ளைக்காரர்களைக் கண்டே அந்த காலத்தில் அஞ்சவில்லை. அப்படி அஞ்சக்கூடிய மிரளக்கூடிய பழக்கமும் எங்களுக்கு இல்லை. அதே நேரத்தில் வள்ளுவர் சொல்லியிருப்பதுபோல் . . .

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில். . .

என்ற வாக்கின்படி, அஞ்ச வேண்டிய இடத்தில் அஞ்சுவது தான் புத்திசாலித்தனம், ஆகவே வேறு எதையோ நினைத்துக்கொண்டு அஞ்சிவிட்டார்கள் என்று சொல்வது தவறு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும். அது பிறப்புரிமை என்றெல்லாம் சொன்னார்கள். தமிழ்நாடு சட்டசபை என்று காங்கிரஸ் சர்க்கார் கொண்டு வந்தது. தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வந்தது காங்கிரஸ் சர்க்கார். தமிழை போதனா மொழியாகக் கொண்டு வந்தது காங்கிரஸ் ஆட்சியிலே. அதற்கு மேலே கட்சியின் பெயருக்கு தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி என்ற பெயரை நிலை நாட்டி இருக்கிறது காங்கிரஸ் கட்சி. அப்படி இருக்கும்போது தமிழ்நாடு என்ற பெயரை வைக்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் தீர்மானமாக நிறைவேற்ற வேண்டுமென்று கொண்டுவருவாரேயானால் எனக்கு பாரதியார் பாடியப் பாட்டுத்தான் ஞாபகம் வருகிறது,

உப்பென்றும் சீனி யென்றும்
உள்நாட்டுச் சேலை யென்றும்
செப்பித் திரிவாரடீ—கிளியே
செய்வதறியாரடீ-

என்று பாரதியார் பாடியிருக்கிறார். இப்போது வேறு ஒரு பிரச்னையும் இல்லை. எல்லாம் காங்கிரஸ்காரர்களே வெற்றி பெற்றுவிட்டார்கள். இப்போது தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை சட்ட சபையில் நிறைவேற்றியாகிலும் அடுத்த தேர்தலுக்கு இதைக் காட்டி எங்களை மெஜாரிட்டிக்குக் கொண்டு வாருங்கள் என்று பொது மக்களிடத்தில் கெஞ்சிக் கூத்தாடி செப்பித் திரிகிற கூட்டமாக இங்கு வரக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

[திருமதி சி. குழந்தையம்மாள்] [23rd July 1964

அடுத்தபடியாக நாம் கான்ஸ்ட்டிட்யூஷன் கொண்டு வந்த போது இந்திய அரசியல் சட்டத்தில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று இருக்கிறது. அன்றைக்கே மாற்றி இருந்தால் மாற்றியிருக்கலாம். உலகம் முழுவதும் தெரிந்தது மெட்ராஸ் ஸ்டேட் என்றால். ஏன்? திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பார்த்துக் கேட்கிறோம், "வடவேங்கடம் தென்குமரி தமிழ் கூறும் நல்லுலகம்" என்று சொல்லும்போது, தென் குமரியிலிருந்து வடவேங்கடம் வரையில் உள்ள நான்கு மொழி நாடுகளிலும், கன்னட நாடு என்று வைத்திருக்கிறார்களா, தெலுங்கு நாடு என்று வைத்திருக்கிறார்களா, மலையாள நாடு என்று வைத்திருக்கிறார்களா? நீங்கள் மட்டும் மொழி அடிப்படையில் வைக்கவேண்டும் என்று ஏன் சொல்லவேண்டும்? அப்படிச் சொல்லுவார்களானால், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரை தமிழ் முன்னேற்றக் கழகம் என்றோ, தமிழ்நாடு முன்னேற்றக் கழகம் என்றோ ஏன் மாற்றவில்லை? அதற்கான காரணம் சொல்லவில்லை. அந்த முறையில் மாற்றாமல் இருந்து 'ஊருக்கு உபதேசமடி கிளியே' என்ற முறையில் தங்களுடைய கட்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்று வைத்துக்கொண்டு, விந்தியம் முதல் குமரி வரையில் உள்ள பரந்த மாநிலத்தில் உள்ள மற்ற மாகாணங்களில் மொழி அடிப்படையில் செய்யாதபோது, இங்கு மட்டும் தமிழ் நாடு என்று பெயர் வைக்கவேண்டுமென்று சொல்லி இங்கு வலியுறுத்தப் படுவது ஆட்சேபிக்கத்தக்கதாகும்.

அடுத்தபடியாக, நம் மெட்ராஸ் ஸ்டேட்டோடு திருத்தணி வந்து சேர்ந்தது. மெட்ராஸ் ஸ்டேட்டோடு சேர்த்துக்கொள்கிறோம் என்று அன்றைக்குச் சொன்னோம். இந்தியாவானது பாகிஸ்தான், இந்தியா என்று பிரிந்தது. அன்றைக்கும் மெட்ராஸ் ஸ்டேட் என்று இருந்தது. அப்புறம் மதராஸ் மனதே என்று ஆந்திரர்கள் போராடினார்கள். அப்போது மெட்ராஸ் எங்களது என்று நாங்கள் போராடி வெற்றி கண்டிருக்கிறோம். இந்த முறையில் மெட்ராஸ் என்று இருக்கக் கூடிய குட்வில் இருக்கிறதே அதை விட்டுக்கொடுக்கவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்லவேண்டுமென்று வந்திருக்கிறார்களேயொழிய வேறு ஒன்றும் தோன்றவில்லை. தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிற தீர்மானம் சரியல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்து தோன்றுகிறது. காங்கிரஸ் கட்சியானது, தமிழ்நாடு சட்ட சபை, தமிழ் போதனா மொழி, தமிழ் ஆட்சி மொழி என்று படிப்படியாக எல்லாத் துறையிலும் புகுத்தும் நேரத்திலே, ஏதோ ஒருவன் வழக்கமாக 6 மணிக்கு சூரியன் உதயம் ஆகும்போது 5 மணிக்கே எழுந்து நின்று 'சூரியனே, எழுந்திரு; சூரியனே, எழுந்திரு' என்று சொல்லி, எப்போதும் போல சூரியன் எழுந்ததும் 'பார், நான் எழுந்திரு என்று சொன்னேன். சூரியன் எழுந்து விட்டது" என்று சொன்னது போல எல்லாவற்றையும் காங்கிரஸ் கட்சியே முந்திக் கொண்டு செய்துவிடுகிறார்களே, ஆகையால் அதற்கு - முன்னால் இந்த

23rd July 1964] [திருமதி சி. குழந்தையம்மாள்]

தீர்மானத்தைக் கொண்டுவந்தாவது ரெக்கார்டுக்குக் கொண்டு வரவேண்டும் என்று இப்போது இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லி இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன். இந்தத் தீர்மானத்தினால் நாட்டு மக்களுக்கு எந்த வித பிரயோசனமும் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு என்று பெயர் வைத்துவிட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்குமா? எல்லோரும் படித்து விடுவார்களா? எல்லோருடைய வறுமையும் நீங்குமா? வீடு வருமா? சம சந்தர்ப்பம் வருமா? இது ஒரு சாதாரணப் பிரச்னை. உண்மையான பிரச்னைகள் நாட்டிலே பல இருக்கின்றன. அதைக் குறித்து போராடுங்கள் பார்ப்போம். வெற்றி பெறுங்கள் பார்ப்போம்.

இன்னொன்று மெட்ராஸ், மெட்ராஸ் என்று சொல்லுவதை மாற்றவேண்டும், ஹிந்தியை எதிர்க்கிறோம் என்று சொல்லுகிறார்கள் என்றால் பெருங்காயம் வைத்த பானைக்கு வாசனை இருக்கிற மாதிரி ஜஸ்டிஸ் பார்ட்டி என்ற பெயரில் ஆங்கிலேயர் காலத்தில் இருந்து வெள்ளைய ஏகாதிபத்தியத்தை காங்கிரஸ் கட்சி எதிர்த்த காலத்தில் ஆங்கில ஏகாதிபத்தியத்தை நிலை நாட்ட வேண்டுமென்று சொன்னவர்கள், ஜஸ்டிஸ் பார்ட்டியின் அடிச் சுவட்டில் வந்து திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருக்கிறவர்கள் மெட்ராஸ் ஸ்டேட் என்று வைக்கக் கூடாது என்று சொல்லிக்கொண்டு, ஆங்கிலமே இருக்கவேண்டும், ஹிந்தி போக வேண்டும் என்ற கொள்கையை கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு இந்தத் தீர்மானத்தை நான் முழு மனதோடு எதிர்க்கிறேன்.

*திரு. கே. ஏ. மதியழகன்: கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, சென்னை மாநிலம் என்பதை தமிழ்நாடு என்று பெயரிட இன்றைய அரசியலமைப்புச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று வலியுறுத்துமாறு பரிந்துரைக்கிற இந்தத் தீர்மானத்தின் மீது இவ்வளவு பேர்கள் கலந்து கொண்டு விவாதம் நடைபெறுவதே கூட உண்மையிலேயே ஆச்சரியமாக இருக்கிறது.

எங்கள் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் அரங்கண்ணல் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை நியாயமாக இந்த மாமன்றத்தில் நெடு நாளுக்கு முன்னரே ஆளுகிற கட்சியார், இன்றைக்கு அரசாங்கத்திலே பொறுப்பு ஏற்று இருக்கிறவர்கள் கொண்டு வந்திருக்கவேண்டும். இதைப் பற்றி நெடு நேரம் எதிர் கட்சியினர் விவாதம் செய்வதும் தங்கள் புலமையையெல்லாம் காட்டி எல்லா உறுப்பினர்களும் பேசுவதும், உலகத்தின் முன்னாலே நம்மைப் பார்த்து அவ்வளவு கவுரவம் ஏற்படாத சூழ்நிலை ஏற்படுமோ என்று இந்தத் தீர்மானத்தைப் பற்றி அஞ்சுகிறேன். இன்றைய தினத்தில் கூட நம் அமைச்சர் அவர்கள் தீர்மானத்தைப் பற்றிச் சொல்லுவார்கள், நம் நாட்டிலே அந்தப் பெயர் இருக்கிறது; அந்தப் பெயரில் அழைத்துக்கொள்ள இந்த விவா

தம் தேவையில்லை என்று. இன்றைய தினத்திலே ஒரு சர்க்கார் உத்திரவு மூலமாக ஆங்கிலத்திலே மெட்ராஸ் ஸ்டேட் என்று இருக்கட்டும், தமிழிலே தமிழ்நாடு என்று அழைக்கப்படும் என்று உத்திரவு போட்டார்கள். ஆனால் உண்மையிலேயே, சட்ட அமைச்சருக்குத் தங்கள் மூலமாகச் சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகிறேன், உண்மையிலே இன்றைக்கு என்னுடைய நண்பர் அரங்கண்ணல் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்திற்கு காரணமே பாராளுமன்றத்தில் அப்படி சட்டம் செய்தால்தான் தமிழ்நாடு என்ற பெயர் செல்லுபடி ஆகும், அப்படிச் சட்டம் செய்யாமல் கனம் அமைச்சர்கள், தமிழ்நாட்டு அரசாங்கத்தார் இன்றைக்குச் செய்கின்ற காரியங்கள், இருக்கின்றனவே, அரசாங்க உத்திரவு, மொழிச் சட்டம் என்று சொல்லுகிற சட்டங்கள் இன்றைக்கு அரசியல் சட்டத்திற்கு முரணானது, செல்லுபடியாகாது. அரசியல் சட்டத்தின் பேரில் செய்யப்பட்ட மோசடி இன்றைக்கு யாராவது வழக்கு மன்றத்தில் . . .

கனம் உதவி சபாநாயகர்: மோசடி என்று சொல்லுவது சரி அல்ல.

திரு. கே. ஏ. மதியழகன்: மோசடி என்று சொல்லுவதில் தவறு இல்லை என்று எண்ணுகிறேன். ஆங்கிலத்திலே ஃப்ராட் என்று சொல்லுவது தவறு இல்லை. நான் இது ஃப்ராட் ஆன் தி கான்ஸ்ட்டிட்யூஷன் என்று தான் சொல்லுகிறேன். தமிழ்நாட்டு அரசாங்கம் உத்திரவு போட்டதன் மூலமாக ஒரு மோசடி செய்திருக்கிறது. அரசியல் சட்டத்தின் மீது மோசடி செய்திருக்கிறது. யாரும் துணிந்து செய்ய மாட்டான், இருந்தாலும் யாராவது ஒரு குடிமகன் தமிழ்நாடு என்று வழங்குகிறார்களே, அது தவறு, செல்லுபடியாகாது, முரணானது சட்ட விரோதமானது, சென்னை ராஜ்யம் என்று தான் சொல்லவேண்டும் என்று வழக்குத் தொடர்ந்தால் கண்டிப்பாக அவனுக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கப்படும். அத்தகைய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் நமது அரசியல் சட்டத்தில்

"3 (a) Parliament may be law—

(d) alter the name of any State; provided that no Bill for the purpose shall be introduced in either House of Parliament except on the recommendation of the President and unless, where the proposal contained in the Bill affects the area, boundaries or name of any of the States. . . the Bill has been referred by the President to the Legislature of that State for expressing its views thereon within such period as may be specified in the reference or within such further period as the President may allow and the period so specified or allowed has expired."

என்ற விதி முறை இந்திய அரசியல் சட்டத்தில் மூன்றாவது பிரிவிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதன்படி பாராளுமன்றம் ஒன்றுதான் ஒரு மாநிலத்தின் பெயரை மாற்றவேண்டுமென்றால் சட்டம் செய்யலாம். அந்தச் சட்டம்கூட ஜனாதிபதி சிபாரிசை

அடிப்படையாகக் கொண்டுதான் மசோதா வரலாம். அந்த மசோதாகூட ஜனாதிபதி சிபாரிசு செய்வதற்கு முன்னால் மாநிலத்திலே இருக்கிற சட்ட மன்ற கருத்துறையைக் கேட்டுக்கொண்டு அதன் பின்தான் வரலாம் என்று தெளிவாக வரையறுத்து மூன்றாவது விதி கூறுகிறது. இதன்படி நம்முடைய மாநில சர்க்கார் ஒரு உத்தரவோ, அல்லது ஒரு சட்டமோ போட்டால், அந்தச் சட்டம் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக இருந்தால், அது உண்மையிலேயே மோசடி என்பதைத் தவிர வேறு என்ன அர்த்தம் என்று நான் கனம் துணைச் சபாநாயகர் அவர்கள் மூலமாகக் கேட்கிறேன். இதை நான் எடுத்துக்காட்டுவதற்குக் காரணம் மோசடி செய்கிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்வதற்காக அல்ல. எவ்வளவோ பெரிய மோசடிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். சட்டத்தில் மட்டும் மோசடி என்பது அல்ல. மாமேதை உலகத் தலைவர்களில் ஒருவராகிய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் அஸ்தி சம்பந்தமாக, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திருமதி குழந்தையம்மாளுடைய தொகுதியான, கோவை மாவட்டத்தில், 'இதுதான் நேருவினுடைய அஸ்தி' என்று மோசடி செய்திருக்கிறார்கள். அதனால் இந்த மோசடியைப் பற்றி எனக்குக் கவலை இல்லை . . . .

திருமதி சி. குழந்தையம்மாள்: அது திரு. மதியழகன் வந்த மாவட்டம்கூட என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: கோவை மாவட்டம் நான் பிறந்த மாவட்டம் என்று சொல்லிக் கொள்வதிலே நான் பெருமைப்படுகிறேன். என்னுடைய மாவட்டத்தில் இப்படி நடந்த அபகீர்த்திக்கு, அவமானத்திற்கு நான் தலை குனிகிறேன். வெட்கப்படுகிறேன். நான் இதுபற்றி குறிப்பிடுவதற்குக் காரணம் உண்டு. அவருடைய தொகுதியைச் சேர்ந்தவர், சூலூர் தொகுதியைச் சேர்ந்தவர், ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவருடைய தலைமையில்தான் இந்த மோசடி நடைபெற்றது. அதைத்தான் சொன்னேன். இப்படிப்பட்ட மோசடிகள் நடைபெறுகின்றன.

SRI R. PONNAPPA NADAR: On a point of order. The hon. Member refers to matters which are not relevant to the discussion. The President of the D.C.C. is not in the House.

MR. DEPUTY SPEAKER: I have already called the hon. Member to order.

திரு. கே. ஏ. மதியழகன்: நான் சர்க்காரை குறை கூறவேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. நம் எல்லோருக்கும் வெட்கமாகவும், வருத்தமாகவும் இருக்கிறது. நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுதுதான் பர்மாவிலிருந்து வந்தவர்களை வரவேற்றுவிட்டு வந்திருக்கிறார்கள். தமிழர்கள் என்றால் உலகத்தில் புகழ்கொடி பறக்கிறது. ஆனால் அங்கிருந்து எல்லோரும் விரட்டியடிக்கப்படுகிறார்கள். இலங்கையை ஆளும் அம்மாள் இவர்களைக்கூட எடுத்துக்கொள்ளலாமா என்று சொன்னார்கள். தமிழர்கள், தமிழ்நாடு என்ற பெயர்கூட

[திரு. கே. ஏ. மதியழகன்] [23rd July 1964

வைப்பதற்கு என் தயங்கவேண்டும்? இலங்கையிலிருந்து வேறு இங்கே அனுப்பலாம். பர்மாவிலிருந்து இங்கே அனுப்புகிறார்கள். அவர்களை இங்கு வரவேற்றுக்கொண்டிருக்கிறோம், இதனால் ஒரு பெரிய நெருக்கடிகூட ஏற்படலாம். இதையெல்லாம் சர்க்கார் உணரவேண்டும். அவர்களைக் குற்றம் சொல்வதற்கு நான் சொல்ல வில்லை. இவ்வளவு பெரிய மோசடி செய்துகொண்டிருக்கிறார்கள். யாராவது வழக்கு போட்டுவிடுகிறார்களோ என்றுதான் சொன் னேன். அந்தப் பெருமையை திருமதி குழந்தையம்மாள் வகிக்க வேண்டுமென்றால் வகிக்கட்டும். நாங்கள் அந்தப் பெறுமையை அடையவேண்டுமென்பதில்லை. யார் மூலமாகவாவது வந்து தமிழ் நாடு என்று பெயர்வைத்தால் சரி. என்னுடைய அருமை நண்பர் திரு. அரங்கண்ணல் கொண்டுவந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், சட்ட அமைச்சரேகூட இம்மாதிரி ஒரு தீர்மானத்தை இங்கே கொண்டு வந்து நிறைவேற்றலாம். நாங்கள் அந்தத் தீர்மானத்தை முழு மனதுடன் சிரம் தாழ்த்தி ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். அந்தப் பெருமையை இந்த மாமன்றம் பெறட்டும் என்று கூறி, என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. டி. கோசல்ராம்: கனம் உத்வி சபாநாயகர் அவர்களே, இது புலவர்கள் தினம் என்று நினைத்து ரசித்துக்கொண்டிருந்தேன் நண்பர் கவுண்டர் அவர்கள் அவர்களுடைய புலமையையும், பாண்டியத்தையும் காட்டிப் பேசினார்கள். அவ்வாறே நண்பர் அரங்கண்ணல், புலவர் கோவிந்தன் போன்றவர்கள் பேசினார்கள் திருமதி குழந்தையம்மாளும் ஒரு புலவர்தான். அவர்களும் பேசினார்கள். ஆனால், எனக்கு ஒன்றே ஒன்று தோன்றுகிறது. இன்று நாட்டில் இம்மாதிரி ஒரு மொழி, ஒரு பெயர் இதையெல்லாம் வைத்து மக்களை ஏமாற்றலாம் என்று காங்கிரஸ்காரர்கள் நினைத் தாலும் அல்லது எந்த அரசியல் கட்சி நினைத்தாலும், வெகு காலத் திற்கு மக்களை அவ்வாறு ஏமாற்ற முடியாது என்பதை மாத்திரம் மனதில் கொள்ளவேண்டும் நாட்டில் பொருளாதார புரட்சி வேகமாக ஓடிக்கொண்டிருக்கும்பொழுது, அதை அமுக்குவதற் காக மொழியின் பெயரால், ஜாதியின் பெயரால் எப்படி முதலாளித் துவம் வலை போட்டு பிடிக்கின்றார்களோ, அப்படி அதற்கு ஆளாக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். திரு. மதியழகன் பேசினார்கள். நான் அவர்களுக்குச் சொல்லுகிறேன். 'நீங்கள் தயவு செய்து கோர்ட்டில் உடனே வழக்குப் போடுங்கள். இந்த அரசாங்கம் மோசடி செய்தது. அரசியல் அமைப்புக்கு விரோத மாக ஒரு உத்தரவு போட்டு தமிழ்நாடு என்று இந்த அரசாங்கம் பெயர் வைத்து இருக்கிறது என்று நீங்கள் வழக்குப் போட வேண்டும். நீங்கள் சொல்லுவது உண்மையானால், தமிழ்நாடு என்று உண்மையாக நினைத்து பேசியிருந்தால், இப்பொழுது இந்த அரசாங்கம் மோசடி செய்தது என்ற குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமானால், நீங்கள் ஒரு வழக்குப் போடுங்கள்': நண்பர் மதியழகன் ஒரு வழக்கறிஞர். (ஒரு குரல்: இல்லை.) 'ஐ ஆம் ஸாரி.'

23rd July 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் திரு மதியழகன் ஒரு வழக்கறிஞராக இல்லாததினால்தான் இதையெல்லாம் சொல்லு கிறார்.

திரு. கே. டி. கோசல்ராம்: அவர் அட்வகேட் என்று நினைத்துக் கொண்டு சொன்னேன். இல்லையென்றால், நானும் தவறாக நினைக்க மாட்டேன். அவரும் தவறாக நினைக்கமாட்டார்கள்.

கனம் உதவி சபாநாயகர்: 'பெர்ஸனலாக' ஒன்றும் சொல்ல வேண்டாம்.

திரு. கே. டி. கோசல்ராம்: அம்மாதிரி தமிழ்நாடு அரசாங்கம் மோசடி செய்திருக்கிறது என்று வழக்குப் போட்டுவிட்டு அவர்கள் பொது மக்கள் மத்தியிலே வந்தார்களேயானால் அவர்கள் என்ன ஆவார்கள் என்று அவர்களுக்குத் தெரியும்.

திரு. கே. ஏ. மதியழகன்: 'ஆன் எ பாயிண்ட் ஆப் பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன்' ஸார். சர்க்கார் இந்த மோசடி செய்திருக் கிறார்கள். அட்வகேட் சொல்லுவதெல்லாம் சட்டத்திற்கு உகந்தது என்று அர்த்தமில்லை. அட்வகேட் இல்லாதவர் சொல்லுவதெல்லாம் சட்டத்திற்கு புறம்பானது என்று அர்த்தமில்லை. சென்னை உயர் நீதி மன்றம் இதைப்பற்றி இது தவறுதலாக இருக்கிறது என்று தஸ்தாவேஜுகளை அனுப்பியிருக்கிறார்களா, இல்லையா என்பதை அவர்கள் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம்: கனம் அமைச்சர் அவர்களைக் கேட்ப தற்கு கனம் உறுப்பினர் அவர்களுக்கு வேறு சந்தர்ப்பம் இருக் கிறது. 'பெர்ஸனல் க்ளாரிபிகேஷன்' என்னிடம் கேட்டிருந்தால் நன்றாக இருக்கும். நீங்கள் கோர்ட்டில் வழக்குப் போடுங்கள். தமிழ் நாடு அரசாங்கம் மோசடி செய்தது என்று வழக்குப் போடுங்கள். அப்பொழுது நாம் பேசிப் பார்ப்போம். இங்கு பேசி ஒரு குழப்பம் பண்ணவேண்டாம் என்பதுதான் என்னுடைய எண்ணம். சில இடங்களில் நெடுங்காலமாக பழக்க வழக்கத்தில் இருப்பது சட்ட பூர்வமாக ஆக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மட்டுமல்ல. நெடு நாளாக தொன்று தொட்டு அது நடந்து வரு கிறது. தமிழ்நாடு அரசாங்கம் என்று இந்த அரசாங்கமே பெயர் வைத்து, தமிழ்நாடு சட்ட சபை என்று அச்சிட்டிருக்கிறது. நாமெல்லாம் எழுதுகிறோம். தமிழ்நாட்டு அமைச்சர் திரு. பூவராகன், தமிழ் நாட்டு முதல் அமைச்சர் என்றெல்லாம் நீங்களும் நாங்களும் எழுதுகிறோம், பேசுகிறோம். பழக்க வழக் கத்தில் தமிழ் நாடு என்று வந்துவிட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது என்றுதான் நான் சொல்லுகிறேன். ஆனால், இந்த ஊரை விட்டு, பிற மாகாணங்களுக்கோ, தேசத்திற்கோ போகும் பொழுது 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று சொல்லுங்கள் என்றுதான் சொல்லுகிறோம். ஜஸ்டிஸ் கட்சி இருக்கிறதே அந்தக் கட்சி பல நல்ல காரியங்களையும் செய்திருக்கிறது. தொன்று தொட்டு தமிழ்

[திரு. கே. டி. கோசல்ராம்] 23rd July 1964]

நாட்டிலுள்ள மேதைகள் நல்ல பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். உலகம் முழுமைக்கும் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றால் தெரிகிறது. மெட்ராஸ் என்றால் தெரியுமே தவிர, தமிழ் நாடு என்றால், அப்படி ஒரு ஊர் இருக்கிறதா, இந்தியாவில் எங்கு இருக்கிறது என்று கேட்பார்கள். அதை உணராமல் இருக்க முடியாது. மைசூர் ஸ்டேட்டின் பெயரை 'கர்நாடக் ஸ்டேட்' என்று வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். மைசூர் என்றால் உலகம் அறிந்த பெயர், அதை எப்படி விட்டுவிடுவோம் என்று மக்கள் போராடினார்கள். ஏதோ ஒருவர் 'நாம் தமிழர்' என்று சொல்லுகிறார். இப்பொழுதுதான் அவருக்கு தமிழர் என்று புரிந்திருக்கிறது. இம்மாதிரி ஊரை ஏமாற்றுவதற்கு சில பேர் செய்கிறார்கள். அம்மாதிரி செய்யவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். மெட்ராஸ் என்ற பெயருக்கு உலகத்தில் 'ரெப்யுடேஷன்' இருக்கிறது. அந்த 'ரெப்யுடேஷன்' மூலமாக தமிழ் நாட்டு மக்களுக்கு லாபம் வரலாம் என்று நினைக்கிறோம். தமிழ் நாட்டு மக்களும் லாபம் உண்டு பொருளாதாரத் துறையிலே மெட்ராஸ் என்பதற்கு அந்த 'ரெப்யுடேஷன்' இருக்கிறது.

இந்திய தேசத்தில்கூட மெட்ராஸ் நிர்வாகத்தைப்பற்றி புகழாதவர்கள் யாரும் இல்லை. எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் வேண்டுமானால் அதை மேடையில் சொல்லாமல் இருக்கலாம். 'கம்பாரடிவ் ஸ்டடியாக' எடுத்துக்கொண்டால், அவர்களுக்குத் தெரியும் தமிழ் நாடு அரசாங்கத்தினுடைய நிர்வாகம் மற்ற அரசாங்கங்களின் நிர்வாகத்தைவிட பெரும் அளவிற்கு நன்றாக இருக்கிறது என்பது. நமக்குள் தவறு இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்வோம். உங்களைவிட நான் அதிகமாகப் பேசுவேன். நிர்வாகத்தில் கோளாறு, கோளாறு, அதைத் திருத்தவேண்டுமென்று உங்களைவிட நான் அதிகமாகப் பேசுவேன். அதில் உங்களைவிட குறைந்து பேசுபவன் அல்ல நான். ஆனால், 'கம்பாரடிவ்' ஆக எடுத்துக் கொண்டால், தமிழ் நாட்டு அரசாங்கத்தின் நிர்வாகம் நல்ல நிர்வாகமாக இருக்கிறது என்று சொல்லுகிறோம். அதே மாதிரி 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று சொன்னால் உலகத்திலே ஒரு கண்யம் இருக்கிறது, உலகத்திலே ஒரு மரியாதை இருக்கிறது. ஆகவே, அந்தப் பெயரை வைத்துக் கொண்டிருப்பதில் என்ன தவறு இருக்
12-00 கிறது? சம்பிரதாயத்திற்கு "தமிழ் நாடு" என்று எல்லாவற்றிலும் போட்டு விட்டோமே. இது தமிழ் நாடு இல்லை என்று யார் சொல்ல முடியும்? மார்வாரியோ, வேறு யாரோ இங்கே வரவில்லை. இங்கே எல்லோரும் தமிழர்கள்தான் இருக்கிறார்கள். தமிழ் நாடு சட்ட சபைதான் இது. "தமிழ் நாடு" என்று எல்லா யாதாஸ்துகளிலும் இருக்கிறது. ஆகவே தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்பது ஒரு பொலிடிகல் ஸ்டண்ட். இதன் மூலமாக மக்களை ஏமாற்றலாம் என்று நினைப்பதைவிட, ஜனநாயக சோஷலிசத்தை எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள், அதற்கு இதுவா திட்டம், என்று எதிர்க்கட்சிக்காரர்கள் தீர்மானம் கொண்டு வந்திருப்பார்களேயானால், அவர்கள் மக்களுக்கு சேவை செய்தவர்களாவார்கள்.

23rd July 1964] [திரு. கே. டி. கோசல்ராம்]

ஆகவே மொழிப் பிரச்னையை வைத்துக் கொண்டு, நாட்டை குழப்பவேண்டாமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

திரு. நா. இராசாங்கம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, "தமிழ் நாடு" என்று பெயர் வைக்க வேண்டுமென்ற தீர்மானத்தின் மீது இவ்வளவு பெரிய விவாதம் நடக்கும் என்று நான் எண்ணவில்லை. இதிலே பெரும் புலவர்களும், சட்ட நிபுணர்களும் கலந்து கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. கிரேட் பிரிட்டனில் நான்கு தீவுகள் அடங்கியிருக்கின்றன. நான்கும் ஒரே ராஜ்யத்தில் அடங்கி இருக்கின்றன. ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு மொழி உண்டு. அந்த மொழிப் பிரகாரம்தான் பெயர் வைத்திருக்கிறார்கள் இந்தியாவை எடுத்துக்கொண்டால், பல ராஜ்யங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ராஜ்யமும் அதன் மொழியைப் பொருத்து பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரிஸா, வங்காளம், கேரளம் என்றெல்லாம் மொழி அடிப்படையில் பெயரிட்டு அழைக்கப்படுகிறது. நம் மொழியிலும் ஒரு நாடு இருக்க வேண்டுமென்பதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம். இதனால் பிரிவினை ஏற்படும் என்று சில புலவர்களும், இதை வைத்து அரசியல் நடத்த வேண்டாம் என்று சில புலவர்களும் இங்கே பேசினார்கள். தமிழ் நாடு தமிழர்கள் வாழ்கிற இடம், அதனால் தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று சொல்லுகிறோமே தவிர, இதிலே பிரிவினை எண்ணம் ஒன்றும் எங்களுக்குக் கிடையாது. "திராவிட நாடு" என்று சொன்னால், உண்மையிலேயே பயப்பட வேண்டியதுதான். திராவிட நாடு கோரிக்கை இப்பொழுது எப்படி இருக்கிறது என்று அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும். (சிரிப்பு.) இதிலே சிரிப்பதற்கு ஒன்றுமில்லை. பகிரங்கமாகச் சொல்லுகிறேன், எங்களால் நாடு கெடக்கூடாது என்று முடிவுக்கு வந்திருக்கிறோம். அதை சட்டசபையிலும் நிரூபிக்கிறோம். இது தமிழர்கள் வாழும் நாடு. ஆகவே தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று கேட்கிறோம். இதிலே பிரிவினைக்கு எங்கே இடமிருக்கிறது, அப்படி பெயர் வைக்க அவசியமில்லை என்று வாதாடலாமே தவிர, பிரிவினைக்காக இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால், அதை ஏற்றுக் கொள்ள முடியாது. காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே மக்களுக்கு நல்லது, கெட்டது புரிகிறது. எதிர்க் கட்சிகள் வரத்தான் செய்யும். ஒரு ஆட்சியில் குறை கண்டவர்கள்—எவ்வளவுதான் சோஷலிசம் பேசினாலும்—உரிய ஆட்களைத் தேர்தெடுக்கத்தான் செய்வார்கள். தமிழ் நாடு என்று பெயர் வைத்தால், உலகத்திலுள்ளவர்களுக்குத் தெரியாது, "மெட்ராஸ்" என்று பெயர் இருந்தால்தான் தெரியும் என்று சொல்லப்பட்டது. இது தேவை இல்லாத ஒரு வாதம். அது ஒரு பெயர் பெற்ற பெயர் என்கிறார்கள். வெள்ளைக்காரர்கள் காலத்தில்கூட, "இந்தியா கவர்ன்மெண்ட்" என்றுதான் சொன்னார்கள். இப்பொழுது பாரதம் என்று மாறியிருக்கிறதே, அது எப்படி உலகத்திற்குத் தெரிகிறது? "லோக் சபா" போன்ற பெயர்கள் உலகத்திற்குத் தெரியும்போது, "தமிழ் நாடு" என்று

பெயரிட்டால், அது மட்டும் தெரியாமல் போகுமா? அப்படிச் செய்தால், "தமிழ்" என்பது, "டமிள்" என்று ஆகிவிடும் என்று சொன்னார்கள். ஏன், " Tamizh " என்று எழுதக் கூடாதா? அப்படி எழுதினால் ஒன்றும் கெட்டு விடாது. இந்தத் தீர்மானத்தை எதிர்க்கவேண்டும் என்ற எண்ணத்தில் எதிர்த்தால் பரவாயில்லை. இதைக் காட்டி திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்து விடப்போவதில்லை. ஆளும் கட்சியினர் இதை எதிர்ப்பதனால், அவர்களும் வளர்ந்துவிடப் போவதில்லை. யாருக்கும் கெடுதல் இல்லாத ஒரு பெயர். தமிழ்ப் புலவர்களே இதை எதிர்த்தால், வேறு யார்தான் எதிர்க்க மாட்டார்கள்? அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நானும் படித்தவன். இப்படி ஒரு அரசியல் சூழ்நிலை இருக்குமென்று நான் நினைக்கவில்லை. இந்த நாடு செய்த ஒரு துர்ப்பாகியம். ஆகவே தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று வலியுத்தி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எஸ். ராமசாமி நாயுடு:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, புலவர்கள் பேசிய இந்த அரங்கிலே, புலவர் அல்லாதவர் பேசுவது பொருத்தமாக இருக்காது என்றாலும், ஒரு சிறு உண்மையைச் சொல்ல நான் எழுந்திருக்கிறேன். புலவர்கள் தமிழ் கூறும் நல்லுலகத்தைப் பற்றிப் பேசினார்கள். தமிழ் ஆட்சி நடந்த இடத்தைப் பற்றிப் பேசவில்லை. வட வேங்கடம் முதல் தென் குமரி வரை தமிழ் பேசுகிறார்கள், தமிழ் பேசும் நல்லுலகம் என்று சொன்னார்களே தவிர, தமிழ் அரசாங்கம் உள்ள இடம் என்று சொல்லவில்லை. தமிழ் அரசாங்கம் எப்படி இருந்தது என்றால், தமிழை அடிப்படையாக வைத்துக்கொண்டால், "கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும் துளுவும் உன் உதிரத்து உதித்து எழுந்ததெல்லாம்" என்று தமிழ் நாட்டைப் பற்றிப் பேசும் காலத்தில், மற்றவை எல்லாம் பிரிந்து போய் விட்டன. பின்னர் இருந்த தமிழ் உலகம் கொங்கு நாடு, தொண்டை நாடு, சேரநாடு, சோழ நாடு, பாண்டியநாடு என்று இருந்து தமிழ் பேசினார்களே தவிர, தமிழ் அரசாங்கம் என்று இருந்ததில்லை. வட நாட்டில் சமஸ்கிருதம் பேசினவர்கள் 56 தேசங்களை வைத்திருந்தது போல, தமிழ் பேசுகிறவர்கள் பல ராஜ்யங்களை வைத்திருந்தார்கள். தமிழ் அரசாங்கம் என்று ஏற்பட்டது வட நாட்டினர் தென்னாட்டிற்குப் படை எடுத்து வந்த பின்தான். அதுவும் போயிற்று. அந்தப் பரம்பரையில் வந்த சென்னப்பன் ஆண்டார். அப்பொழுதுதான் அந்நியர்கள் வந்தார்கள். அவர்கள் சென்னப்பனிடம் வாங்கிய சென்னையிலிருந்து ஆட்சி செய்ய விரும்பினதால், சென்னைக்கு "மெட்ராஸ்" என்று பெயர் வைத்தார்கள். தமிழ் நாடு என்று ஒரு அரசாங்கம் இருந்தது என்றால், அது சென்னப்பன் கடைசியாக இருந்த காலத்தைத்தான் குறிக்கும். இன்றைக்கும் "மெட்ராஸ் அரசாங்கம்" என்று அழைத்தாலும், தமிழ் நாடு அரசாங்கம் என்றுதான் எடுத்துக் கொள்கிறோம். தமிழர்கள் ஒன்றாக இந்த தமிழ் பேசும் நல்லுலகத்தை ஒரு குடையின்கீழ்க் கொண்டு வந்து ஆண்டார்

கள் என்பது ஒரு நேரத்திலும் இல்லை. எந்த நேரத்திலும் சண்டை போடுவது, படை எடுப்பது, பகை அரசனுடைய கோட்டையை இடிப்பது, கழுதை ஏர் கட்டி கொட்டைமுத்து விதைப்பது, இது போன்ற காரியங்களைத்தான் தமிழ் அரசர்கள் செய்து வந்தார்கள். கடைசியாக அந்த அரசாங்கம் தெலுங்கு அரசாங்கம் அதற்குப் பிறகு முகம்மதிய அரசாங்கம் வந்து, அவர்கள் ஓரளவுக்கு ஆட்சி புரிந்தனர். தெலுங்கு அரசாங்கத்தின் கடைசிப் பகுதியில் இருந்தவர் சென்னப்பன். அந்நியர்களான வெள்ளையர்தான் அவர்கள் பாஷையிலே "மெட்ராஸ் அரசாங்கம்" என்று வைத்துக் கொண்டார்கள். அதற்காக நாம் இப்பொழுது சண்டை போட வேண்டிய அவசியமில்லை. இன்றைக்கும் தமிழகம் ஒன்றாக ஆக்கப்பட்டிருக்கிற நேரத்திலும் பல மொழிகள் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். அதை நாம் மறந்து விடக்கூடாது. அப்படி பல மொழிகள் இருந்தும், தமிழ் நாட்டிற்குத் தனி அரசாகங்ம் இல்லை என்றால், எவ்வளவு வேற்றுமைகள் வளரக் காத்துக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. தமிழ் இன்றைக்கு இருக்கிற நிலையைப் பார்த்தால், "மழை பெய்து ஆற்றிலே வெள்ளம் வருகிறது" என்று சொல்லக் கூடிய நிலையில் இருக்கிறது. கல்யாணம் செய்து கொண்ட புருஷன் மனைவிகூட ஒருவரை ஒருவர் பெயர் சொல்லிக் கொள்வதில்லை. இந்த அம்மையார் யார் என்று கேட்டால், "என்னுடைய வீட்டுக்காரி" என்று சொல்லுவார். இந்த ஐயா யார் என்று கேட்டால் "என்னுடைய வீட்டுக்காரர்" என்று அந்த அம்மையார் சொல்லுவார். திரு. கோசல்ராம் சொன்னதுபோல, ரஸ்தா வழிகளில் எல்லாம் "தமிழ் நாடு அரசாங்கம், பொதுப்பணித் துறை, தமிழ் நாடு அரசாங்கம், நெடுஞ்சாலைத் துறை" என்ற பலகைகளை நாம் காண்கிறோம். வாஸ்தவத்திலே, "தமிழ் நாடு" என்பதைக் கையாண்டு வருகிறோம். சென்னை என்று இருந்தால், இன்றைக்குத் தமிழ் நாட்டிலே அடங்கியிருக்கும் சேர, சோழ, பாண்டிய, கொங்க, தொண்டை நாடுகளுக்கெல்லாம் சமாதானம் ஏற்படும். தமிழ் நாடு என்று வைத்துக்கொண்டால், மற்ற மொழி பேசுபவர்களை குறைப்படுத்துவதாக இருக்கும். "சென்னை அரசாங்கம்" என்ற பெயர் தமிழிலே இருக்கலாம். ஆங்கிலத்தில் எழுதும் பொழுது "மெட்ராஸ் அரசாங்கம்" என்றிருக்கலாம். இப்பொழுது சட்டசபையில் நாம் எல்லோரும் தமிழில்தான் பேசுகிறோம். வரும் பத்திரிகைகள் அத்தனையும் தமிழிலேதான் வருகின்றன. ஆகவே தமிழ் நாட்டு அரசாங்கம் என்று இருக்க வேண்டும் என்று நாம் நிர்ப்பந்தப் படுத்த வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன். இது மிகமிக அவசரமானதும், அவசியமானதும் ஆன தீர்மானம் என்றால் அது மிகையாகாது. இந்த மாமன்றத்திலே தமிழ் நாடு என்று வைக்க

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [23rd July 1964

ஆட்சேபனை இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது உண்மையிலேயே தமிழ்த் தாய் கண்ணீர் வடிப்பாள். தமிழ் நாடு நெடுஞ்சாலைத்துறை, பொதுப் பணித்துறை என்று எல்லாம் போடும் நாம் இந்தியாவின் மற்ற பாகங்களுக்கும் அன்னிய நாட்டுக்கும் தெரிவிக்கும் வகையில் தமிழ் நாடு என்ற வாசகத்தை ஏன் போட முடியாது, என்பதற்கு அமைச்சர் அவையில் இருப்பவர்கள் என்ன பதில் சொல்வார்களோ நான் அறியேன். கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு அரசாங்க அலுவலகங்களில் எல்லாம் இந்தியாவுக்குள்ளேயும் அன்னிய நாட்டுடனும் நடக்கும் கடிதப் போக்குவரத்துக்களை தமிழ் நாட்டில் இருந்து போகின்றவை என்று ஏன் காட்டமுடியாது. தமிழ் நாடு என்று போட்டு, மெட்ராஸ் ஸ்டேட் என்பதை பிராக்கெட் ஆக்கி கடிதங்கள் சென்றால், மற்றவர்கள் மெட்ராஸ் ஸ்டேட்தான் தமிழ் நாடு என்பதை தெரிந்து கொள்ள மாட்டார்களா என்று அறிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே இந்தத் தீர்மானத்தை ஒத்துக் கொள்வதில் எந்தவிதமான ஆட்சேபமும் இருக்க முடியாது. இப்படிப்பட்ட ஒரு திருத்தத்தினால் யாரோ அரசியல் லாபம் அடைய வேண்டும் என்றோ அல்லது விளம்பரம் அடைய வேண்டும் என்றோ கொண்டு வந்த தீர்மானம் அல்ல. நாம் தமிழ் நாட்டிலே பிறந்தோம், வளர்ந்து வருகிறோம். ஆகவே நிச்சயமாக நம் நாட்டை தமிழ் நாடு என்று அழைப்பதே நம்க்கு உகந்தது. அப்படிச் செய்வதால் எந்தக் கெடுதலும் வாராது. இன்றைக்கு அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருக்கிறவர் ஒரு தமிழர். ஆகவே இந்தத் தருணத்திலே இந்த மாநிலத்தை தமிழ் நாடு என்று பெயரிட்டு அந்தத் தலைவர் தமிழகத்தைச் சேர்ந்தவர் பச்சைத் தமிழனாக இருந்தவர் என்று மற்றவர்களுக்கு அறிவிப்பது நமது கடமை. தமிழகம் என்று பெயரிட்டு அந்தத் தலைவர் ஓங்கு புகழ் எய்தியிருக்கும் காமராஜர் காலத்திலேயே தமிழ் நாடு என்று மாற்றி அமைத்து விட்டால் ஒரே ஆண்டில் அந்தப் பெயர் விளம்பரமாகி எல்லோருக்கும் நன்றாக தெரிந்து விடும். ஆகவே இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இதை ஆதரிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

* **திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மெட்ராஸ் என்ற பெயரை அரசியல் சட்டத்திலே தமிழ் நாடு என்று திருத்த வேண்டும் என்று கோருகிற தீர்மானம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இது பழைய கருப்பன். மூன்று வருஷத்துக்கு முன்பு இதே மன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ் நாடு என்ற பெயரை வைக்க வேண்டும் என்று அன்றைக்குக் கேட்டார்கள். அன்றைக்கு நிதி அமைச்சராக இருந்த கனம் சி. சுப்ரமணியம் அவர்கள், ஆங்கிலத்தில் எழுதும்போது மெட்ராஸ் என்று வைத்துக் கொள்ளலாம், தமிழிலே எழுதும்போது தமிழ் நாடு என்று வைத்துக் கொள்ளலாம் என்று அன்றைக்குச் சொன்னார்கள். அதை ஏற்றுக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், அன்று எதிர் கட்சித் தலைவராக இருந்த திரு. அண்ணாத்துரையும் அதை ஒப்புக் கொண்டதன்

23rd July 1964] [திரு. ஜே. மாதா கவுடர்]

பேரில் அந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. அந்தத் தீர்மானத்திற்குப் பிறகு இன்றைக்கு மிகமிக அவசரமாகிவிட்டது என்று திரு. அரங்கண்ணல் அதே கட்சியைச் சேர்ந்தவர்கள் குறிப்பிடுவது எவ்வளவு பொருத்தமோ தெரியவில்லை. ஒரு கட்சியின் தலைவர் ஏற்கனவே இந்த மன்றத்திலே பேசி முடிவு எடுத்த ஒன்றை மறுபடியும் கொண்டு வர அவசியம் என்ன என்று கேட்க விரும்புகிறேன். அதற்குக் காரணம் அங்கே ஒரே குழப்பம்தான். அவர்களுக்கு யார் தலைவர், யார் தொண்டர் என்றே புரியமாட்டேன் என்கிறது. ஆதலினாலே ஒரே விஷயத்தை இந்த மன்றத்திலே திருப்பி திருப்பிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் அன்றைக்கிருந்த ஆட்சியேதான் இன்றைக்கும், காங்கிரஸ் ஆட்சிதான். இதனுடைய பலாபலன் என்ன? திராவிட முன்னேற்றக் கழகம் நாடு பிரிக்கும் கொள்கையை விட்டு விட்டு மக்களிடம் சென்று நாங்கள் காங்கிரஸ்காரர்களை தமிழ் நாடு என்று பெயர் வையுங்கள் என்று சொன்னோம், ஆனால் அவர்கள் அதை ஒத்துக்கொள்ளவில்லை என்று பிரசாரம் செய்ய இது உதவும். வேறு ஒன்றுக்கும் உதவாது. சட்ட மன்றத்திலே மோசடி செய்து விட்டார்கள் என்று சொன்னதற்காக மிகமிக வருந்துகிறேன். வருத்தப்பட வேண்டிய விஷயம். இது ஏற்கனவே தமிழ் நாடாக இருந்தது. மெட்ராஸ் என்று ஆங்கிலேயர்கள் வைத்துவிட்டார்கள். தட்சிணாமூர்த்தி கவுண்டரை கருப்பையா என்று கூப்பிட்டால் ஒப்புக் கொள்வார்களா என்று கேட்டார்கள். அதே நேரத்திலே நான் ஒன்று கேட்கிறேன். நண்பர் மதியழகன் இதற்கு முன்பு சோமசுந்தரம் என்று இருந்தார். அதை மதியழகன் என்று மாற்றவில்லையா? எதிர் கட்சித் தலைவர் நாராயணசாமி என்ற பெயரை நெடுஞ்செழியன் என்று மாற்றவில்லையா? அது மோசடி இல்லையா? அது மோசடி என்றால் இது மோசடி இல்லையா? பெயரை மாற்றும்போது . . .

திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆன் எ பாயிண்ட் ஆப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் சார். தலைவர் அவர்களே, என்னுடைய பெயரை மாற்றியது சட்டப்படி கெஜட்டில் வெளியிட்டு செய்யப்பட்டது. மோசடியாக பெயரை மாற்றவில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : என்னுடைய பெயரும் அப்படித்தான் செய்யப்பட்டது, என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மோசடியைப்பற்றி அவர்களே சொல்வதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. (சிரிப்பு).

திரு. ஜே. மாதா கவுடர் : மோசடி செய்து விட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் இந்த மாமன்றத்திலேயே தமிழ் நாடு என்ற பெயரை எப்படி உபயோகிக்கலாம் என்பது பற்றி அத்தனை பேரும் எதிர் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், அத்தனை பேரும் ஒப்புக் கொண்டு சட்டம் செய்தபிறகு இப்பொழுது மோசடியாகச் செய்து விட்டார்கள் என்று சொல்வது எவ்வளவு தவறு என்பதை எடுத்துக்காட்ட வாதத்திற்காகச் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை.

[திரு. ஜே. மாதா கவுடர்] [23rd July 1964

மெட்ராஸ் என்பது வெகு நாட்களாக அயல் நாடுகளில் எல்லாம் பழக்கத்தில் வந்து விட்டது. அதை நாம் மாற்றிவிட முடியாது. அப்படி தமிழ்நாடு என்று மாற்றுவதினால் அதனால் பல சிக்கல்கள் குழப்பங்கள் ஏற்படும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அயல் நாடுகளில் அப்படி நிலைமை ஏற்பட்டு விடும். தமிழ் நாடு என்று வைத்து விட்டால் என்ன வந்து விடும்? அதிகமான விளைச்சல் வந்து விடுமா? நாம் முன்னேற்றப் பாதையில் போக முடியுமா? அதிகமான தொழில் வளர்ச்சி ஏற்பட்டுவிடுமா? இன்றைக்கு நம் நாட்டின்மீது படையெடுத்து வரும் சைனுக்காரன் கூட பார்டரில் உள்ள இடங்களின் பெயர்களை வைத்துக் கொண்டு, அவை எல்லாம் சீனாவைச் சேர்ந்தது என்று வாதாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் பழமையான மெட்ராஸ் என்ற பெயரை மாற்ற வேண்டிய அவசியம் என்ன என்று தெரியவில்லை. ஏதோ திருத்தத்தைக் கொடுத்தோம், காங்கிரஸ்காரர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை, ஆகவே காங்கிரஸ்காரர்கள் தமிழை வெறுக்கிறார்கள், என்று எல்லாம் வெளியிலே பிரசாரம் செய்ய வேண்டுமானால் இது உபயோகிக்கப்படும். இப்பொழுது 2½ வருஷம் ஆகிவிட்டது இல்லையா? 1967-ஆம் ஆண்டு தேர்தல் வரப் போகிறது, அதற்காக இப்பொழுதே பிரசாரம் ஆரம்பிக்க வேண்டும் அல்லவா, அதற்கு ஒன்றும் கிடைக்கவில்லையே என்பதற்காக, "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 'தமிழ்நாடு' என்று பெயரை மாற்றிவைப்போம், ஆகவே, எங்களுக்கு வோட்டுப் போடுங்கள்" என்று வோட்டுக் கேட்பதற்காக வேண்டுமானால் இது பயன்படுமே அல்லாமல், மக்களை ஏமாற்றி வோட்டு வாங்கப் பயன்படுமே அல்லாமல், வேறு நேர்மையான முறையில், "நாட்டுக்குச் சேவை செய்கிறோம், நாட்டின் அபிவிருத்திக்காகப் பாடுபட்டிருக்கிறோம், இன்ன இன்ன தீர்மானம் கொண்டு போயிருக்கிறோம், காங்கிரஸ் கட்சிக்கு மெஜாரிடி பலம் இருக்கிறது என்ற காரணத்திற்காக எங்களுடைய தீர்மானங்களைப் புறக்கணித்துவிட்டார்கள்" என்ற வார்த்தை மக்கள் முன்னால் வைத்திருக்கிறார்களா என்றால் ஒன்றுமே இல்லை என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, அவர்கள் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை, பெயரை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை, நிர்பந்தமும் இல்லை என்று சொல்லி, சபை முன் உள்ள தீர்மானத்தை எதிர்த்து என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. மா. இராசாங்கம்:** மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தில் கொண்டுவந்திருக்கும், 'தமிழ்நாடு' என்று ஆங்கிலத்திலும் இந்த மாநிலத்திற்குப் பெயர் வைக்க வேண்டுமென்று கோரும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அன்னியன் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்தபோது, கேரளம், ஆந்திரம் இவைகளை அடிமை நுகத்தடியில் மாட்டி அப்பொழுது 'மெட்ராஸ் ஸ்டேட்' என்ற பெயர் வைக்கப்பட்டிருந்தது.

23rd July 1964] [திரு. மா. இராசாங்கம்]

இப்பொழுது அந்த அடிமைத் தளை அறுந்து விட்டது. இப்பொழுது நாமே சுயேச்சையாகத் 'தமிழ்நாடு' என்று நம் நாட்டுக்குப் பெயர் வைத்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. சிக்கல் ஏதும் இல்லை. தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டுமென்று நாங்கள் வற்புறுத்துகிற இந்தத் தீர்மானம் எல்லோருக்கும் பொதுவான தீர்மானம் என்பதை நான் முன்கூட்டியே சொல்லிக் கொள்கின்றேன். இதில் எந்தவிதமான சிக்கலும் இல்லை.

நேற்று முன்தினம், தமிழ்நாடு என்கிற பெயர்ப் பலகையைப் பற்றி டில்லியிலே உள்ள Madras State House-க்கும் வைக்க வேண்டுமென்று கேட்ட உபகேள்வி ஒன்றுக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 'இது பல காலமாக இருந்து வருகிற பெயர், பல நாடுகளில் பழக்கமான பெயர், இதை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை' என்று சொல்லிவிட்டார்கள். ஆனால், அதே சமயத்தில் நான் மற்றொன்று சொல்லிக் கொள்கின்றேன். முன்பு, 'தமிழ்நாடு' என்று இருந்ததைத்தான் வெள்ளைக்காரன் இந்த நாட்டுக்கு வந்தவுடன், 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று பெயர் வைத்து பல காலமாக இருந்த பெயரை மாற்றி இருக்கிறான். அப்படி என் நாம் இந்தப் பெயரை, 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றிருப்பதைத் 'தமிழ் நாடு' என்று மாற்றிக்கொள்ளக்கூடாது?

'இந்தியா' என்கிற பெயர் இண்டஸ் நதியை அடிப்படையாகக் கொண்டு வந்தது. இந்தியா என்று தொடர்ந்து இருந்து வந்ததை எப்படி மாற்றினார்கள்? பாகிஸ்தான் பிரிந்த நேரத்தில், இண்டஸ் நதிப் பிராந்தியம் நம் பகுதியில் இல்லை என்ற காரணத்தால்தான் 'பாரதம்' என்ற பெயர் வந்தது. நாம் ஏன் அதேபோல் நம் நாட்டின் பெயரை இப்பொழுது மாற்றிக்கொள்ளக் கூடாது? ஆனால், "பல காலமாகப் பழகிவிட்டது, மேலை நாடுகளில் 'மெட்ராஸ்' என்று சொன்னால்தான் தெரியும்" என்கிற பழைய வாதத்தை வைத்துக்கொண்டிருப்பது பொருந்தாத வாதம் என்பதை இன்று உங்கள் மூலமாக நான் இங்கே சொல்லிக்கொள்கின்றேன். 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று இருப்பதை 'தமிழ்நாடு' என்று மாற்றியமைத்து, தமிழ் நாட்டிற்கு தமிழ்நாடு என்று வெளி நாட்டிலும் பெயர் வரவேண்டுமென்பதுதான் எங்கள் நோக்கம், எங்கள் தீர்மானம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வேறொன்றும் சொல்வேன். நாங்கள் எல்லோருமே, நம் நாட்டிற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க வேண்டுமென்று ஒருமுகமாகக் கோரும்போது, அரசாங்கத் தரப்பில் இருக்கிறவர்கள் மட்டும் ஏன் 'மெட்ராஸ்' என்கிற பெயர் தான் வழங்கிக்கொண்டிருக்க வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கவேண்டும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. பழைய ஸ்பார்ட்டன் நாட்டிலே ஒரு அடிமைப் பழக்கம் ஏற்பட்டிருந்ததாம். அந்த நாட்டின் அடிமைப் பழக்கம் என்னவென்றால், யார் அடிமையாகியிருந்தாலும், அந்த அடிமைகள் வெளியே வரும்போது முக்காடிட்டு வரவேண்டும் என்ற வழக்கம்.

[திரு. மா. இராசாங்கம்] [23rd July 1964

பின்னர் மக்கள் வேண்டுகோளுக்குப்பின் மன்னரால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வரப் பிரசாதம், வீட்டுக்குள்ளே வேண்டுமென்றால் முக்காடு இல்லாமல் இருக்கலாம், வீட்டை விட்டு வெளியே வரும்போது முக்காடிட்டு வரவேண்டும் என்று அதற்கான உத்தரவு பிறப்பித்தானும். அது போல், "தமிழ்நாட்டிற்குள் தமிழில் எழுதும்போது 'தமிழ்நாடு' என்று நீங்கள் எழுதிக் கொள்ளுங்கள், ஆங்கிலத்தில் எழுதும்போது நீங்கள் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றுதான் எழுத வேண்டும்" என்றிருப்பது அந்தப் பழைய கால அடிமை முக்காட்டை ஞாபகமூட்டுவதாக நான் கருதுகிறேன் என்று உங்கள் மூலமாக நான் ஆட்சியாளர்களுக்குச் சொல்லிக்கொள்கின்றேன்.

மேலும், இங்கு கவிஞர் பெருமக்களும், புலவர் பெருமக்களும் பல ஆதாரங்களை எடுத்துச் சொன்னார்கள். அதே நேரத்தில் நான் அவர்களுக்குப் புராணத்திலிருந்து ஒன்றைக் கூற விரும்புகிறேன். ஈசுவரன் மன்மதனை எரித்துவிட்டான். மன்மதன் எரிக்கப்பட்டவுடன், மன்மதனைத் தனக்குத் திருப்பி தர வேண்டுமென்று ஈஸ்வரன் காலில் விழுந்து வரப்பிரசாதம் கேட்டாளாம் ரதி. அதற்கு ஈசுவரன் என்ன வரப்பிரசாதம் தந்தாராம் 'உன் கணவன் உன் கண்ணுக்கு மாத்திரம் தான் தெரிவான்; மற்றவர்கள் கண்ணுக்கு தெரியமாட்டான்' என்று சொன்னாராம். அது போல், தமிழில் மட்டும் 'தமிழ்நாடு' என்று எழுதிக்கொள்ளலாம் ஆங்கிலத்தில் Madras State என்றுதான் எழுத வேண்டும்' என்பது அரைகுறை சாபவிமோசனமல்லவா.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் எரிந்த கட்சியா? எரியாத கட்சியா?

திரு. மா. இராசாங்கம்: நான் எரிக்கிற கட்சி என்று தெளிவாகச் சொல்லிக்கொள்கின்றேன். (கை தட்டல்.)

'தமிழ்நாடு' என்று சொல்லிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று இந்த மன்றத்தில் சொல்வார்களானால், அது வருந்துதற்குரியது. இதை ஏன் சொல்லவேண்டும் என்று விட்டுவிடுகிறேன். தமிழ்நாட்டுச் சட்ட மன்றத்தில், தமிழ் அவையில் நம் நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கவேண்டுமென்று சொன்னால், அதை இவ்வளவு எதிர்ப்பதற்குத் தமிழ் புலவர்களே கூட முன்வருகிறார்கள் என்றால், தமிழ்நாடு இப்படிப் பிற்போக்கான நிலைமைக்குப் போய்விட்டதே என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கின்றேன். எம்மொழியில் எழுதினாலும், தமிழ் நாட்டைத் தமிழ்நாடு என்று எழுதும்படி முழு விமோசனம் தர வேண்டுமே தவிர, இப்படி அரை குறை விமோசனம் தரக்கூடாது என்று சொல்லி இந்தத் தீர்மானத்தை மீண்டும் வற்புறுத்தி, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை யார் கொண்டுவந்தார்கள் என்பது அல்ல பிரச்னை. இந்தச் சபையின் ஏகோபித்த அங்கீகாரத்தை

23rd July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

ஏற்கெனவே பெற்ற தீர்மானம் இது. இப்பொழுது கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் ஆவேசத்தினால் பேசியதனாலோ என்னவோ, 'அரசியல் சட்டத்தை மோசடி செய்துவிட்டோம்' என்று சொன்னார்கள். அப்படி மோசடி செய்திருந்தால், அவர் சார்ந்திருக்கக்கூடிய கழகத்தினரும் சேர்ந்து தான் இந்தச் சபையில் செய்திருக்கிறோம் என்று சொல்லவேண்டும். அப்பொழுதே இந்தப் பிரச்னை வந்தது. அன்று, "அரசியல் சட்டத்தில் 'மெட்ராஸ்' என்று போட்டுவிட்டு, நாம் மட்டும் 'தமிழ்நாடு' என்று போடுவோமானால் அது சட்டப் பிரச்னை ஆகாதா?" என்று எல்லோரும் ஆராய்ந்தபோது, எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கும் பிரச்னையாக இருக்கும் காரணத்தால், 'தமிழ்நாடு என்று சொல்வது அரசியல் சட்டத்திற்கே முரணாகும், அரசியல் சட்டப்படி அது செல்லத் தகாதது' என்று யாரும் கோர்ட்டுக்குப் போய் வழக்குத் தொடரமாட்டார்கள், வழக்குகளுக்கெல்லாம் ஆங்கிலமே பயன்படக்கூடிய காரணத்தால் ஆங்கிலத்தை உபயோகிக்கக்கூடிய சந்தர்ப்பத்தில் எல்லாம் 'மெட்ராஸ்' என்றே அழைக்கப்படும் காரணத்தால், சட்டப்படி தகராறு வந்துவிடாது என்று இந்தச் சபையிலே காரணம் விளக்கப்பட்டுத்தான் எல்லோரும் ஏற்றுக் கொண்டோம். அந்தச் சூழ்நிலையில் ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அதே சமயத்தில், இது ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும் சொந்தமான ஒரு பிரச்னை அல்ல. ஒரு ராஜ்யத்திற்குப் பெயர் இடுவது பற்றி நம்முடைய சகோதரி கனம் அங்கத்தினர் திருமதி குழந்தையம்மாள் அவர்கள் மிக வேகமாகச் சொன்னார்கள். அதைச் சொல்ல அவர்களுக்கு உரிமை உண்டு. காங்கிரசும் ஒப்புக்கொண்ட பிரச்னைதான் இது. காங்கிரசும் ஒப்புக்கொண்டுதான் 'தமிழ்நாடு' என்று பெயரிட்டோம். தமிழில் சொல்கிறபோது "தமிழ்நாடு" என்று அழைப்பது என்ற முடிவுக்கு அப்பொழுதே வந்தோம். நியாயம் இருந்து தானே ஒப்புக்கொண்டோம் அப்போதே? நாடு விடுதலை அடைவதற்கு முன்பே, மொழிவழி ராஜ்யம் அமைக்கப்படவேண்டும் என்ற லட்சியத்திற்காக அன்றைக்கே நாம் போராடியிருக்கிறோம். நாங்களெல்லாம் காங்கிரசில் இருந்தபோதே, மொழிவழி ராஜ்யம் அமைக்கப்படவேண்டுமென்ற கொள்கை அன்றைக்கே ஒப்புக்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்ற அமைப்பெல்லாம் அன்று ஏற்பட்டதுதான். மொழிவழி ராஜ்யம் அமைக்கப்படவேண்டுமென்ற கொள்கை இன்றைக்கு ஒப்புக்கொள்வதற்கு முன்பு அன்றைக்கே, மொழி வழி அடிப்படையிலே காங்கிரஸ் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. சென்னையிலே அன்றைக்கு மலையாளிகள், தமிழர்கள், தெலுங்கர்கள் இருந்தார்கள் என்றாலும், காங்கிரஸ் கமிட்டி மொழிவழியாகத்தான் தனித்தனியாக அமைக்கப்பட்டது என்பது நமக்குத் தெரியும். அதுபோல்தான், நாடு விடுதலை அடைந்த பிறகு, மொழிவழியாக ராஜ்யங்கள் அமைக்கப்படவேண்டுமென்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஸ்டேட் ரீயார்கனைஸேஷன் கமிட்டி அமைக்கப்பட்டது.

[23rd July 1964

(திரு. ப. உ. சண்முகம் எழுந்தார்)

MR. DEPUTY SPEAKER: The hon. Member is not yielding.

திரு. மீ. கலியாணசுந்தரம்: மொழி வழியாக இராஜ்யங்கள் அமைக்கப்படவேண்டும் என்கிற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு ஸ்டேட் ரீயார்கனைஸேஷன் கமிட்டி அமைக்கப்பட்டு, அதனுடைய சிபார்சுகளும் ஏறத்தாழ மொழிவழியாக இராஜ்யங்கள் அமைக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில்தான் அமைந்தன. ஒரு சில ராஜ்யங்களில் அந்தக் கொள்கை முதலில் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருந்தது, பல மொழி பேசக்கூடிய மக்கள் இருந்த காரணத்தால். என்றாலும்கூட, மீண்டும் கிளர்ச்சிகள் நடந்து, அநேகமாக இன்றைக்கு மொழியின் அடிப்படையில்தான் ராஜ்யங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இது ஒரு கட்சிப் பிரச்னை அல்ல. சுதந்திரம் அடைந்த பிறகு, நம்முடைய நாட்டிலே ஜனநாயகம் வளருவதற்கு எப்படி ஜன நாயக அமைப்பைத் திருத்தியமைப்பதிலே என்ன முறை இருக்க வேண்டும் என்பது பற்றிய ஒரு பொதுவான பிரச்னை எழுந்தது. மொழி வழி ராஜ்யமாக இருந்தால் ஜனங்கள் பங்கெடுப்பதற்கு முடியும்; பல மொழி பேசுகிறபோது ஜனங்கள் பங்கெடுப்பது குறைகிறது. காம்பொஸிட் ஸ்டேட் இருந்த காலத்தில், எத்தனையோ பேர் தமிழில் பேசும்போது தெலுங்கு பேசுகிறவர்களுக்குத் தெரியாது. தெலுங்கில் பேசுகிறவர்களைத் தமிழ் பேசுகிறவர்கள் புரிந்து கொள்ள முடியாத நிலை இருந்தது. அப்படியிருந்த கஷ்டத்தை 1952-லிருந்து 1953 வரையில் நாம் பார்த்திருக்கிறோம். அதற்குப் பிறகு நமக்கு ஒரே மொழி பேசக்கூடிய நிலையில் இந்தச் சபையில் தமிழிலே நடவடிக்கைகளை நடத்துவதற்குச் சுலபமாக இருக்கிறது. இன்னும் வேகமாகவும் நடத்த முடிகிறது. ஆகவே அவரவர்களுடைய பிரதேச மொழியில் ஆட்சி அமைவது
12-30 p.m. அந்த அந்த பிரதேச வளர்ச்சிக்கு மிகவும் சாதகமாக அமையும். அந்த நோக்கத்தோடு மொழிவழி ராஜ்யம் அமைக்க வேண்டுமென்ற கொள்கையை ஒப்புக்கொண்டிருக்கிறோம். இது ஒரு கட்சிப் பிரச்சினை அல்ல. இப்பொழுதே தமிழ்நாடு என்ற சப்ஸ்டென்ஸ் கிடைத்திருக்கிறது. ஷாடொ வேண்டும். தவிர நம் அண்டை ராஜ்யங்களோடு எல்லைத் தகராறும் இருக்கப்போவதில்லை. வரப்போவதும் இல்லை. ஆந்திராவோடு சேர்ந்திருந்த தமிழ்ப் பகுதிகள்கூட இப்போது தமிழ்நாடோடு சேர்ந்துவிட்டது. அப்படி இருக்க இதற்குத் தமிழ் நாடு என்று பெயர் வைப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. 1957-ல் இருந்து 1962 வரை இருந்த சட்டசபை உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். அரசியல் அமைப்பில் மெட்ராஸ் என்று இருப்பதை தமிழ்நாடு என்று திருத்தாமல் நம்முடைய மாநிலத்திற்கு மட்டும் தமிழ்நாடு என்று பெயர் வைப்பது சட்டப் பிரச்னைக்கு உட்படுத்தப்பட்டால் என்ன ஆகும் என்பது பற்றியும், அப்பொழுது ஆலோசனை செய்யப்பட்டது. அவ்வாறு ஆலோசிக்க வேண்டிய கவலை அரசாங்கத்திற்கு அப்போது ஏற்பட்டது. நன்றாகப் பரி

23rd July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

சீலனை செய்து நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் எழுதுகின்றபோதும், பேசுகின்றபோதும் தமிழ்நாடு என்றே உபயோகிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். இங்குள்ள யாரும் கனம் அங்கத்தினர் மதியழகன் உள்பட இது விஷயத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு போகும் உத்தேசத்தில் பேசவில்லை, என்று நினைக்கிறேன். இருந்தாலும் இந்தகைய ஒரு பிரச்னை இருந்து கொண்டிருப்பதை நாம் நன்றாக பரிசீலனை செய்யவேண்டும். இது பற்றி மத்திய அரசாங்கத்தில் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் ஒரு தனி நபர் மசோதா கொண்டு வந்து, அதன் மீது நடந்த விவாதத்தின் மீது சென்னை அரசாங்கம் இதுபற்றி ஆலோசனை கூறினால் நாங்கள் அதை ஏற்றுக்கொள்வதற்கு ஆட்சேபனை இல்லை, என்று சொன்னார்கள். ஆக அரசியல் அமைப்பில் மெட்ராஸ் என்று இருப்பதை தமிழ்நாடு என்று மாற்றுவதற்கு இன்றைய தினம் இந்த அரசாங்கம்தான் முட்டுக்கட்டையாக இருக்கிறது போலத் தோன்றுகிறது. அரசியல் அமைப்பிலும் தமிழ்நாடு என்று பெயர் வைப்பதில் என்ன கஷ்டம் என்றுதான் எனக்குப் புரியவில்லை. நாம் எவ்வளவோ பிரச்னைகளில் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கிறது. சிக்கல் நிறைந்த பல பிரச்னைகளை நாம் பரிசீலனை செய்து கொண்டு இருக்கக்கூடிய நேரத்தில் தீர்க்கக்கூடிய எவ்வித சிக்கலும் இல்லாத இந்த விஷயத்தை ஏன் ஒரு பெரிய பிரச்னையாக நீடிக்க விட வேண்டும், என்று கேட்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்ற கழகத்தின் பிரச்னை மட்டும் அல்ல இது. ஆகவேதான் அவர்களோடு பல கருத்துக்களில் நான் முரண்பாடுடையவன் ஆக இருந்தாலும் கூட அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த தீர்மானத்தை இது நாட்டினுடைய பொதுப் பிரச்னை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சொந்த பிரச்னை அல்ல, என்கின்ற காரணத்தினால் இதற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

***திரு. சா. கணேசன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மாநிலத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்று ஒரு மசோதாவைக் கொண்டு வந்தால் அதற்கு இப்படியெல்லாம் ஒரு எதிர்ப்பு வரும் என்று கனவில்கூட கருதவில்லை. ஏற்றுக் கொள்ளாமல் மறுத்து இருக்கலாம். அது வேறு விஷயம். எல்லோரும் தமிழ் படித்தவர்கள். இந்த விவாதத்தில் கலந்து கொண்ட சிலரை புலவர்கள், புலவர்கள் என்று சுட்டிக்காட்டினார்கள். மரியாதையாக சொன்னார்களோ, அல்லது வேறு எப்படி சொன்னார்களோ என்பது கொஞ்சம் சந்தேகப்பட வேண்டிய விஷயம்.

> எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பதறிவு.

என்பதை மறந்து விடுகிறார்கள். ஒரு விஷயத்தை அதன் தன்மை என்ன என்று ஆராய்ந்து பார்ப்பதைவிட அதை யார் சொல்லியிருக்கிறார்கள் என்பதற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். யார் சொல்லியிருக்கிறார்கள் என்பதற்கு முக்கியத்துவம்

இல்லை. சொல்லப்படுகிற விஷயம் எத்தகையது என்று பார்க்க வேண்டும். நல்லதாக இருந்தால் ஒப்புக் கொள்ள வேண்டும். கடியத் தக்கன் என்றால் தள்ளிவிடட்டும். விஷயத்தை விட்டு விட்டு ஆள் மீது பாய்வதிலே அலாதியான இன்பத்தை இங்கே உள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் காட்டியிருக்கிறார்கள். இது அவசியமற்றது. நல்லதொரு மரபை நாம் ஏற்படுத்துவதற்கு இனியாவது முயலவேண்டும் என்று முதலாவதாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்கு பல காரணங்களை பல உள் நோக்குகளை இங்கே குறிப்பிட்டார்கள். உள்நோக்கு கற்பிப்பது சுலபமாக இருக்கலாம். ஆனால் விஷயத்தை யார் சொன்னால் என்ன? அதை ஏற்றுக் கொண்டால் என்ன? தமிழ் நாடு என்ற பெயர் உலகம் எல்லாம் வழங்கி வந்த பெயர். அதை வைப்பது உலகத்தினருக்கு தெரியாது என்று சொல்கிற வாதம் ஊற்றுக்கு நிற்காத வாதம் என்று சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு என்று இந்த மாநில சர்க்கார் பெயர் ஏற்றுக் கொண்டிருப்பதற்குப் பொருள் என்ன? ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டிருக்கிற நாம் முழு அளவுக்கு ஏற்றுக்கொள்வது தவறு என்று சொல்வதை என்னால் புரிந்துகொள்ள முடியாது. "ஒரேயடியாக எப்படிப் போவது? படிப்படியாகத்தானே போகவேண்டும் என்று சொல்வார்கள். அல்லது வேறு காரணம்கூடச் சொல்லலாம். மெட்ராஸ் என்று இருப்பதை தமிழ்நாடு என்று பெயர் மாற்றுவதனால் அங்கங்கே உள்ள பெயர்களை மாற்றி எழுதுவதற்கு பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவாகலாம் என்றுகூடச் சொல்லக் கூடும். அப்படிச் சொன்னால்கூட ஓரளவு புரிந்துகொள்ள முடியும். ஆனால் மொழி அடிப்படையில் தமிழ்நாடு என்று பெயர் வைத்தால் உலகத்தவர்களுக்குப் புரியாது என்கிற வாதம் தான் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. அதுவும் காங்கிரஸ் கட்சி பல நாட்களாக இந்தக் கொள்கையை வகுத்துக் கொண்டு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்று பெயர் வைத்துக்கொண்டே செயல்பட்டு வந்திருக்கிறபோது இந்த வாதம் தான் புரிந்து கொள்ள முடியவில்லை. மொழிவழி ஆட்சி அமையவேண்டுமென்ற கொள்கை மகாத்மா காந்தி நமக்குக் கொடுத்த கொள்கைகளில் ஒன்று. மொழிவழியாக மாநிலம் அமைந்தால்தான் அந்த அந்த மொழியில் அந்த அந்த மாநில நிர்வாகம் செயல்பட்டு, நிர்வாக விஷயங்களை மக்களுக்கு எடுத்து நன்றாக உணர்த்த முடியும் என்பது அவரது கருத்து. அந்த அடிப்படையில்தான் மெட்ராஸ் மாநிலத்தில் கேரளா, ஆந்திரா, கன்னடப் பகுதியில் ஒரு பாகம். தமிழ்நாடு எல்லாம் இணைந்திருந்தபோதே, இந்த ராஜ்யத்தில் காங்கிரஸ் கமிட்டிகளை நிறுவியபோது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, ஆந்திர காங்கிரஸ் கமிட்டி, கர்னாடக காங்கிரஸ் கமிட்டி கேரள காங்கிரஸ் கமிட்டி என்று மொழி அடிப்படையில் வகுத்தார். அதுமட்டுமல்ல. ஆதி நாளில் இருந்து பார்த்து வந்திருந்தால் கூட பல்வேறு மாநிலங்களுக்கும்கூட பஞ்சாப், குஜராத், மகா

ராஷ்டிரா, பெங்கால், ஒரிசா என்பதாக மொழியின் முதலைக் கொண்டே மாநிலங்களின் பெயர்கள் அமைந்திருப்பதை அறியலாம். இதை மறந்துவிடக் கூடாது. என்னுடைய பழைய மாஜி என்ற பொருளில் இல்லை—நீண்ட கால நண்பராகிய திரு. ராமசாமி நாயுடு அவர்கள் தமிழ்நாடு என்று இதற்கு என்றைக்குப் பெயர், அப்படிப் பார்த்தாலும், சோழநாடு, சேரநாடு, பாண்டிய நாடு, தொண்டைநாடு என்ற பெயர்கள்தானே வழங்கப்பட்டு இருக்கின்றன என்று சொன்னார். தமிழ்ப்புலவர் என்று சொல்லிக் கொண்டே சொன்னார்கள். அவர் வரலாற்றுத் துறையில் கைவரப் பெற்றவர். சேர சோழ பாண்டியர் காலத்தில் இந்நாட்டுக்கு வந்த மெகஸ்தனீஸ், டுஷியான், பாஹியான் முதலியவர்கள் இந்தப் பகுதி நிர்வாகத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், டமில் லாண்டு, டமில் (Tamil Land, Tamil) என்று குறிப்புக்கள் எழுதி வைத்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிட முடியாது. சேர, சோழ, பாண்டியர்கள் என்று சொல்லவில்லை. தமிழ்நாடு என்று சொன்னால் 13 ஜில்லாக்கள் இருக்கின்றன. 13 ஜில்லா என்று பெயர் சொல்லலாமே. இந்தியாவில் 56 ராஜ்யங்கள் இருந்திருக்கின்றன. இப்பொழுது 56 ராஜ்யங்களின் பெயரா இருக்கிறது? இதையெல்லாம் மனத்தில் கொள்கிறபோது தமிழ்நாடு என்று பெயர் வைப்பதை ஆட்சேபிப்பது தர்மம் அல்ல, ஏதோ எதிர்க் கட்சிக்காரர்கள் கொண்டு வந்தார்கள் என்பதற்காக எதிர்ப்பது நியாயமும் அல்ல. ஜனநாயகப் பண்பும் ஆகாது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் பல கேள்விகளை எல்லாம் கேட்டார்கள். தமிழ்நாடு என்று பெயர் வைத்தால் வயிற்றுக்குச் சோறு கிடைத்து விடுமா என்று கேட்டார்கள். எதைச் செய்தால்தான் வயிற்றுக்குச் சோறு கிடைத்துவிடும். இதை நன்றாகச் சிந்திக்கவேண்டும். உடம்பு முக்கியம். நெற்றியில் பொட்டு வைத்தால் என்ன, வைக்காவிட்டால் என்ன? உடம்பு சுத்தமாக இருந்தால் போதாதா? பொட்டு வைத்தால்தான் அழகு வருமா? ஏன் பொட்டு வைத்துக் கொள்கிறோம்? அந்த முறையில், தமிழ்நாடு என்று பெயர் வைத்தால் உணவு கிடைத்துவிடுமா என்று கேட்கிறார்கள். நான் கேட்கிறேன்—தமிழ்நாடு என்று பெயர் வைத்தால் உணவுப் பஞ்சம் வந்து விடுமா? தமிழ்நாடு என்று பெயர் வைத்தால் என்ன கெட்டுப் போகிறது? இதைக் கொஞ்சம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தத் தீர்மானம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவரால் கொண்டு வரப்பட்டது என்பதற்காக எதிர்ப்புச் சொல்லக்கூடாது. கனம் கலியாணசுந்தரம் அவர்கள் ரொம்ப கணக்காகச் சொன்னார்கள். இந்தப் பிரச்சினை ரொம்பக் காலமாக ஒவ்வொருவருடைய மனதிலும் தோன்றிக் கொண்டிருக்கிற பிரச்சினை. இந்தப் பிரச்சினையை முதல் முதலாகக் கிளப்பி மறியல் செய்தது தமிழரசுக் கழகம். "நாட்டுக்குப் பெயர் வைக்கச் சொன்னேன்; ஊட்டியில் இருக்கும் வீட்டுக்குத் 'தமிழகம்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்" என்று தமாஷாகப் பேசினார் அந்தக் கழகத்தின் தலைவர் ம. பொ. சி. இந்தச்

[திரு. சா. கணேசன்] [23rd July 1964

சபைக்குள்ளே அந்தக் கட்சி ஆட்கள் இல்லை. அப்படி இந்தச் சபையிலே இல்லாதவர்கள் முயன்ற ஒன்றை இந்தச் சபையிலே நிறைவேற்றுகிறோம் என்று எண்ணிக் கொள்ளுங்களேன். எல்லோருக்கும் சுலபமான முறையில் இப்படிக் கொள்ளுவது பயனுடையதாக இருக்கும். இந்தியாவை 'பாரத்' என்று ஸ்டாம்பில், நாணயத்தில் போட்டிருக்கிறார்கள். அது சட்ட முறையாக வந்திருக்கிறது. 'தமிழ்நாடு' என்பது சட்ட முறையாக வரவில்லை என்பதற்காகப் பல வார்த்தைகளை எல்லாம் சொன்னார்கள். இது சட்ட முறையில் வராவிட்டாலும்கூட, மத்திய ஆட்சியிலே இது நிறைவேற்றப் பெறாவிட்டாலும்கூட, இதை ஒரு மோசடி என்றோ, 'ஃப்ராடு' என்றோ சொல்லக்கூடாது. இதை ஒரு சட்ட ரீதியான வழு என்று வேண்டுமானால் சொல்லலாம். இலக்கணத்தில்கூட வழு அமைதி உண்டு. வழுவமைதியை ஏற்றுக்கொண்டு டிஃபெக்ட் ஆக வைத்துக் கொண்டிருப்பதைவிட சட்டரீதியாக ஆக்கி பர்ஃபெக்ட் ஆக வைத்துக் கொள்வது தவறாகாது. தமிழ்நாடு என்று ஆக்குவது நியாயமாகும்; தர்மமாகும்; இதிலே கட்சிக் கருத்து ஒன்றுமில்லை; ஒவ்வொருவரும் இந்தப் பிரச்சினையைச் சீர்தூக்கிப் பார்த்து அவரவர் மனசாட்சிப்படி சிந்தித்துப் பார்ப்பார்களேயானால்—அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாயினும், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களாயினும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாயினும், கம்யூனிஸ்ட கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் அவர்களை மனசாட்சிப்படி முடிவு செய்யுங்கள் என்று சொன்னால்—நிச்சயமாக நமக்கு 'தமிழ்நாடு' என்பதை மறுப்பதற்குத் துணிச்சல்கூட வராது. அதனாலே—இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றில்லை—இதை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் 'இதற்கு ஆவன செய்கிறோம்; நாங்களே இதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறோம்' என்ற அளவுக்கு ஆட்சியாளர்கள் உறுதி தந்து விடுவார்களேயானால் அதுகூடப் போதும். இது போன்ற ஒரு தீர்மானத்தை அவர்களே கொண்டு வந்து நிறைவேற்றி விடுவார்களானால் மத்திய அரசிலேயும் அதனை ஏற்றுக் கொள்ளுவார்கள். அங்கே 'உங்களுக்கும் பிரதிநிதிகள் இருக்கிறார்கள்' என்று சொல்லி தட்டிக் கழிக்கக்கூடாது. இங்கே பண்ணுகிற மாதிரி அங்கேயும் பண்ணமாட்டார்களா? எங்களுடைய பிரதிநிதிகள் சில பேர்தான். அவர்களுக்கோ 200; கை தூக்குகிற பலாபலத்தில்தானே இருக்கிறது. இதனை உங்களுடைய பிரதிநிதிகள் மூலமாகக் கொண்டு வருவதிலே என்ன தவறு, என்ன நஷ்டம், என்ன கஷ்டம் வந்து விடும்? அதனைச் செய்வதற்கு நீங்கள் முழுக்க முழுக்க ஆதரவு தரவேண்டும் என்று ஆளும்கட்சியைக் கேட்டுக்கொள்கிறேன். மனசாட்சிப்படி எல்லோரும் இதற்கு வாக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டு இதை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். வணக்கம்.

திருமதி டி. என். அனந்தநாயகி: 'ஆன் எ பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன்'. கனம் சபாநாயகர் அவர்களே, இந்தியாவை 'பாரத்' என்று எழுதியிருக்கிறது என்று கூறினார்கள். நாண

23rd July 1964] [திருமதி டி. என். அனந்தநாயகி]

யத்தை எடுத்துப் பார்த்தால் ஆங்கிலத்தில் 'இந்தியா' என்றுதான் இருக்கிறது; இந்தியில்தான் 'பாரத்' என்று இருக்கிறது. அதே போன்றுதான் ஆங்கிலத்தில் 'மெட்ராஸ்' என்று சொல்லப் போகிறோம்; தமிழில் 'தமிழ்நாடு' என்று சொல்லப் போகிறோம். ஆகவே, இந்தியா பாரத் என்று ஆகிவிட்டது என்று சொல்வது சரியல்ல.

திரு. சா. கணேசன்: நாணயத்தைச் சொன்னதை மட்டும் வக்கீல் வாத ரீதியிலே பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்—அரசியல் சட்டத்தில் இரண்டு மொழியிலும் 'பாரத்' என்றுதான் இருக்கிறது.

*திரு. இரா. நெடுஞ்செழியன்: மதிப்புக்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் இராம. அரங்கண்ணல் அவர்கள், தமிழக மாநிலத்தினுடைய பெயர் எப்படி தமிழிலே 'தமிழ்நாடு' என்று அழைக்கப்படுகின்றதோ அப்படியே ஆங்கிலத்திலும் அழைக்கப்பட வேண்டும்; அப்படி அழைக்கப்படுவதற்கு எப்படி சட்டம் திருத்தப்பட வேண்டுமோ, அந்தத் திருத்துகின்ற அதிகாரத்தைக் கொண்டிருக்கிற இந்திய அரசுக்கு இந்த அரசு தன்னுடைய சிபாரிசை செய்ய வேண்டுமென்கிற கருத்தை முடிவு செய்கின்ற வகையிலேதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தினுடைய முக்கிய நோக்கத்தை யாரும் மறுப்பதற்கில்லை. பல்வேறு கட்டடங்களைத் தாண்டி இந்த மன்றத்திலே இருக்கிற எல்லா அதிகாரிகளும் ஒருமித்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். மூன்றரைக் கோடி தமிழ் மக்கள் வாழ்கின்ற பரப்பைத் 'தமிழகம்' என்றும் 'தமிழ்நாடு' என்றும் அழைக்கப்பட வேண்டுமென்ற கருத்திலே ஆளும் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. இப்போது தமிழிலே 'தமிழ்நாடு' என்று அழைக்கப்படுகிறது. அதை இந்த மன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆங்கிலத்திலே அழைக்கப்படுகின்ற போது வேறு ஒரு பெயராலே அழைக்கப்படுகின்றது. எல்லோரும் விரும்புகிற 'தமிழ்நாடு' என்ற பெயராலேயே ஆங்கிலத்திலும் அழைக்கப்பட வேண்டும் என்பதுதான் இப்போது இருக்கிற பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையை ஒட்டித்தான் இந்தப் பெயரை நாம் சட்டப்படி கொண்டு வரும் முயற்சியிலேதான் இப்போது ஈடுபட்டிருக்கிறோமே தவிர, 'தமிழ்நாடு' என்று அழைத்தால் நல்லதா, சென்னை மாநிலம் என்று அழைப்பது நல்லதா, என்பது போன்ற விவாத கட்டங்களை எல்லாம் நாம் தாண்டி வந்துவிட்டோம். ஆளும் கட்சியினர் உள்ளபடியே இந்தப் பரப்பைத் 'தமிழகம்' என்று அழைப்பதை ஒப்புக் கொண்டு விட்டார்கள். அதற்கான காரண காரிய விளக்கங்கள் எல்லாம் ஏற்கெனவே விவாதிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினால் இந்த நாடு செழிக்கும் என்ற நோக்கத்தில் கொண்டு வரப்படவில்லை; ஆங்கிலத்தில் தமிழ்நாடு என்று போட்டு விடுவோமானால் அதனால் சோறு கிடைத்து விடும்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [23rd July 1964

என்ற நோக்கந்தான் இந்தத் தீர்மானத்திற்கு என்று சொல்ல வில்லை. இதனுடைய நோக்கம் பொருளாதார ஏற்றம் ஏற்பட்டு விடும் என்றோ, தொழிற்சாலைகள் பெருகி விடும் என்றோ, சோறு கிடைத்து விடும் என்றோ கூறவில்லை. இதனுடைய அடிப்படை நோக்கம் உணர்வு பூர்வமான ஒன்று. இந்தியா என்பதை 'பாரத்' என்று அழைப்பதால் என்ன உணர்வு பூர்வமான அகமகிழ்ச்சியை எதிர்ப்பார்க்கிறோமோ ; சைனா பசார் ரோடை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு என்று மாற்றுவதன் மூலம் எப்படிப்பட்ட உள்ள உயர்வை எதிர்பார்க்கிறோமோ அதையேதான் 'தமிழ்நாடு' என்ற பெயரால் அழைக்கப்படும்போது பெறுகிறோம். ஒரு பெயரை மற்றொரு பெயராக மாற்றுவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். 'தமிழ் நாடு' என்று சொல்லும்போது அதனுடைய தொன்மையான நாகரிகம், பண்பாடு, வரலாற்றுச் சிறப்புக்கள் ஆகியன எல்லாம் மனத்திலே தோன்றுகின்றன. ஆனால் சென்னை என்பது ஒரு நகருடைய பெயர் ; அந்தப் பெயர் இந்த மாகாணத் தினுடைய பெயராக சமீப காலத்திலே மாறியிருக்கிறது. சென்னை என்ற பெயர் இடைக்காலத்தில் வந்தது. 'தமிழ் நாடு' என்ற பெயர் இலக்கிய ஆதாரங்கள் கொண்டது ; தொன்மை வாய்ந்தது. அது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட பெயரல்ல. 'தமிழ் நாடு' என்று சொல்லும்போது உணர்ச்சி பூர்வமான அக மகிழ்ச்சி ஏற் படுகிறது ; இதை சுப்பிரமணிய பாரதி தெளிவுபட எடுத்துக் கூறுகிறார். "செந்தமிழ் நாடெனும் போதினிலே ; இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்ற அந்த இன்பத்தைப் பெறுகின்ற நோக்கந்தான் பெயர் மாற்றத்திலே இருக்கிறதே தவிர, தொழில் கிடைக்கும், சோறு கிடைக்கும் என்ற அடிப்படையிலே இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படவில்லை. தமிழிலே 'தமிழ் நாடு' என்று போடுவதற்கான முடிவை ஏற்கெனவே எடுத்து விட்டோம். ஆங்கிலத்திலும் தமிழ்நாடு என்று போட்டால்தான் அதன் வரலாறு தெரியும் ; நாகரிகம் தெரியும் ; பண்பாடு தெரியும் ; தமிழர்களுக்கே உரிய தனிச் சிறப்பியல்புகள் தெரியும். அந்தக் காரணத்தினாலே தான் ஆங்கிலத்திலும் 'தமிழ் நாடு' என்று அழைக்கப்பட வேண்டு மென்பதை நாங்கள் வற்புறுத்தி வருகிறோம்.

பம்பாய் மாநிலம் என்றிருந்தது. மொழி வழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டபோது மகா குஜராத் மாநிலம் என்று பிரிந்தது. மற்ற பகுதி மகாராஷ்ட்ரம் என்று பிரிந்தது. சென்னையைப் போலவே அகில உலகத் தொடர்பு பெற்றிருந்த பம்பாய் மாநிலம், வாணிபத் துறையில் சென்னையை விட அதிகத் தொடர்பு அகில உலகத்தில் கொண்டிருந்த பம்பாய் மாநிலம் மகாராஷ்ட்ரா மாநிலம் என்று திருத்தியமைக்கப்பட்டது. அதனால் அந்த மாநிலத்தின் பெயர் அகில உலகில் குறைந்து விட்டதா ? குறைந்து விட்டது என்று சொல்வதற்கில்லை. காங்கோ என்று ஏன் வந்தது ? லெனின்கிராட் என்று ஏன் வந்தது ? பெட்ரோகிராட் ஸ்டாலின் கிராடாக ஏன் மாறியது என்று கேட்கும்போது அதன் பின்னால் உள்ள வரலாற்றை, உணர்ச்சியை, சீரான தன்மையைக் காண முடியும்.

23rd July 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

ஈன்ற பொழுதில் பெரிதுவக்குந் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என வள்ளுவர் கூறியிருக்கிறார். மற்றவர்கள் தன் பிள்ளையைப் பாராட்டி பேசும்போது அதில் ஏற்படும் மகிழ்ச்சி குறித்துத் தான் "கேட்ட தாய்" என்ற சொல்லை வைத்தார் என்று பரிமே லழகர் தெளிவுபடுத்திக் கூறியிருக்கிறார்கள். உலகத்தில் உள்ளவர் கள் தமிழ் நாடு என்று அழைக்கும்போது நமக்கு ஒரு பெருமை, பூரிப்பு ஏற்படுகிறது. ஒரு தனி மகிழ்ச்சி ஏற்படுகிறது. நாம் அழைக்கும்போது தமிழ் நாடு என்று அழைப்போம், மற்றவர்கள் அழைக்கும்போது மட்ராஸ் என்று அழைக்கவேண்டுமென்று சொல்வதில் பிரச்னை எதுவும் இல்லை. தமிழ் நாடு என்று அழைக்க வேண்டும் என்ற முடிவிற்கு, ஏகோபித்த முடிவிற்கு எல்லோரும் வந்திருக்கிறார்கள். மற்ற உறுப்பினர்கள் எடுத்துத் தெரி வித்தது போல் தமிழ் நாடு காங்கிரஸ் என்றுதான் பெயர் வைக் கப்பட்டிருக்கிறது. இம் மாநிலத்திற்கு தமிழ் நாடு என்ற பெயர் பொருந்தும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி என்றுதான் தமிழிலும் வைத்திருக் கிறார்கள், ஆங்கிலத்திலும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி என்று தான் வைத்திருக்கிறார்கள். ஆங்கிலத்தில் எழுதும் போது மதராஸ் காங்கிரஸ் கமிட்டி என்ற அளவில் அழைக்கப்படுவதில்லை. ஆகவே ஆங்கிலத்தில் தமிழ்நாடு என்று போடுவதில் தகராறோ அல்லது எந்தவிதக் கஷ்டமோ இல்லை.

இந்தத் தீர்மானத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வந்தபோது மத்திய அமைச்சர்கள் சொன்ன கருத்து எல்லாம், இத்தீர் மானத்தை ஏற்றுக் கொள்ள மத்திய அரசுக்கு தகராறு எதுவும் இல்லை, சென்னை மாநில அரசு விரும்பினால் அந்த மன்றம் விரும்பி பெயர் மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டால் அப்படி மாற்றுவதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்ற கருத்தை மத்திய அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் கூறியிருக்கிறார்கள். பாராளுமன்ற மேல் அவையில் எதிர்கட்சித் தலைவர் திரு. புபேஷ் குப்தா அவர்கள் நம் மாநிலத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்றும் அதற்கேற்றபடி அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டுமென்றும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, அதை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆதரித்து பேச அதற்குப் பதில் உரைத்த அமைச்சர் அவர்கள் சென்னை மாநிலம் விரும்புமானால் இந்த மாற்று வதில் எங்களுக்கு தகராறு எதுவும் இல்லை, சென்னை மாநிலம் எடுத்துச் சொல்லட்டும் என்று கூறியிருக்கிறார்கள். தமிழ் நாடு என்று பெயரை மாற்ற வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்தபோது, அதற்காக அரசியல் சட்டத்தை திருத்த வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்தபோது விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது அவை முதல்வர் திரு. சுப்பிரமண்யம் அவர்கள் தமிழில் எழுதுகிறபோது தமிழ் நாடு என்று குறிப்பிட

லாம் என்றும் ஆங்கிலத்தில் எழுதும்போது இப்போது இருப்பது போல் இருக்கட்டும் என்று கூறி அரசாங்கக் கட்டளை என்ற அளவில் அது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டதே தவிர தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிய அளவிற்கில்லை. திரு மாதா கவுடர் அவர்கள், இந்த அவையில் தீர்மானம் கொண்டு வந்து ஆங்கிலத்தில் எழுதும்போது மதரூஸ் என்றிருக்கலாம், தமிழில் எழுதும்போது தமிழ் நாடு என்றிருக்கலாம் என்று தீர்மானம் வந்து அதை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்ற கருத்துப் பட எடுத்துச் சொன்னார்கள். விவாதத்திற்கு பதில் அளிக்கும் போது நிதி அமைச்சராக இருந்த திரு சுப்பிரமணியம் அவர்கள் தமிழில் எழுதும்போது தமிழ் நாடு என்று அழைக்கலாம் என்று கூறியதுடன், அரசுக் கட்டளைப்படி நடைமுறைக்கு அது கொண்டு வரப்பட்டது. ஆங்கிலத்தில் எழுதும்போது மதரூஸ் என்று இருக்கலாம் என்று எதிர்கட்சிக்காரர்கள் ஒப்புக் கொண்டதாகத் தெரியவில்லை. நாங்கள் சொல்வது, தமிழில் அழைக்கப்படுவதைப் போன்று ஆங்கிலத்திலும் அழைக்கப்பட வேண்டும். இதன் காரணமாக பெருமை ஏற்படுமே தவிர, இதன் காரணமாக அமைச்சரவைக்கு பெருமை ஏற்படுமே தவிர பொருளாதார நஷ்டம் எதுவும் ஏற்படப் போவதில்லை. தொகுதிகளை மாற்று கிறோம், தொகுதிகளின் பெயர்களை மாற்றுகிறோம், தாலூ காக்களின் பெயர்களை மாற்றுகிறோம், அதன் காரணமாக ரிக்கார்டுகளும் மாறவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. திருவிதாங் கூர்—கொச்சி என்றிருந்தது கேரளா என்று மாற்றப்பட்டது. அது இன்று அகில இந்திய தொடர்பில், அகில உலகத் தொடர்பில் கேரளம் என்றே வழங்கப்படுகிறது. என் பெயரை நான் நெடுஞ் செழியன் என்று மாற்றிக் கொண்டேன். என் காதிற்கு இனிமை யாக இருக்கட்டும் என்று மாற்றிக் கொண்டேன். அப்பெயரைச் சொல்லும்போது ஏற்படும் பெருமை, பூரிப்பு இருக்கட்டும் என்று கருதித்தான் செய்தேன். பெயரை மாற்றுவதினால் எனக்கு முழு வயிறு சோறு கிடைக்கும் என்றோ இல்லாவிடில் அரை வயிறு சோறுதான் கிடைக்கும் என்றோ செய்யவில்லை. அப்பெயர் என் காதில் விழும்போது ஒருவித பூரிப்பு ஏற்படுவதைக் கண்டேன். மோசடிக்காக மாற்றவில்லை. அரசிதழ் பதிவேட்டில் போட்டுத் தான் பெயரை மாற்றினேன். நான் தமிழிலும் நெடுஞ்செழியன் என்றுதான் எழுதுகிறேன். ஆங்கிலத்திலும் நெடுஞ்செழியன் என்றுதான் எழுதுகிறேன். ஆங்கிலத்தில் எழுதுவதற்கு என்று நான் தனிப் பெயரை வைத்துக் கொள்ளவில்லை. ஆக, தமிழ் நாடு என்று மாற்றுவதில் ஆளும் கட்சியினருக்கும், எதிர்கட்சி யினருக்கும் எந்த வேறுபாடும் இருக்க நியாயம் இல்லை. ஆகவே இதை பெருந்தன்மையோடு தமிழக அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். மாநில அரசு சிபார்சு செய்தால் மத்திய அரசுக்கு எவ்விதத் தடையும் இல்லை என்ற கருத்தைக் காண்கிறோம். ஆகவே இதில் எவ்விதக் கஷ்டமும் இல்லை. தமிழ் நாடு என்று மாற்று வதில் வரலாறு படிந்து இருக்கிறது. ஆகவே இத் தீர்மானத்தை

அரசு ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், இந்த அடிப்படையில் பெயரை மாற்றுவதற்கு தக்க முயற்சிகளை அரசு செய்யும் என்று வாக்குறுதி தந்தால் மகிழ்ச்சிகரமாக இருக்கும். இதில் ஒருவித ஏமாற்றமும் இல்லை. மொழி வழி மாகாணம் அமைக்கவேண்டு மென்று நீண்ட காலத்திற்கு முன்னதாகவே தமிழ் நாடு என்று வைத்தார்கள். ஏமாற்றுவதற்காக வைத்தார்கள் என்று சொல் வதற்கில்லை. தமிழ் நாடு என்று சொல்வதால் ஏற்படுகிற பெருமை, மகிழ்ச்சி, பூரிப்பு, வரலாறு இவற்றின் காரணமாக மாற்றவேண்டு மென்று கேட்கிறோமே தவிர வேறு எந்தவித நோக்கமும் இல்லை. இதை மாநில அரசே பெருந்தன்மையோடு கொண்டு வந்து நிறை வேற்றலாம். திருவள்ளுவரின் படத்தை திறந்து வைத்து அதன் மூலம் இம்மன்ற அங்கத்தினர்கள் அனைவரது பாராட்டுதல்களையும் பெறும் நிலை அரசுக்கு ஏற்பட்டது. தமிழ் நாடு என்று எழுதலாம் என்று திரு. சுப்பிரமண்யம் அவர்கள் சொன்னபோது அத்தனை பேர்களும் அதை ஆரவாரத்தோடு வரவேற்றார்கள். பெரு மகிழ்ச்சியோடு வரவேற்க வேண்டிய ஒன்றுதான், அது. தமிழ் நாடு என்று ஆங்கிலத்திலும் பெயர் மாற்றுவதில் கருத்து வேறு பாடு இருக்க இடமில்லை. அப்படிச் செய்வதினால் மக்களுக்கும் திருப்தி ஏற்படும். தமிழ் நாடு ஸ்டேட் என்று சொல்லும்போது வரலாறு படித்தவர்கள் அல்லது வெளி நாடுகளில் இருந்து வரும் வர்கள் சிலகாலம் வரை தெரிந்து கொள்ள கஷ்டம் இருந்தாலும் பின்னர் அது பழகிப் போய் விடும். ஆகவே இதை மனதில் வைத்து இதை ஏற்று நடைமுறைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கூறி, இதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள் கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவாதம் அங்கத்தினர்களுடைய பேச்சுத் திறமையை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக விளங் கிற்று. ஏதோ சட்டப் பிரச்னையாக இருந்தால் செக்ஷன் 13, 16 என்ன சொல்கிறது என்று நுணுக்கமாக துருவிப் பார்த்து படித்து பேச வேண்டும். இது நல்ல, பொதுவான விவாதம். எல்லோ ரும் பேசக்கூடியது. எல்லோரும் சிறப்பாகவும், திறமையாகவும் பேசக் கூடிய ஒரு விஷயம். அதிலும் நம் சட்டசபையில் நிறைய தமிழ் படித்தவர்கள், இலக்கியம் படித்தவர்கள், சரித்திரம் படித்த வர்கள், புராணம் இதிகாசங்கள் எல்லாம் படித்தவர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் திறமைக்கு ஏதாவது ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டாமா? அந்த முறையில்தான் இது நடந்திருக் கிறது என்றுதான் நான் நினைக்கிறேன். ஏனென்றால், இந்த கர்க்காரைப் பொறுத்த அளவில், இது முடிந்து போன விஷயம். இது எல்லோரும் அங்கீகரித்த விஷயம். இதில் எல்லோரும் 1-00 p.m.
ஓரளவுக்கு சேர்ந்து முடிவு எடுக்கப்பட்டது. அப்போது எடுக்கப் பட்ட முடிவுதான் பொருத்தமாக இருக்கிறது என்று இரண்டு

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [23rd July 1964

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நினைத்த விஷயம். அன்றைக்கு என்ன நடந்தது என்று சொன்னால், திரு. சின்னதுரை அவர்கள் தமிழ்நாடு என்று இந்த ராஜ்யத்திற்கு பெயர் வைக்கவேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தார்கள். ராஜ்ய நிர்வாகம் முழுவதும் தமிழில்தான் நடத்தவேண்டும் என்ற அடிப்படையில் பல இலாகாக்களிலும் தமிழ் உபயோகிக்கப்பட்டு வருகிறது. வெளியிலும் தமிழ்நாடு சட்டசபை, தமிழ்நாடு காங்கிரஸ் என்றெல்லாம் தான் நாம் பேசுகிறோம். இந்த அளவுக்கு நம்முடைய எண்ணத்தை நிறைவேற்றி வைக்கவேண்டும் என்ற முறையில் தான் அன்றைக்கு இவ்விஷயத்தைப்பற்றி பரிசீலனை செய்தார்கள். பரிசீலனை செய்து பார்த்துத்தான் தமிழ்மொழி ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்காக பல கமிட்டிகளை நியமித்திருக்கிறோம். 1956-ம் ஆண்டில் நிறைவேற்றிய 'அஃபிஷியல் லாங்க்வஜ்' சட்டப்படி தமிழை நாம் நம்முடைய ராஜ்ய மொழி என்று ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் ஆங்கில பதங்களை ஒவ்வொரு துறையில் என்னென்ன தமிழ் பதங்கள் மூலமாக பயன்படுத்தலாம் என்பதைப்பற்றி நிர்ணயம் செய்வதற்காக கமிட்டிகளை நியமித்திருக்கிறோம். அதற்கான வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. அப்படி பார்க்கும்போது, தமிழில் மட்ராஸ் ஸ்டேட் என்று வருகின்ற இடத்தில் எல்லாம் தமிழ்நாடு என்றுதான் இப்போதும் உபயோகித்துக்கொண்டிருக்கின்றோம். இதற்காக நாம் (ஜி.ஓ.) அரசாங்க உத்தரவையும் போட்டிருக்கிறோம். இதைப்பற்றி பேசும்போது கனம் மதியழகன் அவர்கள் ஃப்ராட் ஆன் கான்ஸ்டிட்யூஷன்" என்றெல்லாம் சொன்னார்கள். இவ்விதம் பேசுவது சரியான முறையில் சட்டத்தை தெரிந்து கொள்ளவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. (இச்சமயத்தில்--திரு. கே. ஏ. மதியழகன் பேசுவதற்கு எழுந்தார்.) I am not yielding; the hon. Member may please sit down. பொதுவாக சபையில் இம்மாதிரி விஷயங்களைப்பற்றி பேசும்போது, கொஞ்சம் அடக்கமாக வார்த்தைகளை உபயோகிப்பது நல்லது. நியாயமான அடிப்படையில் இயற்றி வைத்திருக்கின்ற சட்டத்தை, கான்ஸ்டிட்யூஷனை—ஏதோ "ஃப்ராட் ஆன் கான்ஸ்டிட்யூஷன்" என்கின்ற முறையில் ஒரு ஜி. ஓ. போட்டிருக்கிறார்கள் என்று சொல்வது கொஞ்சமும் நியாயமல்ல. கான்ஸ்டிட்யூஷன் அடிப்படையில் தான் நம்முடைய நிர்வாகத்தில், மட்ராஸ் ஸ்டேட் என்று வருகிற இடங்களில் தமிழ்நாடு என்று போட்டுக்கொள்ளலாம் என்று தீர்மானித்து, அதை எல்லோரும் நாம் ஏற்றுக்கொண்ட பின்னால், அதன் அடிப்படையில் இன்றைக்கு சட்டசபை காரியங்களிலும் சரி, மசோதாக்களை வெளியிடுவதிலும் சரி, மேஜைமீது வைக்கப்படுகின்ற குறிப்புகளாக இருந்தாலும் சரி, பத்திரிகை செய்திகளாக இருந்தாலும் சரி இவைகளை எல்லாம் நாம் தமிழில் வெளியிடுகிறோம். அவ்விதம் இருக்கும்போது, இதில் "ஃப்ராட் ஆன் கான்ஸ்டிட்யூஷன்" என்று சொன்னது—நான் கடுமையாக சொல்ல விரும்பவில்லை—இது தகாது என்று மட்டும் நான்

23rd July 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அன்றைக்கு இந்த முடிவு எடுத்தபோது திரு. கல்யாணசுந்தரம் ஒருவர் தான் "இந்த தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொள்வதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் இந்த முடிவை ஏற்றுக்கொள்ளவில்லை . . . " என்று சொல்லியிருக்கிறார்கள். சர்க்கார் செய்திருக்கின்ற முடிவு அன்றைக்கு இருந்த சட்டசபையில் இருந்த எல்லாக் கட்சியினருக்கும் ஓரளவு திருப்தி அளித்தது—முழு அளவும் என்று நான் சொல்லவில்லை—ஓரளவுக்கு திருப்தி அளித்தது. அந்த நிலைமையில்தான், அன்றைக்கு எடுத்த முடிவின் அடிப்படையில் தான் நாம் காரியங்களை செய்துகொண்டு வருகிறோம். மறுபடியும் இப்போது தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்கின்ற பிரச்னை ஏன் ஏற்பட்டது? அப்போது எடுத்த முடிவை மாற்றிக் கொள்வதற்கு என்ன காரணம் இருக்கிறது என்பதை சொன்னால் தான் சரியாக இருக்கும். அவ்விதம் ஒன்றுமில்லாமல் மீண்டும் மீண்டும் இதை எடுத்துக் கொண்டு இந்த தீர்மானத்தின் மூலமாக அரசியல் சட்டத்தை மாற்றி அமைக்கவேண்டும் என்று சொல்வது வாதம் இல்லாத ஒரு விவாதமாகத்தான் இருக்கும் என்று தான் நான் சொல்ல முடியும். அப்படியிருக்கும் நிலைமையில் திடீரென்று தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டிய காரணம் என்ன ஏற்பட்டிருக்கிறது, கான்ஸ்டிட்யூஷனில் மாற்றக்கூடிய அளவுக்கு என்ன ஏற்பட்டிருக்கிறது இதனால் பல நன்மைகள் இருக்கின்றன என்று வேண்டுமானால் சொல்லலாம். தமிழ்நாடு என்று சொல்லுவதனால் எல்லோருக்கும் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. அதே மாதிரி மட்ராஸ் ஸ்டேட் என்று சொல்லும் போதும் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. உலகத்தில் எங்கு போய் பார்த்தாலும் சரி, சர்வதேச விவகாரங்கள் ஆரம்பித்த காலத்திலிருந்து மட்ராஸ் ஸ்டேட்-க்கு எப்போதும் நல்ல பெயர்—பெரிய குட்வில்—தான் ஏற்பட்டுவருகிறது. அப்படி இருந்து வருவதை எதற்காக இப்போது போய் கெடுக்கவேண்டும். கான்ஸ்டிட்யூஷனில் இருக்கிறபடி இருக்கட்டும், இங்கு மட்டும் தமிழில் போய்க் கொண்டிருக்கிறபடி போய்க்கொண்டிருக்கட்டும். வழக்கத்தில் எல்லாம் தமிழ்நாடு என்று தான் இருக்கும். கான்ஸ்டிட்யூஷனில் மட்டும் தான் மட்ராஸ் ஸ்டேட் என்று இருக்கும். வெளியார்கள் இப்போது வைத்திருப்பது போலவே மட்ராஸ் ஸ்டேட் என்றே வைத்துக்கொண்டிருக்கலாம். ஆகவே நாம் எடுத்திருக்கின்ற முடிவு மிகவும் நியாயமானது. எல்லா தரப்பினரும் ஒத்துக்கொண்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், தமிழ்நாடு என்று மாற்றவேண்டும் என்று சொல்லுகின்ற அங்கத்தினர்கள் பல வாதங்களை சொன்னார்கள். மாற்றினால் சாப்பாடு வருமா மாற்றாவிட்டால் சாப்பாடு வராதா என்றெல்லாம் கேட்கப்பட்டது. சாப்பாடு வருமா என்று கேட்டதிலும் அர்த்தமில்லை. சாப்பாடு வராதா என்று கேட்டதிலும் அர்த்தமில்லை. இவ்விதம் அர்த்தமற்ற வாதங்களுக்குப் பின்னால் ஒன்றும் சொல்வதற்கு இல்லை. இங்கு நடைபெறுகின்ற வாதங்களில் என்னவெல்லாம் அர்த்தமற்ற வாதங்களாக இருக்கின்றன

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [23rd July 1964

என்பதை பின்னால் நாம் படித்துப் பார்க்கும்போதுதான் தெரிகிறது. காமன் பண்டிகைப்பற்றி பேசப்பட்டது. அதைப்பற்றி பேசும்போது கனம் அங்கத்தினர் அவர்கள் நாங்கள் எரிக்கிற கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் என்று சொன்னார்கள். ஆனால் அதில் எரிக்கிற கட்சி என்று ஒன்று கிடையாது என்று நினைக்கிறேன். ஆகவே இந்த வாதம் எல்லாம் நமக்கு பயன் அளிக்காது. முக்கியமாக பார்க்க வேண்டியது என்ன சொன்னார்கள் என்பதைத்தான். நம்முடைய அரசியல் சட்டத்தைப் பொறுத்தவரையில், அதில் தொடர்ந்து மட்ராஸ் ஸ்டேட் என்று இருப்பதில் எந்தவிதமான தவறும் இல்லை, தனிச் சிறப்பாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. இப்போது இருப்பது போலவே இருக்கட்டும், நம்மைப் பொறுத்தளவில் இப்போது நாம் எப்படி தமிழ்நாடு என்பதை எல்லா துறைகளிலும் உபயோகித்துக்கொண்டிருக்கிறோமோ அதைப்போன்று மேலும் உபயோகித்துக்கொண்டிருக்கலாம். இதனால் எந்தவிதமான கஷ்டமும் ஏற்பட்டு விடாது. அதற்காக இரண்டு பெயர் வைக்கவேண்டாம் என்று சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி முன்னால் விவாதம் நடந்த போது, திரு. சுப்பிரமணியம் அவர்களிடம் கூட அப்போது சொன்னேன். அதாவது இரண்டு பெயர் வைத்திருப்பது புதிது ஒன்றுமில்லை. ஜெர்மனியை எடுத்துக்கொள்வோம். வெளியில் தான் ஜெர்மனி என்று சொல்லுகிறோம். ஆனால் அங்கேயுள்ளவர்கள் டூஷேலன்ட் என்றுதான் அழைப்பார்கள். இவ்விதம் உள் நாட்டில் வேறு பெயரில் அழைப்பதில் எந்தவிதமான தவறும் இல்லை. ஆகவே நாம் வைத்திருப்பது புதிது ஒன்றுமில்லை. உலகத்திலேயே இம்மாதிரி ஒரு இடத்திலும் இல்லை, அப்படியிருக்கும்போது நீங்கள் மட்டும் ஏன் இப்படி ஏற்படுத்துகிறீர்கள் என்று கேட்டால், அப்போது வேண்டுமென்றால் யோசித்துப்பார்க்கலாம். அம்மாதிரி தவறு ஒன்றும் இங்கு இல்லை. இந்த முறையில் பல இடங்களில் இருக்கிறது. ஆகவேதான் இப்போது இருப்பதையே வைத்துக்கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இங்கே நடந்த பல விவாதத்திற்கும் பதில் சொன்னால் வீணாக மனக்கசப்புத்தான் ஏற்படும். மனக்கசப்பு இல்லாமல் விவாதம் நடைபெற வேண்டும் என்பதுதான் என்னுடைய அடிப்படையான குறிக்கோள். ஆகவே இப்போது நாம் வைத்துக் கொண்டிருப்பது, அல்லது நாம் ஏற்றுக்கொண்டிருப்பது நல்ல முடிவு, நமக்கு உகந்த முடிவு, இதை மாற்றவேண்டிய தேவையில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே கனம் அங்கத்தினர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன், இல்லாவிட்டால் இதை எதிர்க்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் அமைச்சர் அவர்கள், மட்ராஸ் ஸ்டேட்-க்கு தமிழ்நாடு என்று நாம் மட்டும் வைத்திருப்பது அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று நான் குறிப்பிட்டதை மறுத்துப் பேசினார்கள். நிச்சயமாக அரசாங்கம் போட்ட

23rd July 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

உத்தரவானது, அரசியல் சட்டத்திற்கு முரணானது என்பதை, நான் எந்த இடத்தில் வேண்டுமானாலும் நிரூபிக்கத் தயார். அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் இதைப்பற்றி தனக்கு சிரத்தை இல்லை என்று சொல்லட்டும். ஆனால் இதை தவறானது அல்ல என்று மட்டும் சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய வாதத்தை நான் நீதிபதிகள் கொண்ட கமிட்டியின் முன்பு வேண்டுமானாலும் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

* **திரு. இராம. அரங்கண்ணல்** : மேதகு துணைத் தலைவர் அவர்களே, இந்த தீர்மானத்தை நான் கொண்டு வந்ததற்கு காரணத்தை நான் சிறிது விளக்க ஆசைப்படுகிறேன். ஏனென்றால் அரசியல் நோக்கத்தோடு இந்த தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கும் என்ற கருத்துப்பட இங்கு பேசப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் எல்லா காரியங்களிலும் அரசியல் நோக்கம் கொண்டுதான் செய்யவேண்டும் என்கின்ற அவசியமில்லை. நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த நேரத்தில், இந்தத் தீர்மானத்திற்கு ஏகோபித்த ஆதரவு கிடைக்கும், எப்படியாவது இந்த ஆண்டு தமிழ்நாடு என்று நமது மாநிலத்திற்கு பெயர் வந்து விடும் என்ற ஆவலோடுதான் கொண்டு வந்தேன். நான் இந்தத் தீர்மானம் கொண்டு வந்ததற்கு முதற் காரணம் இன்றைய தினம் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருக்கின்ற திருவாளர் காமராஜ் அவர்கள் செல்லுகின்ற இடங்களில் எல்லாம் நமது அருமையான தமிழில்தான் பேசி, வங்காளத்து சிக்கலானாலும் சரி, பஞ்சாப் சிக்கலானாலும் சரி, இவ்விதம் எந்த சிக்கல்கள் வந்தாலும் சரி, தமிழில் பேசித்தான் தீர்த்து வருகிறார் என்கின்ற பெருமை நமது தமிழ்நாட்டுக்கு கிடைத்திருக்கிறது. அந்தப் பெருமை கிடைத்திருக்கிற நேரத்தில் அவரும் நாமும் வாழ்ந்துகொண்டிருக்கிற இந்த அருமையான மண்ணுக்கு தமிழ்நாடு என்ற பழைய பெயர் வரவேண்டுமென்ற ஆசையினாலேதான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்தேன். அது ஒரு காரணம்.

இரண்டாவது காரணம் பாராளுமன்ற மேலவையில் இப்படி ஒரு தனிப்பட்ட தீர்மானம் திரு. பூபேஷ் குப்தா அவர்களால் கொண்டுவரப்பட்ட நேரத்தில் அதற்கு பதிலளித்த உள் நாட்டு மந்திரி திரு. ஹஜர்நாவிஸ் அவர்கள் "It at any time, the State Government expressed their opinion in favour of any change in the name, it would receive due consideration of the Centre" என்று சொல்லியிருக்கிறார்கள். இதே பதிலை 1961-ல் சட்ட அமைச்சராக இருந்த திரு. ஏ. கே. சென் அவர்களும் மாநில அரசிடமிருந்து ஒரு கோரிக்கை வருமானால் அந்த கோரிக்கையை நாங்கள் கவனிக்கிறோம் என்று 1961-லே பார்லிமெண்டிலே சொல்லியிருக்கிறார்கள். அதே பதிலை 1963-லே மத்திய அமைச்சிலே இருக்கிற அமைச்சர் அளித்திருக்கிறார். இந்தக் கோரிக்கைக்கு மத்திய அரசில் இருக்கிறவர்களுக்கு எந்த விதமான ஆட்சேபமும் இல்லை. டில்லியில்

இருக்கிற அரசுதான் இங்கே இருக்கிற நம்முடைய அமைச்சர்களுடைய வாயையும் கையையும் கட்டிப் போட்டிருக்கிறது என்ற எண்ணம் எங்களுக்கெல்லாம் இருந்தது. அப்படிப்பட்ட எண்ணம் தங்களுக்கு இல்லை என்று மத்திய அரசு சொன்ன பிறகு, அந்தப் பழி நமது அருமையான அமைச்சர்களுக்கு, தமிழ்நாட்டு அமைச்சர்களுக்கு வராமல் இருக்க வேண்டும், அதற்கு நாம் தூண்டு கோலாக இருப்போம் என்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். அரசியல் நோக்கத்தோடு அல்லவென்றால், தமிழ்நாடு என்ற பெயரை வைப்பதற்கு காங்கிரஸ் கட்சியில் இருக்கிறவர்கள் ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் ஒருப்படவில்லை என்று மக்களிடத்தில் எடுத்துச் சொல்லாமல் இருப்பீர்களா என்று கேட்டால், நிச்சயமாக இந்த நிமிஷம் முதல் சொல்லுகிறேன், தமிழ்நாட்டில் இருக்கிற மக்களுக்கு உங்கள்போக்கை எடுத்துச் சொல்லக் கடமைபட்டிருக்கிறோம். எனவே, இனிமேல் இது அரசியல் பிரச்னை ஆகத்தான் எடுத்துக்கொள்ளப்படும். ஏனென்றால், சபையின் முதல்வர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இந்தத் தீர்மானத்தை எதிர்க்க வேண்டிய அவசியம் வந்து விடுமோ என்று அவர்கள் மிகவும் மெல்லிய குரலில் எடுத்துச் சொன்னார்கள். சுருங்கச் சொன்னால் டில்லியில் அமைச்சராக இருக்கிற திரு. சுப்பிரமணியம் இங்கே நிதி அமைச்சராக இருந்த காலம் எவ்வளவோ நல்ல காலம் போல இருக்கிறது தமிழுக்கு! இந்த மாநிலத்தில் கல்வி அமைச்சராக அவர் இருந்த காலத்தில் உதகையில் அரசாங்கத்திற்கு ஒரு வீடு வாங்கியபோது அதற்கு 'தமிழகம்' என்ற அருமையான பெயரை சூட்டினார். இன்றைய தினம் இருக்கிற அமைச்சர் டில்லியில், ஒரு வீட்டை வாங்கி அதற்கு 'மெட்ராஸ் ஹவுஸ்' என்று பெயர் வைத்திருக்கிறார்! அன்றைய தினம் அவர் தமிழில் வரவுசெலவுத் திட்டத்தைக் கொண்டு வந்து தமிழில் பேசினார்.

நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்கு மூன்றாவது காரணம், இதே விவாதம் இதே சபையில் 1961-ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 24-ம் தேதி நடைபெற்றபோது, எங்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பேசிய நேரத்தில், அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது 'இரண்டு ஆண்டுகள் பேசாமல் இருந்தால் நான் அதைப் பற்றி யோசிக்கிறேன் என்று சொன்னார்கள். உடனே ப. உ. சண்முகம் அவர்கள் இரண்டு ஆண்டுகள் பூர்த்தி ஆகும் வரையில் அப்படியே பேசாமல் இருந்த போதிலும், நாட்டிற்குப் பெயரை வைக்கிற நல்ல மனமும் குணமும். . . . . ." என்று இப்படிப் பேசிக்கொண்டு சென்ற நேரத்தில் குறுக்கிட்டு கனம் திரு. சுப்பிரமணியம் அவர்கள் "இரண்டு ஆண்டுகள் முடியவில்லையே." என்று சொல்ல, உடனே திரு. சண்முகம் "முடிந்துவிட்டது என்று கருதுகிறேன்" என்று சொல்ல, திரு. சுப்பிரமணியம் அவர்கள் "நான் கணக்குப் பார்த்தேன். இன்னும் முடியவில்லை" என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் சொன்ன காரணம், இரண்டு ஆண்டுகள் முடியட்டும், அல்லது ஐந்து ஆண்டுகள் போகட்டும், இன்றைய தினம் தமிழரசுக் கழகம் கிளர்ச்சி செய்து

கொண்டிருக்கிறார்கள், அந்தக் கிளர்ச்சிக்கு அரசாங்கம் அடிபணிந்து விட்டது என்று கருத்து ஏற்படும், அப்படி இல்லாமல் இருக்க போகப் போக ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்ற காரணத்தினால்தான் சொன்னார்கள். சொன்னது மட்டுமல்ல உள்ளத்தில் அந்தக் கருத்தினைக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசிய நேரத்தில் "போகப் போக நம் ஆட்சி மொழி மேலும் மேலும் வளரும்போது, ஆங்கிலம் மாற்றப்பட்டு தமிழே நிர்வாகத்தில் வரும்போது, மெட்ராஸ் என்று ஆங்கிலத்தில் மற்றவர்களுக்கு எழுதக்கூடிய இடத்தில் தான் குறிப்பிடப்படுமே தவிர வேறு எல்லா இடங்களிலும் தமிழ் நாடு என்று சொல்லக்கூடிய முறையில் அமைந்து விடும்" என்ற முறையிலே சொன்னதுமட்டுமல்லாமல் எதிர் காலத்தில் தமிழ்நாடு என்று அமையும் என்று உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தந்தார்கள். இன்றைய ஆளும் கட்சி உறுப்பினர்களும் ஆளுகின்ற அமைச்சர்களும் எதை எடுத்து வைத்தாலும் கட்சிப் பிரச்னையாகக் கருதி இதைச் செய்தால் இப்படி வருமா, அதைச் செய்தால் அப்படி வருமா என்று கருதுகிறார்களேயொழிய, கட்சிக்கு அப்பாற்பட்ட பொதுப்பிரச்னையாக எத்தனையோ பிரச்னைகள் இருந்துகொண்டிருக்கின்றன. அத்தகைய பொதுப் பிரச்னையில் ஒன்றுதான் தமிழ்நாடு என்று பெயர் வைக்கிற பிரச்னை. தமிழ்ப் புலமை வாய்ந்த பெரியார்கள் கருத்துக்களை இங்கே எடுத்து வைத்தார்கள். கம்யூனிஸ்டுத் தலைவர் என் தீர்மானத்தை ஆதரிக்கும் வகையில் பேசினார்கள். சுதந்திரக் கட்சித் தலைவர் நல்ல முறையில் கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். எங்கள் கட்சித் தலைவர் தேவையான விளக்கங்களைத் 'தேன் வந்து பாயுது காதினிலே' என்ற அளவுக்கு பாரதியார் வார்த்தைகளை எடுத்துச் சொல்லி ஏன் தமிழ்நாடு என்று பெயர் வைக்கக்கூடாது, ஏன் அந்த இனிய பெயரை நாமெல்லாம் கேட்கக்கூடாது என்று எடுத்துச் சொன்னார்கள். பதில் அளிக்கும் நேரத்தில் கனம் தொழிலமைச்சர் அவர்கள் 'மெட்ராஸ் என்று சொன்னால் சர்வதேச அரங்கில் கேட்கிற நேரத்தில் பெருமையாக இருக்கிறது' என்று சொன்னார்கள். ஒரு விஷயத்தைக் கேட்டால் பெருமை, இனிமை ஏற்படுவது கேட்பவருடைய தன்மையையும் சுபாவத்தையும் பொறுத்திருக்கிறது. ஒரு வேளை அயல் நாடுகளில் சுற்றிக்கொண்டிருக்கிற காரணத்தினாலோ என்னவோ தொழில் அமைச்சருக்கு அந்த வார்த்தையைக் கேட்க ஆனந்தமாக இருக்கலாம். அவரை மிக மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அவர் சிறந்த பண்பாளர். பல கலைகளை நல்ல முறையில் கற்றவர். நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்வது, சர்வதேச அரங்கில் 'நான் தமிழ் நாட்டைச் சார்ந்தவன், நான் இருப்பது தமிழ்நாடு' என்று சொல்லி தமிழ்நாடு என்ற பெயருக்கு அவர்கள் பெருமையைக் கொண்டுவரவேண்டும் என்று அவர்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில், சொந்த முறையில், தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட நிலையை உருவாக்கக்கூடாதா? இனிய தமிழ் முழங்கக் கூடாதா?

[திரு. இராம. அரங்கண்ணல்] [23rd July 1964

சென்னையை விட எவ்வளவோ சிறந்து விளங்கியது பம்பாய் மாநிலம். பம்பாயில் 112 ஆலைகள் இருந்தபோது இங்கே ஒரு ஆலை கூட இல்லாத காலம்கூட உண்டு! அவ்வளவு தொழில் வளம் பெற்றிருந்தது பம்பாய் மாநிலம். 'இந்தியாவின் வாசல்' என்பார்கள் பம்பாய்ப்பட்டிணத்தை! அத்தகைய பம்பாய் இன்றைய தினம் இருக்கிறதா? பம்பாய் பிரிக்கப்பட்டு குஜராத் ஒரு பகுதியாகப் போய்விட்டது. ஒரு பகுதி மராட்டியமாக அமைந்து விட்டது. பம்பாய் என்று இன்றைய தினம் அழைக்கப்படுவது கிடையாது. எங்கள் தலைவர் சொன்னது போல பெயர் மாற்றம் உள்ள நிறைவைக் குறிக்கும் விஷயமே தவிர, விவாதத்திற்கு வேண்டுமானால் எது வேண்டுமானாலும் பேசிக்கொண்டு போகலாம்.

இன்னும் ஒரு கருத்து சொல்லப்பட்டது. தமிழ்நாடு என்ற சொல்லைக் கொண்டு வருகிற காரணத்தினால், இந்த வார்த்தையை வைக்கிற காரணத்தினால் சோறு வருமா வீடு கிடைக்குமா, எந்தத் திட்டங்கள் ஆகி விடும் என்று கனம் அங்கத்தினர் மாதா கவுடர் கேட்டார்கள். அவர் சொன்னதைப்பற்றி நான் பொருட்படுத்தவில்லை, கவலைப்படவில்லை. தமிழ் படித்து பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்கு தமிழ் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிற தமிழால் வாழ்கிற சகோதரி குழந்தையம்மாள் இதே வார்த்தையைக் கேட்டார்கள். பாரதியார் பாடலிலிருந்து சான்று எடுத்து காட்டினார்கள். அதே பாரதியார் பாடி இருக்கிறார்—

மானம் சிறிதென் றெண்ணி
வாழ்வு பெரிதென் றெண்ணும்
ஈனர்க் குலகந்தனில் (நான் சொல்லவில்லை, பாரதியார்!)
இருக்க நிலைமை யுண்டோ? —கிளியே

என்று பாடியிருக்கிறார். அவரே பாடியிருக்கிறார்—

சிந்தையிற் கள் விரும்பிச்
சிவ சிவ வென்பது போல்
வந்தே மாதர மென்பார்—கிளியே
மனதி லதனைக் கொள்ளார்

என்று பாடியிருக்கிறார். வந்தே மாதரம் என்று சொல்லுவதானது, தாயை வணங்குகிறேன் என்று பொருள். பாரதியார் அவர்கள் இந்தப் பாட்டுக்களை 'நடிப்புச் சுதேசிகள்' என்ற தலைப்பில் பாடியிருக்கிறார்கள்.

இதைத் தவிர நான் அதற்கு எந்தவித பதிலையும் சொல்லவில்லை. திருமதி குழந்தையம்மாள் பேசிய நேரத்தில் ஜஸ்டிஸ் கட்சி தொடர்பை பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதற்கு நான் ஒரு சிறு விளக்கத்தை தர ஆசைப்படுகிறேன். இது பல தடவை இந்த மன்றத்தில் பேசப்பட்ட விஷயம். இருந்தும் அந்த ஜஸ்டிஸ்

23rd July 1964] [திரு. இராம. அரங்கண்ணல்]

கட்சியை இழுத்துக்கொண்டே இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சிக்குள் பல ஜஸ்டிஸ் கட்சியினர் புகுந்து விட்டார்கள் என்ற கோபம் குழந்தையம்மாளுக்கு இருந்தால், உங்கள் சத்தியமூர்த்தி பவனில் அதைப்பற்றிப் பேசி தீர்த்துக் கொள்ளலாம். நாங்கள் இருக்கிற இடத்தில் அதைப்பற்றி பேசிக் கொண்டிருக்க வேண்டாம். விஞ்ஞை இங்கே அமர்ந்து இருப்பவர்களுடைய மனது புண்படும். அதோ உங்கள் கட்சியிலிருக்கும் திரு. என். எஸ். ராமலிங்கம் யார்? மேல்சபைத் தலைவர் திரு. மாணிக்கவேலர் யார்? . . . . (**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்**: கனம் அங்கத்தினர் அவர்கள் தயவு செய்து பெயரைக் குறிக்காமல் பேசவேண்டும்). மத்திய அரசின் நிதி அமைச்சராக இன்றிருப்பவர் யார்? இதே மன்றத்தில் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தவர்கள்தான். அந்தப் பிரச்னைக்கு ஏன் போகிறீர்கள்? ஜஸ்டிஸ் கட்சி இருந்த நேரத்தில் நாங்கள் அந்தக் கட்சியில் இல்லை. அதை நீங்கள் உணரவேண்டும். எதற்காக நாங்கள் இம்மாதிரி இந்தப் பெயர் மாற்றக் கோரிக்கையை வைக்கிறோம்? எந்த நோக்கத்தோடு வைக்கிறோம்? ஏதாவது சிக்கலை உருவாக்க வைக்கிறோமா? அல்லது அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தில் நஷ்டம் உண்டாக்க வைக்கிறோமா? என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி பெயர் மாற்றம் செய்வதிலே எந்தவிதமான செலவும் இல்லை. லாபம் உண்டா என்று கேட்டால், நிச்சயமாக நமக்கு லாபம் இருக்கிறது. இத்தனை நாட்களாக இல்லாத ஒரு நல்ல பெயரை நாம் கொண்டு வருவதற்கு முனைந்து அதில் வெற்றி பெற்றிருக்கிறோம் என்ற நல்ல பெயர் நமக்கு வரும். ஆனால், இன்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் ஆளும் கட்சியினரும் தமிழ் நாடு என்ற பெயர் கூடாது என்று சொல்லுகிறார்கள். எங்களுடைய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னது போல, தமிழ்நாடு வேண்டுமென்று ஒரு பாதி ஒப்புக்கொண்டிருக்கிறோம். இன்னொரு பாதி மெட்ராஸ் ஸ்டேட் என்று இருக்கட்டும் என்று சொல்லுகிறோம். என் இந்தப் பிடிவாதம்? இதை விட்டுவிட்டு தமிழ் நாடு தான் என்று சொல்லி விட்டால் என்ன நமக்கு பெருமை இல்லையா? அதில் என்ன பிரச்னை வந்துவிடப்போகிறது? நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தேனே ஒழிய, அப்படி அரசாங்கம் ஒரு உறுதிமொழி தருமானால், நான் தயாராக இருக்கிறேன், தீர்மானத்தைத் திரும்பிப்பெற! எல்லோருமே சேர்ந்து இந்த மன்றத்தில் தமிழ்நாடு என்ற பெயர் நம்முடைய நாட்டிற்கு விளங்கும் என்று வைத்து விடலாம்.

தமிழ் நாடு இருந்ததா, நாடு என்றால் என்ன, ஊர் என்றால் என்ன நகரம் என்றால் என்ன என்ற பிரச்னைகளைப்பற்றி ஈரோடு திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதைப்பற்றியெல்லாம் நான் விளக்கிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ் நாடு என்ற பெயர் பொருத்தமில்லை, அந்தப்

பெயர் வேண்டாம் என்றால், தமிழகம் என்று வைத்துக் கொண்டாலும் நான் ஒத்துக்கொள்கிறேன். நம்முடைய தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் தமிழ் நாடு என்ற பெயர் பிடிக்காத, அல்லது பொருந்தாத பெயர் என்று குறிப்பிட்டார்கள். "தமிழகம்" என்ற பெயரை சூட்டுங்கள். தமிழ் எங்கே குடிகொண்டிருக்கிறதோ அந்த இடத்திற்கு தமிழகம் என்ற பெயரை சூட்டுங்கள் என்று கனம் தட்சிணாமூர்த்தி சொன்னார். ஆனால் தமிழ்ப் புலவர் நான் கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்தார்கள். ஆனால், 'தமிழகம்' என்று பெயர் வைப்பதை ஆதரித்தார்கள். அதே நேரத்தில் ஈரோட்டுப் பெரியாரைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். ஈரோட்டுப் பெரியாருக்கு நாங்கள் என்றைய தினமும், எங்களை ஆளாக்கியவர் என்பதால், நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் இன்றைய தினம் ஈரோட்டில் இருக்கிற எங்கள் பழைய தலைவர் இரண்டுங்கட்டானாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அதே பாதையில்தான் நம்முடைய தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் பதிலும் இங்கே இருந்தது. தமிழகம் வேண்டுமென்றும் சொன்னார் அதே சமயம் என் தீர்மானத்தையும் எதிர்த்தார்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: ஈரோட்டுத் தலைவர் இன்று இரண்டுங்கெட்டானாக இருக்கவில்லை. அவர் ஒருமுகமாக இப்பொழுது இருக்கிறார். நானும் அந்த வகையில் ஒருமுகமாகத்தான் பேசினேன்.

திரு. இரா. அரங்கண்ணல்: நான் தெளிவாகச் சொல்கிறேன். இதில் எந்த விதத்திலும் அரசியல் நோக்கம் கிடையாது. ஒரு சமயத்தில் ஆட்சி மன்றத்தில் அமைச்சராக இருந்தவர் வாக்குறுதி கொடுத்ததை வைத்தும், மத்திய அரசில் இருப்பவர்கள் நாம் தீர்மானம் போட்டு அனுப்பினால் அதை கவனிக்கிறோம் என்று சொல்லியதை வைத்தும், இங்கே நல்ல இளம் துடிப்பு வாய்ந்த தமிழ் இளைஞர்கள் உலா வருகிற அந்தக் காட்சி இருப்பதன் காரணமாகவும் எல்லோரும் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடுதான் நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். தமிழ் நாட்டிற்கு தமிழ் நாடு என்ற சொந்தப் பெயர் இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய தீர்மானம். அது ஆளும் கட்சியினரால் வரவேற்கப்படமாட்டாது என்ற அறிகுறி தெரிகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை வரவேண்டாம். நான் இதைக் கட்சிப் பிரச்னையாகச் சொல்ல வில்லை. உங்களுடைய உள்ளத்தை தொட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தேன் என்பதற்காக அல்ல. உங்களுடைய உள்ளத்தை, இருதயத்தை ஒரு தடவை நீங்கள் அத்தனை பேர்களும் தொடவேண்டும், தொட்டுப் பார்த்துக் கொண்டு இதற்கான முடிவை எடுங்கள் என்று சொல்லி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

800 009
138004

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் துணை சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், மற்றவர்களும் காரண காரிய விளக்கங்களை மிக விநயமாக எடுத்துச் சொல்லியும், பல முறை வேண்டுகோள் விடுத்தும், வற்புறுத்திக் கூறியும் அனுப்பிய அவையும், ஆளும் கட்சியினரும் திட்டவட்டமாக இதை ஏற்றுக் கொள்ளவில்லை, ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று குறிப்பிட்ட காரணத்தினால், நாங்கள் எங்களுடைய அதிருப்தியை தெரிவிக்கும் முறையிலும், ஆளும் கட்சியின் போக்கை கண்டிக்கும் முறையிலும் வெளிநடப்பு செய்வதைத் தவிர வேறு முடிவுக்கு வருவதற்கு வழி இல்லை என்று தெரிவித்துக்கொண்டு, நாங்கள் வெளி நடக்கிறோம்.

(Then Members belonging to the D.M.K. Party walked out of the house).

THE HON. SRI R. VENKATARAMAN : The House may also be adjourned along with that.

SRI KALYANASUNDARAM : No, No. I object to it. The House need not be adjourned, there is still time.

திரு. சா. கணேசன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அதே காரணத்திற்காக நாங்களும் வெளி நடப்பு செய்கிறோம்.

(Then Members belonging to the Swatantra party walked out of the House).

SRIMATHI T. N. ANANDANAYAKI : The mover of the Resolution is not in his seat.

MR. DEPUTY SPEAKER : As the mover of the Resolution is not in his seat, the Resolution is deemed to have been withdrawn.

As the hon. member, Sri N. P. Shengottuvelu is not in his seat, the Resolution standing in his name is also deemed to have been withdrawn.

(2) INCLUSION OF TAMIL AS ONE OF THE MEDIA FOR U.P.S.G. EXAMINATIONS.

திரு. கே. ஏ. மதியழகன்: மிஸ்டர் டெப்யூடி ஸ்பீக்கர் சார், என்னுடைய பெயரில் இருக்கிற கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"This House recommends to the Government to urge on the Government of India the need to include Tamil also as one of the media for writing the various competitive examinations conducted by the Union Public Service Commission."

SRI V. R. NEDUNCHEZHIYAN : Sir, I second the Resolution.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்தத் தீர்மானத்தின் விவாதத்தில் நமது முதல் அமைச்சர் அவர்கள் கலந்துகொள்ள வேண்டியிருக்கிற காரணத்தினால், அவர் சீக்கிரம் திடகாத்திரம் பெறவேண்டும்,

[23rd July 1964 [திரு. கே. ஏ. மதியழகன்]

விரைவில் குணமடைந்து திரும்பவேண்டும் என்று வாழ்த்தி, அடுத்த சட்டமன்றக் கூட்டத்தில் இதை விவாதிப்பது பொருத்தமாக இருக்கும் என்று சர்க்கார் கட்சித் தலைவர் கூறிய ஆலோசனைக்கு இணங்க, இந்தத் தீர்மானத்தை அடுத்த கூட்டத்திற்கு ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

IV.—ANNOUNCEMENTS—*cont.*

(2) BUSINESS OF THE HOUSE.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that the Business Advisory Committee has decided the following list of business on the 25th, 27th and 28th July 1964 :—

25th July 1964.—Consideration and passing of—

(1) The Madras Hackney Carriage (Amendment) Bill, 1964.

(2) The Madras Compulsory Labour (Amendment) Bill, 1964.

(3) The Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Bill, 1964.

(4) The Madras Maternity Benefit (Repeal) Bill, 1964.

(5) The Madras Cinemas (Regulations) Amendment Bill, 1964.

(6) The Madras Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964.

27th July 1964.—Consideration and passing of—

(1) The Madras Public Buildings (Licensing) Bill, 1964 (Bill to be introduced on 24th July 1964).

(2) The Madras Public Trusts (Regulations of Administration of Agricultural Lands Amendment) Bill, 1964.

(3) The Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964.

(4) The Madras Rinderpest (Amendment) Bill, 1964.

(5) The Madras General Sales Tax (Amendment) Bill, 1964.

28th July 1964.—Consideration and passing of—

(1) The Madras City Tenants Protection (Amendment) Bill, 1964.

(2) Any other Bills left over.

23rd July 1964]

VIII.—NON-OFFICIAL BUSINESS—RESOLUTIONS—*cont.*

(2) INCLUSION OF TAMIL AS ONE OF THE MEDIA FOR U.P.S.C. EXAMINATIONS.

SRI M. KALYANASUNDARAM : If the Resolution moved by Sri K. A. Mathialagan is to be adjourned, I request that my Resolution may be taken up.

MR. DEPUTY SPEAKER : If there is time, it will be taken up.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That the discussion on the Resolution moved by Sri K. A. Mathialagan be adjourned and taken up at the next non-official day of the meeting of the Legislative Assembly."

The motion was put and carried.

SRI M. KALYANASUNDARAM : Rose—

THE HON. SRI R. VENKATARAMAN : It is now time.

SRI M. KALYANASUNDARAM : I agreed with the Leader of the House on several occasions. I request that I may be permitted to move the resolution standing in my name.

THE HON. SRI R. VENKATARAMAN : I am willing to accommodate. Technically the time is over. Particularly non-official business must be finished within the time allotted. However, I have no objection.

(3) APPOINTMENT OF A COMMITTEE TO ENQUIRE INTO THE WORKING OF THE STATE TRANSPORT SYSTEM.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

" That this House recommends to the Government that a Committee of enquiry be appointed to enquire and report on the working of the State Transport System with a view to secure—

(*a*) reduction in fare in the City Service;

(*b*) improvement in the efficiency of service;

(*c*) economy in working expenditure; and

(*d*) prevention of wasteful expenditure and other avoidable wastages in the use of spare parts, tyres, etc."

SRI SAW. GANESAN : I second the Resolution, Sir. 1-30 p.m.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

IX.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and other papers.

* 193. *The Madras Maternity Benefit (Amendment) Bill*, 1964 (*L.A. Bill No.* 22 *of* 1964).

* 194. *The Madras Cinemas (Regulation) Amendment Bill*, 1964 (*L.A. Bill No.* 20 *of* 1964).

* 195. *Annexure to the Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill*, 1964.

* Sent to Members on 21st July 1964.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 24th July 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Food Ministers' Conference

* 6. S.N. *Q*.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to state the details of the conclusions reached at the Conference of the Food Ministers of South Zone held recently at Madras in the presence of the Union Food Minister?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார்: சென்னையில் அண்மையில் நடைபெற்ற தென் மாநில உணவு அமைச்சர்கள் மாநாட்டில் தென் அரிசி மண்டலத்தைச் சேர்ந்த எல்லா மாநிலங்களிலும் அரிசியின் மொத்த விலைகளையும், சில்லறை விலைகளையும் நிர்ணயிக்க வேண்டும் என்றும், இந்த விலைகள் இவ்வாண்டு இறுதி வரையில் அமுலில் இருக்க வேண்டுமென்றும், இதற்கென மாநில அரசாங்கங்கள் இந்திய அரசாங்கத்திற்குத் தங்கள் திட்டங்களை அனுப்பவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அவ்வண்ணமே இந்த அரசாங்கமும் இது சம்பந்தமாய்த் தனது திட்டங்களை இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பிவிட்டது.

Chief Ministers' Conference on stabilisation of prices

* 7. S.N. *Q*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the conclusions arrived at the recent conference of the Chief Ministers regarding the steps to stabilise prices in so far as they relate to this State; and

(*b*) the steps proposed to be taken in the direction of implementing the same?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) The Conference of Chief Ministers discussed ways and means of controlling the prices of foodgrains both from the short term and long term angles.

Short term.—The Conference examined the need for uniformity in the licensing regulations, the desirability of removing all informal restrictions on the movement of grains between the States within a Zone or within a State; the advisability of fixing maximum prices at wholesale and retail levels on the basis of a fair and remunerative price for the producer and increasing the number of fair price shops to hold the price line.

[24th July 1964

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் கேள்வியின் பரீ ஆம்பிள் அவர்களது சொந்த அபிப்பிராயம். இரண்டாவது பகுதி பற்றி, விலை நிர்ணயம் செய்ய ஒரு கமிஷன் போடப் போகிறோம் என்று முன்பே சொன்னேன்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: கனம் அமைச்சர் சொன்னார்கள், விலை கொஞ்சம் ஏறுமுகமாக இருக்கிறது என்று. தஞ்சை ஜில்லாவில் அதிகமான உற்பத்தி இருந்தும் அங்கிருந்து அரிசி வெளியே போய் விடுவதால் இந்த விலைக் கட்டுப்பாட்டினால் அங்கேயே அரிசி கிடைக்காமல் போய் விடும் நிலை ஏற்படக்கூடும், விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, சீசன் டயத்தில் அதாவது குருவை, சம்பா மகசூல் காலத்திலே இந்த விலைக் கட்டுப்பாட்டைக் கொண்டு வர அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: விலைக் கட்டுபாடு, அதாவது விலை நிர்ணயம் எப்படிச் செய்வது என்பது பற்றி முடிவு எடுக்கவில்லை. அதிலே இரண்டு அபிப்பிராயங்கள் இருக்கின்றன. ஒன்று இப்பொழுது விலை நிர்ணயம் செய்தால் இன்றைக்கு இருப்பதற்கு மேல் போகாமல் தடுக்க முடியும் என்பது. மற்றென்று மகசூலின் போது நிர்ணயம் செய்தால் ஓரளவு குறைந்த விலைக்கு நிர்ணயம் செய்ய முடியும் என்பது. அதைப் பற்றி மத்திய சர்க்கார் முடிவு எடுப்பார்கள்.

திரு. ஆ. துரையரசன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 'ஜூலை பத்தாந் தேதிக்குப் பிறகு விலை ஏற்றம்' என்று சொன்னார்கள். ஏழைகள், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் கட்டாயக் கொள்முதல் நேரத்தில் களத்து மேட்டிலேயே சர்க்காருக்கு நெல்லைக் கொடுத்து விட்டார்கள். ஆனால், பெரு நிலச்சுவாந்தார்கள் நெல் விற்கிற நேரத்தில் விலை ஏறியிருக்கிறது என்று அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து தெரிகிறது. எனவே, விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதுதான் இப்பொழுது குறுகிய காலத்திலே விலை நிர்ணயம் செய்யலாமா என்று மத்திய சர்க்கார் ஆலோசனை செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, தானியத்தின் மீது கடன் கொடுக்கிற நேரத்திலே, எவ்வளவு தானியத்தை ஈடு காட்டுகிறார்களோ, அந்த அளவுக்கு நிலம் இருக்கிறதா என்பதைப் பார்க்காமல் கொடுக்கிற காரணத்தால் தான் பணம் படைத்தவர்கள் பெருவாரியான மூட்டைகளை முடக்கி வைத்து விடுகிறார்கள். அது விலை ஏற்றத்திற்குக் காரணமாக இருக்கிறது என்பதை அரசாங்கம் உணர்ந்து, அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கின்ற கேள்வி எனக்குப் புரியவில்லை. 'நிலமில்லாதவர்கள் வியாபாரம் செய்யக்கூடாது' என்று சொல்கிறாரா? அல்லது 'நிலமில்லாதவர்களுக்கு, வியாபாரம் செய்வதாக இருந்தால், பாங்கிலிருந்து கடன் கொடுக்கக்கூடாது' என்று சொல்

24th July 1964]

கிறாரா? இன்றைக்கிருக்கும் நிலைமையில் ரிசர்வ் பாங்க் ஒரு விதி விதித்திருக்கிறது. நெல் போன்ற உணவுத் தானியங்களின்மீது கடன் கொடுக்கும்போது, குறிப்பிட்ட சத வீதம் தான் அதன் மேல் கடன் கொடுக்க வேண்டும் என்கின்ற விதி இருக்கிறது. அதன் மூலமாக நெல் வியாபாரத்தில் விலை ஏறாமல் பார்த்துக்கொள்வதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். சுப்பிரமணியம்: இப்பொழுது மாக்சிமம் ப்ரைஸ், டீலர்ஸ் லெவலில் ஃபிக்ஸ் பண்ணுகிற விஷயம் யோசனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 'பர்ச்செஸிங் காஸ்ட் ஃப்ரம் அக்ரிகல்சரிஸ்ட்ஸ்' எவ்வளவு என்பதை அனுசரித்து விலை நிர்ணயிக்கப்படுமா? மார்ஜின் எவ்வளவு கொடுக்கப்படும்? விவசாயிகளுக்குத் தொந்தரவு இல்லாமல் பார்த்துக்கொள்ளப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஆரம்பத்திலேயே சொன்னேன். ஷார்ட் டர்ம் என்பது ஒன்று; லாங் டர்ம் என்பது ஒன்று. நமக்கு லாங் டர்ம் ப்ரைஸ் ஃபிக்ஸ் பண்ணுவதற்கு கூடுமானால் நிபுணர் கமிஷன் போட்டு, அந்தக் கமிஷன் மூலமாக உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு விலை நிர்ணயம் செய்யப்படும். விவசாயிகளுக்கு நியாயமான உற்பத்திச் செலவு எவ்வளவு ஆகிறது என்பதைக் கணக்குப் போட்டு செய்வார்கள். ஷார்ட் டர்ம் என்பது குறுகிய காலத்தில் விலை நிர்ணயம் எந்த அளவுக்குச் செய்தால் மேற்கொண்டு விலை ஏறாமல் இருக்கும் என்பதைப் பார்த்து அதைச் செய்வார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நியாய விலைக் கடைகளும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. சர்க்கார்க் கொள்முதலும் கைவிடப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கிறபோது, இன்னும் அதிக உணவுத் தானியம் வியாபாரத்திற்கு வெளியே ஜனங்களுக்கு வர வேண்டும். அப்படியிருக்க ஏன் விலை ஏறுகிறது? அதனுடைய காரணம் என்ன என்று ஆராயப்பட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நமக்கு எந்த எந்த இடங்களிலே தேவைப்படுகிறதோ, அந்த இடத்திற்கெல்லாம் உணவுத் தானியம் கொடுப்பதாக மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, வெளி நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கும் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எங்காவது விலை அதிகமாகப் போனால், அதைச் சமனப்படுத்துவதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து நாம் கேட்டு வாங்குவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

திரு. ர. ஜீவரத்னம்: கனம் தலைவர் அவர்களே, வடாற்காடு ஜில்லாவிலிருந்து ஏராளமான நெல், அரிசி கேரளாவிற்குச் செல்கின்றது. அதன் காரணமாகத்தான் சமீபத்தில் நெல் விலை எங்கள் ஜில்லாவில் ஏறியிருக்கிறது. அதைத் தடுக்க அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதைத் தடுக்கக்கூடாது என்பதுதான் கொள்கை. தென் பிராந்தியத்தில் இருக்கும் சோனில் 'ஃப்ரீ'யாக உணவுத் தானியத்தை ஒரு ராஜ்யத்திலிருந்து மற்றொரு ராஜ்யத்திற்குக் கொண்டு போக வேண்டும்.

[24th July 1964

அவ்வாறு கொண்டுபோவதன் மூலமாகத்தான் விலையை ஓரளவு நாம் கட்டுப்படுத்த முடியும் என்பது சர்க்காருடைய கொள்கை.

திரு. கே. ஏ. மதியழகன்: விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு உணவுத் தானியங்களின் மீது இருக்கும் விற்பனை வரியை ரத்து செய்வதற்கு இந்த சர்க்கார் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பட்ஜெட் விவாதத்தின் போது இதைப் பேசலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அமைச்சர் அவர்கள் கூறுகிற போது, ரிசர்வ் பாங்க் உணவுத் தானியங்களின் மீது கொடுக்கும் அட்வான்சை ஓரளவு நிர்ணயித்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது உண்மையே. ஆனால், உணவுத் தானியத்தை அதிக விலைக்கு விற்கவேண்டுமென்ற நோக்கத்துடன் பதுக்கி வைக்கக்கூடிய வியாபாரிகள் இருக்கிறார்கள். பாங்க் கடன்கள் கொடுப்பது மட்டும் அல்ல, கள்ளப் பணமும் நிறை இருக்கிறது சமுதாயத்திலே என்பதும் அமைச்சர் அவர்களும் அறிந்ததே. ஆகவே, விலையை உயர்த்த வேண்டும் என்று பதுக்கி வைத்திருக்கும் தானியங்களைக் கடைக்குக் கொண்டுவர என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்காகத்தான் இப்பொழுது சிவில் சப்ளைஸ் டைரக்டரேட் ஏற்படுத்தி, வியாபாரிகள் எவ்வளவு நெல் வாங்கினார்கள், யாரிடத்திலிருந்து வாங்கினார்கள், எங்கே சேமித்து வைத்திருக்கிறார்கள், யாருக்கு விற்றார்கள் என்றெல்லாம் கணக்கு விவரங்கள் கொடுக்க வேண்டுமென்ற நிலைமையை ஏற்படுத்தப்போகிறோம். அதன் மூலமாக, பதுக்கி வைத்திருப்பதை நாம் ஓரளவு தடுக்க முடியும் என்று நினைக்கின்றோம்.

திரு. கரு. சீமைச்சாமி: அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது, விலைவாசிகளை நிர்ணயம் செய்யக் கமிஷன் ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்தக் கமிஷன் ஜில்லாவாரியாகச் சுற்றுப் பிரயாணம் செய்து விவசாயிகளைக் கண்டு, என்ன செலவு ஆகிறது என்பதை அறிந்து விலையை நிர்ணயம் செய்வார்களா? அல்லது, ஜில்லா விவசாய அதிகாரியைக் கேட்டு, அதற்கு வேண்டிய தகவலைச் சேகரிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது மத்திய சர்க்காரால் நியமிக்கப்படுகிற கமிஷன். அது நிபுணர்கள் அடங்கிய கமிஷன். அவர்கள் யாரை விசாரித்தால் நன்மை இருக்கும் என்று நினைக்கிறார்களோ, அவர்களை விசாரிப்பார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர்: முன்பு யுத்த காலத்தில் ஜி.எம்.எஃப். திட்டங்களை எடுத்துக்கொண்டதன் காரணமாக அதிகத் தானியங்கள் விளைந்து, அதன் காரணமாக விலை குறைந்தது. அம்மாதிரி சர்க்கார் ஜி.எம்.எஃப் திட்டத்தைப் புகுத்தி, அதன் மூலமாக நிலங்களிலிருந்து ஏராளமான விளைச்சலைப் பெருக்குவதன் மூலமாக விலை குறையுமே. அந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படுவது பற்றி அரசாங்கம் பரிசீலனைச் செய்யுமா?

24th July 1964]

THE HON. SRI R. VENKATARAMAN: It is a suggestion for action.

திரு. சி. பொன்னுசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, உணவுத் தானியங்களை வாங்கி விற்கும் வியாபாரிகள் பத்து தினங்களுக்கு மேல் தானியங்களை வைத்திருக்கக்கூடாது, விற்றுக் கொண்டே இருக்கவேண்டும் என்று சட்டம் போட்டால், அடிக்கடி சரக்குகள் கிடைப்பதால் விலை குறையும் என்று நினைக்கிறேன். அப்படிச் செய்ய உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினருக்கு இது சம்பந்தமாக என்ன என்ன ஆலோசனை இருக்கிறதோ, அவற்றையெல்லாம் எழுதியனுப்பலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: உணவுத் தானிய உற்பத்தியிலே நமது மாநிலம் சுயதேவையைப் பூர்த்தி செய்துக்கொண்டு, ஓரளவுக்கு சர்ப்ளஸ்சாக மாறியிருக்கிறதா? அப்படியென்றால், ஏன் பற்றாக்குறைக் கூச்சல் எழுந்திருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நமது ராஜ்யத்தை இன்றைக்கு 'மார்ஜினலி சர்ப்ளஸ்' என்று சொல்ல முடியும். அதாவது, நமது தேவைக்கு ஓரளவு சற்று அதிகமாக இருக்கும். மூன்று லட்சம் டன் நம்முடைய ராஜ்யத்திலிருந்து நாம் கேரளத்திற்கு அனுப்புகிறோம். இரண்டு லட்சம் டன் தான் ஆந்திரத்திலிருந்து நாம் நம்முடைய ராஜ்யத்திற்குக் கொண்டுவந்துகொண்டிருக்கிறோம். அதனால்தான் 'மார்ஜினலி சர்ப்பளஸ்' என்று சொன்னேன். தென் பிராந்தியம் முழுவதையும் எடுத்துக்கொண்டால், ஒரு ராஜ்யம் சர்ப்ளஸ்சாக இருந்து இன்றைக்கு பிரயோஜனம் இல்லை. தென் பிராந்தியம் பூராவையும் எடுத்துக்கொண்டு, ஆந்திரத்தில் எவ்வளவு விளைச்சல், தமிழ்நாட்டில் எவ்வளவு விளைச்சல், மைசூரில் எவ்வளவு விளைச்சல், கேரளத்தில் எவ்வளவு விளைச்சல் என்று கணக்குப் பார்த்து நிபுணர்கள் நிர்ணயிக்கிறார்கள். தென் பிராந்தியம் 'செல்ப்சபிஷியண்ட்' ஆக இருக்க வேண்டும். நம் மாநிலம் எப்படி 'மார்ஜினல் சர்ப்ளஸ்'ஸாக இருக்கிறதோ, அதுபோல் மைசூர் 'மார்ஜினலி டெஃபிஸிட்' டாக இருக்கிறது. கேரளா எப்படி 'டெபிஸிட்'டாக இருக்கிறதோ அதுபோல், ஆந்திரா சர்ப்ளஸ்ஸாக இருக்கிறது. அதனால் பிராந்தியத்திலே செல்ப்-ஸஃபியன்ஸி இருக்கும் என்று நினைக்கிறோம்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, பொதுவாக விலைவாசிகள் குறித்தும், குறிப்பாக உணவுப் பண்டங்களின் விலைவாசி உயர்வைக் குறித்தும், நிலைமைகளை எடுத்துச் சொல்வதற்குச் சட்டமன்ற உறுப்பினர்களிலே சிலரும், அவற்றைக் கேட்டறிந்து வழிவகை கூறும் அளவுக்குப் பொருளாதார நிபுணர்கள் சிலரும், அவற்றின்மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்கான வழிவகை கூறுவதற்கு அரசாங்க அதிகாரிகள் சிலரும் அடங்கிய குழு ஒன்றை நியமிக்க அரசினருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இவையெல்லாம் பாலிசி மாட்டர்ஸ். உடனடியாகக் கேள்வி கேட்கின்றபோது, பதில் சொல்ல முடியாது. எந்த விதமான

[24th July 1964

ஆலோசனை இருக்குமானுலும், அதை அவர்கள் முதல் அமைச்சர் அவர்களுக்கு எழுதியனுப்பினுல், அவர்கள் பரிசிலனைச் செய்து முடிவு செய்வார்கள். இம்மாதிரி கேள்வி கேட்கின்றபோது, இப்பொழுதிருக்கும் நிலைமையில் 'இல்லை' என்று சொல்லும்படியான நிலைமை இருக்கிறது.

திரு. எம். தண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளில் நாம் மேற்கொண்ட முறை வாலண்டரி ப்ரொக்யூர்மென்ட்டு முறையாகும். சென்ற ஆண்டு கம்பல்சரி ப்ரொக்யூர்மென்ட் வைத்தும் தேவையான அளவு அரிசி நியாய விலையில் கிடைக்கவில்லை. ஆகவே, ஓராண்டுக்குத் தேவையான அரிசியை அறுவடைக் காலத்தில் டெண்டர் மூலம் அரசினர் வாங்குவது சரியான முறையாக இருக்க முடியும். அந்த முறையை மேற்கொள்ள அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதுவும் ஒரு யோசனை. இதை எழுதியனுப்பினுல் பரிசிலனைச் செய்யலாம்.

திரு. கே. ஏ. மதியழகன்: பதுக்கலுக்குக் காரணம் பெரும்பாலும் கள்ளப் பணம். அந்தக் கள்ளப் பணம் சாதாரணமாக வெளி வருவது இல்லை. கள்ளப் பணத்தைத் தடுப்பதை முக்கிய நடவடிக்கையாகக் கருதி, அதற்கு ஏதாவது விசேஷ நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : This is extraneous to the subject under discussion.

திரு. மு. பொ. வடிவேலு: பொதுத்துறை மூலம் நவீன ரைஸ் மில்ஸ் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அது கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதுபற்றி மத்திய சர்க்கார் பரிசீலனை செய்து ஒரு முடிவு கூறியிருக்கிருர்கள். கூட்டுறவுத் துறையிலும் ஆரம்பிக்க வேண்டுமென்பது தான் சர்க்கார் திட்டம்.

திரு. கரு. சீமைச்சாமி: அரிசிக்கு விலை நிர்ணயம் செய்கிறபோது விவசாயிகளுக்குத் தேவைப்படுகிற யூரியா, அமோனியம் சல்பேட், பாஸ்பேட் போன்றவற்றுக்கும் விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது நிபுணர் கமிஷன் நியமிக்கிருர்கள். அவர்களுக்கு இந்த ஆலோசனையைச் சொன்னுல் இது கவனிக்கப்படும். இப்போது அவ்வித ஆலோசனை இல்லை.

திரு. ஆ. துரையரசன் : விலையேற்றத்துக்குக் காரணமாக இருக்கிற (சமூகத்துரோகக் கும்பலை) பதுக்கல்காரர்களை ஒழித்துக் கட்டி தூக்குத் தண்டனை விதிக்கக் கூடிய அளவுக்குச் சட்டமியற்ற அரசாங்கம் முன் வருமா ?

24th July 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ஜனநாயக சர்க்கார். ரூல் ஆப் லா என்று சொல்வார்களே, அந்த மாதிரி நடக்கிறபோது இந்தத் தவறு செய்கிறவர்களுக்கு தூக்குத் தண்டனை கொடுக்க முடியாது. நாம் நினைக்கிறபடி தூக்குத் தண்டனை கொடுப்பது இல்லை.

புலவர் கா. கோவிந்தன்: வியாபாரத்தை ஊக்குவதற்கு வியாபாரிகளுக்குக் கடன் கொடுப்பது என்று பாங்குகள் செயல்பட்டு வரலாம். ஆனுல் பாங்குகள் இப்படிக் கடன் கொடுப்பதனுல் பலர் நிறைய வாங்கி முடக்குகிருர்கள். இப்படி நெல்லை முடக்கி விடுவதனுல் வரவு குறைய அதனுல்தான் இந்த விலையேற்றம் ஏற்படுகிறது என்பதை அரசாங்கம் உணர்கிருர்களா ? ஆகவே வியாபாரிகளுக்குப் பாங்குகள் கொடுக்கிற கடனை ஒரு வரையறை செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் ரிசர்வ் பாங்க் விதிகளின்படி இருக்கிறது. அவர்கள் ஓரளவுக்குத்தான் கடன் உதவி அளிக்கிருர்கள். ஆனுல் பரவலாக அபிப்பிராயம் பாங்க் கடன் கொடுப்பதனுல் முடக்குகிருர்கள் என்பது அல்ல. வேறு வகையான பணப் புழக்கத்தினுல்தான் முடக்கப்படுகிறது என்ற அபிப்பிராயம் இருக்கிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் அமைச்சர் அவர்கள் பேசும் போது, நமது மாநிலம் உணவு உற்பத்தியில் மார்ஜினலி சர்ப்பிளஸ் ஆக இருக்கிறது என்று சொன்னுர்கள். இந்த மாநிலத்திலேயே அறுவடை காலத்தில் மூட்டை 22 ரூபாயாக விற்றது, சித்திரை மாதத்தில் 32 ரூபாயாக விற்றிருக்கிறது என்ருல் ஒரு படி அரிசி ஒரு ரூபாயாக இருந்தது ஒரு ரூபாய் 84 பைசாவாக உயர்ந்திருக்கிறது என்ருல், இதை ஏன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் ? டிபென்ஸ் ஆப் இந்தியா ஆக்ட் படி பதுக்கல்காரர்களிடமுள்ள நெல் மூட்டைகளை ஏன் வெளியே கொண்டுவர நடவடிக்கை எடுக்கக்கூடாது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: டிபென்ஸ் ஆப் இந்தியா ஆக்டைப் பயன்படுத்த வேண்டுமென்பதும் ஓர் ஆலோசனைதான் அதையும் எழுதி அனுப்பினுல் பரிசீலனை செய்வார்கள்.

திரு. ர. ஜீவரத்னம் : நம்முடைய ராஜ்யத்திலிருந்து மைசூர் ராஜ்யத்திற்கு எத்தனை டன் அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று தெரிவிப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: என்னிடத்தில் புள்ளி விவரம் இல்லை. பொதுவாக மைசூருக்கு அதிகமாகப் போகவில்லை. கேரளாவிற்குத்தான் அதிகமாகப் போகிறது என்று தெரிகிறது.

திரு. எம். தண்டாயுதபாணி: நெல்லுக்கு குறைந்த விலை 18-60 காசாக நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது. அதிகபட்ச விலை நிர்ணயிக்கிறபோது விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய அளவுக்கு 20 ரூபாய் ஆகவாவது குறைந்த விலை நிர்ணயிக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

[24th July 1964

THE HON. SRI R. VENKATARAMAN : We cannot anticipate what the decision of the Government of India would be on this matter.

திரு. மீ. கலியாணசுந்தரம்: உணவு தானிய விலை ஏறுகிறது என்று சொல்கிறபோதெல்லாம் அரிசி விலையை மட்டும் நினைவில் வைக்கிற மாதிரி தெரிகிறது. விவசாயத் தொழிலாளர்களுக்கு மிகவும் அத்தியாவசியமாக இருக்கிற ராகி, சோளம்கூட விலை அதிகமாகத்தான் ஏறிக்கொண்டிருக்கிறது. அவற்றுக்கும் நியாய விலையை நிர்ணயிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது அரிசி விலை நிர்ணயம் செய்வதைப்பற்றித்தான் ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது. மற்ற தானியங்களை உபயோகிப்போர் எண்ணிக்கை குறைவாகிக் கொண்டிருப்பதனால் அவற்றின் விலையை நிர்ணயிக்கும் பிரச்சினை எடுத்துக் கொள்ளப்படவில்லை. அவர்களுக்கு இதையும் எழுதி அனுப்பினால் பரிசிலனைச் செய்யலாம்.

திரு. எஸ். முருகையன்: தனி நபர்கள் ரைஸ் மில் வைப்பதற்காக பெரிய பெரிய கட்டிடங்களை எல்லாம் கட்டி லைசன்சுக்கு அனுமதி கோரியிருக்கிறவர்களுடைய நிலையை தனியாக பரிசீலனைச் செய்வார்களா?

(பதில் இல்லை.)

தேக்கு பயிரிடுதல்

* 671 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காவிரி நதியின் கரையில் தேக்கு மரங்கள் பயிரிடும் திட்டம் எந்த எந்த இடங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது?

(இ) இதுவரை ஏற்பட்டுள்ள அபிவிருத்தி என்ன?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) தேக்கு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், பெண்ணாறு, வெட்டாறு, அகண்ட காவிரி, வடலாறு, ஓடம்போக்கியாறு, சோழ கண்ட மணியாறு; பாண்டவையாறு; காவிரி; குடமுருட்டி; முடிக்கொண்டான்; திருமலை ராஜன் அரசலாறு, கொள்ளிடம், புதிய-பழைய கட்டளை மேல்மட்ட வாய்க்கால்கள் (திருச்சி மாவட்டம்), கல்லணைக் கால் வாய், கலியாண் ஓடை, வீரசோழாறு, ராஜாமடம் வாய்க்கால், மண்ணையாறு, பாமனியாறு, கோரையாறு ஆகியவற்றின் கரை நெடுக தேக்கு மரங்கள் நடப்பட்டுள்ளன.

(இ) இதுவரை 6,424 எக்கரில் தேக்கு மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

திரு. ஆ. கு. சுப்பையா : கோரையாறு, பாமனியாறு ஆகியவற்றின் படுகைகளைத் தனி நபர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு விவசாயம் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை வெளியேற்றி விட்டு தேக்கு பயிரிட அரசாங்கம் முன் வருமா?

24th July 1964]

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அந்த ஆற்றோரங்களில் இருக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களில் தேக்கு மரங்கள் நடும் திட்டம் வகுத்து இருக்கிறோம். அந்த மாதிரி தான் செய்து வருகிறார்கள். யாராவது ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்று தெரிந்து அந்தத் தகவலைக் குறிப்பிட்டால் அதன் பேரில் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

சுவாமிகுளம் ஏரி அபிவிருத்தி

* 672 **கேள்வி.—திரு. எல். ஆனந்தன் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு ஜில்லா, கள்ளக்குறிச்சி தாலுக்கா, கடத்தூர் எல்லையில் உள்ள சுவாமிகுளம் ஏரியை விஸ்தரிப்பு செய்யும் வேலை எந்த நிலையில் உள்ளது?

கனம் திரு. வெ. ராமையா : தென்னாற்காடு ஜில்லா கள்ளக்குறிச்சி தாலுக்கா கடத்தூரில் உள்ள சுவாமி குளம் ஏரியை விஸ்தரிப்பு செய்யும் திட்டம் ஒன்றும் இல்லை.

Installation of pumpsets

* 673 *Q.*—SRI A. ARUMUGAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware that ryots particularly in Chengam taluk of North Arcot district as a whole are put to considerable difficulties on account of the insistence by the officials of the Electricity Board that Tahsildars should sign certificates of ownership for obtaining permission for installation of pumpsets; and

(*b*) if so, whether the Government will consider the desirability of issuing orders to Electricity Board not to insist on such certificates, for grant of permission for installing Electric pumpsets?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) : The matter has been reported to the Government. After careful consideration, the Government have come to the conclusion that it is necessary to insist on the countersignature of the ownership certificates by the Deputy Tahsildar or Tahsildar, so that ownership of fields to be irrigated may be accurate and authoritative. Instructions have accordingly been issued to the District Collectors through the Board of Revenue.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, will it not be sufficient if they produce an extract from the 'Adangal' or a chitta from the Village Officers to that effect?

THE HON. SRI R. VENKATARAMAN : It has been found by experience that lot of litigation arises when we go to enforce payments due to the Electricity Board. Then the question arises

[24th July 1964

that the land does not belong to the person or he has no interest in it and so on. Therefore, it is necessary in the interest of the Electricity Board, in order to protect its revenue that even at the beginning ownership certificate is insisted.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்த ஓனர்ஷிப் சர்டிபிகேட் பெறுவதற்கு தாசில்தாருக்கு விண்ணப்பம் செய்துக் கொண்டால் அவர் ஆர். ஐ.க்கு அனுப்பி கிராம கர்ணத்திற்கு அனுப்பி கிராம கர்ணம் அடங்கல் சிட்டா ஆகியவற்றைப் பார்த்து ஓனர்ஷிப் சர்டிபிகேட் அளிக்க மிகுந்த காலதாமதம் ஆகிறது. ஆகவே ஓனர்ஷிப் சர்டிபிகேட் வேண்டும் என்று தாசில்தாரிடத்தில் கோரினால் இத்தனை நாட்களுக்குள் அந்த சர்டிபிகேட் கொடுக்கப்படவேண்டும் என்ற உத்தரவை கண்டிப்பாக அரசாங்கம் அவர்களுக்கு போட்டு அனுப்புவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தாசில்தார் தனக்குக் கீழ் இருக்கிற சிப்பந்திகளைக் கலந்து கொள்ளாமல் இந்த உத்தரவைப் போட முடியாது. காரணம் அவருக்கே இந்த நிலம் யாருடையது என்று தெரியாது. மின்சார கனெக்ஷன் வேண்டும் என்று மின்சார போர்டுக்கு விண்ணப்பித்துக் கொள்ளும்போதே ஓனர்ஷிப் சர்டிபிகேட்டுக்கும் அப்ளை செய்து விட்டால் மின்சாரம் 6 மாதத்திற்குள் வரும் என்றால் அதற்குள் இந்த சர்டிபிகேட்டும் வந்து விடும்.

திரு. மு. பொ. வடிவேலு : தாசில்தாரிடம் இருந்து ஓனர்ஷிப் சர்டிபிகேட் பெற வேண்டும் என்பதற்குப் பதிலாக பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களே இந்த சர்டிபிகேட்டுகளைத் தந்தால் போதும் என்று ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது பரிசீலனைச் செய்யப்படவில்லை. எழுதி அனுப்பினால் அதைப் பரிசீலனைச் செய்து பார்த்துச் சொல்ல முடியும்.

திரு. பெ. ராஜகோபால் : தலைவர் அவர்களே, ஓனர்ஷிப் சர்டிபிகேட் பெற வேண்டும் என்று மின்சார இலாகாவினர் முதலில் உத்தரவு பிறப்பித்தார்கள். விவசாயிகள் தாசில்தாரிடத்தில் சென்று கேட்டபோது அத்தகைய சர்டிபிகேட் ஒன்றும் கொடுக்கும்படி ரெவின்யூ போர்டிலிருந்து எங்களுக்கு உத்தரவு வரவில்லை, ஆகவே நாங்கள் கொடுக்க மாட்டோம் என்று மறுத்து விட்டார்கள். அப்புறம் இந்தப் பிரச்சினை இந்த சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டது. அதன் பிறகுதான் தாசில்தார்கள் அந்த சர்டிபிகேட்டை கொடுத்து வருகிறார்கள். மின்சார இலாகாவினர் இப்படி திடீர் என்று உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னால் அரசாங்கத்தைக் கலந்து இனி பிறப்பிக்க வேண்டும் என்று மின்சார போர்டுக்கு அரசாங்கம் தாக்கீது அனுப்புமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : போர்ட் ஆப் ரெவின்யூ விலிருந்து தாசில்தார்களுக்கு உத்தரவு போயிருக்கிறது. இப்போது எந்த இடத்திலும் எந்தவிதமான தகராறும் இல்லை என்று நினைக்கிறேன். ஏதாவது இருந்தால் எழுதி அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

24th July 1964]

புலவர் கா. கோவிந்தன் : மின்சாரக் கழகத்திற்கு மின்சாரத் திற்காக விண்ணப்பம் போட்டால் கிடைக்க ஆறு மாத காலம் ஆகும்; அதற்குள் ஓனர்ஷிப் சர்டிபிகேட் வாங்கிவிடலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த விண்ணப்பம் பாரமே ஓனர்ஷிப் சர்டிபிகேட் கொடுத்தால்தான் கொடுப்போம் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அப்ளிகேஷன் போட்ட பிறகு ஆறு மாதம் ஆகும் என்று சொன்னேன். அவ்வளவு சீக்கிரத்தில் மின்சாரம் கிடைத்து விட்டது என்று யாரும் பட்ஜட் விவாதத்தில் சொல்லவில்லை. ஓனர்ஷிப் சர்டிபிகேட் கிடைக்காதால் மின்சாரம் கொடுப்பது தாமதப்படுகிறது என்று சொல்வது சரியல்ல. ஓனர்ஷிப் சர்டிபிகேட் கொடுத்தாலும் ஆறு மாத காலம் ஆகும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: ஓனர்ஷிப் சர்டிபிகேட் வாங்கப் போகும்போது பிரைஸ் பாண்ட் கட்டாயம் வாங்க வேண்டுமென்று தாசில்தார்கள் வற்புறுத்துவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவ்வாறு யார் சொன்னார்கள் என்று கனம் அங்கத்தினர் அவர்களை எழுதி அனுப்பும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர் : ஓனர்ஷிப் சர்டிபிகேட் வழங்குவதில் மிகவும் காலதாமதம் ஏற்படுவதோடு கரப்ஷனும் இருக்கிறது. அதன் காரணமாக மின்சார இலாகா விண்ணப்ப பாரம் போடும்போது அதிலேயே ஒரு 'கால'த்தைப் போட்டு அவர்களே நேரடியாக தாசில்தாரிடம் இருந்து அந்த சர்டிபிகேட்டை வாங்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தால், விவசாயிகளுக்குச் சிரமம் குறையும் என்பதை அரசாங்கம் உணருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மின்சார இலாகா ஒரு ஆடானமஸ் போர்டு. அவர்களுடைய விதிகளையெல்லாம் போர்டில் கலந்து போடவேண்டும். கனம் அங்கத்தினர் அவர்களிடம் ஏதேனும் ஆலோசனை இருக்குமானால் அதனை போர்டு சேர்மனுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். முருகையன் : தகுந்த சிப்பந்திகள் இல்லாத காரணத்தால் ஓனர்ஷிப் சர்டிபிகேட் கொடுக்க தாமதமாகிறது என்று தாசில்தார்கள் சொல்கிறார்கள். எங்கெங்கு அதிகப்படியான மனுக்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் விசேஷ சிப்பந்திகளை நியமித்து இந்தக் குறையை நிர்த்திக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த விதமாக எந்த இடத்திலும் தாமதம் ஏற்படுகிறது, அதிகமான அப்ளிகேஷன் இருக்கிறது என்று எழுதி அனுப்பினால் பரிசீலனைச் செய்யலாம்.

[24th July 1964

மின்சாரம் வழங்குதல்

* 674 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிராமங்களுக்கு குறைந்தது 75 குதிரை ஓட்டம் மின்சாரம் செலவானால்தான் மின்சார விஸ்தரிப்பு கொடுக்கப்படும் என்ற விதி இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அத்தகைய வரையறை எதுவுமில்லை. மின்சார விஸ்தரிப்பு கொடுப்பதற்காகும் செலவில் குறைந்த அளவு 10 சத வீத வருவாயாகிலும் கிடைக்க வேண்டுமென்கிற நிபந்தனை ஒன்றையே கவனித்து மின்சார விஸ்தரிப்பு கொடுக்கப்படுகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : விலியனூரில் பூத்துறை கிராமத்திற்கு மின்சாரம் விஸ்தரிப்புக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் 75 குதிரை ஓட்டம் செலவு இருக்க வேண்டும்; அப்போதுதான் கொடுக்க முடியும் என்று ஏ.இ. சொல்லி மறுத்து விட்டார்கள். அவ்வாறு 75 குதிரை ஓட்டத்திற்குக் குறைந்து ஒரு கிராமத்திற்கு அந்நிலை இருந்தால் மின்சாரம் கொடுக்கக்கூடாது என்று ஏதேனும் விதி இருந்தால், அதைத் தளர்த்த சர்க்காருக்கு அபிப்பிராயம் இருக்கிறதா? அதிகாரிகளுக்கு அந்த முறையில் அறிக்கை விடுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சர்க்காரிலே இருப்பவர்கள் விதிகளைப் பிறப்பிப்பார்கள். அவை எல்லாம் நூற்றுக்கு நூறு அமலாகிக் கொண்டிருக்கிறது என்று சொல்ல முடியாது. அந்த மாதிரி உலகில் எந்த நாட்டிலும் கிடையாது. ஒரு இடத்தில் சரியாக இண்டர்ப்ரடேஷன் செய்யவில்லை, தவறாகப் புரிந்து கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள் என்றால் அதைப் பற்றித் தனியாக எழுதி அனுப்பினால் பரிசீலனை செய்ய முடியும்.

* 675 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

திண்டிவனம் வட்டம், மரக்காணம் யூனியன், வானூர் யூனியன் பகுதிகளுக்கு 1964-65-ல் மின்சார விஸ்தரிப்பு செய்யும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏற்கெனவே மின்சார வசதி பெற்றுள்ள கிராமங்களுடன், தமிழ்நாடு மின்சார போர்டு 1964-65-ம் ஆண்டில் மரக்காணம் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் 31 கிராமங்களிலும், வானூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் 18 கிராமங்களிலும் மின்சார விஸ்தரிப்பு செய்யத் திட்டமிட்டுள்ளது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : மின்சார விஸ்தரிப்புச் செய்யத் திட்டமிட்டு பொம்மையபாளையத்தில் சாமான்களை எல்லாம் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். திடீரென்று அந்தச் சாமான்

24th July 1964]

களை வாரிக்கொண்டு விலியனூருக்குப் போய் விட்டார்கள். அதைப் பற்றிக் கேட்டால், 'வேண்டாம்' என்று உத்தரவு வந்து விட்டது என்று சொல்கிறார்கள். அவ்வாறு அதிகாரிகள் சொல்வது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விவரம் எனக்குத் தெரியாது. நாங்கள் போட்டிருக்கின்ற ஸ்கீம் பிரகாரம் 1964-65-ம் ஆண்டில் மரக்காணம் பஞ்சாயத்து யூனியனில் 31 கிராமங்களுக்கும், வானூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் 18 கிராமங்களுக்கும் மின்சார விஸ்தரிப்புக் கொடுக்கத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

பொதுப்பணித்துறை பணியாட்கள்

* 676 கேள்வி.—திரு. ஆ. துரையரசன் : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பொதுப் பணித் துறையில் பணிபுரிகின்ற (work charged) மேஸ்திரிகள், தலைமை கூலிகள் தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்பவர்களை நிரந்தரமாக வேலைக்கு அமர்த்தாதது ஏன்?

(இ) அவர்களின் வேலையை நிரந்தரம் செய்யும் உத்தேசமுண்டா?

THE HON. SRI V. RAMAIAH : The Workcharged Establishment of Public Works Department was first provincialised in February 1951. After the formation of the Andhra State and Re-organisation of the States, the strength of the provincialised Workcharged Establishment was fixed at 1830 permanent and 415 temporary in 1958. Further to that, 150 permanent posts have been provincialised along with 111 temporary posts. Workcharged personnel are taken over to the Workcharged Establishment as and when vacancies arise in the posts mentioned above.

திரு. ஆ. துரையரசன்: மேற்படி சங்கப் பிரதிநிதிகள் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை மார்ச் திங்களில் சந்தித்து ஏதாவது விண்ணப்பம் தந்தார்களா? அப்படியானால் அவர்களுடைய கோரிக்கைகள் யாவை? அவற்றை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா: அந்த விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன்: நெடுஞ்சாலைகளில் காங்கு கூலிகள் என்பவர்கள் 20, 30 ஆண்டு காலமாகப் பணி புரிந்து வந்தும் அவர்களுக்கு வேலை காயம் செய்யப்படாமல் இருக்கிறது. அவர்களுடைய வேலையைக் காயப்படுத்தவும், சம்பள உயர்வு கொடுக்கவும் அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. வெ. ராமையா: தனிக் கேள்வி வேண்டும்

[24th July 1964

திரு. ஜே. மாதா கவுடர்: தனியார் துறையிலே நடத்துகிற தொழிற்சாலையிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களை ஆறு மாதம் தொடர்ச்சியாக வேலை செய்து விட்டால் பர்மனெண்ட் செய்து விடவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கும்போது பொதுப் பணித் துறையில் இருப்பவர்களை நிரந்தரமாக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

(பதில் இல்லை.)

Mr. SPEAKER : Questions 677, 678, 679, 699 and 700 are postponed at the request of the Hon. Minister for Health.

தொழில் அபிவிருத்திக் கார்ப்பரேஷன்

* 680 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேசிய தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷனைப் போல் மாநில தொழில் அபிவிருத்திக் கார்ப்பரேஷன் ஏற்படுத்துவதற்கான திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில் அந்தத் திட்டம் எப்போது நடைமுறைக்கு வரும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் (அ) & (இ): அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல் சென்னை மாநிலத்தில் தொழில் அபிவிருத்திக் கார்ப்பரேஷன் 1964-65-ம் ஆண்டில் ஏற்படுத்தப்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத்தலைவர் அவர்களே, தொழில் அபிவிருத்தியைப் பொறுத்தவரை மாவட்டங்களில் ஆங்காங்கு அபிவிருத்தி செய்வதற்கான வகையில் இரண்டொரு மாவட்டங்களில் தொழில் அதிபர்களைக் கூட்டி பேசியதாக அறிகிறேன். அதனால் பலன் ஏற்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒவ்வொரு ஜில்லாவிலும் இண்டஸ்ட்ரியல் செமினார் நடத்துவதாக உத்தேசித்திருக்கிறோம். ஒரு இண்டஸ்ட்ரியல் செமினார் நடத்த வேண்டுமென்று சொன்னால் பூர்வாங்கமாக இரண்டு, மூன்று மாதங்களுக்கு வேலை இருக்கிறது. ஒரு ஜில்லாவில் கனிப்பொருள்கள் என்னென்ன இருக்கின்றன, இருக்கின்ற தொழிலில் என்ன தொழிலை விஸ்தரிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையெல்லாம் பார்த்து முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. அவ்வாறு நடத்திய செமினாரில் இராமநாதபுரத்தில் நடத்தியதில் கொஞ்சம் பயன் ஏற்பட்டிருக்கிறது. காரைக்குடியில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுக்கு யாராவது ஆள் வருவார்களா என்று யோசித்ததுபோக, இப்போது ஏழெட்டு பேருக்கு இடம் இல்லையென்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் ஜில்லாவில் சால்ட் உற்பத்தி செய்து அதன் மூலமாக சில தொழில்களைச் செய்ய ஒரு கார்ப்பரேஷன் அமைத்திருக்கிறார்கள். கம்பெனி உருவாக்குவதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். இது பயனுள்ளதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

24th July 1964]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : மாவட்டங்கள் தோறும் ஏற்படுத்தப்படுகிற இந்த ஆராய்ச்சி எப்போது முடியும் என்று அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முடிப்பதாக உத்தேசமில்லை. தொடர்ந்து நடத்திக் கொண்டு இருக்க வேண்டும் என்பதுதான் அபிப்பிராயம்.

கண்காணிப்பு இல்லங்கள்

* 681 **கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1961-62, 1962-63-ம் ஆண்டுகளில் முறையே கண்காணிப்பு இல்லங்களுக்கு அனுப்பப்பட்ட பெண் குற்றவாளிகள் எத்தனை பேர் ?

கனம் திரு. கோ. பூவராகன் : இம்மாநிலத்திலுள்ள மகளிர் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங்களுக்கு 1961-62-ல் 109 மகளிரும், 1962-63-ல் 116 மகளிரும் அனுப்பப்பட்டனர்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த விடுதிகளிலிருந்து விடுதலை பெற்ற மகளிர்கள் விடுதலைக்குப் பிறகு அவர்கள் வாழ்க்கை வரலாறு என்னவாகிறது என்று நிர்ணயிக்க ஏதாவது வழிவகை செய்கிறார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : விடுதியில் இருக்கும்போது அவர்கள் வாழ்க்கையில் எப்படி இருக்கவேண்டுமென்று செம்மைப்படுத்த விடுதி இருக்கிறது. பிறகு செம்மையாக இருப்பார்கள் என்றுதான் அரசாங்கம் கருதுகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: பெண் குற்றவாளிகள் எப்படிப்பட்ட குற்றங்களை செய்திருக்கிறார்கள் என்ற விவரம் இருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன்: தற்போது என்னிடம் அந்த விவரங்கள் இல்லை. தனிக்கேள்வி போட்டால் சொல்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : பெண் குற்றவாளிகளுக்கு கண்காணிப்பு இல்லங்களில் ஏதாவது தொழில் கற்றுக் கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன்: வேலை கொடுக்கப்படுகிறது.

Mr. SPEAKER : No member seems to visit these institutions.

[24th July 1964

நில உச்சவரம்புச் சட்டம்

* 682 கேள்வி—திரு. செ. மாதவன்: கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்தியத் தலைமை நீதி மன்றத்தில் சென்னை நில உச்சவரம்புச் சட்டம் செல்லாது என்று தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கில் நமது அரசாங்கத்தின் சார்பில் வாதாட என்ன ஏற்பாடு செய்யப்பட்டது?

THE HON. SRI V. RAMIAH : In Writ Petition Nos. 1, 7, 8, etc., of 1963, filed before the Supreme Court, the validity of the Madras Land Reforms (Fixation of ceiling on land) Act, 1961 was challenged. A counter-affidavit meeting the contentions in the Writ Petitions was filed in the Court on behalf of the State of Madras. The counter-affidavit was prepared by the Government Pleader, Madras and settled by the Advocate-General, Madras. A senior advocate of the Supreme Court appeared before the Court and argued the case on behalf of the State of Madras, after receiving instructions from the Advocate-General, Madras.

திரு. செ. மாதவன்: நம் மாநிலத்திலிருந்து நம் அரசாங்கத்தின் அட்வெக்கேட்-ஜெனரல் நேரடியாக இந்த வழக்கில் வாதாட தலைமை நீதிமன்றத்திற்குச் செல்ல அரசாங்கம் உத்தரவிட்டதா? அவர் அவ்வாறு சென்றாரா?

கனம் திரு. வெ. ராமைய்யா: கேசை அவர்களே நடத்துவதாக இருந்தது. ஆனால் அவர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியம் காரணமாக அந்தக் கேசை நடத்துவதற்கு வேண்டிய எல்லா விவரங்களையும் சுப்ரீம் கோர்ட்டில் உள்ள ஒரு சீனியர் அட்வெக்கேட்டுக்கு கொடுத்து அந்த வழக்கை அங்கு நடத்தினார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: நில உச்சவரம்புச் சட்டம் பற்றி சுப்ரீம் கோர்ட்டில் வாதாடுகையில் இம்மாநிலத்தைச் சேர்ந்த அட்வெக்கேட்-ஜெனரல் அங்கு சென்று வாதாட உதவி செய்யாத காரணத்தினால்தான் இந்தச் சட்டம் தோற்றது என்று இந்த அரசாங்கம் அந்த அட்வெக்கேட்-ஜெனரலை எக்ஸ்ப்ளனேஷன் கேட்டதா? அப்படி எக்ஸ்ப்ளனேஷன் கேட்ட காரணத்தினால் தான் அந்த அட்வகேட்-ஜெனரல் எனக்கு வேலையே தேவையில்லை என்று ராஜினாமா செய்தார்கள் என்பது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அட்வெகேட்-ஜெனரல் அவர்கள் போக முடியாததற்குக் காரணம் அவர்கள் தகப்பனார் அதற்கு சற்று காலத்திற்கு முன்புதான் தவறி விட்டார்கள். அவர்கள் ஏன் போகவில்லை என்று வீட்டில் விபத்து நடந்த சமயத்தில் கேட்பது என்பதெல்லாம் சரி அல்ல. அந்தக் கேஸ் சரியாக நடத்தப்பட்டதா என்றால் பலவித ஆதாரங்களை அனுப்பி அங்குள்ள ஒரு சீனியர் அட்வெக்கேட்டை வைத்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்தோம்.

24th July 1964]

திரு. ஆ. கு. சுப்பையா: உச்ச வரம்புச் சட்டப் பிரகாரம் உபரியாக உள்ள நிலத்தை எடுக்கக்கூடிய வேலைகள் முடிந்து விட்டதா? முடியவில்லையா? முடியவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா: உச்சவரம்புச் சட்டம் பற்றி நடவடிக்கைகள் நடத்த முடியாத ஒரு சூழ்நிலை சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டால் ஏற்பட்டது. மீண்டும், பார்லிமெண்டில் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தியது காரணமாக இந்த வேலைகள் தொடர்ந்து நடத்தப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல்: நில உச்சவரம்புச் சட்டம் செல்லாது என்று தீர்ப்பு அளித்ததற்கும், முன்னாள் அட்வெக்கேட்-ஜெனரல் பதவியை விட்டு விலகியதற்கும் ஏதாவது தொடர்பு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒன்றும் இல்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்தச் சட்டத்தை அமுல் நடத்த நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எல்லாம் இதுவரை என்ன வேலை செய்து கொண்டிருந்தார்கள்?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்தச் சட்டத்தை அமுல் செய்ய எவ்வளவோ விதமான வேலைகள் இருக்கின்றன. சில அக்விசிஷன்ஸ் நடத்த வேண்டும். அது தவிர, ரிக்கார்ட்ஸ், வேண்டிய புள்ளி விவரங்கள் எல்லாம் சேகரம் செய்து கொண்டிருந்தார்கள். குறுகிய காலம் மட்டுமே இருந்தால் மற்ற வேலைகள் செய்ய நேரமில்லை.

திரு. செ. மாதவன்: இந்திய தலைமை நீதி மன்றத்திற்கு நம் மாநிலத்தின் சார்பாக வாதாட பெர்மனென்ட்டாக ஒரு அட்வெக்கேட் இருக்கிறாரா? அவர்கள் அட்ஜெர்ண்மெண்ட் வாங்கவும் மற்ற வேலைகளுக்காகவும் அமர்த்தப்பட்டிருக்கிறார்களா? வேறு எந்தவிதமான வழக்கறிஞர்களும் இந்த வழக்கிற்காக அமர்த்தப்படவில்லை என்பது உண்மையா?

MR. SPEAKER : I think the hon. Member has no faith in the advocate.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது சட்ட மந்திரிக்கு போட வேண்டிய கேள்வி. தனிக் கேள்வி போட்டால் அதுபற்றி விவரங்கள் கொடுக்கப்படும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: நம் மாநிலத்தைச் சேர்ந்த அட்வெக்கேட்-ஜெனரல் திரு. வி. கே. திருவேங்கிடாச்சாரி என்று நினைக்கிறேன். அவர்கள் இந்தச் சட்டம் சுப்ரீம் கோர்ட்டில் தோற்றதற்குப் பிறகுதான் ராஜிநாமா செய்திருக்கிறார்கள். அவர்கள் செல்லாததற்குண்டான காரணங்களை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு . . .

[24th July 1964

MR. SPEAKER: Already the Hon. Minister has given an answer. The hon. Member cannot presume anything and put it like that.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, உச்சவரம்புச் சட்டம் உருவாக்குகிறபோது உருவாக்கி நிறைவேற்றிய காலத்தில் அதில் சில குறைபாடுகள் இருந்ததாக அட்வெக்கேட்-ஜெனரல் கூறியதாகவும் அந்தக் குறைபாடுகளை நிறைவேற்றாத நிலையில் அச்சட்டம் நிறைவேற்றப்பட்டதாகவும், ஆகவே அது சுப்ரீம் கோர்ட்டுக்கு போகிற போது தாமே சென்று வாதாட முடியாத நிலை காரணமாக அவர் செல்ல மறுத்து விட்டதாகவும் சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சர்க்கார் ஆலோசகர்கள் சர்க்காருக்கு என்ன ஆலோசனைகள் சொல்கிறார்கள், சர்க்கார் அதுபற்றி அவர்களிடம் என்ன பேசுகிறார்கள் என்பதெல்லாம் காண்பிடன்ஷியல். அவற்றை வெளியே சொல்ல முடியாது. கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்ட கேள்வி, இந்தக் காரணத்திற்காகத்தான் அட்வெக்கேட்-ஜெனரல் ராஜிநாமா செய்தார்களா என்று. அவர்களின் ரெசிங்க்னேஷன் லெட்டரில் அந்தமாதிரி காரணம் ஏதுவும் சொல்லவில்லை. என்ன எழுதினார்கள் என்பது தான் எனக்குத் தெரியுமே தவிர அங்கத்தினர் அவர்கள் அவர்களின் மனதில் என்ன இருக்கிறது என்று நினைக்கிறார்களோ அது தெரியாது.

திரு. ஜே. மார்தா கவுடர்: இப்போது அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்திய பிறகு உச்சவரம்புச் சட்டம் அமுலுக்கு வருகிறதா? முன்பு நம் மாநிலத்தில் செய்த தேதியிலிருந்து அமுலுக்கு வர, ரெட்ரோஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து சட்டம் செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா: கான்ஸ்டிட்யூஷன் அமெண்ட்மெண்டுக்கு பிறகு, அது தொடர்ந்து அமுலில் இருப்பதாகத்தான் முடிவு செய்ய வேண்டும்.

வைகை நதி வெள்ளத் தடுப்பு

* 683 கேள்வி—**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வைகை நதி ஓடும் பகுதியில் ஆற்றோரங்களில் உள்ள ஊர்களில் (ரெட்டியப்பட்டி; அக்கரைப்பட்டி; நடகோட்டை; கூட்டாத்து, அண்ண அய்யம்பாளையம், குல்லிசெட்டிபட்டி, சோழவந்தான், முள்ளிப்பள்ளம், தென்கரை) தடுப்புக்கரைச் சுவர் கட்ட உத்தேசமுண்டா?

THE HON. SRI V. RAMAIAH: There is a proposal under contemplation for the formation of flood bank for the river Vagai in the Sholavandan village limits for protecting the villages of Sholavandan, Mullipallam and Thenkarai.

24th July 1964]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: சோழவந்தான், முள்ளிப்பள்ளம், தென்கரை கிராமங்களை காப்பதற்கு சோழவந்தான் கிராம எல்லையில் வெள்ளத் தடுப்பு சுவர் கட்டும் ப்ரப்போசல் இருப்பதாக கூறினார்கள். அதை வரவேற்கிறேன். ரெட்டியப்பட்டி, அக்கரைப்பட்டி, நடகோட்டை, கூட்டாத்து, அண்ண அய்யம்பாளையம் இந்த ஊர்களுக்கும் விஸ்தரிக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. வெ. ராமையா: தனிக் கேள்வி வேண்டும்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: மதுரையில் வைகை நதி தடுப்புக் கரைச் சுவர் கட்ட சில லட்சம் ரூபாய் ஏற்கனவே ஒதுக்கியிருக்கிறோம். அது எந்த நிலையில் உள்ளது? எப்போது வேலை துவங்கப்படும்?

கனம் திரு. வெ. ராமையா: தனிக் கேள்வி வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன்: இந்த அரிப்பை தடுக்கக் கட்டப்படும் சுவர்களுக்கு ஆகும் செலவில் ஒரு பகுதியை பஞ்சாயத்து கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. அப்படியிருப்பதால் சில பஞ்சாயத்துக்கள் கொடுக்க முடியாத காரணத்தினால் கரைகள் கட்டப்படாமல் இருப்பதால் ஊர்களுக்கு ஆபத்து வருவதை அரசாங்கம் உணருகிறதா? ஆகவே அந்தக் கட்டுப்பாட்டை தளர்த்த அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. வெ. ராமையா: இரிகேஷன் டிப்பார்ட்மெண்டில் செய்யக்கூடிய வேலைகளுக்கு பெரிய வேலைகளுக்கு பஞ்சாயத்திலிருந்து அதன் நிதியிலிருந்து பணம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்க மாட்டார்கள். சாதாரண சிறு வேலைகளாக இருக்கும்பட்சத்தில் காண்ட்ரிப்யூஷன் வொர்க்காக இருந்தால் அதுபோல் ஆலோசனை சொல்லியிருப்பார்கள்.

சினிமா தியேட்டர்கள்

* 684 கேள்வி—**திரு. மா. இராசாங்கம்:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சினிமா தியேட்டர்களை நகரசபைகள் எடுத்து நடத்த அனுமதி வழங்கும் உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: சென்னை நகரத்தைப் பொறுத்த அளவில், இங்கிருக்கின்ற தியேட்டர்களில் அதிகமான அளவில் வருமானம் வந்துக் கொண்டிருக்கிறது ஆகவே இதை கார்ப்பரேஷன் எடுத்து நடத்துவதற்காக அரசாங்கம் அனுமதி கொடுக்குமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இப்போது அந்த உத்தேசமில்லை.

[24th July 1964

திரு. ஆ. துரையரசன்: தலைவர் அவர்களே, நகரசபைகள் தாங்களாகவே சொந்தமாக தியேட்டர்கள் கட்டுவதற்கு அனுமதி கோரியிருக்கின்றார்களா, அப்படியானால் சர்க்காரால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா ?

திரு. சே. ம. அ. மஜீத்: நகரசபைகளிடமிருந்து அப்படி கோரிக்கைகள் வந்திருப்பதாக தெரியவில்லை. ஆனால் தியேட்டர்-கம்-பப்ளிக் ஹால் கட்டுவதற்கு அனுமதி கேட்கப்பட்டிருந்தது. அவ்விதம் இரண்டு நகரசபைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கு சினிமாக்கள் காட்டப்பட வேண்டும் என்று அவர்கள் கேட்கவும் இல்லை, அரசாங்கம் அவ்விதம் அனுமதி கொடுக்கவும் இல்லை.

திரு. மா. இராசாங்கம் : சினிமா தியேட்டர்களை நகரசபைகள் எடுத்து நடத்துவதற்கு அனுமதி வழங்காமைக்குக் காரணம், தமிழ்நாட்டில் இருக்கின்ற தியேட்டர்களில் பெரும்பாலானவை ஆளும் கட்சியிலுள்ளவர்களிடம் இருக்கின்றது என்ற காரணம் தான் என்று சொல்லப்படுவது உண்மையா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சினிமா உலகத்திற்கும் ஆளுங் கட்சிக்கும் சம்பந்தமே இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான நகராட்சி மன்றங்கள் போதுமான வருமானம் இல்லாததின் காரணமாக வருமானத்திற்கு தவிக்கின்றார்கள். அவர்களது வருமானத்தை பெருக்கிக் கொள்ளுகின்ற வகையில் சினிமாத் தியேட்டர்களை எடுத்து நடத்தலாம் என்ற ஆலோசனை இருந்து வருகிறது. ஆகவே விரும்புகின்ற நகரசபைகள் சினிமா தியேட்டர்களை எடுத்து நடத்துவதற்கு அனுமதி கேட்டால், அனுமதி கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஏற்கெனவே பஞ்சாயத்துக்களுக்கு எந்த முறையில் நிதி வசதியை பெருக்கிக் கொள்ளலாம் என்பதைப்பற்றி பஞ்சாயத்து ராஜ் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் ஆலோசனை செய்த போது, சினிமாத் தியேட்டர்களை ஏற்றெடுத்து நடத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி முடிவு எடுத்து மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யும்போது அதைப்பற்றி பரிசீலனை செய்து முடிவு எடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : சேலம் நகரசபையிலிருந்து இப்படிப்பட்ட சினிமா கொட்டகைகளை எடுத்து நடத்துவதற்கு சர்க்காரை கேட்க வேண்டும் என்று தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதற்கு சர்க்கார் என்ன பதில் எழுதியிருந்தார்கள் ?

கனம் சபாநாயகர்: கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுவதிலிருந்து என்ன பதில் எழுதியிருப்பார்கள் என்று தெரியவில்லையா ?

24th July 1964]

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சேலம் நகரசபையிலிருந்து அவ்விதம் தீர்மானம் ஒன்றும் வரவில்லை என்று நினைக்கிறேன். எனக்கு அங்கு வரவேற்பு அளித்தபோது இதைப்பற்றி கூறினார்கள் என்று நினைக்கிறேன்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : தலைவர் அவர்களே, தியேட்டர்-கம்-பப்ளிக் ஹால் கட்ட வேண்டும் என்று மதுரை நகரசபையிலிருந்து விண்ணப்பித்தால் அனுமதி வழங்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: விண்ணப்பித்தால் பரிசீலிக்கலாம்.

திரு. எம். தண்டாயுதபாணி : பஞ்சாயத்து கூட்ட மன்றங்களில் பொது நிதி வேண்டிய அளவுக்கு இருப்பதால், சினிமா தியேட்டர்களை எடுத்து நடத்துவதற்கு அனுமதி கோரினால், அனுமதி கொடுக்கப்படுமா ?

MR. SPEAKER : These are all hypothetical questions. No answer need be given.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், இப்போது தியேட்டர்களுக்கு விதிக்கப்படுகின்ற என்டர்டைன்மென்ட் டாக்ஸில் எத்தனை சதமானம் நகர சபைக்கு கொடுக்கப்படுகிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தனிக்கேள்வி வேண்டும்.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்களில் சினிமாக் கொட்டகைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கும் உரிமையை அதாவது கலக்டர் சிபாரிசு செய்வது என்கின்ற முறையை விட்டு, விட்டு, நகராட்சி மன்றங்களே லைசென்ஸ் கொடுப்பது என்கின்ற உரிமையை கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இதற்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

கல்விச் சலுகைக்கு விண்ணப்ப பாரங்கள்

***.685 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இலங்கையிலிருந்து தமிழ்நாடு திரும்பியோருக்கு கல்விச் சலுகைகள் பெறுவதற்குரிய விண்ணப்ப பாரங்கள் காலாகாலத்தில் கிடைப்பதில்லை என்பது உண்மையா ?

(இ) பாரங்கள் காலாகாலத்தில் கிடைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : In order to overcome the difficulties experienced by the children of Ceylon repatriates in obtaining the requisite application forms in time for applying for boarding grants, the Collectors have been instructed to have sufficient number of forms printed locally to meet their requirements.

[24th July 1964

SRI M. S. SELVARAJAN : Sir, in addition to the Collectors keeping the forms, will the Government consider the desirability of allowing the Educational Authorities to keep the forms?

THE HON. SRI V. RAMAIAH : It will be appropriate if the Collectors only keep the forms available, because they are in charge of disposing of the application forms for boarding grants.

சேலம் இரும்புக்கனி

* 686 **கேள்வி.—திரு. ப. உ. சண்முகம் : திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் இரும்பு சம்பந்தமான M/S. M.N. தஸ்தூர் கம்பெனி (கல்கத்தா) அறிக்கை வந்துவிட்டதா?

(இ) அதன்மீது சர்க்கார் எடுத்துள்ள முடிவு யாது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :

(அ) இல்லை.

(இ) இந்த வினவுக்கு இடமில்லை.

திரு ப. உ. சண்முகம் : தஸ்தூர் கம்பெனி அறிக்கை இதுவரையிலும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் சேலம் இரும்புத் திட்டத்தை கைவிடப்போவதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. சேலம் இரும்பையும், நெய்வேலி நிலக்கரியையும் உபயோகித்து இரும்பு உருக்காலை ஏற்படுத்தப்படும் என்று சொன்ன உறுதிமொழி எந்த நிலைமையில் இருக்கிறது? எப்படி விரைவில் ஏற்படுத்தப் போகிறார்கள்? மூன்றாவது திட்ட காலத்திற்குள் இதற்கான வேலை துவக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிர்வாகத்திற்குத்தான் சர்க்கார் பொறுப்பு. பத்திரிகைகளில் வந்துகொண்டிருக்கின்ற செய்திகளுக்கு எல்லாம் சர்க்கார் பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. பத்திரிகைகளில் ஏதாவது வருகிறது என்றால், அது எப்படி வந்தது, அல்லது அது தவறு, அல்லது உண்மை என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. இந்தச் சர்க்காரைப் பொறுத்தளவில், தஸ்தூர் ரிப்போர்ட் ஒரு வாரம் அல்லது இரண்டு வாரத்திற்குள் வந்து விடும் என்று தகவல் கிடைத்திருக்கிறது. அந்த ரிப்போர்ட் வந்தபிறகு மத்திய சர்க்கார் அதைப்பற்றி பரிசீலனை செய்வார்கள். எந்த முறையில் சேலம் இரும்பை உபயோகப்படுத்தலாம் என்பதைப்பற்றிய பரிசீலனை முடிவு செய்யப்படும். சாதாரணமாக கன்வென்ஷனல் ப்ளாஸ்ட் ஃபர்னஸ் முறைப்படி உபயோகிக்க முடியுமா என்பதைப்பற்றியும், அதற்கான ஆலோசனைகளைப் பற்றியும் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

24th July 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக் கொண்டும், சேலம் இரும்பைக்கொண்டும், உருக்காலை ஏற்படுத்துவது சாத்தியம் என்று வெளிநாடுகளில் பரிசீலனை செய்தபோது தெரிவித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது இப்போது இந்தத் திட்டம் சம்பந்தமாக தஸ்தூர் கம்பெனிக்கு அனுப்பவேண்டிய காரணம் என்ன? எது சம்பந்தமாக அவர்கள் பரிசீலனை செய்கிறார்கள்? என்ன அபிப்பிராயம் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சாதாரணமாக ஒரு பிராஜக்டை எடுத்துக்கொண்டால், முதலில் லாபரட்டரி டெஸ்ட் செய்வார்கள், பின்னால் பைலட் பிராஜக்ட் டெஸ்ட் செய்வார்கள், மூன்றாவதாக பிராஜக்ட் ரிப்போர்ட் செய்வார்கள். இந்த மூன்றாவது ஸ்டேஜை தான் தஸ்தூர் கம்பெனி செய்து கொண்டிருக்கிறார்கள். அதோடு புதிய முறையில் இதை உபயோகப்படுத்தலாம் என்பதைப்பற்றியும் ஒரு தகவல் கொடுத்திருக்கிறார்கள். அது சம்பந்தமாகவும் ரிப்போர்ட் கேட்டிருக்கிறோம். உதாரணமாக இந்த விசாரணை நடந்துகொண்டிருக்கும்போது, ரா-லிக்னைட்டையும் உபயோகப்படுத்தலாம் என்றும் அபிப்பிராயம் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றியும் விபரம் கேட்டிருக்கிறோம்.

திரு. சா. கணேசன் : அப்படி அனுப்புகின்ற அறிக்கையானது, அதன் பிரதியானது, மத்திய சர்க்காருக்கு கிடைக்கின்ற நேரத்தில் ஏக காலத்தில்—மாநில சர்க்காருக்கு கிடைக்குமா? அப்படி மாநில சர்க்காருக்கு கிடைக்குமானால் அதன் மீது மாநில சர்க்கார் தங்களுடைய கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே அதற்குவேண்டிய தக்க நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மாநில சர்க்காருக்கும் ஒரு பிரதி கொடுப்பார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த பைலட் பிராஜக்ட் பற்றிய பரிசீலனை ஓரளவுக்கு முடிந்து விட்டதாக தெரிகிறது. இது இறுதியான கட்டம் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே இதில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி சேலத்திற்கு கொண்டு வரப்படுமா அல்லது சேலம் இரும்புக் கனி நெய்வேலிக்கு கொண்டு வரப்படுமா? எந்த இடத்தில் இதற்கான தொழிற்சாலை ஏற்படுத்தப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தஸ்தூர் கம்பெனி ரிப்போர்ட் வந்தபின் தான் தெரியும்.

திரு. வை. சங்கரன் : தஸ்தூர் கம்பெனி ரிப்போர்ட்டில், ஆந்திராவிலுள்ள பெல்லாரியில் கிடைக்கின்ற இரும்பு நல்லதாக இருக்கிறது, ஆகவே இந்த தொழிற்சாலையை அங்கேயே அமைக்கலாம் என்று சொல்லப்பட்டிருப்பதாக தெரிகிறது. அப்படி ஏதாவது

[24th July 1964

சொல்லப்பட்டிருந்தாலும், இதை உறுதியாக தமிழ் நாட்டில் சேலத்திற்கு அருகே தான் ஆரம்பிக்கவேண்டும் என்று இந்த சர்க்கார் வற்புறுத்துவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆந்திர மாகாணத்தின் நடவடிக்கைகளைப்பற்றி இந்த சர்க்காருக்கு தகவல் கிடையாது.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், தஸ்தூர் கம்பெனிக்கு அனுப்ப பட்டிருப்பது எந்த முறையில் தயாரிப்பது என்பதைப்பற்றி. இந்த ரிப்போர்ட் வந்ததும் சேலம் இரும்பையும் நெய்வேலி நிலக்கரியையும் கொண்டு தமிழ் நாட்டில் இரும்பு தொழிற்சாலை ஏற்படுத்தப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் உறுதியாக சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தஸ்தூர் கம்பெனி ரிப்போர்ட் வந்த பிறகு மத்திய சர்க்கார் தான் முடிவு எடுப்பார்கள். ராஜ்ய சர்க்கார் முடிவு எடுப்பது அல்ல.

ஊராட்சி மன்றங்களுக்கு கட்டிடம்

* 687 **கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சியில் கூடிய சேர்மன்கள் மாநாட்டில் ஊராட்சி மன்றங்களுக்கு ஆபீஸ் கட்டிடம் கட்ட அரசாங்கம் ரூ. 3,500 கடனாகவும், ரூ. 3,500 மானியமாகவும் கொடுக்க கோரும் தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்காக அரசாங்கம் சில தொகைகளை ஒதுக்க வேண்டுமென்றும், அவைகளுக்குக் கட்டிடச் செலவில் பாதியை மானியமாகவும், பாதியை நீண்டகாலக் கடனாகவும் கொடுத்து உதவ வேண்டுமென்றும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், ஷை தீர்மானத்தில் உதவித் தொகையின் அளவைப் பற்றி குறிப்பாக எதுவும் சொல்லவில்லை. ஷை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பொழுதே பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்காக உதவி அளிப்பது குறித்து அரசாங்கம் யோசித்து வந்தது. ஆனால் தேசீய நெருக்கடி நிலைமை காரணமாக அதைத் தள்ளிப்போட வேண்டி வந்தது.

மீன்பிடித் துறைமுகம்

* 688 **கேள்வி—திரு. நா. சௌந்தரபாண்டியன் :** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள லீபுரத்தை மீன்பிடி துறைமுகமாக்க உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில் அதன் விவரமென்ன ?

24th July 1964]

கனம் திரு. கோ. பூவராகன் : இந்த விஷயம் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

Chinnar and Thoppaiar Scheme

* 689 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Chinnar and Thoppaiar Schemes of Dharmapuri taluk have been included in the B list of the Third Five-Year Plan ; and

(*b*) if so, whether the schemes would be taken up for execution within the Third Five-Year Plan period itself?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்தத் திட்டங்களைப் பற்றி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வட சேலம் மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலிருந்து ஒரு கோரிக்கை வந்ததா ? அந்தக் கோரிக்கை மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? 9-30 a.m.

கனம் திரு. வெ. ராமையா : மாவட்ட ரீதியில் மட்டுமல்ல. அரசாங்கமே அதைப் பரிசீலனை செய்து மத்திய அரசாங்கத்திற்கும், ப்ளானிங் கமிஷனுக்கும் சிபாரிசு செய்யும்போது காவிரியோடு திட்டம் சம்பந்தப்பட்டிருப்பதால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முடியாமல் போய்விட்டது. நான்காவது திட்டத்தில் சேர்க்க ஆலோசனை செய்யும்போது இந்தத் திட்டங்களை மீண்டும் அரசாங்கம் பரிசீலனை செய்யும். முடிந்தால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே சிறு, நடுத்தரத் திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்யவேண்டுமென்று அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த இரண்டு சிற்றாறுகளும் மேட்டூர் பகுதியிலே போய் காவிரியில் கலக்கக் கூடியவை. இவைகள் காவிரியில் கலக்கிறது என்பதற்காக இவற்றைத் தடை செய்திருக்கும்போது மைசூர் பகுதியில் காவிரியோடு சங்கமம் ஆகும் நதியின் குறுக்கே அணை கட்டலாமா ? அப்படியானால் மைசூர் ராஜ்யத்தில் கட்டுவதாகச் சொல்லுகிறார்களே அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா : காவிரி நதியைப் பொறுத்தவரையில் அணைகள் கட்டுவதைப் பற்றி ஒரு ஒப்பந்தம் இருக்கிறது. அந்த ஒப்பந்தப்படி நமது ராஜ்ய எல்லையிலே இருந்தாலும் சரி, மைசூர் ராஜ்ய எல்லையிலே இருந்தாலும் சரி, அந்த ஒப்பந்தப்படி எங்கேனும் இங்கேயோ அல்லது மைசூரிலோ ஏதாவது நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மத்திய அரசாங்கத்தின் மூலமாக இரண்டு அரசாங்கங்களும் எடுத்துக் கொள்ள அந்த ஒப்பந்தத்தில் இடம் இருக்கிறது.

[24th July 1964

வெல்ல (போக்குவரத்துக் கட்டுப்பாடு) ஆணை

* 690 கேள்வி.—திரு. எல். ஆனந்தன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சர்க்கரை ஆலைகளுக்குப் போதுமான கரும்பு கிடைப்பதால் Gur (Movement Control) Order 1963-ஐ ரத்து செய்யும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்த உணவு-வேளாண்மை அமைச்சு (உணவுத் துறை), 1962-ம் ஆண்டு இந்தியப் பாதுகாப்பு விதிகளின்கீழ் 1963-ம் ஆண்டு வெல்ல (போக்குவரத்துக் கட்டுப்பாடு) ஆணையைப் பிறப்பித்தது. எனவே, மாநிலங்களிடையே வெல்லப் போக்குவரத்து மீதுள்ள தடையை எடுப்பதுபற்றி மத்திய அரசாங்கமே முடிவு செய்யவேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், வெல்லப் போக்குவரத்தைத் தடை செய்வது சாதாரணமாக சர்க்கரை ஆலை அல்லாத மற்ற பகுதிகளில் கரும்பு உற்பத்தி செய்யாதவர்களை பாதிக்கிறது என்பதற்காக ஏற்பட்டது. கரும்பு உற்பத்தி செய்கிற பகுதியில் சரியான பாதுகாப்பு இருப்பதால் இந்தத் தடையை நீக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : இது மத்திய அரசாங்கம் செய்ய வேண்டிய முடிவு என்று சொன்னேன். என்ன செய்வேண்டுமென்பதைப் பற்றி அவர்கள் தான் முடிவு எடுக்கவேண்டும்.

கிராம ஊழியர்களின் ஊதிய உயர்வு

* 691 கேள்வி.—திரு. எஸ். ஆறுமுகம் : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிராம ஊழியர்களான தலையாரி, தண்டல்காரன் இவர்கள் ஊதியத்தை உயர்த்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : The matter is under the consideration of the Government.

தஞ்சை மாவட்ட கிராம அதிகாரிகள்

* 692 கேள்வி.—திரு. செ. மாதவன் :
திரு. கோ. சி. மணி :
திரு. கரு. சீமைச்சாமி :
திரு. து. ப. அழகமுத்து :
திரு. ஆ. கு. சுப்பையா : } கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கிராம அதிகாரிகள் தங்கள் பதவியை ராஜிநாமா செய்தனரா ?

24th July 1964]

(இ) ஆமெனில், ராஜிநாமாவிற்குக் காரணங்கள் யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Certain Village Officers of Thanjavur District have tendered their resignations to the Collector of Thanjavur.

(b) Their request for further increased emoluments is sitll under the examination of the Government.

திரு. செ. மாதவன் : இந்த கிராம அதிகாரிகளுடைய நிலைமையை நிர்ணயிப்பதற்கும், அவர்கள் ஊதியத்தை உயர்த்தவும் சர்க்கார் ஒரு காபினெட் சப்-கமிட்டி போட்டு ஆலோசித்ததா ? அதனுடைய முடிவு என்ன ? எத்தனை ஆண்டுகளாக இதைப் பற்றி ஆலோசித்து வருகிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதைப் பற்றி பட்ஜெட் விவாதத்தின் போது விரிவாகச் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் மீண்டும் சொல்லுகிறேன். இந்த கிராம அதிகாரிகளுடைய நிலையைக் குறித்து விரிவாக விசாரணை செய்ய காபினெட் சப்-கமிட்டி ஏற்பாடு செய்து, முடிவு எடுத்து, அதைப் பரிசீலிக்க அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் நேரத்தில் புது பஞ்சாயத்து ராஜ்யச் சட்டமும் நிறைவேறி பஞ்சாயத்து ஆட்சி முறை அமலுக்கு வந்தபோது இரண்டுக்கும் இடையில் ஏதாவது முரண்பாடு இருக்கிறதா என்று ஆலோசிக்கும் அடிப்படையில் ஒத்தி வைத்திருக்கிறது. அதை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. குறிப்பாக ஊதிய உயர்வு ஏற்படுவதற்கு விரைவாக முடிவு எடுக்கவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், இந்த ராஜிநாமா செய்த கிராம அதிகாரிகளுக்கு குறிப்பிட்ட தேதிக்குள் வாபஸ் வாங்கவேண்டும் என்று சொல்லி அரசாங்கத்திடமிருந்து மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டது உண்மையா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : மிரட்டல் கடிதம் ஒன்றும் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : ஸார், எத்தனை கிராம அதிகாரிகள் ராஜிநாமா செய்தார்கள் என்று அமைச்சர் சொல்ல முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH :

Details of persons who tendered the resignations.

Name of the taluk. (1)	Karnam. (2)	V. H. M. (3)	Talayari (4)	Vetti. (5)
1 Pattukkottai ..	104	75	14	28
2 Nannilam	222	182	125	239
3 Thanjavur ..	42	40	36	65
4 Thiruthuraipundi ..	69	52	..	..
5 Mayuram ..	3	1	..	...
6 Kumbakonam ..	103	76	..	..
7 Mannargudi ..	18	12	..	...
8 Orthanad	71	46	..	..
Total ..	632	484	175	332

[24th July 1964

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : ஸார், கிராம அதிகாரிகளின் சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது என்பதை அமைச்சர் உணருகிறார்களா ? அதை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : அதற்குத் தான் இப்போது கனம் அமைச்சர் பதில் சொன்னார்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நல்லதையே செய்யும் நம்து அரசாங்கம் காலதாமதங்கள் செய்து எல்லோருடைய அதிருப்தியைப் பெற்றதற்கு மேல் செய்வதில் என்ன பிரயோசனம் இருக்கிறது. கூடிய விரைவில் இதற்கு முடிவு கட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் சபாநாயகர் : இது கேள்வி அல்ல. ஆலோசனையை அமைச்சருக்குத் தனியாக கனம் அங்கத்தினர் எழுதி அனுப்பலாம்.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகளுக்குப் பெரிய வட்டங்களாக இருக்கிற காரணத்தினால் வேலை அதிகமாக இருக்கிறது என்று அரசாங்கம் உணருகிறதா ? பெரிய வட்டங்களை சிறு வட்டங்களாகப் பிரிக்க என்ன என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதற்குத் தனியாக ஒரு கேள்வி போடவேண்டும்.

கனம் சபாநாயகர் : மாவட்டம், வட்டம், உள் வட்டம் என்றெல்லாம் சொல்லப்படுகிறதே, இந்த இடத்தில் வட்டங்கள் என்றால் என்ன அர்த்தம் ?

திரு. ஆ. துரையரசன் : வட்டம் என்றால் குரூப் வில்லேஜ்கள்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், ராஜிநாமா செய்ததில் ஸ்டேஷனரி ஃபாரம் சப்ளை செய்யவில்லை என்று காரணம் காட்டியிருக்கிறார்கள். இது விஷயத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து காலாகாலத்தில் ஸ்டேஷனரி ஃபாரங்கள் சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அவர்கள் சொன்ன பல காரணங்களில் ஸ்டேஷனரி சப்ளையும் ஒரு காரணமாக இருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் உள்ள கிராம அதிகாரிகளுக்கும் உள்ள பிரச்னை தான். இதில் போதுமான கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

திரு. ரா. சுப்பிரமணியம் : ராஜிநாமா செய்த கிராம அதிகாரிகள் இப்போது வாபஸ் வாங்கி விட்டார்கள் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? எல்லோரும் ராஜிநாமாவை வாபஸ் வாங்கி விட்டார்களா ? இன்னும் வாபஸ் வாங்காதவர்கள் பாக்கி இருக்கிறார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : எனக்குக் கிடைத்த தகவல் எல்லோரும் மீண்டும் வேலைக்கு வந்து விட்டார்கள் என்பது தான்.

24th July 1964]

சிதம்பரம் தாலுக்காவை சர்வே செய்தல்

* 693 **கேள்வி.—திரு. எஸ். சிவசுப்ரமணியன் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுக்காவை சர்வே செய்யும் உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில் எப்போது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) 1969-ம் வருடம் நவம்பர் மாதத்திற்குப் பிறகு.

பாசன் வசதி

* 694 **கேள்வி.—திரு. எல். ஆனந்தன் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கள்ளக்குறிச்சி வட்டத்தில் கட்டிக்கொண்டிருக்கும் கோமுகி நதி நீர்த் தேக்கத்தில் இருந்து வலதுபுரமாக கால்வாய் அமைத்து பாசன வசதி செய்துகொடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : No.

* 695 **கேள்வி.—திரு. சா. ராமசாமி :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் நந்தியாறு மூலம் நேரடியாகவும், கண்டிராதித்தம் பெரியேரி மூலமாகவும் உள்ள பாசனப் பகுதிகளில் மார்ச் மாதத்தில் தண்ணீர் சரியான முறையில் வராததினால் 1,500 ஏக்கர் இளம்பயிர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சேதத்தை அரசாங்கம் அறியுமா ?

(இ) சர்க்கார் இதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The 1,500 acres of lands in Udayarpalayam taluk referred to by the Member are in the single crop area of the Nandiar channel and are not normally entitled to supply from February onwards. However, as a special case, in order to save the standing crops the available supplies were distributed equitably and judiciously this year.

* 696 **கேள்வி.—திரு. எம் எஸ். செல்வராஜன் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தாம்பிரவருணியில் மழைக்காலத்தில் வீணாகும் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற்கொள்ள உத்தேசித்துள்ள திட்டங்கள் எவை ?

[24th July 1964

(இ) தாம்பிரவருணியில் ஒன்பது கால்வாய்களைப் புதுப்பித்து வலுப்படுத்தும் வேலைகள் அனுமதிக்கப்பட்டுவிட்டனவா?

(உ) அவ்வேலைகள் எப்போது பூர்த்தியாகும்?

THE HON. SRI V. RAMAIAH : (a) Three schemes of utilising the waters of Tambaraparani, namely—

(i) Gatana Reservoir,

(ii) Ramanadhi Reservoir; and

(iii) Servalar Scheme are under consideration to utilise the surplus waters of Tambaraparani.

(b) & (c) Remodelling of the North Kodamelalagian, South Kodamelalagian and Kodagan channels have been sanctioned by the Government. The proposal for remodelling the Kannadian channel has been deferred by the Government. The proposals in regard to the remaining five channels are under consideration by the Public Works Department.

திரு. எம். எஸ். செல்வராஜன் : வாடர் ரேட் நிலங்களை நஞ்சையாக லோகலைஸ் செய்து கொடுக்கக்கூடிய திட்டத்திற்கும், இந்த சானல்ஸ் ரீமாடல் செய்வதற்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்கிறதா? அப்படியானால், அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தபடி, துரிதமாக கனடியன் சானல் உள்பட எல்லா சானல்கள் சம்பந்தமாகவும் இந்த ஸீஸனிலே அந்த வேலைகளைத் துவக்குவதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : ரீமாடல் ஸ்கீமை ரொம்ப அவசரப்பட்டு, தக்க பலன் தராத முறையில் செய்துவிட்டு போவதிலே லாபம் இருக்காது. ஏனென்றால், தாம்பரபரணி ஸிஸ்டத்தைப் பொறுத்த வரையில் அது ஒரு நல்ல ஸிஸ்டம். அதே நேரத்தில் சிக்கல் நிறைந்த ஸிஸ்டமாக இருக்கிறது. நல்ல முறையில் இன்வெஸ்டிகேஷன் செய்து அந்த ஸிஸ்டத்தை மேலும் பலன் உள்ளதாக, விவசாயத்திற்கு பலன் தரக்கூடிய ஸிஸ்டமாக ஆக்க வேண்டும் என்ற முறையில் நாம் படிப்படியாக ரீமாடலிங் வேலையை நடத்தவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம். இந்த ரீமாடலிங் வேலை முறையாக முடியும்பொழுது இன்னும் ஏராளமான நிலங்கள் இந்தப் பாசனத்திற்குள் வரமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த நேரத்தில் கனம் அங்கத்தினர் எழுப்பிய லோகலைஸேஷன் ஸ்கீம் அதிலே இணையும். அது இல்லாமலே ரெவின்யூ இலாகாவிலிருந்து லோகலைஸேஷன் ஸ்கீமுக்கு ஒரு விசேஷ அதிகாரி இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். என்ன இருந்தாலும், அவர் தனியாகக் கேள்வி போட்டால், நான் தெரிந்து சொல்ல முடியும்.

Lion Sanctuary

* 697 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the Government have dropped the Lion sanctuary scheme; and

(b) if so, the reasons for the same?

24th July 1964]

THE HON. SRI N. NALLASENAPATHY SARKARAI MANRADIAR : (a) The Government have no scheme for the setting up of a Sanctuary for lions in this State.

(b) Does not arise.

திரு. எஸ். மணி : தலைவர் அவர்களே, மைசூரிலிருந்து சிங்கம் கொண்டு வந்து நம்முடைய மாநிலத்தில் வளர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : மைசூரில் சிங்கங்கள் கிடையாது.

கனம் சபாநாயகர் : அங்கு இருக்கிற ஸுவில் இருக்குமல்லவா? (சிரிப்பு.)

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு நிலம் வழங்குதல்

* 698 கேள்வி.—திரு. எல். ஆனந்தன் : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தாலுக்கா, புதுப்பட்டு கிராமத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு நிலம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட நிலம் எவ்வளவு?

(இ) அந்நிலங்களை பயிரிடுபவர்களுக்கு அவற்றை பட்டா செய்து கொடுக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI V. RAMAIAH : (a) 29·06 acres.

(b) Yes.

திரு. ஆ. கு. சுப்பையா : ஹரிஜனங்களுக்கு சர்க்கார் நிலங்களை வழங்குவது எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : நிலம் இல்லாத ஏழைகள் என்ற அடிப்படையில்.

திரு. ஆ. கு. சுப்பையா : நிலம் இல்லாத ஏழை ஹரிஜனங்களுக்கு சர்க்காருடைய நிலங்கள் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டது. அந்த நிலங்களுக்கு மதிப்பீடு வைத்து, அந்த மதிப்பீட்டுத் தொகையை கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதை ரத்து செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் தனியாக எழுதி அனுப்பினால் இதில் இருக்கக்கூடிய நிலையை அறிந்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நீலகிரி ஜில்லாவில் ஹரிஜனங்களுக்கு ஒரு ஏக்கர் நிலம் கொடுப்பதற்குக்கூட, வீட்டு மனைக்கு 3 செண்டு, 4 செண்டு நிலம் கொடுப்பதற்குக் கூட இப்பொழுது 10 வருஷங்

களுக்கு 'தடை' போட்டிருக்கிறார்கள். ஹரிஜனங்களைப் பொறுத்த வரையிலாவது, அந்தத் தடையை நீக்குவது பற்றி அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : நீலகிரி ஜில்லாவில் பொதுவாக நில விநியோகம் தாராளமாகச் செய்வதற்கு தடை இருக்கிறது. காரணம் அங்கு இருக்கக்கூடிய நிலங்களை பல காரியங்களுக்கு பயன்படுத்தவேண்டியிருக்கிறது. அதோடு இல்லாமல், நிலம் விநியோகம் செய்வதிலே, அங்கே நாம் ஏற்படுத்தியிருக்கிற பெரிய அணைக்கட்டுகள் மண்மேடிட்டுப் போய்விடுமோ என்ற அச்சமும் ஒரு காரணமாக இருக்கிறது. ஆகவே, ஏதேனும் விசேஷமாக சலுகை காட்டவேண்டும் என்ற ஒரு நிலைமை இருக்குமானால், தனிப்பட்ட திட்டங்கள் அரசாங்கத்திற்கு வந்தால், அவைகளை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. அ. துரையரசன் : ஹரிஜனங்களுக்கு புறம்போக்கு நிலங்களை கொடுப்பதிலே சில ஊராட்சி மன்றங்கள் தீர்மானங்கள் போட்டுத் தருவதற்கு மறுக்கிறார்கள். ஏற்கெனவே சாகுபடி செய்துகொண்டு, குடியிருந்து வருகிற நிலங்களிலிருந்து அப்புறப் படுத்துவதற்காக மிரட்டப்படுகிறார்கள். இது சம்பந்தமாக இரண்டு தினங்களுக்கு முன் நம்முடைய உள்துறை அமைச்சர் அவர்களை நான் சந்தித்து, ஒரு தந்தியின் நகலைக் கொடுத்தேன். இதை துரிதமாகக் கவனிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசாங்கம் ஒரு தாக்கீது அனுப்புமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இவ்வளவு சிரமம் இருக்கவேண்டிய அவசியமில்லை. ஏதேனும் சிக்கல் இருக்கும்பட்சத்தில், ஒவ்வொரு ஜில்லாவிலும், ஹரிஜன நல இலாகாவுக்கு என்று ஒரு விசேஷ அதிகாரி இருக்கிறார். அவரிடம் இருக்கக்கூடிய கஷ்டத்தைச் சொல்லும்பட்சத்தில், அவர் பரிசீலனை செய்து, அதற்கு மேல் மாவட்ட ஆட்சித் தலைவர் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை அவர் நிச்சயம் எடுப்பார்.

திரு. தா. சின்னசாமி : தலைவர் அவர்களே, நில அடமான பவர் உள்ள கோட்டாட்சித் தலைவர்கள் அங்குள்ள சொந்தக்காரர்களுக்கும், அதே நேரத்தில் அவர்களுடைய ஜில்லாவை சேர்ந்தவர்களுக்கும் நில அடமானம் செய்துவிடுகின்றார்கள். ஹரிஜனங்கள் நில அடமானத்திற்கு விண்ணப்பம் கொடுத்தும் செய்யவில்லை. மேல் ராயப்பனூரில் 119 ஏக்கர் நிலங்கள் இதர ஜில்லாக்காரர்களுக்கு அடமானம் செய்ததை ரத்து செய்ததையும் குறித்து நமது கனம் அமைச்சர் அவர்களுக்கு நான் தனியாக எழுதி அனுப்பினேன். இதுவரையிலும் அரசாங்கம் ஏழை ஹரிஜனங்களுக்கோ, ஏழைக் குடியானவர்களுக்கோ நிலம் கொடுக்காததன் காரணம் என்னவென்று அறியலாமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த விவரம் என்னிடம் இல்லை. தனியாக ஒரு கேள்வியோ அல்லது மீண்டும் ஒரு கடிதமோ எனக்கு எழுதி அனுப்பினால், அதில் இருக்கக்கூடிய நிலையை தெரிந்துகொண்டு சொல்ல முடியும்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk* at the commencement of a speech indicates revision by the Member].

II. CALLING ATTENTION TO INCREASE IN FARES IN THE STATE TRANSPORT BUSES.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே அரசாங்கப் பஸ் போக்குவரத்தில் கட்டணங்கள் உயர்த்தப்பட்டதனால் பயணம் செய்யும் பொதுமக்கள் அடையும் இன்னல் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை நான் கனம் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : I wish to make the following statement. The cost of operation of buses has been steadily increasing since the Madras State Transport Department was formed in 1947-48. There has been a steady decrease in the net earnings per mile especially from 1960-61 despite the increased earnings per mile. The grant of benefits to workers, increases in cost of fuel, spare parts, etc., have contributed to the decrease in net earnings per mile. Passenger fares had also remained unchanged.

When in 1959 the cost of operation went up, it was pointed out that there were only three ways in which these increases could be met. The three methods were (1) increase in fares; (2) reduction in the cost of operation, and (3) increase in the operational efficiency. The increase in cost of operation has continued in the intervening five years and we have been able to manage this only because of the continued improvement in the operational efficiency. The cost of operation is made up of 65 per cent of fixed costs and 35 per cent of variable costs. The variable costs are largely made up of wages of various members of staff and price of diesel oil, etc., and it is not possible to effect any economy in these items. The cost of operations has not gone up on account of the overhead charges because the overheads have been kept more or less at the same level. As far as office staff are concerned, since 1956–57 there has been no substantial addition. Although the total fleet has gone up, the Department has been carrying on with the same old scale of staff. So far as traffic and technical staff are concerned only essential minimum staff absolutely necessary to cope up with the additional fleet strength has been added. At the same time efforts were made to improve operational efficiency without much increase in the staff. There was, therefore, little scope for further economy. The rates of fares for the city and mofussil services had been almost the same from 1947 except for mere conversion when decimal coinage was introduced in 1957. With the increasing cost of operation and without any increase in the fares for 16 years, the net profits of the undertaking are bound to go down as indicated in statement II in the Review on Nationalised Transport in the Madras State, 1963-64 which was placed on the Table of the House during the Budget session. The Government, therefore, considered the question of revision of fares and the fare

[Sri R. Venkataraman] [24th July 1964

structure has been revised with effect from 1st April 1964. If the fares had not been revised, the loss sustained by the Department would have to be met from the general revenues of the State; that is, not only the persons using the buses but also those who do not use them would have had to share the burden. However, representations have been made to Government that the fare structure and fixing of stages may be reviewed in order to mitigate the hardship caused by the new fare stages. A delegation headed by the Mayor of Madras met the Minister for Industries with a similar representation. The delegation has been requested to meet the Minister for Industries with specific instances where fixing of the present stages has caused undue hardship and also with suggestions how they consider that these stages can be revised on a more rational basis.

III. GOVERNMENT BILLS.

MR. SPEAKER : We will now take up Government Bills.

SRI K. A. MATHIALAGAN : Sir, I rise on a point of clarification regarding the programme of the House. கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம் நம்முடைய துணை சபாநாயகர் அவர்கள் அறிவித்த நிகழ்ச்சிநிரல்படி, 13 அல்லது 14 மசோதாக்கள் இந்த மன்றத்தின் முன்பு வர இருக்கின்றன. இந்த மன்றத்தின் நடவடிக்கையும் 27-ம் தேதியிலிருந்து 28-ம் தேதி வரையில் நீடிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் ஒரு முக்கியமான மசோதா இந்த மன்றத்தில் இடம் பெறவில்லை.

" According to Article 210 (1) of the Constitution, notwithstanding anything in Part XVII, but subject to the provisions of Article 348, business in the Legislature of a State shall be transacted in the official language or languages of the State or in Hindi or in English and according to Article 210 (2) unless the Legislature of the State by law otherwise provides, this article shall, after the expiration of a period of fifteen years from the commencement of this Constitution, have effect as if the words ' or in English ' were omitted therefrom . . . . " அதன்படி 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதியிலிருந்து ஆங்கிலத்தில் தொடர்ந்து நடவடிக்கை நடத்தவேண்டுமானால், இந்த மாதிரி ஒரு மசோதா கொண்டு வரவேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தத் தொடரில் ஏறத்தாழ 20 மசோதாக்கள் வரும்பொழுது . . . .

MR. SPEAKER : What is the hon. Member's clarification?

SRI K. A. MATHIALAGAN : My clarification is . . . .

MR. SPEAKER : Nothing concerning the Bills is now before the House.

SRI K. A. MATHIALAGAN : It is about the anxiety of the public.

MR. SPEAKER : I don't allow it.

24th July 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் பதில் சொல்வதாகத் தான் இருந்தேன். கனம் சபாநாயகர் அலவ் பண்ணுததினால், பதில் சொல்லவில்லை.

SRI K. A. MATHIALAGAN : Sir, on a point of order. About the anxiety of the public, I want to know whether. . .

MR. SPEAKER : I request the hon. Member to resume his seat. The hon. Member should obey the orders of the Chair.

SRI K. A. MATHIALAGAN : I am definitely obeying the orders of the Chair.

MR. SPEAKER : When the Chair is on its legs, the hon. Member should not stand. That is the first point to be observed by every hon. Member. If the hon. Member wants to bring in any new legislation or new matter or anything else, he can bring it in the form of a motion or something like that and not by way of clarification.

(1) THE MADRAS PUBLIC BUILDINGS (LICENSING) BILL, 1964.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

" That leave be granted to introduce the Madras Public Buildings (Licensing) Bill, 1964 ".

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS APPROPRIATION (NO. 4) BILL, 1964 (L.A. BILL NO. 26 OF 1964).

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That the Madras Appropriation (No. 4) Bill, 1964 (L.A. Bill No. 26 of 1964)[a] , be taken into consideration."

SRI V. R. NEDUNCHEZHIAN : I want to speak on the Appropriation (No. 5) Bill which relates to supplementary demands.

SRI M. KALYANASUNDARAM : I want to speak on this Bill.

THE HON. SRI R. VENKATARAMAN : There is a little confusion. There are two Appropriation Bills, Bill No. 4 is for " Supplementary Expenditure " for 1964–65 and Bill No. 5 is for the " Excess Expenditure " incurred during 1959–60. It has now been clarified.

MR. SPEAKER : The hon. Member, Sri M. Kalyanasundaram may speak now.

---

a Published in the *Fort St. George Gazette*, Extraordinary, dated 22nd July 1964.

[24th July 1964

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது நிதி ஒதுக்கக் கோரும் மசோதாவானது இரண்டு தினங்களுக்கு முன்பு இந்த சபையிலே விவாதிக்கப்பட்ட துணை மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டது. ரூபாய் 2 கோடியே 82 லட்சம் வரையில் அதிகமாகச் செலவு செய்யவேண்டுமென்று கோரிய மானியங்கள் நிறைவேற்றப்பட்டன. அதற்கு நிதி ஒதுக்கலாம் என்பதற்காகக் கொண்டுவந்திருக்கக் கூடிய மசோதா இது. ஏற்கெனவே இந்த சபை இந்த மானியங்களை அனுமதித்துள்ளது. இனி அதைச் செலவு செய்வதில் நிர்வாகம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சபையும், சபையினுடைய கமிட்டிகளையும் இலாகாக்கள் இன்னும் கவலையோடும், மரியாதையோடும் நடத்தவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அதற்காக பயப்படவேண்டும் என்று நான் சொல்லவில்லை. இந்த சபைக்கும், சபையினுடைய கமிட்டிகளுக்கும் கொடுக்கவேண்டிய மரியாதையை ஒவ்வொரு இலாகாவும் கொடுக்கவேண்டும். இந்தச் சபையோ அல்லது கமிட்டிகளோ சொல்லக்கூடிய கருத்துக்களுக்கும், அறிக்கைகளுக்கும் இன்னும் பொறுப்போடும், கவலையோடும் நிர்வாகம் பதிலளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு உதாரணத்தை இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி என்பது அரசாங்க வரவு செலவுக் கணக்குகளை, செலவு செய்த பிறகு, பரிசீலிக்கும் ஒரு பொறுப்புள்ள கமிட்டி. அந்தக் கமிட்டி செய்திருக்கும் சிபாரிசுகளை ஒரு இலாகா எப்படி கவனிக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். சீஃப் என்ஜினியர் (பப்ளிக் ஹெல்த்) அவர்களுடைய இலாகாவில் காண்டிராக்ட் விடுவது சம்பந்தமாக, அசிரத்தை இருந்ததன் காரணமாக, அதிகச் செலவு ஏற்பட்டது. சென்னையிலிருந்து நாகப்பட்டிணத்திற்கு இரும்புக் குழாய்கள் கொண்டு போவதற்கு விட்ட காண்டிராக்டில் பல குறைபாடுகள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அதை பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி நன்றாகப் பரிசீலனை செய்திருக்கிறது. சென்னையிலிருந்து நாகப்பட்டிணம் போவதற்கு எந்தச் சாலை வழியாகப் போக வேண்டும்? திருச்சி போய் நாகப்பட்டிணம் போக வேண்டிய அவசியமில்லை. நேரடியாகப் போவதற்குப் பாதை இருக்கிறது. ஒரு வருஷ காலமாக இந்தக் குழாய்கள் அங்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. அந்த காண்டிராக்டிலே எந்த
10-00 a.m. ரஸ்தாவை உபயோகப்படுத்த வேண்டுமென்றோ அல்லது தூரத்தைப் பற்றித் தெளிவாகச் சொல்லாததினால், அதிக தூரமாய் இருக்கக்கூடிய திருச்சி மார்க்கம் வழியாகச் சென்றதாகக் காட்டி, பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது.

பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி, நீண்ட மார்க்கத்தில் கொண்டு போகப்பட்டதா, அது உண்மையா, என்றே சந்தேகப்படுகிறது. உண்மையாகவே அதிக தூரமான மார்க்கத்தில் எடுத்துச் சென்றிருந்து, பில் கிளைம் பண்ணியிருந்தால் கூட ஒரு சிறிது நியாயம்

24th July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

உண்டு. ஆனால் சீஃப் எஞ்சினியர் கொடுத்திருக்கும் பதிலில் இருந்து பார்த்தால், அதிக தூரமான மார்க்கத்தில் எடுத்துச் சென்றது உண்மைதானா என்று பரிசீலிக்கப்படவில்லை என்றே தெரிகிறது. குறைந்த தூரம் உள்ள மார்க்கத்தில் எடுத்துச் சென்றுவிட்டு அதிக தூரம் உள்ள மார்க்கப்படி கணக்குக் கொடுக்கப்பட்டுள்ளதோ என்ற சந்தேகம் கிளம்புகிறது. அது தவிர அந்த இலாகா பல தவறுகள் செய்திருப்பதை பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி வெகு தெளிவாக எடுத்துக் காண்பித்திருக்கிறது. அப்படி பல குறைபாடுகள் இருக்கும் இடத்தில், ஐந்து குறைகளைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள் ' In conclusion the Committee would like to observe that it is far from happy at the manner in which the contract has been concluded and executed.'
கண்ட்ராக்ட் ஒப்பந்தம் செய்ததையும் ஆட்சேபிக்கிறார்கள், நிறைவேற்றிய முறையிலும் சந்தேகம் இருக்கிறது என்கிறார்கள்.

' It, therefore, considers that the case requires a detailed enquiry with reference to the following aspects :—

(i) The justification for inviting tenders, only from a limited number of persons without proper notice;
போதுமான அவகாசம் கொடுக்காமல், 10 தினங்களே கொடுத்து ஒரு சிலருக்கு மட்டும் நோட்டீஸ் அனுப்பி டெண்டர் கோரப்பட்டு இருக்கிறது.

(ii) Whether it was necessary to adopt the longer route when the benefit of the shorter route could be had;
அதிக தூரம் உள்ள மார்க்கம் ஏன்?

(iii) If the roads were in an unsatisfactory condition for a short time, what was the justification to allow the longer route throughout the period;
அப்படி ஒரு சில தினங்களுக்கு அந்த ரஸ்தாவில் பழுது இருந்தாலும் வருஷம் பூராவும் அந்த மார்க்கத்தில் குறைபாடு இருந்ததா?
' Whether the contractor has actually used the longer route '
இது தான் முக்கியமானது. உண்மையிலேயே அந்த மார்க்கத்தை அவர்கள் உபயோகித்தார்களா என்பதே தெளிவு படவில்லை.
" fixation of responsibility on individuals for lapses . . . .
அதற்கு யார் பொறுப்பு என்பதை விசாரிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் கிட்டத்தட்ட இரண்டு வருஷ காலத்திற்கு பிறகு அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன? சீஃப் என்சினியர் வெளிநாட்டுக்குப்போய் இருக்கிறார்கள் என்பதுதான் இப்பொழுது சபை முன் வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் இருந்து தெரிகிறது. இது மிக வேடிக்கையாக இருக்கிறது. அந்த சீஃப் என்சினியரும் வெளி நாட்டுக்கு சமீபத்தில்தான் போய் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதில் இருந்து என்ன தெரிகிறது. இந்தக் கமிட்டியின் ரிபோர்ட்டுக்குக் கொடுக்கவேண்டிய மதிப்புக் கொடுக்கப்படவில்லை. இலாகா அதிகாரிகளிடத்தும் சர்க்காரிடத்திலும் அசிரத்தை ஏற்பட்டு இருக்கிறது. அவர்கள் நினைக்கிறார்கள் போலும். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி இருந்தால் என்ன, யார் என்ன சத்தம் போட்டால் என்ன, மந்திரிகள் இருக்கிறார்கள், சபையில் நம்மைப்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [24th July 1964

பாதுகாத்து விடுவார்கள், என்ற எண்ணம் அதிகாரிகளுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதுதான் என் எண்ணம். ஒத்துக் கொள்ளுகிறேன், சபையில் குறை சொல்வதால் அவர்களுடைய திறமை குறையக்கூடாது, இனிஷியேட்டிவ் குறையக்கூடாது. ஆனால் குற்றங்களை சொல்லாமலும் இருக்க முடியாது. அவர்கள் திறமையாகவும் வேலை செய்யவேண்டும், குற்றம் குறைகளை தவிர்க்கவும் வேண்டும் என்ற பொறுப்பை உணர்ந்துதான் குற்றச் சாட்டை நான் கொண்டுவருகிறேன். இரண்டு வருஷ காலமாக கமிட்டி குறிப்பிட்ட குறைபாடுகளைப் பற்றி விசாரணை செய்யாமல் இருப்பது, அதன் மேல் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது அரசாங்கத்திற்கும் நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கும் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொண்டதாக ஆகாது. இந்த விஷயத்தில் அமைச்சரவர்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஒதுக்கிய தொகை சரியானபடி செலவு செய்யப் பட வேண்டும். நகராட்சி மன்ற சாலைகளை சரிப்படுத்த ரூபாய் 10 லட்சம் ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். நகராட்சி மன்ற எல்லை வரை போகும் ஹைவேஸ் சாலை சரியாக இருக்கும். ஆனால் மன்ற எல்லைக்குள் சென்றதும் ரோடுகள் படுமோசமாக இருக்கும். திருச்சி, சேலம் போன்ற முக்கிய நகரங்களில் சாலைகள் மோசமாக இருப்பதைக் காணலாம். இந்தக் குறையை தீர்க்க இந்தத் தொகை செலவு செய்யப்படவேண்டும். இப்பொழுது சாலைகள் எல்லாம் வெகு சீக்கிரத்தில் அதிகமாக பழுது ஆகி வருகின்றன. காரணம் அதிகப்படியான பஸ், லாரி, போக்கு வரத்துதான். அப்படிப் பழுதாகும் சாலைகளை சீர் செய்ய நிதி வசதி செய்து கொடுக்க வேண்டியது அவசியமே. அவர்கள் வீண் செலவோ, விரயமோ செய்வது ஒரு பக்கம் இருந்தாலும் இப்படிப் பட்ட சாலைகளை சரியானபடி பராமரிக்க முடியாத காரணத்தால், கஷ்டப்படுகிறார்கள். ஒதுக்கி உள்ள இந்தத் தொகையே போது மானது என்று நாம் கருதவில்லை. இருந்தாலும் ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். அந்தந்த சாலைகளை அவசரமாக சரிப்படுத்த கலெக்டர் அவர்கள் யோசனைகள் சொல்லி சாலைகளை உடனே அபிவிருத்தி செய்ய உத்தரவு போட வேண்டும். அதோடு கூட ஹைவேஸ் இலாகா அதிகாரிகள் பரிசீலனை செய்து பார்க்க வாய்ப்பு இருக்க வேண்டும். இப்பொழுது முனிசிபல் எஞ்சினியர்கள் இருக்கிறார்கள். முனிசிபல் காண்ட்ராக்டர்கள் ஒழுங்காக ஸ்பெஸிபிகேஷன்படி செய்யப்படுகிறதா என்று, சர்க்கார் கடன் கொடுப்பதால், ஹைவேஸ் அதிகாரிகள் மேற்பார்வை பார்ப்பது நியாயம். இப்பொழுது சென்னை கார்ப்பரேஷனுக்கு அரசாங்கம் கடன் கொடுத்தது. அதன் காரணமாக மேற்பார்வை பார்க்க அரசாங்க அதிகாரிகளிடம் பொறுப்பு கொடுக்கப்பட்டது. அதே போல நகராட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளை அவர்கள் செலவழிப்பதை ஹைவேஸ் அதிகாரிகள் மேற்பார்வை பார்ப்பது உதவியாக இருக்கும். அதை கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

24th July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

டைரக்டர் ஆப் விஜிலென்சைப்பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். டைரக்டர் ஆப் விஜிலென்ஸ் அண்ட் ஆண்டி கரப்ஷன் இலாகா என்பது புதிதாக நமது ராஜ்யத்திலே ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. அதற்காக பெருந் தொகை ஒதுக் கப்பட்டிருக்கிறது. சபையும் அனுமதித்துள்ளது. வேலை செய் யக்கூடிய முறையில் என்ன பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது, எந்த எந்த புகார்களை அவர்கள் கண்காணிப்பார்கள், என்பதற் கெல்லாம் இந்த சபைக்கு தகவல் இல்லை. நான் முயற்சி எடுத்துப் பார்த்தேன், அவர்களுக்கு என்னென்ன வேலை செய்ய பொறுப்பு கொடுத்திருக்கிறார்கள் என்பது பற்றி. ஆனால் எனக்கு ஒரு ஜி.ஓ. வை கொடுத்திருக்கிறார்கள். அதிலே இருப்பது எல்லாம் டைரக்டர் ஆப் விஜிலென்ஸ் என்று ஒருவரை அடிஷனல் ஐ.ஜி. அந்தஸ்தில் நியமிக்க உத்தரவு போட்டிருக்கிறார்கள், அவ்வளவுதான். அவர்கள் எப்படிப்பட்ட வேலை செய்வார்கள் என்பதற்கான தகவல் கொடுக் கப்படவில்லை. அது ரகசியமாக இருப்பதற்கும் நியாயம் இல்லை. அவர்களுக்கு எத்தகைய அதிகாரம் இருக்கிறது என்பது புரிபட வில்லை. இதற்கு முன்னேயும் ஆண்டிகரப்ஷனுக்காக எக்ஸ் பிராஞ்ச் இருந்ததுள். அந்த இலாகாவில் ஏதாவது இலாகா செகரட்டரி புகார்களை அனுப்பினால் விசாரணை செய்வார்கள். ஆனால் தாங்களாக எதையும் விசாரிக்க முடியாது. இந்த டைரக்ட ரேட் அந்த மாதிரி தானாகவே விசாரணையை எடுத்துக்கொள்ள முடியுமா? அவர்களுக்கு ஒரு பிரஜை, சட்டசபை அங்கத்தினராக இருக்க வேண்டும் என்பது இல்லை, யாராவது ஒருவர், தகவல் கொடுத்தால் இன்னின்ன ஸ்தாபனத்தில் இன்னின்னார் தவறு செய் கிறார்கள் என்ற தகவலைத் தந்தால் அவர்கள் உடனே நடவடிக்கை எடுக்கவேண்டும். விவரங்களை வேண்டுமானால் அரசாங்கத்திற்கு தெரிவித்து விட்டு, சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு தெரிவித்துவிட்டு அதன் மேல் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் கொடுக்கப்பட்ட புகாரின் மீது அவர்களாகவே விசாரணை செய்யக்கூடிய பூரண அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன். இன்னும் விசாரணை நடத்துவதில் என்குவயரி கமிஷ னுக்கு இருக்கக்கூடிய அதிகாரம், சாட்சிகளை வரவழைக்க ரெகார்டு களை வரவழைக்க மற்ற வகையில் விசாரணையை பூரணமாக நடத்த இந்த டைரக்டருக்கு அதிகாரம் இருந்தால் தான் எதிர்பார்க்கும் பலன் கிடைக்கும். அவர்கள் எடுக்கும் முடிவும் பொறுப்புள்ள தாக இருக்கும். விசாரணை கமிஷனுக்கு என்ன அதிகாரம் உண்டோ, அந்த அதிகாரம் இவர்களுக்கும் இருக்க வேண்டும். சில சந்தர்ப்பத்தில் அஸெஸர்களை வேண்டுமானால் வைத்துக் கொள்ள லாம். நிபுணர்களை உதவிக்கு வைத்துக் கொள்ளலாம். ஆலோசனைக் குழு இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் அந்த ஆலோசனை குழு விசாரணையில் பங்கு கொள்வது இல்லை. இவர் என்ன அபிப்பிராயம் கூறுகிறாரோ அதன் மீது தான் அபிப்பிராயம் கூற முடியும். ஆகவே, இந்த டைரக்டர் விசாரணை நடத்தும் சமயத்தில் அவர்கள் அஸெஸர்கள் வைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் 'பானல்' தயார் செய்து கொள்ளலாம். அதிலிருந்து

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [24th July 1964

யாரை வேண்டுமானாலும் அஸெஸராக வைத்துக்கொண்டு விசாரணை நடத்த வேண்டும். அவர்கள் வேலை முறைகள் என்ன என்பது தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. அவர்கள் எந்த முறையில் வேலை செய்யப் போகிறார்கள், எந்த முறையிலே அவர்கள் புகார்களைப் பரிசீலிக்கப் போகிறார்கள் என்பதைப்பற்றி தெளிவாக இருக்கவேண்டும். ஜனங்களுக்கும் தெரியவேண்டும். அப்பொழுது தான் பாதிக்கப்படுகிற மக்கள் அங்கே போய்ப் பரிகாரம் தேடிக் கொள்வதற்கு வசதி ஏற்படும். மத்திய அரசாங்க உள்துறை அமைச்சர் வாரத்திற்கு ஒரு நாள் ஒதுக்கி, அந்த நாளில், தானே லஞ்சப் புகார்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறார்; கொடுக்கும் மனுவைப் பெற்றுக்கொள்கிறார். அம்மாதிரி இங்கும் புகார்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்வதன் மூலமாக நல்லதொரு சூழ்நிலை ஏற்படக்கூடும். லஞ்சமும் சிபார்சும் இல்லை என்றால் எந்தக் காரியமும் நடக்காது என்ற அபிப்பிராயம் நாட்டிலே பரவி வருகிறது. எதற்கும் சிபார்சு கொண்டுபோகவேண்டும் அல்லது லஞ்சம் கொடுக்க வேண்டும் என்பது அதிகமாகி வருகிறது. சர்க்கரை விநியோகம் சிமெண்ட் விநியோகம் இப்படிப் பல்வற்றுக்கும் பர்மிட் வாங்கக் கூடிய சந்தர்ப்பம் இருக்கக்கூடிய காரணத்தால் லஞ்சத்திற்கும் சிபார்சிற்கும் அதிக இடம் இருக்கிறது. ஆகையால், இதிலிருந்து நிர்வாகத்தையும் காப்பாற்ற வேண்டும்; பொதுமக்களையும் காப்பாற்றவேண்டும். நிர்வாக அதிகாரிகளின்மீது அக்கிரமமான புகார் வாராது என்று நான் சொல்லவில்லை. அக்கிரமமான புகார்களிலிருந்து நிர்வாகம் காப்பாற்றப்பட வேண்டும். அதே சமயத்தில் ஜனங்கள் சொல்கிற புகார்களெல்லாம் அக்கிரமம் என்ற அபிப்பிராயத்திலும் அரசாங்கம் இருக்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். கீழ் மட்டங்களில் இருக்கும் காரியாலயங்களில் தாமதம் அதிகம். தாலுக்கா மட்டத்தில் உள்ள அலுவலகத்தில் இருப்பவர்களுக்குக் கடிதங்கள் எழுதினால் பதில் வருவதில்லை; காரியமும் சுலபமாக நடப்பதில்லை. சட்ட மன்ற உறுப்பினர்களில் பலர் இதை ஒப்புக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதினால் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப் படுவது இல்லை. சட்ட மன்ற உறுப்பினர்கள் எழுதுவதெல்லாம் பொது மக்களுடைய பிரச்னையாகத்தான் இருக்கும். ஏதோ பாலம் கட்டுவது போன்ற பொதுப் பிரச்னையாகத்தான் இருக்கும். அது பற்றிக் கடிதம் அங்கு எழுதினால் துரிதமாக நடவடிக்கை எடுக்கப் படுவதில்லை. பொதுமக்கள் விஷயத்திலும்கூடக் கால தாமதம் ஆகிறது. தாலூக்கா ஆபீசினாலும், கலெக்டர் ஆபீசினாலும்தான் அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் வரமுடியும். நிர்வாகத்திற்கு ஏராளமான பணம் செலவு செய்தும், இந்தக் காரியாலயங்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்கத் தவறியிருக்கிறார்கள். அதற்கு முயற்சி எடுக்கப்படவேண்டும். ப்ராக்ரஸ் எவாலுவேஷன் ஒவ்வொரு டிபார்ட்மெண்டுக்கும் இருக்க வேண்டும். வேலையினுடைய முன்னேற்றத்தையும் நாம் கணிக்கவேண்டும். ஒரு புகார் கொடுக்கப்பட்டதென்றால், அது என்ன ஆயிற்று, கோரிக்கை என்ன ஆயிற்று, குறிப்பிட்ட ஃபைலில் முன்னேற்றம் இருக்கிறதா என்று

24th July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

கண்காணிப்பதற்கு ஒவ்வொரு இலாகாவிலும் அமைப்பு இருக்க வேண்டும். எங்கே ஃபைல் தூங்கிக்கொண்டு இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து, தூண்டில் போட்டு எடுத்துக் கிளப்புவதற்கும் ஒவ்வொரு இலாகாவிலும் ஒரு சிறு ஸ்தாபனம் பொறுப்புள்ள அதிகாரியின் மேற்பார்வையில் ஒப்படைக்கப்பட்டால்தான் ஃபைல் வேகமாகப் போக உதவியாக இருக்கும். என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்லவேண்டுமானால், ஒரே காகிதம் என்ன ஆயிற்று என்று நான்கு செக்ஷன்களில் போய் விசாரித்தால்தான் அந்த ஃபைல் வேகமாகப் போகிறது. இல்லாவிட்டால் நான்கு நாளில் முடிய வேண்டிய ஃபைலுக்கு நான்கு மாதம் ஆகிறது. இதை வேகப்படுத்த நடவடிக்கை எடுப்பது இன்னும் பயனுடையதாக இருக்கும்.

ஸ்டாடிஸ்டிக்ஸ் டிபார்மெண்டில் இவால்யுவேஷன் குழு போடப்பட்டிருக்கிறது. ஸ்டாடிஸ்டிக்ஸ் டிபார்ட்மெண்டில் என்ன வேண்டுமானாலும் அபிவிருத்தி செய்யட்டும். அது உண்மையான இவால்யுவேஷன் குழுவாக இருக்க முடியாது. நம்முடைய சாதனைகளை மதிப்பிடும் குழுவாக அது இருக்கவேண்டும். ஸ்டாடிஸ்டிக்ஸ் டிபார்ட்மெண்டில் உள்ள இந்தக் குழுவிற்கு என்ன தெரியும்? இலாகாவினர் கொடுக்கும் புள்ளிவிவரத்தைச் சேகரிப்பார்களே தவிர சாதனைகளை புள்ளிவிவர அளவிலேதான் மதிப்பிடுவார்களே தவிர, முழு அளவிற்கு மதிப்பிட முடியாது. சாதனைகளுக்கும் புள்ளிவிவரத்திற்கும் எந்த அளவுக்கு உண்மையான சம்பந்தம் இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். திட்ட வேலைகளை மதிப்பிடுவதற்கு நிதி இலாகாவிலே இருக்கக்கூடிய ப்ளானிங் டிவிஷனோடு இணைந்த ஒரு இவால்யுவேஷன் கமிட்டி இருக்கவேண்டும். அந்த இவால்யுவேஷன் குழுவிலே ஸ்டாடிஸ்டிக்ஸ் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இருக்கலாம், ஸ்டாடிஸ்டிக்ஸ் செக்ஷனில் இவால்யுவேஷன் குழு போட இவ்வளவு பணம் ஒதுக்கியிருப்பதனால் ஸ்டாடிஸ்டிக்ஸ் தான் கிடைக்குமே தவிர திட்டங்களின் பலனை உண்மையாக மதிப்பிடுவதற்கு அது போதுமானதாக இருக்குமா என்ற சந்தேகம் இருக்கிறது. என்ன மாறுதல் வேண்டும் என்று அமைச்சர் அவர்களும் சம்பந்தப்பட்ட இலாகாவினரும் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கின்றேன்.

* திரு. இரா. நெடுஞ்செழியன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, 2 கோடி 82 லட்சம் ரூபாய்க்கு நிதி ஒதுக்கம் கோரும் மசோதாவின் மீது சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். 2 கோடி 82 லட்சம் ரூபாய்க்குத் துணை மானியக் கோரிக்கையை இந்த மன்றத்திலே வைத்து இப்பொழுது மன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். 2 கோடி 82 லட்சம் ரூபாய்க்கு நிதி ஒதுக்கம் செய்வது பெரிதல்ல. அதை எந்த அளவு அதிகாரிகள் நிறைவேற்றி வைக்கிறார்கள் என்பதைத்தான் நாம் மிக உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எந்தத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டதோ அதை நிறைவேற்றவேண்டிய நேர்த்தில் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை அதிகாரிகளும் மற்றவர்களும்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [24th July 1964

எடுத்துக்கொண்டால் தான், இங்கே துணை மானியக் கோரிக்கைகள் வைப்பதற்கும், அவற்றின்மீது விவாதம் நடத்துவதற்கும் நிதி ஒதுக்கம் செய்வதற்கும் உருவான பலன் ஏற்பட முடியும். நிறைவேற்றப்பட வேண்டிய சில திட்டங்கள் நிறைவேற்ற முடியாத அளவுக்கு இருக்கின்றன. அதிகாரிகளை ஊக்குவித்து, தக்க உத்தரவுகள் இட்டு, அவற்றை நிறைவேற்றுவதற்கான தீவிர முயற்சிகள் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். முன்கூட்டியே நிறைவேற்ற முடியாத பல்வேறு நிலைமைகள் வருகிறபோது, கடைசி நேரத்தில் பணத்தை மிச்சப்படுத்தி அதை சரண்டர் செய்கின்ற அத்தகைய நிகழ்ச்சிகள் சில துறையிலே ஏற்படுகின்ற காட்சிகளை நாம் பார்க்கின்றோம். அந்த நிலைமை ஏற்படாத அளவு, முன்கூட்டியே, தெரியக்கூடிய, இந்த ஆண்டு நிறைவேற்ற முடியாது என்று அறியக்கூடிய அத்தகைய துறைகளில் மிச்சப்படுகிற தொகையை முன்கூட்டியே சரண்டர் செய்கின்ற அத்தகைய முறையை வற்புறுத்தி மேற்கொண்டால்தான் அவற்றைச் செலவிட வேண்டிய இனத்திற்கு ஒதுக்கித் தருவதற்கு வழிவகை ஏற்பட முடியும். என்வே, இதை அதிகாரிகள் உன்னிப்பாகக் கவனித்து, துணை மானியக் கோரிக்கைகளில் வற்புறுத்தப்பட்டிருக்கிற திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்தல் வேண்டும். அதிகாரிகள் நிறைவேற்றுவதற்கான் வகையில் அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

ஆண்டுதோறும் பொதுக் கணக்குக் குழு தரும் அத்தகைய அறிக்கையில் இந்தச் சிபார்சு ஆண்டுதோறும் சொல்லப்பட்டே வருகிறது; மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டு வருகிறது. முன்கூட்டி அறிந்து இந்தத் தொகையை சரண்டர் செய்திருக்கலாம் என்ற குறிப்புகள் பல வகைகளிலே எடுத்துத் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அதைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க அதிகாரிகள் முன்வருதல் வேண்டும் என்று பொதுக் கணக்குக் குழுத் தலைவர் என்ற முறையிலே நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். பொதுக் கணக்குக் குழுவிற்கு அதிகாரிகள் தரும் அத்தகைய கணக்குகள் கூட, காலா காலத்திலே வந்து சேராத காரணத்தால் பொதுக் கணக்குக் குழுவினுடைய வேலைகள் தாமதப்படும் அத்தகைய நிலைமைகள் ஏற்படுகின்றன. அதற்குத் தக்க முயற்சி எடுத்து, குறிப்பிட்ட காலத்திலே அத்தகைய கணக்குகளும், அவைகளுக்கான பதில்களும் அதிகாரிகளிடத்திலிருந்து வந்து சேர்ந்தால் தான் பொதுக் கணக்குக் குழு ஆற அமர இருந்து அவற்றை ஆராய்ந்து தக்க முடிவுகள் எடுத்துச் சிபாரிசு செய்வதற்கும் வழிவகை ஏற்பட முடியும். அதையும் கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். எடுக்கப்பட்ட அத்தகைய திட்டங்கள் அத்தனையும் குறிப்பிட்ட காலத்திலே நிறைவேற்றப்படுகின்றனவா, எவை எவை நிறைவேற்றப்படாமல் தள்ளிப் போடப்படுகின்றன என்று கணக்கெடுத்து அந்த வகையிலே அந்தக் குறைபாடுகள் ஏற்படாமல் தடுக்கவும் தக்க முயற்சிகள் எடுக்க வேண்டும்.

24th July 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மற்றும், கல்வித் துறையைப் பொருத்து, துணை மானியக் கோரிக்கை விவாதத்தில் மன்ற உறுப்பினர்கள் தெளிவுபடக் கூறினார்கள். அது இப்பொழுது மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. இப்பொழுதிருந்தே தக்க நடவடிக்கை எடுத்தால்தான் அடுத்த ஆண்டு நிலைமைகளை நாம் சரிக்கட்ட முடியும். மாலை நேரக் கல்லூரி இந்த மாநிலத்தில் ஏற்படும் என்ற குறிப்பு முன்பு தரப்பட்டது. வேறு பல மாநிலங்களில் மாலை நேரக் கல்லூரிகள் இருப்பதால் பலர் படித்துத் தாங்கள் பெற விரும்புகிற பட்டப் படிப்பைப் பெறுவதற்கு வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கின்றன. நம் மாநிலத்திலும் மாலை நேரக் கல்லூரிகள் வைப்பதன் மூலமாகவும் ஷிப்ட் சிஸ்டம் வைப்பதன் மூலமாகவும் கல்லூரிகளில் உள்ள இட நெருக்கடியைப் போக்கலாம். மேலும், குறிப்பிட்ட நேரத்திலே, குறிப்பிட்ட அளவுக்குப் படித்து, அரசாங்கத்தின் அலுவலகங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் வேலை பார்க்கும் வாலிபர்கள் தங்கள் படிப்பின் அளவை உயர்த்திக்கொள்ள விருப்பப்படுகிறார்கள். பத்தாவது வரை படித்திருந்தவர்கள் பி.ஏ. பட்டதாரிகளாகவோ, எம்.ஏ. பட்டதாரிகளாகவோ ஆக்கிக்கொள்ள பல பேருக்கு விருப்பம் இருக்கிறது. அந்த விருப்பத்தை நிறைவேற்றித்தர வழிவகை செய்ய நம்முடைய அரசினர் முன்வருதல் வேண்டும். மாலை நேரக் கல்லூரியைப் பொருத்த வரையில் வேறு பல மாநிலங்களில் அதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கின்றன. இந்த மாநிலத்திலும் அப்படிப்பட்ட வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும் என்று உறுதிமொழி தரப்பட்டது. அது இன்னும் சரிவர நிறைவேற்றப்படாத நிலையில் தான் இருந்து வருகிறது. அவற்றை நிறைவேற்றி, அப்படி விருப்பப்படுகிற வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்கு அரசினர் தக்க நடவடிக்கை எடுத்துகொள்ளுதல் வேண்டும்.

அடுத்து, பர்மாவில் இருந்து இந்தியா வந்திருக்கிற அகதிகள் பற்றிய பிரச்சினை சரியான முறையில் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சென்னைத் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த கப்பலுக்கே சென்று அவர்களை வரவேற்றார்கள் என்று பத்திரிகை வாயிலாக அறிந்தேன். அவர்கள் அகதிகளாக வந்து சேருகிறார்கள். அவர்களுக்கு எப்படிப்பட்ட நிவாரணம் அளிக்க அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கிறது என்று கேட்டதற்கு பொற்கொல்லர்களுக்கு உதவியதுபோல உதவி செய்ய திட்டமிட்டு இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். பொற்கொல்லர்களுக்கும், இவர்களுக்கும் ஒரு வேறுபாடு எழக் கூடும். பொற்கொல்லர்களைப் பொருத்த வரையில் இந்த நாட்டிலேயே வீடு வாசலோடு, உற்றார் உறவினர்களோடு அவர்கள் வாழ்ந்து வந்தவர்கள். சிறு தொழில் வைக்க பண உதவி அளித்தது மட்டும் அவர்களுக்குப் போதுமானதாக இருக்கும் என்று கருதியிருக்கலாம்; ஆனால் பர்மாவில் இருந்து அகதிகளாகத் திரும்பி வந்துள்ளவர்கள் அனைவருக்கும் இந்த நாட்டில் வீடு வாசல், உற்றார் உறவினர்கள் உண்டு என்று

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [24th July 1964

சொல்ல முடியாது. சில குடும்பத்தைப் பொருத்த வரையில் 200 ஆண்டுகளுக்கு முன்பே சென்று அங்கேயே தங்கி விட்டவர்களின் சந்ததிகளுக்கு இந்தியாவுக்கு ஒரு முறை கூட வரச் சந்தர்ப்பம் இல்லாமலேயே போய் இருக்கக்கூடும். இங்கே அவர்களுக்கு உறவினர்களோ, வீடுவாசலோ இல்லாமல் இருக்கக்கூடும். அப்படி வீடு அறவே அற்ற அகதிகளுக்கு இங்கே வீட்டு வசதி தேடித்தர அரசினர் திட்டமிட வேண்டும். அவர்களுடைய திறமை, தொழில் திறன், சூழ்நிலைக்கேற்ப திட்டமிட்டு, அந்த அகதிகளுக்குப் புனர் வாழ்வளிக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லஞ்ச ஊழலைக் கண்டுபிடித்து ஒழிப்பதற்கு தனியாக ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தியிருப்பது எல்லோராலும் பாராட்ட வேண்டிய ஒன்றாகும். அந்த அமைப்பு நல்லமுறையில் பணியாற்றி நிர்வாகம் செம்மையாக நடைபெறுவதற்கும், சமுதாயம் ஒழுங்குபடுவதற்கும் உதவி செய்யும் என்ற நம்பிக்கையைப் பலர் கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையை நல்ல முறையில் நிறைவேற்ற இந்த அமைப்பு தீவிரமாக பணியாற்ற இந்த அரசு வழிவகை செய்ய வேண்டும். லஞ்ச ஊழலைக் கண்டு பிடித்து அவர்களே நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் வகையில் இந்த அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறார்களா அல்லது அவர்கள் கண்டு பிடித்து அரசினிடத்து கேட்டு, அரசுதான் எந்தெந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அமைத்திருக்கிறார்களா என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சர்க்கார் ஊழியர்களிடையே உள்ள லஞ்ச ஊழல்களைப் பற்றி மட்டும்தான் இவர்கள் விசாரணை செய்யலாம் என்று இருக்கிறதா? அல்லது பொது நிர்வாகங்களில் குறிப்பாக கூட்டுறவுத் துறை போன்றவற்றில் பெருகி வரும் பணம் கையாடல் போன்ற மோசடிகளையும் கண்டு பிடித்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதாக இந்தக் குழுவுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

இன்றைய தினம் 2 கோடியே 82 லட்சம் ரூபாயை துணை மானியமாக கோரப்பட்டிருக்கிற திட்டங்கள் எல்லாம் உள்ளபடியே வரவேற்க வேண்டியதாக இருக்கின்றன. இன்னும் அதிகம் கூட ஒதுக்க வேண்டும் என்ற அளவுக்கு கல்வித் துறை மற்றவை அமைந்திருக்கின்றன. திட்டங்களுக்கு பணம் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைவிட ஒதுக்கப்பட்ட பணம் எந்த முறையில் திட்டங்களுக்காக செலவிடப்பட்டிருக்கிறது என்பதில்தான் நாம் போதுமான கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். குறிப்பாக சட்ட மன்றத்தில் அங்கத்தினர்கள் எழுப்புகின்ற பிரச்னைகள் சரியான முறையில் ஆலோசனை செய்யப்பட்டதா, ஆலோசனை செய்யப்பட்டது என்றால் அதன் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி இந்த மன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும், மின்சார இலாகாவைப் பொறுத்தவரையில் மின்சார

24th July 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

போர்ட் மானியத்தின் மீது விவாதம் நடக்கிறபோது இந்த மன்ற உறுப்பினர்கள் என்ன என்ன கருத்துக்களைத் தெரிவிக்கிறார்களோ அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றிய ஒரு அறிக்கை இந்தச் சபையின் மீது வைக்கப்படுகிறது. அது போலவே மற்ற இலாகாவினரும் கனம் அங்கத்தினர்கள் அந்த அந்த இலாகா சம்பந்தமாகக் கூறுகிற புதுக் கருத்துக்களைத் தொகுத்து அவற்றின் மீது அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கை என்ன என்பதையும் தெரிவித்தால் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டது என்பது தெரியாமல் திரும்பத்திரும்ப இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லும் குறைகளை நீக்க முடியும். தாம் எழுப்பிய பிரச்சினை மீது அரசாங்கம் செய்துள்ள முடிவை அங்கத்தினர்கள் அறிந்து கொள்ளவும் முடியும். ஆகவே மின்சார போர்ட் இந்தச் சபையில் சமர்ப்பிக்கிற அறிக்கையைப்போல ஒவ்வொரு இலாகாவினரும் தங்கள் தங்கள் இலாகா சம்பந்தப்பட்டவரை விஷயங்கள் பற்றிய அறிக்கைகளை இந்த மன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சர் அவையும் அதிகாரிகளும் முன் வர வேண்டும் என்று கோரி என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் சீப் இஞ்சினியர் பப்ளிக் ஹைவேஸ் சம்பந்தமாக விசாரணை செய்யச் சொன்னார்கள். அது நடைபெறவில்லை என்று சொன்னார்கள். அவர் இப்பொழுது தான் அந்த விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். சர்க்கார் அதை பரிசீலனை செய்யும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ரோடுகள் சம்பந்தமாக நாம் கேட்டிருக்கிற மானியத் தொகையைக் கொண்டு முதல் கட்டமாக இப்பொழுது ஹைவேஸை எடுத்துக் கொண்டிருக்கிறோம். விஸ்தரிக்க வேண்டும் என்றால் பின்னால் பார்க்கலாம். மூன்றாவதாக டைரக்டர் ஆப் விஜிலென்ஸ் உடைய பொறுப்பு என்ன என்று கேட்டார்கள். டைரக்டர் ஆப் விஜிலென்ஸ் அவர்களுக்கு கொடுத்திருக்கிற அதிகாரம் சர்க்கார் அதிகாரிகளிடத்தில் தவறுகள் காணப்பட்டால் அவர்களே விசாரணை செய்யலாம் என்பதாகும். ஆனால் ஒரு கட்டத்தில் அவர்கள் தங்களுடைய விசாரணையின் முடிவை ஒவ்வொரு வழக்கு சம்பந்தமாகவும் அரசாங்கத்திற்கு அறிவிக்க வேண்டியிருக்கும். அதாவது சம்பந்தப்பட்ட இலாகா காரிய தரிசி, சீப் செகரட்டரி ஆகியவர்களுடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருக்கும். இந்த டைரக்டர் ஆப் விஜிலென்ஸ் ஸ்தாபனத்தின் பொறுப்பு இன்வெஸ்டிகேட் பண்ணுவதுதான். புகார்கள் ருஜுவாகத்தக்க நிலையில் இருந்தால் சர்க்கார் உத்தியோகஸ்தர் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள டி.டி.பி.-க்குத்தான் விடவேண்டும். டி.டி.பி., முடிவுதான் இறுதியான முடிவாக இருக்கும். பீனல் கோடு சம்பந்தமாக குற்றம் சாட்டப்படுகிறபோது கோர்ட்டுக்குப் போட்டு விடுவார்கள்.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [24th July 1964

சர்க்கார் சிப்பந்திகளின் மீது சந்தேகம் இருந்தால் இந்த ஸ்தாபனத்திற்கு யார் வேண்டுமானாலும் எழுதலாம். தனி நபர்களும் எழுதலாம். இலாகாக்களும் இன்ன விஷயம் பற்றி பரிசீலிக்க வேண்டும் என்று எழுதலாம். டைரக்டர் ஆப் விஜிலென்ஸ் அமைப்பின் வேலையே இன்வெஸ்டிகேட் செய்வது தான். பிறகு ட்ரிப்யூன்லுக்கோ, கோர்ட்டுக்கோ தான் போக வேண்டும். இவர்களே ஒரு முடிவு செய்ய அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது சர்க்கார் சிப்பந்திகளைப்பற்றி அவர்கள் விசாரணை செய்வது போலவே பொது நிர்வாகத் துறையில் கூட்டுறவுத் துறையில் நடைபெறுகிற மோசடிகளைப்பற்றியும் பரிசீலிப்பார்களா என்று கேட்டார். யாராவது குறிப்பிட்டு புகார் செய்து கொண்டால் விசாரணை செய்யலாம். அவர்களாகவே விசாரணை செய்வதற்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. சர்க்கார் அதிகாரிகளைப் பொறுத்த வரையில் அதிகாரம் பூராவாக இருக்கிறது. இது போலவே கூட்டுறவுத் துறையில் லோகல் போர்டுத் துறையில் விசாரிப்பது என்றால் அது மக்களால் தேர்ந்து எடுக்கப்படுகிற பிரதிநிதிகளுக்கு எம்பாரசிங் ஆக இருக்கலாம். ஆனால் புகார் எழுதி அனுப்பப்பட்டு இதில் ஓர் அளவு உண்மை இருக்கக்கூடும் என்ற சந்தேகம் எழுந்தால் அது பற்றி அவர்கள் விசாரணை செய்ய முடியும். மந்திரிகளுக்கே இப்பொழுது ஏராளமான புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதில் பாதி கையெழுத்துப் போடாத கடிதங்கள்தான். நாங்கள் அதைப் படித்துப் பார்த்து அத்தகைய புகார்களில் உண்மை இருக்கக் கூடுமா என்று ஆராய்ச்சி செய்கிறோம். இப்போது அந்த முறையிலே பல கடிதங்கள் வருகின்றன. ஒன்றும் இல்லாத ஒரு மொட்டைக் கடிதாசி வந்தது. அதன் பேரில் "மே பி இன்வெஸ்டிகேடெட் ஆஸ் எ டெஸ்ட் கேஸ்" என்று எழுதினேன். அதை இன்வெஸ்டிகேஷன் பண்ணியதில் கொஞ்சம் பணம் கூட வந்தது. ஆகவே, இதையெல்லாம் சர்க்கார் கவனிக்காது இருக்கிறார்கள் என்று எண்ணிக் கொள்ளக்கூடாது. எந்த விதமான தகவல்கள், எப்படி யார் மூலமாக வந்தாலும் அதைப் பற்றி விசாரணை செய்வதற்கு உடனடியாக ஏற்பாடுகள் செய்கிறோம். டைரக்டர் ஆப் விஜிலென்ஸ் ஓரிடத்தில் உட்கார்ந்து இந்த விதமான குறைகளை எல்லாம் நேரடியாக கேட்கவேண்டுமென்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. அவர்களுக்கு எழுதி அனுப்பினால் உடனடியாகக் கவனிப்பார்கள். அதற்கான வழிவகைகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன.

10-30 a.m.

'இவால்யுவேஷன்' செய்வது பற்றிக் குறிப்பிட்டார்கள். டைரக்டர் ஆப் ஸ்டாடிக்ஸ் புள்ளிவிவரம் தயார் செய்வார். உணவு உற்பத்தியைப் பற்றி எடுத்துக் கொண்டால் தஞ்சை ஜில்லாவில் தீவிர சாகுபடித் திட்டப் பிரகாரம் எவ்வளவு டன் உணவு உற்பத்தி ஆகியிருக்கிறது என்பதைப் பற்றி இவால்யுவேஷன் செய்யவேண்டும். டைரக்டர் ஆப் ஸ்டாட்டிஸ்டிக்ஸ் என்னென்ன உற்பத்தியாயிருக்கிறது என்ற கணக்கை, புள்ளிவிவரத்

24th July 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

தைக் கொண்டு வந்து கொடுப்பார்கள். அதை இவால்யுவேஷன் செய்யவேண்டும். சாதாரணமாக, என்னுடைய உரையைப் படித்துப் பார்த்தால் தெரியும். போர்டு ஆப் ரெவின்யூ மெம்பர் போன்ற ஒருவர் இருந்து அதை இவால்யுவேஷன் செய்வார். போர்டு ஆப் ரெவின்யூ இவால்யுவேஷன் செய்வது பைனான்ஸ் டிப்பார்ட்மெண்ட் இவால்யுவேஷன் செய்வதை விடப் பொருத்தமாக இருக்கும். போர்டு ஆப் ரெவின்யூ மெம்பர்கள் சீனியர் மோஸ்ட் ஆபீசர்கள். அவர்களுக்கும் பைனான்ஸ் டிப்பார்ட்மெண்டு, பிளானிங் ஸ்டாடிஸ்டிக்ஸ் ஆகியவற்றுக்கும் இடையே தொடர்பு கிடையாது. நம்முடைய ராஜ்யத்தில் உள்ள இண்டிபென்டண்ட் அதிகாரியைச் சொல்லச் சொன்னால் போர்டு ஆப் ரெவின்யூ மெம்பரைத்தான் சொல்ல முடியும். அவர்கள் கூறுகின்ற ஆலோசனை சர்க்காருக்கு உதவிகரமாக இருக்கும்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, குறித்த காலத்திலே பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டிக்குத் தகவல்கள் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். தகவல்களையெல்லாம் குறித்த காலத்தில் கொடுப்பதற்கு எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. உண்மையிலேயே பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியும், எஸ்டிமேட்ஸ் கமிட்டியும் நம்முடைய ஜனநாயகத்திற்கு இரண்டு தூண்கள் போலாகும். அந்த இரண்டு கமிட்டிகளும் செம்மையாக, திறமையாக வேலை செய்வதன் மூலமாகத் தான் சர்க்காருக்கு அரிய ஆலோசனைகள் கிடைக்க முடியும். தவறுகள் இருந்தாலும் தெரிந்து கொள்ள வழிவகைகள் ஏற்படும். அந்தக் கமிட்டிகளுக்கு எதாவது விவரங்கள் தேவையானால் அந்த விவரங்களைக் கொடுக்க சர்க்கார் முயற்சி செய்யும். ஏதாவது தகவல்கள் குறித்த காலத்தில் வரவில்லையானால் அந்தத் துறை சம்பந்தப்பட்ட மந்திரி அவர்களுக்கு நேரடியாக அதைப் பற்றி எழுதும்படி கேட்டுக் கொள்கிறேன். 'ஆஸ் சேர்மன், ஆப் தி பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி' சம்பந்தப்பட்ட மந்திரிக்குக் கடிதம் எழுதினால் அதை உடனடியாகக் கவனிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி சம்பந்தமாக, பொது விவாதத்தின்போதே பதில் சொன்னேன். மாலை நேரக் கல்லூரிகளைப்பற்றி இரண்டு பலத்த மாறுபாடான கருத்துக்கள் இருக்கின்றன. சிலர் தரம் குறைந்து விடும்; நஷ்டம் ஏற்பட்டு விடும் என்று சொல்கிறார்கள். சிலர் அதை நடத்துவதில் தவறில்லை என்று அபிப்பிராயம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பர்மா எவாக்வீஸை பொறுத்தவரை அவர்களுக்காக நாம் வகுத்த திட்டம் மிகவும் பயன்தரத்தக்கதாக இருக்கும். அவர்களிலே பலர் பர்மாவிலே சிறு கடைகளை வைத்துக் கொண்டிருந்தவர்கள். பொற்கொல்லர்களுக்கு இண்டஸ்ட்ரிஸ் வைக்கவேண்டுமென்று சொன்னால் எப்படி ஆயிரம் ரூபாய் கொடுத்து வருகிறோமோ அதே போன்று இவர்களுக்கும் ஸ்மால் ஸ்டேட் எய்டு

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [24th July 1964

இண்டஸ்ட்ரிஸ் ஆக்ட் பிரகாரம் 2,000 ரூபாய் கடன் கொடுத்தால் பெருவாரியான பர்மா அகதிகளுக்குப் புனர் வாழ்வு அளிக்க வழி வகை செய்ய முடியும். ஏதாவது குறிப்பிட்ட நபர்கள் வசதிக் குறைவானவர்களாக இருப்பார்கள். அவர்கள் வசதி இல்லை யென்று எழுதினால் பிரத்தியேகமாகக் கவனிக்க சர்க்கார் தயங்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சண்முகம் அவர்கள் பேசவில்லையென்றாலும் என்னிடத் தில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுக் கேட்டார்கள். "ஜனவரி மாதத்திலேயே ஹவுஸ் சர்ஜன்ஸ் வேண்டுமென்று உத்தரவு போட்டுவிட்டு ஏன் துணை மதிப்பீட்டில் கொண்டு வந்திருக் கிறீர்கள்?" என்று கேட்டார்கள். ஏன் பட்ஜெட்டிலேயே கொண்டுவரவில்லை? என்று கேட்டார்கள். அதற்கான உத்தரவு போடப்பட்டது ஜூன் மாதம் 6-ம் தேதி. ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்டாக 1964 ஜனவரியிலிருந்து கொடுத்தோம்.

திரு. ப. உ. சண்முகம்: நான் இரண்டு விஷயங்களைப் பற்றிக் கேட்டேன். ஒன்று ஹவுஸ் சர்ஜன்களைப் பற்றியது. அடுத்தது விற்பனை வரி நமூனாக்கள் அச்சடித்திருப்பதைப் பற்றிக் கேட்டேன் . . . .

கனம் சபாநாயகர்: அவர் முதல் விஷயத்தைப் பற்றிப் பேசி முடிப்பதற்குள் அடுத்ததைப் பற்றி கனம் அங்கத்தினர் கேட் கிறார்களே!

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒரு ரகசியம் சொல்லலாம் என்று நினைக்கிறேன். சட்டசபையிலே இரண்டு தவறான வாதமும், இரண்டு சரியான வாதமும் எடுத்துச் சொன்னால், சரியான வாதத்திற்குப் பதில் சொல்லிவிட்டு உட்கார்ந்து விடுவார்கள். ஆகவே, சொல்லுகின்ற வாதம் எல்லாம் சரியான வாதமாக இருந்தால் அதற்கெல்லாம் பதில் சொல்லவேண்டிய நிலைமை ஏற்படும். எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல முடிவதில்லை; சில விட்டுப் போய்விடும். இரண்டாவது திரு. சண்முகம் அவர்கள் சொன்னது, 'ஜனவரி மாதத்திலேயே விற்பனை வரி இலாகாவில் நமூனாக்கள் அச்சடிப்பதற்கு உத்தரவு போட்டிருந்தும் அது ஏன் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டிருக்கிறது, பட்ஜெட்டிலேயே ஏன் சேர்க்கப்படவில்லை?" என்று கேட்டார்கள். நமூனாக்கள் அச்சடிக்கவேண்டுமென்ற உத்தரவு முன்பே போடப்பட்டு விட்டாலும் அதற்கான தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டது எப்ரல் மாதத்தில்தான். இதிலே இன்னொரு விஷயத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். எப்ரல் மாதத்திற்கு முன்பே இதற்கான பணத் தொகை ஒதுக்கப்பட்டு செலவழிக்கும்படியான நிலைமை ஏற்படாவிட்டால் சரண்டர் செய்யவேண்டிய நிலைமை ஏற்படும். அப்போது திரு. சண்முகம் அவர்கள் என் சரண்டர் செய்யப்பட்டது என்று கேட்பார்கள். எனவே, 'ஆக்சுவல்' ஆக எப்போது செலவு செய்கிறோமோ அந்தச் செலவு ஏற்படுகின்ற சமயத்தில் அந்தப் பீரியடுக்குத்தான் மதிப்பீடு கொடுக்க வேண்டும். இப்போது நான் சொன்னது போல் நமூனாக்கள்

24th July 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

அச்சடிக்கவேண்டுமென்ற முடிவு எடுத்தது ஜனவரி மாதத்தில் எடுத்தாலும் கூட, அதற்காகப் பணம் தேவை என்று ஏப்ரல் மாதத்தில்தான் கேட்டார்கள்.

திரு. ப. உ. சண்முகம்: கனம் அமைச்சர் அவர்கள் தந்த விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுக்கு அளிக்கப்பட்ட குறிப்புகளிலே இந்த விளக்கம் கொடுக்கப்பட்டி ருந்தால் அந்தச் சந்தேகத்தைக் கிளப்பி இருக்கமாட்டேன்.

கனம் சபாநாயகர்: அதற்காக கனம் அங்கத்தினர் மேல் ஒன்றும் 'சார்ஜ்' கூறவில்லையே!

MR. SPEAKER : The question is—

"That the Madras Appropriation (No. 4) Bill, 1964 (L.A. Bill No. 26 of 1964) be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration

Clause 2 was put and carried.

The Schedule was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras Appropriation (No. 4) Bill, 1964 (L.A. Bill No. 26 of 1964) be passed."

MR. SPEAKER : Motion moved :—

"That the Madras Appropriation (No. 4) Bill, 1964 (L.A. Bill No. 26 of 1964) be passed."

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து இரண்டொரு ஆலோ சனைகளைக் கூற விரும்புகிறேன். இவால்யுவேஷன் ரிசல்ட் சம்பந்தமாக ரெவின்யூ போர்ட் மெம்பரே இருந்து பரிசீலனை செய்வார்கள் சாதனைகளைப்பற்றி என்று சொன்னார்கள். அந்தப் பரிசீலனை ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது இந்த சபை முன்பு அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டால் இந்த சபை அதை தொடர்ந்து பின்பற்றி கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்று. டைரக்டர் ஆப் விஜிலன்ஸ் விவரங்களை, நபர்கள் பற்றி யார் என்றிருக்க வேண்டிய தில்லை, தகவல்களைப்பற்றி ஆறு மாதத்திற்கு ஒரு முறை இந்த சபையில் ஒரு அறிக்கை வைக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக, ஸ்டேட் ஹௌசிங் போர்ட் சம்பந்தப்பட்டது. அமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள். காலதாமதத்தைப் பற்றிக் கூட வருத்தப்படவில்லை. காலதாமதம் ஆனாலும் காரியங்களைக் கவனித்தால் சிறப்பாக இருக்கும்.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [24th July 1964

ஹௌசிங் போர்டுக்கு பூர்வ சரித்திரம் உண்டு. திடீர் திடீரென்று தோன்றி பின் சட்டம் ஏற்படுத்தி ஒழுங்குபடுத்திய நிலை இருக்கிறது. அதிலுள்ள கஷ்டங்களை நான் உணருகிறேன். அது சம்பந்தமாக சட்டம் இயற்றிய சமயத்தில் ஒரு விஷயத்தை கவனிக்காமல் விட்டு விட்டோம் என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அதன் வரவு செலவுக் கணக்குகளையும், அறிக்கையையும் இந்த சபை முன்பு வைத்து அதன் பேரில் விவாதத்திற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதற்கு சட்டத்தில் இடமில்லை. சட்டத்தில் இடம் இல்லாவிட்டாலும் அப்படிச் செய்வதில் தவறு இல்லை. ஆடிட் ரிப்போர்ட் இங்கு வைக்க வேண்டுமென்று சட்டமிருக்கிறதே தவிர, நிதி நிலை அறிக்கையும், நிர்வாக அறிக்கையும் ஆண்டுக்கு ஒரு முறை இங்கு சமர்ப்பிக்கப்பட்டு இங்கு ஒரு விவாதத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is :—

"That the Madras Appropriation (No. 4) Bill, 1964 (L.A. Bill No. 26 of 1964) be passed.

The motion was put and carried and the Bill was passed.

(3) THE MADRAS APPROPRIATION (No. 5) BILL, 1964
(L.A. BILL No. 27 OF 1964).

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move :—

"That the Madras Appropriation (No. 5) Bill (L.A. Bill No. 27 of 1964) * be taken into consideration"

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

The Schedule was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move :—

"That the Madras Appropriation (No. 5) Bill 1964 (L.A. Bill No. 27 of 1964) be passed.

The motion was put and carried and the Bill was passed.

IV. GOVERNMENT MOTION.

CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That item 4 of the Agenda, viz., The Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1964 be taken up before item 3, viz. The Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 (L.A. Bill No. 21 of 1964)."

The motion was put and carried.

*Published in the the *Fort St. George Gazette*, Extraordinary, dated 22nd July 1964

24th July 1964]

III. GOVERNMENT BILLS—*cont.*

(4) THE MADRAS OCCUPANTS OF KUDIYIRUPPU (PROTECTION FROM EVICTION) AMENDMENT BILL, 1964.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I beg leave to introduce the Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1964* and move—

"That the Bill be taken into consideration".

The land owners, in anticipation of legislation for imposition of ceiling on agricultural land holdings were disposing of their lands on a large scale. In order to facilitate such disposal, they were also evicting from their kudiyiruppus the agriculturists and agricultural labourers occupying them.

The Government considered that such a large scale eviction would lead to agrarian unrest and should be put an end to. The Government, therefore, enacted the Madras Occupants of Kudiyiruppu (Protection from eviction) Act, 1961 (Madras Act 38 of 1961). so as to afford protection from eviction to occupants of kudiyiruppu for a period of three years. The intention then was to replace that Act by a permanent and comprehensive legislation conferring permanent rights on occupants of kudiyiruppu. The said comprehensive legislation can be enacted only after the law dealing with ceiling on land holdings, namely, the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act 1961 (Madras Act 58 of 1961) has been fully implemented and the surplus lands have been taken over, and after the completion of the ryotwari settlement of inam estates, minor inams and lease-holds. As this would take some more time, it is now proposed to extend the life of the Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Act, 1961 (Madras Act 38 of 1961) by three years.

The present opportunity is availed of to amend Section 7 of the Madras Act 38 of 1961 so as to alter the references to certain provisions of the Indian Limitation Act, 1908 (Central Act IX of 1908) into references to the corresponding provisions of the Limitation Act, 1963 (Central Act 36 of 1963) which repealed the former Act with effect from 1st January 1964.

I request the House, Sir, to accept the motion.

MR. SPEAKER : Motion moved :—

"That the Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1964 be taken into consideration".

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். அப்படி ஆதரிக்கிற போது சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்னும் மூன்று ஆண்டு காலத்திற்கு இந்தப் பாதுகாப்புச் சட்டம் நீடிக்கப்படுகிறது. விவரங்களை ஏற்கனவே அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். 1961-ல் மூன்று ஆண்டு காலத்திற்கு பாது

Published in the *Fort St. George Gazette*, Extraordinary, dated 15th July 1964.

காப்பு அளிக்கப்பட்டது. விவசாயத் தொழிலாளர்களை அவர்கள் குடியிருக்கும் மனைகளிலிருந்து வெளியேற்றக் கூடாது என்ற பாதுகாப்பு மூன்று வருடங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அதை இன்னும் மூன்று ஆண்டுகள் நீடிக்க இது கொண்டு வரப் பட்டிருக்கிறது. காலாவதியானால் திடீரென்று வெளியேற்றும் அபாயம் இருப்பதால் உடனடியாக இதை நீடிப்பது வரவேற்கத் தக்கது. அதற்கு ஆதரவு கொடுக்கலாம். ஆனால் ஏற்கனவே அமைச்சர் அவர்கள் நமக்கு 1961-ல் வாக்களித்தார்கள். தாற்காலிகமாக மூன்று ஆண்டுகள் பாதுகாப்பு கொடுக்கிறோம், பின்னர் எப்படி முடிவு செய்யலாம் என்பதுபற்றி யோசனை செய்யலாம் என்று அப்போது வாக்களிக்கப்பட்டது. அதேபோன்று சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம், நியாயவாரச் சட்டம் இவற்றையெல்லாம் கூடத் தீவிரமாகப் பரிசீலனை செய்து காம்ப்ரிஹென்சிவ் ஆக்ட் கொண்டு வரலாம் என்பதைப் பரிசீலனை செய்கிறோம் என்று மூன்று ஆண்டுகளாக அமைச்சர் அவர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது சொல்கிறார்கள்; மூன்று ஆண்டுகள் நீடிக்கிறேன் என்று. சிறிய இனாம் சட்டம், இனாம் எஸ்டேட் சட்டம் இவைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு அமல் நடத்துவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக இந்தப் பாது காப்பை இன்னும் மூன்று ஆண்டுகள் நீடிக்க வேண்டியிருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதைச் சீக்கிரம் செய்ய வேண்டும். என் தாமதம் ஆகிறது? விதிகள் பிறப்பித்து இந்தச் சபையில் வைக்கவில்லை. காரணம் என்னவென்று விளக்கினால் நன்றாகயிருக்கும். அதைப் பயன்படுத்திக் கொண்டு நிலத்திலிருந்து வெளியேற்றுகிறார்கள். சட்டத்தை வெளியிட்டு விட்டு அமல் நடத்துவதில் காலதாமதம் ஏற்படுவதால் அதிலுள்ள ஆபத்தை உணர வேண்டும். சட்டம் வருகிறது என்ற தகவல் இல்லாமல் இருந்தால் பரவாயில்லை. சட்டம் வந்து விட்டது. ஆனால் விதிகள் பிறப்பிக்கப்பட்டு அமல் நடத்தவில்லை என்றால் அதனால் குடியானவர்களுக்கு ஏற்படும் ஆபத்தை உணர வேண்டும். அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டைப் பகுதியில் இருந்து வருகிறார்கள். அவர்கள் அங்கு போய் ஆர்.டி.ஓ. வை விசாரிக்கட்டும். நான் சொல்வதைக் கேட்கவேண்டாம். உடனடியாக கலெக்டர்களுக்கு சர்குலர் அனுப்பி ஆர்.டி.ஓ. தலையிட்டு வெளியேற்றப்படுவதைத் தடுக்கவும், மரம் முதலியவற்றை வெட்டுவதைத் தடுக்கவும், சமுதாயத்திற்குள்ள பொதுவான பிரதேசத்தை இனாம்தார்கள் ஆக்கிரமிப்பதை அல்லது அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கியதாகச் சொல்லி ஆக்கிரமிப்பது எல்லாவற்றையும் தடுக்க ரெவின்யூ அதிகாரிகளுக்கு யோசனை சொல்லவேண்டும். ஒரு அறிக்கையாவது அனுப்பவேண்டும். மூன்று ஆண்டுகளுக்கு நீடிப்பதானால் மட்டும் போதாது. மனையைச் சொந்தமாக்க வேண்டும். இனாம் பகுதியிலும், ரயத்துவாரிப் பகுதியிலும் பிறர் மனையில் குடியிருப்பவர்கள் இருக்கிறார்கள். ரயத்துவாரிப் பகுதியில் உள்ளவர்

களுக்கு, ஹரிஜனங்களுக்கு நிலம் வாங்கி பட்டா செய்து கொடுப்பதைப் போன்று, மனையைப் பட்டா செய்து கொடுக்க வேண்டும். விவசாயம் அபிவிருத்தி அடைய வேண்டுமென்று விரும்புகிற காலத்தில் விவசாயத் தொழிலாளர்கள் 10, 12 மணி நேரம் வேலை செய்து விட்டு வீட்டிற்கு வந்தால் ஓய்வு பெற்று திரும்ப வேலைக்குச் செல்ல அவர்களுக்கு என்று வீடு அவசியம் தேவை. கிராமங்களில் குடியிருப்புப் பிரச்னை சிக்கலாக இருக்கிறது. நகரத்தில் மட்டும் அல்ல, கிராமப் புறத்திலிருக்கின்றவர்களுக்கு இது ஒரு பெரிய பிரச்னையாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதற்காகத் தனியாக சட்டங்கள் கொண்டு வந்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காக இனிமேல் நகர்ப்புற குடியிருப்பு மசோதா ஒன்று கொண்டுவரப் போகிறார்கள் என்று நினைக்கிறேன். அதே நேரத்தில் தற்போது வெளியேற்ற முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதையும், இதனால் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கும் பாதுகாப்பும் இருக்கக்கூடிய முறையில் இடம் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது இந்தச் சட்டம் மூன்று வருட காலம் நீடித்து வைத்துக்கொள்வதற்கு கேட்கப்பட்டிருக்கிறது. அது நல்லது தான். ஆனால் காம்ப்ரஹன்ஸிவ்வாக சட்டம் கொண்டுவரப்படும் என்று சொன்னது என்னவாயிற்று என்று தெரியவில்லை. பொதுவாகக் கழிந்த மூன்று வருடங்களில் அதாவது இந்த மூன்றாவது சட்டசபை காலத்தில் முக்கியமான சட்டங்கள் எதுவும் கொண்டு வரப்பட்டதாகத் தெரியவில்லை. பொதுவாக லெஜிஸ்லேஷன் பிரோகிராம் மந்தமாகத்தான் போய்க் கொண்டிருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. யூனிவர்ஸிட்டி சம்பந்தமாகச் சட்டம் கொண்டு வரப்போகிறோம் என்று சொன்னார்கள், அது இன்னும் கொண்டு வரப்படவில்லை. இப்படி பல இலாக்காகள் சம்பந்தமாகவும், கல்வி இலாகாவாகட்டும், ரெவின்யூ இலாகாவாகட்டும், எந்த இலாகாவை எடுத்துக்கொண்டாலும் அமைச்சர்கள் இங்கே வாக்களித்தபடி காம்ப்ரஹன்ஸிவ் முறையில் எந்தச் சட்டமும் கொண்டு வரவில்லை கடந்த மூன்று வருட காலத்தில். இதற்கு காரணம் என்ன? கடந்த சட்டசபையில் அதாவது இரண்டாவது சட்டசபை காலத்தில் முக்கியமாக நில உச்சவரம்பு சட்டத்தை இயற்றினோம்; கூட்டுறவு மசோதாவை இயற்றினோம்; பஞ்சாயத்துச் சட்டத்தை இயற்றினோம். இந்தச் சட்டங்கள் எல்லாம் சரியாக இருக்கின்றன என்று நான் சொல்லவரவில்லை; பல குறைபாடுகள் இருக்கலாம். இருப்பினும் முக்கியமான சட்டங்களை நாம் இயற்றியிருக்கிறோம் ஆனால் இந்தச் சட்டசபையில் ஏன் இந்த மந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது, சட்டங்கள் இயற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறார்களா, அல்லது இலாகாக்கள் சரியாக வேலை செய்யவில்லையா என்பதைப் பற்றி நாம் பரிசீலிக்க வேண்டும். இதற்கு ஒரு அமைச்சர் மட்டும் பொறுப்பை ஏற்க முடியாது. காபினெட் தான் இந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும். ஆகவே வாக்களித்தபடி எல்லாச்

சட்டங்களையும் அதாவது தேவைப்படுகின்ற எல்லா காம்ப்ரஹன்ஸிவ் சட்டங்களையும் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நிலத்திலிருந்து உழவர்களை வெளியேற்றுவது பற்றிய ஒரு தடையை இது குறிப்பிடுகிறது என்று கருதப்படுகிறது. அதிலும் கூட, நிலத்தில் வீடு கட்டிக்கொண்டு, குடியிருப்பவர்களுக்கு, எந்த விதமான இடுக்கண்களும் வராமல் **இருப்பதற்காக என்று** இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. குடி என்பதில் வாழ்க்கைக்காக வீட்டினுள் மட்டும் இருப்பவர்களை எடுத்துக் கொள்வதற்கில்லை. பொதுவாக நிலத்தில் இருந்து கொண்டு அதில் வேலை செய்து கொண்டு பக்கத்திலுள்ள நிலத்தில் வீடு வைத்துக் கொண்டு வாழ்கின்றவர்களையும் இது சர்வ அடக்கமாக (அதாவது காம்ப்ரஹன்ஸிவ் என்ற முறையில்) குறிக்கும். அந்த அளவில் இவர்களை வெளியேற்றுவதை தடுக்கக்கூடிய முறையில் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டியது மிக அவசியம். நிலத்திலிருந்து குடியானவர்களை அகாரணமாக வெளியேற்றுவது கூடாது பிரமாதமாக கருதப்படும் காரணத்திற்காக வெளியேற்றினால், அதாவது சட்டப்படி அல்லது நியாயப்படி வெளியேற்றினால், அதை யாரும் தடை செய்ய மாட்டார்கள். ஆனால் பல்வேறு காரணங்களுக்காக வெளியேற்றப்படுவதைத் தடை செய்ய வேண்டியது மிகவும் அவசியமானதொன்றாகும். குடியிருப்பிலிருந்து மட்டுமல்ல, நிலத்தில் பாடுபடுகிற உரிமையிலிருந்தும், அதிலும் நிலத்தில் பயிர் செய்கின்ற உரிமையிலிருந்தும், அவர்கள் வைத்திருக்கின்ற உடைமையிலிருந்தும் அப்புறப்படுத்துவதைத் தடைசெய்வது என்பதற்கும் இந்தச் சட்டம் விஸ்தரிக்கப்பட வேண்டும். இதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம். இந்தச் சட்டத்திலேயே இவற்றை எல்லாம் சேர்க்க முடியுமா என்று கேட்கலாம். நான் கூறுவது இதுதான். அதாவது எல்லாவற்றையும் சேர்த்து சர்வ அடக்கமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். நிலத்திலிருந்தும் குடியிலிருந்தும் வெளியேற்றப்பட அடிப்படையான காரணம் என்ன, ஏன் நீக்க வேண்டும் எதற்காக நீக்க வேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் பார்த்தால் தான் காரணம் புலப்படும். இனாம்தார்களோ, அல்லது உடமையாளர்களோ தங்களுடைய நிலத்தை விட்டு வெளியேறு என்று குடியானவர்களைக் கட்டாயப்படுத்துவதும் ஒன்று. இன்னொரு வகையில் பல்வேறு சூழ்நிலையில் இனாம்தார்கள் போன்றவர்கள் குடியானவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றுவதற்கு ஏதாவது கஷ்டங்கள் இருந்தால், கூட்டுறவுத் துறையில் இதைச் சேர்ந்துவிடப் போகிறோம் ஆகவே இங்கே இருக்கக் கூடாது என்று சொல்லி எளிதான முறையில் வெளியேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆகவே இவர்களை வெளியேற்றுவது இனாம்தார்கள் மட்டும் என்று

நினைத்துவிடுவதற்கில்லை. கூட்டுறவு போன்ற சொற்களை அல்லது முறைகளை வைத்துக் கொண்டு அதன் மூலம் சுலபமாக வெளியேற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதையும் நாம் மறந்து விடுவதற்கில்லை. அதையும் நாம் மனத்தில் கொள்ள வேண்டும்.

பழைய காலத்தில், பல் நூற்றாண்டுகளுக்கு முன்னால் உள்ள கிரயப்பத்திரங்களைப் பார்க்கும்போது "குடி நீங்காக் காராண்மையாக விலைக்கு விற்ற பரிசாவது:—" என்று பல சாசனங்களிலும், பல கோவில் கல்வெட்டுகளிலும், சர்வ மான்ய பத்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்ற சொற்றொடரை நம்மால் காண முடிகிறது. ஆகவே உழவுத் தொழில் புரிபவர்களையே முன்பு குடி என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஆகவே இதில் சொல்லப்பட்டிருக்கின்ற, உண்மைகளை எல்லாம் நாம் மனத்தில் கொள்ள வேண்டும். குடியிருப்பிலிருந்து மட்டும் குடியானவர்கள் வெளியேற்றப்படாமல் இருப்பதற்குள்ள தடை மட்டும் இருந்தால் போதாது, நிலத்தில் பயிர் செய்கின்ற உரிமை, அந்த உரிமை இருந்தால் குடியிருக்க அங்கே வீடுகட்டி இருப்பதற்கும் அக்கறை ஏற்படும். அந்த முறையில் நிலத்தில் உழுகின்ற உரிமையும், அதிலுள்ள பயனைப் பெறுகின்ற உரிமையும் அதை வைத்துக்கொண்டிருக்கின்ற உடைமையும் பாதுகாக்கப்படுமானால் தான் குடியிருப்பிலிருந்து வெளியேற்றுவதைத் தடைசெய்வது என்பதில் அர்த்தமுண்டு. குடியிருப்பிலிருந்து வெளியேற்றக் கூடாது என்று சொல்லும்போது, அவ்விதம் குடியிருப்பதற்கு அடிப்படையான காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்து செயல்பட வேண்டும். நிலத்தை வைத்திருக்கின்ற உரிமையும், நிலத்தில் உழுகின்ற உரிமையும் கொடுக்கும்போது தான், இம்மாதிரி தடை கொண்டுவருவதில் பயன் ஏற்படும். இவற்றையெல்லாம் மனதில் கொண்டு சட்டத்தை விளக்கமாகவும், தெளிவாகவும், சர்வ அடக்கமாகவும் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தகுதிமிக்க சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் 1961-ல் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டது. இப்போது அதை ஸ்திரமாக்குவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நான் எண்ணுகின்றேன். 1961-ல் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின் படி நிலத்தில் குடியிருக்கிற விவசாயிகளுக்கு நல்ல பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டிருந்தாலும் கூட, இந்தச் சட்டத்தினுடைய பலனை அங்கேயிருக்கின்ற விவசாயிகள் பெற முடியாமல் போய்விட்டது. காரணம் இடைக்காலத்தில் கொண்டுவரப்பட்ட நில உச்ச வரம்புச் சட்டம் செல்லாது என்று நீதிமன்றத்தில் தீர்ப்பு அளித்ததும், பின்னால் செல்லத்தக்கது என்று பாராளுமன்றத்தில் திருத்தம் கொண்டுவந்ததும், ஆகிய இந்த நிலைமைகளின் காரணமாக இடைக்காலத்தில் பல விவசாயிகளைப் பலாத்காரமாக நிலச்சுவான்தார்கள் நிலத்தை விட்டு,

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [24th July 1964

குடியிருப்பைவிட்டு வெளியேற்றியிருக்கிறார்கள். இப்போது இந்தச் சட்டத்தின் காரணமாக, இவ்விதம் வெளியேற்றப்பட்டவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பது தான் என்னுடைய கோரிக்கை. உதாரணமாக ஒரு விவசாயி 30, 40 வருடங்களாக குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து கொண்டு பரம்பரையாக ஒரு நிலத்தில் இருந்து வந்தாலும் கூட, நில உச்ச வரம்புச் சட்டத்தின் காரணமாக அந்த நேரத்தில் யார் நிலத்தில் இருக்கின்றார்களோ அவர்களுக்கு மீதியைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு, இப்போதே நிலத்திலிருப்பவர்களை நிலத்திலிருந்து பலாத்காரமாக வெளியேற்றிவிட்டால் குடியிருப்பவர்கள் இல்லை, ஆகவே அதற்குப் பதிலாக தன்னுடைய சுற்றத்தார், உறவினர் இவர்களுக்கு எழுதி வைக்கலாம் என்று காரணம் சொல்லி எழுதி வைத்துவிடுவார்கள். இந்தக் காரணத்திற்காகத்தான் இப்போது பல விவசாயிகள் பலாத்காரமாக வெளியேற்றப்படுகிறார்கள். இதற்காகப் பல கொடுமைகளையும் செய்து வருகிறார்கள். ஆகவே இந்த விவசாயிகளுக்கு இந்தச் சட்டத்தினால் பாதுகாப்பு இருக்க வேண்டும், அதற்கான வழிவகைகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல் நாங்கள் தான் இவ்வளவு காலமாக இந்த நிலத்தில் இருந்தோம் என்று விவசாயிகள் நிரூபிப்பதற்கு பெரிய ஆதாரங்களாக ஒன்றும் இல்லை. ஆனால் நிலத்தில் இருந்தார் என்பதற்கு அக்கம்பக்கத்திலுள்ளவர்களைக் கொண்டு தான் விவசாயிகள் நிரூபிக்க முடியும். அதுவல்லாமல் வேறு எந்த விதமான தஸ்தாவேஜுகளைக் கொண்டும் அவர்களால் நிரூபிக்க முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப் பட்டவர்களுக்கெல்லாம் நல்ல தகுந்த பாதுகாப்புக் கொடுத்தோ அல்லது விசாரணை செய்தோ அங்கே தான் இருந்தார்களா என்று கவனித்துச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

11-00 a.m.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் குடியிருப்புப் பாதுகாப்புச் சட்டத்தை நீடிக்கக் கூடிய மசோதாவை ஆதரித்து சில விஷயங்களைச் சொல்லுவதற்கு முன் வருகிறேன்.

விவசாயத் தொழிலாளிகளும், விவசாயிகளும் பிறருடைய மனைகளில் குடியிருந்து வருகிறார்கள். மனைக்காரர்கள் தங்களுடைய இஷ்டத்திற்கு விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளிகளையும் வெளியேற்றி வருகிறார்கள் என்பதைத் தடுக்கத் தான் இந்த மாதிரி ஒரு பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். இப்போது நடைமுறையில் எடுத்துக் கொண்டு பார்த்தால் இன்று குடியிருந்து கொண்டிருக்கிற விவசாயிகள் அல்லது விவசாயத் தொழிலாளிகளுக்கு தஸ்தாவேஜு பூர்வமாக நிரூபிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைக் காரணமாகக் கொண்டு குடியிருப்புக்குச் சொந்தமானவர்கள் முன்சீப் கோர்ட்டுக்குச் சென்று அந்தக் குடியிருப்பு தங்களுக்குத்

24th July 1964] [திரு. ஆ. கு. சுப்பையா]

தேவை என்று கோரி வழக்குத் தொடருகிறார்கள். அந்த வழக்கின் மீது முன்சீப் கோர்ட்டார் 3 மாதம் அல்லது 4 மாதம் கெடு கொடுத்து, கெடு முடிவதற்குள் குடிசையைப் பிரித்துக் கொண்டு போகவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து, விடுகிறார்கள். சகஜமாக எங்கள் மாவட்டத்தில் இந்த மாதிரி நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. குடியிருந்து வருபவர்கள் கோர்ட்டுக்குச் சென்று அங்கே குடியிருந்து கொண்டிருக்கிறோம் என்று வோட்டர் ஜாபிதாவைக் காட்டினாலும், அல்லது பஞ்சாயத்து போர்டு தலைவரிடமிருந்து அத்தாட்சியைக் கொண்டு நிரூபித்தாலும் கூட கோர்ட்டார் ஏற்றுக்கொள்ள மறுத்து விடுகிறார்கள். இந்த மாதிரியான ஒரு அபாயகரமான நிலைமை அந்தக் குடியிருப்பில் இருக்கிற விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அரசாங்கத்திற்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சர்க்காருக்குச் சொந்தமான தரிசு நிலங்களிலே, புறம்போக்கு நிலங்களிலே, பல ஆண்டு காலமாகக் குடியிருந்து கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு எந்த விதமான பாதுகாப்பும் கிடையாது. சர்க்கார் அதிகாரிகள் தங்கள் இஷ்டத்திற்கு, எப்போது வேண்டுமானாலும் அவர்களை வெளியேற்றி விடுகிறார்கள். அவர்கள் கோர்ட்டுக்குப் போக வேண்டியதில்லை. அதிகாரிகளை வைத்துக்கொண்டே வெளியேற்றி விடுகிறார்கள். பஞ்சாயத்துக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் புறம்போக்கு நிலங்களை ஒப்படைத்திருக்கிறார்கள். அந்தப் புறம்போக்கு நிலங்கள் பஞ்சாயத்துக்குத் தேவை என்று யார் பஞ்சாயத்துக்குச் சாதகமாக நடக்கவில்லையோ அவர்களை வெளியேற்றும் நிலையை ஏற்படுத்தி வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த மாதிரி ஆபத்திலிருந்து நிரந்தரமாகத் தடுக்க என்னுடைய ஆலோசனை, கிராமம் கிராமமாக அதிகாரிகளை நியமனம் செய்து யார் யார் பிறர் மனைகளில் குடியிருக்கிறார்கள் என்று கணக்கு சேகரிக்க வேண்டும். அதே போல அரசாங்கத்திற்குச் சொந்தமான மனைகளில் யார் யார் குடியிருக்கிறார்கள் என்று அந்தக் கணக்கையும் எடுத்துக் கொண்டு அந்த நிலங்களை அவர்களுக்குச் சாச்வதமாகச் சொந்தமாக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டால், இந்த ஆபத்தில் இருக்கிற ஏழை விவசாயிகளையும் விவசாயத் தொழிலாளிகளையும் பாதுகாக்க முடியும்; இந்த முறையில் அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ரா. சுப்பிரமணியம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் குடியிருப்பு மசோதாவை வரவேற்று நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

குடியிருப்பு மனைகளைப் பொறுத்த வரையிலே எங்கள் தஞ்சை ஜில்லாவிலே குடியிருப்பு மனைகளின் கஷ்டம் அங்கு வாழக் கூடிய ஹரிஜனங்களுக்கு மிக நன்றாகத் தெரிந்தது. ஏனென்றால்

[திரு. ரா. சுப்பிரமணியம்] [24th July 1964

பாரம்பரியமாக எத்தனையோ ஆண்டு காலமாக ஒருவர் பாட்டனார், முப்பாட்டனார் காலத்திலிருந்து ஒரு மனையில் குடியிருந்து வருவார். ஆனால் அந்த இடம் அவருக்குச் சொந்தம் கிடையாது. அந்த மாதிரி சொந்தமில்லாததால் எந்தச் சமயமும் அவரை வெளியேற்றி விடலாம். அதோடு மட்டுமல்ல. அந்த இடத்தில் குடியிருப்பதன் காரணமாக அவரை எந்த விதமான வேலையையும் செய்யும்படி நிர்பந்திக்கலாம். ஆகவே இந்தக் குடியிருப்பு மனைகளை அவரவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொடுப்பதன் மூலமாக சுயேச்சையாக வாழ வழியேற்படும் அதோடு எந்த வித நிர்ப்பந்தமும் இல்லாமல் தடுப்பது முக்கிய அம்சம் ஆகும். எனவே இதை மனதில் கொண்டு தான் சர்க்கார் குடியிருப்பு மனைகள் விஷயத்தில் மிகத் தீவிர கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று நாம் சொல்லித் தெரிந்து கொள்ளத் தேவையில்லை. சாதாரணமாக எங்கள் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் யாருக்குமே குடியிருப்பு மனைகள் சொந்தம் இல்லை என்ற வார்த்தை போய், அநேகமாக ஓரளவுக்கு அவர்கள் குடியிருக்கும் மனைகள் அவர்களுக்குச் சொந்தம் என்று இப்போது ஏற்பட்டுக்கொண்டுவருகிறது. எங்கள் தஞ்சை ஜில்லாவில் மட்டும் இப்போது 20,000 மனைக்கட்டுகளுக்கு மேல் நமது சர்க்கார் அக்வயர் செய்திருக்கிறார்கள். அது 20,000-க்கு மேலேயே போகும் என்று நான் நினைக்கிறேன். அத்துடன் கூட இந்த மனைக்கட்டு விஷயத்தில் மிகத் தீவிரமாக இருப்பதன் காரணமாக இப்போது கூடிய சீக்கிரத்தில் இந்தப் பிரச்னையை முடித்து விடவேண்டுமென்று தனியாக திரு. பரமேஸ்வரன் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி போட்டு, அந்தக் கமிட்டி பல ஜில்லாக்களைச் சுற்றி வந்து, இப்போது ரிப்போர்ட் தயாரிக்கும் நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட் வந்த பிறகாவது நான் என்ன சொல்லுகிறேன் என்றால் ஏதாவது ஒரு திட்ட அடிப்படையில் இரண்டு, மூன்று வருஷங்களுக்குள் பாரம்பரியமாக இருந்துகொண்டு வந்தவர்கள் சம்மந்தப்பட்ட மட்டில் இந்தப் பிரச்னை தீர்ந்து விடும் அளவுக்கு சர்க்கார் திட்டம் போட்டுச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது வந்துள்ள இந்த மசோதா 1961-ல், மூன்று வருஷ காலத்துக்கு எந்த விதமான மனைக்கட்டில் குடியிருந்தாலும் அவர்களை அப்புறப் படுத்தக் கூடாது என்று கொண்டு வந்தது. மூன்று வருஷங்களுக்குள்ளாக காம்ப்ரெஹென்சிவ் டெனன்சி லெஜிஸ்லேஷன் அல்லது உச்ச வரம்புச் சட்டம் அமலுக்குக் கொண்டு வந்து விடலாம் என்ற நோக்கத்துடன் செய்யப்பட்டது. அதிலே தாமதம் ஆனதால் இதை நீடித்து வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது மனைக்கட்டுகளில் குடியிருந்து வருகிறவர்களெல்லாம் ஒன்று மிராசுதார்களுக்குச் சொந்தமாக இருக்கிற இடங்களில் குடியிருந்து வருகிறார்கள், இல்லையென்றால் சர்க்காருடைய புறம்போக்கில் குடியிருந்துகொண்டு வருகிறார்கள். இந்த இரண்டுக்கும் இப்போது ஓரளவு நிர்ப்பந்தம்

24th July 1964] [திரு. ரா. சுப்பிரமணியம்]

ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் லாண்ட் ஸீலிங் ஆக்ட்டால் பாதிக்கப்படக் கூடிய பெரிய மிராசுதார்கள் நமக்கே தொந்தரவு வருகிறது, மற்றவர்களுக்குத் தொந்தரவு செய்தால் என்ன என்ற மனப்பான்மை அவர்களுக்கு இருக்கிறது. சந்து பொந்து எந்த இடத்திலிருந்தாலும் ஒரு லாப்ஹோல் இருந்தாலும், இது எனக்குச் சொந்தமான இடம், பாரம்பரியமாக இருந்தாலும், இது வரையில் எந்த விதமான தொந்தரவும் இல்லாமல் இருந்தாலும் கூட, எப்படியாவது வெளியே போங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. லாண்ட் ஸீலிங் ஆக்ட்டை முழுமையாகக் கொண்டு வந்த பிறகு யோசிக்கலாம் என்றாலும் அதைச் சீக்கிரமாகக் கொண்டு வந்தால் பரவாயில்லை. இந்தப் பிரச்னையைச் சீக்கிரமாகத் தீர்க்கவேண்டும். அத்துடன் கூட சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் இருப்பவர்களுக்கு பஞ்சாயத்து மூலமாக நிர்ப்பந்தம் வருகிறது. இப்போது ஏதாவது புறம்போக்கு நிலத்தில் எத்தனையோ ஆண்டு காலம் இருந்தாலும்கூட அந்த இடத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கவோ அல்லது ஜாரி செய்து கொடுக்கவோ பஞ்சாயத்தின் சம்மதம் வேண்டும். கிராமப் புறங்களில் பார்த்தால் பஞ்சாயத்தில் ஜாதி இந்துக்கள் தான் மெஜாரிட்டியாக இருக்கிறார்கள். ஆகவே இப்போது பஞ்சாயத்தைப் பொறுத்த வரையில் ஹரிஜனங்களுக்கு மனை வழங்காமல் ஜாதி இந்துக்கள், ஹரிஜனங்கள் என்ற அந்த பூசல் வந்துகொண்டிருக்கிறது. ஏனென்றால் பஞ்சாயத்திலே உண்மையிலேயே பிரசிடெண்டுக்கு மறுபடியும் பிரசிடெண்டாக வரவேண்டுமென்ற ஆவலில் ஹரிஜனங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும் மெம்பர்கள் ஒத்துவரமாட்டோம் என்கிறார்கள். இந்த விதத் தகராறு இருப்பதால் பஞ்சாயத்து சம்மதம் தெரிவிக்கத் தயக்கம் காட்டுகிறார்கள். இந்த மாதிரி பல கேஸ் வந்து நாங்களே கலெக்டரிடம் சொல்லியிருக்கிறோம். இது மாதிரி தகராறு இருந்தால் ஓவர்லுக் செய்ய எனக்கு அதிகாரம் இருக்கிறது என்று அவர் சொல்லுகிறார். ஒவ்வொரு கேஸுக்கும் கலெக்டர் அளவுக்கு வந்து அவர் ஓவர்லுக் பண்ணி செய்துகொண்டு போக வேண்டுமென்றால் கஷ்டம் ஏற்படுகிறது. பஞ்சாயத்தைப் பொறுத்த வரையில் சர்க்காருக்குச் சொந்தமான புறம்போக்கு நிலமாக இருந்து அந்த இடத்தில் ஹரிஜனங்கள் குடியிருந்தால் அந்த இடத்தில் அவர்களுக்கு அதிகாரம் இருக்கக் கூடாது என்ற ஷரத்தைச் சேர்த்துவிட்டால் நலமாக இருக்கும். சர்க்கார் புறம் போக்கை விட, மிராசுதார்களுக்குச் சொந்தமாக இருக்கும் இடங்களில் தான் பல விதமாகக் கோர்ட்டுக்குப் போகும் தொந்தரவு ஏற்படுகிறது. அவர்களுக்கே விரக்தி ஏற்பட்டு விட்டது. இந்த நேரத்தில் நமக்கு உள்ள நிலம் தான் போகிறதே, மற்றவர்களுக்கும் தொந்தரவு கொடுத்தால் என்ன என்று தீவிரமாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இன்னொரு கஷ்டம் என்ன என்றால், கோர்ட்டுக்குப் போனால் அநேகமாக மிராசுதார்களுக்குத் தான் ஜெயிக்கும். காரணம் இந்த இடத்தில் ஹரிஜனங்கள் தான் குடியிருந்தார்கள் என்று ப்ரூஃப்

[திரு. ரா. சுப்பிரமணியம்] [24th July 1964

செய்ய ரெக்கார்டு எதுவும் கிடையாது. அதுமாதிரி இல்லாத தனால் அவர்கள் தாங்கள்தான் குடியிருந்தோம் என்று 'ப்ரூவ்' பண்ணமுடியாத நிலையில் போய்விடுகிறது. அதனால் அவர்களுடைய கேஸ் தோற்று விடுகிறது. இதையெல்லாம் ஒருங்கிணைத்துப் பார்த்து, அவர்கள் குடியிருக்கக்கூடிய இடங்களிலிருந்து வெளியேற்றப்படாமல் இருப்பதற்கு, ஏதாவது ஒரு நல்ல முடிவு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன் வணக்கம்.

* **திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, சேலம் ஜில்லாவிலே மலை ஜாதியினர் இருக்கிற இடம் வேடப் பட்டி கிராமம். அங்கே மலை ஜாதியினர்கள் வீடுகள் கட்டிக் கொண்டு, 10 வருஷம், 15 வருஷம், 20 வருஷங்களாக நீண்ட நாட்களாக அதே இடத்தில் குடியிருக்கிறார்கள். அதே நிலத்தில் விவசாயம் செய்துகொண்டு வருகிறார்கள். இப்பொழுது இரண்டு மாதங்களுக்கு முன்பு இந்த நிலங்களை யெல்லாம் அவர்கள் விட்டு விட வேண்டும் என்று தாசில்தாரிடத்திலிருந்து அவர்களுக்கு அறிக்கை வந்திருக்கிறது. அதன்பேரில் எல்லோரும் வந்து என்னிடம் முறையிட்டார்கள். தாசில்தார், கலெக்டரிடம் 'இவர்கள் 20, 25 வருஷ காலமாக அந்த நிலங்களில் குடியிருக்கிறார்கள். அவர்கள் இப்போது வெளியேறவேண்டும் என்றால், வீட்டைப் பிரித்துக்கொண்டு எங்கே போவார்கள், ஆகவே அந்த நிலங்களை அவர்களே விவசாயம் செய்யும்படியாக நீங்கள் ஆதரவு தர வேண்டும்' என்று எழுதிக் கொடுத்திருந்தேன். ஆனால், இன்னும் ஒன்றும் தெரியாமலே இருக்கிறது. இன்னும் அது பரிசீலனையிலேயே இருக்கிறது. அவர்களே அந்தப் புறம் போக்கு நிலத்தில் விவசாயம் பண்ணும்படியாகவும் அங்கேயே அவர்களைக் குடியிருக்க அனுமதித்தும் கலெக்டருக்கும், தாசில்தாருக்கும் ஒரு ஆர்டர் அனுப்பி, மலை ஜாதியினர்கள் அந்த நிலங்களையே சாகுபடி செய்து கொண்டு, குடியிருந்து கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஆதரவு தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஆ. துரையரசன்:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்தக் குடியிருப்பு மனை மசோதாபற்றி என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய அங்கத்தினர்கள் பலர் இருக்கிற குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினார்கள். தஞ்சை மாவட்டத்தில் சிறப்பாகச் செய்திருக்கிற வேலைகளைப்பற்றி ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். பட்டுக்கோட்டை, அரந்தாங்கி வட்டாரங்களில் பன்னெடுங்காலமாகக் குடியிருந்து வருகின்ற ஏழை குடிமக்கள், ஏழை ஹரிஜனங்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்படாமல் இருப்பது ஒருபுறம் இருக்க, மற்றொருபுறம் நிலத்தில் குடியிருப்பவர்களை வெளியேற்றுகின்ற படலம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்ித்து, இவைகளுக்கெல்லாம் பரிகாரம் தேடவேண்டும் என்று நாங்கள்

24th July 1964] [திரு. ஆ. துரையரசன்]

கேட்கின்ற நேரத்தில், அவர்கள் எங்களுக்குத் தருகின்ற பதில், ஒரு வட்டத்திற்கு ஒரு தாசில்தார் இருந்தால் தான் இந்த வேலைகளை செவ்வனே செய்ய முடியும் என்பது தான். அறந்தாங்கி பட்டுக் கோட்டை உள்ளிட்டு 5, 6 தாலூகாக்களுக்கு ஒரு தாசில்தார் தஞ்சையில் இருக்கிறார். பட்டுக்கோட்டை, அறந்தாங்கி இரண்டிற்கும் சேர்த்து ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பட்டுக் கோட்டையில் இருக்கிறார். இந்த வட்டாரங்களில் போடப்பட்ட மனுக்கள் இதுவரைக்கும் பரிசீலிக்கப்பட்டனவா, நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டனவா என்று பார்த்தால், இல்லை என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தஞ்சை மாவட்ட அபிவிருத்திக் குழு மன்றத்தில் இதுபற்றி நான் ஒரு தீர்மானம் தந்து பேசுகிற நேரத்தில் அந்த வட்டாரங்களில் இருக்கிற பல பஞ்சாயத்துக் கூட்டு மன்றத் தலைவர்கள் பாராளுமன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் கூட விளக்கம் தந்தார்கள். குடியிருப்பு மனைகளில் இருப்பவர்களை வெளியேற்ற பஞ்சாயத்து போர்டு உறுதுணையாக இருக்கிறது. பஞ்சாயத்து போர்டுகளுக்குச் சொந்தமாக அந்த இடங்கள் ஆக்கப்பட்டுவிட்டன என்று சொல்லி, பரம்பரையாக குடியிருப்பவர்கள், பரம்பரையாக நிலத்தில் உழுபவர்கள் கூட வெளியேற வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இவைகளுக்கெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பரிகாரம் தேடவேண்டும் என்று கூறிய நேரத்தில் கூட, பஞ்சாயத்துத் தீர்மானம் தர மறுத்தால், நியாயமான கோரிக்கையாக இருந்தால், அவர்களை வெளியேற்றுவது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு எடுக்கவேண்டும் என்று சொன்னபோது, கவனிப்பதாகச் சொன்னார்கள். அப்பொழுது இருந்த ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் எழுந்து, இப்படி பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரங்களையும் கொடுத்து, அவர்கள் வெளியேற வேண்டும் என்று தீர்மானித்த பிறகு வெளியேற்ற வேண்டும் என்று முடிவு எடுத்தால், அது ஜனநாயகத்திற்குப் புறம்பாயிற்றே என்ற கருத்தைத் தெரிவித்தார்.

நான் இதைச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம் இந்தப் பிரச்னை பட்டுக்கோட்டை, அறந்தாங்கி வட்டங்களில் பலமாக இருக்கிறது. இவைகள் துரிதமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பது தான். இரண்டு தினங்களுக்கு முன்பு ஹரிஜன நலத்துறை அமைச்சர் அவர்களை நான் சந்தித்து எனக்குக் கிடைத்த ஓர் தந்தியின் நகலை அவரிடம் கொடுத்தேன். எங்களுடைய வட்டாரத்தில் தென்னமாரி கிராமத்தில் 20-க்கும் மேற்பட்ட ஹரிஜனக் குடிகள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று ஜாதி இந்துக்களால் பஞ்சாயத்து போர்டு தலைவர் உள்ளிட்டு மிரட்டுகிறார், அவர்களுக்குப் பாதுகாப்புத் தேவை என்று அமைச்சர் அவர்களுக்கு அனுப்பிய விண்ணப்பத்தின் நகலையும், ஒரு தந்தியையும் எனக்கு அனுப்பியிருந்தார்கள். அந்த தந்தியைக் கூட நான் இங்கே வைத்திருக்கிறேன் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்

[திரு. ஆ. துரையரசன்] [24th July 1964

கொள்கிறேன். அறந்தாங்கி, பட்டுக்கோட்டை பகுதிகள் உள்பட 6 தாலுகாக்களுக்கும் ஒரு தாசில்தார் என்று இருப்பதை மாற்றி, வட்டத்திற்கு ஒரு தாசில்தார், தேவையான ரெவின்யூ இன்ஸ்பெக்டர் நியமித்து இப்பொழுது குடியிருப்பவர்களுடைய பிரச்னையைக் கவனித்து விரைவிலே தீர்ப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளும் துரிதமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் குடியிருப்பு பாதுகாப்புச் சட்ட நீடிப்பு சம்பந்தமாக பல அங்கத்தினர்கள் அவர்களுடைய பகுதியில் இருக்கக்கூடிய நில சீர்திருத்தத்தில் இருக்கக்கூடிய சிக்கல்கள் குறித்துப் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. இந்த நீடிப்பு சட்டத்தைப் பொறுத்தமட்டிலும் பேசவேண்டும் என்று நினைத்தால், பல அங்கத்தினர்களுக்கும் இதிலே வேறுபட்ட கருத்து இருக்க முடியாது. இருந்தாலும், அவர்கள் பேசும்பொழுது சொல்லிய அத்தனை ஆலோசனைகளுக்கும் குறிப்பாக நான் இந்த நேரத்தில் பதில் சொல்லாவிட்டாலும் கூட பொதுவாக நில சீர்திருத்தம் சம்பந்தப்பட்ட சட்டங்கள் விரைவிலே நல்ல முறையிலே அமுல் ஆவதற்கு என்னென்ன முயற்சிகள் எடுக்கவேண்டுமோ அவைகளை அரசாங்கம் எடுக்கும் என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் பேசும்பொழுது சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட ஜமீன் ஒழிப்புச் சட்டம், அது சம்பந்தமான மற்ற சட்டங்களெல்லாம் அமுலாவதிலே கொஞ்சம் தாமதம் இருக்கிறது, அதற்குத் தேவையான விதிகள் இன்னும் பிறப்பிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதனால் அந்த வட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு பாதகம் ஏற்பட்டிருப்பதை எடுத்துச் சொன்னார்கள். விதிகள் பிறப்பிப்பதிலே யாதேனும் தாமதம் இருந்தால், அதை நீக்குவதற்கு அரசாங்கம் பூரண கவனம் செலுத்தும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குடியிருப்புப் பாதுகாப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே, அவரவர்கள் வட்டாரத்தில் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதை—எந்த ஜில்லாவில் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அதை நன்றாக உணர்ந்து, அந்தக் கருத்தை நல்ல விதமாக கனம் அங்கத்தினர் திரு. சுப்பிரமணியம் அவர்களும், திரு. சுப்பையா அவர்களும்—எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சட்டம் விசேஷமாக தஞ்சை ஜில்லாவுக்கு அமைந்த சட்டம் என்று சொன்னால், ஒன்றும் மிகையில்லை. இந்தப் பிரச்னை ரொம்ப கடுமையான பிரச்னை. நிலச் சீர்திருத்தம் என்று சொன்ன உடனேயே, எத்தனையோ விதமான சிக்கல்கள் ஏற்பட்டன. ஒவ்வொரு நாளும் வளர்ந்துகொண்டு போகக்கூடிய ஒரு பிரச்னை இது. 'காம்ப்ரெஹென்சிவ் லெஜிஸ்லேஷன்' பற்றி நாம் இன்றைக்கு

24th July 1964] [திரு. வெ. ராமைய்யா]

நினைப்போமானால் அம்மாதிரி ஒரு லெஜிஸ்லேஷன் கொண்டுவந்து விட வேண்டுமென்று சொன்னால், நிலச் சீர்திருத்தத்தில் இருக்கக்கூடிய பிரச்னைகள் இன்னும் எத்தனையோ வந்துகொண்டிருக்கின்றன. லாண்டு ரிபார்ம்ஸ் என்று சொன்னவுடனேயே நாமெல்லாம் நினைக்க முடியாத பல்வேறு பிரச்னைகள் வந்தன, வந்துக்கொண்டிருக்கின்றன. திரு. கலியாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டபடி ஒரு சிறு பகுதியிலே மட்டும் எத்தனை விதமான பிரச்னைகள் இருக்கின்றன என்பதை கையேறுவார, மாட்டுவாரச் சட்டம் நமக்கு ஞாபகமூட்டுகிறது. குடியிருப்பு பிரச்னை என்று சொன்னால் அங்கத்தினர் திரு. சுப்ரமணியம் இதில் இருக்கக்கூடிய சிக்கல்களைப் புரிந்துகொள்ளக்கூடிய முறையில், கனம் அங்கத்தினர் கொளந்தைசாமி கவுண்டர் புரிந்துகொள்ள முடியாது. குடியிருப்பைச் சூழ்ந்திருக்கக்கூடிய நிலங்களும் பாதுகாக்கப்படவேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். நான் நிச்சயமாகச் சொல்ல முடியும். கனம் அங்கத்தினர் திரு. கணேசன் அவர்கள் வரக்கூடிய பகுதிகளிலே குடியிருப்பு மனைக்கட்டுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்குச் சட்டம் வேண்டும் என்று சொன்னால் எங்களுக்குக் கொஞ்சம் அது விசித்திரமாக இருக்கிறது. ஏனென்றால் தாராளமாக எந்த இடத்திலும் கட்டிக் கொள்வதற்கு இடம் இருக்கிறது அந்தப் பகுதியிலே. ஆனால் அதே போன்ற நிலைமை தஞ்சையில் இருக்க முடியாது. தாம்பிரபரணிப் பகுதியில் இருக்க முடியாது. நல்ல பாசன வசதி பெற்றிருக்கக் கூடிய பகுதியிலே இருக்க முடியாது. அதனால் தான் ஆலோசனை சொல்ல வேண்டுமென்ற முறையிலே பேசிய பொழுது, திரு. கொளந்தைசாமி கவுண்டர், குடியிருப்பிலே எந்தவிதமான தகராறும் இல்லை, ஆனால் பக்கத்திலே இருக்கக்கூடிய நிலத்தில் தகராறு இருக்கிறது, அதையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று அவருடைய பாஷையிலே பேசினார்கள். அதே பிரச்னையைத்தான் திரு. சா. கணேசன் அவர்கள் திறமையாகவும், சாதுர்யமாகவும் சொன்னார்கள். ஆக இரண்டு பேருக்கும் ஒரே பிரச்னைதான். ஆகவே நிலச் சீர்திருத்தங்கள் செய்வதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர்கள் பலர் பஞ்சாயத்துக்களால் ஏற்பட்டிருக்கக் கூடிய பல பிரச்னைகளைப் பற்றிச் சொன்னார்கள். காம்பிரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் என்று சொல்லும்பொழுது, அதிலே இருக்கின்ற எல்லாப் பிரச்னைகளையும் தெரிந்து கொண்டு செய்ய வேண்டும் என்பதுதான், அரசாங்கத்தின் எண்ணம். அதற்காக அதுவரையிலும் காத்திருக்க முடியாது. லாண்டு ரிபார்ம்ஸ் என்று சொல்லும் பொழுது, விவசாயிகளுக்குள்ள பல பிரச்னைகள் என்னவென்று பார்க்கிறோம்; அவ்வப்போது பல்வேறு பிரச்னைகளுக்கு ஏற்றாற் போல, பல்வேறு சட்டங்களைக் கொண்டு வருகிறோம். அதை நீடிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. நிதானமாகப் போக வேண்டுமென்றோ அல்லது லாண்டு ரிபார்ம்ஸ்களுக்கு முட்டுக் கட்டை போடவேண்டுமென்ற நோக்கத்திலோ, தள்ளிப் போட்டுக் கொண்டுபோவதில்லை. எப்பொழுது பிரச்னைகள் வருகின்றனவோ

[திரு. வெ. ராமைய்யா] [24th July 1964

அப்பொழுது பரிசீலனை செய்து நிவாரணம் அளித்துக் கொண்டு வருகிறோம். சிக்கல்கள் இருப்பதனால், இன்னும் நல்ல முறையில் செய்வதற்குக் கொஞ்ச காலம் கேட்டிருக்கிறோம். மூன்று வருஷங்கள் கேட்டிருக்கிறோம். ஆனால் அவ்வளவு காலம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. சிக்கல்கள் உடனடியாகத் தெரியும் பட்சத்தில், மூன்று வருஷத்திற்கு முன்னால்கூட சட்டத்தை நிறைவேற்ற முடியும். விவசாய உற்பத்திக்கும், எல்லோருடைய பாதுகாப்புக்கும் நன்மையாக இருப்பதனால், இன்னும் கொஞ்ச காலத்திற்குத் தள்ளிப் போடுவதிலே தயங்கக் கூடாது. திரு. தர்மலிங்கம் அவர்கள் பிரச்னைகளை நன்றாக உணர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவருடைய பகுதியிலும் கஷ்டம் இருக்கிறது. அவர்கள், ஏதோ லாண்டு ஸீலிங் சட்டத்தை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்ததினால் பாதகம் ஏற்பட்டு, அதன் காரணமாகக் குடியிருப்புச் சட்டத்தினால் நன்மை அடைந்தவர்கள் பாதிக்கப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்தச் சட்டத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அப்படியிருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தக் குடியிருப்பு மனைக்கட்டு பாதுகாப்புச் சட்டத்திற்குப் பொதுவான ஆதரவைக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், நிலச் சீர்திருத்தம் சம்பந்தமான பல்வேறு சட்டங்களைத் துரிதமாகக் கொண்டு வருவதற்கு பல யோசனைகள் சொன்ன அங்கத்தினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதாவை அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

" That the Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1964, be taken into consideration ".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

' That the Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1964, be passed .'

The motion was put and carried and the Bill was passed.

(5) THE MADRAS PANCHAYATS (AMENDMENT AND MISCELLANEOUS PROVISIONS), BILL, 1964 (L.A. BILL NO. 21 OF 1964).

* THE HON. SRI S. M. A. MAJID : Mr. Speaker, Sir, I beg to move—

' That the Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 (L.A. Bill No. 21 of 1964) [a] be taken into consideration.'

Published in the *Fort St George Gazette* Extraordinary, dated 18th July 1964.

24th July 1964] [Sri S. M. A. Majid]

Hon. Members are aware that the Panchayat Union Councils functioning at present in the State consist of the Presidents of the panchayats and the chairman of Township Committees in the respective Panchayat Unions, although according to Section 12 of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958), each of the panchayats and township committees in a panchayat union has to elect to the panchayat union council one person from among its members. This was made possible by special legislation undertaken for the first constitution of the Panchayat Union Councils in the State. The intention behind the scheme of making the presidents of panchayats and chairmen of township committees members *ex-officio* of panchayat union councils was to avoid the holding of a series of elections in the village in quick succession which usually tended to create faction where none existed before and to aggravate faction where it was already rampant. A village being a very small unit made it impossible for group rivalries and personal animosities to subside quickly and it took a very long time for the people to forget the bitterness caused as a result of keenly contested elections in the village. Representations have also been received from various panchayat presidents' associations to place the temporary arrangements on a permanent footing. Experience has also disclosed that it is desirable and advantageous to adopt the said system as a permanent one. The proposed new Section 12 of the Act provides for this.

There is no provision at present for the reservation of seats for the members of the Scheduled Tribes on panchayats. The Scheduled Tribes population of the State is 2,52,646 and there is concentration of Scheduled Tribes population in certain arears in Salem and North Arcot districts. An enabling provision for the reservation of seats for Scheduled Tribes also in Panchayats and for co-option of members of Scheduled Tribes to panchayat union councils has been made in the Bill. The period of reservation of seats for the members of Scheduled Castes made in the Madras Panchayats Act, 1958, will expire after the ensuing ordinary elections to panchayats, which are proposed to be held at the end of the year 1964, are over. The constitution has been amended extending the period of reservation of seats for the Scheduled Castes and Scheduled Tribes by ten years. It is proposed to extend the period of reservation for another ten years in the Madras Panchayats Act also.

As at present a member of a panchayat can take on contract the execution of a panchayat union work. The panchayats are constituent bodies of panchayat unions. It has been considered necessary and desirable to prohibit persons having contracts with the panchayats or panchayat union councils from standing for election or continuing as members of a panchayat or panchayat union council.

[Sri S. M. A. Majid] [24th July 1964

Under the Madras District Boards Act, 1920, the term "land revenue" included royalty. The present Explanation to Section 115 of the Madras Panchayats Act, 1958, does not refer to royalties. But certain panchayat union councils continue to levy local cess and local surcharge on royalties also. It is proposed to validate the levy and collection of cess and surcharge made hitherto on royalties and to define the term "land revenue" so as to include royalties, lease amounts or other sums payable to the Government in respect of land held direct from the Government on lease or licence.

The power to make rules defining the powers of auditors to disallow and surcharge items and to providing for appeals against orders of disallowance or surcharge was inadvertently omitted to be included in Section 178 (2) of the 1958 Act. It is proposed to incorporate the provision in the said section.

It is proposed to make provision for the appointment of Special Officers in the case of newly constituted panchayat union councils to exercise the powers, discharge the duties and perform the functions of the panchayat union councils, its Chairmen and Commissioner on the lines of a similar provision in Section 368 of the Madras District Municipalities Act, 1920. These are the main purposes for which it is proposed to amend the Madras Panchayats Act, 1958.

11-30 a.m. In Writ Appeal 91 of 1962, the Madras High Court, held that there were no panchayats or panchayat union councils in the added territory which were validly constituted and if they survived at all they could be regard only as an aggregate of individuals and that such aggregate of individuals could not exercise the statutory powers bestowed on panchayats and panchayat union councils. Consequently the first panchayat union council for the Pallipet Development Block could not be constituted and the panchayat union councils functioning in the three panchayat unions of Ramakishnarajupet, Tiruttani and Tiruvelangadu could not be recognised. It is therefore proposed to validate the actions of the aggregate of individuals purporting to exercise the powers, discharge the duties and perform the functions of panchayat union councils and panchayats in that area including the levy and collection of tax, cess or fee. It is also proposed to constitute panchayat union councils for the added territory and to appoint special officers to exercise the powers, etc., of the councils until the panchayat elections are completed and the members of the panchayat union councils come into office and a chairman is elected. It is proposed to constitute panchayats in that area under the provisions of the Madras Panchayats Act, 1958.

It is proposed to take power to determine the term of office of members of panchayats and panchayat union councils as extended by Madras Act 12 of 1962 and to hold elections to panchayats in the State as in the case of municipalities.

24th July 1964] [Sri S. N. A. Majid]

The Bill now before the House provides for all these matters. I request that the Bill be taken into consideration.

SRI S. MADHAVAN: Sir, I move the following amendment:—

"That the Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 (L.A. Bill No. 21 of 1964) be circulated for the purpose of eliciting public opinion thereon".

The amendment was duly seconded.

SRI M. KALYANASUNDARAM: Sir, I move the following amendment:—

"That the Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill 1964 (L.A. Bill No. 21 of 1964), be referred to a Select Committee with instructions to report back before the commencement of the next sitting of the Assembly."

SRI SAW. GANESAN: I second the amendment, Sir.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, I move the following amendment:—

"That the concurrence of the Legislative Council be obtained for the setting up of a Joint Select Committee of both Houses consisting of ..... Members (.....Members of the Legislative Assembly and ..... Members of the Legislative Council) to consider the Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 (L.A. Bill No. 21 of 1964) and that the following members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee: (Names of the members to be given later)."

SRI K. CHEEMAICHAMI: I second the amendment, Sir.

MR. SPEAKER: The motion and the amendments are before the House for discussion. How long should we discuss this?

THE HON. SRI R. VENKATARAMAN: We have two hours more. That may be allotted for general discussion. To-morrow we will have the clause-by-clause consideration. We can finish the general discussion to-day. Or, in order to give some more time to the Opposition Members, the Hon. Minister concerned may reply tomorrow and the clause-by-clause consideration taken up thereafter.

MR. SPEAKER: So the Hon. Leader of the Opposition will have to speak to-day?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes, he will have to speak today.

[24th July 1964

திரு. அ. பெ. தர்மலிங்கம்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே கொண்டுவரப்பட்டிருக்கிற தமிழ் நாடு பஞ்சாயத்து திருத்த சட்டம், இப்பொழுது 1964-ம் ஆண்டின் 21-வது சென்னை பஞ்சாயத்து சட்டமாகத் திருத்தப்பட்டாலும் இதற்கு முன்பே இந்த மன்றத்திலே 1958-ம் ஆண்டு ஒரு முறை இந்தச் சட்டம் திருத்தப்பட்டது. அதனுடைய நோக்கம் உலகப் பெரியார் காந்தியடிகள் கனவு கண்ட கிராம இராச்சியம் இந்த நாட்டிலே ஏற்பட, அந்தந்த கிராமத்திற்கு வேண்டிய கல்வி, சுகாதாரம், குடி தண்ணீர், பேக்குவரத்து, மருத்துவம், உணவு உற்பத்தி ஆகிய வசதிகளை அவரவர்கள் தாங்களாகவே, மக்களாகவே நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டு அவர்களுக்கு பொருப்புணர்ச்சி, கடமை உணர்ச்சி ஏற்படவேண்டும் என்று கருதி, 1958-ம் ஆண்டு இதிலே திருத்தம் செய்யப்பட்டது அந்த சட்டம் 1958-ம் ஆண்டு சென்னை பஞ்சாயத்துச் சட்டம், 35-வது சட்டமாக நிறைவேற்றி, 1959 ஜனவரித் திங்கள் குடியரசுத் தலைவர் இசைவு பெற்று, 1959-ம் ஆண்டு ஜனவரி 30-ம் நாள் நம்முடைய **செயின்ட் ஜார்ஜ் கோட்டை** செய்தி இதழில், தனி இதழாக வெளிவந்து அமுலுக்கு வந்தது. அதன்படி ஒவ்வொரு கிராமமும் 5,000 மக்கள் கொண்ட கிராமமும் 10,000 ரூ வருமானம் உள்ள கிராமமும் முதல்தர பஞ்சாயத்தாகவும், மற்ற பஞ்சாயத்துக்கள் 500-க்கு குறையாமல் இருந்தால், கிராம பஞ்சாயத்துகளாகவும் பிரிக்கப்பட்டு 500-க்கு குறைவாக ஜனங்கள் உள்ள ஒவ்வொரு கிராமமும் அதோடு தொடர்புடைய பக்கத்துக் கிராமத்தோடு இணைக்கப்பட்டு பஞ்சாயத்துக்கள் இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது என்று, 12,500 கிராம பஞ்சாயத்துக்கள் நிறுவப்பட்டு, திட்டப்படி நல்ல முறையிலே பணியாற்ற வேண்டும் என்று கருதி, மாவட்ட, வட்ட மன்றங்கள் கலைக்கப்பட்ட பிறகு, ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் அதாவது ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்கள் அமைத்து அவை 375 பணியாற்றி வருகின்றன. அந்த சட்டப்படி தலைவர்கள் அங்கு இருக்கின்ற பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று சட்டம் இயற்றி இருந்தோம். பொதுமக்கள் நேர்மையானவர்களும், நல்லவர்களும், நாணயமானவர்களும், ஏழை எளியவர்களும் தலைவர்களாக வர வாய்ப்பு ஏற்பட்டதை உணர்ந்திருந்தார்கள். அதற்குப் பிறகு அந்த முறை மாற்றப்பட்டு, அங்கத்தினர்களே தேர்ந்தெடுத்தால் போதுமானது என்று செய்யப்பட்டது; அந்த முறைப்படி, இந்த 58-வது ஆண்டு சட்டத்திலே 12-வது பிரிவிலே ஒவ்வொரு பஞ்சாயத்தும், ஒவ்வொரு குழுவும் பஞ்சாயத்து கூட்டு மன்றத்திற்கு குறித்த முறைப்படி தேர்ந்து எடுக்க வேண்டும் என்று சட்டத்திலே இருந்தும்கூட, அது இப்பொழுது அவசியம் இல்லை இப்பொழுதுதான் பஞ்சாயத்து தேர்தல்கள் முடிந்திருக்கின்றன. இப்பொழுது மறுபடியும் ஒரு தேர்தல் தேவையில்லை என்று முடிவு செய்தார்கள். அப்போதிருந்த சர்க்கார் எல்லா ஊராட்சி மன்றங்

24th July 1964] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

களுக்கும் இப்படிப்பட்ட தேர்தல் சம்பந்தமாக சுற்றறிக்கை அனுப்பினார்கள். பல பஞ்சாயத்துக்கள் நேரிடையாக பொது மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டால்தான் நல்லவர்கள், நாணயமானவர்கள் ஏழை எளியவர்கள் தலைவராக வர முடியும் என்று தெரிவித்தார்கள். பல தாலூகா சங்கங்களும் மாவட்ட சங்கங்களும் அப்படிப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பியிருந்தன. என்ன காரணத்தினாலோ பரீட்சை பண்ணிப் பார்க்கலாம் என்பதற்காகவோ என்னவோ, நேரிடைத் தேர்தலுக்குப் பதிலாக அங்கத்தினர்கள் தேர்ந்து எடுக்கும் முறையை கையாண்டார்கள். இதனால் ஏற்படுகின்ற கொடுமைகளை அமைச்சர்களும் மற்றவர்களும் அறியாதவர்கள் அல்ல. மன்றத்திலேயும் சரி, வெளியிலேயும் சரி, பலரும் சட்டம் திருத்தப்படும் தலைவர் பொது மக்களால் தேர்ந்து எடுக்கப்படுவார், அப்படிப்பட்ட முறை சட்டமாகி விடும் என்பதை நிச்சயமாக நம்பி இருந்தார்கள். அதுபோல பரவலாக பேசப்பட்டும் வந்தது. அதற்கு சில வற்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். 20-11-1963-ல் திருச்சி தேவர் மன்றத்தில், திருச்சி மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர்கள் சங்கம், பஞ்சாயத்துக் கூட்டுமன்றத் தலைவர்கள் சங்கம் ஆகியவற்றினால் அளிக்கப்பட்ட வரவேற்பில், கலந்துகொண்ட முன்னாள் முதலமைச்சரும், இன்னாள் அகில இந்திய காங்கிரஸ் குழுத் தலைவருமான கனம் திரு. காமராஜ் அவர்கள் அப்பொழுது பேசியதைத் தங்கள் மூலமாக இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

"முன்பெல்லாம் கிராமங்களில் பெரியதனக்காரர்கள், பெரும் பணக்காரர்கள் ஆகியோருக்கு அதிக மரியாதை இருந்தது. இப்போது கிராமங்களில் அதிகாரப் பரவல் முறைத் திட்டம் ஏற்பட்ட பின்பு பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மக்களுக்கு ஆட்சியில் தொடர்பு ஏற்படும்படி செய்யப்பட்டது. அதனால் பஞ்சாயத்துத் தலைவர்களுக்குக் கொஞ்சம் கௌரவம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் பெரியதனக்காரர்களுக்கும், கிராம முன்சீப்களுக்கும் ஜபர்தஸ்து அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் அதனால் சில தொல்லைகள் ஏற்படுகின்றன என்று சொல்லுகிறார்கள். அரசியல் சூதாடிகளையும் சந்தர்ப்பவாதிகளையும் முதலில் நாட்டிலிருந்து நீக்கவேண்டும். அடுத்து பஞ்சாயத்துத் தேர்தல்களில் கிராமங்களில் போட்டியில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஜாதி மத வேறுபாடுகள் உண்டாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சமீபத்தில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தல்கள் எப்படி நடைபெற்றன என்பது நமக்குத் தெரியும். தலைவர்களைப் பல ஊர்களுக்கு அழைத்துக்கொண்டுபோய் விட்டார்கள். அந்தப் பழக்கம் நகரங்களில்—நகரசபைகளில் பரம்பரையாக இருந்தது. நீங்கள் பஞ்சாயத்துத் தேர்தல்கள் பற்றிக் கூறினீர்கள். நான் இப்போது முதலமைச்சரல்ல. உங்கள் அபிப்பிராயத்தை

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [24th July 1964

அரசாங்கத்திடம் சொல்கிறேன். பஞ்சாயத்துத் தலைவர்களும் அரசாங்கமும் உட்கார்ந்து யோசித்து எந்த முறையில் பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்துவது என்பது முடிவுசெய்யப் பட வேண்டும்". அவ்வாறு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு, 7-12-1963-ல் நடைபெற்ற திருச்செந்தூர் தாலுக்கா பஞ்சாயத்துத் தலைவர்கள் மாநாட்டில் தலைமை வகித்துப் பேசிய திரு. கே. டி. கோசல்ராம், எம்.எல்.ஏ., அவர்கள், இன்றைய பஞ்சாயத்து நிர்வாகத்தில் அதிகாரிகளின், அலுவலர்களின் ஈடுபாடு அதிகப்படியாக இருக்கிறது என்றும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் நேரடித் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறார். அந்த மாநாட்டைத் திறந்து வைத்த நமது முதலமைச்சர் கனம் திரு. பக்தவத்சலம் அவர்கள் கூறியதாவது—

"பஞ்சாயத்துக்களுக்கு நேரிடைத் தேர்தல்கள் வேண்டும் என்று மாநாட்டுத் தலைவர் கூறிய யோசனைபற்றிய விஷயம் சர்க்காரின் ஆலோசனையில் இருந்து வருகிறது."

அதே மாநாட்டில், பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் ரகசிய வாக்களிப்பு முறையில் நேரடித் தேர்தல் நடைபெறவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அடுத்து, 28-12-1963-ல் நடைபெற்ற கோயம்புத்தூர் தாலுக்கா பஞ்சாயத்துத் தலைவர்கள் மாநாட்டில், நமது உள்ளாட்சித்துறை அமைச்சர் கனம் மஜீது அவர்கள் பேசியதாவது—

"பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களின் தலைவர்களை நேரடியாகத் தேர்தெடுப்பது பற்றி சர்க்கார் இதுவரை எவ்வித முடிவும் செய்யவில்லை. இது நல்ல யோசனைதான். அரசாங்கம் ஆலோசனை செய்து நல்ல முடிவெடுக்கும்."

அதற்குப் பிறகு, சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம் கலந்து பேசி இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற முடிவு செய்யப்பட்டிருக்கிறதா, இல்லையா? என்பதும் நமக்குத் தெரியாது. முன்னாள் முதலமைச்சர், இன்னாள் முதலமைச்சர் அவர்களிடம் திருச்சி வரவேற்பில் கூறியபடி சொன்னாரா இல்லையா என்பதும் நமக்குத் தெரியாது. அமைச்சரவை கூடி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கலந்து ஆலோசனை செய்தார்களா, இல்லையா? அதுவும் நமக்குத் தெரியாது. அல்லது தமிழ்நாட்டிலிருந்து தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பிய பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சங்கங்களோடு கலந்து பேசி, சாதக பாதகங்களைப்பற்றி விவாதித்தார்களா என்பதும் நமக்குத் தெரியாது. ஆனால், 9-3-1964-ம் தேதியன்று சட்ட மன்றத்தில் மானியக் கோரிக்கையில் நடைபெற்ற விவாதத்தில் பேசிய நமது முதல் அமைச்சர் அவர்கள், பஞ்சாயத்துத் தேர்தல்கள் இவ்வாண்டிற்குள் பூர்த்தியாவதையே தாம் விரும்புவதாகவும். பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், பஞ்சாயத்துத் தலைவர்களும்

24th July 1964] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதைத் தாம் ஆதரிக்கவில்லையென்றும் கூறியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு 6-4-1964 அன்று வந்தவாசி பஞ்சாயத்து யூனியன் அளித்த வரவேற்புக்குப் பதிலளித்த நமது முதலமைச்சர் அவர்கள், "பஞ்சாயத்து யூனியன் உறுப்பினர்களான பஞ்சாயத்துத் தலைவர்களைக் கொண்டுதான் பஞ்சாயத்துப் பெருந்தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்" என்று அங்கே இதையும் சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு இது எப்படி எல்லோராலும் ஏற்றுக்கொண்டு கலந்துபேசியிருப்பார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனாலும்

. . . (மணி அடிக்கப்பட்டது) முக்கியமான பிரச்னை ஆதலால் இன்னும் சில நிமிஷங்கள் அனுமதிக்க வேண்டுகிறேன்.

கனம் சபாநாயகர்: முக்கியமானதாக இருந்தாலும் சுருக்கமாகச் சொல்லவேண்டும். The hon. Member has given me a list of eighteen of his party members, who wish to participate in the debate. The time allotted is two hours.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஆனால், இந்த நேரத்தில் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். பஞ்சாயத்துத் தலைவர்களின் உரிமைகளையும், பஞ்சாயத்துக்களின் நலன்களையும் கவனிப்பதற்காகவே 'தமிழ்நாடு பஞ்சாயத்துத் தலைவர்கள் சங்க யூனியன்' என்று ஒன்று இருக்கிறது. அது நடைமுறைத் தேர்தல்படி பல ஆண்டுகளுக்கு முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும்கூட, சர்க்கார் தொடர்ந்து அங்கீகாரம் அளித்துக்கொண்டு வருகிறது. அந்தச் சங்கம், இப்படிப்பட்ட முக்கியமான பிரச்னை நாட்டில் எழுந்திருக்கிற நேரத்தில் என்ன செய்து கொண்டிருந்தது என்பதும் எனக்குத் தெரியவில்லை. எனவேதான் அதைப்பற்றித் தங்கள் மூலமாக இந்த அமைச்சரவைக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நாட்டிலே உள்ள தாலூக்கா சங்கங்கள், பஞ்சாயத்துக் கூட்டுமன்ற சங்கங்கள் நேரடித் தேர்தல் இன்றியமையாதது என்று தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பியதன் பேரில் இந்தச் சங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்று தெரியவில்லை. அரசாங்கம் முயற்சி செய்யவில்லையென்றாலும் கூட, அந்தப் பஞ்சாயத்துச் சங்கம், மகாநாட்டைக் கூட்டி பஞ்சாயத்துத் தலைவர்களையும் பஞ்சாயத்து யூனியன்களின் தலைவர்களையும் கலந்தாலோசித்து, அவர்களுடைய அபிப்பிராயத்தை அரசாங்கத்திற்கு அனுப்பியிருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும். அப்படிச் செய்யாத அந்தச் சங்கத்திற்கு தமிழ்நாட்டிலே இருக்கிற 375 பஞ்சாயத்து யூனியன்களும் ஆண்டொன்றுக்கு நூறு ரூபாய் வீதம் சந்தா கொடுக்க வேண்டியது அவசியந்தானா? அப்படிப்பட்ட சங்கத்திற்கு ஒவ்வொரு தாலூக்கா சங்கமும் ஐம்பது ரூபாய் வீதம் ஆண்டுச் சந்தா அனுப்பவேண்டியது

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [24th July 1964

அவசியந்தானு? அனுப்பவில்லையென்றால், 'ஏன் அனுப்பவில்லை?' என்று ஆர்.டி.எல்.ஏ. இலாகாவிலிருந்து கேட்பதும் சரிதானு? என்று நாம் பார்க்க வேண்டும்.

MR. SPEAKER : The hon. Member is speaking on some other subject.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: அந்தச் சங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ஐம்பதாயிரம் ரூபாய் வருமானம் வருகிறது. அதனுடைய தலைவர் அந்தப் பணத்திலிருந்து பதினைந்தாயிரம் ரூபாய்க்கு கார் வாங்கி வைத்துக்கொண்டு சொந்த வேலைகளைக் கவனித்துக் கொண்டு வருவதென்றால், இது பஞ்சாயத்து ராஜ்யத்திற்குச் சரிதானு? இதுதான் ஜனநாயகமா? என்பதைத் தயவு செய்து யோசித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். கிராமத்திலுள்ள ஏழை எளியவர்களிடமிருந்து வரியாகப் பெற்ற தொகையிலிருந்து பதினைந்தாயிரம் ரூபாய்க்குக் கார் வாங்கி வைத்துக் கொண்டு என்ன செய்து கொண்டிருக்கிறது அந்தச் சங்கம் என்பதைத் தயவுசெய்து கவனித்து, இதற்குப் பரிகாரம் சொல்லவேண்டுமென்று நான் கேட்கின்றேன்.

இந்தப் பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தல் முறையைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று இருக்கிறேன்.

MR. SPEAKER : Again the hon. Member is speaking on some other subject, which relates to the working of the Sangam. I would like to tell the hon. Member that if he wants to refer to these matters it would be better if he gives notice of questions or resolutions. For the present, he may confine his speech to the subject under discussion.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: இதோடு இணைந்திருப்பதால் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

கனம் சபாநாயகர்: இணைந்திருப்பதை யெல்லாம் பேசுவதென்றால், எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் பேச முடியும். சபை தீர்மானித்து விட்டால் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்களே அவர்கள் தங்களுக்குள்ளே ஒருவரை இந்தச் சங்கத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கவில்லை. சர்க்கார் ஒருவரை நாமினேஷன் செய்திருக்கிறது. அப்படி நாமினேட் பண்ணப்பட்ட ஒருவர் இந்தச் சங்கத்திற்குத் தலைமை வகிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் தலைவர்களில் ஒருவர் இந்தச் சங்கத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருந்தால் நான் இவ்வளவு தூரம் இதைப்பற்றிப் பேசவேண்டிய அவசியம் இருந்திருக்காது.

24th July 1964]

MR. SPEAKER : Does it come under this Act ?

திரு. அ. பெ. தர்மலிங்கம்: வரவில்லை.

MR. SPEAKER : I have already asked the hon. Member not to refer to these extraneous matters in the present discussion. He may refer to these extraneous matters by giving notice of separate questions or resolutions which may be taken up during the next non-official day. We cannot waste the time of the House. That is the position.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: எனவே இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை பொது மக்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று நான் வற்புறுத்துவதற்கு அடிப்படைக் காரணம், மக்களில் பலர் நிச்சயமாக இந்தத் தலைவர் தேர்தல் நேரடித் தேர்தலாக இருக்க வேண்டும், பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் தலைவராக வர வேண்டும் என்று நம்புகின்றார்கள். அந்த நம்பிக்கைக்கு இடமில்லாமல் இந்தச் சட்டம் திருத்தப்பட்ட நிலையில் மசோதா இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிறது. வேறு பல காரணங்களுக்காக இதிலே பல இடங்கள் திருத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், முக்கியமான இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் எதிர்பார்த்தும் இந்தப் பிரச்னைக்கு இதில் பரிகாரம் இல்லை.

அது மாத்திரமல்ல. இன்னும் ஒரு வார காலத்தில் பஞ்சாயத்து யூனியன் சேர்மன் சங்கம் இதுபற்றிக் கூடி விவாதிக்க இருக்கிறது. இம்மாதம் 30 அல்லது 31-ந் தேதி அன்று அவர்கள் இந்த விவாதிப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். அதிலே அவர்கள் என்ன முடிவு எடுக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டியதும் அவசியம் என்பதற்காகத்தான் நான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். எது எதற்கோ தினம் தினம் சட்டத்தை மாற்றிக்கொண்டிருக்கிற நாம், இந்தப் பெரும் விஷயத்திலும் போதிய கவனம் செலுத்தி, தகுந்த முறையில் திருத்த வேண்டும். இந்த மசோதாவின் மீது நாளையும் விவாதிக்க இருக்கிறோம் என்ற காரணத்தால், அதற்குள்ளாகவாவது ஒரு திருத்தம் கொண்டு வந்தால் நலமாக இருக்கும்.

பஞ்சாயத்துச் சேர்மன் எலெக்ஷன் எப்படியெல்லாம் நடந்தது என்று இங்கிருக்கும் கனம் உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். முன் காலத்தில் சீதையை இராவணன் தூக்கிச் சென்றதாகக் கதை இருந்தது என்றாலும்கூட, இந்தக் காலத்தில் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டு, தலைவர் தேர்தல் என்று வந்துவிட்டால் அங்கத்தினர்கள் எங்கே கொண்டுபோகப் பட்டார்கள் என்று வீட்டில் இருக்கும் மனைவிக்குக்கூடத் தெரியாது. அப்படிப்பட்ட நிலைமை தலைவர் தேர்தல் காலங்களில் இருந்திருக்கின்றன. அமைச்சர் அவர்களுக்கு நான் நிச்சயமாகச்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [24th July 1964

ரெப்ரசென்டேஷன் நிலையே வந்து விடுமோ என்பது நன்றாக ஆராயப்பட வேண்டும். அது மட்டுமல்ல. பஞ்சாயத்து யூனியன் தலைவர் நேரிடையாகத் தேர்ந்து எடுக்கப்படுவது என்று வந்தால் கட்சி அரசியல் பஞ்சாயத்து தேர்தலிலும் புகுந்து விடலாம். கட்சி ரீதியில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து கவுன்சில் செயல்படுடும் நிலைமை வந்து விடக்கூடும் என்பதுகூட ஆலோசிக்கப்பட்ட ஒன்று தான். நேரடித் தேர்தல் என்றால் வீணான குழப்பங்களும் அரசாங்கத்திற்கு அதிகச் செலவும் ஆகும் என்பதனால் தான் அதுவும் நல்ல முறையில் செயல்பட நடைமுறையில் அது சாத்தியம் இல்லாதுகூடப் போய் விடும் என்பதனால்தான் அந்தக் கொள்கை கைவிடப்பட்டது.

அடுத்து, தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள் ஆகியவர்களுக்காக கோ ஆப்ட் செய்து கொள்வது என்பதில் கூட பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலுக்கு முன்பு அவ்வாறு செய்து கொள்வதா அல்லது பின்பா என்பது கொஞ்சம் பரிசீலித்து முடிவு செய்ய வேண்டும். தேர்தலுக்கு முன்பு என்றால் அதுவும் தேர்தல் போல இருக்கும். ஆனால் தேர்தல் நடந்த பிறகு கோ ஆப்ட் செய்து கொள்வது என்றால் மெஜாரிடியினரோடு சேர்ந்து செயல்பட வழியேற்படும். சிக்கல் இருக்காது. ஆகவே இதுபற்றியும் ஆலோசனை செய்வது அவசியம்.

அடுத்து பஞ்சாயத்து யூனியன் அதிகாரங்களை அதன் தலைவருக்கு மேலாக ஆர்.டி.ஓ. கண்டிரோல் செய்வாரா, கலெக்டர் பி.ஏ. பர்சனல் பொறுப்பில் விட்டுவிடுவதா என்பது ஒரு பிரச்சினை. பஞ்சாயத்து யூனியன் விஷயத்தில் சில சந்தர்ப்பங்களில் ஆர்.டி.ஓ. ஆபீஸ் போஸ்டாபீஸ் போலத்தான் இயங்க வேண்டியிருக்கிறது. ஜனநாயகம் நல்ல முறையில் நடப்பதற்கு இத்தகைய பிரச்சினைகள் எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்யப்பட்டு இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பதற்காக இதை நான் ஆதரிக்கிறேன்.

12-00 noon. * **திரு. இரா. நாராயணன்:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து திருத்த மசோதாவின் பேரில் எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்ட திருத்தங்களை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆட்சியை ஜனநாயக ஆட்சி என்று இப்போது சொல்லிக் கொண்டு வருகிறோம். ஆவடி சோஷலிசம் புவனேசுவர சோஷலிசம் ஆகி இப்போது ஜனநாயக காமராஜ் சோஷலிசமாக மக்களிடையே பிரசாரம் செய்யப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் பொதுமக்களாலே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற முறையை ரத்து செய்து, இப்போது மெம்பர்களாலேயே பிரசிடெண்டும் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்ற முறையிலே திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்தத் தலைவர்கள் எல்லாம் பொதுமக்களாலே தேர்ந்தெடுக்கப்படக்கூடிய முறை வரும் என்று

24th July 1964] [திரு. இரா. நாராயணன்]

பொது மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இப்போது இலவு காத்த கிளியாக ஏமாந்தார்கள். இந்த முறை பெரிய பணக்காரர்கள், பஸ் நிர்வாகிகள், மிட்டாதாரர்கள் ஆகியோருக்கு ஏற்ற வகையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இனி ஏழை எளியவர்கள் தலைவராக பஞ்சாயத்திலும் பஞ்சாயத்து யூனியன்களிலும் வர முடியாது. சென்ற முறை யூனியன் தலைவர் தேர்தலின்போது மெம்பர்களை ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என்று விலைக்கு வாங்கினார்கள். பொதுக்கூட்டங்களில் பேசும்போது மந்திரிகள் 'இதைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்' என்று சொல்லிவிட்டு இப்போது இந்த மாதிரி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது ஜனநாயகத்திற்கு ஏற்ற முறை அல்ல என்று கூறி, பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலும் நேரடித் தேர்தலாகத் தான் இருக்க வேண்டுமென்று என்னுடைய கருத்தைத் தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். ராமசாமி நாயுடு:** கனம் அவைத் தலைவர் அவர்களே, யூனியன் தலைவர்கள் பொதுஜனங்களாலே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற வகையிலே இருந்ததை மாற்றி இந்த மசோதாவிலே திருத்தம் செய்திருக்கிறார்கள் என்று சொல்வது பொருந்தாத வாதம் என்பதை முதலிலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கிற நிலைமையைத்தான் தொடர்ந்து வைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார்களே தவிர, அதிலே எந்த விதமான மாறுதலும் இல்லை. தலைவர் தேர்தல் நேரடித் தேர்தலாக இருந்தால் பல குறைபாடுகள் நிவர்த்திக்கப்படலாம் என்று அங்கத்தினர்கள் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது. சட்டசபைத் தேர்தலானாலும், பொதுத் தேர்தலானாலும் பணக்காரர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டு வர முடியும் என்று சொல்லும்போது நேரடித் தேர்தலாக இருந்தாலும் அந்தப் பணக்காரர்கள் ஏன் வர முடியாது. அவர்கள் பணத்தைச் செலவு செய்து கிராமங்களில் வாக்குகளை வாங்க மாட்டார்களா என்பதை யெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சென்ற பஞ்சாயத்துத் தேர்தலிலே 100-க்கு 75 பஞ்சாயத்துக்களுக்கு மேலாகத் தலைவர் தேர்தல் ஒருமுகமாக நடந்ததைக் காண்கிறோம். ஏதோ அங்கத்தினர்களைத் தூக்கிக் கொண்டு போய்விடுகிறார்கள்; அதனாலே மாற்றியமைக்கவேண்டுமென்று கூறுகிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. அங்கத்தினர்கள் தங்களுக்குள்ளேயே யாருக்கு வாக்களிப்பது என்பதிலே நிர்ணயம் இல்லாதவர்களாக இருந்தார்களா? எந்த மாவட்டத்திலே அந்த இழி நிலை இருந்தது என்பதை யெல்லாம் யோசித்துப் பார்த்து முடிவு செய்ய வேண்டும். என்னுடைய பகுதியில் யாரையும் எவரும் தூக்கிக் கொண்டு சென்று விடவில்லை. என்னுடைய சொந்தத் தொகுதியில் தலைவர்களை யெல்லாம் ஒருமுகமாக தேர்ந்தெடுத்தார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சேர்மன் தேர்தல் நேரடியாக

[திரு. எஸ். ராமசாமி நாயுடு] [24th July 1964

இருக்க வேண்டுமென்ற கருத்தை சிலர் அங்கீகரித்தார்கள். சிலர் அங்கீகரிக்கவில்லை என்பது கனம் அங்கத்தினர்கள் பேசியதி லிருந்தே தெரிகிறது. இதிலே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டு மென்று செய்து விட்டால் ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு பிரி வினர் போட்டிக்கு நின்று ஊரையே பாழாக்கிவிடுவார்கள். ஆகவே இன்றைய நிலைமையில் தலைவர் தேர்தலுக்கு மறைமுகத் தேர்தலே உகந்தது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் போதுமா, போதாதா; சரி தானா, இல்லையா என்பதை எல்லாம் நடைமுறையில் இருந்து தெரிந்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமே தவிர, இந்த இடைக் காலத்தில் எந்தவித முடிவுக்கும் வரமுடியாது. ஆகவே, அந்த வகையில் இப்போது இந்த மசோதாவை நம்முடைய சர்க்காரா வது கொண்டு வந்திருப்பதால் நாம் எல்லோரும் இதை ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். இந்தத் திருத்த மசோதாவிலே 25-வது செக்ஷனிலே 'புதிதாக ஏற்படும் இந்தப் பஞ்சாயத்துக்கள் எல்லாம் தனி பஞ்சாயத்துக்களாக இயங்கினால் அது யூனியனால் அமைக்கப்படும் என்று இருக்கும்போது Members of the panchayat என்று இருப்பதிலே பன்மையை எடுத்து விடவேண்டுமென்று ஆலோசனை கூறுகிறேன்.

இன்று பஞ்சாயத்துக்கள் மிக நல்ல முறையிலே இயங்கி வருகின்றன. சர்க்கார் கொடுக்கும் பணம் நல்ல முறையிலே பஞ்சாயத்துக்களால் செலவழிக்கப்பட்டு மனிதனுக்குத் தேவை யான காரியங்கள் எல்லாம் செம்மையாக நடைபெற்று வருகின்றன. பஞ்சாயத்துக்கள் விவகாரங்கள் இல்லாமல் காரியங்களைச் செய்து வருகின்றன. இந்தமாதிரி நிலைமையில் கிராமங்களில் சண்டையைப் புகுத்தி கஷ்டத்தை ஏற்படுத்தக் கூடாது என்று சர்க்கார் நினைத்திருப்பது பொருத்தமான காரியம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

'மாநாடுகளிலே அபிப்பிராயம் சொன்னார்கள்; பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அபிப்பிராயம் சொன்னார்கள்; ஆகையால் மாற்ற வேண்டும்' என்று சொல்கிறார்கள். இது பொதுமக்கள் அபிப்பிராயம் சொல்ல வேண்டிய விஷயம். நாம் எல்லோரும் அவர்களுடைய பிரதிநிதிகளாக இங்கே வந்திருக்கிறோம். ஆகவே, இங்கே பெருவாரியானவர்கள் என்ன சொல்கிறார்களோ அதுதான் பொதுமக்களுடைய அபிப்பிராயமாகும். இந்தச் சட்டசபைக்கு வந்த பிறகு தனக்கு என்று தனியாக ஒரு வாதத்தை வைத்துக் கொள்வது சரியல்ல. அந்த வகையில் இந்த மசோதாவை ஆதரித்து வரவேற்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள பஞ்சாயத்து திருத்த மசோதாவின் பேரில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 'தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதா

24th July 1964] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

வேண்டாமா என்பது பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக் கிறோம்' என்று இந்த மாமன்றத்தில் பல தடவைகளிலே அமைச் சர்கள் சொன்னார்கள். ஆனால் இப்போது அவர்கள், 'நேரடி யாகத் தேர்ந்தெடுப்பது நல்லது அல்ல' என்று முடிவு செய்திருக் கிறார்கள். இந்தப் பிரச்னை பஞ்சாயத்து அட்மினிஸ்ட்ரேஷனைப் பற்றிய பிரச்சினை. பொதுப் பிரச்னையாக இதைக் கண்கொண்டு பார்க்கவேண்டுமே தவிர, திராவிட முன்னற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் சொன்ன கருத்துக்கள் என்ற முறையிலே பார்க்கக் கூடாது. திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் சட்ட சபை அங்கத்தினராக இருக்கிறார்கள். 1958-ல் இந்தச் சட்டத்தை நிறைவேற்றிய சமயத்தில் நான் காலரியில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் அப்போது ஒரு திருத்தம் கொடுத் திருந்தார். 'ஜனங்களாலேதான் பிரசிடெண்ட் தேர்ந்தெடுக்கப் படவேண்டும்' என்ற திருத்தத்தைக் கொடுந்திருந்தார். அவர் ஒரு பிரசிடெண்ட் ஆக இருந்த காரணத்தால் மக்கள் நேரடியாகத் தேர்தெடுத்தால்தான் நல்லது என்ற வகையிலே திருத்தம் கொடுத் திருந்தார்கள். ஆனால் கட்சிக் கட்டுப்பாட்டைக் காட்டி அவரை வற்புறுத்தி கடைசியில் அந்தத் திருத்தத்தை வாபஸ் வாங்கச் செய்தார்கள். 1958-ல் 'இந்தத் தேர்தலில் மறைமுகத் தேர்தலாக இருக்கட்டும்; அடுத்த தேர்தலில் வேண்டுமானால் நேரடியாகத் தேர்தெடுக்கும் முறையைக் கொண்டு வரலாம்' என்று அன்றும் மந்திரியவர்கள் சொன்னார்கள்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால் இது ஜனநாயக நாடு, ஜனநாயக நாட்டில் அடிப்படை ஜனநாயகத்தை மக்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் செல்கிறோம். உதயசூரியனுக்கு வோட்டு போடுங்கள், காளை மாட்டுக்கு வோட்டு போடுங்கள் என்று தான் பேசுகிறோம். மக்க ளுக்கு ஜனநாயகத்தை கற்றுக் கொடுக்கவேண்டும். ஜனநாயகம் பற்றி மக்கள் அடிக்கடி சிந்தித்தால்தான் பேசிக் டெமாக்ரசி ஒழுங் காக உருவானால்தான் நாட்டின் அட்மினிஸ்டெரேஷன் நல்ல முறையில் வளர முடியும். அதைத்தான் காந்தி அடிகள் சொன்னார்கள். அதைத்தான் ஜெயபிரகாஷ் நாராயணன் அவர் களும் சொல்கிறார்கள். ஏன் இதை அமைச்சரவை ஏற்கக் கூடாது?. தேர்தலில் கரப்ஷன் இருக்கிறது. அது பற்றி முன்பும் பேசினார்கள் இடையிலேயும் பேசினார்கள். இப்போதும் பேசுகிறார்கள். ஒன்றில் ஒன்பது மெம்பர்கள் இருந்தால் அதில் ஐந்து மெம்பர்கள் ஒரு பக்கத்தில் இருந்தால் யார் வேண்டுமானாலும் பிரசிடென்டாக வரலாம். ஒருவர் பணக்காரராக இருக்கலாம், அவர் பிரசிடென் டாக வரவேண்டுமென்று சொன்னால், அவர் அந்த ஊரில் ஆண்டி சோஷியல் எலிமென்டாக இருக்கலாம். அவர்கள் ஹரிஜனங்களை விரும்பாமல் இருக்கலாம்; அவர் ஜாதித் துவேஷத்தை வளர்க்கக் கூடியவராக இருக்கலாம், அந்த ஊர் சொத்தைக் கொள்ளை அடிப்ப

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [24th July 1964

வராக இருக்கலாம். அவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் ஐந்து மெம்பர்கள் தன் பக்கத்தில் இருந்தால் அவர் பிரசிடென்டாக வர முடியும். ஆனால் நேரடித் தேர்தலாக இருந்தால் ஏழை மக்கள் விரும்பினால்தான் அவர் வர முடியும் தலைவராக. மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறை இருக்குமேயானால் செல்வாக்குள்ள ஒரு வார்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து மற்ற மெம்பர்களுக்கு ஆளுக்கு 100 அல்லது 200 ரூபாய் கொடுத்து பிரசிடென்டாக வர முடியும். இது வேண்டுமா? இப்பேர்ப்பட்டவர்களை அமைச்சர் வளர்க்க விரும்புகிறீர்களா? இதுதான் பேசிக் டெமாக்கிரசியை வளர்க்கும் லட்சணமா? கரப்ஷன், கரப்ஷன் என்று சொல்கிறார்கள்.

(Mr. Deputy Speaker rang the time bell.)

SRI V. KRISHNAMOORTHY: Sir, I will take another five minutes.

MR. DEPUTY SPEAKER: No, the hon. Member has only one more minute.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: அதிகாரிகள் லஞ்சம் வாங்கினால் அது குற்றம். ஆனால் பஞ்சாயத்து போர்ட் மெம்பர்கள் வாங்கினால் குற்றம் இல்லையா? ப்ரசிடென்ட் லஞ்சம் வாங்கினால் அது குற்றமில்லையா? வானூர் பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலில் ஒரு பிரசிடென்ட் மட்டும் 7,000 ரூபாய், கடலூரில் 5,000 ரூபாய் என்று கொடுத்திருக்கிறார்கள். இது வேண்டுமா? இது லஞ்சம் இல்லையா? லஞ்சத்தை ஒழிக்க வேண்டும். அதிகாரிகள் லஞ்சம் வாங்கினால் விஜிலன்ஸ் அதிகாரியைப் போட்டு செக் செய்கிறார்கள். ஆனால் இப்படி நடப்பதை யார் செக் செய்யப் போகிறார்கள்? ஆகவேதான் நேரடித் தேர்தல் வேண்டுமென்று கேட்கிறோம். அதை . .

(Mr. Deputy Speaker rang the time bell.)

SRI V. KRISHNAMOORTHY: One more minute.

MR. DEPUTY SPEAKER: Mr. Karcha Gowder.

SRI V. KRISHNAMOORTHY: I am sorry, Sir.

திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த திருத்த மசோதாவை ஆதரிக்கிறேன். எதிர்க்கட்சியிலிருந்து பேசக்கூடியவர்கள் எல்லாம் நேரடித் தேர்தல் வேண்டும், மெம்பர்கள் தேர்ந்தெடுப்பது என்றால் மெம்பர்களைத் தூக்கிப் போகும் அச்சம் இருக்கிறது என்ற ஒரே வாதத்தைத் தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்துத் தேர்தல் ஆரம்பநிலையிலேயே பஞ்சாயத்து மெம்பர்களை தேர்ந்தெடுக்கும் போது மக்கள்தான் வோட் அளித்து பஞ்சாயத்துப் போர்டுக்குத்

24th July 1964] [திரு. டி. கார்ச்சா கவுடர்]

தேர்தெடுத்தனுப்புகிறார்கள். ஆகவே இப்போது நேரடியாக தேர்ந்தெடுக்கவில்லையே என்ற குற்றச்சாட்டிற்கு அங்கேயே பதில் இருக்கிறது. பஞ்சாயத்து போர்டுக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும், பின் யூனியன் தலைவரையும் நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றால் மக்கள் எவ்வளவு தேர்தல்களைப் பார்த்து என்னென்ன அலங்கோலங்களுக்கு ஆளாகவேண்டும் என்பதைப் பார்த்துத்தான் அமைச்சர் அவர்கள் நன்கு யோசித்து, மக்களின் அபிப்பிராயத்தைக் கொண்டே இந்தச் சட்டத்தை இங்கு கொண்டு வந்திருக்கிறார்கள். ஒன்று நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பஞ்சாயத்து போர்ட்களானாலும் சரி, பஞ்சாயத்து கூட்டு மன்றங்களானாலும் சரி மீட்டிங் என்று வரும்போது சில இடங்களில் 'கோரம்' மூன்றில் ஒரு பங்கு என்றும், சில இடங்களில் ஐந்து மெம்பர்கள் இருந்தால் போதும் என்றும் இருப்பதை மாற்றி எந்தப் பஞ்சாயத்தானாலும் சரி, எந்த பஞ்சாயத்து யூனியனாலும் சரி குறைந்தது மூன்றில் இரண்டு பாகம் வந்தால்தான் பஞ்சாயத்துத் தலைவரையும், பஞ்சாயத்து யூனியன் தலைவரையும் தேர்ந்தெடுக்கலாம் என்ற விதியைக் கொண்டு வந்தால் இந்த ஆள் தூக்கிப் படலம் ஒருவாறு அடங்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஷெட்யூல் காஸ்ட் ஷெட்யூல் ட்ரைப்ஸுக்கு மூன்று மெம்பர்களைக் கோ ஆப்ட் செய்யலாம் என்று இருப்பதை ஆதரித்தாலும் குறிப்பாக ஷெட்யூல் காஸ்டுக்கு 2, ஷெட்யூல் ட்ரைப்ஸுக்கு 1 என்றும் சட்டத்திலேயே வரையறுத்து விட்டால் நல்லது என்ற ஆலோசனையை நான் கூற விரும்புகிறேன். பின்னர், கணக்குத் தணிக்கையில் சில குறைபாடுகள் உள்ளன. ஈ.ஓ.பிஸ்-தான் கணக்குகளைத் தணிக்கை செய்து வருகிறார்ககள். இதை மாற்றி தனியாகப் பஞ்சாயத்து ஆடிட் டிப்பார்ட்மெண்ட் அமைத்து கணக்குகளை நேரடியாகப் பரிசீலனை செய்வதற்கு விதி செய்தால் நல்மாக இருக்கும். கடைசியாக கிராம முன்சிப்களை பஞ்சாயத்து போர்டுகளில் எக்ஸ் அபிஷியோ மெம்பராக சேர்த்துவிட்டால், இப்போது பஞ்சாயத்து தலைவர் பெரியவரா அல்லது கிராம முனிசிப் பெரியவரா என்ற இரண்டும் கெட்டான நிலையை கிராமத்தில் போக்க முடியும். ஆகவே கிராம முனிசீப்களை பஞ்சாயத்து போர்டுகளில் எக்ஸ் அபிஷியோ மெம்பர்களாகத் தேர்த்துவிட்டால் நலமென்று என் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஹௌஸ் டாக்ஸ் மாச்சிங் கிறான்ட் கொடுப்பதில் எல்லாவற்றையும் ஒரேமாதிரியாக பரிசீலிக்கிறீர்கள். சில பஞ்சாயத்துக்களுக்கு அதிக வருவாய் வரும், சில பஞ்சாயத்துக்கள் ஏழை பஞ்சாயத்துக்களாக இருக்கின்றன. ஆகவே எந்தெந்த பஞ்சாயத்துக்கள் நம் மாநிலத்தில் மிகவும் ஏழ்மையான பஞ்சாயத்துக்களாக இருக்கின்றனவோ அவைகளுக்குச் சற்று கூடுதலாக ஹௌஸ் டாக்ஸ் மாச்சிங் கிறான்டைக் கொடுக்க இந்தச் சட்டத்தில் ஏதாவது வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[திரு. டி. கார்ச்சா கவுடர்] [24th July 1964

புலவர் கா. கோவிந்தன்: கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பஞ்சாயத்துத் திருத்த மசோதாவை நான் எதிர்க்கிறேன். இன்றைய நிலையில் ஊராட்சி மன்ற ஒன்றிப்புத் தலைவரின் பதவி சட்டமன்ற அங்கத்தினரின் பதவியைவிட மிகவும் பலம் வாய்ந்தது, பெருமை வாய்ந்ததுமாகும். கிராமங்களில் குடி-தண்ணீர் வசதி வேண்டுமென்றால் ஊராட்சி மன்ற ஒன்றிப்பினிடம் போகவேண்டும், ரோடு வேண்டுமென்றால் ஊராட்சி மன்ற ஒன்றிப் பினிடம் போகவேண்டும், பள்ளிக்கூடம் வேண்டுமென்றால் அல்லது மருத்துவ வசதி வேண்டுமென்றால் அதற்கும் ஊராட்சி மன்ற ஒன்றிப்பினிடம்தான் போகவேண்டும். பாசன வசதி வேண்டு மென்றாலும் அங்குதான் செல்ல வேண்டும். ஆக, கிராமங்களில் எல்லாவிதமான தேவைகளையும் நிறைவேற்றித் தருகிற நிறுவன மாக இருப்பது ஊராட்சி மன்ற ஒன்றிப்புத்தான். ஆண்டு தோறும் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவிடுகிற ஒரு அமைப் பாகும் இந்த அமைப்பு அத்தகையதொரு அமைப்பிற்குத் தலைவ ராக் இருக்க வேண்டியவர் யார் என்று வரையறை செய்யும்போது அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்பது குறித்து நுணுக்கமாக ஆலோசிக்க வேண்டும் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். வாக்காளர்களின் தலைவராக வருகிறவர்கள் யார் என்பது பற்றி வரையறை வைக்கலாமே தவிர வேட் பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர்களுக்கு வரையறை வைப் பது ஜனநாயகமாகாது. இவர்கள் மட்டும்தான் வாக்களிக்க வேண்டும், இவர்கள் வாக்களிக்கக் கூடாது என்ற அமைப்பு மிக மிக அநாகரிகமான முறையாகும். அது ஜனநாயக முறை அல்ல. அதை இங்குள்ள அனைவரும் உணரவேண்டும். பெரிய பொறுப்பிற்கு, பெரிய பதவிக்கு அவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் நிலையில் பரவலான முறையில் இருக்க வேண்டும், பெரிய ஆராய்ச்சி யும் தேவை. ஜனநாயகம்; ஜனநாயகம் என்று சொல்லிக்கொண்டு இந்த அரசாங்கம் மக்களை அணுக ஏன் அஞ்சுகிறது? பணநாய கர்களை ஏன் தேடிப் போகிறார்கள்? பணநாயகர்களிடம் ஏன் அடைக்கலம் புகுகிறது? ஜனநாயக முறையில் தலைவர்களை வாக்காளர்கள்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற முறை வந்து விட்டால் நிச்சயமாக காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு அங்கு இட மிருக்காது. ஊராட்சி மன்ற ஒன்றிப்புத் தலைவர்கள் அத்தனை பேர்களும் எதிர்க்கட்சியிலிருந்து வந்துவிடுவார்கள் என்ற அச்சம் இருக்கிறதா? அந்த அச்சத்தைத் தவிர வேறு ஒரு காரணமும் இருக்க முடியாது. எனக்கு முன் பேசிய உறுப்பினர் கள் இதில் எந்தவிதமான மாற்றமும் செய்யவில்லை, இருப்பதைத் தான் செய்கிறோம் என்று சொன்னார்கள். இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த திரு. தர்மலிங்கம் அவர்கள் தெளிவாகக் கூறி னார்கள், முதல் அமைச்சர் அவர்களும், இதற்கு முன்னால் இருந்த முதல் அமைச்சர் அவர்களும், விவாதத்தில் பங்கு எடுத்துக் கொண்ட அத்தனை பேர்களும் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கும் முறையை வற்புறுத்திப் பேசிவிட்டார்கள், பேசிவிட்ட பிறகு அது

24th July 1964] [புலவர் கா. கோவிந்தன்]

தானே சட்டமாக ஆக்கப்படவேண்டும். அதை விட்டுவிட்டு, நேரடி யாகத் தேர்தலை நடத்துவதை விட்டுவிட்டு, மறைமுகமாக ஏன் இந்த் தேர்தலை நடத்தவேண்டும் என்று தெரியவில்லை. ஆகவே இந்த விதத்தை மாற்றி ஜனநாயக முறையாக, பணநாயக முறையில் இல்லாமல், ஒழுங்காக இந்தத் தேர்தலை நடத்துவதற்கு முன்வர வேண்டும். இப்போது வகுத்திருக்கின்ற முறை மிகவும் அநாகரீகமானது, இதை நிச்சயமாக மாற்ற வேண்டும் என்ற என்னுடைய கருத்தை கூறி என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மசோதாவை நான் ஆதரிக்கிறேன். அண்மையில், அதாவது 1962-வது வருஷத்தில் பொதுத் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. நாட்டில் பொதுத் தேர்தல் நடந்த பிறகு நமக்கு இக்கட்டான ஒரு நிலைமை வரும் என்று நாம் எதிர்பார்க்காத நேரத்தில் தேசிய நெருக்கடி வந்துவிட்டது. தேசிய நெருக்கடி தீராமல் இருக் கின்ற இந்த நேரத்தில், ஜனங்கள் எல்லாம் சேர்ந்து தேர்தலை நடத்த வேண்டும், பொதுத் தேர்தல் மாதிரி இதை நடத்த வேண்டும் என்று சொல்வது உசிதமா என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். பஞ்சாயத்துத் தேர்தலை நாம் நேரடியாக வைப்போமானால் சட்டமன்ற தேர்தல்களுக்கு நடக்கின்ற தேர் தலைப் போன்றுதான் ஒரு தேர்தல் நடத்தவேண்டியிருக்கும். அதற்கு எவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும், என்னென்ன சங்கடங்கள் இவைகளை எல்லாம் நாம் ஏற்றாக வேண்டும். இவைகளை எல்லாம் கருதி நேரிடையாகத் தேர்தல் வேண்டியதில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதல்லாமல் ஏதோ மறைமுகமாகத் தேர்தலைத் நடத்த வேண்டும் என்று சொல்வதில் எந்த விதமான அர்த்தமும் இல்லை. ஒன்றிரண்டு பஞ்சாயத்துக்களில் வேண்டுமென்றால் ஆட்களைத் தூக்கிக் கொண்டுபோய்விட்டார்கள் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கும். எல்லா இடங்களிலும் அப்படித்தான் நடக்கிறது என்று சொல்லிவிட முடியாது. அதுமட்டுமல்ல. ஏதோ காங்கிரஸ் காரர்கள் பயந்துதான் இந்தத் தேர்தலை நேரிடையாக நடத்துவதற்கு ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். நேரிடைத் தேர் தலைக் கண்டு காங்கிரஸ்காரர்கள் பயந்துவிட்டார்கள் என்று எனக்கு முன்பாக புலவர் கோவிந்தன் அவர்கள் பேசியதைக் கேட்டு எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இப்போதுதான்— 1962-ல்தான் பொது தேர்தல் நடந்தது. அதில் நாங்கள் ஜெயித்து வரவில்லையா? பெருவாரியாக ஜெயித்து இப்போது எங்கள் கட்சி ஆட்சி நடத்தவில்லையா? இப்போது மட்டுமல்ல, 1967-லும் நாங்கள்தான் வரப்போகிறோம். அப்படியிருக்கும்போது எங்க ளுக்கு ஏன் பயம் ஏற்படப் போகிறது? நாட்டில் என்ன நிலைமை இருந்து கொண்டிருக்கிறது என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க

கிற எங்களைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர்கள் தருகின்ற இப்பேர்ப்பட்ட பதில் மிக வருத்தத்தையும் வேதனையையும் தருகின்றது என்பதைக்கூறி, இப்போது இந்த பஞ்சாயத்துச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டாம், 30, 31-ல் கூடுகின்ற பஞ்சாயத்து தலைவர்களின் அபிப்பிராயத்தை அறிந்த பின்னால், இந்தப் பஞ்சாயத்து தேர்தல் பற்றி மசோதாவைக் கொண்டுவரலாம், அதுவரை இந்த மசோதாவைத் தள்ளி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

12-30 p.m. * **திரு. வி. எல்லம நாயுடு:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று ஸ்தல் ஸ்தாபன அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மசோதாவின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த விவாதத்தில் பேசிய பலரும் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய தலைவர் தேர்தல் நடைபெற வேண்டும் என்று சொன்னார்கள். தலைவரைத் தேர்ந்தெடுக்கக்கூடியவர்களும் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறவர்கள்தான். ஏதோ மறைமுகமாகத் தேர்தலை நடத்துவதற்காக செய்யப்பட்டதாகவும் பயந்து போய் தான் இவ்விதம் செய்வதாகவும் சொல்வது வேண்டுமென்றே அரசாங்கத்தின் மீது குறை சொல்வதாகத்தான் அமையுமே தவிர உண்மையில் இதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, இப்போது 500 மக்களைக் கொண்ட இடத்திற்குக் கூட பஞ்சாயத்து அமைக்கப்பட்டிருக்கிறது. நான் கூற விரும்புவது கூடுமானவரை பஞ்சாயத்து நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற வேண்டுமானால், கிராமங்கள் பெரியதாக இருக்க வேண்டும், சிறிய கிராமங்களாக இருந்தால், இரண்டு, மூன்று சிறிய கிராமங்களை எல்லாம் சேர்த்து ஒரே பஞ்சாயத்தாக அமைத்தால் நலமாக இருக்கும். ஐந்தாயிரத்திற்கும் குறைவாக இல்லாமலும் 10,000-த்திற்கு மேற்படாமலும் மக்கள் தொகை இருக்கின்ற அளவில் பஞ்சாயத்துக்கள் இருந்தால் நலமாக இருக்கும். அப்படியிருந்தால் ஆடிட் துறை, நிர்வாகத் துறை இவைகளை எல்லாம் அதிகாரிகளைக் கொண்டே நல்ல முறையில் நடத்துவதற்கு வசதியாக இருக்கும். உதாரணமாக என்னுடைய பகுதியில் சுமார் 700 பேர் இருக்கிறார்கள். இந்த இடத்திற்கு ஒரு பஞ்சாயத்து இருக்கிறது அதே நேரத்தில் பக்கத்தில் 2,000, 3,000 மக்கள் கொண்ட பஞ்சாயத்துக்களும் இருக்கின்றன. இவைகளை எல்லாம் அரசாங்கம் சீர் தூக்கிப் பார்த்து, கூடிய மட்டும் ஒரே அளவில் இருக்கக்கூடிய முறையில் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும்.

அடுத்தபடியாகப் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள். இன்றுள்ள அதிகாரங்கள், 1958-ம் வருஷத்திலே கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அப்படியே வழங்கப்பட்டதாக தெரியவில்லை. இனிமேலாவது வருகிற பஞ்சாயத்துத் திருத்தங்

களில் பஞ்சாயத்துக்களின் நிர்வாகம் கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு கிராமத்தில் இருக்கிற எல்லா மக்களுக்கும் வசதி செய்து கொடுக்கும் வகையில் அமையவேண்டும் என்பது எனது கருத்து. இப்போது இருக்கும் சட்ட அடிப்படையில் கிராம ரோடுகள், கிராம குடி தண்ணீர் வசதி, கிராம சுகாதார வசதி இவைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதோடு கிராமக் குடியிருப்பு வசதிகளையும் பஞ்சாயத்து செய்து கொடுக்க வேண்டுமென்ற அமைப்பு இந்தச் சட்டத்தில் வரவேண்டுமென்று கூறிக்கொண்டு இந்த மசோதாவை வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. தா. சின்னச்சாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் பஞ்சாயத்துத் திருத்த மசோதாவை எதிர்த்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு காலத்தில் ஒரு அரசன் வேட்டைக்குப் போகும்போது, சற்று தூரத்தில் ஒரு பெண்மணி நின்றதைக் கண்டு; பின்னோடு வந்த அமைச்சரைப் பார்த்து, 'மந்திரி . . .' என்று ஏதோ கேட்க ஆரம்பித்தார். அப்போது அவர் கேட்பதற்கு முன்னரே அந்த அமைச்சர் 'அதுக்கது கரும்பு' என்று சொன்னார். அப்போது அந்த அரசன் 'நான் கேட்பதற்கு முன்பாக பதில் சொல்லி விட்டீரே, நான் என்ன கேட்பேன் என்று எப்படித் தெரியும்' என்று கேட்டான். அதற்கு அமைச்சர், 'வரும் காலம்; சென்ற காலம்; நிகழ் காலம்" என்ற மூன்று காலங்களையும் அறிந்தவர்களாக இருக்கவேண்டும் அமைச்சராக இருக்கவேண்டுமென்றால்' என்று சொன்னார்.

இப்போது நமது ஜனநாயக சோஷலிச அமைப்பிலே எந்தப் பஞ்சாயத்திலாவது சேர்மனாக ஏதாவது ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர் இருக்கிறாரா என்று தெரிய வேண்டும். ஆகையால் மக்கள் வோட்டு போடுவதென்றால் யாராவது ஜெயித்து வந்து விடுவார்கள் என்று பணநாயகமா, ஜனநாயகமா என்ற அடிப்படையில் இந்த மசோதா வந்திருக்கிறது. நான் கூட எங்கள் ஊரில் திரு. கந்தசாமி முதலியாரைச் சேர்மனாகச் செய்ய ஒரு டிரம் மிளகாய் பொடி எடுத்துக்கொண்டு வந்தேன். ஜனநாயக முறையில் நடக்க மக்கள் ஓட்டுப் போடும் முறையில் நடக்க வேண்டுமென்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். தண்டாயுதபாணி: சட்ட மன்ற உதவித் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை வரவேற்று எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக அதிகாரம் ஒரு இடத்தில் குவிந்திருப்பதை பரவலாக்கி, கிராம அடிப்படையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்பு ஏற்று நடத்த வேண்டுமென்று இந்த பஞ்சாயத்து ஆட்சி முறையைக் கொண்டு வந்தோம். அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளையும், நிறைவேற்றும்

[திரு. எம். தண்டாயுதபாணி] [24th July 1964

பணிகளையும் பார்க்கும்போது, சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள் என்பதை மறுக்க முடியாது. இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நடத்தப்படுகிற தேர்தல் முறையைப் பற்றி எனக்கு முன் பேசிய பல கனம் அங்கத்தினர்கள் பல கருத்துக்களைக் கூறினார்கள். குறிப்பாக எனது தொகுதியைச் சேர்ந்த பஞ்சாயத்து கூட்டு மன்றம் தான் சென்னை மாநிலத்திலேயே அதிக மக்கள் தொகையைக் கொண்ட கூட்டு மன்றம். ஒரு லட்சத்து நாற்பத்தேழாயிரம் மக்கள் தொகையைக் கொண்ட பஞ்சாயத்து கூட்டு மன்றம் எனது தொகுதியில் அமைந்திருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டு மன்றத் தலைவர்கள், பஞ்சாயத்து தலைவர்கள் வரவேண்டுமென்று சொன்னால், ஏறத்தாழ என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டாலே கூட ஒரு குட்டி பொதுத் தேர்தல் நடைபெற வேண்டுமேதவிர மற்றபடி சாதாரணமாக நடத்த முடியாது. பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொன்னால் பொதுத் தேர்தல் நடக்கும் நேரத்தில் சட்டசபை அங்கத்தினர்கள், பாராளுமன்ற அங்கத்தினர்கள் ஆகியவர்களோடு பஞ்சாயத்து தலைவர்கள், பஞ்சாயத்துக் கூட்டு மன்றத் தலைவர்கள் ஆகியவர்களுக்கும் சேர்த்து தேர்தல் நடத்த முடியுமே தவிர, தற்போது டிசம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கிற தேர்தலுக்கு இப்போது மசோதாவிலே இருக்கிற முறைதான் சிறப்பாக அமையும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிகொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக சட்ட சபை அங்கத்தினர்களுக்கு இந்தக் கூட்டு மன்றங்களில் இருக்கிற பொறுப்புகளையும் அவர்கள் செயல்படுகிற முறைகளையும் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். கடந்த சட்ட சபையிலேயே நிறைவேற்றப்பட்டிருக்கிற போதிலும் சட்ட சபை அங்கத்தினர்களுக்கு எப்படி பொறுப்பு இருக்கிறது என்று பார்த்தால் அழையாத விருந்தாளியாகச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இந்தச் சட்ட சபையிலே இருக்கிறவர்கள் பலர் பஞ்சாயத்து கூட்டு மன்ற அங்கத்தினர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள். குறிப்பாகப் பொது மக்கள் விரும்புகிற தேவைகளை, அவர்கள் வேண்டுகிறவற்றைச் செய்ய பஞ்சாயத்து கூட்டு மன்றத் தலைவருக்கும் சட்ட சபை அங்கத்தினருக்கும் உறவு சரியான முறையில் இருந்தால்தான் ஏதாவது செய்ய முடியும். அப்படி அமையாவிட்டால் அவர்கள் பாடு மிகவும் சிரமமாக இருக்கிறது. இதுபோன்ற நிலை நீடித்தால் சட்ட சபை அங்கத்தினர்கள் பொது மக்களிடத்தில் போய் எப்படி வாக்கு சேகரிக்க முடியும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த சட்ட சபை அங்கத்தினர்களுக்கு பஞ்சாயத்து கூட்டு மன்றங்களில் வாக்களிக்கும் உரிமையாவது ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் முன்பு கூறியது போல 64 பஞ்சாயத்துக்கள் கொண்ட கூட்டு மன்றம் ஒரே தொகுதியில் இருக்கிறது. அதே நேரத்தில் 23 பஞ்சாயத்துக்களைக் கொண்ட கூட்டு மன்றமும் அதே தொகுதி

24th July 1964] [திரு. எம். தண்டாயுதபாணி]

யில் இருக்கிறது. புதிதாகப் பஞ்சாயத்து கூட்டு மன்றம் ஆரம்பிக்காவிட்டாலும், அதிகமாகப் பஞ்சாயத்துக்கள் இருக்கிற கூட்டு மன்றங்களிலிருந்து சில பஞ்சாயத்துக்களைக் குறைந்த அளவு உள்ள கூட்டு மன்றங்களோடு சேர்த்துத் தேர்தல் நடத்த வேண்டுமென்று கேட்டுகொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ம. கமலநாதன்:** கனம் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கொண்டு வந்திருக்கிற பஞ்சாயத்து திருத்த மசோதாவின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலே கம்யூனிட்டி டெவலப்மெண்ட் டிமாண்டிலே பேசிய ஆளும் கட்சி அங்கத்தினர்களும், எதிர் கட்சி அங்கத்தினர்களும் நேரடியாகத் தேர்தலை நடத்தவேண்டுமென்று ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். இன்றைக்குப் பேசிய திரு. கார்ச்சா கவுடர் கூட அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார். 1958-ல் பஞ்சாயத்துக்களின் டெலிகேட்டாக இருந்து அந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார். ஆனால் இப்போது அதை எதிர்க்கும் முறையில் அமைச்சர் கொண்டு வந்திருக்கிற திருத்தம் சரி என்று சொல்லுகிறார். அதே போல திரு. நடராஜ கவுண்டர் அவர்கள் எடுத்துச் சொல்லும்போது இன்று திரு. அன்பில் தர்மலிங்கம் பேசியபடியே சொல்லியிருக்கிறார். அப்போதெல்லாம் இப்படிப் பேசிவிட்டு, அமைச்சர் கொண்டு வந்திருக்கிறார் என்ற காரணத்திற்காக கட்சிக் கட்டுப்பாட்டுக்குப் பயந்து இப்படிப் பேசுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை ஆளும் கட்சி அங்கத்தினர்களைப் பொறுத்த வரையில் சுமத்துகிறேன்.

அப்போது அமைச்சர் டிமாண்டுக்குப் பதில் சொல்லும்போது சொன்னார்கள்: ஏறக்குறைய எல்லா உறுப்பினர்களும் நேரடி முறை இருக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள், சில உறுப்பினர்கள் பழைய முறை இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள், இதைக் கவனித்து ஆவன செய்கிறேன் என்று உறுதிமொழி அளித்தார்கள். ஆகவே அப்படிச் சொல்லி விட்டு இப்போது அதற்கு மாறாக . . . .

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: "ஆவன செய்கிறேன்" என்றால் உறுதி மொழி என்று அர்த்தமா?

திரு. ம. கமலநாதன்: ஆளும் கட்சி உறுப்பினர்களெல்லாம் இதே கருத்தை வலியுறுத்தியிருக்கும்போது, எதிர்க் கட்சி உறுப்பினர்களும் அதே கருத்தை வலியுறுத்தியிருக்கும்போது, ஆவன செய்கிறேன் என்றால், நேரடித் தேர்தலை கண்டிப்பாகக் கொண்டு வந்திருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

எனக்கு முன் பேசிய எனது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சொல்லியதுபோல, எங்கே எதிர் காலத்தில் பஞ்சாயத்துத் தலைவர்களெல்லோரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வந்து விடுவார்களோ என்ற பயத்தினால் சட்ட மன்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் இப்படி முடிவு எடுத்திருப்

[திரு. ம. கமலநாதன்] [24th July 1964

பார்கள் என்று நான் கருதுகிறேன். நான் கேள்வி நேரத்தில்கூட அமைச்சரைக் கேட்டிருக்கிறேன். பஞ்சாயத்துத் தலைவர்கள் கொண்ட கூட்டத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட கூட்டத்திலே மற்றவர்களையும் கொண்ட கூட்டத்திலே தேர்தலைப் பற்றி முடிவு எடுக்கவேண்டும் என்று கேட்டதற்கு அப்படித்தான் செய்யலாம் என்று ஆதரவு தெரிவித்தார்கள். ஆனால் இப்படிப் பட்ட முறை வந்தது கண்டு வருத்தமடைகிறேன். வேதனை அடைகிறேன். ஆகையால் கட்சிக் கட்டுப்பாட்டுக்குப் பயந்து இந்த முறையைச் செய்கிறார்கள் என்ற குற்றத்தைச் சுமத்துகிறேன்.

மேலும் 1958-வது வருஷத்திய சட்டத்திலே, சட்டத்திற்குத் திருத்தம் என்று 20, 25 சட்டங்களுக்குத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். அவசரம் அவசரமாகத் தயாரிக்கப்பட்ட சட்டத்தை நன்றாக, க்வனமாகப் பரிசீலித்துத் திருத்துவதற்கு ஆய்வுக் குழுவிற்கு அனுப்புவது நல்லது, இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளுவது நல்லது என்று கூறிக்கொள்கிறேன். 20, 25 சட்டங்களுக்குத் திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்கு ஏதாவது சந்தேகம் வந்தால் க்ளாரிஃபிகேஷன் கொடுக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தில் இருக்கிற அத்தனை பேருக்கும் ஓட்டுப்போட உரிமை இருக்கிறது. சேர்க்கப்பட்ட பெண் உறுப்பினர், அல்லது ஷெட்யூல்ட் காஸ்ட் உறுப்பினருக்கு மற்ற உறுப்பினர்களைப் போலவே எல்லா உரிமையும் இருக்கிறது என்று சட்டம். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் கூட்டங்களில் மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ந்து வரவில்லை என்றால் தொடர்ந்து உறுப்பினராக இருப்பார்கள் அந்த அங்கத்தினர்கள். பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் அத்தனை அதிகாரமும் பெற்ற கோ-ஆப்டெட் மெம்பராக இருப்பவர், மூன்று கூட்டங்களுக்கு வரவில்லை என்றால் அவர் பதவியை இழக்கிறார் என்ற முரண்பாடு இருக்கிறது. இதையெல்லாம் பரிசீலித்து முடிவு எடுக்க இதை ஆலோசனை குழுவிற்கு அனுப்புவது நல்லது என்று கூறி எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு செ. சதாசிவம்** : மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல நான் முற்படுகிறேன். 1958-வது ஆண்டு சட்டத்திலே உள்ள குறைபாடுகளை நிவர்த்திக்கக்கூடிய அளவிலே இந்த மசோதா இருக்கிறது என்று மகிழ்கிறோம். குறிப்பாக, பஞ்சாயத்துத் தலைவர் தன்னுடைய பதவியை இழந்தாலும் அவர் பஞ்சாயத்து யூனியனிலே அங்கம் வகிக்கிறார் என்ற நிலையிலே பல கருத்துக்கள் இருந்து வந்ததை இந்த மசோதா நீக்குவது மிகவும் பொருத்தமானது.

நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பஞ்சாயத்துத் தலைவர்கள் 'டிஸ்க்வாலிபிகேஷன் ஆக்டின்' கீழே நீக்கப்படுவதானால், டிஸ்டிரிக்ட் முன்சீப் அருகதையுள்ளவரால் நீக்கப்பட்டால்,

24th July 1964] [திரு. செ. சதாசிவம்]

அதற்கு மேல் அப்பீல் இல்லை என்று சட்டத்தில் இருக்கிறது. அந்த முறையிலே இருந்தாலும் கூட, இன்னும் பல சட்டங்கள் வைத்து, உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்படுவதால், அந்த நீக்கம் மிகவும் தாமதப்படுகிறது. நம்முடைய சட்டத்தின் அடிப்படையிலேயே முன்சீப் கோர்ட்டில் தீர்ப்பு வழங்கப்பட்டவுடனேயே, அவரை நீக்கிவிட்டு, அந்த இடத்திற்கு வேறு தலைவரைத் தேர்ந்தெடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது நேரடியாகத் தேர்தல் வேண்டும், வேண்டாம் என்ற பிரச்னை இருக்கிறது. அந்தப் பிரச்னையை நாம் நன்கு ஆராய்ந்து பார்ப்போமானால், நேரடியாக நாம் தேர்ந்தெடுப்போமானால், நேரடியாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய அங்கத்தினர்கள் தலைவர்களாக வரும்பொழுது, அந்தப் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுடைய பவர் மிகவும் அதிகமாக வேறுன்றி விடுகிறது. அதே சமயத்தில் பஞ்சாயத்துத் தலைவர்கள் அந்த யூனியன் அங்கத்தினர்களாக வரும்பொழுது, அவர்களுக்கும் தலைவர்களுக்கும் முரண்பட்ட கருத்து ஏற்படுகிறது. ஆகவே, அந்த பஞ்சாயத்து யூனியன் நிச்சயம் நல்ல முறையில் செயல்படாது. இதுபோன்று அமைப்போமானால், இந்த ராஜ்யத்திலுள்ள பெரும் பகுதி பஞ்சாயத்து யூனியன்கள் நிச்சயம் செயல்படாது என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அப்படி நாம் செய்ய வேண்டுமென்றால், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுத்தால் பஞ்சாயத்து யூனியனையும் மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலைப் போல் ஆலோசனை சொல்லும் குழுவாக அமைத்தால் தான் சரியாகச் செயல்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். நேரடித் தேர்தல் தேவையில்லை என்பது தான் என்னுடைய கருத்து. தூக்கிக் கொண்டு செல்லுகிறார்கள், பணத்தைச் செலவழிக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டது. நேரடித் தேர்தல் ஏற்படுத்தினால் மட்டும், பணம் செலவழிக்கப்படாமல் இருக்குமா என்பதை யோசிக்க வேண்டும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் அவர்கள் தேர்தல் நல்ல முறையில் நடக்கவேண்டுமென்றால் கோ-ஆப்டெட் மெம்பர்ஸை, யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னாலேயே தேர்ந்தெடுத்துவிட வேண்டும், அப்பொழுதுதான் அதிகமான பலமுடைய கட்சி அமையும், தலைவர் தேர்தலில் அதிக சிரமம் இருக்காது என்ற கருத்தைச் சொன்னார்கள். அது சரி என்பதை நானும் சொல்ல விரும்புகிறேன். திரு. தர்மலிங்கம் அவர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாகாண பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுக்கவில்லை, சர்க்காரே நாமினேட் செய்கிற முறை இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் தெரிந்து சொல்கிறார்களோ, தெரியாமல் சொல்கிறார்களோ தெரியவில்லை. அவர் அப்படிச் சொன்னது தவறு. பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தான் அவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர் அந்த முறையில் சொன்னது சரியல்ல.

[24th July 1964

*திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிற விவாதம் பஞ்சாயத்துத் தலைவர்களையும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமா, அல்லது பொது மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமா என்பதுதான். எங்கள் தரப்பிலிருந்து சொல்லப்பட்ட கருத்துக்கள் இன்று, நேற்று சொன்னது அல்ல. 1964-ம் ஆண்டில் மான்யக் கோரிக்கையின்போது சுட்டிக் காட்டப்பட்ட கருத்துக்கள்தான். நாங்கள் மட்டும் அல்ல, ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் கூட, அத்தனை பேர்களும் அந்த அபிப்பிராயத்தை ஒட்டியே சொன்னார்கள். அதை மனதில் வைத்துத்தானே என்னவோ அமைச்சர் அவர்கள் 'நாங்கள் இதை ஆலோசனை செய்கிறோம். தேர்தல் வரும்பொழுது அது பற்றி ஒரு முடிவு எடுப்போம்' என்று சொன்னார்கள். எப்பொழுது முடிவு எடுக்கப்படும் என்று கேட்டபொழுது கூட, சூசகமாகச் சீக்கிரம் முடிவெடுக்கப்படும் என்று சொல்லி, நாளைக் குறிப்பிட வில்லை. எந்தக் கோணத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டாலும், அந்தக் கருத்தை அவர் ஒத்துக்கொள்வது போலத்தான் பேசினார்கள், சொன்னார்கள். ஆனால் திடீரென்று இப்பொழுது அந்த வார்த்தை அப்பட்டமாக அப்படியே காணப்படவில்லை என்ற நிலை இருப்பதால் அச்சப்படுகிறோம். எப்படி இருந்தாலும், தேர்தல் முறை பொது மக்களை, ஏழை விவசாயிகளைப் பாதிக்காத அளவுக்கு இருக்கும், அதுதான் நல்ல முறை என்று நாங்கள் எதிர் பார்த்தோம். அந்த அளவுக்கு இப்பொழுது வரவில்லை. திரு. சின்னசாமி அவர்கள் பஞ்சாயத்து ஒன்றிப்பு மன்றங்களில் யாராவது ஆதி திராவிட மக்கள் இருக்கிறார்களா என்று விரல் விட்டு பார்த்தால் ஒருவர் கூட இருக்காது என்ற நிலைமையை எடுத்துச் சொன்னார்கள். இப்பொழுது ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறது. அப்படியிருக்கும்பொழுது கேவலமான, அவல நிலையான வார்த்தைகளைப் பொது மக்கள் பேசுவதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். பாராளுமன்றத்தில் ஆதி திராவிடர்கள் இத்தனை பேர்களுக்கு என்று இடம் ஒதுக்கியிருப்பது போல், சட்டமன்றத்தில் இடம் ஒதுக்கியது போல், ஊராட்சி கூட்டு மன்றத்திலும் ஆதி திராவிட மக்களுக்கு ஏன் இடங்களை ஒதுக்கக் கூடாது என்று அரசினரைக் கேட்டுக் கொண்டு, என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேர்களும் சொல்லிய வார்த்தைகளை வலியுறுத்தி, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. கே. டி. கோசல்ராம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா சம்பந்தமாகப் பேசும்பொழுது நண்பர் தர்ம லிங்கம் அவர்கள் என்னைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு நேரடியாகத் தேர்தல் நடத்த வேண்டும் என்ற பிரச்னை இருந்தபொழுது, கவுன்சில் சேர்மனுக்கு

24th July 1964] [திரு. கே. டி. கோசல்ராம்]

மட்டும் நேரடியாகத் தேர்தல் இருக்குமானால், பஞ்சாயத்துத் தலைவர்கள் கவுன்சில் அங்கத்தினர்களாக இருக்கும்பொழுது, சேர்மன் மீது ஓரளவுக்கு கண்ட்ரோல் வைத்துக்கொள்வதற்கு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் 'மூவ்' பண்ணுவதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லாமல் போய்விடும். பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலை நேரடியாக வைத்து பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலை 'இன்டைரக்ட்' தேர்தல் முறையில் நடத்த வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால், இப்போதைய முறையில் இரண்டும் 'இன்டைரக்ட்' எலெக்ஷனாக இருக்கிறது. இந்த அரசாங்கம் ஜனநாயகத்தில் பரிபூரணமாக நம்பிக்கை கொண்டது. பரிபூரண ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட கட்சியில் அங்கம் வகிக்கிறேன் நான். இந்த அரசாங்கத்திற்கு நான் ஒன்று சொல்லுகிறேன். பரிபூரணமாக நாம் நினைக்கிற ஜனநாயகம் நிறைவேற வேண்டும். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் கவுன்சில், ஜில்லா கவுன்சில் இங்கெல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் டைரக்ட் எலெக்ஷனில் வந்தவர்கள் ஒரு அதிகாரியின் கீழே தன்மானத்தை இழந்து 'எஸ் யுவர் ஹானர்' போடக் கூடிய அவல நிலைமையை இந்த அரசாங்கம் சட்டபூர்வமாகக் கொண்டு வந்தால், அவர்களுக்கு ஜனநாயகம் என்று பேசுவதற்கு யோக்கியதை கிடையாது என்று சொல்லுகிறேன். எங்களைப் போல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கலெக்டரைத் தலைமையாக வைத்துக் கொண்டு 'எஸ் யுவர் ஹானர்' போடவேண்டிய நிலைமை இருக்கக் கூடாது. நான் அதனால்தான் டெவலப்மெண்டு கவுன்சிலுக்குப் போவதே இல்லை, விட்டுவிட்டேன், அவசியமில்லை என்று கருதுகிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அசெம்பிளி மெம்பர்களுக்குப் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் வோட்டு போடுவதற்கு உரிமை கிடையாது. தீர்மானம் அனுப்பலாம். அதன் மீது வோட்டு போட் முடியாது. அத்தகைய ஒரு அவல நிலைமை இருக்கிறது. அது போக்கப்பட வேண்டும். பரிபூரணமாக அதிகாரத்தை ஒரு கவுன்சிலுக்கோ, போர்டுக்கோ கொடுத்து விட்டால், அதை 'மிஸ்யூஸ்' பண்ணுவார்களோ என்னவோ என்று நினைக்கலாம். கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கலாம் என்பதை ஒத்துக்கொள்கிறேன். அதில் எனக்கும், அரசாங்கத்திற்கும் அதிகமான அபிப்பிராய பேதம் இருக்காது. ஆனால், படிப்படியாகக் கொடுத்துத்தான் தீரவேண்டும். பரிபூரணமாக ஒரு காலத்தில் கொடுத்துத்தான் தீரவேண்டும். நாமெல்லாம் எங்கேயோ செகரடிரியாக இருந்து வந்து விடவில்லை. நாம் எல்லோரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். நிர்வாகத்தை நடத்துகிறோம். ஒன்றிரண்டு தவறுகள் செய்கிறோம். அப்படித் தவறுகள் செய்தாலும், பின்னர் உணர்ந்து, நிர்வாகத்தை நன்றாக நடத்திச் செல்ல முற்படுகிறோம். ஜனநாயக முறைப்படி அகில இந்தியாவிலும் டெவல்ப்மெண்ட் கவுன்சிலுக்கு அங்கே இருக்கிற நான்-அபிஷியல் தலைவராக இருக்கும்பொழுது, தமிழ் நாட்டில் மாத்திரம் ஒரு அரசாங்க அதிகாரி தலைவர், மக்களால் தேர்ந்

தெடுக்கப்பட்டவர்கள் அவருக்கு அடிமைகள் என்ற நிலை இருக்கிறது. இம்மாதிரி இருப்பது தவறு. இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்பொழுது, டெவலப்மெண்ட் கவுன்சிலைப் பற்றி இருக்கிற சட்டத்தையும் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சா. கணேசன்: டெவலப்மெண்ட் கவுன்சில் இந்தச் சட்டத்திலே வருகிறதா?

*** திரு. செ. மாதவன்:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, 1958-ம் ஆண்டு காங்கிரஸ் கட்சியால் கொண்டுவரப்பட்ட பஞ்சாயத்துச் சட்டத்திற்கு இப்பொழுது திருத்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கு என்னுடைய கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டியதுபோல் அமைச்சர்கள் பலர் காங்கிரஸ் தலைவர்களையும் உட்படுத்தி, "புலி வருகிறது, புலி வருகிறது" என்று இந்தச் சட்ட மன்றத்திலும், மேடையிலும் கூறிவிட்டு, பூனையாக இருக்கும் ஒரு சட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்களே என்று நாம் வருத்தப்படக் கூடிய சூழ்நிலையில் இருக்கிறோம். 1955-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தை 1958-ல் திருத்தும்பொழுது, அன்று காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஒரு உறுதிமொழி கொடுக்கப்பட்டது. அப்பொழுது, இந்தப் பஞ்சாயத்துச் சட்டத்தில் ஊழல்கள் இருக்கின்றன, அதிகாரிகள் வரம்பு மீறிச் செல்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன, பஞ்சாயத்துத் தலைவர்களையும், யூனியன் தலைவர்களையும் தேர்ந்தெடுக்கும் பொழுது லஞ்சம் தாண்டவமாடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று இந்த மன்றத்திலே சுட்டிக்காட்டப்பட்டது. அன்றைக்குப் பதில் அளித்த நிதி அமைச்சர் அவர்கள் ஒரு உறுதி மொழியை நாட்டு மக்களுக்கும் இந்தச் சட்டமன்றத்திற்கும் தந்தார்கள். அந்தச் சட்டம் உருவானதற்குப் பின்னர், அதிலே குறைபாடுகள் இருக்குமானால், அவைகள் சட்டமன்றத்திலே எடுத்துக் கூறப்படுமானால், ஒரு கமிட்டி போட்டு, எல்லா கட்சிகளையும் அழைத்து மீண்டும் பரிசீலிப்போம். அதற்குப் பின்னர் ஒரு பூரண திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவோம் என்ற ஒரு உறுதிமொழி, காங்கிரஸ் அரசாங்கத்தின் சார்பாக 1958-ல் தரப்பட்டது. எப்பொழுதும்போல் அந்த உறுதி மொழியும் காற்றிலே பறக்க விடப்பட்டதா என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கு முன்னர் நமது அமைச்சர் அவர்களே ஒரு உறுதிமொழியைத் தந்தார்கள். இந்தத் திருத்தச் சட்டம் வருவதற்கு முன்னர் டீலிமிட்டேஷன் செய்வோம் என்று ஒரு உறுதிமொழியைக் கொடுத்தார்கள். ஏற்கனவே கொண்டு வந்த 1958-ம் வருடத்திய சட்டம் ரெவின்யூ குரூப் அமைப்பில் செய்யப்பட்டது. ரெவின்யூ குரூப் என்பது ஜமீந்தார்களுடைய பாரம்பரியத்தை எடுத்துக் காட்டுவதாக இருந்தது. இங்கே ஒரு கிராமம், 10 மைல்களுக்கு அப்பால் ஒரு கிராமம் என்ற முறையிலே ரெவின்யூ குரூப்

இருந்தது. ஏற்கனவே உள்ள தொகுதிகளை மாற்றுவதற்கு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம். தேர்தல் முன்னர் அதைச் செய்வோம் என்று தரப்பட்ட பதில் என்னவாயிற்று என்று அமைச்சர் அவர்கள் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய காலத்திலேயே இந்தச் சட்டத்தில் இருக்கும் குறைபாடுகளைக் கண்டுபிடித்து, எங்களுடைய தரப்பில் கொண்டுவரப்பட்டிருக்கும் திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது ஒரு முக்கியமான மசோதாவாக இருப்பதால், இதை ஒரு பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டும். பொது மக்களின் கருத்துக்களை அறிய அவர்கள் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும். இன்றைக்கு இருக்கும் அரசாங்கம் இந்த மசோதாவை எவ்வளவு வேகமாக நம் மீது திணிக்கப் பார்க்கிறது என்பதை உதாரணத்திற்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 18-ம் தேதி இந்த மசோதா அறிமுகம் செய்யப்பட்டது. அன்றைக்கே கெசட்டில் வந்திருக்கிறது. இது ஒரு "மாஜிக்கா" என்று தெரியவில்லை. இன்றைக்கு 6-வது நாளிலே இந்த மசோதா இங்கு விவாதிக்கப்படுகிறது. இப்படி விரைவாக இந்தச் சட்டத்தை நுழைக்க வேண்டுமென்று கருதினால், அது மக்களை ஏமாற்றுவதாகத்தான் இருக்கும். இந்தச் சட்டம் அவசரம் அவசரமாகக் கொண்டு வரப்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாங்கள் வேண்டுவது டைரக்ட் எலக்ஷன். நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் திறமை இருக்கிறது என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். திரு. செல்வராஜன் அவர்கள் பேசும் பொழுது ஒன்றைச் சுட்டிக்காண்பித்தார்கள். டைரக்ட் எலெக்ஷன் என்று எதிர்க் கட்சியில் பேசப்படுகிறது, ஆனால் திருத்தம் கொடுக்கப்படவில்லையே என்று கனம் அமைச்சர் அவர்கள் 36-வது பிரிவை வெகுத் திறமையாகத் திருத்தியிருக்கிறார்கள். பிரின்ஸிபல் சட்டத்திலே அந்தப் பிரிவில் உள்ள முதல் பகுதி எலெக்ஷனைப் பற்றியது. டைரக்ட் எலெக்ஷன், இன்டைரக்ட் எலெக்ஷன், என்றிருப்பதைத் தொடாமல் விட்டுவிட்டார்கள். அதற்கு ஒரு ப்ரொவைஸோவை மட்டும் சேர்த்திருக்கிறார்கள். அதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏமாற்றுவதற்காகத்தான் இப்படி ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏற்கெனவே, எங்களுக்கு பதில் தரும்பொழுது கனம் அமைச்சர் அவர்கள் ஒரு வாதத்தைக் குறிப்பிட்டார்கள். டைரக்ட் எலெக்ஷன் வந்துவிட்டால் பஞ்சாயத்து யூனியன் தலைவரைக் கட்டுப் படுத்தக்கூட வாய்ப்பு இல்லாமல் போய்விடும். அப்படிக் கட்டுப்படுத்துவதற்கு பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களுக்கு அதிகாரம் இருந்தால் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு வாய்ப்பு இருந்தால் இரண்டிற்கும் முரண்பாடு ஏற்படும் என்று சொன்னார்கள். ஏற்கெனவே இருக்கக்கூடிய சட்டத்தில் 154-வது பிரிவில் நம்முடைய அரசாங்கம் ஒரு அதிகாரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பஞ்சாயத்து யூனியன் தலைவர் சட்டத்திற்குப் புறம்பாக சட்டத்தை துஷ்பிரயோகம் செய்து நடந்துகொண்டால், அவரைப் பதவிலிருந்து விலக்கு

[திரு. செ. மாதவன்] [24th July 1964

வதற்கு (இம்பீச் செயவதற்கு) அரசாங்கம் அதிகாரம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தக காரணத்தைக் கொண்டு டைரக்ட் எலெக்ஷன் வேண்டாம் என்று சொல்லக்கூடும். இங்கே பேசின அங்கத்தினர்கள் பலர் இந்தத் தேர்தலிலே லஞ்சம் தாண்டவம் ஆடுகிறது என்று குறிப்பிட்டார்கள். நமது இந்திய ஜனநாயக நாட்டிலேதான் தேர்தலின்போது ஆட்களை தூக்கிச் செல்லும் வேடிக்கையை நாம் பார்க்கிறோம். அன்றைய நிதியமைச்சர் அவர்கள் இது உண்மையா இல்லையா என்பதை ஆராய மறுத்தார்கள். இன்றைக்கு இங்கே பேசிய அத்தனை அங்கத்தினர்களும், ஆளும் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் அந்த முறை நம் நாட்டில் இருக்கிறது, லஞ்சம் தாண்டவம் ஆடுகிறது, ஆகவே அவற்றை அகற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார்கள். பஞ்சாயத்து மகாநாட்டில் தீர்மானங்கூட போடப் பட்டு இந்த மன்றத்திற்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த ஏடு இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. மாநிலப் பஞ்சாயத்து யூனியன் தலைவரே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். அவரும் முன்னாள் அமைச்சராக இருந்திருக்கிறார். இந்த விஷயத்தில் காங்கிரஸ் கட்சிக் குள்ளேயே கருத்து வேறுபாடு இருக்கிறது. இந்த நேரிடைத் தேர்தல் முறையை இந்த அரசாங்கம் ஒப்புக்கொள்ள மறுக்கிறது என்பதைத் தெவித்துக்கொண்டு, இந்தச் சட்டத்தைப் பொது மக்களின் பரிசீலனைக்கு அனுப்பி அவர்களது கருத்தை அறிய வேண்டும் அல்லது ஒரு பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் அல்லது அரசாங்கத்திற்குத் தைரியம் இருந்தால் இதை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. பி. கே. மூக்கையாத் தேவர் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்துச் சட்டத்தின் மூலமாக மக்கள் எல்லோரும் ஐந்தாண்டுத் திட்டங்களின் பலன்களை உணர வேண்டும். ஜன பெருக்கைக் குறைக்க வேண்டும். நமது நாட்டில் உணவு உற்பத்தி பெருக வேண்டும். குட்டித் தலைவர்கள் ஏற்பட வேண்டும் இதற் கெல்லாம் வாய்ப்பு ஏற்படுத்திக் தருகிற புரட்சிகரமான திட்டம் இது என்று எல்லாம் சொல்லப்பட்டது. அந்தப் புரட்சிகரமான திட்டம் தான் இன்று வரட்சியாக இருக்கிற நிலைமையை நாம் பார்க்கிறோம். இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர்கூட, சட்ட மன்றத்திலுள்ள அங்கத் தினர்களும் சரி, வெளியேயுள்ளவர்களும்சரி, இந்த ஆள் தூக்கும் படலம் பஞ்சாயத்து ஆட்சியில் நடக்கிறது, அத்தகைய ஆள் தூக்கும் சட்டம் போய் ஜனநாயகத்தை மதிக்கும் சட்டம் வருமா என்று மக்கள் நினைத்துக் கொண்டிருக்கும்பொழுது, அந்த ஆள் தூக்கிச் சட்டமே ஒரு அவசரச் சட்டமாக, ஒரு அவமானச் சட்ட மாக இங்கே கொண்டுவரப்படுகிறது. ஜனநாயக சோஷலிஸம் என்கிற நிலையை மாற்றி சென்ட்ரோல்ட்டு டெமாக்ரஸி என்ற முறை கொண்டு வரப்படுகிறது. இன்றைக்கு ஆளும் கட்சியினர் இந்த மசோதாவை கட்சி நோக்குடன்தான் பார்க்கிறார்களே தவிர

24th July 1964] [திரு. பி. கே. மூக்கையாத் தேவர்]

கொள்கை நோக்குடன் பார்க்கவில்லை. இதை ஒரு பொதுத் தேர்தல் பிரச்னையாகக்கூட வைத்திருக்கலாம். இங்கிலாந்து தேசத்திலேகூட அடிக்கடி கவுன்டி எலக்ஷன்ஸ் என்று நடைபெறு கின்றன. ஐந்தாண்டுகளுக்குள்ளேயே மக்களுடைய விருப்பு வெறுப்புகளைத் தெரிந்துகொள்வதற்கு தேர்தல் நடத்தினால் நல்லது. இந்தச் சட்டம் முன்பு வரும்போதே நாங்கள் எடுத்துச் சொன்னோம். அது இப்பொழுது அந்தக் காலத்துப் பஞ்சாயத்து, காந்தி காலத்துப் பஞ்சாயத்து, உங்கள் காலத்துப் பஞ்சாயத்தாக ஆகி, கூடிய சீக்கிரமே காங்கிரஸ் கட்சிப் பஞ்சாயத்தாக மாறி விடும். லஞ்சத்தை ஒழிப்பது பற்றிப் பேசுகிறோம். அந்த லஞ்சம் கிராமத்திலேயே, கருவிலேயே ஏற்பட்டு விட வழி செய்கிறோம். அங்கேயே ஜெயித்த கட்சி, ஜெயிக்காத கட்சி என்று பாகுபாடு 1-00 p.m.
படுத்தி கருதுகின்ற அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டு விடும். ஒரு ரோடு போடுகிறார்கள், வேறு வேலை செய்கிறார்கள் என்றால், என்னய்யா என்று கேட்டால், முதல் போட்டோம், முதல் எடுக் கிறோம் என்று சொல்கிறார்கள். கனம் கோசல்ராம் சொன்னபடி ஜனநாயக ரீரியாகச் செய்யவேண்டும். சர்க்கார் செய்வது ஜன நாயகத்தைச் சாகடிப்பதற்காகத்தான் செய்கிறார்கள் ஆகவே இந்த திருத்த மசோதாவை வாபஸ் வாங்குவதுதான் நல்லது என்பதைச் சொல்லிக் கொண்டு முடிக்கிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Deputy Speaker, Sir, I would like to say a few words on the Bill which is before the House. In implementing the Panchayats Act, we have encountered certain difficulties and inconveniences. We have expected that a comprehensive legislation to obviate all the difficulties now experienced in administration of the Panchayats Act, would be brought forward by way of amendments and a comprehensive legislation would be enacted. But that expectation has not come true. There are several difficulties experienced in the actual working of this Act. Administrative Officers in the implementation stage ask Government for clarification and the Secretariat gives some clarification, which is interpreted in several ways at the lower level. A comprehensive legislation to cover all the present difficulties could have been brought forward. Many anomalies could have been avoided.

Regarding elections to the Posts of Panchayat Presidents and Chairmen of Panchayat Unions the present position may be continued. But there is a feeling in villages that there is no proportional representation. For a Panchayat having 500 population there is a right to send one representative to the Panchayat Union Council. For a place having 15,000 population, it has the right to send the President of the Panchayat to the Panchayat Union Council. This is not proportional representation. To correct this, Government may come forward with an amendment so as to give proportional representation to the entire people and also to see that elections take place on proportional representation. Regarding Co-opted members, it has been stated that the

[Sri C. Chiranjeevulu Naidu] [24th July 1964

term ' member ' includes a co-opted member also. If the co-option takes place before the election of the Chairman and Vice-Chairman, then it would give an opportunity for the co-opted member to contest the election of Chairman or Vice-Chairman of the Panchayat Union council. That doubt has arisen and in reply to the doubt raised by the Collector of Tanjore; Government had given a clarification that if there is a casual vacancy, a co-opted member can also contest for the Chairmanship or Vice-Chairmanship. If the election of Chairman takes place early, a co-opted member is not given such an opportunity. Moral delinquency has not been defined properly.

Regarding added territories, all proceedings that have taken place have been validated and elections that had taken place on or after 2nd October 1961 had not been validated. On one fine morning the Chairman elected had been asked to get out. It is not the fault of the Chairman. It is the fault of the Government in not having properly extended the Act. Even the High Court had said that an amendment to the Act was necessary. But Government had preferred an appeal. Now the Chairmen are the victims. I would request the Government that election of Chairmen, who were all duly elected, be validated. I request Government to consider this. Thank you, sir.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே: நான் கொடுத்திருக்கும் திருத்தமானது இந்த மசோதாவை ஆய்வுக் கமிட்டிக்கு அனுப்பி, நன்றாகப் பரிசீலனை செய்து பிற்பாடு நிறைவேற்றலாம் என்பது தான். தெளிவாக செப்டம்பர் மாதத்தில் விவாதித்து, தேர்தல் நடைபெற வேண்டும் என்றால் அடுத்த வருஷம் கோடை காலத்தில், கிராமப்புறத்தின் எலக்ஷன் என்பதால், கோடைக் காலத்தில் நடத்தினால் விவசாயிகள் பங்கு எடுத்துக் கொள்ளச் சவுகரியமாக இருக்கும் என்பதனால்—நடத்திக் கொள்ளலாம்; அதற்குப் போதுமான அவகாசம் இருக்கும், ஆகவே அதை ஆட்சேபிக்க வேண்டாம் என்று சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதாவிலே இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. அவை தனித்தனியாக வந்திருந்தால்கூட நலமாக இருந்திருக்கும். நண்பர் சிரஞ்சீவலு நாயுடு எடுத்துக் காட்டியதைப்போல நம் ராஜ்யத்தோடு இணைந்த ஆந்திர ராஜ்யப் பகுதிகளுக்குத் தனியாகவும், பொதுவாக மற்ற இடங்களுக்குத் தனியாகவும், இருந்து இருந்தால் உபயோகமாய் இருந்து இருக்கும்; சங்கடம் இல்லாமல் இருந்து இருக்கும். இந்த மசோதாவில் ஷெடூல்ட் டிரைபுகளைச் சேர்த்து இருப்பதற்காகவும் இணைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களைச் சட்ட பூர்வமாக ஆக்குவதற்காகவும் இருக்கும் அம்சங்களை மட்டும் நான் வரவேற்க முடியும். மற்றப்படி தேர்தல் சம்பந்தப்பட்டதை ஆட்சேபிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

24th July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

கவுன்சிலுக்குத் தேர்தல் வேண்டாம் என்று சொன்னது இடைக்கால ஏற்பாடாக சொல்லப்பட்டது. 1958-ம் வருஷத்திலே இந்தச் சட்டத்தை உருவாக்கிய சமயத்திலே ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு பிரதிநிதி தேர்ந்து எடுக்கப்படும் என்று சொன்னபோது இரண்டு வித அபிப்பிராயங்கள் இருந்தன. உடனேயே நேரிடைத் தேர்தல் வேண்டாம். பின்னால் அப்படித் தேர்ந்து எடுக்கும் முறையை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட வாக்குறுதி கொடுக்கப்பட்டது. கூடியவரையில் இது இடைக்கால ஏற்பாடாக இருக்கும்; பஞ்சாயத்துத் தலைவர்களே கவுன்சிலர்களாக இருக்கட்டும் என்ற யோசனை சொல்லப்பட்டது. அதே முறையில்தான் சட்டம் இந்தச் சபைக்குக் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. அந்த ஏற்பாடு என்ன? பஞ்சாயத்துத் தேர்தல் நடந்தபோது சண்டைகள் ஏற்பட்டன. அதைத் தடுக்க இடைக்கால ஏற்பாடு செய்யப்பட்டது. அதையே நிரந்தரமாகச் செய்வது நியாயம் இல்லை. நேரிடைத் தேர்தல் தான் சரியானது. ஜனநாயகத்தை விரிவாக்க உதவும். எவ்வளவு நாட்களுக்கு எங்கு கண்டாலும் போஸ்டர்களாகவே இருப்பது? அப்படி இருப்பது ஜனநாகயத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதர்கக் காட்டுகிறதா? சமீபத்திலே சென்னையிலே பார்த்தோம்; ஜனநாயகத்தைப் பற்றியும், சோஷலிசத்தைப் பற்றியும் ஜனங்களுக்கு எவ்வளவு வகையில் சொல்லப்பட்டது என்று. வேண்டியது தான். வர வேற்கிறேன். ஆனால் ஜனநாயகம் வளர்ந்திருக்கிறது என்பதற்கு டெஸ்ட் என்ன? நடைமுறையிலே என்ன செய்கிறோம் என்பதைப் பொறுத்து அல்லவா இருக்கிறது. இந்தச் சட்டம் ஜனநாயகத்தைக் குறைக்கவே கொண்டு வருகிறார்கள் என்று சொல்வேன். இந்தச் சட்டப்படி மெஜாரிடி யாரை விரும்புகிறார்களோ, அவர்கள் தலைவராக வர முடியுமா? முடியாது. அந்தக் காரணத்தினால் சாதிச் சண்டைகள் வருகின்றன. எல்லா மக்களும் சேர்ந்து பஞ்சாயத்து யூனியன் சேர்மனைத் தேர்ந்து எடுக்கவேண்டும் என்று சொல்லி விட்டால் சாதிச் சண்டைகள் குறையும். அதிகமாக வராது. நாம் செய்யும் சட்டங்களே அப்படிப்பட்ட சண்டைகளுக்கு இடம் கொடுக்கிறதாக அமைகிறது. பஞ்சாயத்துகள் அமைந்த பிறகு தான் சண்டைகள் அதிகமாக இருக்கின்றன. அங்கு நடக்கும் பல ஒழுங்கீனங்களைப் பற்றி இங்கே உறுப்பினர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட குறைகள் பஞ்சாயத்து யூனியன் சேர்மன் தேர்தலில்தான் நடத்திருக்கிகன்றன என்பது அமைச்சர்களுக்கும் தெரியும். அப்படியிருந்தும் இந்த மாதிரியான சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று ஏன் சிந்திக்க வேண்டும். காங்கிரஸ் கட்சிக்குள்ளேகூட இதைப் பற்றித் தீவிரமான அபிப்பிராய பேதம் இருக்கிறது. ஒரு சாரார், 'நேரடித் தேர்தல் வேண்டும்' என்று கோருகின்றனர்—என்பது விவாதத்திலிருந்து மறைமுகமாகத் தெரிகிறது. நேரடித் தேர்தல் வேண்டும் என்று ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் மட்டும் நான் சொல்ல

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [24th July 1964

வில்லை. நேரடித் தேர்தல் ஜனநாயகத்திற்கு அவசியம். கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள், பின்னடைந்த வகுப்பினர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்குச் சொத்து வசதி இல்லை. ஆனால், யார் தலைவராக ஆகிறார்கள்? வசதி படைத்தவர்கள் கிராமப் பஞ்சாயத்தில் தலைவராகி விடுகிறார்கள். அவர்கள் எல்லோரும் கூடி, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்குத் தலைவரைத் தேர்ந்தெடுத்தார்கள். வசதி படைத்தவர்கள்தான் பெரும்பான்மையாக வர முடியுமே தவிர, பின் நிலை வகுப்பினர்களும், அரிசனங்களைச் சேர்ந்தவர்களும் பஞ்சாயத்து யூனியன் தலைவராகவோ, பஞ்சாயத்துத் தலைவராகவோ வருவது வெகு அபூர்வமாக இருக்கிறது. இந்த வருஷம் ஒரே ஒரு பஞ்சாயத்து யூனியனுக்குத்தான் ஒரு அரிசன வகுப்பார் சேர்மனாக வந்திருக்க முடிகிறது. நேரடித் தேர்தல் வைத்தால் எத்தனையோ பேர்கள் பின் நிலை வகுப்பினர்களிலிருந்து வெற்றி பெற்று பிரதிநிதித்துவம் பெற்றிருக்க முடியும். அதுதான் உண்மையான ஜனநாயகமாக இருக்க முடியும். தாழ்த்தப்பட்ட மக்களை, அடித்தளத்தில் இருக்கும் மக்களை உயர்த்த வேண்டும் என்பதுதான் ஜனநாயகத்தின் நோக்கம். அந்த அடிப்படையில்தான் சட்டங்கள் செய்யப்பட வேண்டும். அப்படியில்லாமல், சொத்து வசதி படைத்தவர்கள் தான் ஆதிக்கத்தில் வரவேண்டுமென்ற வகையில் சட்டம் செய்தால் அது ஜனநாயகம் ஆகாது.

ஸ்தல ஸ்தாபனத் திட்டம், இன்னும் மற்ற அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி விவாதிக்கக்கூடிய சமயத்தில், அபிவிருத்திக் கமிஷனர்களுடைய மகாநாட்டில் ஒரு முறை நம்முடைய காலஞ்சென்ற இந்தியப் பிரதம மந்திரி அவர்கள் கூறிய விஷயம் எனக்கு இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது. "உயர்ந்த லட்சியங்களைப் பற்றிப் பேசுவதில் நமக்கு மிஞ்சியவர் யாரும் உலகத்தில் இல்லை. அதே போன்று, நாம் கூறக்கூடிய லட்சியத்திற்கும் நடைமுறைக்குக் கொண்டு வருவதில் இருக்கும் வேற்றுமைக்கு நம்மை மிஞ்சியவர் உலகத்தில் இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்" என்று பிரதம மந்திரி நேரு அவர்கள் இப்படிச் சட்டம் கொண்டு வருவோம் என்று எதிர்பார்த்துத்தான் சொன்னார்களோ என்று நான் நினைக்கிறேன். நாம் சொல்லக்கூடிய லட்சியங்களைப் பெரிய லட்சியங்களாகச் சொல்லிவிட்டு, நடைமுறைக்குக் கொண்டு வருகிறபோது, ஜனநாயகத்தை எவ்வளவு குறுக்க வேண்டுமோ அவ்வளவு குறுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் கொண்டுவருகிறார்கள். என் பயப்பட வேண்டும்? இதில் கட்சிப் பிரச்சினை ஒன்றுமில்லை. காங்கிரஸ் கட்சிக்குக்கூட, நேரடித் தேர்தல் நடத்துவது நல்லதே தவிர கெடுதல் அல்ல. வசதி படைத்த காங்கிரஸ்காரர்கள் வேண்டுமானால் எதிர்ப்பார்களே தவிர, சாதாரண காங்கிரஸ்காரர்கள் இதை ஆதரிப்பார்கள். பஞ்சாயத்து யூனியன்களைக் கொண்டுதான் அபிவிருத்தித் திட்டங்களையெல்லாம் அமுல் நடத்த வேண்டும். கம்யூனிடி டெவலப்

24th July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

மெண்டுக்கு ஏஜென்ஸியாகப் பஞ்சாயத்து யூனியன்கள் இருக்க வேண்டுமென்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அவர்களுக்குப் பல யோசனைகளை அரசாங்கம் கொடுக்கிறது. திட்டம் நிறைவேறியிருக்கிறதா என்று பார்ப்பதற்கு எவாலுவேஷன் குழு போட்டுவிட்டால் மாத்திரம் போதாது. ஸ்டாடிஸ்டிக்ஸ் வேண்டுமானால் நிறைய அனுப்பலாம். டெவலப்மெண்ட் கவுன்சில் அறிக்கையிலே வரக்கூடிய சாதனைகளை எடுத்துப் பார்ப்போம். சாதனைகளுக்கும் உண்மை நடைமுறைக்கும் சம்பந்தம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். உணவு அபிவிருத்திப் பொறுப்பைப் பஞ்சாயத்துக்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் விடவேண்டுமென்று அரசாங்கத்தினர் சொல்கிறார்கள். நடைமுறைக்கு வருகிறதா? உணவு உற்பத்தித் திட்டத்தில் பஞ்சாயத்தும் பஞ்சாயத்து யூனியனும் தங்களுடைய பங்கை எட்ட முடிகிறதா என்றால் இல்லை. காரணம் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருக்கக்கூடியவர்கள், பஞ்சாயத்துத் தலைவராக இருக்கக்கூடியவர்களுக்கு அந்த மக்களோடு தொடர்பு கிடையாது. பெரும்பாலான இடங்களில் சமுதாயத்தில் அவர்களுக்கு இருக்கும் செல்வாக்கும் குறைவு. விலேஜ் வாலண்டரி ஃபோர்ஸ் திரட்டுவதில் கிராமத்தவர்களின் உற்சாகத்தை எந்த அளவுக்கு அந்தத் தலைவர்கள் உண்டாக்கியிருக்கிறார்கள்? நண்பர் திரு. சுப்பையா அவர்கள் தொகுதியில் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறது. மற்ற தொகுதிகளைப்பற்றிக் கணக்குக் காட்டட்டும். அறிக்கையில் வேண்டுமானால் கணக்குக் காட்டலாம். மக்களோடு தொடர்புள்ள பஞ்சாயத்துத் தலைவர்களும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வரவேண்டுமானால், அதற்கு நேரடித் தேர்தல் இருக்க வேண்டும். தற்போது மக்கள் தொடர்பு அற்றவர்கள்—சொத்துத் தொடர்பு உள்ளவர்கள் தான்—பெரும்பாலும் தலைவர்களாக வர முடிந்திருக்கிறது. பஞ்சாயத்தும் கூட்டுறவும் நம்முடைய சமுதாயத்தில் இரு கண்களைப் போன்றவை; இரண்டு கண்களையும் ஊனமாக்கி வைக்காமல் நல்ல முறையில் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. பஞ்சாயத்து ஆட்சி வலுவடைய வேண்டுமென்றால் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் கிராம அபிவிருத்தியைப் பாதுகாக்க வேண்டும். சுரண்டல் முறை நீக்கப்பட வேண்டும். இன்றைய சட்டத்தில் இருக்கும் முறைப்படி போனால், பஞ்சாயத்து மூலம் செலவழிக்கக்கூடிய தொகை விரயமாகப் போகும். எத்தனை புள்ளிவிவரம் கொடுக்க வேண்டும்? நான் கொடுக்கிறேன். எது எதற்குச் செலவழிக்கப்பட்டதாக பில் போட்டார்களோ, அவற்றில் எத்தனை செலவழிக்கப்படாமலேயே பில் போட்டுத் தொகை வாங்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியும். கட்டாத கட்டடத்திற்குப் பில் போட்டு வாங்கியது எத்தனையோ, பள்ளிக்கூடக் கட்டடத்திற்காகப் பூராப் பணமும் வாங்கி அஸ்திவாரத்தோடு நிற்கிற கட்டடங்கள் எத்தனை காட்ட வேண்டும்? என்னுடைய தொகுதியில் கூட ஓவர்ஹெட் டாங்க்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [24th July 1964

கட்டியதாக சிமெண்ட கேட்டு, அந்த சிமெண்ட் ஓவர்ஹெட் டாங்குக்குப் பயன்படுத்தாமல் எங்கேயோ போயிருக்கிறது. இம் மாதிரி அபிவிருத்தித் திட்டங்களில் எவ்வளவு குறைபாடு உண்டோ அவ்வளவு குறைபாடுக்கும் காரணம், சொத்து வசதி படைத்தவர்கள் பஞ்சாயத்திலே ஆதிக்கம் செலுத்துவது தான் என்பதை மனத்தில் வைத்தால், பஞ்சாயத்து மேன்மையுற வேண்டுமென்றால், பஞ்சாயத்து ராஜ்யம் வளர வேண்டுமென்றால் இந்தச் சட்டத்தை அரசாங்கம் வாபஸ் வாங்க வேண்டும். நல்ல படியாகத் தேர்தல் நடத்த வேண்டியது அவசியம். இதற்கு அவ காசம் இல்லையென்ற காரணத்தை இந்த முக்கியமான விஷயத்தில் சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது. வேண்டுமானால் ஆறு மாதம் தேர்தலை ஒத்திப் போடட்டும், அதனால் பெரிய நஷ்டம் ஏற்பட்டு விடாது. இன்னும் ஆராய்ந்து பார்த்தால், வேண்டுமானால் மக்க ளுடைய அபிப்பிராயத்தைக் கேட்போம். பஞ்சாயத்து யூனியன் சம்பந்தப்பட்டவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்போம். கேட்டுத் திருத்தம் செய்வது தான் உசிதமாக இருக்கும். அப் பொழுது தான் இந்தச் சட்டத்தினால் என்ன பயன் உண்டாக வேண்டுமென்று மக்கள் நினைக்கிறார்களோ அதை நிறைவேற்றி யவர்களாவோம். இத்தகைய சட்டத்தை நாம் இரண்டு வருஷத் திற்கோ, மூன்று வருஷத்திற்கோ தான் வைத்துக் கொண்டிருக்கப் போகிறோம் என்பது அல்ல. ஒரு தலைமுறைக்கு இயற்றக்கூடிய சட்டம் இது. அடிப்படைச் சட்டம். இந்தச் சட்டத்தை ஊர் ஜிதம் செய்துவிட்டால் பிறகு திருத்தத்தை யார் எப்பொழுது வேண்டுமானாலும் கொண்டு வரட்டும். இப்பொழுது, செய்கிற போதே ஆர அமரச் சிந்தித்துப் பார்த்து, நிறைவேற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகையால், நேரடித் தேர்தல் மிகவும் அவசியமானது. மறைமுகத் தேர்தல் ஜனநாயகத்தைக் குறைக் கிறது. இதை ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் நான் ஆட்சேபிக்கவில்லை; பஞ்சாயத்தின் வளர்ச்சிக்கே குந்தகமாக இருக்கிறது. சொத்துடையவர்கள் ஆதிக்கம் செலுத்துவதன் காரணமாக சாதாரண மக்கள் பங்கெடுக்க முடியவில்லை. சாதா ரண மக்கள் பஞ்சாயத்தில் பங்கெடுத்துக் கொள்ளாமல் அபி விருத்தித் திட்டங்கள் வெற்றியளிக்க முடியாது. சொத்துடைய வர்கள் செலவு செய்தால் தான் தலைவர்களாக வரமுடியும் என்ற நிலையில் தலைவர்களாக வந்துவிட்டு, மக்களுடைய அதிருப்தியைத் தான் தேடிக் கொள்கிறார்களே தவிர, மக்களுடைய ஆதரவை அவர்கள் தேட முடிவதில்லை. மேலும் மேலும் செலவு செய்து தான் அவர்கள் தலைவர்களாக வர முடியும். ஆளும் கட்சிக்கும் சொந்தக் கட்சிப் பிரச்னை ஒன்றுமில்லை. ஆகவே, நான் கொடுத் திருக்கும் திருத்தத்தை ஏற்றுக்கொண்டு இதை ஆய்வுக்கு விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி ஆர அமரச் சிந்திக்க வேண்டும். மறுபடியும் யோசனை செய்யலாம். நேரடித் தேர்தல் தான் அவசியம், மறைமுகத் தேர்தலைக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்திக்கொண்டு என்னுடைய வார்த் தையை முடித்துக்கொள்கிறேன்.

24th July 1964]

* திரு. சா. கணேசன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் மீது பலரும் தத்தம் கருத்துக்களைக் கூறி விட்டனர். நியாயமாகப் பார்க்கிறபோது, செம்மையாகப் பார்க் கிறபோது, நாட்டின் நன்மையை மட்டும் மனத்திலே வைத்துக் கணிக்கின்றபோது, நேர்முகத் தேர்தல் நடந்தால் தான் செம்மை ஓர் அளவுக்குக் காக்கப் பெறும் என்று நான் மனப்பூர்வமாக நம்பு கிறேன். பெரும்பான்மையான பஞ்சாயத்துக்களெல்லாம் கூட, நேர்முகத் தேர்தல் வேண்டும் என்கிற அபிப்பிராயத்தைத் தான் கொண்டிருக்கின்றன என்று நான் உறுதியாகச் சொல்கிறேன்.

சென்ற முறை பேசுகின்றபோது, கட்சி வேறுபாடு இன்றி, பலருமே பொது முறையிலே நேர்முகமாகத் தலைவர்களைத் தேர்ந் தெடுப்பதையே ஆதரித்த உண்மையை மறந்து விட முடியாது. அதன் காரணமாக ஏற்பட்ட கருத்தின் அந்த அடிப்படையிலேயே பெரும்பான்மையான பஞ்சாயத்துகள் நேரடித் தேர்தல் வேண்டு மென்று தான் அரசாங்கத்திற்கு விண்ணபித்திருக்கின்றன என்று நான் நம்புகிறேன்.

அதையும் விட, இரண்டு தினங்களிலே வரப் போகிறது பஞ் சாயத்துத் தலைவர்கள் மாநாடு. அதிலே அவர்கள் என்ன தீர்ப்புச் செய்கிறார்கள், அவர்களுடைய நோக்கம் என்ன, கருத்து என்ன, என்பதை யெல்லாம் புரிந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பமும் நமக்கு இருக்கிறது. அதற்கு முன்னே அவர்களை விலங்கிட்டுத் தடுப்பது போல, நாம் ஒன்றை நிர்ப்பந்தமாகக் கொண்டுவந்து திணித்து விட்டால் நியாயம் ஆகாது என்றும் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த பஞ்சாயத்துத் தலைவர், பஞ்சாயத்து யூனியன் தலைவர் நேரடியாகத் தேர்தெடுக்கப் பெற்றால், ஏதோ அது பெரிய அசெம்பிளி தேர்தல் மாதிரி ஆகிவிடும், கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும் என்றெல்லாம் கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப் பிட்டார். அப்படி ஒன்றும் கோடிக்கணக்கான ரூபாய்கள் செல வாகப் போவதில்லை. ஏதோ பஞ்சாயத்துத் தேர்தல் நடத்தவோ, பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் நடத்தவோ ஒன்றும் உபரியான செலவு வந்துவிடப் போவதில்லை என்று நான் சொல்லிக் கொள்ள வேண்டிய கடமை உள்ளவனாக இருக்கிறேன்.

அதையெல்லாம் விட, இப்பொழுது நடக்கிறதைப் பணநாயகம், ஜனநாயகம் என்றெல்லாம் பேசுகிறார்கள். நான் இரண்டு கட்சி யும் பேச இல்லை. பணக்காரன் அவ்வளவு பேரும் அயோக்கியன் என்று சொல்லவில்லை. ஏழை அவ்வளவு பேரும் யோக்கியர் என்றும் சொல்லவில்லை. ஆனால், பணக்காரர்களிலும் பண ஆசை இல்லாதவன் இருக்கிறான். பணம் இல்லாதவர்களிலும் பண ஆசை உள்ளவன் இருக்கிறான். மறைமுகத் தேர்தலிலே ஓர்ளவு பண ஆசை பிடித்தவர்கள், ஏதோ போடுகிற தூண்டிலில் புழுவை வைத்து மீனைக் கவர வேண்டுமென்று அந்த உக்தி முறையைக்

[திரு. சா. கணேசன்] [24th July 1964

கையாளுகிறவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள் இருக்கிறார்கள். அதைக் தொலைக்க முடியும், தொலைக்க வேண்டும். நூறு பேர் தான் இல்லாமல் பத்தாயிரம் பேராக இருக்குமானால் இவ்வளவு பணங்களைக் கொடுப்பது என்பது சாத்தியம் இல்லாத ஒன்றாகும். இது நோய் போலப் பரவி வருகிறது. பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் பஞ்சாயத்துத் தலைவர்களுக்குக் கொடுக்க வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்து அங்கத்தினர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இப்படியான நிலையிருக்கிறதைச் சொல்வதில் பிழை இல்லை. இது எல்லோருக்கும் தெரிந்த உண்மை—பகிரங்கமான உண்மை. வாதத்திற்கு வேண்டுமானால் அப்படி எல்லாம் கிடையாது என்று பேசலாம். அது நிற்காது. ஆகவே நேரடித் தேர்தல் என்பது பேர் அளவிற்கு—பெயர் அளவிற்கு அல்ல—பெருத்த அளவிற்கு, உதவி செய்யும் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

அதற்கும் மேலே பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலைப் பற்றி திரு கோசல்ராம் அவர்கள் சொன்னார்கள். பஞ்சாயத்துகளில் தலைவர்களுக்கே நேரடித் தேர்தல் வேண்டும் என்றால் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இந்தக் காரணங்களாலே நான் இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்கிறேன்.

ஒரு சொற்றொடர் விதியில் காணப்படுகிறது. அது சட்ட ரீதியாகச் சரியாக ஆகிவிடலாம், ஆனால் மொழி ரீதியில் சரியாக இல்லை. உதாரணமாக ஒரே ஒரு பஞ்சாயத்து ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலாக ஆகும்; அப்படியே ஒரே ஒரு டவுன்ஷிப்பும் ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலாக ஆகும் என்று கண்டிருக்கிறது. யூனியன் என்ற சொல்லின் பொருள் என்ன? ஒன்றுக்கு மேற்பட்டவை தான் ஒன்றிக்க—கலக்க—முடியும் இல்லையா? நான் நானாகத் தான் இருக்க முடியுமே தவிர என்னோடேயே கலப்பதாவது? நான் இன்னோன்றோடு கலக்க முடியுமே தவிர, என்னோடேயே கலப்பது என்பது சரியாகாது. இப்படி மொழி ரீதியில் இதில் பிழைகள் உள்ளன. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று காட்டுவது போல, ஒரு உதாரணம் எடுத்துச் சொன்னேன். அவசர அவசரமாகச் செய்தால் ஏற்பட்ட குறைகள் இவைகள். இத்தகைய குறைபாடுகளை நிவர்த்திக்கவும், ஜனநாயகத்திற்கு இன்றியமையாத தேவையாகிய பொதுமக்களுடைய கருத்துக்கு ஏற்றப்படி இதில் திருத்தம் செய்யவும், இந்த மசோதாவை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜனநாயக சோஷலிசம் என்றெல்லாம் பேசுகின்றார்கள். ஜனநாயகத்தையே ஒழித்துக் கட்டுகிற முறையில் மசோதாவைக் கொண்டு வந்தவுடனேயே, அதை நிறைவேற்றிவிட வேண்டுமென்று எதிர்பார்ப்பது நியாயம் அல்ல, தர்மம் அல்ல, என்று சொல்லி விடைபெற்றுக் கொள்கிறேன்.

24th July 1964]

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தினுடைய ஆய்வுக்கு பஞ்சாயத்துத் திருத்த சட்டத்தை கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ளார்கள். இந்தச் சட்டத்தைப் பற்றி மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெளிவு படக் கூறியிருக்கிறார்கள். இதில் முக்கியமாகக் குறிப்பிட்ட குறைபாடு, இந்த மன்ற உறுப்பினர்கள் அடிக்கடி தெரிவித்த அடிப்படையில், இந்தத் திருத்தச் சட்டம் உருவாக்கப்படவில்லை என்பது தான். இந்தக் குற்றச்சாட்டை எதிர்க்கட்சியில் உள்ள உறுப்பினர்கள் அழுத்தம் திருத்தமாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தேர்தல் எந்த முறையில் நடைபெறவேண்டும், அதனுடைய தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியவர்கள் யாராக இருக்க வேண்டுமென்ற கருத்து இந்த மன்றத்திலுள்ள பல்வேறான கட்சி உறுப்பினர்களால் வற்புறுத்தப்பட்டு வருகிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பஞ்சாயத்து யூனியன் காரியங்களைத் தெரிவிக்கின்றபோதும் சரி, நேரடி தேர்தல் மூலம் தான் நல்ல பலனை எதிர்பார்க்க முடியும் என்று தெரிவித்தார்கள். இந்த விஷயத்தில் கட்சி அடிப்படையில் எந்த மாறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை. தேர்ந்தெடுக்கிற முறையில் எந்த முறை நல்லது என்பது தான் பிரச்னை. இந்த இரண்டு முறைகளிலும் குறைகள் இருக்கின்றன. என்றாலும் எந்த முறையில் குறைகள் குறைவு என்று பார்த்துத் தான் நாம் கையாள வேண்டியதாக இருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது நேரடித் தேர்தல் முறை என்று வந்தால் அதில் குறைகள் மிகக் குறைவாக இருக்கும், அந்த முறையையே கையாளவேண்டும் என்பதாக மன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது தங்கள் கருத்துக்களை எடுத்து வற்புறுத்தி வந்தார்கள். மேலும் எந்த முறையில் தேர்தல் நடைபெறும் என்று அமைச்சரை கனம் உறுப்பினர்கள் கேட்டு வந்தபோது எல்லாம், அதுபற்றி கனம் உறுப்பினர்களைக் கலந்துகொண்டே முடிவு எடுக்கப்படும் என்பதாகத் தெரிவித்து வந்திருக்கிறார்கள். எல்லோருடைய கருத்தையும் கேட்டு அறிந்து கொண்ட பிறகு தான் முடிவு எடுக்கப்படும் என்பதாக இதுவரையில் தெரிவித்து வந்துவிட்டு, தங்கள் கருத்துக்களை மன்ற உறுப்பினர்கள் தெரிவிக்க ஒரு வாய்ப்பை அரசு ஏற்படுத்தித் தராமல் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பது சரியான மரபாகாது.

பல சந்தர்ப்பங்களில் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவது அந்த அந்தத் தொகுதியில் இருக்கிற செல்வாக்குப் படைத்தவர்களின், பணக்காரர்களின் பிடியில் இருந்து பொது மக்களை விடுவிக்க உதவி செய்யும் உண்மையிலேயே மக்களுக்குத் தொண்டாற்றக் கூடியவர்கள், மக்களின் மதிப்பைப் பெற்றவர்கள் இந்த ஜனநாயக நிர்வாகத்தில் இடம் பெற முடியும் என்ற கருத்து வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவர்களே, யூனியன் தலைவர்களைத் தேர்ந்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [24th July 1964

தெடுப்பது என்ற முறையில் இன்றையதினம் நிலவுகின்ற பல குறைபாடுகளை இந்த நேரடித் தேர்தல் முறைகளைத் தெரியும். நிர்வாகத்தைக் குலைக்கும் வகையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வாய்ப்புக் கிடையாது என்று சொல்லப்பட்டது. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து பதவியை விட்டு நீக்க வேண்டிய அளவுக்கு தவறுகள் செய்வாராஞல், அந்தத் தவறுகள் சட்டப்படி தவருக இருக்குமாஞல் வேறு பல முறைகளில் அவர் மீது நடவடிக்கை எடுக்க வழியுண்டு. நேரடித் தேர்தலில் ஒரு குறைப்பாடு என்று சொன்ஞல், அது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வர முடியாது என்பதுதான். அவர் தவறுகள் செய்தால் வேறு வழிகளில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியும் என்பதோடு கூட, பொதுமக்களுடைய நம்பிக்கையைப் பெற்ற ஒருவர் தான் நேரடித் தேர்தலில் வெற்றி பெற முடியும். ஆகவே பொது மக்களுடைய நம்பிக்கையை இழக்கக்கூடிய எந்தக் காரியத்தையும் அவர் செய்யமாட்டார்.

மேலும் பஞ்சாயத்து யூனியன் தலைவரை பஞ்சாயத்துத் தலைவர்களே தேர்ந்தெடுப்பது என்கிற முறையைக் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கையாண்டு வருகிருேம். இதில் நமக்கு ஏற்பட்டுள்ள அநுபவம் இந்த முறையே நன்ருகச் செயல்படுகிறது, என்று உணர்வதற்கு ஏற்றதாக இல்லை. ஆகவே தான் இந்த முறையை எடுத்துவிட்டு நேரடித் தேர்தல் முறையைக் கொண்டு வர வேண்டுமென்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் சரி, எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும் சரி வற்புறுத்தி வந்தார்கள். அந்த அடிப்படையில் சட்டம் வரும் என்று எதிர்பார்த்தோம். அந்த அடிப்படையில் அமையாமல் முன்பு இருந்த முறையிலேயே இருப்பது என்பது இந்த மன்றத்திற்கு ஏமாற்றத்தைத் தரும் ஒன்ருக இருக்கிறது. இரண்டு முறைகளிலும் குறைபாடுகள் இருக்கின்றன. இருந்தாலும் குறைந்த குறைபாடு உள்ளதாய், பண் வசதி பெற்றவர்கள், ஆள் பலம் உடையவர்கள் என்ன வேண்டுமாஞலும் செய்யலாம் என்கிற ஆதிக்க மனப்பான்மையைக் களைந்தெறிந்து, உண்மையில் ஜனநாயக அடிப்படையில் மக்களின் மதிப்பைப் பெற்றவர், நம்பிக்கையைப் பெற்றவர், ஜனநாயகத்தின் ஆணிவேர்கிய இந்த ஸ்தாபனத்தில் நேரடிக் தேர்தலின் மூலம் வந்து பணியாற்ற இடமேற்படும். ஆகவே தான் இந்த மசோதாவை அவசரம் அவசரமாக நிறைவேற்ருமல், பொதுமக்களுடைய கருத்துக்கு விடுவது நல்லது. பொறுக்குக் குழுவுக்கு இதை அனுப்பி நல்ல முறையில் பொதுமக்களுடைய கருத்தையும் அறிந்து இதன் அமைப்பை மாற்றி அமைப்பது தவருகாது. அந்த முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரி, இந்தத் திருத்த மசோதா திருப்தி அளிக்கவில்லை, இதைத் திரும்ப பெற்று, அல்லது பொறுக்குக் குழுவுக்கு அனுப்பி, மக்களுடைய கருத்தை அறிந்து, இதைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

[24th July 1964

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow. 1-30 p.m.

The House then adjourned.

V. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. **Statutory Rules and Orders.**

Nil.

B. **Reports, Notifications and other papers.**

*196. *The Madras Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964 (L.A. Bill No. 23 of 1964) with Annexure.*

* 197. *The Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964 (L.A. Bill No. 24 of 1964) with Annexure.*

* 198. *The Madras City Tenants Protection (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 25 of 1964).*

---

*Sent to Members on 22nd July 1964.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 25th July 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, MR. SPEAKER (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

ஊராட்சி தேர்தல்

**8 குறுகியகாலக் கேள்வி.—திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) ஊராட்சி, ஊராட்சி ஒன்றிப்பு ஆகியவற்றுக்கான தேர்தல் எப்போது நடைபெறும்?

(இ) தேர்தல் எந்த அடிப்படையில் நடைபெறும்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: *(அ) 1964 காலண்டர் ஆண்டு இறுதிக்குள் பஞ்சாயத்துக்களுக்கான சாதாரணத் தேர்தல்களை நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் 12-வது பிரிவை 1964-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து (திருத்த பல்வகை ஷரத்துக்கள்) மசோதாவின் 3-வது பகுதியினால் திருத்த உத்தேசித்துள்ளது. இதன்படி, பஞ்சாயத்து யூனியன் மன்றத்தில் அடியிற்கண்டவர்கள் அங்கம் வகிப்பார்கள்: (1) அந்தந்தப் பஞ்சாயத்து யூனியனில் உள்ள பஞ்சாயத்துக்களின் தலைவர்கள்; (2) பஞ்சாயத்து யூனியனில் உள்ள டவுன்ஷிப் கமிட்டி ஒவ்வொன்றிலிருந்தும் நிர்ணயிக்கப்பட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட, அலுவல் சார்பற்ற உறுப்பினர் ஒருவர். எனவே மேற்சொன்ன மசோதா சட்டமாக நிறைவேற்றினால் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்காகத் தனியாகத் தேர்தல்கள் நடத்துவது பற்றிய கேள்விக்கே இடமிருக்காது.*

(இ) தேர்தல் ரகசிய வாக்குப் பதிவு மூலம் நடைபெறும்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: *கனம் அவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு ஊராட்சி மன்ற ஒன்றிப்பின் பரப்பளவு திருத்தி அமைக்கப்படுமா?*

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: *இது சம்பந்தமாக இரண்டு நாட்களுக்கு முன்பு இரண்டு கேள்விகளுக்கு விளக்கமாகப் பதில் கொடுத்திருக்கிறேன். அசெம்பிளி, பார்லிமெண்ட் தொகுதிகளைப் பிரிக்கும் விஷயம் எலக்ஷன் கமிஷனுடைய பரிசீலனையில் இருக்கிறது. அதற்கு பின்பு தான் இந்த வேலையை ஆரம்பிக்கலாம்.*

[25th July 1964

திரு. கே. ஏ. மதியழகன்: இப்போது இருக்கிற வார்டுகளில் ஏற்கெனவே குறைபாடுகள் இருக்கின்றன. சட்டசபை, பார்லிமெண்ட் விவகாரங்கள் முடிய இன்னும் இரண்டு ஆண்டுகள் ஆகும். அப்படியானால் அடுத்த தேர்தல்வரை இந்த வார்டுகள் பிரித்து அமைக்கப்படாதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பிளாக் ஏரியா பற்றிக் கேட்டார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பது பஞ்சாயத்து போர்டு பற்றி என்று நினைக்கிறேன். 1961-ம் ஆண்டு மக்கள் தொகையை அனுசரித்து வார்டுகள் பிரித்து அமைக்கப்படும்.

SRI R. PONNAPPA NADAR: Will there be any provision for fresh division of wards?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அதற்குத்தான் இப்போது பதில் சொன்னேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: எக்ஸ்-அபிஷியோ மெம்பர்ஸ் எப்படி நிரப்பப்படுகிறார்கள்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தலைவரைத் தேர்ந்தெடுத்த பின்பு மெஜாரிடி கட்சியினர் அவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள்.

MR. SPEAKER: Are there no rules for that? The Hon. Minister need not quote all the rules here

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த ஆண்டு இறுதிக்குள் மொத்தம் எத்தனை பஞ்சாயத்துக்களுக்குத் தேர்தல் நடைபெற இருக்கிறது? தேர்தல் நிகழ்ச்சிகள் பற்றி தேதிகள் நிர்ணயிக்கப்பட்டுவிட்டனவா? ஆந்திரப் பகுதியிலிருந்து சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கும் அப்போதே தேர்தல் நடைபெறுமா? அல்லது முன்னதாகவே நடைபெறுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அநேகமாக டிசம்பர் மாதத்தில் மூன்று, நான்கு தடவைகளாக எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் தேர்தல் நடத்துவது என்று உத்தேசிகக்கப்பட்டிருக்கிறது. ஆயினும், முடிவாக முடிவு செய்யப்படவில்லை. ஆந்திரப் பகுதிகளில் இருந்து சேர்க்கப்பட்ட பகுதிகளைப் பொறுத்தவரை தனியாக ஒரு ஸ்பெஷல் ஆபீசர் போடுவது என்ற புரொவிஷனைக் கொண்டு வந்திருக்கிறோம்.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, before constituting Panchayat Development Blocks in the Added Territory, will the Government give an opportunity to the Added Territory to observe Sections 7 and 12 of the Panchayats Act of 1958?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: நோடிபிகேஷன் விட்ட பிறகுதான் கவனிக்கப்படும்.

25th July 1964]

திரு. கே. ஏ. மதியழகன்: ஊராட்சி மன்ற ஒன்றிப்புத் தலைவர் தேர்தலை மறைமுகத் தேர்தலாக நடத்தவேண்டுமென்று ஆளும் கட்சிப் பணக்காரர்களின் நிர்ப்பந்தத்தினால்தான் சர்க்கார் அப்படி நடக்கின்றது என்பது உண்மைதானா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: நேரடித் தேர்தல் நடத்துவதா, மறைமுகத் தேர்தல் நடத்துவதா என்பதைப்பற்றி எல்லாக் கட்சி அங்கத்தினர்களும், பஞ்சாயத்து சங்கங்களுடைய நிறுவனங்களும் தங்கள் தங்கள் கருத்தைச் சர்க்காரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்கள். அவற்றையெல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே ஆளும் கட்சிப் பணக்காரர்கள் எதிர்கட்சிப் பணக்காரர்கள் என்ற நிலைமை ஒன்றுமில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன்: ஊராட்சி மன்ற ஒன்றிப்புத் தேர்தல்களை நேர்முகத் தேர்தலாக நடத்துவதா அல்லது மறைமுகத் தேர்தலாக நடத்துவதா என்பதைப்பற்றி ஊராட்சி மன்றத் தலைவர்கள் சங்கம் ஏதாவது தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: எந்த மாதிரித் தேர்தலை வைக்க வேண்டும் என்று தனிப்பட்ட முறையில் சங்கங்கள் பத்திரிகை வாயிலாக மற்ற வகைகளில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தனியாக அம்மாதிரி தீர்மானம் அனுப்பப்பட்டிருப்பதாகத் தகவல் இல்லை.

திரு. ப. உ. சண்முகம்: முன்பு ஒரு முறை அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது 'தமிழ் நாட்டிலே இன்னும் சில கிராமங்கள் பஞ்சாயத்திலே சேர்க்கப்படாமலே இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்த மாதிரிக் கிராமங்கள் எல்லாம் இந்தத் தேர்தலுக்கு முன்பாக பஞ்சாயத்தில் சேர்த்துக் கொள்ளப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: நடை முறையில் உள்ள சில சிக்கல்கள் காரணமாக ஒருசில இடங்கள் அம்மாதிரி இருக்கின்றன. சாதாரணமாக அங்கும் பஞ்சாயத்துக் கமிஷனர்கள் மூலம் டெவலப்மெண்ட் ஆக்டிவிடீஸ் எல்லாம் சர்க்காரால் கவனிக்கப்பட்டுவருகின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பொன்னையன்: பஞ்சாயத்து யூனியன்களில் மைனாரிடி கம்யூனிடிஸ் ஆன ஹரிஜனங்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கிறோம், பெண்களுக்கும் கொடுக்கிறோம். பிரதிநிதித்துவம் கொடுத்த பிறகு வோட்டுரிமை கொடுத்து தலைவர் தேர்தல் நடத்த அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அவர்களுக்கும் வோட்டுரிமை வழங்க இந்தச் சட்டத்தில் விதி இருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: ஊராட்சி மன்ற ஒன்றிப்புக்கள் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட காரணத்தால் புதிய அனுபவமாக இருக்கிறது. ஆகவே, அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற

[25th July 1964

அதிகாரங்கள், உரிமைகள் பற்றி மறு பரிசீலனை செய்ய உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அந்த உத்தேசம் சர்க்காருக்கு இல்லை.

திரு. சா. கணேசன்: ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களின் பொதுத் தேர்தலையும், தலைவர் தேர்தலையும், டைரக்ட் எலெக்ஷனுகத்தான் நடத்தவேண்டுமென்று பெரும்பான்மையான பஞ்சாயத்துக்களில் இருந்து அபிப்பிராயம் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டன என்பது உண்மையா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அம்மாதிரிப் பெரும்பான்மையான மன்றங்களில் இருந்து அபிப்பிராயங்கள் சர்க்காருக்கு வரவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கோ-ஆப்டட் மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு காலி ஸ்தானங்களுக்கு தலைவர் அல்லது வைஸ்-சேர்மன் பதவிக்குப் போட்டியிட முடியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: போட்டியிட முடியும்.

Repatriates from Burma

* 9 *S.N. Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Ministr for Works be pleased to state—

(*a*) the details of repatriates from Burma who are expected to arrive in Madras State;

(*b*) the measures under consideration for the rehabilitation of the repatriates, both interim and log-term; and

(*c*) how the expenditure is to be shared between the Centre and the State?

THE HON. SRI V. RAMIAH: (*a*) Six sailings have been chartered to bring the returning Indians from Burma before the end of August 1964. In addition, such of the repatriates who are income-tax assessees in Burma are returning by planes via Calcutta.

(*b*) *Interim relief granted.*—(i) Concessional passage from Rangoon to Madras.

(ii) Free railway and bus travel from Madras to their native villages.

(iii) Free feeding and cash allowance.

Long-term relief under consideration.—(1) special fee concession and allowance for purchase of books to the children who accompany the returning Indians.

(2) Longe-term loan assistance to needy persons.

(3) Provision of shopping facilities.

In respect of returning Indians who have no roots in India, efforts will be made to provide employment to them in various projects and development areas.

25th July 1964]

(*c*) The cost of their passage by ship from Burma, railway fare to their districts, cost of transit camp and feeding charges will be met by the Government of India. The sharing of expenditure in respect of long-term assistance is under consideration.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நம் ராஜ்யத்தில் சொந்த வீடு இல்லாதவர்களுக்கு உடனடியாக என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா: விசேஷ காம்ப்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. முதல் கப்பலில் பர்மாவிலிருந்து வந்த இந்தியர்கள் ஏறத்தாழ 700 விசேஷ காம்ப்களில் தங்கியிருக்கிறார்கள். அடுத்து அடுத்து வரக்கூடிய கப்பல்களில் வரக்கூடியவர்களுக்கு—எந்த விதமான வீடு அல்லது உறவினர்கள் இல்லாதவர்களுக்கு விசேஷ காம்ப்பில் ஏற்பாடு செய்து, அதற்கு மேல் எப்படி வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பது பற்றி ஆலோசனை செய்து ஒரு முடிவு எடுக்கப்படும்.

திரு. சா. கணேசன்: பர்மாவிலிருந்து வெளியேற்றப்படுகிற தமிழர்கள் உடைமைகள் முழுவதும் பறிக்கப்பட்டவர்களாக அனுப்பப்படுகிறார்கள். அதே காலத்தில் சைனுக்காரர்களுக்குப் பழைய உரிமைகள் எல்லாவற்றையும் கொடுத்து, அவர்கள் மறுபடியும் வியாபாரம் கூட நடத்துவதற்குரிய முறையில் அந்த ஆட்சி செய்திருக்கிறது. ஆனால் தமிழர்களுக்கு நஷ்ட ஈடு இல்லாதநாடு கூட துணிமணிகளைக்கூடக் கொண்டுவர முடியாத நிலையில், மூன்று சேலைகளுக்கு மேல் எடுத்து வரக் கூடாது என்று, தமிழ் நாட்டில் நெய்து இங்கிருந்து ஏற்றுமதியான சேலைகளை வாங்கி வைத்திருக்கும் தமிழ்ப் பெண்மணிகளின் சேலைகளைப் பறித்து அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் மத்திய ஆட்சியின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதன் மேல் மாநில சர்க்கார் அவர்களுக்குச் செய்யவேண்டிய வசதிகளை உடனடியாக அவசிய, முக்கிய ஏற்பாடாக மேற்கொள்வார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: பர்மா அரசாங்கம் தேசிய மயமாக்கும் கொள்கை காரணமாக பல இந்தியர்களுக்கு அங்கு தொழில் செய்வதற்கு, சிறு தொழில் செய்வதற்குக் கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் மிக அதிகம். இதில் விசேஷ கவனம் செலுத்தவேண்டுமென்று நம் மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு அதிலும் குறிப்பாக திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்களுக்குக் கடிதம் எழுதி அதன் அடிப்படையில் மத்திய அரசங்கம் தீவிர கவனம் செலுத்திவருகிறது. நாங்கள் எடுத்த முயற்சி காரணமாக மத்திய அரசாங்கத்தின் வெளி நாட்டு இலாகாக் காரியதரிசி அவர்கள் ரங்கூனுக்குச் சென்று பேச்சு வார்த்தைகள் நடத்தியிருக்கிறார்கள். ஆகவே போதுமான அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறோம். இன்னும் தீவிர அக்கறை காட்டவேண்டும் என்பதுதான் நம் இடைவிடாத முயற்சி. மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இதை ஒரு பெரிய பிரச்னையாக எடுத்துக்கொண்டு அங்கிருந்து திரும்பி

[25th July 1964

வரும் இந்தியர்களுக்கு என்னென்ன உதவிகள் கொடுக்க வேண்டுமோ அதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கிறார்கள். சைனுக்காரர்கள் நிலைமை எனக்குத் தெரியாது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்போது பர்மாவில் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை காரணமாக, தமிழகத்திற்கு எவ்வளவு தமிழர்கள் திரும்பி வருவார்கள் என்று இந்த அரசு எதிர்பார்க்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா: ஆகஸ்ட் மாதம் முடிவதற்குள் ஆறு கப்பலில் வரப் போகிறார்கள். கப்பல் ஒன்றுக்கு 1,500 பேர்கள். அதற்கு மேல் எப்படி நிலைமை என்பதைப் பின்னால்தான் சொல்ல முடியும்.

திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்: தற்சமயம் பர்மாவிலிருந்து தாயகத்திற்குத் திரும்பியவர்கள் அங்கு என்னென்ன வேலைகளில் ஈடு பட்டிருந்தார்கள்? இங்கு என்னென்ன வேலைகளில் அவர்களை ஈடுபடுத்த யோசனைகள் இருக்கின்றன?

கனம் திரு. வெ. ராமைய்யா: முதல் கப்பலில் வந்தவர்களைப் பொறுத்தவரையில் அநேகமாக எல்லோரும் ரங்கூன் நகரில் இருந்தவர்கள். சிறு தொழில்கள், பெட்டிகடைகள் வைத்துக் கொண்டிருந்தவர்கள். முழு விவரமும் இப்போதுதான் வந்து கொண்டிருக்கிறது. அதை எல்லாம் சேகரம் செய்து, யார் யாருக்கு எந்தத் தொழிலுக்கு எப்படி உதவி செய்து கொடுக்க முடியும் என்று பார்த்து, இரண்டு தினங்களுக்கு முன்பு தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னது போல், தொழில் நடத்த கடன் உதவி போன்றவை செய்ய வேண்டும் என்பது அரசாங்கத்தின் கருத்து. அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. ஏ. மதியழகன்: நம் அரசாங்கத்தின் சார்பில் அண்மையில் பர்மாவிற்குச் சென்றிருந்த அதிகாரிகள் சேகரித்த விவரங்கள் யாவை? அங்குள்ள நிலைமையைப் பற்றி என்ன அறிவித்திருக்கிறார்கள்?

கனம் திரு. வெ. ராமைய்யா: மத்திய அரசாங்கம் நமக்கு ஒரு பெரிய உதவி செய்திருக்கிறது. அங்கு இருக்கக் கூடிய தமிழர்களின் நிலையைத் தெரிந்து வருவதற்காக நம் மாநில அரசாங்கத்தின் ஒரு அதிகாரி—டெப்டி செக்ரட்டரி—அங்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் சென்றிருக்கும் முக்கிய காரணம், கப்பலில் ஏறுவதில் சங்கடம் இருந்தால் அதை நேரிடையாகப் பார்த்துப் பரிகாரம் தேடி உதவி செய்யவேண்டும் என்பது. அம்முறையில் அந்த நோக்கம் நல்ல முறையில் நிறைவேறியிருக்கிறது. இரண்டு தினங்களுக்குமுன் வந்த பிரயாணிகளைப் பார்த்துப் பேசும்போது, அந்த அதிகாரி மிகவும் உதவியாக இருந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்கள் என்ற கருத்தை அவர்கள் சொன்னார்கள். அதோடு இவர்கள் சென்று வந்ததற்குப் பிறகு அங்கு தாம் பார்த்ததைப் பற்றியெல்லாம் ஒரு அறிக்கை கொடுக்க வேண்டு

25th July 1964]

மென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். விரைவில் ஒரு அறிக்கை வரும். அதில் குறிப்பிட்டிருக்கும் ஏதாவது விசேஷங்கள் பொது மக்களுக்குத் தெரிய வேண்டுமென்று இருந்தால் நிச்சயமாக சட்ட சபையில் கேள்வி போட்டால் தெரிவிக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: பர்மா அரசாங்கம் மொத்த வியாபாரம் சில்லரை வியாபாரம் இவற்றை ஏற்று நடத்துவதால் பாதிக்கப்பட்ட பர்மியர்களுக்கு கொடுக்கப்பட்ட நஷ்டயீடு மாதிரி பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கும் கொடுத்தார்களா? அதில் ஏதாவது பாகுபாடு இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா: அந்த விவரம் என்னிடம் இல்லை.

திரு. சா. கணேசன்: பர்மா தமிழர்கள் விஷயத்தில் இன்னும் அவசரமாகவும் துரிதமாகவும் விளம்பரமாகவும் அதிக நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு தக்க பாதுகாப்பு தேடாவிட்டால் இதே நிலை இலங்கையிலும் ஏற்பட . . .

MR. SPEAKER: This is something in anticipation of what is going to take place. இது மாதிரி இன்னொரு இடத்தில் வரப்போகிறது என்று சொல்லக் கூடாது.

திரு. சா. கணேசன்: பர்மா சம்பந்தப்பட்டவரையில் நஷ்டயீடு கொடுக்கப்படவில்லை. இம்மாதிரிப்பட்ட நிலை இலங்கையிலும் வராமல் இருக்க இப்பொழுதே இவ்விஷயத்தில் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதை அரசாங்கம் கவனித்து வருகிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா: மத்திய அரசாங்கம் இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. இலங்கையில் உள்ள நிலையை தனிப்பட்ட முறையில் தெரிந்து கொண்டிருக்கும் அளவில் கனம் அங்கத்தினர் அவர்கள் எழுப்பிய கேள்வி இலங்கை அரசாங்கத்தைத் தூண்டி விடுவதுபோல் இருக்கும் என்று கருதுகிறேன். அதுபோல் கேள்வி இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்கும்.

MR. SPEAKER: Both the supplementary questions and answers should be brief, as otherwise I would have to stop with two or three supplementaries.

திரு. கரு. சீமைச்சாமி: பர்மாவிலிருந்து வந்திருக்கிற 1,500 அகதிகளில் கிழக்கு ராமனாதபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் 950 பேர்கள். அவர்கள் வீடு, சொத்தை இழந்து வந்திருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியில் அவர்களுக்கு புறம்போக்கு நிலங்களை ஆளுக்கு ஐந்து ஏக்கராவது ஜாரி செய்து கொடுப்பதோடு, விவசாயம் செய்வதற்காக குறைந்த பட்சம் 1,500 ரூபாய் கடனும் கொடுக்க இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI V. RAMAIAH: It is only a suggestion.

MR. SPEAKER: Details have to be worked out.

[25th July 1964

புலவர் கா. கோவிந்தன் : பர்மாவிலிருந்து வந்தவர்களில் உற்ருர் உறவினர்கள் இல்லாதவர்களுக்கு கும்மடிபூண்டியில் இடம் அளித்திருக்கிருர்கள். உற்ருர் உறவினர்கள் இருக்கிருர்கள் என்ற காரணத்திற்காக அப்படிப்பட்டவர்களை அங்கங்கே அனுப்பி வைக்கிருர்கள். அவர்கள் எங்கெங்கு அனுப்பப் பட்டிருக்கிருர்கள் ? அவர்களின் தேவை என்ன என்ன என்று அறிய சர்க்காரிடம் ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா ? ஏதாவது முறையீடு வந்தால் அதைக் கவனிக்க என்ன ஏற்பாடு இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இங்கிருந்து அனுப்பியதோடு நம் கடமை தீர்ந்து விடவில்லை. எந்தெந்த ஜில்லாக்களுக்குப் போகிருர்களோ அங்குள்ள ஜில்லா கலெக்டர், மற்ற அதிகாரிகள் அவர்கள் தேவைக்குத் தகுந்த முறையில் தொடர்ந்து கவனம் செலுத்தி, அரசாங்கம் முடிவு செய்யும் திட்டங்களின் பலன்கள் அவர்களுக்கும் கிடைக்கும் முறையில் நடவடிக்கைகள் எடுப்பார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், பர்மாவிலிருந்து வருகின்ற 10 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இந்தியப் பிரஜைகளாக இருப்பதால், இவர்களுடைய இன்னல்களைத் துடைக்கவேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்தைச் சார்ந்ததாகும். கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளிவருகின்ற இந்து அகதிகளுக்குக் கொடுக்கக் கூடிய சலுகை கூட பர்மாவிலிருந்து வருகின்ற இந்தியப் பிரஜைகளுக்குக் கொடுக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம்? ஆகவே, பத்து ஆயிரத்திற்கும் அதிகமாக வருகின்ற இந்த பர்மாத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக, அகதிகள் புனர் வாழ்வு இலாகா மூலமாக ஏதாவது திட்டமிட்டு உதவி செய்து கொடுக்கவேண்டும் என்று இந்த மாநில அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்தியதா ? அப்படி இதுவரை வற்புறுத்தவில்லையென்ருல் தமிழக மந்திரியாகிலும் மத்திய அரசாங்கத்திற்குச் சென்று இந்த உதவியைப் பெறுவதற்கு முன்வருவார்களா ?

MR. SPEAKER : The hon. Member's supplementary question contains five questions. Nothing is clear.

THE HON. SRI V. RAMAIAH : I can understood the hon Member's mind and I can give a reply.

MR. SPEAKER : The Hon. Minister can understand the hon. Member Sri V. Krishnamoorthy's mind. But we are concerned not with his mind, but with his question.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் நான் முதல் கேள்விக்கு பதில் சொல்லும்போது கவனித்திருந்தால் இந்தக் கேள்விகளை எல்லாம் கேட்டிருக்கமாட்டார்கள். முதல் கேள்விக்குப் பதில் சொல்லும்போதே, மத்திய அரசாங்கத்திலிருந்து கொடுக்கின்ற உதவிகளைப் பார்த்தால், மற்ற அகதிகளுக்குக் கொடுக்கின்ற உதவியை விட அதிகமாகக் கொடுக்க முன் வந்திருக்கிருர்கள் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் இதில் வேண்டிய கவனம்

25th July 1964]

செலுத்திக் கொண்டிருக்கிருர்கள். மத்திய அரசாங்கம் இதிலே கவனம் செலுத்திக்கொண்டிருக்கிருர்கள். மத்திய அரசாங்கம் இதில் கவனம் செலுத்தவில்லை என்று சொல்வது மிகவும் தவறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. பொன்னுசாமி : ஸார், கழுகுமலையில் தீப்பெட்டித் தொழிற்சாலையில் இவ்விதமாகக் கஷ்டப்படும் அகதிகளுக்கு உடனடியாக வேலை வாய்ப்புக் கொடுக்கப்படும் என்று செய்தித் தாள் வாயிலாக அறிக்கை கொடுத்திருக்கிருர்களே, அந்த இடத்திற்கு இந்த அகதிகளை அனுப்ப அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதே போன்று பெரிய தொழில் நடத்துகிறவர்கள் வேலை வாய்ப்புக் கொடுக்க முன்வந்தால் அதை அரசாங்கம் வரவேற்கும்.

திரு. ஜே. மாதா கவுடர், ஸார்: பர்மாவிலிருந்து வந்திருக்கக் கூடிய அகதிகளின் குழந்தைகளுடைய கல்வியைப்பற்றி இந்த அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது? அந்தக் குழந்தைகள் பர்மிய மொழி படித்திருந்தால் அவர்களுக்கு அந்த மொழியில் போதனை கொடுப்பதற்கு அரசாங்கம் என்ன யோசித்திருக்கிறது ?

கனம் சபாநாயகர் : இப்போது தானே அவர்கள் வந்திருக்கிருர்கள் ? வருவதற்கு முன்னுலேயே இதைப்பற்றி எப்படி அரசாங்கம் யோசிக்க முடியும்?

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், பர்மாவிலிருந்து வந்திருக்கின்றவர்களில் பெரும்பாலோர் தமிழர்களாக இருக்கின்ற காரணத்தால், தமிழக மந்திரிசபையிலிருந்து ஒரு அமைச்சர் மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்று பர்மாவிற்கு சென்று, அங்கு தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கிற கஷ்டங்கள் என்ன, ஏன் இவ்வாறு ஏற்படுகின்றன என்பதைப்பற்றியெல்லாம் தீவிரமாகப் பரிசீலனை செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தமிழக அமைச்சர் ஒருவர் அங்கே போக வேண்டிய அவசியமில்லை. மத்திய அரசாங்கத்தினிடத்தில் நமக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. அதோடு மட்டுமல்ல அங்கேயுள்ள முழு விவரங்களையும் அங்கேயுள்ள இந்திய தூதராலயம் கொடுக்கிருர்கள். ஆகவே இங்கிருந்து யாரும் அங்கே போய் புதிய சிக்கலை உண்டுபண்ண வேண்டியதில்லை.

திரு. மா. இராசாங்கம் : ஸார், பர்மாவிலிருந்து வெளியேறிய தமிழர்களில் பர்மா அரசாங்கத்தில் வேலை செய்தவர்கள் இருக்கிருர்களா ? அப்படியிருந்தால் அவர்களுக்கு நம்முடைய அரசாங்கத்தில் வேலை வாய்ப்பு கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த விவரம் இப்போது என்னிடமில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், இப்போது வந்துள்ளவர்களையும் இனி ஆகஸ்ட் மாத இறுதியில் வருவார்கள் என்று எதிர்

[25th July 1964

பார்க்கப்படுபவர்களையும் சேர்த்துப் பார்த்தால், எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள்? இவர்களைக் கவனிப்பதற்கு என்று தனியாக விசேஷ அதிகாரி யாராவது நியமிக்கப்படுவார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா : முதல் கப்பலில் வந்தவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது இராமநாதபுரம் ஜில்லாவினர் தான் அதிகமாக இருக்கிறார்கள். 950 பேர்கள் ராமநாதபுரத்தைச் சேர்ந்தவர்கள், தஞ்சாவூரிலிருந்து 58; திருச்சிராப்பள்ளியிலிருந்து 27, மதுரையிலிருந்து 43 ; வடார்க்காட்டிலிருந்து 1 ; என்று இப்படியாக எல்லா ஜில்லாவினரும் இருக்கிறார்கள். அண்டை ராஜ்யத்தவரும் இருக்கிறார்கள். அவர்களையும் அங்கங்கே அனுப்ப முடிவு செய்திருக்கிறோம்.

திரு. கரு. சீமைச்சாமி : பர்மாவிலிருந்து தமிழர்கள் வருகின்ற நேரத்தில் அங்கேயுள்ள இந்தியன் எம்பஸியிடத்தில் தங்களிடமிருந்த தங்கத்தை ஒப்படைத்துவிட்டு வந்திருக்கிறார்கள். அதை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு என்ன முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன?

கனம் திரு. வெ. ராமைய்யா : எல்லா முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : நேற்றைய தினம் பர்மாவிலிருந்து வந்திருக்கின்ற அகதிகளைக் கேட்டால், 'வெறும் கையோடு சீக்கிரமாக கப்பல் ஏறிவிடுங்கள்' என்று பர்மாக்காரர்கள் நிர்பந்தித்துக்கொண்டிருந்ததாக சொன்னார்கள். இவ்விதம் தென் ஜில்லாக்களைச் சேர்ந்தவர்கள் மூன்று லட்சம் பேர்கள் வரவேண்டியிருக்கிறார்கள். ஆகவே, காலதாமதம் இல்லாமல் அவர்களை இங்கு வரவழைத்து, அவர்களுக்கு வாழ்வு கொடுப்பதற்காக, விசேஷமாக, தனியாக ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதற்கு மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது நமக்குக் கிடைத்திருக்கின்ற விவரங்களின்படி மத்திய அரசாங்கம் இதில் போதிய கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்னையைப்பற்றித் தனியாகக் கவனிக்கவேண்டும் என்ற நிலைமை வரும்போது, அதற்காகத் திட்டம் போடுவதற்கும் ஆலோசிக்கலாம்.

திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பாகிஸ்தானிலிருந்து தமிழ்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்ற அகதிகளுக்குத் தம்முடைய பண்ணைகளில் வேலைக்கு அமர்த்திக்கொள்ள வாய்ப்பு கொடுக்கலாம் என்று தமிழக அமைச்சர்களில் ஒருவர் கூறியிருந்ததாக தெரிகிறது. அதே போன்று இப்போது பர்மாவிலிருந்து தமிழகத்திற்கு வந்திருக்கின்ற பர்மா அகதிகளையும் ஏற்றுக்கொண்டு அவருடைய பண்ணையிலேயே வேலை கொடுப்பதற்கு முன்வருவார்களா ?

25th July 1964]

கனம் திரு. வெ. ராமைய்யா : மற்ற அமைச்சர்களைப்பற்றி நான் எப்படி பதில் சொல்ல முடியும் ?

திரு. எம். எஸ். செல்வராஜன் : இங்கு வரக்கூடிய பர்மா அகதிகளைக் கவனிப்பதற்கு என்று தனியாக ஒரு ஸ்பெஷல் அதிகாரி நியமிக்கப்படுவார்களா ? ஸிலோன் பிரச்னையைப்பற்றி பரிசீலனை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருப்பது போன்று, இதற்கும் ஒரு அதிகாரியை நியமித்து இவர்களுடைய பிரச்னையைப் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது அரசாங்கம் பொதுவாக இவர்களுடைய பிரச்னைகளையெல்லாம் கவனித்துக் கொண்டிருக்கிறது. இது தொடர்ந்து கவனிக்கப்பட வேண்டிய பிரச்னை என்று வந்தால் அப்போது இதற்கென்று தனியாக அதிகாரியை நியமிப்பதில் அரசாங்கத்திற்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லை.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, பர்மாவில் வியாபாரத்தைத் தேசீயமயமாக்கினதினால்தான், அங்கு வியாபாரம் செய்து கொண்டிருந்த தமிழர்களை வெளியேற்றவேண்டியிருக்கிறது என்று கூறப்படுகிறது. அப்படியானால் மற்ற வேலைகள் செய்து கொண்டிருக்கும் தமிழர்களுக்குப் பாதுகாப்பு இருக்கும் என்பதற்கு அரசாங்கம் உறுதி அளிக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்ல முடியாது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பர்மாவிலிருந்து தமிழர்கள் கப்பலில் வரும்போது, வைத்திய வசதி இல்லாமல் யாராவது இறந்திருக்கிறார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : எனக்குத் தெரிந்த தகவல், கப்பலில் வந்த அத்தனை பேருக்கும் நல்ல வைத்திய வசதி செய்யப்பட்டிருக்கிறது என்பது தான்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, பர்மாவிலிருந்து வருகின்ற தமிழர்களுக்கு புனர்வாழ்வு கொடுப்பதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்னென்ன உதவிகள் செய்து கொடுக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : முதல் கேள்விக்கு பதில் இதைப் பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : தலைவர் அவர்களே, இப்போது திரும்பி வந்திருக்கின்ற தமிழர்கள் எத்தனை வருடங்களுக்கு முன்னால் பர்மாவுக்குச் சென்றார்கள் ? அவர்களது உறவினர்கள் யாராவது இப்போது தமிழ்நாட்டில் இருக்கிறார்களா ? அவர்களில் எத்தனை பேர்களை ஏற்றுக்கொண்டார்கள் என்கின்ற விவரங்களை அறியவிரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

[25th July 1964

திரு. சி. பொன்னுசாமி : தலைவர் அவர்களே, இப்போது வந்திருக்கின்றவர்களில், சொந்தக்காரர்கள் இல்லாமல் இருப்பவர்களுக்கு, ஒரு மாதம் வரைக்கும் சாப்பாடுக்கு ஏதாவது வசதி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் சபாநாயகர் : ஒரு மாதம் மட்டும் போதுமா ?

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் எத்தனை பேர்கள் தொழில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை.

கண்மாய்கள் (இராமநாதபுரம் மாவட்டம்)

*701 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெய்த மழையின் காரணமாக மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் கண்மாய்களுக்குச் சேதம் ஏற்பட்டதா ?

(இ) ஆமெனில், எத்தனை கண்மாய்கள்?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்டம் 26. மதுரை மாவட்டம் 45.

9·00 a.m. திரு. கரு. சீமைச்சாமி : ஸார், மழை அதிகமாகப் பெய்தவுடனே கண்மாய்களில் உடைப்பு ஏற்படுவது என்பது சகஜமாகப் போய் விட்டது. இத்தகைய உடைப்புகள், கண்மாய்களில் கலிங்கு உயரமாகக் கட்டப்பட்டிருப்பது காரணமாக ஏற்படுகின்றனவா? அல்லது தண்ணீரை வெளியேற்றுவதில் குறைபாடு இருக்கிற காரணத்தினால் ஏற்படுகின்றனவா?

கனம் திரு. வெ. ராமைய்யா : கண்மாய்க்கு கலிங்கு கட்டுவது கண்மாய் விஸ்தீர்ணத்தைப் பொருத்தது. திடீரென்று பெரு மழை பெய்து பெரு வெள்ளம் வரும்போது இதுபோன்று சிறு கண்மாய்கள் பாதிக்கப்படுகின்றன. இருந்தாலும், உடனடியாக மராமத்து பார்த்து மீண்டும் பயன்படும் முறையில் ரிப்பேர் செய்யப்படுகிறது.

Southern Regional Conference on Agricultural Production

*702 Q.—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the details regarding the suggestions made by the Madras Government at the Southern Regional Conference on Agricultural Production held at Ernakulam in the first week of February 1964;

(b) the decisions taken at the Conference; and

25th July 1964]

(c) the programmes approved for implementation in Madras State?

கனம் திரு. பூ. கக்கன்: (அ), (இ) & (உ); 1964 பிப்பிரவரி 2; 3 தேதிகளில் எர்ணாகுளத்தில் நடைப்பெற்ற தென் பிராந்திய வேளாண்மை உற்பத்தித் திட்ட மாநாடு அதிகாரிகள் நிலையில் நடைபெற்ற மாநாடாகும். இதில் கலந்து கொண்டவர்கள் வேளாண்மை குறித்த பல்வேறு விஷயங்களைப் பற்றி கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். மாநாட்டில் எந்த வேலைத் திட்டமும் அங்கீகரிக்கப்படவில்லை. மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் கருத்துக்களை வெளியிடுதல் பொதுநலனுக்கு உகந்ததாகாது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, considering the marginal deficit of Madras, what is the extra programme that has been suggested by Madras Government?

THE HON. SRI P. KAKKAN : I wish to say that the following subjects were discussed :

(1). Arrangement for inter-departmental and institutional co-ordination.

(2) Arrangement for and progress of the intensive cultivation programme in selected districts for rice, millets, pulses, wheat, cotton, oil seeds, sugarcane, fruits and vegetables.

(3) Prompt supply and adequacy of agricultural credit.

(4) Supply and distribution of fertilisers, organic manures, improved seeds, plant protection equipment and pesticides, iron, steel and cement.

(5) Utilisation of irrigation potential.

(6) Electricity rates for agriculture.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், வெளியிடுவது பொது நலனுக்கு உகந்தது அல்ல என்று கூறுகிறார்கள். வேளாண்மை உற்பத்தித் துறையில் இவ்வளவு திட்டங்களுக்குப் பிறகும் நாம் சரியானபடி குறிப்பிட்ட எல்லையை அடையவில்லை, அது தோற்று விட்டது, ஆகவே இன்னும் செய்யவேண்டும் என்ற கருத்துக்களைச் சொல்லியதால்தான் அந்த மாதிரி வெளியிட முடியாது என்று சொல்லுகிறார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : 'கெஸ்' பண்ணுவது சரியல்ல. அந்த மாதிரி இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : விவசாயத்திற்கு மின்சாரம் வழங்கப்படுவது சம்பந்தமாக அந்த மாநாட்டில் ஆலோசனை கூறப்பட்டதா? என்ன ஆலோசனை கூறப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : அதுவும் ஆலோசனை கூறப்பட்டது.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த விவசாய உற்பத்தித் துறையில் நம் திட்டங்கள் தோல்வியடைந்தன என்று மாநில அரசாங்கமே ஒப்புக்கொண்டு 'கமிட்டி ஆன் அக்ரிகல்சுரல் ப்ரொடக்ஷன்' என்று போட்டிருக்கிறார்கள். ரசாயன உரங்களை விநியோகிப்பதும், உபயோகிப்பதும் எந்த அளவுக்குச் சரியில்லை, மண்வளப்

[25th July 1964

பாதுகாப்பு எப்படி இருக்கிறது, எந்த காரணத்தினால் தோற்று விட்டது என்று விசாரிக்க இந்தக் கமிட்டியை அமைத்திருப்பதினால் குறிப்பிட்ட எல்லையை நாம் அடையவில்லை என்பதை அமைச்சர் மறுக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : குறித்த எல்லை என்பது என்ன? மாநிலத்திலே திட்டம் போட்டு அதிகமாகச் செய்வதற்கெல்லாம் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். திட்டமே தோல்வி அடைந்தது என்று அர்த்தம் இல்லை. மேலும் அபிவிருத்தி செய்யத்தான் திட்டம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த மாநாட்டில் வேளாண்மைத் துறைப் பற்றிய பல்வேறு பிரச்னைகள் பரிசீலிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த மாநாட்டிலே முடிவுகள் எடுக்கப்பட்டனவா? முடிவுகள் எடுக்கப்படாமல் மாநாடு கலைந்ததா?

கனம் திரு. பூ. கக்கன் : எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தீ விபத்துக்கு உள்ளாகுவோருக்கு உதவித் தொகை

* 703 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தீ விபத்துக்கு உள்ளாகுவோர்க்கு அரசாங்கம் கொடுக்கும் உதவித் தொகையை உயர்த்தும் திட்டம் உண்டா?

(இ) ஆமெனில், எவ்வளவு?

கனம் திரு. வெ. ராமைய்யா (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இப்போது கொடுத்து வருகிற தொகை பல ஆண்டுகளுக்கு முன் வரையறை செய்தது. இப்போது பல வகையிலும் பொருளாதார ஏற்றத்தின் காரணமாக விலைவாசிகள் ஏறியிருக்கும்போது இந்தத் தொகையைக் கூட்டிக் கொடுக்க அரசாங்கம் ஏன் தயங்குகிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதில் ஒன்றும் அரசாங்கம் தயங்கவில்லை. கனம் அங்கத்தினர் குறிப்பிட்டுச் சொன்னபடியே, பொருளாதார நிலை உயர்ந்திருக்கிற சந்தர்ப்பத்தில் உடனடியாக நிவாரணம் கொடுக்கவேண்டும். தொகையை உயர்த்தி விட்டால் பிரச்னை தீராது. ஏனென்றால் இந்தத் தொகை, ஏற்படக் கூடிய நஷ்டத்திற்கு ஆறுதல் செய்யக் கூடிய முறையில் சிறு தொகையாகத் தான் இருக்க முடியும். இப்போது இருக்கக் கூடிய நிலையில் அரசாங்கம் விரும்புவது பூரண நிவாரணம் கிடைக்கும் முறையில், அதைக் கொண்டு வீடு கட்டிக்கொள்ள அல்லது வேறு பொருள் வாங்க தாராளமாகக் கடன் கொடுக்கவேண்டும். இந்த முறையில் கடன் கொடுப்பதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்பது

25th July 1964]

அரசாங்கத்தின் விருப்பம். இதுபோன்ற நிலைமை ஏற்படும்போது, கிராமங்களில் அல்லது நகரங்களில் இருக்கிற முன்னேற்றம் காரணமாக, அங்குள்ள மற்ற மக்கள் உதவி இப்போது கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. ஒவ்வொரு தீ விபத்து ஏற்படும் இடத்தில் பார்த்தாலும் அரசாங்கம் உதவி செய்யும் முன்பாக ஸ்தலத்தில் இருக்கும் மக்கள் தாராளமாக உதவி அளிக்கிறார்கள். இதையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கிராமப்புறத்திலும் நகரபுறத்திலும் கூட தீ விபத்து, பெரும்பாலும் ஏழை மக்கள், குறிப்பாக ஹரிஜனங்கள் வாழும் பகுதிகளில்தான் ஏற்படுகிறது. சமீபத்திலே என்னுடைய தொகுதியிலேகூட இரண்டு இடங்களில் ஏற்பட்டது. அரசாங்கம் கொடுக்கும் உதவித்தொகை 30 ரூபாய்தான். விபத்து நடக்கும் இடத்தில் இருக்கிற மக்கள் உதவி செய்கிறார்கள் என்பது சரிதான். இரண்டு மூன்று நாட்கள் சாப்பாட்டுக்கு வழி செய்கிறார்கள். அரசாங்கம் கொடுக்கும் 30 ரூபாயைக் கொண்டு ஒரு நிலைக்கதவு கூட வாங்க முடியாது. கீற்று, மூங்கில் ஆகியவற்றின் விலையெல்லாம் ஏறியிருக்கிறது. சர்க்கார் கொடுப்பது நஷ்டத்திற்கு அனுதாபம் காட்டுகிற முறையில்தான். 30 ரூபாய்க்குப் பதில் 150 ரூபாய் கொடுத்தாலும் வீடு கிடைத்து விடாது. இந்தத் தொகை 20, 25 ஆண்டுகளுக்கு முன் நிர்ணயித்தது. விலைவாசிகள் உயர்ந்திருப்பதை முன்னிட்டாவது இதை உயர்த்த அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதுதான் இப்போது இல்லை என்று சொன்னேன்.

திரு. எஸ். முருகையன் : ஸார், அவர்களுக்குத் துணி வாங்க 10 ரூபாய் உதவி அளிக்கப்படுகிறது. 10 ரூபாயில் ஒரு சேலை கூடக் கிடைக்காது. அந்தத் தொகையையாவது உயர்த்த அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : துணி வாங்குவதற்கும் மற்ற நிவாரணத்திற்கும் மொத்தம் 40 ரூபாய் கொடுக்கிறோம். ஆரம்பத்தில் சொன்னதுபோல இது ஆறுதலாகக் கொடுக்கக் கூடியது. மற்ற உதவிகள் எந்தெந்த உருவத்தில் கொடுக்கவேண்டுமோ அதைப் பல ஸ்தாபனங்களும் அரசாங்கமும் கொடுக்கத் தயங்காது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : 30 ரூபாயோடு முன்பெல்லாம் சேலையோ, வேட்டியோ வாங்கிக் கொடுத்தார்கள். இப்போது வேட்டியை வாங்கிக் கொடுப்பதற்குப் பதில் 10 ரூபாய் கொடுக்கிறார்கள். 10 ரூபாய் கொடுப்பதை நிறுத்தி விட்டு முன்போலவே சேலை, வேட்டி எல்லாம் வாங்கிக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் சொல்லுகிற ஆலோசனையை நான் ஆலோசனை செய்து பார்க்கத் தயாராக இருக்கிறேன்.

[25th July 1964

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் கூறிய பதிலில் 'இந்த உதவித் தொகையை அதிகப்படுத்தாமல் கடன் கொடுக்கலாம் என்று உத்தேசித்திருக்கிறோம்' என்று கூறினார்கள். தீயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அது அனுகூலமாக இருக்கும். கடன் வசதியை நடப்பு ஆண்டிலேயே செய்ய அமைச்சர் வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இது நடப்பு ஆண்டில் மட்டுமல்ல, தொடர்ந்து பல வருஷங்களாக நடந்துகொண்டு வருகிறது. ஆனால், இதைக் குறித்து அதிகமாகக் கவனம் செலுத்துவதில் உதவித் தொகையை அதிகப்படுத்த வேண்டும் என்பதில் மாத்திரம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். அதைவிட்டு, கொடுக்கும் உதவியோடு கடனும் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கூறும் பட்சத்தில் அவர்கள் உதவி செய்வார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : 'அமைச்சர் அவர்கள் கொடுக்கும் வசதியை அதிகப்படுத்தப் போகிறோம், கடன் கொடுக்கும் வசதியும் ஏற்கெனவே இருந்து வருகிறது' என்று சொன்னார்கள். இருக்கலாம். எத்தனை இடங்களில் அதைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். பயன்படுத்திக் கொள்ளமுடியாத நிலையில் ஏழைகள் வசிக்கும் பகுதி இருக்கிறது. அவர்கள் கடன் கேட்கும்போது சொத்தின் பெறுமானத்தைக் கேட்கிறார்கள். நிலத்திற்குப் பட்டா கேட்கிறார்கள். ஏழைகள் வசிக்கக்கூடிய நிலங்கள் பெரும்பாலும் புறம்போக்கு அல்லது நத்தமாக இருக்கும். பட்டாவோ அல்லது வேறு எந்த ஆதாராமோ இருக்காது. அதனால் இந்த வசதிகளைப்பெற முடியவில்லை என்பது அமைச்சருக்குத் தெரியுமோ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கடன் வேண்டுமென்று சொன்னால் அந்த இடம் சொந்தமாகத்தான் இருக்கவேண்டும். அப்படிக் கனம் அங்கத்தினர் குறிப்பிட்டிருக்கக்கூடிய கஷ்டங்கள் இருக்கும் பட்சத்தில் அவர்கள் கண்ட அனுபவத்தை எனக்கு எழுதி அனுப்பும் பட்சத்தில் அதில் கவனம் செலுத்தலாம்.

திரு. கே. பொன்னையன் : இம்மாதிரி கடன் கொடுப்பதிலே ஒரு நபருக்கு அதிகபட்சமாக எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்பதை அறியலாமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சென்ற ஓர் ஆண்டுக் காலத்தில் இந்த அரசாங்கம் அளித்த உதவித் தொகை எவ்வளவு என்று அறியலாமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்தத் தகவல் என்னிடம் இப்பொழுது இல்லை. தனியாகக் கேள்வி போடவேண்டும்.

25th July 1964]

திரு. ஆ. கு. சுப்பையா : கடன் கொடுக்கக்கூடிய விதிகளைத் தளர்த்தி நபர் ஜாமீன்மீது அவர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது இருக்கக்கூடிய விதிகளைத் தளர்த்தவேண்டுமா என்பது ஆலோசிக்கவேண்டிய ஒரு விஷயம்.

திரு. ம. கமலநாதன் : தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்களுக்குக் கடன் கொடுப்பதற்குத் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னது போல், சொத்து முதலியவைகள்பற்றி விவரம் கேட்கப்படுகிறது. ஹரிஜனக் காலனிகள் கட்டுவதற்கு பாதி உதவித் தொகையும், பாதி கடன் தொகையும் வழங்குவதுபோல அரசாங்கம் இதற்கு ஏதாவது திட்டம் வகுக்குமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது அதுபோல ஆலோசனை ஒன்றும் இல்லை.

திரு. ப. உ. சண்முகம் : தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்க்கார் கடன் உதவி அளித்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். எந்த இலாகாவுக்குக் கடன் கோரி மனு செய்யவேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதெல்லாம் ரெவின்யூ இலாகாதான்.

கனம் சபாநாயகர் : கனம் ரெவின்யூ மந்திரிதான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : உதவித் தொகை தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இந்த ரூ. 30 உதவித் தொகையில் ஒரு மரம்கூட வாங்க முடியாது. இந்த நிலையிலே . . .

கனம் சபாநாயகர் : எல்லோரும் அதுபற்றிக் கேட்டாகி விட்டது. ஏதாவது 'நியூ ஐடெம்ஸ்' பற்றிக் கேள்வி கேட்கலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : நான் கேட்பது என்னவென்றால் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட ஏழை அரிசன மக்களுக்கு வீட்டுக்கு எட்டு அல்லது பத்து மரங்கள் வீதம் புறம்போக்கு மரங்களை கொடுக்க முடியுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : எங்கே அரசாங்கத்தின் புறம்போக்கு மரங்கள் இருக்கின்றனவோ . . . I do not want to commit myself அதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : முன்பெல்லாம் கிராமங்களிலிருந்த புறம்போக்கு நிலம் சர்க்காருக்குச் சொந்தமாக இருந்த காரணத்தினாலே அங்கே இருக்கிற ரெவின்யூ அதிகாரிகள்; அங்கே பாதிக்கப்

பட்டவர்களுக்கு வேண்டிய ஓலை, மரங்கள் இவைகளை அவர்களே வெட்டிக் கொள்வதற்கு அனுமதி கொடுத்தார்கள். இப்பொழுது புறம்போக்கு நிலம் பஞ்சாயத்திற்குச் சொந்தமாகிவிட்டதால், பஞ்சாயத்து அப்படி அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, இந்த நிலையைமாற்றி, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓலை, மரங்கள் வெட்டிக்கொள்ள அனுமதி வழங்கும் உரிமையை ரெவின்யூ இலாகாவினருக்கு கொடுப்பதற்கு வழிவகை செய்யப்படுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இதில் இருக்கக்கூடிய முழு விவரமும் தெரிந்து கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். என்ன மாறுதல் என்று உடனடியாகச் சொல்ல முடியவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் எனக்குக் கடிதம் எழுதினால்; அதைக் கவனித்துப் பதில் அனுப்புகிறேன்.

திரு. ஆ. துரையரசன்: இந்தக் கடன்களை எத்தனை ஆண்டு காலத்திற்குள் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட திட்டமிட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: அந்த விவரம் இப்போது என்னிடம் இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: இம்மாதிரி நெருப்புப் பிடித்த வீடுகளைத் திரும்பவும் கட்டிக் கொள்வதற்குக் கடன் கொடுக்கும் திட்டம் ஏற்கனவே இருந்து வருகிறது என்றும், ரெவின்யூ இலாகாவினரிடம் கடன் கோரவேண்டுமென்றும் மந்திரி அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் இரண்டு, மூன்று இடங்களில் தீ பிடித்தபொழுது; தாசில்தார்; ஆர்.டி.ஓ.; கலெக்டர் ஆகியோர்களிடம் சென்று ரூ. 300 கடன் கொடுத்து உதவ வேண்டும்; பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள் என்று சொல்லி மன்றாடிக் கேட்டும், அப்படி ஒன்றும் திட்டமில்லை என்று குறிப்பிட்டுவிட்டார்கள். மனு இப்பொழுது வைத்திருக்கிறேன்; இப்பொழுதாவது, கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

கனம் சபாநாயகர்: கனம் மந்திரி அவர்களிடம் கனம் அங்கத்தினர் மனுவைக் கொண்டு போய்க் கொடுக்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: எனக்கு முன்னால் கேள்வி போட்ட அங்கத்தினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் மனுவைக் கையில் வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அமைச்சர் அவர்களிடம் கூறிய இரண்டு பிரச்னைகளை, நிவாரணத் தொகையை உயர்த்த வேண்டும் என்ற பிரச்னையையும், விதிகளைத் தளர்த்தி கடன் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற பிரச்னையையும் என் தொகுதியில் ஒரு மாதத்திற்கு முன்பு இரண்டு தீ விபத்துக்கள் ஏற்பட்டபொழுது கடிதத்தில் எழுதி அனுப்பினேன். கடிதம் ஆராய்ச்சியில் இருக்கிறது. அதன் பேரில் அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

கனம் திரு வெ. ராமைய்யா: கடிதம் எழுதி, ஆராய்ச்சியில் இருக்கிறது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் ஒப்புக்கொள்

கிறார்கள். துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோருகிறார். அதிலே ஒரு சிக்கல் என்னவென்று சொன்னால், என்க்ரோச்மெண்டு. அம்மாதிரி இல்லாவிட்டால் கஷ்டமாக இருக்காது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: எனக்ரோச்மெண்டு அல்ல.

குழந்தை உணவு தொழிற்சாலை

* 704 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்: திரு. கரு. சீமைச்சாமி: } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகையில் குழந்தை உணவு தொழிற்சாலை (Baby Food Factory) நிறுவும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தினந்தோறும் குறைந்த பட்சம் 10,000 லிட்டர் பால் உபரியாகக் கிடைத்தால்தான் "Bady Food Factory" ஏற்படுத்த இயலும். தற்போது இவ்வளவு உபரி பால் கிடைக்காததால் இத்திட்டத்தை அமுலாக்க இயலாது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: இப்பொழுது ஊட்டியிலிருந்து ஏறக்குறைய 4,000 லிட்டர் பால் லாரி மூலம் சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறது. பால் அங்கே விற்பனையாகாத காரணத்தினால் ஏராளமான கறவை மாடுகள் மைசூர் மாகாணத்தில் விற்கப்படுகின்றன. இந்த நிலையைத் தடுப்பதற்கு, புனர்ப் பரிசீலனை செய்து, 'பேபி புட் பாக்டரியை' அங்கேயே ஏற்படுத்துவதுபற்றி ஆலோசிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: வேண்டிய 'ரா மெடீரியல்ஸ்' இல்லாத காரணத்தினால், அங்கே வைப்பதுபற்றி புனர் பரிசீலனை செய்வதற்கு இடமே இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நம்முடைய நாட்டில் குழந்தை உணவு மிக அவசியமாக தேவைப்படுகிற ஒன்றாகும். சுட்டத்தட்ட நீலகிரி சீதோஷ்ண ஸ்திதி மாதிரியே அமைந்திருக்கிற ஸ்காண்டிநேவியாவில் கறவை மாடுகள் அதிகமாக இருக்கின்றன. அதுபற்றி பரிசீலனை செய்து, அங்கு இருக்கக்கூடிய மாடுகள் போன்றவைகளைத் தருவித்து, இங்கு ஒரு 'டெய்ரி பார்ம்' ஏற்படுத்தி குழந்தை உணவு உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்து அம்மாதிரி ஒரு திட்டத்தை நான்காவது ஐந்தாண்டு திட்டத்திலாவது தயார் செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தக் கேள்வியை அந்த இலாகா மந்திரி அவர்களுக்குப் போட வேண்டும். இது 'அனிமல் ஹஸ்பண்டரி'யைச் சேர்ந்தது.

[25th July 1964

திரு. ஜே. மாதா கவுடர் : உதகையிலேயே ஏற்படுத்தாத நிலையில் நம்முடைய ராஜ்யத்தில் வேறு எங்கேயாவது இம்மாதிரி தொழிற்சாலை ஏற்படுத்தி, உதகையிலிருந்து பாலை அங்கு கொண்டு செல்வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சிறிய அளவில் கோவைக்கு அருகாமையில் அமைப்பதற்குத் தனியார் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : குழந்தை உணவு தயாரிப்பதற்கு வெளி நாட்டுக் கம்பெனியார் இம்மாதிரி தொழிற்சாலை நடத்துவதற்கு முன்வந்தார்கள் என்பது உண்மையா ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன்: சற்றேறக்குறைய 10 வருஷங்களுக்கு முன்பு பாரி அண்டு கம்பெனியார் இதைச் செய்யலாமா என்று பரிசீலனை செய்து பார்த்து, 'இயலாது' என்று விட்டுவிட்டார்கள். ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு 'பாக்ஸ்டெல் கோ-வாபரடிவ் சொஸைடி' டென்மார்க், பரிசீலனை செய்து பார்த்து விட்டு, அவர்களும் 'இயலாது' என்று போய்விட்டார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : சிறிய அளவிலே கோவைக்கு அருகாமையில் ஒரு பாக்டரி ஏற்படுத்தலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மாநிலத்திற்கே நீலகிரி ஜில்லா ஒரு குழந்தை மாதிரி இருப்பதினால், குழந்தை உணவு பாக்டரி அங்கே வருமா என்று எதிர்பார்த்தார்கள். அது இல்லாமல் போய் விட்டது. இம்மாதிரி சிறிய பாக்டரியையாவது நீலகிரியில் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியார் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன்.

Thennal Project

* 705 *Q.*—SRI K. M. KRISHNASWAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) when the construction of the proposed Thennal Project near Kappiyambuliyur in Valavanur Constituency will be started;

(*b*) whether plans and estimates for the same have been prepared; and

(*c*) the estimated cost thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No scheme is proposed to be taken up, near Kappiyambuliyur village in Valavanur Constituency. But there is a proposal by name " Thennal Project " near Kumulam village in Villupuram taluk of South Arcot district. The scheme is under contemplation and guagings are being conducted. conducted.

(*b*) Plans and estimates for the scheme have not been prepared.

(*c*) Does not arise.

25th July 1964]

புலவர் கா. கோவிந்தன் : தென்னல் திட்டம் என்பது விளக்கமாக இல்லை. அது என்ன திட்டம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பாசனத் திட்டம்.

Rental flats for low-paid Government servants

* 706 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the present stage of the scheme for the construction of storeyed rental flats and apartments in Kavandanpalayam, Coimbatore for the low-paid Government employees;

(*b*) the total estimated cost of the scheme;

(*c*) the progress made so far regarding the construction of similar flats and apartments in Sengulam Colony in Tiruchirappalli and in Madurai City; and

(*d*) the estimated cost of these projects?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement is placed on the table of the House. இதுகுறித்து சபையில் அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. ஏ. மதியழகன் : அரசாங்க ஊழியர்களுக்கு இதைப் போல மற்ற மாவட்டத் தலைநகரங்களிலும்—வேலூர், தஞ்சாவூர், கடலூர் இப்பேர்ப்பட்ட இடங்களில்—ஏதாவது திட்டம் உண்டா ? அப்படியானால், அதைப்பற்றி விவரம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜில்லா தலைநகரங்களில் 50 குவார்டர்ஸ் 'லோ பெய்டு கவர்ன்மெண்டு சர்வென்ட்ஸ்'-களுக்காகக் கட்டவேண்டும் என்ற ஒரு யோசனை ஹவுசிங் போர்டில் இருக்கிறது.

சலவைத் தொழிலாளர்கள்

* 707 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சலவைத் தொழிலாளர் வாழ்க்கை நிலை பற்றி ஆராயு குழு ஏதும் சர்க்கார் நியமித்ததா ?

(இ) ஆமெனில் விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) A Special Officer was appointed in October 1961 to enquire into the working conditions of washermen in this State.

(*b*) The Special Officer's report was received in September 1962 and was examined by the Government. A statement containing the recommendations of the Special Officer and the action taken by the Government thereon was placed before the House with reference to Starred Question No. 1256 (400) answered on 21st November 1963.

---

a Printed as Appendix I on page 323 infra.

[25th July 1964

திரு. கே. ஏ. மதியழகன் : அந்த சிபாரிசுகளில் எவற்றை அமல் நடத்த இந்த சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்த சிபாரிசு என்று கேட்டால் பதில் சொல்ல முடியும்.

கணக்கு இலாகா (கல்வித் துறை)

*708 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுப் பதிலளிப்பாரா—

துணை கல்வித் துறை இயக்குநருக்கு (நிதி நிர்வாகம் கவனிப்பவர்) உதவியாகவும் உபயோகமாகவும் இருக்க விசேட கணக்கிலாகா ஒன்றை அமைக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : The need for the appointment of a separate Accounts Officer for the Education Department is being examined by Government.

Urur Scheme (State Housing Board)

* 709 *Q.*—SRI A. RAGHAVA REDDI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether proper soil survey was conducted by the State Housing Board in Urur under the South Madras Neighbourhood Scheme;

(*b*) whether it is a fact that cracks have apeared on the side walls of most of the houses built for the L.I.G.; and

(*c*) if so, what remedial measures have been taken?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No Sir. It is not the usual practice to conduct a soil survey in the building areas generally, but trial pits are dug for individual houses, as the soil conditions vary from plot to plot and such trial pits were dug in South Madras Neighbourhood also.

(*b*) Cracks were noticed in 24 low income group buildings, which were under various stages of construction.

(*c*) Remedial measures were taken (i) to prevent the moisture escaping from the soil which causes the soil to shrink and crack and (ii) to stop the cracks at whatever level they have been noticed.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : வீட்டு வசதி போர்டார் கட்டித் தந்த வீடுகளில் குடி சென்ற பிறகு ஏற்பட்ட விரிசல்களை ரிப்பேர் செய்கின்ற செலவு இனத்தை வீட்டு வசதி போர்டார் ஏற்றுக் கொள்கிறார்களா ? அல்லது குடி அமர்த்தப்பட்ட வீட்டு சொந்தக்காரர் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

25th July 1964]

புலவர் கா. கோவிந்தன் : அந்த வீடுகள் கட்டப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன ? இந்தக் குறுகிய காலத்திற்குள் விரிசல்கள் ஏற்பட்டிருப்பதனால், அந்தக் கட்டிடங்கள் நீண்ட காலம் நிலைக்கும் என்ற உத்தரவாதத்தைக் கொடுக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் நான் கொடுத்த பதிலைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். இந்தக் கட்டிடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறபொழுது விரிசல்கள் காணப்பட்டன Cracks were noticed in 24 low income group buildings, which were undervarious stages of construction கட்டி முடிந்த பிறகு இல்லை.

Sethiyathope Anicut

* 710 *Q.*—SRI A. RAMACHANDRA RAYAR : SRI S. SIVASUBRAMANIAN : } Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to widen the Sethiyathope Anicut in Chidambaram taluk; and

(*b*) if so, when?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) There is no proposal to widen the Sethiathope Anicut; and

(*b*) Does not arise.

Irrigation facilities.

* 711 *Q.*—SRI A. RAMACHANDRA RAYAR : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken to connect Sethiathope Anicut and Vadavar channel through Veeranam and Veeramudayanatham channels in Chidambaram taluk to facilitate the irrigation of an additional 350 acres of land?

கனம் திரு. பூ. கக்கன் : அத்தகைய திட்டம் ஒன்றுமில்லை.

* 712 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to construct an irrigation tank near Ummiampatty in Dharmapuri taluk; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) தொப்பூரகனிகாரஹள்ளி கிராமத்திலுள்ள உமயம் பட்டியின் வடக்கில் சிக்னக்கணவாய்ப் பள்ளம் ஓடைக்குக் குறுக்கே புதிய குளம் ஒன்றை அமைப்பதுதான் மேற்படி திட்டத்தின் நோக்கம். இது விசேஷ சிறு பாசனத் திட்டத்தின் கீழ் நிறை வேறப்படும். இதன் முக்கிய விவரங்கள் பின் வருமாறு:—

(i) பயன் அடையப்போகும் மொத்தப் பரப்பு—77 ஏக்கர்.

எதிர்பார்க்கும் மகசூல்—35 டன்.

25th July 1964

மேற்படி திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு—ரூ. 1.07 லட்சம்.

(iv) பிரதி டன் கூடுதல் உணவு உற்பத்திக்கு ஆகும் செலவு விதம்—ரூ. 3,057.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்தத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டதா ? அப்படி என்றால் எப்பொழுது அமுலாக்கப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வந்திருக்கிறது. இருந்தாலும் காட்டிலாகாவி லிருந்து 14 ஏக்கர் நிலம் ஏரி உண்டுபண்ணுவதற்கும், மற்ற வேலைகளுக்கும், தேவைப்படுகிறது. கான்சர்வேட்டர் ஆஃப் பாரஸ்ட்ஸ் இடமிருந்து இன்னும் பதில் வரவில்லை. அந்த பிறகு ஒரு முடிவுக்கு வரமுடியும்.

*713 கேள்வி.—**திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தலைஞாயிறு கிராமத்தில் ஓடும் நல்லாற்றைப் பிரித்து வெட்டி, வேதாரண்யம் கால்வாயில் நீரை வடியவிடும் திட்டம் ஏதேனும் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை, ஐயா.

குறைந்தபட்ச சம்பளச் சட்டம்

*714 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குறைந்த பட்ச சம்பளச் சட்டத்தின் தற்போதைய நடைமுறையைப் பரிசீலிக்க மத்திய சர்க்கார் மாநில சர்க்காரைக் கேட்டுக்கொண்டதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரம் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை

குடிநீர்த் திட்டம் (கோவில்பட்டி தாலூகா)

*715 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் கோவில்பட்டி தாலூகாவில் குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு 1962-63-ம் ஆண்டில் என்னென்ன திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன ?

25th July 1964]

(இ) 1963-64-ல் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்கள் எவை எவை ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சபைமுன் ஓர் அறிக்கை[a] வைக்கப் பட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : வைப்பாற்றிலிருந்து ஏதேனும் இணைப்புத் திட்டம் கொண்டுவருவதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டதா ? அல்லது பரிசீலிக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரித் தகவல் என்னிடத்தில் இல்லை.

அரசாங்க மருத்துவ மனை (சிதம்பரம்)

*716. கேள்வி.—**திரு. சீ. சிவசுப்பிரமணியன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சிதம்பரம் நகரிலுள்ள அரசாங்க மருத்துவ மனையில் படுக்கை வசதி போதாததால் நோயாளிகளைத் தரையில் படுக்க வைத்திருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இவ்விஷயத்தில் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசம் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) மேற்படி மருத்துவ மனைக்காக 100 படுக்கை வசதி கொண்ட கட்டிடம் ஒன்றை கட்டவேண்டியுள்ளது. நெருக்கடி நிலைமை காரணமாக, கட்டிடம் கட்டும் திட்டம் தள்ளிப் போடப் பட்டுள்ளது. 1965-66 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு தயாரிப் பதையொட்டி, மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு வேண்டிய நிலங் களை அடைவது குறித்து ஆலோசிக்கப்படும்.

திரு. ஆ. துரையரசன் : நெருக்கடி நிலைமையைக் காரணங்காட்டி மருத்துவப் பணிகளைக் குறைத்திருப்பதைப் போக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ? "நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்" என்ற நிலைமையை உண்டாக்கு வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER ; This is too general a question.

அரசாங்க மருத்துவ மனை (சேந்தமங்கலம்)

*717 கேள்வி.—**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சேந்தமங்கலத்திலுள்ள அரசாங்க மருத்துவமனையை விஸ்தரிக்கும் திட்டம் உள்ளதா ?

(இ) அதைப் பழுது பார்க்க திட்டம் ஏதேனும் உண்டா ?

(உ) ஆமெனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

[a] Printed as Appendix II on pages 324—325 infra.

[25th July 1964

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) — (ஏ): சேந்தமங்கலத்திலுள்ள அரசாங்க மருத்துவமனையை விரிவுபடுத்த திட்டம் எதுவும் இல்லை. அந்த மருத்துவமனைக் கட்டிடத்திற்கு விசேஷ மராமத்துகள் செய்யும்படி பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு எழுதப்பட்டுள்ளது.

திரு. வி. ஆர். பெரியண்ணன்: அந்த மருத்துவ மனையின் சுவர்களுக்கு வெள்ளையடித்து ஐந்தாறு ஆண்டு காலம் ஆகிறது. இரண்டாண்டுகளுக்கு முன்பு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் பொது மராமத்து இலாகா எஞ்ஜினியர்களைக் கேட்டபொழுது 'எங்களிடத்தில் கட்டிடம் ஒப்படைக்கப்படவில்லை' என்று சொன்னார்கள். ஆகவே, கனம் அமைச்சரவர்கள் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி உடனடியாக மராமத்து செய்வதற்கு ஆவன செய்வார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அரசாங்கம் எடுத்துக் கொண்ட பிறகு அதற்கு என்னென்ன ரிப்பேர்கள் செய்ய வேண்டுமோ அவைகளுக்கு ஒரு மதிப்பீடு போட்டு பொது மராமத்து இலாகாவிற்கு ஒளமுதியுள்ளார்கள். அவர்களும் வேலையை ஆரம்பிக்க இருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது.

மாவட்ட வைத்திய அதிகாரி, திருச்சி

* 718 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்ட வைத்திய அதிகாரியை மாற்றம் செய்ய திருச்சி நகரசபை சர்க்காருக்கு சமீபத்தில் தீர்மானம் அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) No.

(b) Does not arise.

Tractor Factory

* 719 Q.—SRI L. ANANDAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any representation, dated 22nd April 1964, from Sri R. Venkatasubba Reddi requesting for the establishment of a tractor factory in the State for the manufacture of small garden tractors has been received by the Government; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No.

(b) Does not arise.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Considering the price of tractors which are necessary for agricultural operations.

25th July 1964]

will the Government consider the desirability of establishing Tractor Servicing Stations in the industrial estates that are being established?

THE HON. SRI R. VENKATARAMAN: I don't understand the question. If the hon. Member wants that Government should establish service centres, I don't think it is necessary. There are a number of private industries which are having these servicing facilities.

பொறியியல் பரிசு நிதி

* 720 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பொறியியல் துறையில், மிக உயர்ந்த அடிப்படைத் தத்துவம் ஒன்றை ஆராய்ந்து காண்பவருக்கு ஒரு பெருந்தொகை அளிப்பதற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் பரிசு நிதி Prize fund ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்ற மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையினை ஏற்று அமுலாக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா? ஆமெனில் எந்த ஆண்டு முதல்?

THE HON. SRI R. VENKATARAMAN: The recommendation is under examination.

புலவர் கா. கோவிந்தன்: நெடுஞ்சாலை ஆராய்ச்சி பிரிவினால் எவ்வளவு நல்ல பலன்கள் கிடைத்திருக்கின்றன என்பதைப்பற்றி பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் ஒரு முறை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளுக்குச் செலவுசெய்வதால் நல்ல பலனளிக்கும். ஆகவே, இதை மனதிற்கொண்டு விரைவிலேயே இந்தச் சிபாரிசை ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஆராய்ச்சி அவசியம் என்பதைப் பற்றிக் கருத்து வேற்றுமை கிடையாது. ஆராய்ச்சிகளுக்கு 'பிரைஸ்' கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு எவ்வளவு செலவாகும், கொடுக்கிற பணம் கணிசமாக இருக்க நம்மிடத்தில் நிதி வசதி எப்படி இருக்கிறது என்பதெல்லாம் இப்பொழுது பரிசீலனையில் இருக்கின்றன.

தேயிலைத் தொழிற்சாலை

* 721 கேள்வி.—**திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் கைத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நீலகிரி ஜில்லாவில் கூட்டுறவுத் துறையில் தேயிலைத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நீலகிரி மாவட்டத்தில் ஏற்கனவே இரண்டு தேயிலைத் தயாரிப்பு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. நீலகிரி மாவட்டத்தில் மேலும் 6 தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளையும், தொழில் கூட்டுறவு மத்திய சேவா சங்கம் ஒன்றையும் ஏற்படுத்துவதற்கான ஒரு விரிவான திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

[25th July 1964

திரு. டி. கார்ச்சா கவுடர் : சார், உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டுறவுத் தொழிற்சாலைகளை அமைக்க தேயிலை போர்டார் 60 லட்சம் ரூபாய் கொடுத்து அது மத்திய சர்க்காருடைய பரிசீலனையில் இருக்கிறது என்பது உண்மையா? அதைச் சீக்கிரமே ஏற்படுத்த அமைச்சர் விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏற்படுத்தத்தான் முயற்சி எடுக்கப்படுகிறது; திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

நதித் திட்டங்கள் (திருநெல்வேலி)

*722 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருநெல்வேலி ஜில்லாவில் கீழ்க்கண்ட திட்டங்கள் எப்போது எடுத்துக் கொள்ளப்படும்?

1. ராம நதி
2. கடனா நதி
3. கீரியாறு
4. வைப்பாறு.

THE HON. SRI V. RAMAIAH : Ramanadhi and Gatana Reservoir Schemes are under consideration.

Ghiriyar scheme has been considered and deferred for the present.

Proposals for construction of anicuts across the Vaippar are under investigation by local officers.

திரு. எம். எஸ். செல்வராஜன்: சார், ராமநதி, கடனாறு, வைப்பாறு முதலிய திட்டங்களின் உத்தேச மதிப்பீடுகள் என்ன? In addition to stabilization of existing anycuts. அதிகமாக ஏக்கர்கள் கொடுக்கப்படுகின்றனவே, அது எந்தத் தொகுதியில் கொடுக்கப்படுகிறது என்பதையும் அறியலாமா?

THE HON. SRI V. RAMAIAH : The estimated cost for Gatana scheme is Rs. 89 lakhs. The scheme aims at stabilizing the existing ayacut of 7,355 acres, besides a new additional ayacut of 73 acres of single crop land and 232 acres of double crop land. The additional food production will be 1,388 tons.

Regarding Ramanadhi reservoir scheme, the estimated cost is Rs. 18 lakhs and it gives a return of 0.33 per cent. The food production anticipated is 1,500 tons.

திரு. எம். எஸ். செல்வராஜன்: சார், ராமநதி திட்டத்தை இப்பொழுது போட்டிருக்கக் கூடியதைவிட இன்னும் விரிவான திட்டமாக போடவேண்டும் என்று அரசாங்கம் ஒப்புக் கொண்டது நினைவிருக்கிறதா? அப்படி, விரிவாகச் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டதா என்று அறியலாமா?

25th July 1964]

கனம் திரு. வெ. ராமையா : அந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது. ராமநதி, கடனாநதி இரண்டையும் இணைத்து ஒரே திட்டமாக ஆக்க முடியுமா, அப்படிச் செய்தால் எவ்வளவு பெரிய திட்டமாக இருக்கும் என்பது இப்பொழுது இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது.

பம்பு கம்ப்ரஸர் தொழிற்சாலை

*723 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், பம்பு கம்ப்ரஸர்கள் தொழிற்சாலை ஆரம்பிக்கக்கோரி மத்திய சர்க்கார் மாநில சர்க்காரைக் கேட்டார்களா?

(இ) அந்த வேலை எந்நிலையிலுள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) The Government of India have taken no decision regarding the location of this Project.

Financial aid to agriculturists

*724 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether there is any proposal to give financial aid for land reclamation to the agriculturists in the area irrigated by Parambikulam-Aliyar Project in the taluks of Pollachi, Udumalpet, Palladam and Dharapuram; and

(b) if so, the details thereof ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) ஆம்.

(இ) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதியிலுள்ள நிலங்களைச் செப்பனிடுவதற்காக நிதி உதவியளிக்கும் பொதுவான ஒரு திட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இத் திட்டத்தின் கீழ், நில அடமான பாங்குகள் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு சராசரி ரூ. 600 வீதம், 10 கோடியே 80 லட்சம் ரூபாய் விவசாயிகளுக்குக் கடனாக வழங்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இத் திட்டத்தின் கீழ், சுமார் 1.80 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயனடையும். வேளாண்மைக்கு மறு உதவியளிக்கும் கார்ப்பரேஷனைக் (Agricultural Refinance Corporation) கலந்து இத் திட்டத்தின் விவரங்கள் முடிவு செய்யப்பட்டுவருகின்றன.

2. இத் திட்டத்தை முடிவு செய்வதற்கு முன், மேற்சொன்ன பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு மத்திய நில அடைமான பாங்கு மூலம், அதன் நிதி வசதிக்குட்பட்டு, கடன்கள் கொடுக்கத் தொடங்கும்படி அரசாங்கம் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

[25th July 1964

திரு. கே. ஏ. மதியழகன்: சார், இம்மாதிரியான நில அடமான பாங்குகள் கடன்கள் கொடுக்கும்போது ஏழை எளியவர்களான விவசாயிகள் நிதி வசதி பெற காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க ஓரளவு அவற்றைச் சீக்கிரமாகக் கொடுக்க முயற்சி எடுக்கப் படுமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: அநேக மாக நில அடமான பாங்கு மூலம் கொடுக்கும்போது தாமதம் ஏற்படாது. எந்த நிலையிலும் மூன்று தவணைகளாகக் கொடுக்க ஆறு மாதத்திற்கு மேல் ஆகாது.

திரு. ரா. ராஜகோபாலசாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், 'விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 600 வீதம் நில அடமான பாங்கு மூலம் கொடுக்கப்படும்' என்று தெரிவித்தார்கள். அந்தத் தொகையை எத்தனை வருஷத்தில் திருப்பிக் கொடுக்கவேண்டும்? வாங்கி உபயோகித்து எத்தனை வருஷத்திற்குப் பிறகு திருப்பிக் கொடுக்கவேண்டும்? அதிகப் பட்சம் எவ்வளவு கடன் ஒருவருக்கு கொடுக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: பத்து ஆண்டு காலத்திற்குள்ளாகக் கொடுக்க வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன்: அந்த காலத்தை 20 வருஷகால மாகச் செய்ய சர்க்கார் முயற்சி எடுப்பார்களா?

கனம் திரு. ந. நல்ல சேனுபதி சர்க்கரை மன்றாடியார்: பத்து ஆண்டுகளில் கொடுப்பதுதான் நல்லது. நிலத்தை சீர்செய்யக் கொடுக்கிறோம், ரூ. 600 என்ற ரீதியில். 25 ஏக்கருக்கு அதிகப் படியாகப் போனால் ரூ. 15,000 கணக்கு வரும். நில அடமான பாங்கியில் 15, 20 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கலாம் என்றாலும், 10 ஆண்டுகளில் கொடுப்பதுதான் நல்லது.

மக்களின் குறைகள் (கலெக்டர்களுக்கு உத்தரவு)

* 725. **கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

மக்களின் குறைகளை நேரில் அறிய மாவட்டக் கலெக்டர் களுக்கு உத்தரவு போடப்பட்டதா?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, இந்த உத்தரவை எந்த எந்த மாவட்டக் கலெக்டர்கள் அமல்படுத்துகிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எல்லா ஜில்லர்க் கலெக்டர் களும் அமுல் நடத்துகிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், கலெக்டர்களை ஜனங்கள் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பார்ப்பதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. அமைச்சர்களோடு பழகிப்பழகி அவர்களுக்கும்

25th July 1964]

மக்களோடு பழகுவது வழக்கத்தில் வந்திருக்கிறது. சந்தோஷப் படவேண்டிய விஷயம். ஆனால், அவர்களிடம் குறைகளைத் தெரிவித்தால், ஏதாவது கடிதம் கொடுத்தால், எம்.எல்.ஏ.-க்களே கொடுத்தால்கூட, டெவலப்மெண்ட் கௌன்சிலில் கொடுக்கப்பட்ட கேள்விகளுக்குக் கூட பதில் கிடைப்பதே இல்லை. ஆகவே குறை களைத் தீர்ப்பதற்காக வேண்டிய உத்தரவுகளை அவர்களுக்குப் பிறப்பிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் இன்ஸ்ட்ரக்ஷன் என்ன என்றால், காலதாமதம் ஆகிறது, அல்லது சரியான நிவாரணம் கிடைக்கவில்லை என்று இருந்தால், அவர்களை நேரிடையாகப் பார்த்துச் சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரெவின்யூ டிபார்ட் மெண்ட்டிலே கீழே ஆர். டி. ஓ. இடம் அல்லது தாசில்தாரிடம் கொடுத்தால் காலதாமதம் ஏற்படலாம். அதைக் கலெக்டருடைய கவனத்திற்குக் கொண்டுவர இது ஒரு சந்தர்ப்பம். கலெக்டர் பார்த்து எந்த வகையில் உடனடியாகத் தீர்க்க முடியுமோ அந்த அளவுக்குத் தீர்க்க முயற்சி செய்வார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், கலெக்டரிடத்தில் நூற்றுக் கணக்கான மனுக்கள் கொடுக்கப்படுகின்றன. அவர் அவற்றை ஆர். டி. ஓ.-க்கு அல்லது தாசில்தாருக்கு "ரிப்போட்" என்று போடு கிறார்கள். ஆனால் அதன் பேரில் அவர்களிடம் இருந்து பதில் வருகிறதா என்று கவனிக்கப்படுவது இல்லை. கலெக்டரிடம் டைரி இல்லை. போனது போனதுதான். திரும்ப வருவதை கவனிக்க முடிவதில்லை. ஆகவே ஒரு ஸ்பெஷல் அதிகாரியையாவது நியமித்து நடவடிக்கையைத் தொடர்ந்து எடுக்க, காகிதப் போக்குவரத்தைக் கவனிக்கத் தக்க ஏற்பாடு செய்ய முடிவு கண்டாக வேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்பொழுது அந்த விதமாக விசேஷ அதிகாரியை நியமிப்பதாக உத்தேசம் இல்லை. நிவாரணம் கிடைக்கவில்லை என்றால், ஒரு நாள் ஒதுக்கப்பட்டி ருக்கிறது, அந்த நாளில் போய் அவரிடம் "ஒரு மாதத்திற்கு முன்பு, 6 மாதத்திற்கு முன்பு கடிதம் கொடுத்தேன், நிவாரணம் கிடைக்கவில்லை" என்று சொல்வதற்கு இப்படி ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. ஆ. துரையரசன்: தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களை டிஸ்ட்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ்க்குச் சென்று ஏழை எளியவர்களால் சந்திக்க முடியவில்லை. ஆகவே ஒவ்வொரு தாலுகா ஹெட்குவார்ட்டர்ஸ்க்கும் மாதம் ஒரு முறை முன்னதாக அறிவித்துவிட்டு மாவட்ட அதிகாரியே செல்லத் தக்க உத்தரவை இடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தாலூகாவிலேயேகூட ஆர்.டி.ஓ. இடம் மனுக்கள் கொடுக்கலாம் என்று ஏற்பாடு செய்யப் பட்டு இருக்கிறது.

[25th July 1964

இருந்தாலும் அப்படிப்பட்ட சிலைகளைக்கூட அகற்றவேண்டாம்" என்று சொன்னார்கள். எல்லா சிலைகளையும் அகற்றிவிட வேண்டும் என்பது கொள்கை அல்ல என்று ஆரம்பத்திலேயே நான் விளக்கமாகச் சொன்னேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அப்படியானால், இந்தக் கேள்வியின் முதல் பகுதிக்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது 'ஆம்' என்று சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திலிருந்து அன்னியர் சிலைகளைப்பற்றி என்ன செய்யவேண்டும் என்று யோசனைகள் வந்திருக்கின்றன? அந்த யோசனைகளை எப்படி நம் ராஜ்ஜியத்தில் அமுல் நடத்துவது என்பது ஆலோசிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஆலோசனை செய்யப்பட்டு எடுக்கப்பட்ட முடிவு இதுதான். அன்னியர் சிலைகளில் எவை மக்களுக்கு வெறுப்பு அளிக்கக்கூடியனவாக இருக்கின்றனவோ அப்படிப்பட்ட சிலைகளை உடனடியாக அகற்றவேண்டும் என்றும், மற்ற அன்னியர் சிலைகளை அகற்றுவதற்குச் சற்று காலம் தள்ளிப் போடலாம் என்றும், அதற்குப் பதிலாக நம்முடைய நாட்டில் சேவை செய்தவர்களின் சிலைகளை வைக்கும் நிலைமை ஏற்படும் போது, எந்த அன்னியர் சிலையை அகற்றவேண்டும் என்று முடிவு செய்யலாம் என்றுத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அகற்றப்படுகிற அன்னியர் சிலைகளை அரசினர் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது? அவற்றைப் பொருட்காட்சிச் சாலையில் வைக்கிற உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கோட்டையில் ஒரு ம்யூஸியம் இருக்கிறது. அதை நாம் Museum of the British Period ஆக வைக்க இருக்கிறோம். அந்த இடத்தில் அந்தச் சிலைகளை வைப்பார்கள். இன்னும் பல ம்யூஸியம்களிலும் வைக்கலாம்.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: மக்களுக்குப் பிடிக்காத அன்னியர் சிலைகள் நீக்கப்படுவது போல, ராஜாஜி ஹாலில் மக்களுக்குப் பிடிக்காத அநேக அன்னியர்களுடைய படங்கள் இருக்கின்றனவே, அவற்றையும் நீக்குவதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சிலைகளைப் பற்றி என்ன சொன்னேனோ அதே பதில் படங்களுக்கும் பொருந்தும். வேறு படங்கள் வைக்கவேண்டும் என்ற நிலைமை ஏற்படுகிறபோது, அப்பொழுது எந்த எந்தப் படங்களை அகற்றிவிட்டு வேறு படங்கள் வைக்கலாம் என்று யோசனை செய்யப்படும்.

திரு. சா. ராமசாமி: இப்பொழுது மன்றோ சிலை இருக்கிறதே, அதைக் கூட எடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

கனம் சபாநாயகர்: குறிப்பாகச் சொல்ல வேண்டாம்.

25th July 1964]

உலகப் பொருட்காட்சி (நியூயார்க்)

* 727 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நியூயார்க் நகரில் நடைபெறும் உலகப் பொருட்காட்சியிலுள்ள இந்திய காட்சிப் பிரிவுக்கு நமது மாநில தொழில் உற்பத்திப் பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளனவா?

(இ) ஆமெனில், எந்தெந்த வகையான பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) The Industries Department of this Government has not participated in the New York World Fair;

(*b*) Does not arise.

விற்பனை நிலயங்கள் (கைத்தொழில் இலாகா)

* 728 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி:
திரு. ஆ. கு. சுப்பையா: } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கைத்தொழில் இலாகாவினரால் தயாரிக்கப்படும் பொருள்களை விற்பனை செய்வதற்கு தமிழகத்தில் எத்தனை விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன?

(இ) இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு விற்பனையாகிறது?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Seven sales depots and emporia have so far been opened by the Industries department in Madras State.

(*b*) The value of the sales made through the seven sales emporia and depots are as follows:—

	Rs.
1957–58	15,147·28
1958–59	1,06,322·00
1959–60	2,28,140·00
1960–61	2,69,621·00
1961–62	3,72,549·00
1962–63	5,70,166·00
1963–64	11,92,889·00

[25th July 1964

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத்தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் தயாரிக்கப்படும் பொருள்களைப் பிற மாநிலங்களில் விற்பனை செய்வதற்கு விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படியானால், எத்தனை நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: டெல்லியில் நாம் ஒரு நிலையத்தை அமைத்திருக்கிறோம். வேறு மாநிலங்களில் நாம் அமைக்கவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: விற்பனை நிலையங்கள் எந்த எந்த நகரங்களில் இருக்கின்றன? வருமானம் அவற்றை நிர்வகிப்பதற்குப் போதுமானதாக இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஏதோ ஒன்றைத் தவிர மற்றவை எல்லாம் லாபத்தில் நடக்கவில்லை. அதாவது, அதற்கான செலவு, ஓவர்ஹெட் எல்லாம் சரிக்கட்டுகிறதா என்றால், இல்லை. ஆனால், இவற்றை நாம் ஆரம்பித்ததன் நோக்கங்களில் விளம்பரமும் ஒன்று. நம்முடைய காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ் போன்ற தொழில்களில் செய்கிற பண்டங்களை விற்பனை செய்வதற்கு எந்த விதமான வசதியும் இல்லை. அதனால், இந்தப் பொருள்களை விற்பனை செய்வதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்பதும் ஒரு நோக்கமாகும். 1963—64-ம் ஆண்டில் சுமார் 12 லட்ச ரூபாய் விற்பனை செய்யும் அளவு உயர்ந்திருக்கிறது. இந்த முயற்சி விளம்பரத்திற்காகச் செய்யப்படுகிறது.

குடிநீர்த் திட்டம்

*729. கேள்வி.—திரு. எல். ஆனந்தன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கள்ளக்குறிச்சி வட்டத்திற்கு குடிநீர் திட்டம் வேண்டுமென்று நகரப் பஞ்சாயத்து கேட்டதன்பேரில் மதிப்பீடு தொகை தயார் செய்தும் இதுவரை வேலை துவங்காததன் காரணமென்ன?

கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம்: பணமுடை காரணமாக கள்ளக்குறிச்சி நகரப்பஞ்சாயத்துக் குடிநீர்த் திட்டம் சம்பந்தமான பொது வேலைகளுக்கு அனுமதியளிப்பதை அரசாங்கம் தள்ளிப்போட்டுள்ளது.

*730. கேள்வி—திரு. எம். எஸ். மணி:
திரு. மு. கருணாநிதி: } கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேளவிகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை நகர குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க சர்க்கார் அண்மையில் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

25th July 1964]

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) கோயம்பத்தூருக்கு சிறுவாணி ஆற்றிலிருந்து கிடைக்கும் தண்ணீர் சப்ளையை அதிகப்படுத்தும் பொருட்டு, வரைப்படங்களையும் மதிப்பீடுகளையும் தயாரிக்கும்படி (பொது சுகாதாரப் பொறியியல்) தலைமைப் பொறியாளரைக் கேட்டுக்கொள்ளப்பட்டது. அவரிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: நெடுங்காலமாகவே இப்படித்தான் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். கோயமுத்தூர் நகரத்தில் தண்ணீர்க் கஷ்டம் பெரிதாக இருக்கிறது. பானையைக் க்யூவில் வைத்துவிட்டு மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலையில் மக்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே, இந்தத் திட்டம் எவ்வளவு விரைவாக முடிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் உறுதியாகத் தெரிவிப்பார்களா?

கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம்: சிறுவாணியாற்றுக்குத் தண்ணீர் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வருகிற காரணத்தால், அதைப் பற்றி கேரள அரசாங்கத்திற்கு நம்முடைய அரசாங்கம் விசாரித்து எழுதியதில் உடனடியாக பதில் வராத காரணத்தால், அதைப்பற்றி ஆலோசித்து, பவானியிலிருந்து தண்ணீர் கொண்டுவரலாமா என்கிற மாற்று யோசனை அரசாங்கத்திடம் இருந்தது. ஆனால், இப்பொழுது கேரள அரசாங்கம் சிறுவாணித் திட்டத்தைப்பற்றிய நம்முடைய யோசனையை ஏற்றுக் கொண்டிருப்பதால், அதுபற்றி நமது மாநில (பொது சுகாதாரப் பொறியியல்) தலைமைப் பொறியாளருக்கு எழுதி, வரை படங்களையும் மதிப்பீடுகளையும் தயாரிக்கும்படிக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. சா. கணேசன்: கேரள அரசாங்கம், சிறுவாணித் தண்ணீரைப் போதிய அளவு நாம் எடுத்துக்கொள்ளலாம் என்று அனுமதித்துவிட்ட காரணத்தால் இந்த முயற்சி எவ்வளவு விரைவில் முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் கூற முடியுமா?

கனம் திருமதி. ஜோதி. வெங்கடாசலம்: கேரள அரசாங்கம் ஒத்துக்கொண்ட காரணத்தினால்தான் பப்ளிக் ஹெல்த் என்ஜினீர் அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறோம். அவரிடமிருந்து எஸ்டிமேட் முதலியவை வந்தவுடன் அது நடைமுறையில் ஆரம்பிக்கப்படும்.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

Nte.—[An asterisk (*) at the commencement of a speech indicated revision by the Member.]

II. CALLING ATTENTION TO FAILURE OF CROPS IN EAST RAMANATHAPURAM DISTRICT.

திரு. கரு. சீமைச்சாமி: கனம் சபாநாயகர் அவர்களே, பருவமழை தவறிய காரணத்தால் கிழக்கு ராமநாதபுரம் மாவட்டத்தில் பயிர் விளைவு குன்றியது பற்றியதும், வரிப் பாக்கியையும் கடன்களையும் கட்டாயமாக வசூலிப்பதனால் விவசாயிகள் அடையும் இன்னல் பற்றியதுமான அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகின்றேன்.

[25th July 1964

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, in Fasli 1373, as the north-east monsoon was late by a month, the seasonal conditions were not favourable in the main taluks of Tirupattur and Sivaganga and the sub-taluk of Karaikudi, Manamadurai and Devakottai of Ramanathapuram District. Special remission was granted for wet crops up to and inclusive of four annas yield in those taluks. Seasonal remission was also granted, under B.S.O. 13, for the eligible cases in six villages in Kamudi sub-taluk. The number of villages affected in Tirupattur taluk was 32 in Karaikudi sub-taluk, 30 in Sivaganga taluk, 46 in Manamadurai sub-taluk and in Devakottai sub-taluk 17. The toal amount of remission granted in these taluks is Rs. 4,27,332·58. The Collector of Ramanathapuram has reported that it is incorrect to say that there was widespread calamity during fasli 1373 in East Ramanathapuram District or famine conditions existed.

The Collector of Ramanathapuram has reported that in East Ramanathapuram District as against the total demand of Rs. 1,39,76,476 including arrears under Land Revenue, an amount of Rs. 60,47,357 has been collected, leaving a balance of Rs. 79,29,119 and as against a total demand of Rs. 1,13,48,282 including arrears under loans an amount of Rs. 38,35,697 has been collected, leaving a balance of Rs. 75,12,585. The collection is just a little over the demand for one Fasli. The poor collection shows that the ryots are not being harassed by the Revenue authorities. The Collector has reported that the Revenue authorities have scrupulously avoided coercive processes, particularly in distraining bulls and kitchen articles in the case of poor ryots whose lands have been left fallow due to adverse seasonal conditions or where the crop prospects are poor due to late commencement of rains.

I may, therefore, assure the hon. Member that compulsory collection of tax and loan arrears in East Ramanathapuram District has not been resorted to and that due consideration is shown in deserving cases.

III. PRIVILEGE MATTER

REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES ON " TAMIL SEITHI " CASE—PRESENTATION

SRI K. PARTHASARATHY : Sir, I, the Chairman of the Committee of Privileges, present the Report of the Committee of Privileges on ' Tamil Seithi ' case.

IV. GOVERNMENT MOTION

CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

' That Item IV (1) viz., The Travancore-Cochin Lime shells (Control) Repeal Bill, 1964, be taken up before Item III in the agenda.'

The motion was put and carried.

25th July 1964]

V. GOVERNMENT BILLS.

(1) THE TRAVANCORE-COCHIN LIMESHELLS (CONTROL) REPEAL BILL, 1964.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

' That leave be granted for the introduction of the Travancore-Cochin Limeshells (Control) Repeal Bill, 1964.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS PANCHAYATS (AMENDMENT AND MISCELLANEOUS PROVISIONS) BILL, 1964 (L.A. BILL NO. 21 OF 1964).

*கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று முதல் விவாதத்தில் உள்ள பஞ்சாயத்துத் திருத்த மசோதாவில் இருபதுக்கும் மேற்பட்ட அங்கத்தினர்கள் கலந்து கொண்டு, தங்கள் தங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கினார்கள். பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தல் நேரடியாக நடக்க வேண்டுமென்று எதிர்க்கட்சி அங்கத்தினர்களில் பலர் வலியுறுத்திக் கூறினார்கள். பொதுவாக விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய ஒன்றிரண்டு அங்கத்தினர்கள் மிகவும் காரசாரமாக, பார்லிமெண்டரி சம்பிரதாயத்திற்கு விரோதமான வார்த்தைகளைக் கூடத் தாராளமாக உபயோகித்துப் பேசினதை நாம் எல்லோரும் கேட்டோம். இது மிகவும் வருந்தத்தக்கதாகும். சாதாரணமாக மிக்க பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டிய கனம் அங்கத்தினர்கள், அமைச்சர்களைக் குறை கூறலாம், தவறுகளைச் சுட்டிக்காட்டலாம். ஆனாலும், ஜனநாயக பார்லிமெண்டரி அமைப்புக்கு உட்பட்டு பொறுப்புணர்ச்சியுடன் பேசினால் நல்லது என்று கூறிக்கொண்டு, என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்:

பொதுவாக, உறுப்பினர்களே தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற முறைதான் நம் நாட்டில் வழக்கமாக இருந்து வருகிறது. 1920-ஆம் வருடத்திய முனிசிபாலிட்டி சட்டத்தின்படி தேர்தல்கள் பல நடந்திருக்கின்றன. மாநகராட்சி தேர்தலிலும், பழைய ஜில்லா போர்டு தலைவர் தேர்தலிலும் அங்கத்தினர்கள் ஒன்று கூடித் தலைவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்வது என்ற முறை கையாளப்பட்டு வந்திருக்கிறது. நம்முடைய நீண்ட கால அநுபவத்தை வைத்துக்கொண்டு, இந்த விஷயம் நல்ல முறையில் தான் ஆராயப்பட்டு இருக்கிறது. அவசரப்பட்டு ஒன்றும் முடிவுக்கு வரவில்லை.

1950-ஆம் வருடத்திலே பஞ்சாயத்துச் சட்டம் வந்து பஞ்சாயத்துத் தலைவர்கள், தேர்தலில் எம்முறையில் நடந்து கொண்டார்கள் என்பதை சாதாரணமாக எல்லோரும் அறிந்திருக்கலாம்.

[திரு. சே. ம. அ. மஜீத்] [25th July 1964

தலைவர்கள் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவது என்றால்—அவர்கள் உறுப்பினர்கள் சொல்கிற கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்காமல் நடக்கக்கூடும். "நான் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவன், நீங்கள் என்ன சொல்வது?" என்றால் உறுப்பினர் களுக்கும், தலைவருக்கும் செயல்முறையில் ஒரு இணைப்பு இல்லாமல் போய்விடுகிறது. முன்பு இருந்த பஞ்சாயத்துக்களின் நிலை வேறு, இன்றுள்ள நிலை வேறு, முன்பெல்லாம் 'சிவிக் வொர்க்ஸ்' தான். தெருக்களைச் சுத்தமாக, சுகாதாரமாக வைத்துக்கொள்வது, இரவு காலங்களில் மண்ணெண்ணெய் விளக்கு ஏற்றுவது ஆகியவை தான் அவற்றின் வேலையாக இருந்தது. இப்போதுள்ள பஞ்சாயத்துகளில் அப்படி இல்லை. டெவலப்மெண்ட் ஆக்டிவிடீஸ் மூலம் அதிகமான பொறுப்புகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. வரி விதிப்பு அதிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இன்றுள்ள முக்கியமான நிலையில் பஞ்சாயத்து உறுப்பினர்களும் தலைவரும், அதுபோலவே பஞ்சாயத்துத் தலைவர்களும், பஞ்சாயத்து யூனியன் தலைவரும் ஒறுங்கிணைந்து செயல்படவேண்டிய நிலை உருவாகிவிட்டது. இதை எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்துதான். இன்றுள்ள நிலையில் பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தல் எந்த முறையில் அமைவது சிறந்ததாக இருக்கும் என்று சர்க்கார் ஆராய்ந்து இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறது.

10·00 a.m. ஆனால், மற்ற எல்லா அம்சங்கள் சம்பந்தப்பட்டவரையில், எல்லா அங்கத்தினர்களும் வரவேற்றிருப்பதை நான் பாராட்டு கிறேன். தலைவர் தேர்தலை நேர்முகத் தேர்தலாக நடத்துவதா அல்லது மறைமுகத் தேர்தலாக நடத்துவதா என்பதிலே தான் வேறுபாடு இருக்கிறது. மற்ற மாகாணங்களை எடுத்துக் வேறுபாடு இருக்கிறது. மற்ற மாகாணங்களை எடுத்துக்கொண்டால் பெருவாரியான மாகாணங்களில் மறைமுகத் தேர்தல் தான் இருந்து வருகிறது. உதாரணமாக கேரளம், மைசூர், ஆந்திரம், மத்தியப்பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், மகாராஷ்டிரம், ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் எல்லாம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தல் மறைமுகத் தேர்தலாகத் தான் நடை பெறுகின்றது. மற்ற மாநிலங்களில் உள்ள நிலைமைகளையெல்லாம் அனுசரித்து, பஞ்சாயத்துத் தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் பட வேண்டுமானால், அதனால் ஏற்படக்கூடிய சங்கடங்களை யெல்லாம் சிந்தித்துப் பார்த்து, மறைமுகத் தேர்தலாக இருந்தால் தான் நல்லது என்று அரசாங்கம் முடிவு செய்தது.

கனம் அங்கத்தினர்கள் திரு. தர்மலிங்கம் அவர்களும் திரு. மாதவன் அவர்களும் "இந்த மசோதா 'காம்ப்ளிகேஷன்' நிறைந்தது" என்று சொன்னார்கள். பொதுவாக, அவர்கள் சர்க்கார் சொல்வதற்கு மாறாகத்தான் கருத்துச் சொல்வார்கள். சர்க்கார் தேர்தல் 'வேண்டும்' என்று ஒரு முறை சொன்னால் அவர்கள் 'வேண்டாம்' என்று சொல்வார்கள்; 'வேண்டாம்' என்று சர்க்கார் சொன்னால், அவர்கள் 'வேண்டும்' என்று சொல்வார்கள். இந்த மசோதா சிக்கல் எதுவும் இல்லாதது. இதைப் பொதுஜன அபிப்பிராயத்திற்கோ செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கோ விட

25th July 1964] [திரு. சே. ம. அ. மஜீத்]

வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. அவ்வாறு விட்டால் இதிலே இன்னும் காலதாமதமாகும். நகராட்சித் தேர்தலை நடத்துவது பற்றி முடிவு செய்யப்பட்டபோதே 'பஞ்சாயத்துத் தேர்தல்களை எப்போது நடத்தப் போகிறீர்கள்?' என்று கேட்டார்கள். 'அமைச் சர்களுக்கு ஜனநாயகத்திலே நம்பிக்கை இல்லையா?' என்று கேட் டார்கள். சர்க்கார் கூடுமானவரையில் நன்றாகச் சிந்தித்து பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்துவது என்று முடிவு செய்திருக் கிறது.

கனம் அங்கத்தினர் திரு. கமலநாதன் அவர்கள், 'அமைச்சர் அவர்கள் டிமாண்டின் மீது பேசும்போது உறுதி மொழி அளித்தி ருந்தார்கள்; இப்போது அந்த உறுதி மொழியை அவர்கள் மீறு கிறார்கள்' என்று கூறினார்கள். நான் அந்த டிமாண்டில் பேசிய கருத்தை அப்படியே வாசிக்கிறேன்:—

"சிலர் நேரடியாக தேர்தல் இருக்கவேண்டுமென்று சொன் னார்கள்; சிலர் பழைய முறையே இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இரு கருத்துக்கள் இருக்கின்றன. இவைகளை நன்றாகச் சிந்தித்து என்ன தேர்தல் முறையை வைத்துக் கொள்வது என்பது பரிசீலனையில் இருக்கிறது". இது எப்படி வாக்குறுதி ஆகும் என்று புரியவில்லை.

கனம் வடிவேலு அவர்கள் சட்ட மன்ற உறுப்பினர், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கூட, அவர் 'பஞ்சயத்து யூனியன்கள் மணி வாங்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக் கிறதா?' என்று கேட்டார்கள். அதற்கு நான், 'பஞ்சாயத்துக்கள் வேண்டுமானால் அவ்வாறு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கலாம், அம்மாதிரி உத்தரவு இருப்பதாகத் தெரியவில்லை. எதற்கும் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்' என்று 'கமிட்' செய்யாமல் பதில் சொல்லியிருக்கும்போது பொறுப்புள்ள கனம் அங்கத்தினர் அவர்கள் குற்றச்சாட்டாகக் கூறியிருக்கிறார்கள். அனுப்பப்பட் டிருக்கிற உத்தரவு; செகரடரி இலாகாவில் இருந்து அனுப்பப் பட்ட மெமோரண்டந்தான். அங்கத்தினர்களும் பொறுப்புணர்ச்சி யோடு நடந்து கொள்ளவேண்டும். வார்த்தைகளைப் பொறுப் புணர்ச்சியோடு கையாளவேண்டும். நாம் சட்ட மன்ற உறுப்பினர் களாகவும், அமைச்சர்களாகவும் வந்திருக்கிறோம். சமுதாயத்தில் உள்ள பொது ஜனங்களை விட சமுதாயத்தின் நன்மையைப் பாது காப்பதில் நமக்கு மிகுந்த கடமை இருக்கிறது. 'ஏதோ மெம்பர் களைத் தூக்கிக் கொண்டு போய்விடுகிறார்கள்' என்று பேசு கிறார்கள். ஏதோ கட்சி மேடையில் வேண்டுமானால் அவ்வாறு பேசலாம். இவ்வாறு தூக்கிக் கொண்டு போவது அந்தக் காலத் திலும் இருந்திருக்கிறது. சமூகத்தில் தியாகம் செய்யக் கூடிய வர்கள், சமூக ஊழியர்கள் குறைவாகத்தான் இருக்கிறார்கள். தூக்கிக் கொண்டு போவது சரித்திர காலத்திலிருந்தே, கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே நடைபெற்று வருகிறது. இந்த மாதிரி நிலைமைகளை எப்படி நிவர்த்திப்பது என்பதிலே எல்லோரும் அக்கறை செலுத்தவேண்டும்.

[திரு. சே. ம. அ. மஜீத்] [25th July 1964

தனிப்பட்ட முறையில் கிராமப் பஞ்சாயத்து சங்கங்களின் மாகாண அமைப்பு சம்பந்தப்பட்ட தலைவரைப் பற்றி பொறுப் பற்ற முறையிலே பேசினார்கள். அந்தச் சங்கத்திலே உறுப்பினர் களான பஞ்சாயத்துத் தலைவர்கள் சேர்ந்து திருச்சி மாநாட்டில் தீர்மானித்து எக்சிக்யூட்டிவ் கமிட்டி தலைவரை தேர்வு செய்ய தீர்மானித்தது. அந்த அடிப்படையில் அதன் தலைவர் தேர்ந் தெடுக்கப்பட்டார். ஏதோ காங்கிரஸ் பார்ட்டியைச் சேர்ந்த வர்கள் வந்து விட்டார்கள் என்பதற்காக அவர் மீது அவதூறான வார்த்தைகளை இந்தச் சட்ட மன்றத்தில் கூறவேண்டிய அவசிய மில்லை.

தலைவர் தேர்தல் மறைமுகத் தேர்தலாகத்தான் இருக்கவேண்டு மென்ற முடிவுக்கு நன்றாக அதன் விளைவுகள், பலன்கள் ஆகிய வற்றைப் பற்றியெல்லாம் சிந்தித்துத்தான், பொறுப்புடன் அரசாங்கம் இந்த முடிவுக்கு வந்திருக்கிறது. அரசாங்கத்தார் 'ஏமாற்றுகிறார்கள்' என்ற 'அன்பார்லிமென்டரி' வார்த்தையை கனம் அங்கத்தினர் திரு. மாதவன் போன்ற படித்தவர்கள்கூடப் பயன்படுத்தினார்கள்.

திரு. சே. மாதவன்: அந்த வார்த்தை பாராளுமன்ற வார்த் தைக்கு உரியதா அல்லவா என்பதைப் பற்றித் தீர்ப்பளிக்க வேண்டியது சபாநாயகராகும். நான் அந்த வார்த்தையைப் பயன்படுத்தியபோது சபாநாயகர் தடுக்கவில்லை. அப்படி இருக் கும்போது அமைச்சர் அவர்கள் அந்த வார்த்தை 'அன்பார்லி மென்டரி வார்த்தை' என்று எப்படிச் சொல்லலாம்?

கனம் சபாநாயகர்: கனம் மந்திரி தம்முடைய அபிப்பிரா யத்தைச் சொல்கிறார்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் அந்த வார்த்தை பாராளுமன்ற வார்த்தைக்குச் சரியாக இருக்கிறதோ இல்லையோ, நடைமுறைப் பேச்சுக்கு ஒத்ததாக இல்லை.

கனம் திரு ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மந்திரிசபையில் இருக்கின்றவர்கள் மீது எதிர்க் கட்சியினர் எத்தனை குற்றச்சாட்டுகளைச் சொன்னாலும் எப்படிப் பொறுமையாகக் கேட்டுக் கொள்கிறோமோ அதில் நூற்றில் ஒரு பங்காவது எதிர்க்கட்சியினருக்கு இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஆகவே, இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டிய அவசியமில்லை; இது சாதாரண திருத்த மசோதா. இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்தச் சபையை நான் கேட்டுக் கொள்கிறேன்.

The amendments were put and lost.

25th July 1964]

MR. SPEAKER: The question is—

"That the Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 (L.A. Bill No. 21 of 1964) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 3.

MR. SPEAKER: The question is—

"That Clause 3 do stand part of the Bill."

SRI M. KALYANASUNDARAM: Sir, I move the following amendments:—

(i) In Clause 3, in the proposed new Section 12 (1) for item (i) substitute the following:—

"(i) members elected from each Panchayat area on the basis of one for each Panchayat, elected directly by the people in the respective Panchayats in the prescribed manner".

(ii) In Clause 3, in the proposed new sub-section (3) of Section 12, delete the words "but shall not be entitled to vote".

(iii) In Clause 3, delete the proviso after the proposed new sub-section (3) of Section 12.

SRI A. K. SUBBIAH: I second these amendments.

SRI S. MADHAVAN: Sir, I move the following amendments:—

(i) In sub-section (1) (i) of the proposed Section 12 to the principal Act, for the word 'presidents' substitute the word 'members'.

(ii) For sub-section (2) of the proposed Section 12 to the principal Act, substitute the following:—

"(2) Notwithstanding anything contained in sub-section (1) in the case of a Panchayat Union where there is only one Panchayat or township committee, all the members of that Panchayat or of that township committee, as the case may be, shall be members of the Panchayat Union Council concerned."

The amendments were duly seconded.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, I move the following amendments:—

(i) Delete the proviso after the proposed Section 12 (ii) to the Principal Act and add the following items—

"(iii) two women members;

[Sri C. Chiranjeevulu Naidu] [25th July 1964

(iv) two members of the Scheduled Castes or Scheduled Tribes;

(v) one co-operator; and

(vi) one social worker

OR

In the proposed proviso to section 12 (ii) to the principal Act, for the word ' may ' occurring after the words ' panchayat union council ' and before the word ' co-opt ' substitute the word ' shall '.

(ii) In the proposed sub-section (3) of Section 12 to the principal Act, for the word ' whole ' substitute the words ' several panchayat development blocks '.

The amendments were duly seconded.

MR. SPEAKER : The Clause and the amendments are before the House for discussion.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சாபாநாயகர் அவர்களே, மூன்றுவது பிரிவு அசல் சட்டத்தின் 12-வது செக்ஷனை, முக்கியமான பிரிவை திருத்தும் ஒன்றாகும். அசல் சட்டத்தில் இருக்கக் கூடியது என்ன? ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலுக்கும் அதற்கு உட்பட்ட பஞ்சாயத்துக்கள் ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒரு அங்கத்தினரை பஞ்சாயத்து அங்கத்தினர்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பலாம் என்று இருந்தது. அதுதான் அசல் சட்டத்தில் உள்ளது. தாற்காலிக ஏற்பாடாக அந்தந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலர் ஆகலாம் என்ற திருத்தச்சட்டம் கொண்டு வந்து திருத்தப்பட்டது. அந்த திருத்தச் சட்டத்தில் உள்ள அதே ஷரத்துக்களை இப்போது அசல் சட்டத்தில் நிரந்தரமாகச் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். நேற்று எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பலர் எடுத்துக் கூறினார்கள். காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் கூட கட்சிக் கட்டுப்பாடு இல்லாமல் சுதந்திரமாக வோட்டு அளிப்பதற்கு உரிமை கொடுப்பார்களானால் பெரும்பான்மையினர் இதை ஆதரிப்பார்களெனறுதான் நான் கருதுகிறேன். (குறுக்கீடு) ஒரு வேளை என் கணிப்பு தப்பாக இருக்கலாம். காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் ஜனநாயகத்திற்கு மரியாதை அளிக்கக் கூடியவர்கள், ஆகவே ஆதரிப்பார்கள் என்று நினைக்கிறேன். அது தப்பாக இருக்கலாம். நான் ஏன் இதை வற்புறுத்துகிறேன் என்றால் பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்ந்து எடுக்கக் கூடிய பிரிவாக இருந்தால் அது வேறு. நான் சொல்வது பஞ்சாயத்துத் தலைவர்கள் சம்பந்தப்பட்டதல்ல. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அங்கத்தினர்களை எப்படித் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பது சம்பந்தமாக இத்திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் இருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் உள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இது, பஞ்சாயத்து யூனியன் சேர்மனிலிருந்து கிராம பஞ்சாயத்துக்கள் வரை வெஸ்டட் இன்டரஸ்டை

25th July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

உண்டாக்கி விடுகிறது. கிராம அபிவிருத்தி பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், கிராம அபிவிருத்திக்கு அதிகப் பொறுப்பு கொடுக்கப்போகிறோம் என்று நேறயைதினம் கம்யூனிட்டி டெவலப்மெண்ட் அமைச்சர்கள் மகாநாடு நடந்தது. நம் அமைச்சர் போகவில்லை என்று நினைக்கிறேன். அங்கு பேசும்போது மத்திய அமைச்சர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள்? பஞ்சாயத்தின் அதிகாரத்தை இன்னும் விரிவுபடுத்த போகிறோம். பஞ்சாயத்துப் பணியை இன்னும் விரிவு படுத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். விரிவுபடுத்தவேண்டும்; அது நியாயம் என்பதுதான் என் அபிப்பிராயம். அப்படி விரிவுபடுத்தும்போது மக்களை பூராவும் சேர்ந்து பங்கெடுக்கவேண்டும். மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுச் சொன்னார்கள். மத்திய அரசாங்கம் பஞ்சாயத்து ராஜ்யம் எந்தத் திசையில் போகிறது என்று கொள்கை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். காந்திஜி சொன்னது இருக்கட்டும். அவர்கள் சொன்னதை நீங்கள் செய்யவில்லை. பஞ்சாயத்து ராஜ்யம் சம்பந்தப்பட்டவரை எது முக்கியம்? அந்தந்தக் கிராம மக்கள் பஞ்சாயத்தின் தினசரி வேலையில் உட்பட பங்கெடுக்க வேண்டியது முக்கியமானது என்று வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. திரு. எஸ். கே. டே அவர்களின் பிரசங்கங்களைப் படித்துப் பார்க்கவேண்டும். கிராம சபா ஏற்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். கிராம மக்கள் அத்தனை பேர்களையும் ஜாதி மத வித்தியாசம் இல்லாமல், வரி கொடுப்பவர்கள், வரி கொடுக்காதவர்கள் என்ற வித்தியாசம் இல்லாமல், மாரியம்மன் கோவிலுக்கு முன்னால் கூட்டி வருடா வருட நிதி நிலை பற்றிக் கூட அவர்கள் முன் படித்து, அவர்கள் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த மாதிரி, கிராம வேலைகளில் எல்லாம் பங்கெடுக்கவேண்டும் என்று சொல்லும் போது, அவ்விதம் பங்கெடுக்கவேண்டாம் என்று சொல்வது கொஞ்சமும் பொருத்தமாகாது. ஏதோ இந்த மாதிரி இருப்பது நிர்வாகத்திற்குப் பொருத்தமானது என்பது சரியல்ல. அமைச்சர் அவர்கள் ஏதோ கொஞ்சம் கடுமையாகக்கூட சொன்னார்கள். அமைச்சராக இருப்பவர்கள் இவ்வளவு ஸென்ஸிட்டிவ்வாக இருக்கக் கூடாது. புதிதாக இருப்பதால் இப்படி இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இன்னும் இரண்டு மூன்று முறை அமைச்சராக வந்து விட்டால், இவ்வளவு உணர்ச்சி இராது, சர்வ சாதாரணமாகவே பேசி விடலாம். (கனம் அமைச்சர் திரு. மஜீத் அவர்கள் குறுக்கீடு) . . . ஆம், தோல் தடித்துப்போய்விடும். இந்த அளவுக்குப் போகப் போக உற்சாகம் இருக்காது. ஏதோ எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் கொஞ்சம் சூடாகத்தான் பேசுவார்கள். அவர்கள் சொல்லுகின்ற வார்த்தைகளில் மட்டும் கவனம் செலுத்தாமல் கருத்துக்களைக் கவனிக்கவேண்டும். எதிர்க்கட்சியினர் கொஞ்சம் சூடாகத்தான் பேசுவார்கள், அரசாங்கத்தினுடைய குற்றங்குறைகளைக் கூறுவதற்காகத்தான் இங்கே வந்திருக்கிறார்கள், அவர்கள் அதைப் பேசும்போது கொஞ்சம் உஷ்ணமாகத்தான் பேசுவார்கள்.

[25th July 1964

கனம் சபாநாயகர்: உஷ்ணத்தை மற்றவர்களுக்கும் உண்டு பண்ணுவார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அவர்கள் பேசும்போது கொஞ்சம் சூடாக இருந்தாலும், அவர்கள் சொல்லுகின்ற வார்த்தைகளை மட்டும் கவனிக்காமல், கருத்துக்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக இதில் பஞ்சாயத்துக்கும் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலுக்கும் நடைபெறும் தேர்தல்களில் மக்கள் பங்கெடுக்க வேண்டும் என்பதுதான் கருத்து. இதில் தலைவர்களாக வருகின்றவர்களுக்கு அதிகமான பொறுப்பு இருக்கின்ற காரணத்தினால், மக்கள் இதில் நேரடியாகப் பங்கு எடுக்கவேண்டிய பொறுப்பு இருக்கிறது; அவசியமும் இருக்கிறது. கிராம மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற்றுத்தான் நமது திட்டங்களை எல்லாம் நடத்தவேண்டும் என்று சொல்லுகிறோம். ஆனால், கிராமத்திலிருந்து மக்களால் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தால் தான் அவர்களுக்கு மக்களிடத்தில் செல்வாக்கு ஏற்படும். செல்வாக்கு இல்லாதபோது எப்படி அந்தத் தலைவர்கள் மக்களிடத்தில் ஒத்துழைப்பைத் திரட்ட முடியும்? கிராம வேலைகளுக்கெல்லாம், லோக்கல் கான்ட்ரிப்யூஷன் வேண்டும் என்று சொல்லுகிறோம். ஆனால், எங்கே லோக்கல் கான்ட்ரிப்யூஷன் கிடைக்கிறது? 100-க்கு 90-ம் வேலை செய்கின்ற கான்ட்ராக்டர்களே பணத்தைக் கட்டிவிட்டு வேலைகளை நடத்துகிறார்கள். மக்களிடத்திலிருந்து வசூல் செய்து 15 சத வீதம் பணத்தைக் கஜானாவில் கட்டிவிட்டுத்தான் வேலை நடத்தவேண்டும் என்று வந்தால் எத்தனை இடங்களில் இந்த வேலை நடக்கும்? ஏதோ 15 சத வீதம் வசூல் செய்ததாக தப்புக் கணக்குக் கொடுத்துவிட்டு கான்டிராக்டர்களே வேலைகளை நடத்துகிறார்கள். அதிலும் பஞ்சாயத்துத் தலைவர்களே இந்த வேலைகளை எடுத்து நடத்தலாம் என்றிருக்கிறது. இது மிகவும் வசதியாகப் போய்விட்டது. கைமுதல் கூடப் போடாமல் பஞ்சாயத்துப் பணத்தை எடுத்தே வேலையை நடத்திவிட்டு ஆதாயத்தைப்பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இந்த வாய்ப்பை மாற்றவே வேண்டாம், ஐந்து வருடத்திற்கு அப்படியே இருக்கட்டும் என்றுதான் சர்க்கார் இப்போது சிருஷ்டி செய்திருக்கிறார்கள். பஞ்சாயத்துத் தலைவர் என்று இருப்பது ஒருவர், அவரேதான் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலுக்கும் அங்கத்தினர் என்று வந்துவிட்டால், அவருக்குச் சாதகமாக எந்தத் தீர்மானத்தையும் அங்கே நிறைவேற்றி அவருக்குச் சாதகமாக எல்லாக் காரியங்களையும் நடத்திக்கொண்டிருப்பார்கள். அதன் காரணமாகத்தான் இன்றைக்குப் பல பஞ்சாயத்துக்களிலும் சரியானபடி வேலை நடக்காமல் இருந்து கொண்டிருக்கிறது. விருப்பமுள்ள இடங்களுக்கு வேலைகளை நடத்துகிறார்கள். அவர்களுக்கு விருப்பமில்லாத இடங்களுக்கு வேலை நடத்துவதில்லை என்கிற குறைபாடுகள் எல்லாம் அமைச்சர் அவர்களுக்கு வந்து கொண்டிருக்கும் என்று நம்புகிறேன். இவ்விதமான குறைகள் கடைசியில் எப்படி வருகிறது, எந்த ரூபத்தில் வருகிறது என்பதைப் பார்த்தால், 'எங்கள் பஞ்சாயத்தை இரண்

25th July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

டாகப் பிரித்துவிடுங்கள், மூன்றாகப் பிரித்துவிடுங்கள்' என்றெல்லாம் கேட்கின்ற நிலைமை எல்லா இடங்களிலும் இருந்து கொண்டிருக்கிறது. இத்தகைய நிலைமை இருப்பதால், இதை மாற்றுகின்ற முறையில், மக்களிடத்தில் திரும்பவும் ஐந்து வருடத்திற்கொரு முறை, போக வேண்டியிருக்கும் என்ற பயம் ஏற்படும். ஆகவே, பொறுப்போடு நடந்து கொள்ளவேண்டும். அதே போன்று தான் அபிவிருத்தித் திட்டங்களிலும், மற்ற வேலைகளிலும் ஈடுபடக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். ஆகவேதான் இது மிக மூக்கியமானது என்று சொல்லுகிறோம். அது மட்டுமல்ல, சாதாரணமாக முனிசிபல் கௌன்ஸிலில் இருக்கின்ற விதிகளை எடுத்துக் கொண்டால், அதிலுள்ள உறுப்பினர்கள் மூன்று முறை தொடர்ந்தாற் போல் கூட்டத்திற்கு வரவில்லை என்றால் அவரது பதவி போய்விடும் என்றிருக்கிறது. ஆனால், பஞ்சாயத்துத் தலைவர்களை எடுத்துக்கொண்டால், அவர்கள் அங்கம் வகிக்கக்கூடிய யூனியன் கௌன்ஸில் கூட்டத்திற்கு ஐந்து வருடங்களுக்குப் போகவில்லை என்றாலும்கூட, அவர் யூனியனோடு ஒத்துழைத்தாலும், ஒத்துழைக்காவிட்டாலும், அவரை ஒன்றும் பெய்ய முடியாது. இதனால்தான் பல இடங்களிலும் பஞ்சாயத்து யூனியன் கூட்டம் சரியாக நடப்பதில்லை. அங்கத்தினர்கள் சரியாக வருவதில்லை. கோரம் இருப்பதில்லை. இந்த நிலைமையை நாம் மாற்றவேண்டும். அதற்கான வழியில், மூன்று கூட்டங்களுக்கு வரவில்லை என்றால் அவரது பதவி போய்விடும் என்றிருந்தால்தான் அவருக்கு ஓரளவுக்குப் பயம் இருக்கும். இதன் மூலம் அவர்கள் யூனியன் கூட்டத்திற்கு வந்து ஒழுங்கான முறையில் வேலை செய்வதற்குப் பரிகாரம் ஏற்பட முடியும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தான் இவர்களையும் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று சமாதானம் சொல்லப்பட்டது. நான் கேட்க விரும்புவது, இப்போது இருக்கின்ற 373 யூனியன்களில் எந்த இடத்திலாவது 10 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் செலவு செய்யாமல் பஞ்சாயத்து சேர்மன் தேர்தல் நடந்ததா என்று கேட்க விரும்புகிறேன், கோட்டூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலைத் தவிர. (குறுக்கீடு) . . . வேண்டுமென்றால் ஒன்றிரண்டு இடங்களில், சரியாக நடந்திருக்கிறது என்று சொல்லலாம். பெரும்பாலும் நடந்த தலைவர் தேர்தலில் எல்லாம், என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். அங்கத்தினர்களை அழைத்துக்கொண்டு போய் வேறிடத்தில் வைப்பதாகவும், இங்கு சொல்லப்பட்டது போல், காஷ்மீரில் கொண்டு போய் வைத்திருந்ததாகவும், இன்னும் இது போன்ற பல சம்பவங்களை நாம் கேள்விப்படுகிறோம். இந்த நிலைமையை மாற்றவேண்டும் என்ற அடிப்படையில் தான் நாம் நேரிடையாக தலைவர் தேர்தல் நடைபெற பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களை முதலாவது நேரிடையாக தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்கிறோம். அதன் பின்னால்தான் தலைவர் தேர்தல் நடைபெற வேண்டும். அதற்கான முறையில்தான் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

சட்டசபை அங்கத்தினர்கள், பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களாக இருப்பது சம்பந்தமாகவும் நான் திருத்தம் கொடுத்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [25th July 1964

திருக்கிறேன். இதில் என்னுடைய கருத்து என்னவென்றால், சட்டசபை அங்கத்தினர்களாக இருக்கின்றவர்கள் பஞ்சாயத்துத் தலைவராக வரக்கூடாது என்பதுதான். சட்டசபை மெம்பர்களுக்கு வேறு எந்தப் பதவியும் கூடாது; இந்த பதவி ஒன்றே போதும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இந்த நிலைமையில் பஞ்சாயத்து யூனியனில் சட்டசபை அங்கத்தினர்களுக்கு வோட்டு உரிமை கிடையாது என்றிருப்பது சரியல்ல. பஞ்சாயத்து யூனியன் போடக்கூடிய பல திட்டங்களுக்கும் சட்டசபை அங்கத்தினர்களுடைய உதவி தேவை. சட்டசபையில் என்ன நடக்கிறது, அரசாங்கத்தின் கருத்து என்ன, இதற்கான நிதி வசதிகள் இவைகளை எல்லாம்பற்றி ஆலோசிப்பதற்கு, மாவட்ட அபிவிருத்தி கௌன்ஸில், பிறகு யூனியன் கௌன்ஸில் இவ்விதம் படிப்படியாக ஒன்றுக்கொன்று இணைப்பு இருக்க வேண்டும். அதில் சட்டசபை அங்கத்தினர்களுக்குப் பொறுப்பும் இருக்கவேண்டும். அந்த வகையில் சட்டசபை அங்கத்தினர்களுக்கு வோட்டு உரிமை இருக்கவேண்டும். சட்டசபை அங்கத்தினர்களுக்கு வேறு எந்த விதமான பதவியும் இருக்கக்கூடாது என்று சொல்லுவதானால் அதை ஒப்புக் கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனால், வோட்டுரிமை இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருப்பது சரியல்ல. . . . "but shall not be entitled to vote therein" என்றிருப்பதை எடுத்துவிடவேண்டும் என்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதற்குப் பின்னால் வருகின்ற பிரவிஸோவையும் எடுத்துவிடவேண்டும் என்றும் கோரியிருக்கிறேன். இதுதான் என்னுடைய திருத்தத்தின் நோக்கம். பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களையும் தலைவர்களையும் நேரிடையாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். சட்டசபை வோட்டர்களின் லிஸ்ட் மூலமாக அப்படி இருந்தால்தான் பஞ்சாயத்து யூனியன் நடவடிக்கைகளில் மக்கள் நேரிடையாகப் பங்கெடுக்கின்றார்கள் என்கின்ற நிலைமை ஏற்படும். இதில் அக்கறையும் செலுத்துவார்கள். அப்போதுதான் பஞ்சாயத்து ராஜ்யமானது வெற்றிகரமாக நடைபெறும். என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொண்டால், நான் முன்னால் சொன்ன கருத்துக்களை எல்லாம் நிறைவேற்ற முடியும். அமைச்சர் அவர்கள் கொடுத்த பதில் எந்தவிதத்திலும் திருப்தி அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

10-30 a.m. SRI C. CHIRANJEEVULU NAIDU: Mr. Speaker, Sir, my amendment to clause 3 relates to the co-option of members to the panchayat union council. In the proviso to the clause, it is stated—

" . . . the panchayat union council may co-opt such number of women or members of the Scheduled Castes or Scheduled Tribes as may be necessary to ensure that the council includes three women and three members of the Scheduled Castes and Scheduled Tribes."

25th July 1964] [Sri C. Chiranjeevulu Naidu]

My amendment seek to restrict the co-option to two women members, two members of the Scheduled Castes or Scheduled Tribes, one co-operator and one social worker. In the other States, we see that in the Community Development Block areas, a co-operator representing the co-operative movement and also a social worker who is very much interested in social work in the villages have been co-opted. Now, in the Madras State, generally a co-operator and a social worker are not in a position to be elected as the chairman of a panchayat union council. If my amendment is accepted, it would give an opportunity for these persons who have got interest in social welfare to be represented in the panchayat union council.

In my second amendment, I have suggested that the word 'may' occurring after the words 'panchayat union council' and before the word 'co-opt' might be substituted by the word 'shall'. The panchayat union council has been given powers to co-opt certain classes of members. According to the proviso as it stands, the panchayat union may or may not co-opt members. But if the word 'shall' is substituted for the word 'may', it would be binding on the panchayat union council to co-opt such members. That is the object of this amendment.

* திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்த மூன்றாவது பிரிவிலே 12-வது பிரிவைத் திருத்தியிருக்கிறார்கள். இதிலே 12-வது பிரிவிலே இரண்டாவது பகுதியாகச் சேர்க்கப்பட்டிருப்பது கொஞ்சம் சந்தேகத்திற்கு இடமாக இருக்கிறது. சில பஞ்சாயத்து யூனியன் ஏரியாக்களிலே ஒரே பஞ்சாயத்து இருப்பதால், அந்த பஞ்சாயத்து அங்கத்தினர்கள் அத்தனை பேர்களும் பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களாக. . . .

MR. SPEAKER: Will there be a panchayat union council for even one panchayat?

SRI M. KALYANASUNDARAM: Yes, there is one.

SRI SAW GANESAN: There are two panchayat union councils, Valparai and Yercaud.

திரு. செ. மாதவன்: அந்த மாதிரி பஞ்சாயத்து யூனியனைக் 'கவர்' செய்ய இரண்டாவது சப்-க்ளாஸைப் போட்டிருக்கிறார்கள். முதல் சப்-க்ளாஸ்தான் எங்களுக்குப் புரியவில்லை—

"Notwithstanding anything contained in sub-section (1)—

(i) subject to such conditions as may be prescribed in this behalf, the Government may, by notification, specify any panchayat union. . . ."

என்று போட்டிருக்கிறார்கள். இரண்டாவது பிரிவு, ஒரு பஞ்சாயத்து இருந்தால், அதற்கு 'அப்ளை' ஆகும். முதலாவது பிரிவு, சர்க்கார் நினைத்தால், அவர்கள் இஷ்டப்பட்டால் எந்த பஞ்சாயத்து யூனியனையாவது எடுத்துக்கொண்டு அதை நோட்டிஃபை செய்து அந்த பஞ்சாயத்தில் இருக்கிற அங்கத்தினர்கள் அத்தனை பேர்களும் பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்கள் என்று

[திரு. செ. மாதவன்] [25th July 1964

சொல்லக் கூடிய முறையில் அதிகாரம் கொடுத்தது போலத் தோன்றுகிறது. சர்க்கார் நினைத்தால் எது வேண்டுமானாலும் செய்யலாம், எந்தப் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலையாவது எடுத்துக்கொண்டு எல்லாப் பஞ்சாயத்து அங்கத்தினர்களையும் யூனியன் அங்கத்தினர்களாக ஆக்க அதிகாரம் எடுத்துக்கொண்டிருப்பது தவறு என்று நினைக்கிறேன். அந்தத் தவறைத் திருத்தத்தான் இந்தத் திருத்தம் கொடுத்திருக்கிறேன். முதல் பிரிவை எடுத்துவிட்டு இரண்டாவது பிரிவு ஒரு பஞ்சாயத்து அல்லது ஒரு டவுன்ஷிப் கமிட்டி இருக்கிற இடத்திற்கு அந்தப் பிரிவு போதும் என்று என்னுடைய திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் கடைசியாகச் சொன்ன பஞ்சாயத்துக்கள், கன்னியாகுமரி மாவட்டத்திலே குறைந்த எண்ணிக்கை உள்ள பஞ்சாயத்துக்களைப் பற்றியது. . .

*** கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இதைப் பற்றி நான் விளக்குகிறேன். கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டு வந்த திருத்தங்கள் எல்லாவற்றையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தெளிவாகத் தனது பதில் உரையில் இது குறித்த அமைச்சர் சொல்லிவிட்டார்கள். இப்போது இருக்கின்ற அடிப்படையிலேயே, பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் மெம்பர்களாக அமைய வேண்டும் என்றும், அவர்கள் பஞ்சாயத்துத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் சர்க்கார் நமது கொள்கையாக முடிவு செய்திருக்கிறது. அதற்கான காரணங்களையெல்லாம் விளக்கி, ஒரு முறை அல்ல, பல முறைகள், சொல்லி விட்டோம். திருத்தம் கொண்டு வந்த காரணத்தினால் அதை இப்போது வேண்டுமானாலும் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். இந்த முறையின் மூலமாகத்தான் ஒரு செவ்வையான பஞ்சாயத்து யூனியன் முறை நடத்த முடியும் என்பது சர்க்காருடைய திடமான அபிப்பிராயம். நேரடியாக பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் பல சிக்கல்கள் வருவதற்கு இடங்கள் இருக்கின்றன. அதில் முக்கியமாகச் சொல்லப்போனால், பஞ்சாயத்து யூனியன் தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுத்து விட்டால், பிறகு அவரை எப்படி விலக்குவது என்ற பிரச்னையெல்லாம் பேசப்பட்டிருக்கிறது. அப்படியாவது பஞ்சாயத்து யூனியன் தலைவர் எலெக்ஷன் சுலபமாக, செலவில்லாமல் இருக்குமா என்றால், சட்ட சபை அங்கத்தினர்கள் என்ற முறையில் நமக்குத் தெரியும், அசெம்பிளி எலெக்ஷனுக்கு என்ன ஆகிறதோ அதில் பாதி செலவு ஆகும். ஏனென்றால் இரண்டு பஞ்சாயத்துக்கள் ஒரு அசெம்பிளி தொகுதியாக வரப்போகின்றன. அசெம்பிளி எலெக்ஷனுக்கு ஆகிற செலவில் பாதி ஆகும். ஆகையால் செலவு குறைந்து விடும் என்று சொல்லுவது சரியல்ல. பணம் இல்லாது எலெக்ஷன் நடந்துவிடும் என்பது எந்த அளவுக்கு உண்மை

25th July 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். இது எல்லாவற்றையும் பரிசீலனை செய்து இப்போது இருக்கிற முறைதான் சரி என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது.

இரண்டாவது, அவர்கள் அசெம்பிளி மெம்பர்சுக்கு வோட்டு கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அசெம்பிளி மெம்பர்ஸ் அங்கே இருப்பது, கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னது போல, உதவி, விளக்கம் முதலியவை கொடுக்கத்தான். நிர்வாகப் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களுக்கும், பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கும்தான் இருக்கும். ஆகையால், சர்க்கார் இவர்களுக்கு வோட்டு அளிக்க வேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறது.

அடுத்தாற்போல, கனம் அங்கத்தினர் திரு. சிரஞ்சீவுலு அவர்கள் பேசிய போது கோஆப்பரேட்டார் ஒருவரையும், சோஷல் வொர்க்கர் ஒருவரையும் சேர்க்கவேண்டும் என்று சொன்னார்கள். இப்போது கொடுக்கும் ரெப்ரசெண்டேஷன், ஷெட்யூல்ட் காஸ்ட் ரெப்ரசெண்ட்டேஷன் இருக்கவேண்டும், விமன் ரெப்ரசெண்டேஷன் இருக்க வேண்டும் என்று கொடுக்கிறோமே தவிர, ஃபங்க்ஷனல் ரெப்ரசெண்ட்டேஷன் கொடுக்கவில்லை. ஃபங்க்ஷனல் ரெப்ரசெண்ட்டேஷன் கொடுக்க வேண்டுமென்று ஏற்றுக்கொள்ளவில்லை. கோஆப்பரேட்டர் என்று சொன்னால், லாயருக்குக் கொடுக்கலாம், டாக்டருக்குக் கொடுக்கலாம், என்ஜினீயருக்குக் கொடுக்கலாம் என்ற பலவித பிரச்னைகள் வந்து விடும். ஆகையால் ஃபங்க்ஷனல் ரெப்ரஸெண்ட்டேஷன் கொடுப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்தாற்போல, 'may' என்று போட்டிருப்பதை மாற்றி 'shall' என்று போடவேண்டுமென்று சொன்னார்கள். சாதாரணமாக சட்டம் இயற்றும்போது டிராஃப்ட்டிங்கிலே "The union shall elect three members" என்று டெஃபனெட் நம்பர் இருந்தால் "shall" என்று போடுவோம். "But the union has to elect such members as are necessary" என்று குறிக்கும் போது "may elect such members as are necessary" என்ற டிராஃப்ட்டிங் செய்வோம். இப்போது இருக்கிற முறையில் என்ன என்றால், மூன்று பெண்களில் ஒருவர் கூட தேர்ந்தெடுக்கப்படாமல் இருந்தால் மூன்று பேர்கள் கோ ஆப்ட் செய்யப்பட வேண்டும். ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் இரண்டு பேர்கள் கோஆப்ட் செய்யப்பட வெண்டும். அல்லது இரண்டு பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் ஒருவர் கோ ஆப்ட் செய்யப்பட வேண்டும். மூன்று பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் ஒருவரைக்கூட கோஆப்ட் செய்ய வேண்டியதில்லை. ஆகையால் 'ஷல்' என்று போட்டால் சட்டக் கஷ்டம் வந்து விடும். ஆதலால்தான் ஒழுங்காகப் போட்டிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[25th July 1964

Clause 7.

MR. SPEAKER : The question is—

" That Clause 7 do stand part of the Bill ".

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, I move the following amendment—

For sub-clause (i) substitute the following sub-clause—

' (i) in clause (*c*), for the words " the Panchayat or the Panchayat Union Council ", the words " the Panchayat or the Panchayat Union Council as the case may be " shall be substituted '.

The amendment was duly seconded.

SRI C. CHIRANJEEVULU NAIDU : I am proposing this amendment for the following reasons. As it is there is too much of restriction for a President of a Panchayat to enter into a contract or execute certain works in another Panchayat. My plea is that a member of the Panchayat Union Council should be enable to do contract work in some other Panchayat Union Council. Suppose a President of a Panchayat is elected to a Panchayat Union Council. That should not disqualify him from doing contract work in another Panchayat Union Council. Even for members of legislature there is restriction in doing contract work only in the particular State to whose legislature they had been elected. But there is no restriction in their doing Central Government contract works in another State. So a particular President of a Panchayat elected to a Panchayat Union Council need not be disqualified from doing the work in another Panchayat Union Council. So I request that my amendment may please be accepted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, it has been brought to the notice or attention of Government that mutual arrangements are made between one Panchayat Union President and another Panchayat Union President and the one gives contracts to the other. There is thus possibility of abuse. I am aware this is rather a harsh rule. But there is possibility of abuse. In order to prevent such sort of abuse, we have put this rule.

SRI C. CHIRANJEEVULU NAIDU : At least it may be restricted to his district. He may be empowered to do contract work in another district.

MR. SPEAKER : If a person does contract work outside his district, does the hon. Member think he will be really a President?

SRI M. KALYANASUNDARAM : I do not want Panchayat Presidents to become professional contractors.

திரு. கரு. சீமைச்சாமி : பஞ்சாயத்து யூனியன்கள் எந்த வேலை எடுத்தாலும், அதை டெண்டர் மூலம் விட்டு, யார் குறைந்த தொகைக்கு எடுக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் அந்த வேலை

25th July 1964] [திரு. கரு. சீமைச்சாமி]

தரப்படுகிறது. அந்தப் பஞ்சாயத்து யூனியன் சேர்மன் இந்தப் பஞ்சாயத்து யூனியன் சேர்மனிடம் பேசி வேலை நடக்கிறது என்று சொல்வது சரியல்ல.

கனம் சபாநாயகர் : பேசிச் செய்யலாம். 'காண்ட்ராக்ட்' எடுக்கக்கூடாது. அப்பொழுதுகூட வேறு யார் பேரிலாகிலும் போட்டு செய்வார்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : பேசிச் செய்வது என்று சொல்லுவது சரியல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

The amendment was put and lost.

Clause 7 was put and carried.

Clause 8.

MR. SPEAKER : The question is—

That clause 8 do stand part of the Bill.'

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, I move—

For the existing clause substitute the following :—

" 8. *Amendment of section* 26, *Madras Act XXXV of* 1958.—In clause (d) of section 26 of the principal Act, for the words " the Panchayat or Panchayat Union Council ", the words " the Panchayat or the Panchayat Union Council as the case may be " shall be substituted.

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, this is the same amendment that I have moved.....

THE HON. SRI R. VENKATARAMAN : It is out of order because a similar amendment to clause 7 has already been negatived.

MR. SPEAKER : So, it is out of order.

Clause 8 was put and carried.

Clauses 9 and 10 were put and carried.

Clause 11.

MR. SPEAKER : The question is—

' That clause 11 do stand part of the Bill.'

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

' In clause 11, in new section 32-A, after the words " the president ", insert the word " vice-president ".'

There has been a typographical error and it has been corrected. The amendment was put and carried.

Clause 11 as amended was put and carried.

[25th July 1964

Clause 12.

MR. SPEAKER: The question is—

'That clause 12 do stand part of the Bill.'

SRI V. KRISHNAMOORTHY: Sir, I move—

For the existing clause 12, substitute the following:

"12. *Amendment of section* 36, *Madras Act XXXV of* 1958. —To sub-section (2) of section 36 of the principal Act, the following shall be substituted, namely:—

"(2) The Chairman and the Vice-Chairman of the Panchayat Union Council shall be elected by all the members of the constituent Panchayats and by the co-opted members in accordance with such procedure as may be prescribed. If at an election held under this sub-section, no chairman or vice-chairman is elected, a fresh election shall be held for electing the chairman or vice-chairman as the case may be:

Provided that in the case of a panchayat union council, where all the members of the council are either members of a single panchayat or members of a single township committee—

(i) the president and vice-president of the panchayat shall respectively be the chairman and vice-chairman of the panchayat union council;

(ii) the chairman of the township committee shall be the chairman of the panchayat union council and a member of the township committee chosen in the prescribed manner shall be the vice-chairman of the panchayat union council."

The amendment was duly seconded.

SRI S. MADHAVAN: Sir, I move—

For the existing clause 12, substitute the following:—

"12. *Amendment of section* 36, *Madras Act XXXV of* 1958.—Substitute the following for sub-sections (1) and (2) in Section 36 of the Principal Act:—

'36. *Chairman and Vice-Chairman of Panchayat Union Councils.*—(1) There shall be a Chairman and a Vice-Chairman for every Panchayat Union Council.

(2) The Chairman and the Vice-Chairman shall be elected by the persons whose names appear in the electoral roll for the Panchayat Union concerned in accordance with such procedure as may be prescribed:

Provided that in the case of a Panchayat Union Council referred to in clause (ii) of Sub-section (2) of Section 12, where all the members of the Council are either members of a single Panchayat or members of a single township committee.

(i) the President and Vice-President of the Panchayat shall respectively be the Chairman and Vice-Chairman of the Panchayat Union Council;

25th July 1964] [Sri S. Madhavan]

(ii) the chairman of the township committee shall be the Chairman of the Panchayat Union Council and a member of the township committee chosen in the prescribed manner shall be the Vice-Chairman of the Panchayat Union Council'."

The amendment was duly seconded.

SRI M. KALYANASUNDARAM: Sir, I move—

'Substitute the following for sub-section (2) of section 36 of the Principal Act:—

"(i) The Chairman shall be elected by the people in the Panchayat Union area concerned on the basis of the electoral rolls of the Assembly Constituency for that area;

(ii) The Vice-Chairman shall be elected by the Panchayat Union Council from among its members."

SRI A. K. SUBBIAH: Sir, I second the amendment.

MR. SPEAKER: The clause and the amendments are before the House for discussion.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுதிருக்கிற முறைப் பிரகாரம் பஞ்சாயத்துக்களின் தலைவர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். எல்லாப் பஞ்சாயத்துக்களின் மெம்பர்களும் சேர்ந்து பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இந்தத் திருத்தத்தினால் ஏற்படும் நன்மைகளை மட்டும் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். இப்பொழுதிருக்கிற முறையில் லஞ்சம் தாண்டவமாடுகிறது என்று எல்லோரும் எடுத்துரைத்தார்கள். அரசாங்கத் தரப்பிலும் கூட பூரணமாக இது மறுக்கப்படவில்லை. கடந்த பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் தேர்தல்கள் நடந்த பொழுது பஞ்சாயத்துக்களின் தலைவர்கள் காஷ்மீருக்கும், கல்கத்தாவுக்கும், பங்களூருக்கும் எடுத்துச் செல்லப்பட்டார்கள். ஒவ்வொரு தலைவருக்கும் ரூ. 3,000 அல்லது 4,000 என்று பேரம் பேசப்படுகிறது. இதன் மூலமாக ஜனநாயகம் படுகுழியில் தள்ளப்படுகிறது. இது தவிர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் 30-லிருந்து 50 பேர் வரை மெம்பர்களாக இருக்கிறார்கள். அவரிகள் பஞ்சாயத்துக்களின் பிரசிடெண்டுகளாக இருக்கிறார்கள். அவர்களில் யார் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள், யார் எதிர்ப்பார்கள் என்று தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. எதிர்த்து வோட்டுப் போட்ட பிரசிடெண்டுகள் பழி வாங்கப்படுகிறார்கள். அவர்களுடைய கிராமங்களுக்கு நன்மைகள் செய்யப்படுவதில்லை. கடந்த பஞ்சாயத்து யூனியன்களின் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தவர்களுக்கும், எதிர்த்தரப்பினருக்கும் பல தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன. சேலத்திலே என்று நினைக்கிறேன், கந்தசாமி கவுண்டர் என்பவர் தேர்தலின் காரணமாக கொல்லப்பட்டிருக்கிறார். இது முறையா என்று

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [25th July 1964

நான் கேட்கிறேன். இந்த நிலைமை இருக்குமானால் நாட்டில் ஒழுங்கும், கட்டுப்பாடும் நிலவ முடியுமா? 32 பஞ்சாயத்து பிரசிடெண்டுகள் இருக்கிறார்கள் என்றால், 16 அல்லது 20 பேர் நம்முடைய பக்கத்திற்கு வந்தால் போதும் என்று நினைத்து, மக்களுக்காக உழைக்காதவர்கள் எல்லாம், பஞ்சாயத்து யூனியன் தலைவராக வந்தால், காண்டிராக்ட் மூலம் பணம் சம்பாதிக்கலாம் என்று நினைத்து, பஞ்சாயத்து யூனியன் தலைவராக வருகிறார்கள். பல பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு ரூ. 2,000 அல்லது 3,000 என்று கொடுத்து, அவர்களைத் தூக்கிக் கொண்டு போகும் நிலைமை இருக்கிறது. சேர்மனை வந்த பிறகும் பல தகறுறுகள் எற்படுகின்றன. நேற்று இங்கே பேசும்பொழுது, திரு. எம். எஸ். செல்வராஜன் அவர்கள், என்னுடைய திருத்தத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், எல்லா பஞ்சாயத்து மெம்பர்களும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலர்களாக வரவேண்டுமென்றால், அது சிரமமாக இருக்குமென்றார். என்னுடைய திருத்தத்தின் படி, பஞ்சாயத்து மெம்பர்களுக்கு பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வரையில் தான் பொறுப்பு இருக்கிறது. அவர்கள் பஞ்சாயத்து யூனியன் மெம்பர்களாக இருக்க வேண்டியதில்லை. பஞ்சாயத்து பிரசிடெண்டுகள் மட்டும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் மெம்பர்களாக இருந்தால் போதும். ஜனநாயக வாதியான ஒருவர் யூனியன் தலைவராக வந்துவிட்டால், அவர் எல்லா கிராமங்களின் நலனையும் மனதில் கொண்டு செயலாற்ற முடியும். அப்படி அந்தத் தலைவர் சரியாக் நடந்து கொள்ளவில்லை என்றால், எல்லா பஞ்சாயத்து பிரசிடெண்டுகளும் சேர்ந்து நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரலாம். இப்பொழுது எம்.எல்.ஏ.க்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் மந்திரிகளை நீக்குவதற்கு எல்லா மக்களும் வரவேண்டியதில்லை. சட்டசபையிலே ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து அவர்களை நீக்கலாம். நல்லவர்கள் பஞ்சாயத்து யூனியனின் தலைவர்களாக வரவேண்டும் என்பது தான் என்னுடைய திருத்தத்தின் நோக்கம். இப்பொழுது ஒரு யூனியனில் 40 பஞ்சாயத்துக்கள் இருந்தால், மொத்தம் 400 அல்லது 500 பேர் இருப்பார்கள். இந்த 400 பேர்களை வைத்துக்கொண்டு, ஒரு இடத்தில் பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுக்க முடியாதா? இப்பொழுது பிரசிடெண்ட் தேர்தலுக்கே போட்டி இருக்கிறது. பிரசிடெண்ட் ஆக வந்தால், ரூ. 3,000 அல்லது ரூ. 4,000 வாங்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளும் நிலைமை இருக்கிறது. அதிகாரிகள் வாங்கினால் லஞ்சம் என்று சொல்லும் பொழுது, இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பணம் வாங்குகிறார்களே, இதை ஒழிக்க வேண்டுமென்பதற்காகத் தான் என்னுடைய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். என்னுடைய நண்பர் திரு. மாதவன் அவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர், அந்த பஞ்சாயத்து யூனியன் ஏரியாவின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற திருத்தத்தைக் கொடுத்திருக்

25th July 1964] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

கிறார்கள். திரு. கலியாணசுந்தரமும் அதே மாதிரியான ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். எதிர்த் தரப்பிலே இரண்டு விதமான திருத்தங்கள் கொண்டு வரப்பட்டாலும், கோருவது ஒரே பழம் தான், இரண்டு கல்லுக்கும் ஒரே பழம் விழவேண்டுமென்பது தான் நோக்கம்.

MR. SPEAKER: In that case, the hon. Member can withdraw his amendment and support the other amendment.

SRI V. KRISHNAMOORTHY: If the Hon. Minister accepts this amendment, then I will ask other hon. Members to withdraw their amendments. ஒரு பஞ்சாயத்துத் தலைவர் ரூ. 2,000, ரூ. 3,000 என்று வாங்குவது நியாயமா?

MR. SPEAKER: The hon. Member has repeated this point about ten times. I am counting it. Now, the hon. Member is repeating it for the 11th or 12th time.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஜனநாயக சோஷலிசத்தைப் பற்றிப் பேசுகிறோம்.

கனம் சபாநாயகர்: ஜனநாயக சோஷலிசம் என்றால், லஞ்சம் வாங்குவது என்பதல்ல.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: மக்களுக்கு நன்மை செய்ய முடிவதில்லை. இப்பொழுதுள்ள முறைப்படி பிரசிடெண்டுகள் ரூ. 3,000, ரூ. 4,000 என்று வாங்கிக் கொள்வதை, ஜனநாயக சோஷலிசக் கொள்கைப்படி எல்லோருக்கும் பிரித்துக் கொடுங்கள் என்று கூட நான் சொல்லுவேன். (சிரிப்பு.) ஆகவே, என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

* கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கொண்டு வந்திருக்கிற திருத்தத்திலே ஒரு சட்டச் சிக்கல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் என்பது ஒரு 'கார்ப்பொரேட் பாடி'. பஞ்சாயத்துக்கள் மற்றொரு 'கார்ப்பொரேட் பாடி' பஞ்சாயத்து மெம்பர்கள் ஒரு கார்ப்பொரேட் பாடியைச் சேர்ந்தவர்கள், அவர்கள் இன்னொரு 'கார்ப்பாரேட் பாடி'யின் தலைவரைத் தேர்ந்தெடுப்பது உகந்ததல்ல. இந்த கார்ப்பொரேட் பாடியில் என்ன செய்கிறோம் என்றால், பஞ்சாயத்து அங்கத்தினர்கள் பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். பஞ்சாயத்து மெம்பர்கள் எல்லோரும், பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்கள் என்று சொன்னால்தான், தேர்ந்தெடுக்கும் உரிமை கிடைக்கும். பஞ்சாயத்தில் மெம்பராக இருக்கிறோம்,

[திரு. ஆர். வெங்காட்டராமன்] [25th July 1964

அதனால் பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறோம் என்று சொன்னால், சட்டப்படி சரியாக இருக்காது. ஆகவே இது பொருத்தமில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மற்றபடி ஆள் தூக்குவதைப் பற்றியெல்லாம் எல்லோரும் பேசினார்கள். ஆகவே அதைப் பற்றி நானும் பேச விரும்பவில்லை. சர்க்கார் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவிக்கிறேன்.

11-00 a.m. The amendment of Sri V. Krishnamoorthy was put and lost.

MR. SPEAKER: The amendment of Sri S. Madhavan and Sri M. Kalyanasundaram relating to the election of Chairman is one and the same. How shall we take it ?

THE HON. SRI R. VENKATARAMAN: We shall take both together.

*திரு. செ, மாதவன்: தலைவர் அவர்களே, நேரிடைத் தேர்தல் மறைமுக தேர்தல் என்பது கொள்கைப் பிரச்சினை. ஆளும் கட்சி அரசாங்கம் எடுத்த முடிவை வலியுறுத்துவோம் என்று சொல்வதை ஏற்றுக் கொள்ளுகிறேன், கொள்கை அளவில். ஆனால் எங்களுடைய குற்றச்சாட்டு, 1958-ம் ஆண்டு சட்டத்தைக் கொண்டுவந்தபோது, அது இந்த மாமன்றத்திலே விவாதிக்கப்பட்டது. சட்டத்தில் ஓட்டைகள் இருந்தால், அதைச் சரிசெய்ய வாய்ப்பு, சந்தர்ப்பம் ஏற்பட்டால், அப்பொழுது அதை மறுபடியும் பரிசீலிப்போம், அதற்கு ஒரு கமிட்டியைப் போடுவோம், எதிர்க்கட்சிகளை அழைத்து விவாதித்து முடிவுக்கு வருவோம், அதன்படி சட்டத்தைத் திருத்துவோம் என்று சர்க்கார் கட்சித் தலைவர் உறுதிமொழி கொடுத்தார்கள். அப்படிப்பட்ட உறுதியை 1958-ம் ஆண்டில் தந்தார்கள். அந்த முறையில் இந்த மன்றத்திலேயே பரிசீலிக்கிறோம் என்று சொன்னார்கள். எப்படிப் பரிசீலித்தார்கள், எதிர்க் கட்சிகளைக் கலந்து ஆலோசித்தார்களா என்பதை விளக்க வேண்டும். எதிர்க் கட்சிகளைக் கலந்து ஆலோசிக்கவில்லை, 1958-ல் கொடுத்த உறுதியைப் பின்பற்றவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

ஏற்கனவே கனம் திரு. காமராஜர் முதல் அமைச்சராக இருந்த போது அந்தக் கொள்கை இருந்தது. இப்பொழுது இருக்கும் புதிய அமைச்சரவையில் யாரையும் கலந்தாலோசிக்க வேண்டியதில்லை என்று இருக்குமேயானால், அது தீது, ஜனநாயகத்திற்கு முரண்பாடானது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கனம் தொழில் அமைச்சரவர்கள் சொன்னார்கள், செலவு குறையும் என்று. சட்ட மன்றத் தேர்தலிலே கூட லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவாகின்றன. வோட்டர்களுக்கு லஞ்சம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டாலும், அது எப்படி முடியும்? ஆனால் இங்கே இருப்பதெல்லாம் 32 பேர் அல்லது 36 பேர்கள் தான். அதிலே மெஜாரிட்டியை விலைக்கு வாங்கினாலும் போதும். ஆகவே அதற்கும் இதற்கும் உள்ள

25th July 1964] [திரு. செ. மாதவன்]

வேறுபாட்டை உணரவேண்டும். 1958-லிருந்து ஆறு ஆண்டுகள் பார்த்துவிட்டோம். சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவர்களே ஆலோசனை கூறியிருக்கிறார்கள். ஒன்று நேரிடைத் தேர்தலுக்கு ஒத்துக் கொள்ள வேண்டும். அல்லது இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், மீண்டும் ஆலோசிப்போம், இந்தப் பிரச்சினையில் இப்பொழுது ஒரு முடிவுக்கு வர மாட்டோம் என்றாவது அரசாங்கம் தெரிவிக்க வேண்டும். அன்றைக்கும் இன்றைக்கும் இருக்கும் மாறுதல்களைக் காண்கிறோம். நேரிடைத் தேர்தல் காங்கிரஸ் ஒப்புக்கொண்ட ஒன்று. 1950-ம் ஆண்டு காங்கிரஸ் கட்சி அதை ஒப்புக்கொண்டது. பிறகு 1958-ல், பின்னால் ஆலோசிப்போம்' என்று சொல்லிற்று. இன்றைக்கு 1964-ல் அதை விட்டு விடுகிறது. ஆகவே, ஏற்கனவே ஏற்றுக்கொண்ட கொள்கையை மீண்டும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று எதிர்க் கட்சியின் சார்பில் நான் வலியுறுத்திக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

கனம் சபாநாயகர்: வலியுறுத்திக் கொண்டு, அமெண்ட்மெண்டை 'ப்ரெஸ்' பண்ணுகிறீர்களா இல்லையா ?

திரு. செ. மாதவன்: அதையும் 'ப்ரெஸ்' செய்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், என்னுடைய திருத்தமும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தலைவரை நேரிடையாக மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதுதான். உதவித் தலைவரை வேண்டுமானால், கவுன்சிலர்கள் தேர்ந்தெடுக்கட்டும் என்றுதான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். 1958-ம் வருஷத்திலே சட்டம் இயற்றப்பட்டபோது, அதற்கு முன்னதாகவே, மசோதாவின் கொள்கைகள் என்ன என்னவாக இருக்கவேண்டும் என்று இந்த சபையில் உள்ள தலைவர்களைக் கொண்ட கமிட்டியை அமைத்து நீண்ட பரிசீலனைக்குப் பிறகு சட்டம் தயாரிக்கப்பட்டது. அப்பொழுதும் மசோதாவின் முழுப் பொறுப்பையும் எடுத்துக் கொண்டு, பங்கு எடுத்துக் கொண்ட அன்றைய கனம் நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அந்தக் கொள்கையை மறுக்கவில்லை. தாற்காலிகமாக பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களே தேர்ந்தெடுக்கட்டும், பிறகு அனுபவத்தை ஒட்டி என்ன மாறுபாடு செய்யவேண்டும் என்று யோசிக்கலாம் என்றுதான் சொல்லியிருந்தார்கள். நேரிடையாக பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுப்பதுதான் சிறந்த கொள்கை என்பதை யாரும் மறுக்கவில்லை. இப்பொழுது அமைச்சர் பதிலில் கூட வாதங்கள் இருந்த தன்மை, ஏதோ அரசாங்கம் முடிவு எடுத்து விட்டது, அதற்கான ஆதாரங்கள் கண்டு பிடிக்க வேண்டும் என்ற நிலையில் அமைந்திருந்ததே அல்லாமல், அது நம்பிக்கை உள்ள கொள்கை, நியாயமான கொள்கை, ஆகவே அதை ஆதரித்துப் பேசுகிற மாதிரி வாதங்கள், கருத்துக்கள் வரவில்லை என்பதைப் பார்க்கிறோம் . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் திரு. கலியாணசுந்தரம் 'ஸைகாலஜி' படித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இல்லை. விவாதத்தில் இருந்த

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [25th July 1964

பலஹீனத்தை எடுத்துக் காட்டினேன். நிர்வாகத்தில் பல சிக்கல்கள் ஏற்பட்டன என்று எடுத்துக் கூறினார்கள். நேரிடையாகத் தேர்ந்தெடுத்த தலைவர்களைப் பஞ்சாயத்து அங்கத்தினர்களே மதிக்கவில்லை என்று கூறினார்கள். பஞ்சாயத்துத் தலைவர்களை ஜனங்களே தேர்ந்தெடுக்கும்போது நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு இடம் இல்லை. ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரைப் பதவியை விட்டு அப்புறப்படுத்த மன்றத்திற்கு அதிகாரம் இல்லை. அந்த அதிகாரம் இன்ஸ்பெக்டருக்குத்தான் கொடுக்கப்பட்டிருந்தது. அதுவும் அவர் நடவடிக்கை எடுப்பது, கட்சிப் பிரதி கட்சிக்காக அல்ல. ஏதாவது ஒழுங்கீனமான காரியம் செய்தால், அவருக்கு 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுத்து, தகுதியற்றவர்களாக இருந்தால், அவரை அகற்ற வாய்ப்பு இருந்தது. இதையெல்லாம் பார்த்துத்தான் பஞ்சாயத்துத் தலைவர்களே, பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அங்கத்தினர்களாக இருக்கலாம் என்று அரசாங்கம் முடிவு எடுத்தது. அப்பொழுதும் நாங்கள் ஒப்புக் கொள்ளவில்லை. அப்பொழுதும் திருத்தங்கள் கொடுத்து விவாதித்திருக்கிறோம். திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அப்பொழுதும் கொள்கை அளவில் நியாயமானது என்று அதை ஒத்துக் கொள்ளவில்லை. நேரிடைத் தேர்தல் இருந்தால் தான் சிக்கல் வராது, அவர்கள் உறுதியாக வேலை செய்ய பாதுகாப்பாக அமையும் என்று சொன்னோம். ஆனால் இடைக்கால ஏற்பாட்டால் ஆறு மாதத்திற்குள்ளேயே நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரக்கூடிய நிலைமை ஏற்பட்டது. தலைவர் நிர்வாகத்தில் ஏதோ கோளாறு காரணமாக அங்கத்தினர்கள் பயமுறுத்தும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இவருக்காக ஓட்டுச் செய்தவர்களே, எதிராக நடக்கும் நிலைமை ஏற்படுகிறது. அவர்கள் உடன்பாட்டில் என்ன முடிவு ஏற்பட்டதோ என்னவோ, ஏழு பேரிடம் கையெழுத்து வாங்க வேண்டியது. பிறகு பல கையெழுத்துக்கள் வந்துசேரும், அதைக் கண்டு பஞ்சாயத்து யூனியன் சேர்மன் பயந்து போய் ஏதாவது ஏற்பாடு செய்தாக வேண்டும். அந்த நிலைமை இருந்தால் பஞ்சாயத்து நிர்வாகம் உருப்படுமா? பழைய ஜில்லா போர்டு மாதிரியே வேறு. அதற்குப் பல தொகுதிகள் இருந்தன. நேரிடைத் தேர்தல் இருந்தது. அதையும் இதையும் ஒப்பிட்டுச் சொல்லக்கூடாது.

கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் திருத்தத்திற்குப் பதில் சொல்லும்போது அவை இரண்டும் வெவ்வேறு 'கார்ப்பொரேட் பாடி'-கள், ஒன்றை இன்னொன்று தேர்ந்து எடுக்கக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது நமது சட்டசபை அங்கத்தினர்கள் ஜனாதிபதியைத் தேர்ந்து எடுக்கிறார்கள். இரண்டும் வெவ்வேறு பாடிகள் தான். அதனால் அந்த முறை கெட்டதாக ஆகி விடும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்லும் முறை சிறந்தது என்று நான் சொல்லவில்லை. ஆனால் அதை ஒரு "காம்ப்ரமைஸாக" ஏற்றுக் கொள்ளலாம். ஜனங்களே

25th July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

தேர்ந்து எடுக்க வேண்டும் என்பது தான் சிறப்பானது. என்னுடைய திருத்தத்தை நான் வற்புறுத்துகிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களைப்பற்றி எங்களுக்கு அதிகம் தெரியாவிட்டாலுங்கூட.....

கனம் சபாநாயகர்: எங்களுக்கு என்றால் யாருக்கு?

திருமதி டி. என் அனந்தநாயகி: 'எங்களுக்கு' என்றால் நகரப் பிரதிநிதிகளைக் குறிப்பிடுகிறேன்.

பஞ்சாயத்துக்கள் ஒழுங்காக இயங்கினால் உண்மையிலேயே எந்த எந்த முன்னேற்றங்கள் நாட்டில் நடக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோமோ, அவற்றையெல்லாம் ஏற்படுத்துவதற்கான சூழ்நிலை இருக்கும் என்பதை எல்லாக் கனம் அங்கத்தினர்களும் ஏற்றுக்கொள்வார்கள். 1958-ம் ஆண்டிலிருந்து 1964-ம் ஆண்டு வரை இந்தச் சட்டத்தை அமுல் நடத்தி ஏதாவது சிக்கல் இருந்தால் திருத்திக்கொள்ளலாம் என்று அரசாங்கம் சொன்னது நல்ல எண்ணத்தின் காரணமாகத்தான். அதை இன்றைக்கும் அரசாங்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. காரணம், மக்களின் எண்ணத்திற்கு எதிராக எந்த நாளும் இந்த அரசாங்கம் செயல்படாது. அந்த முறையில் பார்க்கும்போது, இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் சிந்தித்துப் பார்த்து திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நகரப் பிரதிநிதி என்ற முறையில் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏனென்றால் திருத்தங்கள் கொடுத்தவர்களின் மத்தியிலே கூட ஒத்த கருத்து இல்லை. 'நேரடித் தேர்தல் தேவை' என்று ஒரு சிலர் சொல்கிறார்கள். 'பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்கள் அத்தனை பேரும் சேர்ந்து தலைவரைத் தேந்தெடுக்க வேண்டும்' என்று மற்றும் சிலர் சொல்கிறார்கள். இப்பொழுதிருக்கும் முறைப்படி, பஞ்சாயத்து தலைவர்கள்தான் பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இப்பொழுதிருக்கும் முறையைக் காட்டிலும் எந்த முறையைக் கையாண்டால் சிறப்பானதாக இருக்கும் என்று சிந்தித்துப் பார்ப்பதற்கு அரசாங்கம் இன்னும் சற்று காலத்தை எடுத்துக்கொண்டு, இனிமேல் திருத்தம் செய்தால், அதை மீண்டும் மீண்டும் திருத்தவேண்டும் என்கிற சூழ்நிலை இல்லாமல் ஆராய்ந்து பார்த்துத் திருத்தினால்தான் நல்லதாக இருக்குமே தவிர, அடிக்கடி திருத்துவது நல்லதாக இருக்க முடியாது. நான்காண்டுகளுக்கொரு முறை 'சட்டத்தைத் திருத்துங்கள், அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன', என்று சொல்லி, சட்டத்தை அடிக்கடி திருத்திக்கொண்டிருந்தாலும் சட்டத்தினுடைய சாராம்சமே போய்விடும் என்ற காரணத்தால், அரசாங்கம் இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏனென்றால், மாநகராட்சிக் கழகத்தில் கூட மேயருக்கு நேரடித் தேர்தல் இல்லை. கவுன்சிலர்கள் தான் மேயரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அதனால் பல தீமைகள் ஏற்பட்டுவிட்டதாகச் சொல்லவில்லை. பல கனம் அங்கத்தினர்கள் சொன்ன மாதிரி, 32 பேர்களில் 16 பேர்களுக்கு எத்தனை ஆயிரம் தான் கொடுத்துவிட முடியும்? இந்த நிலைமை

எந்தக் காலத்திலும் இருக்கும். மக்களின் மனப்பான்மை மாறினால் தான் இந்த நிலைமைகள் மாறுமே தவிர, சட்டங்களைப் போடுவதால் மட்டும் மக்களுடைய சிந்தனையை மாற்றிவிட முடியாது. பஞ்சாயத்து யூனியனுக்கு நேரடித் தேர்தல் வைத்தாலும் இதே செலவு நடக்கும். கனம் அமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரி ஒரு எம்.எல்.ஏ. தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதற்கு ஆகும் செலவில் பாதிச் செலவாவது நேரடித் தேர்தலுக்கு ஆகும். எம்.எல்.ஏ. ஆக வருவதற்குச் செலவு ஆகிறது என்றால், லட்சம் வக்காளர்களையும் க்யூ வரிசையில் நிறுத்தி ஒரு ரூபாய் கொடுப்பது என்பது அல்ல. லட்சம் பேர்களுக்குப் பிரதிநிதியாக இருக்கும் ஒருவர் லட்சம் பேர்களையும் சென்று பார்ப்பதற்கும், 'நான் தான் அபேட்சகராக நிற்கிறேன்' என்று விளம்பரப்படுத்திக்கொள்வதற்கும், சுவரொட்டிகள் அச்சிடுவதற்கும், காரில் பேட்ரோலைப் போட்டுக் கொண்டு வலம் வந்து ஒருமுறை வோட்டர்களைப் பார்த்து விட்டோம் என்று சொல்வதற்கும் வேண்டிய செலவே அதிகமாக இருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் ஒத்துக் கொள்வார்கள். எந்த அபேட்சகரும் வோட்டரைப் பார்க்காமல் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கமாட்டார். அப்படித் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாலும் அது நல்லதல்ல. லட்சம் பேருக்குப் பிரதிநிதியாக வருவதென்றால் ஓரளவு செலவு செய்துதான் ஆகவேண்டும். பஞ்சாயத்து யூனியன் தேர்தலுக்கு அதில் பாதிச் செலவாவது கட்டாயம் ஆகும். செலவு என்றால் பணம் கொடுத்து வோட்டு வாங்குவதற்காகத்தான் என்று சொல்ல முடியாது. குறிப்பிட்ட ஒருசிலர் ஆங்காங்கே பணம் வாங்கலாம். ஆனால் மிகப் பலர் அரசியல் உணர்வு அடைந்திருக்கிறார்கள். ஆனால், அடிப்படைச் செலவுகளுக்கே ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு ஆகிறது. எல்லோரையும் பார்க்க ஜீப் தேவைப்படுகிறது. இன்னும் இது போன்ற அத்தியாவசியச் செலவு இருக்கிறது. ஆகையால், இந்தப் பிரச்னையை பார்க்கும்போது ஜனங்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அந்தப் பஞ்சாயத்து யூனியன் தலைவரை எதுவும் செய்ய முடியாது. பஞ்சாயத்து யூனியன் தலைவர் சற்று அதிகார வெறி பிடித்தவராக இருந்து விட்டால் பஞ்சாயத்து ராஜ்யமே கெட்டுவிடும். 'நீ என்ன சொல்வது, நான் என்ன கேட்பது?' என்ற மனப்பான்மை உள்ளவர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவராக வந்துவிட்டால் பஞ்சாயத்துத் தலைவர்கள் பாடு அதோகதிதான். கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்ன மாதிரி, ஏழு பஞ்சாயத்துத் தலைவர்கள் கையெழுத்துப் போட்டால் எட்டாவது பேரும் கையெழுத்துப் போட்டுவிடுவாரோ என்ற பயத்தில் வேலை செய்யக்கூடிய சூழ் நிலை இருந்தால் அதுவும் வெறுக்கத்தக்கது தான். எதற்காக கூறுகிறேன் என்றால், பஞ்சாயத்து யூனியன் நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படை ஸ்தலமாக மாறிவிட்டிருக்கிறது. நேற்று முன்தினம் கூட 'இந்து' பத்திரிகையில் ஒரு நல்ல அறிக்கை வந்திருந்ததைப் பார்த்தேன். அதில், பஞ்சாயத்து ராஜ்யத்தின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தப்பட்டிருந்தது. 'பஞ்சாயத்து அமைப்பு மாத்திரம் சண்டை சச்சரவு இல்லாமல்,

வேறுபாடு இல்லாமல் பொதுமக்களின் நன்மைக்காக முழுக்க முழுக்க உழைக்க ஆரம்பித்து விட்டால் நாட்டில் மிகத் துரிதமாக முன்னேற்றத்தை அடைந்துவிடலாம்' என்ற கருத்து அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருந்தது. ஆக, பஞ்சாயத்து ராஜ்யம் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். சண்டை சச்சரவு இல்லாமல் பஞ்சாயத்து ராஜ்யம் நடத்துவதுதான் மிக மிகப் போற்றத் தக்கது. ஆகையால், இந்த முறையை அரசாங்கம் சற்றுத் தீவிரமாக யோசித்துப் பார்க்க வேண்டும். எங்களைப் போன்ற நகரப் பிரதிநிதிகளை அந்தக் கமிட்டியிலே போடுவார்களானால் கிராமப் பிரதிநிதிகளுக்குக்கூட நன்மை செய்ய முடியும். அதை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறோம். ஆகையால், இந்த முறையை அவசரப் பட்டு மாற்றாமல், மிகத் துரிதமாகத் தேர்தல் வருவதால், அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்தி, 'இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுங்கள், அந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்' என்று சொல்பவர்கள் கொடுத்திருக்கும் திருத்தங்களினால் உண்மையிலேயே மக்களுக்கு நன்மை வருமா என்ற ஐயப்பாடு இருக்கும் காரணத்தால், எந்த முறையைக் கையாண்டால் நல்லது, நன்மை தீமை என்ன என்பவற்றைக் கண்டறிந்து,

"குணம்நாடிக் குற்றமு நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்றபடி அரசாங்கம் ஆற அமர யோசித்து ஒரு முடிவுக்கு வருவது தான் நல்லது என்ற காரணத்தால் இந்தத் திருத்தங்களை அவசரமாக ஏற்றுக்கொள்ளாமல் மெதுவாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து திருத்தச் சட்ட மசோதாவின் 12-வது பிரிவு மிக முக்கியமான ஒரு பிரிவாக இருக்கிறது. இந்த பிரிவைப்பற்றிய கருத்துக்கள் நேற்றும் இன்றும் மன்ற உறுப்பினர்களால் தெளிவுபட எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரிவிற்கு கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள்,

"(2) The Chairman and the Vice-Chairman shall be elected by the persons whose names appear in the electoral roll for the Panchayat Union concerned in accordance with such procedure as may be prescribed:"

என்கிற திருத்தத்தைக் கொண்டுவந்துள்ளார். இந்தத் திருத்தத்தை ஆதரிக்கின்ற வகையில் நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நேற்றும் இன்றும் இங்கே கருத்துக்கள் விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. சென்ற மூன்று ஆண்டுக் காலமாக, ஊராட்சி மன்றத் தலைவர்கள் அத்தனை பேரும் ஒன்றாக இணைந்து ஊராட்சி மன்ற ஒன்றிப்பின் தலைவரைத் தேர்ந்தெடுப்பது என்ற முறை இருந்து வந்தது. அந்த முறையை நடைமுறையில் கண்

டறிந்ததற்குப் பிறகும் இந்த முறையினால் ஏற்படும் சீர்கேடுகளைக் கட்சி வேறுபாடு கருதாமல், பல கட்சிகளைச் சார்ந்தவர்கள், வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம், திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கூறிக்கொண்டு வந்திருக்கிறார்கள். இதன்மூலம் ஏற்படுகிற தீமைகளையும் அந்தந்தப் பஞ்சாயத்து ஒன்றிப்பைச் சேர்ந்த பரப்பளவில் உள்ள பொதுமக்களால் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம் ஏற்படும் தீங்குகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நேரடித் தேர்தலினால் ஏற்படும் தீங்கைவிட இதிலே அதிகமான தீங்குகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்பதுதான் நடைமுறையிலே கண்ட ஒரு முடிவாக இருந்து வருகிறது. பஞ்சாயத்து யூனியன் பரப்பளவில் இருக்கும் மக்கள் அத்தனை பேர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகிற தலைவரை, விருப்பு வெறுப்பின் அடிப்படையில், பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த உறுப்பினர்கள் நினைத்தால் அகற்ற வாய்ப்பு ஏற்படவில்லை; நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கும் வாய்ப்பு ஏற்படவில்லை. அவர்கள் சட்ட ஒழுங்குக்குப் புறம்பாக அல்லது நீதிக்கும் நேர்மைக்கும் புறம்பாக நடந்து கொள்வார்களானால், அப்படிப்பட்ட தலைவரை முறைப்படி, சட்டப்படி தண்டிப்பதற்கோ, அகற்றுவதற்கோ வேறு வாய்ப்புகள் இருக்கின்றன என்று நான் கருதுகிறேன். ஒரு கோஷ்டியில் இருந்தவர்கள் விருப்பு வெறுப்பு அடிப்படையில் வேறொரு கோஷ்டிக்கு மாறி, அதன் காரணமாக மெஜாரிடி ஏற்பட்டு அந்த விருப்பு வெறுப்பு அடிப்படையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து ஒரு தலைவரை அகற்றுவதற்கு நேரடித் தேர்தல் முறையிலே வாய்ப்பு ஏற்படாது. ஆனால், சட்டத்திற்குப் புறம்பாக, நீதிக்கும் நேர்மைக்கும் புறம்பாக அவர் நடந்துகொள்வாரானால் அந்த முறையில் அப்படிப்பட்ட தலைவரை நீக்க சட்டப்படி வாய்ப்புகள் ஏற்பட முடியும். அப்படிப் பொது மக்களுடைய அதிருப்தியைச் சம்பாதித்துக் கொள்ளும் முறை கேடான தலைவரை நீக்க வாய்ப்பு ஏற்பட முடியும், ஊராட்சித் தலைவர்களெல்லாம் ஒன்றாக இணைந்திருந்து அவர்கள் ஊராட்சி மன்ற ஒன்றிப்பின் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறபோது ஏற்படுகிற குறைபாடுகள் என்னவென்றால், வருகிற 30 பேர்களில் 15 பேர்களோ 16 பேர்களோ ஊராட்சி மன்றத் தலைவரை விலை கொடுத்து வாங்குகிற அளவுக்கு பேரம் பேசப்பட்டு இரு பெரும் கோஷ்டிகளாகப் பிரத்து, மாச்சரியங்கள், தொன்மாச்சரியங்கள்? போட்டாபோட்டி ஏற்பட்டு, தேர்தலின்போது ஏற்பட்ட அத்தகைய மாச்சரியம் கடைசி வரையில் தொடர்ந்து நீடிப்பதும் வாக்களிக்காதவர்களைப் பழி வாங்கும் உணர்வு ஏற்பட வழிவகை செய்வதாக இது அமைந்து விடுகிறது. மேலும், இந்த நிலைமை நாளுக்கு நாள் தீர்ந்துவரும் போக்கிலே இருப்பதாக அறிந்து கொள்ள முடியவில்லை. இந்த முறைகளைக் கற்றுக்கொண்டதற்குப் பிறகு, தீங்கு வழிகளை, குறுக்கு வழிகளைப் பண வெறி, ஆதிக்க வெறி அடிப்படையிலே வைத்துக்கொண்டு அந்த இடத்தைப் பிடித்துவிடலாம் என்ற தைரியம் ஏற்படுவதற்கு மார்க்கம் ஏற்பட்டு வருகிறது. கனம் உள்ளாட்சித் துறை அமைச்சர்

அவர்கள் பதில் கூறுகிறபோது, 'இப்படி முறைகேடான, ஒழுக்கக் கேடான அத்தகைய செயலைப் பிரசாரத்தின் மூலமாகப் போக்க முயலுதல் வேண்டும்' என்று எடுத்துக் கூறினார்கள். இந்தச் சட்டத்தின் மூலமாகத்தான் தீர வேண்டும் என்பதில்லை, பிரசாரத்தின் மூலமாகக்கூட தீர்க்கலாம் என்று சொன்னார்கள். பிரசாரத்தின் மூலமாக புத்தர், ஏசு, நபி காலம் முதற்கொண்டு சொல்லப்பட்டு வருகிற எந்தக் கொள்கையாவது திருத்தப்பட்டு இருக்கிறதா என்பதைச் சிந்திக்க வேண்டும். சட்டத்தின் மூலமாகவே தீங்கு செய்வதற்கு, குறை செய்வதற்கு வாய்ப்பு ஏற்படாமல் தடுத்து நிறுத்துவதுதான் நல்லது என்ற அடிப்படையில் நாம் சிந்திக்க வேண்டுமே தவிர, சட்டத்தின் மூலமாக தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பை அளித்துவிட்டு, பிரசாரத்தின் மூலமாக அதைத் திருத்திவிடலாம் என்று சொல்வது சரியாகாது. பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாக வரக்கூடியவர்கள் பொதுமக்களின் பிரதிநிதியாக இருக்க வேண்டும், பொது மக்களால் நன்கு மதிக்கப்படுகிற, விரும்பப்படுகிற ஒருவராகத்தான் இருக்க வேண்டும் என்றால் நேரடித் தேர்தல்தான் அவசியமானதாகும். மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒருவர் நிச்சயமாக மக்களிடம் தமக்குள்ள செல்வாக்கை, மதிப்பை இழக்கக் கூடிய காரியத்தில் இறங்கமாட்டார். மக்களிடம் தமக்குள்ள நல்ல பெயரை நிலை நிறுத்திக்கொள்ளக்கூடிய வகையில்தான் செயல்படுவார். ஆகவே நேரடித் தேர்தல் முறை தான் நல்லது. இன்று இருக்கக் கூடிய பல குறைபாடுகளை இதனால் களைந்தெரிய முடியும், இதை ஊராட்சி மன்ற நிர்வாகத்தில் உள்ளவர்கள் பலரும் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்கள். இந்த முறையினால்தான் நல்லவர்கள் மக்களுக்குப் பணி செய்வதற்கு முன்வருவதற்கு உதவி செய்யும். அப்படி இல்லையென்றால் நல்லவர்கள் ஒதுங்கி கொள்ளவும், பணம் உள்ளவர்கள், ரௌடிகளைப் பக்க பலமாகக் கொண்டவர்கள் ஆதிக்கம் பெறவும்தான் வழியேற்படும். ஆகவேதான் இந்தத் திருத்தம் நல்லவர்களை நாட்டுப் பணியில் ஈடுபடுத்த வாய்ப்பை அளிக்கும் வகையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே இந்தத் திருத்தத்தின் முக்கியத்துவத்தை அறிந்து மன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதுபோல நல்லாட்சி மலர்ந்து, ஜனநாயகம் செழிக்க இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர்** அவர்களே, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். அல்லது இப்போது இருக்கிற முறையில் பஞ்சாயத்துத் தலைவர்களாலேயே தேர்ந்தெடுக்கப்படலாம் என்ற இந்த இரண்டுவிதமான அபிப்பிராயம் ஏற்பட இடம் உண்டு என்பதை இந்த மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இப்படி இரண்டுவித அபிப்பிராயம் எழுவதற்கே இடமில்லை என்று யாரும் சொல்லமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். அவரவர்கள் தங்கள் தங்கள் கருத்துத்தான்.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [25th July 1964

நியாயமானது, மற்றவர்களுடைய கருத்து நியாயமற்றது என்று சொல்வது மனித இயல்பு. ஜனநாயக முறைப்படி நம்முடைய கருத்தை வற்புறுத்தலாம், மற்றவர்களுடைய கருத்து தவறானது என்று சுட்டிக்காட்டலாம். நான் நினைப்பதுதான் சரி என்று சொல்வதிலே தப்பு இல்லை. மற்றவர்கள் சொல்வது தவறானது என்று சுட்டிக்காட்டலாம். நான் நினைப்பதுதான் சரி என்று எண்ணத்தில் நினைக்கிறார்கள்' என்று உள்நோக்கம் கற்பிக்க முயல்வது, 'வேறு ஒரு உள்நோக்கத்தோடுதான் இப்படிச் செய்கிறார்கள்' என்று வற்புறுத்த முயல்வது மிக மிகத் தவறானதாகும். இந்த விஷயத்தில் நேர்மையான மாறுபட்ட கருத்து (honest differences of opinion) இருக்க முடியும் என்பதை நாம் ஒத்துக்கொண்டாக வேண்டும். சர்க்கார் அந்த வகையில் என்ன காரணத்தினால் இந்த முடிவுக்கு வந்தார்கள் என்பதை விளக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். நேரடித் தேர்தல் முறையைக் கொண்டு வந்தால் கட்சி அடிப்படையில் தேர்தலை நடத்தக்கூடிய நிலைமை உண்டாகும். நேரடியான தேர்தல் என்றவுடன் காங்கிரஸ் கட்சி தம்முடைய அபேட்சகரை நிறுத்தலாம். அது போலவே திராவிட முன்னேற்றக் கட்சியும், கம்யூனிஸ்டுக் கட்சியும், சுதந்திராக் கட்சியும் இப்படிப் பல கட்சிகள் தம்தம் அபேட்சகர்களை நிறுத்தக்கூடும். சட்டசபைத் தேர்தலைப் போலவே பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தேர்தலிலும் கட்சிப் பிளவானது ஏற்பட்டு கிராமம் வரையிலும், அடிதளம் வரையிலும் போய் விடக்கூடும். பஞ்சாயத்துக்களைப் பொறுத்த அளவில் நாம் கட்சி அடிப்படையில் போட்டியிடுவதில்லை என்ற முறையை வைத்துக்கொண்டிருக்கிறோம். நேரடியாகக் கட்சிகள் மோதுகின்ற நிலைமை பஞ்சாயத்துக்களில் இல்லை. நாம் இப்போது நேரடித் தேர்தலைப் புகுத்தினால் மேல் மட்டத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக கீழ்மட்டம் வரையில்—கிராமங்கள் வரையில் கட்சி மோதல்களை உண்டாக்கிவிடுவோம். சட்டசபைத் தேர்தல் எந்த விதமாக நடக்கிறதோ அந்தவிதமாக இதுவும் அமையும். ஆனால் இதற்கும் அதற்கும் எத்தனையோ வேறுபாடுகள் உண்டு. பஞ்சாயத்துக்கள் கிராமங்களில் பல அன்றாடப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. இதில் கட்சி மாறுபாட்டுக்கோ, கொள்கைக்கோ இடமில்லை. அப்படி இருக்க, நேரடித் தேர்தல் முறையைக் கொண்போய் விட்டு கட்சிப் பிளவுகளையும், பூசல்களையும் கிராமங்களில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டால் இதனால் தீமை ஏற்படும் என்று நாங்கள் நினைக்கிறோம். "இது தவறான நினைப்பு. அப்படி ஏற்படாது" என்று சொல்லலாமே தவிர நினைப்பதற்கே இடமில்லை என்று சொல்ல முடியாது.

இரண்டாவது பஞ்சாயத்து யூனியன் என்று வைத்தபிறகு இதற்கு மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற தலைவர் அங்கு வந்து பஞ்சாயத்துத் தலைவர்களும் வந்து செயல்பட ஆரம்பிக்கிறபோது இவர்கள் சொல்கிற யோசனையை தலைவர் கேட்கவேண்டுமென்ற நிலை ஏற்படாது. இரண்டு பேர்களுக்கும் முரண்பாடு உண்டாக இடமேற்படும். பஞ்சாயத்து யூனியன்களில் எந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானாலும்

25th July 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

மெஜாரிட்டி ஒத்துக்கொண்டால்தான் நிறைவேற்ற முடியும். பஞ்சாயத்து யூனியன் கொண்டு வருகிற கட்டத்தை பஞ்சாயத்துகள் நிராகரித்துக்கொண்டிருந்தால் என்ன காரியம் செய்ய முடியும்? பஞ்சாயத்து யூனியன் தலைவர் பஞ்சாயத்து தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் உள்ள ஒரு நெருங்கிய உறவினால் பல திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்த முடியும்.

நேரடித் தேர்தல் முறையில் உள்ள முரண்பாட்டை உலகத்தில் உள்ள அரசியல் முறைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும். அமெரிக்க ஜனாதிபதி மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்க. அதன் காரணமாக எவ்வளவு விசேஷ ரத்து அதிகாரங்கள் அவருக்கு அளிக்கப்பட்டு இருக்கின்றன. அந்தமாதிரி பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்குக் கொடுக்கலாமா? இப்படி நேரிடைத் தேர்தல் என்றால் பலவிதமான சிக்கல்கள் உண்டாக்கக் கூடும் என்பதை எல்லாம் உணர்ந்துதான் இப்பொழுது இருக்கிறபடி இருக்கட்டும், இதில் உள்ள குறைபாடுகளை நீக்க வேறு வழி முறைகளை மேற்கொள்ளலாம் என்று நினைக்கிறோமே தவிர நேரிடையான தேர்தலுக்கு பயந்துகொண்டு செய்யவில்லை. அந்த விதமான அபிப்பிராயம் இல்லை. ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை பொதுத் தேர்தலுக்குப் போகாமலா இருக்கிறோம்? நேரடித் தேர்தலுக்குப் பயந்து கொண்டு இப்படிச் செய்வதாகச் சொல்வது சரியல்ல. நேரடித் தேர்தல் என்று வந்துவிடுமானால் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும், யூனியன் தலைவருக்கும் எப்போது பார்த்தாலும் முரண்பாடும், சண்டையும் ஏற்படக் கூடிய நிலைமை உண்டாகிவிடும். அப்புறம் அவர்களுடைய சண்டையைத் தீர்க்க காலம் எல்லாம் செலவாகுமே தவிர பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் சரியாக இயங்காது. இது இரண்டாவது முக்கியமான காரணம்.

மூன்றாவதாக ஒரு விஷயத்தை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இரண்டு பஞ்சாயத்து யூனியன் சேர்ந்தது ஒரு அசெம்பிளித் தொகுதி. ஒரு அசெம்பிளித் தொகுதிக்கு தேர்தல் நடத்தினால் என்ன செலவாகுமோ அதில் பாதி ஒரு பஞ்சாயத்து யூனியன் தேர்தலை நடத்துவதற்கு ஆகும். இது அவசியந்தானா என்பது நன்றாகச் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். நான் ஏதோ எலெக்ஷன் செலவு குறையும் என்று சொன்னதாகக் கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் சொன்னார்கள். ஏராளமாகச் செலவழித்து அங்கத்தினர்களைத் தூக்கிக் கொண்டு போய் விடுகிறார்கள் என்று சொன்னார்கள். பிரசிடெண்ட் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சென்னாலும் செலவழியத்தான் செய்யும். அசெம்பிளித் தொகுதிக்கு நின்றால் என்ன செலவாகிறதோ அதிலே பாதி செலவு ஆகத்தான் செய்யும். ஏனென்றால் பாதி கான்ஸ்டிடுவன்சி இருக்கிறது. இந்தக் காரணங்களையல்லாம் ஒட்டித்தான் இப்போது இருக்கும் அமைப்பே சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். 'இதைப் பற்றிப் பரிசீலனை செய்கிறோம்' என்று சொன்னால் வேறு முடிவுதான் எடுக்க

11-30 a.m.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [25th July 1964

வேண்டுமென்றில்லை. அதே முடிவுக்கு வரக்கூடாது என்று ஒன்றும் கிடையாது. கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 'பரிசீலனை செய்கிறேன் என்று நிதியமைச்சர் சென்ற சட்டசபையிலே வாக்குறுதி கொடுத்தார்கள்' என்று சொன்னார். பரிசீலனை செய்து இதுதான் சிறந்த முறை என்று இப்போது முடிவுக்கு வந்திருக்கிறோம். ஆகவேதான் நான் கொள்கையை விளக்கினேன். இதிலே மாறுபட்ட கருத்துக்கு இடம் இல்லையென்று நான் சொல்லவில்லை. நிர்வாகத்திலே இருக்கின்றவர்கள், சுற்றுச் சார்புகள் எல்லாவற்றையும் கவனித்து நிர்வாகம் நல்லபடி நடக்கவேண்டுமென்பதையொட்டி, பஞ்சாயத்து அட்மினிஸ்ட்ரேஷன் சரியாக இருக்கவேண்டுமென்பதை மனதில் வைத்து இந்த விதமான முடிவுக்கு வந்திருக்கிறோம் என்று சொல்லி இந்தத் திருத்தத்தை எதிர்க்கிறேன்.

The amendment of Sri S. Madhavan was put and declared lost.

A poll was demanded.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I suggest that we may have one division and I leave it to the hon. the Leader of the Opposition to choose the time when he will have a division, either on this clause or at the time of the third reading of the Bill.

MR. SPEAKER : Does the hon. the Leader of the Opposition want a division on this clause ?

SRI V. R. NEDUNCHEZHIYAN : Yes.

MR. SPEAKER : The question is :—

For the existing clause 12, substitute the following :—

"12. *Amendement of section* 36, *Madras Act XXV of* 1958.—Substitute the following for sub-sections (1) and (2) in Section 36 of the Principal Act :—

'36. *Chairman and Vice-Chairman of Panchayat Union Councils.*—(1) There shall be a Chairman and a Vice-Chairman for every Panchayat Union Council.

(2) The Chairman and the Vice-Chairman shall be elected by the persons whose names appear in the electoral roll for the Panchayat Union concerned in accordance with such procedure as may be prescribed :

Provided that in the case of a Panchayat Union Council referred to in clause (ii) of Sub-section (2) of Section 12, where all the members of the Council are either members of a single Panchayat or members of a single township committee.

The President and Vice-President of the Panchayat shall respectively be the Chairman and Vice-Chairman of the Panchayat Union Council;

(i) the chairman of the township committee shall be the Chairman of the Panchayat Union Council and a member of the township committee chosen in the prescribed manner shall be the Vice-Chairman of the Panchayat Union Council'."

25th July 1964]

The House divided thus :—

Ayes.

Sri V. R. Nedunchezhiyan.
Sri K. A. Mathialagan.
Sri P. K. Mookiah Thevar.
Sri A. K. Subbiah.
Sri M. Rajangam.
Sri KR. RM. Kariamanicka Ambalam.
Sri K. Cheemaichamy.
Sri N. Rajangam.
Sri V. Arunachalam.
Sri S. Madhavan.
Sri S Mani.
Sri A. Thiagarajan.
Sri A. Duraiyarasan.
Sri V. R. Periannan.
Sri P. V. Sriramulu.
Sri S. Muthulingam.
Pulavar K. Govindan.
Sri C. V. Velappan.
Sri C. Manickam.
Sri M. R. Krishnamurthy.
Sri S. Murugaiyan.
Sri S. Arumugham.
Sri M. V. Karivengadam.
Sri A. G. Balakrishnan.
Sri R. Narayanan.
Sri V. Krishnamoorthy.
Sri K. R. Munirathnam.
Sri S. J. Ramaswamy.

Noes.

Sri K. Parthasarathy.
Sri M. Alagiriswamy.
Sri S. Chinnayyan.
Sri N. P. M. Chinnaiah Gounder.
Sri K. S. Ardhanareeswara Gounder.
Sri C. M. Ambikapathi.
Sri P. Appavoo.
Sri A. Appavoo Thevar.
Sri V. S. Arunachalam.
Sri A. B. Balagan.

[25th July 1964.

Sri A. M. P. S. Balagangadharan.
Sri M. Chelliah.
The Hon. Sri V. Ramaiah.
The Hon. Smt. Jothi Vencatachellum.
Sri R. Krishnaswamy Naidu.
Sri A. S. Dhakshinamoorthy Gounder.
Sri M. Dhandayuthapani Pillai.
Sri T. P. Elumalai.
Sri G. Gomathisankara Deekshadar.
Sri R. Jeevarathnam.
Sri T. Kadambavana Sundaram.
Sri T. M. Kaliannan.
Sri T. Karcha Gowder.
Sri C. Kothandarama Bagavathar.
Sri M. Kulandaiswamy Gounder.
Sri T. Manavalan.
Sri M. Maruthanayagam Pillai.
Sri J. Matha Gowder.
Sri K. K. Muthiah.
Sri V. A. Muthiah.
Sri M. P. Muthukaruppannaswami Gounder.
Sri P. K. Muthuvelappa Gounder.
Sri T. M. Nallaswamy.
Sri S. Nanjunda Row.
The Hon. Sri S. M. A. Majeed.
Srimathi T. N. Anandanayaki.
Smt. A. Suares.
Smt. P. K. Lakshmikantham.
Smt. A. S. Ponnammal.
Smt. A. Krishnaveni.
Smt. B. Lakshminarasamma.
Smt. N. K. Ranganayaki.
Kumari D. Sulochana.
Sri G. Narayanaswamy Naidu.
Sri G. D. Perumal Raju.
Sri K. Ponniah.
Sri R. Rajagopalaswamy Naicker.
Sri P. Rajagopal.
Sri N. Ramachandra Reddi.
Sri A. L. Ramakrishna Naidu.

25th July 1964]

Noes—cont.

Sri N. S. Ramalingam.
Sri V. Ramanathan.
Sri S. Sadasivam.
Sri R. Shanmuga Rajeswara Sethupathi.
Sri K. T. Kosalram.
Dr. B. Natarajan.
Sri C. Chiranjeevulu Naidu.
Sri S. Sangli.
Sri V. Sankaran.
Sri M. S. Selvarajan.
Sri R. Sengaliappan.
Sri N. Shanmugasundaram.
Sri SV. SM. Sivaraman Ambalam.
Sri R. S. Veerappa Chettiar.
Sri A. R. Subbiah Mudaliar.
Sri R. Subramaniam.
Sri K. B. Palani.
Sri R. Thangavelu.
Sri M. D. Thiagaraja Pillai.
Sri O. Venkatasubba Reddy.

(The hon. Member, Sri R. S. Veerappa Chettiar, was seen neither fully sitting nor fully standing at the time when his name was called.)

MR. SPEAKER : Hereafter if any hon. Member is seen neither fully sitting nor fully standing, he will be considered as 'neutral'.

Ayes : 28; Noes : 70; Neutral : 0.

The amendment was lost.

MR. SPEAKER : As the hon. Member Sri M. Kalyanasundaram is not in his seat, his amendment is deemed to have been withdrawn.

Clause 12 was put and carried

Clause 13.

MR. SPEAKER : The question is—

"That Clause 13 do stand part of the Bill".

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, I move the following amendment :—

For the proposed explanation to Sub-section 1 of Section 115 of the Principal Act, substitute the following :—

[Sri C. Chiranjeevulu Naidu] [25th July 1964

"Explanation—n this Section and in Section 116 'land revenue' means public revenue due on land only".

The amendment was duly seconded.

MR. SPEAKER: The clause and the amendment are before the House for discussion.

SRI C. CHIRANJEEVULU NAIDU: In Section 115 of the Principal Act it is stated that land revenue means public revenue due on land and includes water cess payable to Government for water supplied or used for irrigation, etc. My only contention is that land revenue means land revenue and will not include "cess" that is collected. Now cess is being collected as "water cess" and sometimes when water is taken out of the land, five or ten times is being levied as penalty. That also is included as cess and collected as land revenue. The ryot has to pay surcharge for all these things. So I have said that "land revenue" should mean only public revenue due on land only. That is my plea. I request the House to accept my amendment.

*திரு. மாதவன்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த 13-வது பிரிவும், 24-வது பிரிவும் இண்டர்-கனெக்டட் என்று நினைக்கிறேன். ஒரு வரி விதிக்க உரிமை கொடுப்பதற்கு முன்னால், வரி விதிப்பதற்கு முன்னால், அந்த உரிமை கொடுக்கப்படவேண்டும் சட்டபூர்வமாக, என்பது நாம் ஏற்றுக் கொண்ட ஒரு சட்டப் பிரச்னையாகும். ஏற்கெனவே 1958-ல் சட்டம் செய்யும்போது மிகத் தெளிவாக இந்த வரி எப்படிப் போடலாம் என்று கூறியிருக்கிறார்கள். வாட்டர் செஸ் என்று போடப்பட்டிருக்கிறது. லான்ட் ரெவின்யூ என்பது விளக்கப்பட்டிருக்கிறது. இப்போது புதிதாக ராயல்டி, லீஸ் எமௌண்டையும் சேர்க்கவேண்மென்று திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் வரி போடும்போது இதற்கும் போடலாம் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். அதோடு நிற்காமல் வாலிடேட் செய்யும் ப்ரொவிஷனும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. வரி போடும்போது இதுபற்றி எல்லாம் யோசிக்கவில்லை. அப்போது ராயல்டி, லீஸ் எமௌண்ட் சேர்க்கப்படவில்லை. மிகத் தெளிவாக லான்ட் ரெவின்யூ என்று போடப்பட்டிருக்கிறது. லான்ட் ரெவின்யூ என்றால் என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். அதோடு வாட்டர் செஸ்ஸையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது, இந்த மன்றம் நினைத்ததை சட்டமாகப் போடவேண்டுமென்று தெரிகிறது. இப்போது புதிதாகச் சேர்க்கவேண்டுமென்றால் அது வேறு பிரச்னை. ஏற்கெனவே சேர்க்கப்படவில்லை என்பதை ஒத்துக்கொண்டால் இந்த வாலிடேஷன் ப்ரொவிஷன் செல்லாது, 'would be deemed always to have been substituted' என்பதும் இருக்கக் கூடாது. இனி இந்தக் கொள்கையை அனுசரிப்போம் என்று சர்க்கார் கொண்டு வந்தால் புதிய ப்ரொவைஸோக்களைச் சேர்த்து விடலாம். 1958-ல் இருந்து இருக்க வேண்டும். அப்போதிருந்து வரி போடலாம். என்று சொன்னால் அது வரி போடும் கொள்கைக்கே விரோதமானது.

25th July 1964]

SRIMATHI T. N. ANANDANAYAKI: What the hon. Member Sri C. Chiranjeevulu Naidu is saying is not correct. He was telling about the water cess payable to Government by the ryots and how sometimes they have to pay penal cess. Even under the existing provision, water-cess is included. For the past six years it had been there and if any undue difficulties had been experienced by the ryots, they would have represented to Government their difficulties. But no such representation had come to Government. Therefore, I think the amendment of the hon. Member Sri C. Chiranjeevulu Naidu is superfluous.

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, திரு. சிரஞ்சீவுலு நாயுடு அவர்கள் சொன்ன திருத்தம் எந்த அளவிற்கு பொருத்தம் என்பதைத் திருமதி அனந்தநாயகி அவர்கள் விளக்கிச் சொல்லி விட்டார்கள். வாட்டர் செஸ் என்பது இப்போதிருக்கிற சட்டத்திலே இருக்கிறது. அதனால் அதை நீக்கவேண்டுமென்று புதிதான கொள்கையாகச் சொல்லலாமே தவிர, இப்போதுள்ள சட்டத்தில் இல்லை என்று சொல்ல முடியாது. பஞ்சாயத்துக்களுக்கல்லாம் வருமானம் மிகவும் குறைவு. அவர்களுக்குக் கொடுக்கிற பொறுப்பு ஏராளம். அப்படிப் பொறுப்பை கொடுக்கும்போது வசதி எல்லாம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். அவர்களுக்கு வருமானத்தைக் கொடுக்கும்போது வருமானத்தைக் குறைக்கவேண்டுமென்று திருத்தங்கள் எல்லாம் கொண்டு வரப்படுகின்றன, அது சரி அல்ல. அவர்களுக்கு வருமானம் கிடைக்கும் அளவிற்கு உதவி செய்ய வேண்டும். அதற்காகத்தான் இது போடப்பட்டிருக்கிறது. திரு. மாதவன் அவர்கள் ஒன்று சொன்னார்கள். சில பஞ்சாயத்துக்களுக்கு லான்ட் ரெவின்யூ மிகக் குறைவாக இருக்கும். ஆனால் அங்கு மைன்ஸ், மினரல்ஸ் எல்லாம் இருக்கலாம். மைன்ஸ் இருந்து கம்பனிகள் வைத்து நிறையப் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கலாம். ஆகவே "ராயல்டி ஃபரம் மைன்ஸ்" என்ற பிரச்சினை எழுந்தது. நிலத்திலிருந்து வருகிற வருமானத்தில் 45 பைசா பஞ்சாயத்து யூனியன் போட்டு அந்த வருமானத்தை எடுத்து மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்பதுதான். திரு. மாதவன் அவர்கள் சொன்னபடி அந்த வார்த்தையை விட்டு விட்டால் இன்டஸ்டிரியல் ஏரியாவில் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு வருவாயே இல்லாமல் போய்விடும். ஆகவேதான் இதைச் சேர்க்க வேண்டுமென்று சொன்னோம். 24-வது கிளாஸைப் பற்றியும் பேசினார்கள். புதிதாக சேர்ப்பதைக் கூட ஆட்சேபிக்கவில்லை. '1958-ல் இருந்தே வசூல் செல்லும் என்று சொல்கிறீர்களே' என்று கூறினார். பல பஞ்சாயத்துக்கள் லான்ட் ரெவின்யூ என (royalty mines) எல்லாவற்றையும் சேர்த்து வசூலித்திருக்கிறார்கள். அது சரியா தவறா என்ற பிரச்சினை வந்தால் கோர்ட்டுக்குப் போக வேண்டும். அவர்கள் தீர்ப்பு கொடுப்பார்கள் இவ்வித நிலை ஏற்படும். அதைத் தீர்ப்பதற்கு 1958-ம் ஆண்டிலிருந்து லான்ட் ரெவின்யூ என்றால் "ராயல்டி ஃபரம் மைன்ஸ்", லைசென்ஸ் பீஸ்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [25th July 1964

போன்றவை எல்லாம் சேரும் என்று விளக்கிச் சொல்லியிருக்கிறோம். அப்படி இல்லாவிட்டால் கோர்ட்டுக்கு ஏராளமான கேஸ்கள் போகும். 'லாண்ட் ரெவின்யூ என்று ராயல்டியிலிருந்து வசூல் செய்தீர்களே, அப்படிச் செய்யலாமா?' என்றெல்லாம் கேஸ்கள் போகும். அதற்காகத்தான், அதைத் தீர்க்கத்தான், இந்தப் பிரிவைச் சேர்த்திருக்கிறோம். பஞ்சாயத்து வருமானம் வரவேண்டும் என்பதில் எவ்வித எதிர்ப்பும் இருக்க முடியாது. பெரிய மைன்ஸ் நடத்துகிறவர்கள் லாண்ட் ரெவின்யூ கொடுப்பது போல் அவர்களும் கொடுக்கவேண்டுமென்று சொல்வதில் எதிர்ப்பு இருக்காது. இருக்கிற நிலையை விளக்கும் முறையில்தான் இது அமைந்திருக்கிறது. ஆகவேதான் இப்படிப் போட்டிருக்கிறோம். இத்திருத்தங்களை வாபஸ் பெறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

The amendment was by leave withdrawn.

Clause 13 was put and carried.

Clauses 14 to 16 were put and carried.

Clause 17.

MR. SPEAKER : The question is—

'That clause 17 do stand part of the Bill.'

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, a new section 188-A has been introduced in this clause, according to which a Development Officer may be appointed 'as special officer to exercise the powers, discharge the duties and perform the functions of the panchayat union council its chairman or commissioner, as the case may be'. When the Commissioners discharge their duties, some troubles may arise if we do not have any check or control over them and that will not also be good in the interest of the panchayat union council. So, I suggest that the Revenue Divisional Officer may be entrusted with powers to check and control these Development Officers. In this connection, I wish to point out that the functions of the panchayats and panchayat union councils have already been defined in the principal Act. Also the financial powers of the Development Officers with regard to sanction of estimates, etc., would be limited and therefore I feel that the R.D.O. may be appointed as the Development Officer who can perform the duties of the Special Officer.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, so far as this clause is concerned, I would like to point out that it is in the interest of democratic institutions like panchayats that a special officer should be appointed—that is only a stop-gap arrangement—before the constitution of the panchayat union council. But in sub-clause (3) of the clause, the words "as soons as may be" after the members of a panchayat union council have come into force, have been used. If the term 'as soon as may be' is used, it may mean any time. It is better that we specify the time within which the panchayat union council may be constituted, in the Bill itself. Otherwise,

25th July 1964] [Srimathi T. N. Anandanayaki]

it may be an indefinite time and may take a very long time. We can say that the meeting of the panchayat union council shall be held within a period of three months from the date of coming into office of the members of the panchayat union council.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, this provision relates to Tirutani area where, by virtue of the decision of the High Court, all the existing panchayats and panchayat unions have been declared to be nothing more than an aggregate of individuals. Now, in this area we are going to constitute new panchayats and new panchayat union councils. Therefore, in this area we say, 'let the Development Officer who is already there in charge of it, function as a temporary special officer until the whole thing is settled and the panchayat union chairman is elected'. It has been suggested that the Revenue Divisional Officer may be appointed as the Special Officer. But he will be in charge of three or four blocks and it may be difficult for him to undertake this work also. Since this is only for a temporary and short period, the Government thought that it would be advisable to have a Development Officer as the special officer for this purpose. Naturally when we make transitory provisions for an area where there is no panchayat union or panchayat existing, we say that as soon as the panchayat union council is constituted, the chairman shall be elected. The term 'as soon as may be' has got a very definite meaning in law. It cannot be 'as long at it may be'. Therefore, the question that the term 'as soon as' may be specified is not relevant. Suppose we specify three months but we may be able to do it within 15 days or one month. So, if we specify the period, then we will have to wait till that period to hold the election. Therefore, in order to enable the executive to perform the duties quickly, the words 'as soon as may be' are used here.

Clause 17 was put and carried.

Clauses 18 to 24 were put and carried.

Clause 25.

MR. SPEAKER : The question is—

'That clause 25 do stand part of the Bill.'

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, I move—

(1) '(i) In clause 25, for the words 'or proceeding taken' occurring after the words 'no act done' and before the words 'in the added territory', substitute the words 'proceedings taken or no election held either for the panchayat or for the panchayat union council'.

(ii) In Clause 25, after the words 'to take any proceeding' and before the words 'and any tax', insert the following words 'or to elect'.

(iii) In clause 25, after the words 'or proceeding taken' and before the words 'as aforesaid', insert the words 'or election held'.

(Sri C. Chiranjeevulu Naidu) [25th July 1964

(iv) In clause 25, after the words ' or done or taken ' and before the words ' and accordingly ', insert the words ' or elected ',

(2) In clause 25 (a), after the words ' or proceedings taken ', and before the words by the aggregate of individuals, add the words ' or the election held '.

(3) After item (d) of clause 25, add the following as item (e) :

"(e) Any election held either for the Panchayat or Panchayat Union Council on and after 2nd October 1961 shall not be invalid on the ground that there was no Panchayat or Panchayat Union Council in the added territory validly constituted or on the ground that they could be regarded only as aggregate of individuals."

(4) In clause 25, after item (e), add the following as item (f) :

" (f) Notwithstanding anything contained in any judgment, decree or order of any court—

(i) the Panchayats constituted under the Madras Village Panchayats Act, 1950 as amended by Andhra and Andhra Pradesh shall be deemed to be the Panchayats constituted under the Act until such period as may be specified by Government by notification;

(ii) All the members of the Panchayat holding office under the Madras Village Panchayats Act, 1950 as amended by the Andhra and Andhra Pradesh shall be deemed to be the elected members of the Panchayat under the Panchayats Act, 1958 and such members shall continue to hold office upto such date as the Government may by notification fix in this regard; and

(iii) All the Presidents and Vice-Presidents elected under Madras Village Panchayats Act, 1950 as amended by the Andhra and Andhra Pradesh shall be deemed to be the Presidents and Vice-Presidents elected under the Madras Panchayats Act, 1958 and shall continue to hold office until such date as the Government may by notification fix in this behalf."

The amendments were duly seconded.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, this clause relates to the Added Territory. The extension of the panchayats Act to the Added Territory has been declared void by the court. So the Government have now come forward to validate the acts done and proceedings taken in the Added Territory after the panchayat union has been constituted. My amendments seek to validate the elections that have taken place in the Added Territory. But the court has invalidated the elections and so the Government

25th July 1964] [Sri C. Chiranjeevulu Naidu]

have come forward with this clause. The Government have been anxious to validate the acts done and proceedings taken in the Added Territory for the last two years by collecting land revenue, cess, surcharge, show tax, etc., and they are very keen in safeguarding their interests by not losing any revenue. But the same anxiety is not shown in the case of the Chairman of the panchayat union council and the presidents of panchayats. The same provision could have been made in some other form to make the chairman of the panchayat union council and also the presidents of panchayats to function till such time as the election takes place. There are practical difficulties involved in the matter. There are 156 panchayats without their presidents. In spite of the judgment of the High Court in regard to this matter, the Government have allowed certain panchayats to function and that is also really a contempt of the Court. So, I request the Government to make some provision in this Bill itself to validate the election also.

The only point is that an enabling provision has not been provided for in the Madras Act to validate the President and Vice-President elected as per the Andhra Pradesh Act to be President and Vice-President. When the matter came up before the High Court of Madras, they were not prepared to recognise them as President and Vice-President under the Madras Act but they said that the Panchayats were only an aggregate of individuals. In the meanwhile Government must clearly define what they are going to do with the entire Panchayats in the added territories, who is to perform the duties of Presidents and Vice-President, etc. All these things may be considered carefully. I request the Government to clearly state what they are going to do with the Panchayat Unions and Panchayats in the added Territory that would be taken over by the Commissioners as stated now. So I request the Government to accept the amendment which I hav moved. 12 00 noon.

* கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. சீரஞ்சீவுலு என்ன சொல்லுகிறார் என்றால், சட்ட பூர்வமாக பஞ்சாயத்து யூனியன் எல்லாம் அமையப்படவில்லை என்று சொன்னவுடன், அந்த சட்ட பூர்வமாக இல்லாத பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் எல்லாம் செய்த வரி வசூல்கள், மற்ற காரியங்கள், நிர்வாகக் காரியங்கள் அலுவல்கள் எல்லாம், சட்டபடி செல்லும் என்று நிறைவேற்றியது போல, தேர்ந்தெடுக்கப்பட்ட எங்களையும் சேர்ந்து செல்லுபடி ஆகும் என்று சட்டம் செய்யுங்கள் என்று சொல்லுகிறார். அது பொருத்தம் ஆகாது. காரணம் என்ன என்று சொன்னால் நாம் இப்போது சட்டபூர்வமான ஒரு அமைப்பு என்று நினைத்துச் செய்ததில் தவறு என்று ஹைக்கோர்ட்டினால் காண்பிக்கப்பட்டது என்றால் செய்த காரியங்கள் நியாயமாக, சட்ட பூர்வமாக இருந்தால் எவற்றை நியாயமாகச் செய்யக்கூடுமோ அவற்றையெல்லாம் செய்திருப்பார்கள் என்று, அவற்றையெல்லாம் சட்ட பூர்வமாகச் செய்ததாக வேலிடேஷன் செய்கிறோம். எலெக்ஷனை

[திரு. ஆர். வெங்கட்டராமன்] (25th July 1964

வேலிடேஷன் செய்வது என்றால் ஹைக்கோர்ட் என்ன சொல்லியதோ, அதற்கு அது நேர்மாறாக இருக்கும். அந்த மாதிரி செய்ய அரசாங்கம் தயாராக இல்லை.

அடுத்தபடியாக, தனி மசோதாவாக இருந்தாலும்; தனி சாப்டராக இருந்தாலும் ஒன்று தான். தனி மசோதாவாக வந்திருந்தால் வேறு ஏதோ பல சலுகைகளோ விசேஷ நன்மைகளோ ஏற்படும், சாப்ட்டராக வந்திருப்பதால் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுவதற்கு ஆதாரம் இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஆகவே அவர்கள் கொடுத்துள்ள திருத்தங்களை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

The amendments were by leave withdrawn.

Clause 25 was put and carried.

Clauses 26 to 29 were put and carried.

The Schedule was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI S. M. A. MAJID : Sir, I move :—

" That the Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 (L.A. Bill No. 21 of 1964), as amended, be passed. "

MR. SPEAKER : Motion moved :—

" That the Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 (L.A. Bill 21 of 1964), as amended, be passed. "

* **திரு. எம். எஸ். செல்வராஜன்** : ஸார், இந்தச் சட்டம் நிறைவேறுகிற இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சிறு விஷயத்தை மாத்திரம் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு நாம் அளித்திருக்கிற அதிகாரம் காரணமாக, ஸெஸ் விதிப்பதற்கு, ஸெஸ், சர்சார்ஜ் விதிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் அதை வசூலிக்கிற பொறுப்பு ரெவின்யூ அதிகாரிகளுக்கும், கீழ் மட்டத்தில் இருக்கிற சர்க்கார் சிப்பந்திகளுக்கும் பொறுப்பு இருக்கிறது. இதன் காரணமாக பஞ்சாயத்து யூனியனில் ஏற்படும் கண்ணோட்டமெல்லாம் தங்களுக்குப் பணம் வேண்டும் என்பது; அந்தக் கண்ணோட்டம் காரணமாக அந்தப் பகுதியில் என்னென்ன சிரமம் இருக்கிறது, மக்களுக்கு வரிப் பளு எப்படி இருக்கிறது என்று அவர்கள் மனதில் வருவதில்லை. தேவையை மாத்திரம் மனதில் வைத்து இத்தனை பர்ஸெண்ட் என்று எத்தனை அதிகமாக விதிக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு விதிக்க பல பஞ்சாயத்து யூனியன்கள் முற்படுகிறார்கள்: எங்கெங்கு பஞ்சாயத்து யூனியன்

25th July 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

நில வரியோ, ஸெஸ்ஸோ விதிக்கும் நிலைமை ஏற்பட்டாலும்; பஞ்சாயத்து யூனியன் தேவைகளை மட்டும் நினைத்து, மக்களின் கஷ்டத்தை நினைக்காது விதிக்கிறார்கள் என்று கருதுகிறேன். பஞ்சாயத்து யூனியனுக்கு வசூலிக்கும் பொறுப்பு இல்லாததால் நிலவரி வசூலிக்கும் அதிகாரிகளைக் கொண்டு வசூலிப்பதன் காரணமாக சர்க்காரே தான் மேலும் மேலும் வரி விதிக்கிறார்கள் என்ற கண்ணோட்டம் மக்களுக்கு ஏற்படுவதாக நான் கருதுகிறேன். ஆகவே இது போன்று வரி விதிக்கும் அதிகாரம் பெற்றிருக்கிற அவர்கள் தங்கள் சிப்பந்திகளைக் கொண்டு இந்த வரியை வசூல் செய்ய முடியுமா என்று பரிசீலிக்கலாம். வரி போட்டு போட்ட வரியைத் தாங்களே வசூலிக்கவேண்டும் என்ற பொறுப்பு இல்லாததன் காரணமாக, தேவை ஒன்று தான் கண்ணோட்டம் என்று கொண்டு, அவர்கள் இஷ்டப்படி பல பெர்ஸெண்ட் அதிகப்படுத்திக் கொண்டிருப்பதை நான் பல பஞ்சாயத்துக்களில் பார்க்கிறேன். வரி விதிப்பதோடு வசூலிப்பதும் ஒரே இடத்தில் இருப்பது சாத்தியமாக இருக்குமானால் இஷ்டப்படி அவர்கள் தேவையை மட்டும் கருத்தில் கொண்டு மக்கள் கஷ்டத்தையும் கருத்தில் கொள்ளாமல் வரி விதிக்கும் நிலைமை மாறும் என்று நான் கருதுகிறேன். அத்தகைய நிலைமை ஏற்படாது என்று கருதுகிறேன்.

இந்தப் பஞ்சாயத்துத் திருத்த மசோதா வருவதன் அவசியமும் எல்லோருக்கும் தெரிகிறது. சமீபத்தில், குறித்த அளவுக்கு டிஸம்பரிலேயே பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்தி விடவேண்டுமென்ற கண்ணோட்டம் கொண்டு நிறைவேற்றப்படுவது கூட ஒரு காரணம் என்று கருதுகிறேன். இது சரியான நேரம் என்று கூட நான் கருதுகிறேன். சட்டசபை பாராளுமன்ற தேர்தல் கூட ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்க இருக்கிறது. ஐந்து வருஷம் என்பது நீண்ட காலப் பகுதிதான். குறைந்த அளவுக்கு, மூன்று வருஷத்தில் நடத்திக்கொண்டு போவது கஷ்டம் கூட. இந்தக் கஷ்டத்தைப் பொறுத்து 5 வருஷம் முறையான நேரம் என்று வைத்திருந்தாலும், இடையில் இரண்டு வருஷத்திற்கு மேல், 2½ வருஷத்தை அடுத்து பஞ்சாயத்து தேர்தல் இருக்குமானால், இப்போது அமையக் கூடிய காலம்கூட சட்ட சபை தேர்தல் முடிந்து 2½ ஆண்டுகள்தான் இருக்கிறது, அந்த முறையில் இந்தக் காலப் பருவத்தில் தேர்தல் மக்கள் மத்தியில் வருவது நியாயம். அதிக பளு இல்லாத அளவுக்கு வருவது நியாயம் என்று மறைமுக தேர்தல் முறையாக இருக்கவேண்டும் என்று கூட வைத்திருப்பது நியாயம் என்று கருதுகிறேன். முறையான தேர்தலாக, முறையான காலத்தில் வர இந்தத் திருத்த மசோதா துணை செய்வதாக நான் கருதுகிறேன். இந்த வார்த்தைகளோடு இந்த மசோதா ஆதரிக்கத் தகுந்தது, சட்ட மாகத் தகுந்தது என்று நான் கூறிக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, in the land revenue cess that has been collected under Section 116 of the principal Act, local cess surcharge has to be collected. Here it has not been defined how much surcharge should be collected. We have seen

in the practical implementation of this, most of the Panchayat Unions have collected 90 per cent, or 100 per cent of the land revenue. This is most unjustified. There is no norm provided for in the Act. Besides rules have not been properly framed so as to give directions to the Panchayat Unions how this should be collected.

I know in some blocks near Madras City as much 95 nP. of a rupee has been collected as cess. The hon. Lady Member Srimathi T. N. Anandanayaki had said that there had been no representation from the ryots regarding this. Government are fully aware that the ryots are not in a position to form themselves into associations and do agitation as any other organisation.

If the Government will adopt the attitude that they will only amend the Act to provide certain relief to agriculturists only after they start some agitation and give strike notice—of course agriculturists cannot give strike notice—, it is not a reasonable attitude. One panchayat levies 25 nP. for every rupee, another panchayat 45 nP. and yet another 95 nP. This is really a hardship to the agriculturists. When the Government want to increase food production, they cannot strike at the root of the interests of the agriculturists and yet, at the same time, ask them to produce more. Now the position is that a certain amount of demoralisation has set in and the agriculturists feel that the Government are not actually coming to their assistance. It has been stated that there has been wastage of funds administered by the panchayat unions. But that could be avoided. The object with which the Panchayat Act has been enacted has been only to help the villagers and their interests should be safeguarded. In this connection, I wish to point out that whether the president of the panchayat is elected directly or indirectly by getting a majority of votes, he must realise that he must have to seek the co-operation of the villagers and that he should not show partiality towards any class of people and this should be made clear by the Government. There are still certain clauses in the Bill which give the largest scope for the officials to seek clarification from the Government on certain points. Even when clarifications are sent from the Government, again they may ask clarifications for clarifications. I have seen the Government orders being interpreted by the Block Development Officers in their own way. So, I request the Government to go into all these aspects of the matter and bring forward necessary amendments to the Act so as to provide relief to agriculturists. With these words, I conclude my speech.

* கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்து டாக்ஸ் வசூல் செய்வது சம்பந்தமாக கனம் திரு. எம். எஸ். செல்வராஜன் அவர்கள் குறிப்பிட்டார்கள். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் பொறுப்புகளை எவ்வளவுக்கு எவ்வளவு குறைக்கவேண்டுமோ, அவ்வளவு குறைப்பதற்கு சர்க்கார் உதவி செய்யும் வகையில் சட்டத்தில் வழிவகைகள் செய்திருக்கிறோம்.

ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் தனியாக வரி வசூல் செய்வதற்கு சிப்பந்திகள் நியமிப்பது என்றால், பஞ்சாயத்துக்களுக்குத்தான் அதிகமான செலவும் சிரமமும் ஏற்படும். ரெவின்யூ டிபார்ட்மெண்டு கீழே வேலை செய்யக்கூடிய பஞ்சாயத்து ஆபீசர்கள் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கிறார்கள், மிகவும் ஒத்தாசையாக வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

லாண்டு ரெவின்யூக்கு மேல் ஸர்சார்ஜ் போடுகிற விஷயத்தைப் பற்றிச் சொன்னார்கள். 100 வரைக்கும் போடலாம், ஆனால் 95 சத விகிதம் தான் போடுகிறார்கள். அந்தந்தப் பஞ்சாயத்து, யூனியன் இவைகளுடைய தேவையை வைத்து, வரி விதிப்பை மக்கள் தாங்குவார்களா என்பதையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பார்த்துச் செய்வார்கள் என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER : The question is—

" That the Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 (L.A. Bill No. 21 of 1964) as amended, be passed ".

The motion was put and carried and the Bill, as amended, was passed.

VI. ANNOUNCEMENTS.

(1) THE MADRAS HACKNEY CARRIAGE (AMENDMENT) BILL, 1964.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for the consideration by the Madras Legislative Assembly of the Madras Hackney Carriage (Amendment) Bill, 1964.

V. GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS HACKNEY CARRIAGE (AMENDMENT) BILL, 1964.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg have to introduce the Madras Hackney Carriage (Amendment) Bill, 1964 [a] and move :

" That the Bill be taken into consideration ".

The Government have decided to bring about the gradual abolition of hand-cart pulling in the City of Madras since the problem of hand-cart pulling is getting worse and women and children of tender age are taking increasing part in hand-cart pulling. To achieve this object it has been decided to license all hand-carts and pullers of hand-carts and thereby put into effect a phased programme of gradual abolition. The Madras Hackney Carriage Act, 1911 (Madras Act V of 1911) provides *inter alia* for licensing of hackney-carriages. But the definition of " Hackney-carriage" in sub-section (3) of section 3 of the said Act does not include hand-carts. It is, therefore, proposed to amend that section so as to include within its definition hand-cart also.

[a] Published in the *Fort St. George Gazette*, dated 8th July 1964.

[Sri R. Venkataraman] [25th July 1964

It is also proposed to amend the Act so as to designate the Deputy Commissioner of Police (Traffic and Licensing) in the City of Madras as the registering and licensing authority under the Act and to provide for an appeal against the orders of the Deputy Commissioner to the Commissioner of Police, Madras.

Section 14 of the Act provides that whoever keeps any hackney-carriage which has not been duly licensed under the Act shall be liable to a fine not exceeding fifty rupees. In actual practice, it is seen that this punishment is inadequate. In spite of prosecutions and fines unlicensed hackney-carriages are often found plying on public roads. It is, therefore, felt that confiscation of unlicensed vehicles may have a deterrent effect on owners of vehicles. For this purpose it is proposed to amend section 14 of the Act providing for confiscation of unlicensed vehicles on conviction by courts for the second or any subsequent offence.

Now, Section 71-M of the Madras City Police Act, 1888 (Madras Act III of 1888) prescribes the maximum laden weight of hand-carts and the minimum age limit for persons driving a hand-cart. It is proposed to omit this section and to insert a new section, namely, section 35-A in Madras Act V of 1911 providing for the above matters.

Section 37 is proposed to be amended so as to impose penalty on drivers for refusal to give way for other vehicles and for refusal to obey reasonable directions of the person hiring the carriage. It is also proposed to amend section 46 so as to provide for the speedy disposal of perishable articles left in hackney carriages and deposited with the police.

Some formal amendments regarding rates of fees, etc., in terms of decimal system of coinage have also been provided in the Bill.

I request, Sir, that the Bill be taken into consideration.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Hackney Carriage (Amendment) Bill, 1964 be taken into consideration."

* திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தத் தமிழ் நாடு வாடகை வண்டி குறித்த மசோதாவை எங்களுடைய கட்சி சார்பிலே நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆனால், ஆதரிக்கிறோம் என்று சொல்லுகிற நேரத்தில், இன்றைக்குக் கொண்டுவந்திருக்கிற இந்த மசோதா பெரிய அளவுக்கு வரவேற்கப்படவேண்டிய ஒன்று என்றோ, அல்லது இந்த மசோதாவில் குறிப்பிட்ட மூல நோக்கத்தை நல்ல வகையில் இந்த மசோதா நிறைவேற்றும் என்றோ என்னால் நிச்சயமாக சொல்ல முடியாது.

சென்னை மாநகரத்தில் ரொம்பவும் மனதை உருக்கும்படியாகவும், எல்லோரும் வருத்தப்படும்படியாகவும், மனிதாபிமான மற்ற ஒரு பிரச்சினையாக இருக்கிற கைவண்டி இழுக்கும் பிரச்சினை

25th July 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

ஒழிந்துவிடவேண்டும், அந்த முறை இருக்கக்கூடாது என்பதில் இரண்டு விதமான அபிப்பிராயம் யாருக்கும் கிடையாது. இதை ஒரு "பேஸ்டு ப்ரோகிராமாக" செய்து படிப்படியாக ஒழித்து விடுவோம், அதனுடைய அடிப்படை அம்சமாகத்தான் இந்த மசோதா இங்கு வந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். துறைமுகப் பகுதியிலும், மவுண்டு ரோடு முதலிய பகுதிகளிலும் குழந்தைகளும், தாய்மார்களும், பாட்டாளிகளும், கைவண்டிகளை இழுத்துச் செல்லும் காட்சியைக் காணலாம். இதை ஒழித்துவிட வேண்டும், படிப்படியாக ஒழித்துவிட வேண்டும் என்பதிலே, அவ்வளவு பெரிது என்று கருதுகிற மூல நோக்கத்தை, அந்த எண்ணத்தை, இந்த மசோதா முழுவதும் நிறைவேற்றுகிறதா என்பதை என்னால் சொல்ல முடியவில்லை. போக்குவரத்திற்குப் பரிகாரம் வேண்டும், வேறு காரியங்களுக்கு பரிகாரம் வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். படிப்படியாக ஒழித்துவிடுவோம் என்று சொன்னால், இப்பொழுது பல பேர்கள் லைசென்ஸ் வாங்கமுடியவில்லை, அவர்களுக்கு அபராதம் விதித்தால் சரியாகிவிடும் என்று அப்படி அவர்கள் நினைத்த மாதிரி செய்தால் இந்த நோக்கத்தை நிறைவேற்றமுடியுமா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. ஏன் நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இப்படிப்பட்ட கைவண்டிகளுக்கு ரூ. 50 அபராதம் போடுவதால் மட்டும் இந்தப் பிரச்சினையை ஒழித்துவிடலாம் என்று சொல்லுவதற்கில்லை. இந்த மசோதாவில் ஒரு தடவைக்கு மேல் இப்படிப்பட்ட குற்றங்களைப் புரிகிறவர்களின் வண்டிகள் பறிமுதல் செய்யப்படுமென்று போடப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்வதினாலும் இந்த மாதிரி காரியங்கள் குறையுமென்று நான் எதிர்பார்க்க முடியாது. கைவண்டிகளை அடியோடு ஒழிக்கவேண்டுமென்ற மனிதாபிமானப் பிரச்சினையைத்தான் நாம் கவனிக்கவேண்டும். இவ்வளவு பாரம் தான் இருக்கவேண்டும், இவ்வளவு உயரத்திற்குமேல் இருக்கக் கூடாது, பெண்கள் இழுக்கக்கூடாது, குழந்தைகள் இழுக்கக்கூடாது என்று போடுவதெல்லாம் மூலப் பிரச்சினைக்கு ஒரு நிலையான பரிகாரம் தேடாமல் ஏதோ அவ்வப்போது வருகிற பிரச்சினைகளுக்கு அவ்வப்போது நடவடிக்கை எடுப்பது போலத்தான் இருக்கும். இந்த மசோதாவானது ஏற்கெனவே இருந்த 1911-ஆம் வருடத்திய மசோதாவை விட ஒரு நல்ல முன்னேற்றம் தான் என்றாலும், ஒரு பக்கம் விதிகளைப்போட்டு போலீஸ் டெபுடி கமிஷனருக்கு அதிகாரம் கொடுக்கப்படுகிறது. ஒரு பக்கம் கைவண்டிகளுக்கு லைசென்ஸ் வாங்க வேண்டுமென்று சொல்கிறோம். இன்னொரு பக்கத்தில் லைசென்ஸ் இல்லாத வண்டிகளும் ஏராளமாக இருக்கின்றன. ரூ. 50 அபராதம் போடுவதினால் இது "டெட்டரண்ட்" ஆக் இருக்குமென்று சொல்கிறார்கள். அடிப்படைப் பிரச்னைக்குப் பரிகாரமென்ன என்று பார்க்கவேண்டும். இந்த மசோதாப்படி ரூ. 50 அபராதம் போட்டாலும் சரி, அல்லது கைவண்டியோ அல்லது ரிக்ஷாவையோ பறிமுதல் செய்தாலும் சரி, என்ன நடக்கப்போகிறது? மேலும், லஞ்ச ஊழல்கள் மலிந்து வேறு விதமான தவறுகள் ஏற்படப் போகின்றன. இதனால் மாற்றம் ஏற்படுமென்று சொல்லமுடியாது. இவ்வளவு பாரம் இருக்கவேண்டும், 18 வயதுக்குட்பட்ட

[திரு. கே. ஏ. மதியழகன்] [25th July 1964

குழந்தைகள் இழுக்கக்கூடாது என்று போட்டிருப்பது நல்லது தான். குறிப்பாக புதுப் பிரிவாகக் கொண்டுவரப்பட்டிருக்கும் 35-ஏ பிரிவை நான் பாராட்டுகிறேன். அதன்படி 18 வயதுக்குக் குறைவாக இருப்பவர்கள் வண்டியிழுத்தாலும் சரி, அவர்களை நியமித்த மற்றவர்கள் காரணகர்த்தர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கும் தண்டனை கொடுக்கப்படுமென்று சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கது.

" . . . any person employing him or in any way responsible for or abetting such a contravention or employment shall be punishable with imprisonment for a term which may extend to one month or with fine . . ."

என்று போட்டிருக்கிறது. நமது தொழில் அமைச்சரவர்கள் பல மேலை நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தப் பிரச்சினை நன்றாகத் தெரியும். துறைமுகத்தில் எப்படி எப்படி வேலை செய்கிறார்கள் என்பது தெரியும். இவற்றை யெல்லாம் ஒரேயடியாக ஒழித்து "அபாலிஷன் ஆப் ஹாண்ட் கார்ட்ஸ் மசோதா" என்று கொண்டு வரவேண்டும். துறைமுகத்திற்குப் பக்கத்திலே 100 வண்டிகள் இருக்கிறதென்றால், லைசென்ஸ் இல்லாத வண்டிகளும் ஏராளமாக இருக்கின்றன. நான்கு லைசென்ஸ் வண்டிகள் இருக்கிறதென்றால், ஆறு லைசென்ஸ் வாங்காத வண்டிகளும் இருக்கின்றன. அதன் மூலமாக ஏராளமான லாபம் சம்பாதிக்கிறார்கள். போலீஸ் இலாகாவை நான் தவறாகச் சொல்கிறேன் என்று யாரும் நினைக்கக்கூடாது. இப்படி வண்டிகளைப் பறிமுதல் செய்யலாம் என்று அதிகாரம் கொடுத்திருப்பதானது துஷ்பிரயோகம் செய்யப்பட்டு நாளடைவில் லஞ்ச ஊழல்களுக்கு இடங்கொடுக்குமென்று நினைக்க வேண்டியிருக்கிறது. இந்த வண்டியிழுக்கின்றவர்களெல்லாம் ஏழை எளியவர்கள். அப்படிப் பரிதாபத்திற்குரிய பாட்டாளி மக்களை இப்படிச் செய்வதன் மூலமாக போலீஸ்காரர்களிடம் ஒப்படைப்பதாக இருக்குமோ என்ற அச்சம் கூட எனக்கு ஏற்படுகிறது. கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட ஏழை மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். 37-வது பிரிவிலே கீழ்க் கண்டவாறு போட்டிருக்கிறார்கள்.

" (n) refuses or neglects to give way, if he conveniently can, to any other vehicle;

(o) refuses to obey the reasonable directions of any person hiring his carriage ".

பார்ப்பதற்கு அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் இருக்கிறதே தவிர, இம்மாதிரியான காரியங்களிலே டாக்ஸிகாரர்கள்; ரிக்ஷாகாரர்கள்; கைவண்டிக்காரர்கள் இவர்களை எப்படிக் கட்டுப்படுத்த முடியுமென்று தெரியவில்லை. இப்பொழுது பல விபத்துக்கள் ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். இந்தக் கைவண்டி இழுக்கும் பாட்டாளிகளின் வியர்வைக் காட்சியைப் பார்த்தால் அவர்களுடைய பரிதாப நிலை தான் நம் மனக்கண் முன் தோன்றுகிறது. இப்படிப் போடுவதினால் போலீஸ்காரர்கள் அவர்களை மிரட்டுவதற்கு

800 009

25th July 1964] [திரு. கே. ஏ. மதியழகன்

உபயோகமாக இருக்கும். அத்துமீறிய வகையில் அதிகாரிகள் நடப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்குமோ என்று நான் அஞ்சுகிறேன். அதே பிரிவில்,

" refuses to obey the reasonable directions of any person hiring his carriage " என்று போட்டிருக்கிறது. "ரீசனபிள் டைரக்ஷன்ஸ்" என்று போட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் எப்படி நிர்ணயம் செய்யப் போகிறார்களென்று தெரியவில்லை. நமது அமச்சரவர்கள் பல வெளிநாடுகளுக்குச் சென்றிப்பதால், டிராக்டர் போன்ற வாகனங்களை சாமான்கள் ஏற்றிச் செல்வதற்குப் பயனுள்ள வகையில் ஒரு ஏற்பாட்டைச் செய்யலாம். வேறு வகையில் வாழ்க்கை நடத்த வசதியில்லாதவர்கள் தான் இவ்வளவு கடும் உழைப்பிலே ஈடுபட்டிருக்கிறார்கள். "ரீசனபிள் ரெஸ்ட்ரிக்ஷன்ஸ்" என்று போட்டிருப்பதனால் அதற்குச் சரியான வியாக்யானம் சொல்ல முடியாது.

MR. SPEAKER : The hon. Member has already taken much time.

SRI K. A. MATHIALAGAN : I may be given another five minutes since this is an important Bill.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் போலீஸ்காரர்கள் மீது நம்பிக்கையில்லையென்றுதான் திரும்பத் திரும்பச் சொல்கிறார்களே தவிர, மசோதாவில் உள்ள முக்கியமான விஷயங்களைப்பற்றிச் சொல்லவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : இம்மாதிரியான நிலைகள் இருக்கின்றன என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன். மேலும், டெபுடி கமிஷனர் அவர்களுக்கு மாஜிஸ்டிரேட் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சில தினங்களுக்கு முன் உள்துறை அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இந்த நிலையில் இந்த மசோதாவில் உள்ள விதிகளை அமல் நடத்தும்பொழுது சாதாரண ஏழை மக்களுக்கு ஒருவிதக் கெடுதியும் ஏற்படக்கூடாது.

இந்த மசோதாவை உண்மையிலேயே நாங்கள் எல்லோரும் வரவேற்கிறோம். பழைய நிலையிலிருந்து இந்த அளவுக்காவது வந்திருக்கிறோமே என்று நினைக்கிறோம். மேலும், நவீன முறைகளைப் புகுத்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் முற்போக்கான மசோதாக்களை இந்த மன்றம் நிறைவேற்ற வேண்டும். அதன் மூலம் நாம் பெருமைப்படவேண்டும். ஏழை பாட்டாளி மக்கள் நிம்மதியாக வாழமுடியும் என்ற ஒரு சூழ்நிலையை இந்த மன்றம் ஏற்படுத்தவேண்டும். ஆகையால் இம்மாதிரி முன்னேற்றகரமான பாதைகளில் செல்வதிலே எங்களுக்கும் உற்சாகமிருக்கிறது என்பதைக் கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[25th July 1964

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வாடகை வண்டி திருத்த மசோதா கனம் தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவினுடைய நோக்கம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையில் கைவண்டி இழுப்போர், ரிக்ஷாக்கள், சைக்கிள் ரிக்ஷாக்கள் இழுப்போர் இவர்களின் எண்ணிக்கையை மெல்ல மெல்லக் குறைக்கவேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் இந்த மசோதா திருத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு மெல்ல மெல்லக் குறைத்து இதிலே ஈடுபடுகிற ஏழை எளியவர்களை வேறு புதிய பணிகளிலே ஈடுபடுத்துவதற்கான வாய்ப்புகளை அரசினர் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு உழைப்பதற்கேற்ற நல்ல தொழில்கள் கிடைக்காத காரணத்தினால் தான் இப்படிப்பட்ட ஏழை எளியவர்கள் தங்களுடைய கையினால் பெரும் பாரத்தை இழுத்துச் செல்ல வேண்டிய கட்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். மேலும், கைவண்டிகள், சாதாரண ரிக்ஷாக்கள் ஆகியவைகளைச் செய்கின்ற பணிகளையும் குறைந்த செலவில் செய்வதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். மற்ற முறைகளையும் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். சென்னை நகரத்தின் பல பகுதிகளில் குறுகிய சந்து பொந்துக்களும், தெருக்களும் இருக்கின்றன. அந்தத் தெருக்களில் நோய்வாய்ப்பட்டவர்களையும், பெண்களையும் கொண்டுசெல்வதற்கு எத்தகைய வசதிகள் ஏற்படுத்தித் தரலாம் என்பதைப் பற்றி அரசினர் சிந்திக்கவேண்டும். சென்னையில் இருக்கின்ற சாலைகள் அத்தனையும் மிகப் பெரிய சாலைகள் அல்ல. பல சந்து பொந்துகள் இருப்பதால் ரிக்ஷாக்களும், கைவண்டிகளும் பயன்படுகின்றன. மேலும் சாமான்களைக் குறைந்த செலவில் எடுத்துச் செல்வதற்கு இக் கைவண்டிகள் மிகவும் உபயோகமாக இருக்கின்றன. இக் கைவண்டிகளை மாற்றி லாரிகளை வைப்பதன் மூலமாக சிறிய சந்துகளுக்கு குடிசாமான்களை எடுத்துச் செல்லும் வகையிலே அமைக்க முடியுமா என்பதை ஆலோசிக்க வேண்டும். இந்த முறையை மாற்றுவதற்கு சிறிய சிறிய வான்களை வைத்து குறுகிய சந்துகளிலே சாமான்களையும், மற்ற நோய்வாய்ப்பட்டவர்களையும், பெண்களையும் கொண்டுபோவதற்கு ஏற்பாடு செய்தபிறகு இவற்றை அடியோடு அகற்றுவதற்கு முயலலாம். மேலும், நாளுக்கு நாள் போக்குவரத்து அதிகரிக்கும் சென்னை மாநகரில் இத்தகைய மெல்ல மெல்ல செல்லக்கூடிய வண்டிகளை நீக்கினால் நலமாக இருக்கும் என்ற கருத்து பலராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இதிலே லைசென்ஸ் பெறாதவர்கள் ரூ. 50 அபராதம் விதிக்கப்படுவார்கள் என்றும் அடுத்தடுத்து ஒரே குற்றத்தைத் தொடர்ந்து செய்பவர்களின் வண்டிகள் கைப்பற்றப்படுமென்றும் இந்த மசோதாவிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. சாதாரணமாக தெரியாதவர்கள் அறியாதவர்கள் ரிக்ஷா, கை
12-30 p.m. வண்டி இழுக்க வருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு முதன் முறையில் எச்சரிக்கை நோட்டீஸ் கொடுத்து, அதன் பிறகும் அவர்கள் வாங்காமல் இருந்தால் அடுத்த கட்டத்தில் அபராதம் போடுவதும், அதன் பிறகு அடுத்த கட்டத்தில் கைப்பற்றுவதும் நடை

25th July 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

முறைக்கு உகந்ததாக இருக்கும் என்று எண்ணுகிறேன். இந்த மசோதாவின் நோக்கம் மிக நல்லதாக இருக்கிறது. மெல்ல மெல்ல கைவண்டிகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து உரையை முடிக்கிறேன்.

திரு. வை. சங்கரன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவின் ஷரத்துக்களை வரவேற்கிறேன். கையால் இழுக்கப்படும் வண்டிகளுக்கு லைசென்ஸ் வாங்க வேண்டும் என்று விதிக்கப்படுகிறது. ஒருவன் லைசென்ஸ் இல்லாத வாகனம் வைத்திருந்தால் அதை பர்மிட் பண்ண அதிகாரம் கொடுக்கிறது. கையால் இழுக்கப்படும் வண்டிகள் மெல்ல மெல்ல அகற்றப்பட வேண்டும் என்பது மிக நல்ல ஆப்ஜக்ட். இது மொபஸலுக்கும் விஸ்தரிக்கப்படலாம் என்ற அதிகாரம் இருந்தபோதிலும் அதைப்பற்றி சர்க்கார் யோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சென்னையைப் பொறுத்தவரையில் அது எவ்வளவு அவசரமானது என்றாலும்கூட அவைகளை அடியோடு அகற்றி விட்டால் மதுரை போன்ற நகரங்களில் ஓர் அளவு கஷ்டங்கள் இருக்கலாம். ஆகவே, மொபஸல் நகரங்களில் இதை அமுல் நடத்த நினைக்கும்போது அதில் இருக்கக்கூடிய கஷ்டங்களையும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சென்னையில் இருப்பது போல அங்கே இரண்டு மூன்று பேர்கள் சேர்ந்து ஒருவர் இழுக்க இரண்டு பேர் தள்ள அப்படிப்பட்ட நிலைமை மதுரை போன்ற நகரங்களில் மாட்டுக்குப் பதிலாக மனிதர்கள் இழுக்கும் காட்சி கிடையாது. ஒருவர் இழுத்துச் செல்லும் சிறிய வண்டிகள்தான் பார்க்கலாம். அதோடு உடல் உழைப்பும் பூரணமாகக கூடாது என்று சொல்லுவதும் சரியல்ல. அதைப் பூரணமாக ஒத்துக் கொள்ளவேண்டுமா என்பதைப் பற்றியும் யோசிக்க வேண்டும். ஒருவன் இழுக்கக்கூடிய வண்டிக்கு ஒன்று அல்லது இரண்டு மாட்டை வைத்து ஓட்டுவது நடைமுறையில் கஷ்டமானது. அவன் தன்னையும் காப்பாற்றிக்கொண்டு, அந்த மாடுகளையும் காப்பாற்றி ஆக வேண்டும். ஆகவே ஒரு சில மொபசல் நகரங்களில் கைவண்டி அத்தியாவசியமாக இருக்கலாம். அதையும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆன் ஏ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார். லைசென்ஸ் கட்டணம் பெற வேண்டும் என்ற குறிப்பிலே பெரம்புலேடர்கூட சேர்க்கப்பட்டு இருக்கிறது. அது குழந்தைகளுக்கு என்று வீட்டில் வைத்திருக்கக்கூடியது. ஆகவே அதற்கும் பணம் செலுத்தி லைசென்ஸ் வாங்க வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவுக்கு ஆதரவு கொடுத்ததற்கு கனம் அங்கத்தினர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தக் கைவண்டிகளை உடனடியாக நாம் ரத்து செய்து விட முடியாது. ஏன் என்றால் இப்பொழுது நிறைய கைவண்டிகள்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [25th July 1964

இழுக்கிறவர்கள் இருக்கிறார்கள். திடீர் என்று கைவண்டிகளை ரத்து செய்தால் அவ்வளவு பேர்களுக்கும் மாற்று வேலை தேடிக் கொடுப்பது கஷ்டமாக இருக்கும். ஆகவே படிப்படியாகக் குறைத்தால்தான் நலமாக இருக்கும். முக்கியமாக ஹார்பர் போன்ற பகுதிகளிலும், வியாபார ஸ்தலங்களிலும் அதிகமாக இந்த வேலையைச் செய்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆகவேதான் இதைக் கொஞ்சம் கொஞ்சமாக குறைத்தால் அவர்களுக்கு அங்கங்கே வேலை கிடைப்பது சுலபமாக இருக்கும். அதனால்தான் இதைப் படிப்படியாகக் குறைக்க வேண்டும் என்று சொல்லுகிறோம்.

அடுத்து, இதில் ஏதோ தவறுகள் ஏற்பட்டு மறுபடியும் போலீஸார் தொல்லை ஏற்படும் என்று சொன்னார்கள். சட்டம் என்றால் அதை நிர்வாகம் செய்ய யாருக்காவது அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். அப்படி இதிலே அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஏதாவது இப்படி அதிகாரம் கொடுத்தாலே தவறுகள் ஏற்பட்டுவிடும் என்று சொன்னால் எந்த சட்டமுமே நிறைவேற முடியாது. General presumptionஒவ்வொரு அதிகாரி யும் நியாமாக நடப்பார் என்பதுதான். ஆனால் திரு. மதியழக னுடைய General presumption அதிகாரிகள் எல்லாம் தப்பேதான் பண்ணுவார்கள் என்பது . . . .

திரு. கே. ஏ. மதியழகன் : அம்மாதிரி நான் சொல்லவில்லை. ஆனால் தவறு வரும் என்று நினைக்க ஏது இருக்கிறது என்பதைத் தான் சுட்டிக்காட்டினேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆகவே சரியான முறையில் இது அமுல் நடத்தப்படும் என்று கூறிக்கொள்ளுகிறேன். பொம்புலேடர் சம்பந்தமாக அது பழைய சட்டத்திலே இருக் கிறது, வசூல் செய்யப்படுகிறது என்று எனக்குத் தெரிகிறது.

MR. SPEAKER : The question is—

'That the Madras Hackney Carriage (Amendment) Bill, 1964 be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 20 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

'That the Madras Hackney Carriage (Amendment) Bill, 1964 be passed.'

The motion was put and carried and the Bill was passed.

25th July 1964]

(4) THE MADRAS COMPULSORY LABOUR (AMENDMENT) BILL, 1964.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I beg leave to introduce the Madras Compulsory Labour (Amendment) Bill, 1964 and move—

'That the Bill be taken into consideration'.

The Madras Compulsory Labour Act, 1858 (Central Act I of 1858) makes lawful compulsory labour for the prevention of mischief by inundation, and provides for the enforcement of customary labour on certain works of irrigation in this State. Section 1 of that Act makes it lawful for an officer-in-charge of any tank, river or canal or any anicut or other like work when there is imminent danger of the embankment of such tank, river or canal being breached, or of a breach being made in such anicut or other work, to require the head or heads of the village or villages to call all able-bodied male persons in such village or villages to co-operate in the work necessary for preventing or repairing the breach.

This provision, however, is not strictly in conformity with Article 11 of the International Labour Organisation Convention No. 29 concerning forced labour which lays down that only adult able-bodied males who are of an apparent age of not less than 18 years and not more than 45 years may be called upon for forced or compulsory labour. The Government consider that it is necessary to bring the provisions of the said Act in line with the International Labour Organisation Convention by suitably modifying sections 1 and 2 of the Act. Accordingly, it is proposed to amend sections 1 and 2 of the Act so that only adult able-bodied males who are of an apparent age of not less than 18 years and not more than 45 years can be called upon for work connected with the prevention of mischief by inundation or the repairing of the breach in any embankment of any irrigation work.

Sir, I request the House to accept the motion.

MR. SPEAKER : The question is—

'That the Madras Compulsory Labour (Amendment) Bill, 1964 be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

'That the Madras Compulsory Labour (Amendment) Bill, 1964 be passed.'

The motion was put and carried and the Bill was passed.

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 10th July 1964.

(5) THE MADRAS (TRANSFERRED TERRITORY) INCORPORATED AND UNINCORPORATED DEVASWOMS (AMENDMENT) BILL, 1964.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms (Amendment) Bill, 1964 and move—

'That the Bill be taken into consideration.'

Before the enactment of the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Act. 1959, the incorporated and unincorporated devaswoms in the Kanyakumari District were governed by the provisions of the Tranvancore-Cochin Hindu Religious Institutions Act, 1950 (Travancore-Cochin Act XV of 1950). Section 57 of that Act was to the effect that the period of limitation applicable to suits by the Government of Travancore, namely, 50 years, shall be the period of limitation for suits by or on behalf of the incorporated and unincorporated Devaswoms. While enacting Madras Act 30 of 1959 the question of marking provision similar to section 57 of the Travancore-Cochin Act XV of 1950 was examined and it was considered not necessary to provide for such an enlarged period of limitation inasmuch as there was no corresponding provision in the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959). The Kanyakumari Devaswom Board has since represented that the absence of special provision relating to limitation in Madras Act 30 of 1959 as in section 57 of Travancore-Cochin Act XV of 1950, has adversely affected the collection by the Devaswoms of Thiruppuvaram arrears pending for over 20 to 25 years and the recovery of possession of Devaswom poramboke lands. Section 109 of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959, provides that nothing contained in any law of limitation for the time being in force shall be deemed to vest in any person the property or funds of any religious institution which had not vested in such person or his predecessor-in-title before the 30th September 1951. It has been suggested that a provision similar to that contained in section 109 of Madras Act 22 of 1959 will be sufficient to protect the interests of the Devaswoms. Accordingly, it has been decided to incorporate a provision in Madras Act 30 of 1959, similar to that contained in section 109 of Madras Act 22 of 1959, with retrospective effect from the date on which Madras Act 30 of 1959 came into force, namely, the 1st April 1960. The present Bill provides for this.

Section 28 (a) of Madras Act 30 of 1959 enables the Devaswom Board to invest or deposit the funds of incorporated and unincorporated Devaswoms in a Scheduled Bank or in any State Treasury only. It is not open to the Board to invest or deposit the funds in the State Co-operative Bank or in any Central District Co-operative Bank. It has been decided to amend section 28 (a) to enable the Board to deposit or invest the funds in co-operative Banks also. A provision has been made in the bill to this effect.

a Published in the *Fort St. George Gazette*, dated 14th July 1964.

Sir, I have now briefly indicated the objects of this legislation. I request the House to accept the motion.

MR. SPEAKER : The question is—

'That the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms (Amendment) Bill, 1964 be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

'That the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms (Amendment) Bill, 1964 be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(6) THE MADRAS MATERNITY BENEFIT (REPEAL) BILL, 1964 (L.A. BILL NO. 20 OF 1964).

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

'That the Madras Maternity Benefit (Repeal) Bill, 1964 (L.A. Bill No. 20 of 1964) be taken into consideration.'

நாம் சென்னை ராஜ்ய 1934-ஆம் வருஷத்திய சட்டத்திலே சில மெடர்னிடி பெனிஃபிட்ஸ் நம்முடைய ராஜ்யத்தில் இருக்கிறவர்களுக்குக் கொடுத்தோம். அதற்குப் பிறகு 1961-ம் வருஷத்திய 53-வது மத்திய சட்டத்தை, நாம் கொடுத்த சில சலுகைகளையும் சேர்த்து, அவர்கள் இயற்றிவிட்டார்கள். மத்திய சர்க்கார் சட்டத்திற்கும் ராஜ்ய சர்க்கார் சட்டத்திற்கும் ஏதாவது மாறுபாடு இருக்குமானால், மத்திய சர்க்காரினுடைய சட்டம் தான் அமுலாகும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் சட்டத்திலேயே நமக்குத் தேவையான எல்லா விஷயங்களும் கண்டிருக்கிற காரணத்தால் நம்முடைய ராஜ்ய சட்டத்தை நாம் இப்பொழுது 'ரிபீல்' செய்வதற்கு இந்த மசோதா கொண்டு வந்திருக்கிறோம். இதைச் சபை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

MR. SPEAKER : Motion moved—

'That the Madras Maternity Benefit (Repeal) Bill, 1964 (L.A. Bill No. 20 of 1964) be taken into consideration.''

a Pubished in the *Fort St. George Gazette* Extraordinary, dated 17th July 1964.

[25th July 1964

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் சபாநாயகர் அவர்களே, பெண் தொழிலாளிகளுக்குப் பிரசவ அலவன்ஸ் கொடுக்கும் இந்தத் திருத்த மசோதாவை நான் மனமார ஆதரிக்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பிரவச அலவன்ஸ் கொடுக்கும் மசோதா அல்ல. நம் சட்டத்தை நாம் ரிபீல் செய்யப் போகிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : நாம் முன்பு செய்த சட்டத்தில் சில குறைபாடுகள் ஏற்பட்ட காரணத்தால், மத்திய சர்க்கார் செய் திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தை இன்றைக்கு நாம் ரிபீல் செய் வதை நான் வரவேற்கிறேன். ஏனென்றால், முன்பு நாம் செய்த சட்டத்திலே . . . .

கனம் சபாநாயகர் : மத்திய சர்க்கார் செய்த சட்டத்தை நாம் 'ரிபீல்' பண்ணுவது இல்லை. நாம் செய்த சட்டத்தை நாம் ரிபீல் பண்ணுகிறோம்.

It should not appear in the newspaper that the hon. Member is asking for repeal of the Central Act.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் சபாநாயகர் அவர்களே, தற்போது பெண் தொழிலாளிகளுக்கு எவ்வளவு கூலி கிடைக் கின்றதோ, அந்த கூலியில் மூன்றில் இரண்டு பாகம் அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சட்டத்திலே காணப்படுகின்றது. ஆனால், அதே நேரத்தில், நம்முடைய சட்டத்தில் நாம் என்ன செய்திருக் கிறோம் என்றால், அதிக பட்ச வரம்பை நாம் ஏற்படுத்திவிட்டோம். 75 ந.பைசாவுக்கு மேல் வரக்கூடாது என்று அதிகப்பட்ச நிர்ணயம் செய்துவிட்ட காரணத்தால் பல பெண் தொழிலாளிகள், தாங்கள் பெறவேண்டிய மூன்றிலிரண்டு பங்கு சலுகை கூடப் பெற முடியாமல் போய்விட்டது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். சாதாரணமாக ப்ளான்டேஷனில் வேலை செய்யும் பெண் தொழிலாளிக்கு ரூ. 1.51 ந.பை. வரையில் கிடைக்கவேண்டும். அதில் மூன்றில் இரண்டு பாகமாகிய ரூ. 1.04 ந.பை. கிடைக்க வேண்டிய நியாயம் இருந்தது. அப்படி இருக்கும் போது 75. ந.பை. தான் வாங்கக்கூடிய அளவில் உச்ச வரம்பு வைத்த காரணத்தால், 75 ந.பை.-க்கு மேல் வரக்கூடாது என்று நடைமுறையில் வந்திருக் கிறது. ஆனால், 1951-ம் வருஷத்திலே அன்றைக்குச் செய்த சட்டப் பிரகாரம் அன்றைக்கிருந்த கூலி 15 அணா. அதில் மூன்றில் இரண்டு பாகம் பத்தணாவாகும். நாம் 12 அணா கொடுத்தோம். ஆக, இன்றைய அளவைவிட அன்றைக்கு அதிகமாகக் கிடைத்தது. செண்டிரல் சட்டத்தில் 3 இல் 2 பாகம் என்று கூறப்பட்டு இருக் கிறது. அந்த மாதிரி உச்ச வரம்பு இவ்வளவுக்கு மேல் போகக் கூடாது என்று செய்வது சரியல்ல என்று சொல்ல விரும்புகிறேன். அப்படிச் செய்யும்போது அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சம்பளம் கிடைக்காமல் போகிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகையில் பிரசவம் ஆவதற்கு முந்தி எத்தனை வாரம் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி யிருக்கிறோம். படிப்பு இல்லாத அவர்களுக்கு எப்போது பிரசவம்

25th July 1964] [திரு. ஜே. மாதா கவுடர்]

ஆகும் என்பதைச் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை. நடைமுறையில் ஒரு வாரத்திற்கு முந்தி கூட ஓய்வு கிடைப்ப தில்லை. ஆகவே அப்படியின்றி அவர்களுக்கு 12 வாரம் ஓய்வு கொடுப்பது என்ற நியதியை வைத்துவிட்டால் எந்தத் தொழி லாளர்களுக்கும் இதனால் பாதகம் ஏற்படாது என்று சொல்லி ஆதரிக்கின்றேன்.

MR. SPEAKER :. We are not discussing any provision in the Act. We are repealing the previous Act. All that the hon. Member says is not very relevant.

The question is—

"That the Madras Maternity Benefit (Repeal) Bill, 1964 (L.A. Bill No. 20 of 1964) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I move—

"The the Madras Maternity Benefit (Repeal) Bill, 1964 (L.A. Bill No. 20 of 1964) be passed."

The motion was put and carried and the Bill was passed.

THE MADRAS CINEMAS (REGULATION) AMENDMENT BILL, 1964 (L.A. BILL NO. 22 OF 1964).

* THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Mr. Speaker, Sir, I beg to move—

"That the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1964 [a] (L.A. Bill No. 22 of 1964) be taken into consideration."

Honourable Members are aware that during the discussion on the Madras Entertainments Tax (Amendment) Bill, 1961 in the House on the 29th March 1961, the Minister for Industries referred to the large scale evasion of entertainments tax prevalent in the remote village areas where there are touring cinemas and announced on the floor of the House that with a view to arrest such evasion, it has been ordered that surprise inspections of touring cinemas should be made in a select district. As a result of the surprise inspections, serious irregularties have been revealed. Some instances of malpractices were also noticed in permanent theatres as well. It was felt that if there was provision for suspending the licence of the cinema owners for an offence under the Madras Entertainments Tax Act. 1939 (Madras Act X of 1939) it would produce salutory effect and evasion of tax would practically disappear.

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 20th July 1964.

[Srimathi Jothi Vencatachellum] [25th July 1964

Subsequently the question of publishing a list of offenders was considered so that the Collectors might take into account the antecedents of applicants before granting them licences for cinema exhibitions. As the licensing authority has to function only within the statutory provisions of the Madras Cinemas (Regulation) Act, 1955 (Madras Act IX of 1955) and the rules framed thereunder, he cannot take evasion and tax antecedents of the applicant into account. There is, at present, no provision in Madras Act IX of 1955 to disqualify a person who has been convicted of an offence under the Madras Entertainments Tax Act, 1939 from holding a licence under the former Act for any specified period. It is, therefore, proposed to make necessary amendments to the Madras Cinemas (Regulation) Act, 1955.

There is also no provision in Madras Act IX of 1955 to enable the licensing authority to take into consideration also the antecedents of the applicant in deciding whether to grant or refuse a licence or to revoke or suspend the licence of a licensee who has been convicted of an offence under Section 14 of Madras Act X of 1939, or has been permitted to compound such offences under Section 15 of that Act. It has also been decided to make suitable provision in Madras Act IX of 1955 in this repect also. The Bill seeks to give effect to the above decisions.

I request the House, Sir, that the Bill be taken into consideration.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1964 (L.A. Bill No. 22 of 1964) be taken into consideration."

* திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய கனம் சுகாதார அமைச்சர் தமிழ்நாடு படக் காட்சி சம்பந்தமாகக் கொண்டு வந்துள்ள மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று நான் திருத்தம் கொடுத்திருந்தேன். அதற்குக் காரணமே குறிப்பாக 3-ஏ பகுதியில்

No person shall be eligible for applying for a licence if he has been convicted for an offence under the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939) unless a period of two years has elapsed since his conviction:

என்று இருந்தது. இது சரியல்ல என்று நான் கருதியது போலவே அமைச்சரும் கருதியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. காரணம் அதற்கு அவர்களே திருத்தம் கொடுத்திருக்கிறார்கள்.

பலஊர்களில் சினிமாக் கொட்டகைகள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் பலரிடம் டிக்கெட் இல்லை. இப்படி தமாஷா வரியை ஏய்க்க அனுமதிக்கக்கூடாது என்கிறார்கள். அதை நாங்களும் ஒத்துக்கொள்கிறோம். விற்பனை வரி சம்பந்தமாக இப்போது எடுத்துக்கொள்கிற தீவிர நடவடிக்கைகளைப் பாராட்டுகிறோம்.

25th July 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

இந்த விஷயத்தில் இன்னும் தீவிரமான மசோதாவைக் கொண்டு வரவேண்டுமென்பது எங்களுடைய ஆசை. அமைச்சர் அவர்களே, நான் நினைத்த திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிற காரணத்தால் நான் என்னுடைய திருத்தத்தை வற்புறுத்தாமல் இந்த மசோதாவைக் கொண்டுவந்ததற்காகத் தொழில் அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு, நடைமுறையில் இதைத் தீவிரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். 1-00 p.m

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நாங்கள் வரவேற்கிறோம். விற்பனை வரி கட்டுவதை ஏமாற்றும் வகையில் சினிமா கொட்டகை முதலாளிகள் கொடுக்கின்ற டிக்கட்டுகள் வேறாகவும், விற்பனை வரி அதிகாரிகளுக்குக் காட்டுகின்ற டிக்கட்டுகள் வேறாகவும் இருக்கின்ற நிலைமை பல இடங்களில் இன்றையதினம் இருந்து வருகிறது. அந்த மாதிரி ஏமாற்றுவது அதிகமாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மசோதாவைக் கொண்டு வந்து விளக்குகிற சமயத்திலேயே 'இத்தனை பேர் அரசாங்கத்தை ஏமாற்றினார்கள்; இத்தனை பேருக்கு அபராதம் போட்டோம்; இத்தனை பேருக்கு லைசென்ஸ் ரத்து செய்திருக்கிறோம்' என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அளித்திருந்தால் அரசாங்கத்தை மேலும் பாராட்டி இருக்க முடியும். இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு நடைமுறையில் தீவிரமாகச் செயல்படுத்தப்பட வேண்டும். இந்த வரி ஏமாற்றும் நிலைமை எங்களுடைய பகுதியில் அதிகமாக இருந்து வருகிறது. அவற்றைப் பெயரிட்டுச் சொல்ல வேண்டாமென்று நினைக்கிறேன். பல சினிமாக் கொட்டகைகளில் கூட்டம் அதிகமாக இருந்தும் வருமான வரிக் கணக்கைப் பார்த்தால் குறைவாக இருக்கிறது. எப்படி இப்போது வருமான வரி அதிகாரிகள் வியாபாரிகளின் வீடுகளுக்குச் சென்று சோதனை செய்கிறார்களோ, அதே போன்று சினிமாக் கொட்டகைகளிலும் 'ரெய்டு' செய்தால் பரவாயில்லை. சில புதிய படங்கள் வந்தால் நிறைய கூட்டம் இருக்கிறது. குறிப்பாகச் சொன்னால் எங்கள் கட்சியைச் சார்ந்த எம்.ஜி.ஆர். படங்களுக்கு நிறையக் கூட்டம் வருகிறது.

(மணி அடிக்கப்பட்டது)

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் சினிமாப் பிரசங்கத்துக்குப் போய்விட்டார்.

திருமதி டி. என். அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன் என்றாலும் அதை இன்னும் சற்றுத் தீவிரமாகப் பரிசீலித்து, யோசித்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சினிமாக் கொட்டகை முதலாளிகளும், டூரிங் சினிமாக் கொட்டகை சொந்தக்காரர்களும் தவறு செய்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. ஆயினும் டூரிங் சினிமாக்காரர்களின் நிலைமையைச் சற்று யோசிக்கப் பார்க்க வேண்டும். டூரிங் சினிமாக்காரர்கள்

பல தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். ஷோ டாக்ஸ் மூன்று மடங்கு ஆகிவிட்டது. எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் அதிகப் பட்டு விட்டது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்காக கனம் அங்கத்தினர் அவர்கள், 'வரி ஏமாற்றலாம்' என்று சொல்கிறார்களா ?

திருமதி டி. என். அனந்தநாயகி : அந்த அளவுக்கு பொறுப்பற்ற முறையில் நான் சொல்லவில்லை. வரி அதிகமாகும்போது ஏமாற்றுகின்ற புத்தி அதிகமாகி விடுகிறது. தாங்கக் கூடிய அளவு வரி இருந்தால் இந்த நிலைமை வளராது. ஷோ டாக்ஸ் அதிகமாகி விட்டது; சர்சார்ஜ் அதிகமாகிவிட்டது. அதற்காக வரி ஏமாற்றுகின்றவர்களைத் தண்டிக்காமல் இருக்கவேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. ஆனால் பெரிய குற்றங்கள், சிறிய குற்றங்கள் என்பதைப் பாகுபாடு செய்து பார்க்கவேண்டும். நான் ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். மூன்று பெண்கள் 0.44 ந.பை. டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே போய் அதிகமான நெருக்கடி இருந்த காரணத்தால் 0.84 ந.பை. டிக்கட் கேட்டார்கள். அவ்வாறு டிக்கட் மாற்றிக் கொடுக்கும்போது ரூ.1.20 பைக்குப் பதிலாக ஏதோ பத்துப் பதினைந்து பைசா அதிகமாக வாங்கி விட்டார்கள் என்ற காரணத்திற்காக டி.சி.டி.ஓ., சி.டி.ஓ. எல்லோரும் வந்து பார்த்து அவருக்கு 14 ரூபாய் அபராதம் போட்டார்கள். இந்த மாதிரி சிறிய குற்றங்களுக்குக் கூடப் பெரிய தண்டனை அடையத் தான் வேண்டுமா ? வள்ளுவர் கூட—

"கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்"

என்று தான் கூறுகிறார். தண்டனை கொடுக்கவேண்டாம் என்று சொல்லவில்லை. எந்த அளவுக்குத் தண்டனை கொடுத்தால் அந்தக் குற்றம் தாங்கும் என்பதை ஆராய்ந்து தண்டனை கொடுக்க வேண்டும். வரி ஏமாற்றும் குற்றங்கள் பல முறை செய்தால் கூட இரண்டு வருஷத்திற்கு வேறு அப்ளிகேஷன் போட முடியாது என்ற நிலைமையிலே சட்டம் இருக்கிறது. அப்படிப்பட்டவர்களைப் பொறுத்தவரை கண்டிப்பாகத் தண்டிக்கவேண்டும். அதற்கு யாரும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், சிறிய அளவில் குற்றம் செய்தவர்களையும் இதே முறையில் தண்டிப்பது என்றால் அது மிக அதிகமான தண்டனையாக இருக்கும். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். மோட்டார் வெகிகிள்ஸ் ஆக்ட் இருக்கிறது. அந்தத் துறையிலே பல தவறுகள் செய்கிறார்கள். அவர்களை உடனே இந்த ரூட்டில் இரண்டு ஆண்டுகளுக்குப் போகக் கூடாது என்று சொல்லி விடுவதில்லை. அதனால் குற்றம் செய்தவரைத் தண்டிக்காமல் விடுவதும் இல்லை. எப்படி அதனை நடத்தி வருகிறார்; எத்தனை குற்றங்கள் செய்தார்; என்னென்ன தண்டனையை அவர் பெற்றிருக்கிறார் என்பதற்கான ஹிஸ்டரி ஷீட் மெய்ன்டெயின் பண்ணுகிறார்கள். பஸ் விடுகின்றவர்களுடைய ஹிஸ்டரி ஷீட் ரொம்ப மோசமாக இருந்தால்தான் அந்த ரூட்டில் பஸ் விட அனுமதி கொடுக்க முடியாது என்று உத்தரவிடுகிறார்கள்.

அதே போன்று இந்த சினிமா கொட்டகைகளைப் பொறுத்தும் ஒரு ஹிஸ்டரி ஷீட் வைத்துவிடலாம். என்னென்ன தவறு செய்திருக்கிறார்கள்; என்னென்ன தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் பரிசீலித்து அவர்களுக்குத் தண்டனை கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். "ஒன் ஆப் தி கன்சிடரேஷன் அண்டர் செக்ஷன் 5" எக்ஸ்பீரியன்ஸ் இருக்கவேண்டும்; பேஷன்ஷியல் ஸ்டேடஸ் இருக்கவேண்டும். ஹிஸ்டரி ஷீட் பார்க்கவேண்டும். அதையெல்லாம் கவனித்து லைசென்ஸ் கொடுப்பதா, ரத்து செய்வதா என்று முடிவு செய்யவேண்டுமே தவிர, 'மாண்டேட்டரி' யாக இரண்டு ஆண்டுக்கு அப்ளிகேஷன் போடக் கூடாது என்று சொல்லக்கூடாது. அவ்வாறு சொன்னால் லட்சக் கணக்கான ரூபாயை அதிலே போட்டிருப்பவர்களுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விடும். ஒரு சாதாரண குற்றத்திற்காகப் பெரிய நஷ்டத்தை விளைவிக்கக் கூடிய அளவுக்கு தண்டனை இருக்கக் கூடாது. இன்னும் பல திருத்தங்கள் செய்யவேண்டும். சினிமா டோகிராப் ஆக்ட்டின்படி, ஃபைன் போடவேண்டும், சஸ்பெண்ட் செய்யவேண்டும், அல்லது கான்சல் செய்யவேண்டும். சஸ்பென்ஷன் என்பதற்குப் பதிலாக கம்பவுண்டிங் செய்யச் சொல்லாம். 'ஒரு நாளைக்கு 100 ரூபாய் கட்ட வேண்டும்' என்று சொன்னால் அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது. ஆகவே, சட்டத்தில் இன்னும் பல திருத்தங்கள் செய்ய வேண்டியிருப்பதால் இதை ஆற அமர ஆலோசித்துச் செய்யவேண்டும். 'மாண்டேட்டரி' யாகப் போட வேண்டாம். ஆகவே, அரசாங்கம் ஆலோசித்துப் பார்த்து இதனால் விளையும் பாதகங்களை யோசித்து சற்றுக் கருணையோடு இதைச் செய்வது நல்லது என்று கூறிக் கொள்கிறேன்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்போதிருக்கிற சட்டத்திலே வரி கொடுக்காமல் ஏமாற்றினால், வரியிலிருந்து தப்பிக்க முயற்சிகள் செய்தால் அவர்களுக்கு ஏதோ பைன் போடலாம் என்ற நிலைமைதான் இருக்கிறது. அதைப் பல வருடங்கள் அமுல் நடத்திப் பார்த்தோம். எவ்வளவு தடவை இதைக் கடுமையாக அமல் நடத்த வேண்டுமென்று முயற்சி செய்தாலும் அகப்பட்டுக் கொண்டால்தான் ஃபைன் கொடுக்க வேண்டும். அகப்பட்டுக் கொள்ளாமல் வரியை ஏமாற்றுவதில் ஏராளமான லாபம். அகப்பட்டால் கொடுக்கும் ஃபைன் குறைவு. அந்தவிதமான நிலை நீடித்துக் கொண்டே இருக்கிறது. இந்த சபையில் நாலைந்து ஆண்டுகளாகவே விற்பனை வரியில் நமக்கு முழுவதும் வசூலாகவில்லை என்றும் இந்த கேளிக்கை வரி நமக்கு சரியாக வசூலாகவில்லை என்றும் சொல்லி வந்திருக்கிறேன். அந்த சமயத்தில் எல்லாம் இந்த சபை நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு ஏதாவது டெட்டரன்ட் பனிஷ்மெண்ட் கொடுத்தால்தான் இதை எல்லாம் தடுக்க முடியும் என்று இந்த சபையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு முறை இந்த விதமாக ஒரு பெரிய தியேட்டரில் 15, 20 டிக்கட்கள் மட்டும் தான் விற்றார்கள், உள்ளே 400 பேர்கள் இருந்தார்கள் என்று பிடித்ததை சொன்னேன். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கும்போது ஃபைன் போடுவதால் இந்தத் தவறுகளைத் தடுக்க முடியாது. அவர்கள் இந்தமாதிரி சட்டத்தை ஏமாற்றி வரி கொடுப்பதை

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [25th July 1964

ஏமாற்றினால் சஸ்பென்ஷன் செய்தால் பணம் சம்பாதிப்பது பாதிக்கப்படும் என்று தெரிந்தால்தான் ஒழுங்காக அவர்கள் வரியை ஏமாற்றாமல் இருப்பார்கள். ஆகவே, வரியை ஏமாற்றுகிறவர்களை ஏதோ அனுதாபம் காண்பிக்கும் முறையில், ஏதோ 4 பைசா அல்லது 8 பைசா தவறு செய்து விட்டார்கள், அதற்காக என்ன செய்வது என்றெல்லாம் சொல்வது பொருந்தாது. வரியை ஏமாற்றுகிறவர்களைக் கண்டுபிடிக்கவேண்டும், அப்படிக் கண்டுபிடித்து கேஸ் போட வேண்டும், மாஜிஸ்ட்ரேட் கன்விக்ஷன் செய்ய வேண்டும், கன்விக்ஷன் செய்த பின்னர்தான் இரண்டு ஆண்டுகளுக்கு அனுமதி கிடையாது என்று போட்டிருக்கிறோம். என்டெர்டெயின்மென்ட் டாக்ஸ் சம்பந்தமான தவறுகள் 14 (எ) அண்ட் 14 (ஸி) இரண்டிற்கும்தான் கன்விக்ஷன் முடிந்து இரண்டு ஆண்டுகளுக்குக் கிடையாது என்று சொல்லியிருக்கிறோம். எல்லாத் தண்டனைகளுக்கும் இரண்டு வருஷத்துக்கு அனுமதி கிடையாது என்று சொல்லவில்லை. இந்த பில் ஃபிரேம் செய்தபடி வந்திருந்தால் First aid boox வைக்கவில்லை என்றால் ஒரு தவறு, எக்சிபிஷன் சர்டிபிக்கேட் வைக்கவில்லை என்றால் ஒரு தவறு, இந்த மாதிரி குற்றங்களாக இருந்தாலும் இரண்டு ஆண்டுகள் அனுமதியில்லை என்று இருந்தது. பின்னர் என் சக அமைச்சர் அவர்கள் 14 (எ) அண்ட் 14 (ஸி) இவற்றிற்கு மட்டும்தான் இப்படி சஸ்பென்ஷன் செய்தபின் இரண்டு ஆண்டுகளுக்கு லைசென்ஸ் கொடுக்கமுடியாது என்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது மிகவும் பொருத்தமானது, நியாயமானது. ஒரு மனிதன் மற்றொரு மனிதனை ஏமாற்றினால் அதைப் பெரிய குற்றமாக நினைத்துத் தண்டிக்கிறோம். ஆனால் மனிதன் சமுதாயத்தை ஏமாற்றினால் நம் சமுதாய வளர்ச்சியில் அதை ஒரு தவறாக நாம் நினைக்கவில்லை. அதுதான் நமக்குள்ள ஒரு குறைபாடு. சமுதாயத்தை மனிதன் ஏமாற்றுவது தான் மிகப் பெரிய குற்றம், மனிதனை மனிதன் ஏமாற்றுவதை விட. சிறை தண்டனை கொடுக்காவிட்டாலும் புதிதாக ஏமாற்றுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்காமல் இருக்கவேண்டுமென்று சஸ்பென்ட் செய்கிறோம். இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is ——

'That the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1964 (L.A. Bill No. 22 of 1964) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

MR. SPEAKER : The question is—

'That clause 2 do stand part of the Bill.'

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I move—

'In clause 2, in the proposed new section 3-A, for the expression "an offence under the Madras Entertainments Tax Act, 1939", substitute the expression "an offence under clause (a) or clause (c) of section 14 of the Madras Entertainments Tax Act, 1939",

25th July 1964] [Sirmathi Jothi Venkatachellum]

The amendment was put and carried.

Clause 2 as amended was put and carried.

Clause 3.

MR. SPEAKER : The question is—

'That clause 3 do stand part of the Bill'.

PULAVAR K. GOVINDAN : Sir, I move—

For the proposed explanation to clause (b) of sub-section (1) of section 5 of the Principal Act, substitute the following explanation :

"*Explanation.*—For the purpose of this clause, the expression 'antecedents' means the conduct of the applicant in relation to the payment of any tax or dues payable by him to the Government or to any Local Authority as defined in the Madras Entertainments Tax Act, 1939 and to the Panchayats and Panchayat Unions constituted under the Madras Panchayats Act, 1958".

SRI S. MADHAVAN : Sir, I second it.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

* திரு. செ. மாதவன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த டிஸ்க்வாலிபிகேஷன் பிரிவிற்கு பின்னால் ஆன்டிஸீடன்ட்ஸ் என்ற வார்த்தை சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அது என்ன என்பது எக்ஸ்ப்ளனேஷன் மூலம் விளக்கப்பட்டிருக்கிறது. "any tax or dues payable by him" என்றிருக்கிறது. Any tax என்பது என்டர்டெயின்மென்ட் டாக்ஸை மட்டும் குறிப்பிடுமா அல்லது சர்க்கார் போடும் அத்தனை வரிகளையும் குறிப்பிடுமா என்ற சந்தேகத்திற்கு இடம் இருக்கிறது. திருத்தம் செய்யும் சட்டத்தில் டாக்ஸ் என்பது டிஃபைன் செய்யப்படவில்லை. என்டெர்டெயின்மென்ட் டாக்ஸ் ஆக்டில் 'டாக்ஸ்' என்பது விளக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தில் 'டாக்ஸ்' என்பது என்னவென்று குறிப்பிடப்படவில்லை. அதுவும் "any tax or dues payable by him" என்று வருகிற காரணத்தினால் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய எல்லா லயபிலிட்டிகளையும் கட்டுப்படுத்துமா என்ற சந்தேகம் இருக்கிறது. அதை விளக்கமாகப் போடவேண்டுமென்பது என் கோரிக்கை. Any tax or dues payable by him to the Government என்றிருக்கிறது. கவர்ன்மென்ட்டுக்கு மட்டும் இந்த என்டெர்டெயின்மென்ட் டாக்ஸ் கொடுக்கப்படுகிறதா, அல்லவா என்பது ஒரு பிரச்னை. பஞ்சாயத்து யூனியனுக்கு இந்த சர்சார்ஜ் என்ற முறையில் டாக்ஸ்

[திரு. செ. மாதவன்] [25th July 1964

போட உரிமை தரப்பட்டிருக்கிறதென்று நம்புகிறேன். அது கவர்ன்மென்ட்டுக்கு ட்யூ ஆகுமா? அல்லது பஞ்சாயத்துக்கு ட்யூ ஆகுமா என்பதைப் பரிசீலிக்கவேண்டும். காரணம் இந்தச் சட்டத்தில் கவர்ன்மென்ட் என்பது டிஃபைன் செய்யப்பட்டிருக்கிறது. செக்ஷன் 2 சப் கிளாஸ் 3-ல் Government means the State Government என்றிருக்கிறது. ஆகவே ஸ்டேட் கவர்ன்மென்ட்டுக்குள்ள வரியை மட்டும் கட்டுப்பத்துமா அல்லது பஞ்சாயத்து, முனிசிபாலிட்டிகளுக்கு கொடுக்கும் வரியிலும் தவறு செய்தால் "டிஸ்பவாலிபை" செய்யப்படுமா? ஆகவேதான் எங்கள் தரப்பிலிருந்து 'கவர்ன்மென்ட்' என்ற வார்த்தையுடன் லோக்கல் அதாரிட்டீஸ் என்பதையும் சேர்த்து பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் என்பதையும் சேர்த்து திருத்தம் கொடுத்திருக்கிறோம். லோகல் அதாரிட்டி என்பது ஏற்கெனவே என்டெர்டெயின்மென்ட்ஸ் டாக்ஸ் ஆக்டில் டிஃபைன் செய்யப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் என்பது 1958 பஞ்சாயத்து ஆக்டில் டிஃபைன் செய்யப்பட்டிருக்கிறது. அதையும் சேர்க்கவேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறோம். அரசாங்கத்தின் நோக்கம் எது என்று தெளிவாக இல்லாத காரணத்தினால்தான் இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய வரி எந்த வரியாக இருந்தாலும் அதைக் கட்டாமல் இருந்தால், பாக்கி இருக்குமானால் அதை Antecedent ஆக எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான். என்டெர்டெயின்மென்ட் டாக்ஸ் மட்டுமல்ல, மற்ற வரிகள் பாக்கி இருந்தாலும் அதையும் கவனித்துத்தான் லைசென்ஸ் கொடுக்கிறவர்கள் லைசென்ஸ் கொடுப்பார்கள். அதற்காகத்தான் "எனி டாக்ஸ்" என்று போட்டிருக்கிறோம். என்டெர்டெயின்மெண்ட் டாக்ஸாக மட்டுமே கொடுக்கவேண்டியிருக்கும் வரி பாக்கியைத்தான் எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற நோக்கம் இல்லை. எந்த வரியாக இருந்தாலு சரி, பாக்கியிருந்தால் அதை எடுத்துக்கொண்டு கொடுக்கலாமா, கூடாதா என்பதைப் பரிசீலிக்க அதிகாரம் கொடுக்கப்படுகிறது. பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கும் வரி பாக்கி இருந்தால் இந்த டாக்ஸ் taxes due to the Government என்ற முறையில் வருமா என்று கேட்டார்கள். இந்த பில்லைத் தயாரிக்கிறபோது நம் நோக்கம் என்டெர்டெயின்மெட் டாக்ஸ், சர்சார்ஜ் இவற்றை சர்க்கார் கலெக்ட் செய்து லோக்கல் அதாரிட்டீஸ்க்கு கொடுப்பது என்பது. அதனால் சட்டப்படி டாக்ஸ்-க்கு இருக்கின்ற பாக்கி என்ற முறையில் சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய பாக்கி என்று போட்டிருக்கிறோம். ஆகவே இதைத் தனியாக போட வேண்டிய தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

The amendment was by leave withdrawn.

Clause 3 was put and carried.

25th July 1964]

Clause 4.

MR. SPEAKER: The question is—

'That clause 4 do stand part of the Bill'.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Sir, I move—

"In clause 4, in the proposed sub-section (1) of section 9, for the expression 'an offence under section 14 of the Madras Entertainments Tax Act, 1939' substitute the expression 'an offence under clause (a) or clause (c) of section 14 of the Madras Entertainments Tax Act, 1939,".

The amendment was put and carried.

Clause 4 as amended was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Sir, I move—

'That the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1964 (L.A. Bill No. 22 of 1964) as amended be passed.'

The motion was put and carried and the Bill as amended was passed.

(8) THE MADRAS INDUSTRIAL ESTABLISHMENTS (NATIONAL AND FESTIVAL HOLIDAYS) AMENDMENT BILL, 1964 (L.A. BILL NO. 23 OF 1964).

* THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, I move—

'That the Madras Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964 (L.A. Bill No. 23 of 1964) be taken into consideration.'

இதிலுள்ள கருத்தை மட்டும் நான் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். இப்போது இருக்கின்ற சட்டப்படி விடுமுறை நாட்களில் ஒரு தொழிலாளி வேலை செய்தால் இரண்டு நாட்களுக்குள்ள சம்பளத்தைக் கொடுக்க வேண்டும், அல்லது ஒரு நாள் மாற்று விடுமுறையாகவும் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால், இந்த மாற்று விடுமுறை எப்போது கொடுக்கப்பட வேண்டும் என்பது சொல்லப்படவில்லை. ஃபாக்டரி சட்டத்தை எடுத்துக்கொண்டால், ஏதாவது விடுமுறை நாட்களில் ஒரு தொழிலாளி வேலை செய்தால், வேலை செய்த விடுமுறை நாளின் மூன்று நாட்களுக்கு முன்போ, அல்லது விடுமுறை நாளின் மூன்று நாட்களுக்குப் பின்போ இந்த மாற்று விடுமுறை கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே போன்று இந்த விடுமுறை நாட்கள் சட்டத்திலும் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தில் தான், விடுமுறை நாளில் வேலை செய்தால் ஒரு நாள் சம்பளமும், ஒரு நாள் மாற்று விடுமுறை கொடுக்கப்பட வேண்டும்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [25th July 1964

என்றும், அப்படி கொடுக்கப்படுகிற விடுமுறை; வேலை செய்த நாளின் மூன்று நாட்களுக்கு முன்போ அல்லது மூன்று நாட்களுக்குப் பின்போ கொடுக்கவேண்டும் என்கிற திருத்தத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். இதைப் பொதுவாக எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER : Motion moved—

'That the Madras Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964 (L.A. Bill No. 23 of 1964) be taken into consideration.'

SRI V. SANKARAN : Sir, I support the amending Bill but at the same time I am not able to understand the necessity for this Bill. The existing Act itself has been properly drafted and it is being implemented properly. I will read section 5 (b) of the existing Act which says—

'Where an employee works on any holiday allowed under section 3, he shall, at his option, be entitled to—

(i) twice the wages : or

(ii) wages for such day and to avail himself of a substituted holiday with wages on any other day.'

According to the proposed amendment, the Government want to give another benefit to the employee. He should be given 'wages on one of the three days immediately before or after the day on which he so works'. This is an additional benefit. In the statement of Objects and Reasons appended to the Bill, it is stated—

'Sub-clause (ii) of clause (b) of sub-section (2) of section 5 of the Madras Industrial Establishments (National and Festival Holidays) Act, 1958, provides that where an employee works on any holiday allowed under section 3, he shall at his option be entitled to wages for such day and to avail himself of a substituted holiday with wages on any other day. A similar provision is also contained in clause (ii) of sub-sction (3) of the said section 5. There is no provision in the Act stipulating the time-limit within which a substituted holiday should be allowed to an employee who is required to work on a holiday. It has been brought to the notice of the Government that the benefit of the substituted holiday is being indefinitely postponed by the employer till the end of the year and that the Inspector can initiate proceedings against the employer only, if in the meantime the latter had not allowed to the employee the substituted holiday.'

I do not know whether any such situation has arisen and the employer is going to postpone the benefit of the substituted holiday till the end of the year. The employee will have his option and therefore, I feel that there is no necessity for this amending Bill.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, though the employee is given the option to choose the holiday, he must be given an opportunity to implement it and that is why the Government

25th July 1964] (Srimathi T. N. Anandanayaki)

have thought it fit to specify the period in the Bill itself. Though the employee is given the option to avail himself of the holiday on one of the three days immediately before or after the day on which he so works, it is possible that the employer may be postponing it indefinitely. Mere giving option to the employee would not solve the problem. He must also be given an opportunity to choose the day within a reasonable time and that is the object of this Bill. So this Bill is necessary and I hope that this Bill would be welcomed by one and all.

* கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, தொழிலாளர்களுடையவும், முதலாளிகளுடையவும் உறவுகளைப்பற்றி ஸ்டாண்டிங் ஆர்டர்கள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதில் லீவ் கொடுக்கப்படவேண்டும், இன்ன இன்ன உரிமைகள் எல்லாம் கொடுக்கப்படவேண்டும் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக ஏழு நாட்கள் லீவ் கொடுக்கவேண்டும். என்று இருக்கிறது. ஆனால், முதலாளிகளிடம் பெர்மிஷன் கேட்டுவிட்டுத்தான் இந்த லீவ் எடுக்க முடியும். "Avail himself of the holiday" என்று போட்டிருந்தாலும், எம்ப்ளாயர்ஸ் பெர்மிஷன் கொடுத்தால் தான் லீவ் எடுக்க முடியும். ஆகவே தான் மாற்று விடுமுறை கொடுப்பதை நிர்ணயம் செய்யவேண்டும் என்ற முறையில், வேலை செய்த நாளின் மூன்று நாட்களுக்கு முன்னாலேயோ அல்லது மூன்று நாட்களுக்குப் பின்னாலேயோ கொடுக்கவேண்டும் என்று போட்டிருக்கிறோம். இது இல்லாவிட்டால் 'பின்னால் கொடுக்கிறோம், பின்னால் கொடுக்கிறோம்' என்று சொல்லிவிடுவார்கள். சில இடங்களில் இந்த லீவ் வருடக் கடைசி வரையிலும் எடுக்க முடியாத அளவில் போய் விடுகிறது. அது இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்தத் திருத்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Madras Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964 (L.A. Bill No. 23 of 1964) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras Industrial Establishments (National and Festival holidays) Amendment Bill 1964 (L.A. Bill No. 23 of 1964) be passed."

The motion was put and carried and the Bill was passed.

VI. ANNOUNCEMENTS—*cont.*

(2) BILLS PASSED BY THE LEGISLATIVE COUNCIL.

MR. SPEAKER : I have to announce to the House that the Madras Legislative Council has passed the Madras Prevention of Begging (Amendment) Bill, 1964, without any amendment.

[25th July 1964

I have also to announce to the House that the following Bills have been passed by the Madras Legislative Council without any recommendation.

(1) The Madras Appropriation (No. 4) Bill, 1964 (L.A. Bill No. 26 of 1964; and

(2) The Madras Appropriation (No. 5) Bill, 1964 (L.A. Bill No. 27 of 1964).

(3) NOMINATION OF COUNCIL MEMBERS TO THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS.

MR. SPEAKER : I have further to announce to the House that the Legislative Council has nominated the following five members to associate with the Committee on Public Accounts of the Legislative Assembly for the year 1964–65 :

(1) Sri Mohanlal Mehta.
(2) Sri C. Muthiah.
(3) Sri K. Rajaram.
(4) Sri N. V. Natarajan.
(5) Sri S. K. Sambandhan.

(4) NOMINATION OF COUNCIL MEMBERS TO THE COMMITTEE ON ESTIMATES.

MR. SPEAKER : I have also to announce to the House that the Legislative Council has nominated the following five members to associate with the Committee on Estimates of the Legislative Assembly for the year 1964–65 :

(1) Sri T. S. Arunachalam.
(2) Sri K. Ramadoss.
(3) Sri A. Chidambara Mudaliar.
(4) Sri K. Anbazhagan.
(5) Dr. A. Chidambaranathan.

1-30 p.m. The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, 27th July 1964.

The House then adjourned.

VII. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory rules and orders.

Nil.

B. Reports, Notifications and other papers.

* 199. *The Madras Appropriation (No. 4) Bill*, 1964 (*L.A. Bill No.* 26 *of* 1964).

* 200. *The Madras Appropriation (No. 5) Bill*, 1964 (*L.A. Bill No.* 27 *of* 1964).

* 201. *Annexure to the Madras Cinemas (Regulation) Amendment Bill*, 1964.

* Sent to Members on 23rd July 1964.

25th July 1964]

APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 706 on page 237 supra.]

A.—Details of storeyed rental flats and apartments under construction by the Housing Units of State Housing Board under the Union Government's Rental Housing Scheme for low-paid (earning less than Rs. 500 per mensem) State Government employees.

Agency. (1)	*Scheme area.* (2)	*Total estimated cost of scheme.* (3)	*Number of apartments.* (4)	*Remarks.* (5)
		UNDER PREPARATION.		
		RUPEES IN LAKHS.		
1 By the Board's Housing Unit at Coimbatore.	Kavandampalayam, Coimbatore.	34·65	240 apartments.	The question of sanction of the project is under consideration of Government. Detailed estimates are under preparation.
2 By the Board's Housing Unit at Tiurchirappalli.	Sengulam Colony, Tiruchirappalli.	32·90	330 apartments.	Work is in progress and is expected to be completed by the end of 1964.
3 By the Board's Housing Unit at Madurai.	New Natham Road, Madurai.	23·15	218 apartments.	Do.

பதில்.—குறைந்த வருமானம் (அதாவது மாதம் ஒன்றுக்கு ரூ. 500-க்குக் குறைவாக சம்பளம்) பெறும் மாநில அரசாங்க ஊழியர்களுக்காக மத்திய அரசாங்க வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வீட்டு வசதி போர்டின் வீட்டு வசதி யூனிட்டுகளால் கட்டப்படும் வாடகைக் குடியிருப்புப் பகுதிகள், குடியிருப்புகள் இவற்றைக் காட்டும் விவரங்கள்.

கட்டும் பணியை மேற்கொண்டுள்ள ஏஜென்சி. (1)	திட்டப் பகுதி. (2)	திட்டத்திற் குரிய மொத்த மதிப்பீட்டுச் செலவு. (3)	குடியிருப்பு களின் எண்ணிக்கை. (4)	குறிப்பு. (5)
		ரூபாய் லட்சத்தில்.		
1 தமிழ்நாடு வீட்டு வசதி போர்டின் கோயமுத்தூர் யூனிட்.	கவண்டம் பாளையம், கோயமுத்தூர்.	34·65	240	இத்திட்டத்திற்கு அனுமதி வழங்குவது குறித்து அரசாங்கம் யோசித்து வருகிறது. விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டு வருகின்றன.
2 தமிழ்நாடு வீட்டு வசதி போர்டின் திருச்சிராப்பள்ளி யூனிட்.	செங்குளம் காலனி (திருச்சிராப்பள்ளி).	32·90	330	வேலை நடந்து வருகிறது 1964 இறுதிக்குள் பூர்த்தியாகிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.
3 தமிழ்நாடு வீட்டு வசதி போர்டின் மதுரை யூனிட்.	புதியநத்தம் சாலை (மதுரை).	23·15	218	ஷை

[25th July 1964

APPENDIX II.

[*Vide* Answer to Starred Question No 715 on page 241 supra.]

Statement showing the details of overhead tanks constructed, open Wells sunk, old wells and Uranies improved in Koilpatti taluk, Tirunelveli district, in 1962–63 *and* 1963–64.

	1962–63.	1963–64.	
		Completed.	In progress.
(1)	(2)	(3)	(4)
1 Number of Overhead tanks constructed.	8	..	16
2 Number of open wells sunk	77	34	56
3 Number of old wells improved.	15	15	18
4 Number of Uranies improved ..	15	11	12

In addition to the above works, the construction of overhead tanks and improvements to old wells have been sanctioned for execution as follows :—

1. Overhead tanks.

1 Keela Eral .. ..
2 Thonugal .. ..
3 Chinnamalaikundru .. .. ..
} Koilpatti Block.

2. Improvement to old wells.

1 Villiseri Pillayarkoil .. .. ..
2 Villiseri Harijan well .. ..
3 Thonugal Harijan well .. ..
4 Mudukkumeendanpatti .. ..
5 Thalavankinar .. .. ..
6 Valampatti hamlet of Melakral ..
7 Thippanoothu Konar well .. ..
8 Thippanoothu Harijan well ..
} Koilpatti Block.

1962–63, 1963–64-ம் ஆண்டுகளில் திருநெல்வேலிமாவட்டம், கோவில்பட்டி தாலுக்காவில் கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டிகள், வெட்டிய கிணறுகள், அபிவிருத்தி செய்யப்பட்ட பழைய கிணறுகள், ஊரணிகள் பற்றிய விவரங்களைக் காண்பிக்கும் அறிக்கை.

	1962–63.	1963–64.	
		முடிவுபெற்ற வேலைகள்.	நடைபெற்று வரும்வேலைகள்.
(1)	(2)	(3)	(4)
1 கட்டப்பட்ட மேல் நிலைத் தொட்டிகளின் எண்ணிக்கை.	8	..	16
2 வெட்டிய கிணறுகளின் எண்ணிக்கை.	77	34	56
3 அபிவிருத்தி செய்த பழைய கிணறுகளின் எண்ணிக்கை.	15	15	18
4 அபிவிருத்தி செய்யப்பட்ட ஊரணிகளின் எண்ணிக்கை.	15	11	12

25th July 1964

மேற்சொன்ன வேலைகளைத் தவிர, மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள மேல் நிலைத் தொட்டிகள், பழைய கிணறு அபிவிருத்தி வேலைகள் இவற்றின் விவரம் வருமாறு :—

1. மேல் நிலைத் தொட்டிகள்.

1 கீழ் ஈரால் .. ..
2 தோனுகால் .. ..
3 சின்னமலைக் குன்று .. .. ..
} கோயில்பட்டி வட்டாரம்.

2. பழைய கிணறுகளை அபிவிருத்தி செய்தல்.

1 வில்லிசேரி பிள்ளையார் கோயில் ..
2 வில்லிசேரி ஹரிஜனக் கிணறு .. ..
3 தோனுகால் ஹரிஜன் கிணறு .. ..
4 முடுக்கு மீண்டானபட்டி .. ..
5 தலவன் கிணறு .. .. ..
6 மேல் ஈரால் குக்கிராமமான வேலம்பட்டி.
7 திப்பனூத்து கோனூர் கிணறு .. ..
8 திப்பனூத்து ஹரிஜன கிணறு .. ..
} கோயில்பட்டி வட்டாரம்.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 27th July 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Mettur Dam

* 644 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether the Government have examined the causes for the low level of water in Mettur Dam at present?

(b) if so, the details thereof; and

(c) the steps taken for ensuring adequate flow of water in the dam in future?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) & (c) Owing to the partial failure of South-west Monsoon during the years 1963 and 1964 and other seasonal conditions which were beyond our control the storage level in Mettur is low.

The position has been reviewed from time to time and suitable and practicable measures have been undertaken to regulate and distribute the available water equitably and satisfactorily for the crops.

திரு. கே. பொன்னையன் : தலைவர் அவர்களே, கோடிக் கணக்கான பணம் செலவழித்து நிறைய நாம் அணைகளைக் கட்டுகிறோம். இப்படிப் பருவ மழை தவறுவதால் விவசாயிகளின் கதி மிகவும் மோசமாக இருப்பதினால், அணைக்கட்டு நீர்ப் பிடிப்பு பகுதிகளில் செயற்கை மழையைக் கொண்டுவருவதற்கு அரசாங்கத்தினிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா ? அப்படியானால், அதை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

THE HON. SRI V. RAMAIAH : I request the hon. Member to put a separate question.

திரு. ஆர். சுப்பிரமணியம் : இம்மாதிரி மழை இல்லாமல் இரண்டு வருஷங்களாக வரட்சி ஏற்படுவதால், நமது சர்க்கார் மைசூர் சர்க்காருடன் கலந்து பேசி தண்ணீரை அதிகப்படுத்த ஏதாவது ஆலோசனை செய்ததா ? அப்படியானால், அதனுடைய விவரம் என்ன ?

[27th July 1964

கனம் திரு. வெ. ராமைய்யா : தண்ணீர் இருந்தால்தான் மைசூர் சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்த முடியும். காவேரி காச்மெண்ட் ஏரியாவில் மழை கம்மியாக இருந்தது என்பதுதான் நான் இப்பொழுது சொன்ன விவரம்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தண்ணீர் குறைவாக இருப்பதினால், 'போரிங்' முதலியவைகள் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் பல திட்டங்களை வகுத்து பல கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்த போதிலும், அவைகள் நல்ல விதமாக இயங்குவதற்கு அரசாங்கம் கவனிப்பதற்கு ஏற்பாடு செவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தஞ்சை ஜில்லாவிலிருந்து வரக்கூடிய கனம் அங்கத்தினர் தஞ்சை ஜில்லாவில் போரிங் கிணறுகள் அமைப்பது நலமாக இருக்கும் என்ற ஒரு முடிவுக்கு வந்தது குறித்து எனக்குக் சந்தோஷம். தஞ்சை ஜில்லாவில் இருக்கக்கூடிய பாசன ஆதாரங்களை இன்னும் முறையாகச் சீர்படுத்துவதற்கும், அதை விவசாயத்திற்கு நல்ல முறையில், தக்க முறையில் பாசனம் செய்வதற்கும் ஒரு பெரிய திட்டத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம். அது சம்பந்தமாக நமது மாகாணத்தில் இருக்கக்கூடிய நிபுணர்கள் மட்டுமல்ல, தேவைப்பட்டால் வெளி நாட்டிலிருந்து கூட நிபுணர்கள் வரவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். அந்த முறையில் தான் கடந்த ஒரு சில தினங்களாக தஞ்சை ஜில்லாவில் அமெரிக்காவிலிருந்து வந்த ஒரு சில நிபுணர்கள் அந்தப் பாசன ஆதாரங்களை யெல்லாம் பார்த்து வருகிறார்கள்.

திரு. எம். தண்டாயுதபாணி : காவேரியில் வந்து கலக்கிற உப நதிகளில் மைசூர் அரசாங்கத்தார் அணை கட்டிவிடுகிற காரணத்தினால், காவேரியில் தண்ணீர் அதிகமாக வருவதில்லை என்று குறிப்பிடப்படுகிறது. அது உண்மையா ? அதற்கு நம்முடைய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அது போன்ற விவரம் என்னிடம் இல்லை.

Highways Research Station

* 648 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether recruitment to the post of a Research Assistant in the Directorate of Highways Research Station was made during the closing months of 1962; and

(*b*) the rules of recruitment for the same?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No recruitment was made towards the end of the operation year 1962–63. However a Research Assistant was posted in October-November 1962 after re-arranging the existing posts.

27th July 1964]

(*b*) Direct recruitment; or

(ii) Recruitment by transfer from any other service; or

(iii) Promotion from among Field Assistants with not less than five years service; or

(iv) Recruitment from among persons borne on the workcharged establishment in the Highways Rsearch Station, Madras.

(v) Must possess a first or second class B.Sc., or B.A. degree of any University or institution recognized by the University Grants Commission for the purposes of its grant, with Chemistry, Physics, Mathematics or Geology as the main subject.

* 649 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the number of women employed in the Directorate of Highways Research Station, Madras, their age at the time of appointment, qualifications and the mode of appointment; and

(*b*) the nature of the posts to which they were appointed and the position they are occupying now?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Two women were employed in the Directorate of Highways Research Station, Madras. Their ages at the time of appointment were 24 and 19. The woman recruited for appointment to the post of Research Assistant possesses the degree of B.Sc. (Chemistry) II Class, Knowledge of French and working of Library. The other recruited for appointment to the post of Laboratory Assistant has passed Pre-University Course. Both were recruited outside the scope of employment exchange, as these two posts belong to workcharged establishment. The women have since resigned.

மேம்பாலம் கட்டுதல்

* 653 கேள்வி.—**திரு. ந. ப. செங்கோட்டுவேலு :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

மாவட்ட தலைநகரங்களில் உள்ள முக்கியமான இடங்களில் மேல் பாலம் கட்டும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஆம்.

திரு. மா. இராசங்கம் : மதுரையில் போக்குவரத்திற்குத் தடையாக இருக்கிற திருப்பரங்குன்றம் நெடுஞ்சாலையில் உள்ள மீனாட்சி மில்ஸ் கேட், சுப்ரமணியபுரம் கேட் ஆகியவைகளுக்கு மேம்பாலம் அமைக்க அரசாங்கம் எடுத்திருக்கிற முயற்சி யாது ? அந்த முயற்சி எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்கெல்லாம் முயற்சி எடுத்து, திட்டங்கள் கூட உருவாக்கி, நடத்த வேண்டிய நேரத்தில் தேசிய நெருக்கடி காரணமாக, போதுமான நிதி இல்லை. ஆகையால்

[27th July 1964

சென்னை நகரத்திற்கு அப்பால் இருக்கக்கூடிய ஜில்லா தலைநகரங்களிலும், மற்ற இடங்களிலும் மேம்பாலம் அவசியம் என்று அரசாங்கம் முடிவுக்கு வந்தபோதிலும், நிதி பற்றுக்குறை காரணமாக அவைகளை உடனடியாக எடுத்துக் கொள்ள முடியவில்லை.

திரு. மு. கருணாநிதி : மேம்பாலம் கட்டுகிற முயற்சி மாவட்ட தலைநகரங்களில் மாத்திரமல்லாமல், மாவட்டத்திலுள்ள மற்ற முக்கியமான நகரங்களிலும் எடுத்துக் கொள்ளப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : மாவட்ட தலைநகரங்களிலும், மற்ற இடங்களிலும், நெருக்கடி அதிகமாக, தேவை அதிகமாக இருக்கிற இடங்களிலெல்லாம் தொடர்ந்து இது குறித்துப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். நிதி வசதிக்குத் தகுந்த முறையில் அவைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எஸ். ஆறுமுகம் : இந்தக் கேள்வி 23-ம் தேதி வந்தது. இதே கேள்வி இன்றைய தினமும் வந்திருக்கிறது. அதே போல் திரு. மூக்கையா தேவர் போட்ட கேள்வியும் 23-ம் தேதி வந்தது. திரும்பவும் இன்று வந்திருக்கிறது.

MR. SPEAKER : What is the hon. Member's doubt? Is it whether the questions were taken up on that day?

SRI S. ARUMUGAM : Yes, Sir.

MR. SPEAKER : That day it was postponed. The hon. Member has not observed the proceedings properly. All these questions were postponed by me to some other date. Probably, the hon. Member is not aware of it.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் அமைச்சர் அவர்கள் அவசர நிலைமையை முன்னிட்டு மேம்பாலங்கள் கட்டுவது இப்பொழுது ஒத்திப் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் மதுரையில் திருப்பரங்குன்றத்தில் இருக்கிற மூன்று ரயில்வே கேட் மேம்பாலங்களும், தாம்பரம் போன்ற இடங்களிலுள்ள மேம்பாலங்களும், கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் இருக்கிற மேம்பாலமும் பெரும் பாதையில் இருக்கிற காரணத்தினால், அவசரகால போக்குவரத்திற்கு மிகவும் இன்றியமையாததாக இருப்பதினால், இதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : அவசர காலத்தை மட்டும் கருதி ஒத்திப்போடவில்லை. அவசர காலம் ஏற்பட்டதும், நிதி எப்படி, எந்த முறையிலே எதற்கு அதிகமாகச் செலவு செய்யவேண்டும் என்ற அடிப்படையில் செலவு செய்ய வேண்டும். அவசரகாலம் இருக்கும்பொழுது சென்னை நகரத்தில் மேம்பால வேலைகள் தொடங்கியிருக்கிறோம். நிதி வசதிக்குத் தகுந்த முறையில் மற்ற இடங்களில் எடுக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். நிதி நிலைமை கொஞ்சம் வசதியாக இருக்கும் பட்சத்தில், மற்ற இடங்களிலும் எடுக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அரசாங்கம் அதைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டுதான் இருக்கிறது.

27th July 1964]

Road (Salaigramam to Serugani)

* 655 *Q.*—SRI C. SHINIVASAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to improve the existing new road from Salaigramam in Paramakudi taluk in Ramanathapuram district to Serugani near Devakottai (Ramanathapuram district); and

(*b*) if not, whether steps will be taken to expedite the construction of the road?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) The Government got prepared by the Chief Engineer (Highways and Rural Works) a list of works under the Security Measure Scheme in Ramanathapuram District at a cost of Rs. 4·40 crores. Among the works recommended by the Chief Engineer, the work of metalling the road from Salaigramam to Serugani *via* Surnam and Valani including construction of culverts wherever necessary for a length of 16 miles, was included. The Government of India were addressed for financial assistance to an extent of Rs. 2 crores for taking up any or all the works recommended by the Chief Engineer. The Government of India have regretted their inability to provide any financial assistance in the matter. The work referred to cannot, therefore, be taken under the Security Measure Scheme. The road in question vests in the Elayangudi and Devakottai Panchayat Unions. As the District Development Council, East Ramanathapuram has already selected new works on "Other Roads" for Third Plan for that Development District, it is not possible to consider the work during the Third Plan.

Madras City Roads

* 656 *Q.*—SRI A. ARUMUGAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to take over all the roads from the Corporation of Madras; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The Government have taken over the three National Highways, viz., Mount Road, Poonamallee High Road, the Great Northern Trunk Road and the portions of Madras Ennore Road and the New Avadi Road lying within the City limits.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த நெடுஞ்சாலைகளின் கீழ் சென்னை மாநகராட்சியின் டிரெயினேஜ் ஸிஸ்டம், மற்றும் குடி தண்ணீர்க் குழாய்கள் இருக்கிற காரணத்தால், இந்த மாநகராட்சி மன்றத்திலே அவைகள் இருந்தால் தான் சௌகரியமாக இருக்குமென்று மாநகராட்சி மன்றம் முறையீடு செய்ததா ? அவற்றைத் திருப்பிக் கொடுப்பதைப்பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

[27th July 1964

கனம் திரு. வெ. ராமைய்யா : இதையெல்லாம் கார்ப்பொரேஷன் மற்றும் சம்பந்தப்பட்டவர்களைக் கலந்து ஆலோசித்து, போக்குவரத்தின் நன்மைக்காக, முக்கியமான ரஸ்தாக்களை ஹைவேஸ் இலாகா எடுத்து நடத்துகிறது. அப்படி எடுத்து நடத்துவதனால் கார்ப்பொரேஷனுக்குப் பளு குறைகிறது. மற்ற ரோடுகளை நல்ல முறையில் கவனித்துப் போக்குவரத்துக்குத் தகுந்தவாறு வேலை செய்ய முடியும். இவற்றைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்னை இப்பொழுது இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : பல டிரெயினேஜ் சாக்கடைகள் எல்லாம் கூட நின்று விடுகின்றன. குடி தண்ணீர்த் தகராறும் ஏற்படுகிறது. வெவ்வேறு இலாகாக்களில் இருப்பதனால் பொது மக்கள் பாதிக்கப்படுகிற காரணத்தால், அருள் கூர்ந்து, இதை மீண்டும் பரிசீலனை செய்வார்களா ?

MR. SPEAKER : Again the hon. Member has put the same question.

ஆடுதுறை—பொறையார் சாலை

* 657 கேள்வி.—திரு. ப. ஜெயராஜ் : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாயவரம் தாலூகாவில் ஓடும் வீரசோழன் ஆற்றின் தென் கரையில் ஆடுதுறையிலிருந்து மங்கைநல்லூர் வழியாகப் பொறையார் செல்லும் சாலையை ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் எடுத்துக் கொண்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அச் சாலைக்குக் கப்பி போடும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Cement

* 665 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Works be pleased to state the details of the conclusions reached at the conference of the Collectors held in Madras, during the third week of December 1963 regarding proper distribution of Cement and for checking black-marketing in these commodities?

THE HON. SRI V. RAMAIAH : At the Conference of the Collectors held at Madras during December 1963 regarding distribution of cement, the following conclusions were arrived at, viz.,—

(i) The Collectors should not be asked to meet a portion of the demand of less than a wagon load of the wagon load consumers but the demand should be met by the Director of Industries and Commerce himself;

27th July 1964]

(ii) the factories should be asked to send stock despatch report to the Collectors; and

(iii) obtaining of permits by bogus consumers should be checked.

திரு. சோ. ஆறுமுகம் : இந்தக் கண்டிரோல் ஸிஸ்டம் இருக்கிற காரணத்தால், செமென்ட் பற்றாக் குறை ஏற்படுகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கண்டிரோல் இருப்பதனால் செமென்ட் பற்றாக்குறை இருக்குமென்று அரசாங்கம் கருதவில்லை. செமென்ட் பற்றாக்குறை இருக்கிறது. அதனால் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தில், சாதாரண ஒரு விவசாயிக்கோ அல்லது நகரங்களில் இருக்கிற சிறு தேவை உள்ளவர்களுக்கோ கிடைக்க வேண்டுமென்ற முயற்சியிலே இந்தக் கண்டிரோல் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் கால்வாய்கள் போடுவதற்காக வைக்கப்பட்டிருந்த செமென்ட் மூட்டைகள் காணமல் போய்விட்டன என்ற புகார் வந்ததா ? அப்படியானால் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தக் கேள்வி என்னைப் பொறுத்த வரையில் அவசியம்தான். தனிக் கேள்வி போட்டால், கண்டிப்பாக நான் நேரடியாகக் கவனித்து, பதில் சொல்ல முடியும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, at present the Collector and his Subordintae Officers can issue a permit for only 15 tons of cement and for getting a permit for more than 15 tons, an application should be sent to the Director of Industries. Also, will the Government issue specific instructions to the Collectors that agriculturists should be given preference over other applicants in regard to this matter?

THE HON. SRI V. RAMAIAH : So far as the distribution of cement is concerned, I do not think that it is advisable for us to make any chaige. As regards the second part of the question, viz., more cement should be made available to the agriculturists, our intention is that the need for agricultural purposes must find a high place. That is how steps are being taken by the local Officers.

திரு. மு. கருணாநிதி : செமென்ட் கள்ள வியாபாரம் செய்பவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? யாராவது கள்ள வியாபாரம் செய்து கைது செய்யப்பட்டிருக்கிறார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது மூல கேள்வியில் வராது. தனிக் கேள்வி போட வேண்டும்.

[27th July 1964

திரு. கே. ஏ. மதியழகன் : 1963-வது வருடத்திற்கு நாம் அடிவு னலாகக் கேட்ட செமென்ட் எவ்வளவு? அதில் எவ்வளவு நமக்கு அனுமதிக்கப்பட்டது என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : சொல்ல முடியும். தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : கண்டிரோல் விலைக்கு செமென்ட் கிடைப்பதில்லை. கள்ள மார்க்கெட்டில் கிடைக்கிறது. ஆகவே கண்டிரோலை எடுத்து விட்டால், ஏழை விவசாயிகளுக்கு கிடைக்குமென்று சர்க்கார் கருதுகிறதா? ஆகவே அதை எடுப்பதற்குச் சர்க்கார் முயற்சி எடுக்குமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அரசாங்கத்தின் கருத்து என்ன வென்றால், இப்பொழுது இருக்கக்கூடிய கண்டிரோல் லிஸ்டத்தினால் கொஞ்சம் கொஞ்சமாவது கிடைக்கிறது. அடியோடு எடுத்து விட்டால், குறிப்பிட்ட விலைக்கு ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்காது என்பதுதான்.

கனம் சபாநாயகர் : கண்டிரோல் இருப்பதனால்தான் கள்ள மார்க்கெட் என்றிருக்கிறது. அதனால்தான் கிடைக்கிறது. (சிரிப்பு.)

புலவர் கா. கோவிந்தன் : இப்பொழுது ஒரு தாலூகாவிற்கு எவ்வளவு செமென்ட் வருகிறது என்று தாசில்தாருக்குத் தெரிவதில்லை. ஏஜெண்டுகளுக்கு செமென்ட் மூட்டைகள் அனுப்பப்படுகின்றன. ஏஜெண்டுகள் இவ்வளவு வந்திருக்கிறது என்று சொன்னால் அதற்கேற்றவாறு தாசில்தார் பெர்மிட்கள் வழங்குகிறார். முன்பு எங்கெங்கே எவ்வளவு மூட்டைகள் விற்றனவோ, அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு, ஒரு தாலூகாவிற்கு அதிக மூட்டைகள் கிடைக்கின்றன. இன்னொரு தாலூகாவிற்குக் குறைவாகக் கிடைக்கின்றது. ஆகவே மொத்தமாக மாவட்டத்திற்கு அனுப்புகிற மூட்டைகளை கலெக்டருக்குத் தெரியப்படுத்தி, அதற்கேற்ற முறையில் எல்லாத் தாலூகாக்களுக்கும் நியாயமான முறையில் பிரித்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் சொன்ன யோசனைதான் இந்த மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டு, எவ்வளவு செமென்ட் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் விநியோகம் செய்வது என்று முன்கூட்டியே கலெக்டருக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. பல்வேறு பிரச்னைகளை ஆராய்ந்து அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : செமென்ட் பற்றாக்குறை இருப்பதன் காரணமாக இன்னின்ன அத்தியாவசிய வேலைகளுக்குத்தான் செமென்ட் உபயோகிக்க வேண்டுமென்ற ஒரு ஏற்பாடு செய்வது அனுகூலமாக இருக்காதா என்பதை அரசாங்கம் கவனிக்குமா?

27th July 1964]

கனம் திரு. வெ. ராமைய்யா : மிக அத்தியாவசியமான வேலைகளுக்கு செமென்ட் கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். மொத்தமாக ஒரு இடத்திலிருந்து முடிவு செய்ய வேண்டும் என்பதற்குப் பதிலாக, அந்தந்த மாவட்டத்திலுள்ள அதிகாரிகள் ஸ்தலத்திற்குத் தகுந்த தேவைகளை ஒட்டிச் சொல்லும் வகையில் அவர்களுக்குக் கிடைப்பதற்குப் போதுமான வசதி செய்திருக்கிறோம். குறிப்பாக, விவசாய உற்பத்தி சம்பந்தப்பட்ட வேலைகள் எதுவாக இருந்தாலும், ஹை பிரயாரிட்டி கொடுக்க வேண்டுமென்பது. இன்னும் மற்ற தேவைகளுக்கு அவர்கள் எப்படி நிர்ணயம் செய்கிறார்களோ, அதற்குத் தகுந்தபடி கொடுக்க வேண்டுமென்பது.

திரு. மு. சண்முகம் : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு ஒழுங்கான முறையில் வினியோகிப்பதற்காகத்தான் கண்ட்ரோல் வைக்கப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் சொன்னார்கள். அப்படி ஒழுங்காக விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை என்ற புகார் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டதா என்று அறியலாமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஏராளமாகத் தேவை இருக்கிறது. நினைத்த உடனே கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. கூடிய வரையில் சீக்கிரமாகக் கொடுக்க முயற்சி செய்கிறோம்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : தலைவர் அவர்களே, விவசாயிகள் செமென்ட் வேண்டும் என்று சொல்லி மனுப் போட்டால் வரிசைக் கிரமமாக அவர்கள் மனு ரிஜிஸ்டர் செய்யப்பட்டு கொடுக்கப்படுகிறது. ஆனால் மின்சார பம்பு செட்டுகள் வைக்க என்று கேட்டால் 3, 4 மூட்டைகள் வரை உடனடியாகக் கொடுக்க கலெக்டர் அவர்களுக்கு உத்தரவு அளிக்கப்படுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது இருக்கும் முறையில் எல்லோரும் பம்பு செட்டு வைக்கிறேன் என்று வந்துவிடுவார்கள். அவரவர்கள் சரியான தேவைக்குத் தகுந்தபடி இப்பொழுது செமென்ட் வினியோகம் செய்யப்படுகிறது.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, தற்போது எத்தனை டன் செமென்ட் தயாரிக்கப்படுகிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா : தனிக் கேள்வி வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, கட்டட வேலைகளுக்கு ஒதுக்கும்போது கண்டிராக்டர்களுக்கு அதிகப்படியாக ஒதுக்கப்படுகிறது; அவர்கள் பாதி அளவுகூடக் கட்டடத்தில் உபயோகிக்காமல், மீதப்படுத்துவதையெல்லாம் கள்ளமார்க்கெட்டில் கொண்டு வருகிறார்கள். ஆகவே, கட்டடத்திற்கு இவ்வளவு என்று மதிப்பிடும் நேரத்திலேயே, இவ்வளவுதான் தேவைப்படும் என்று சரியாகக் கணிக்க மதுப்பிடும் முறையில் மாற்றம் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[27th July 1964

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது இருக்கும் முறையில் செமென்ட் வேண்டும் என்று சொன்னால், அதற்குப் ப்ளான், ஸ்கெட்ச், எஸ்டிமேட்டு எல்லாம் எஞ்ஜினியர்கள் போடவேண்டும். அதன் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. அதிகாரிகள் தவறு செய்யாமல்தான் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அதில் மாறுதல் செய்ய இடம் இல்லை.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, எல்லோரும் பம்பு செட்டுகள் போட வந்துவிடுவார்கள் என்று அமைச்சர் சொன்னார்கள். ஆனால், சூப்ரவைசர் அக்ரிமெண்ட் பேரில் உத்தரவு வாங்கிக் கொண்டு வரும் விவசாயிகளுக்குத்தான் செமென்ட் கொடுக்கப்படுகிறது இல்லையா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அக்ரிமெண்ட் செய்த பிறகு அந்த இடத்திற்கு மின்சார இலாகா ஸ்கீம் சாங்ஷன் ஆகவேண்டும். அதன் பிறகு சிக்கல்கள் இருக்க நியாயம் இல்லை. பம்பு செட்டுக்கு என்று செமென்ட் வாங்கினால், அதில் எத்தனையோ ஸ்டேஜுகள் இருக்கின்றன; ஸ்கீம் சாங்ஷன் ஆக வேண்டும்; ஆகாமல் இருந்தால் முன்கூட்டியே செய்யலாம் என்று இருக்கும். இதையெல்லாம் மொத்தமாகப் பார்த்துத்தான் செய்வார்கள். பம்பு செட்டுக்கு என்று செமென்ட் கொடுப்பது அவ்வளவு பொருத்தமாக இராது.

திரு. எம். தண்டாயுதபாணி : செமென்ட் வினியோகம் செய்வதில் தாசில்தாரிடம் வாங்கும் முறைக்குப் பதிலாகப் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களிலேயே வாங்க ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அப்படி உத்தேசம் இல்லை.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : விவசாயிக்கு முக்கியமான இடம் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் சொன்னார்கள். அவர்களுக்கு ஒரு மூட்டை, இரண்டு மூட்டைகள் வேண்டுமானால் அதைக் காலாகாலத்தில் கிடைக்கச் செய்ய வழிவகைகள் செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது இருக்கும் பிரச்னை நினைத்த உடனே கிடைக்கவில்லை என்பதுதான். விவசாயிகளின் தேவைக்குத் தக்க அளவில் வினியோகம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். உடனடியாக வேண்டும் என்று அவர்களே வேறு மார்க்கெட்டில் வாங்கிவிடுகிறார்கள்.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, ஒன்றரை ஆண்டுக்கு முன்னால் 135 மூட்டைகள் கள்ள மார்க்கெட்டில் விற்கப்பட்டன என்று, அரந்தாங்கி வட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டும், சம்பந்தப்பட்ட கண்ட்ராக்டர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர், தேர்தலுக்கு நன்கொடை கொடுத்திருக்கிறார் என்று, அவர்பேரில் நடவடிக்கை . . .

MR. SPEAKER : The question is disallowed.

27th July 1964]

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : சார், இப்பொழுது வருகிற செமென்டில் சாம்பல் கலந்திருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா ? அப்படியானால், அது எங்கே கலக்கப்படுகிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நிச்சயமாக பாக்டரியில் இல்லை; வேறு இடத்தில் கலக்கப் படுகிறது என்றால், ஸ்டாக்கிஸ்டிடமோ மற்றவர்களிடமோ அப்படிச் செய்யப் படுகிறது என்று தெரிந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : சபாநாயகர் அவர்களே, இப்பொழுது அரசாங்கம் கட்டும் கட்டடங்கள் எல்லாம் சுலபமாக செமென்டிலேயே கட்டப்படுகின்றன. அதனால் அதிகமாகச் செமென்ட் செலவாகிறது. ஆயிரக்கணக்கான டன்கள் செமென்ட் செலவாகிறது; கனம் அமைச்சர் அவசியமாக உள்ள கட்டடங்களுக்கு மட்டும் செமென்ட் என்று சொல்லி மற்றவைகளுக்குச் சுண்ணாம்பையே உபயோகிக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இதிலே அரசாங்கம் போதுமான கவனம் செலுத்தி வருகிறது. மராமத்து அதிகாரிகளும் கவனம் செலுத்துகிறார்கள். அதிகமாகச் சுண்ணாம்புக் காரையே உபயோகிப்பது பொருத்தவரை, கலப்பு சரியாக இல்லாவிட்டால், பெரும் பாதகம் வரும். அதோடு அல்லாமல், அதற்கு வேண்டிய உப பொருள்கள் கிடைப்பது இல்லை. இருந்தாலும் பஞ்சாயத்துக் கட்டடங்கள் அப்படி கட்ட முடியுமா என்று முயற்சி எடுக்கிறோம்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Do the Government allow the manufacturer of cement to keep a portion of the cement he manufactures and sell it, apart from the quota that is being delivered by him to Government?

THE HON. SRI V. RAMAIAH : The hon. Member may put a separate question.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, செமென்ட் பற்றாக்குறையைத் தீர்க்க, மாவட்டத் தேவைகளை நிறைவேற்றும் அளவுக்குச் சிறிய அளவில் செமென்ட் தொழிற்சாலைகள் அமைக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தக் கேள்வியை கனம் தொழில் அமைச்சர் அவர்களுக்குப் போடவேண்டும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, செமென்ட்டை நல்ல மார்க்கெட்டில் விற்க, அவை இன்றைய தினம் கள்ள மார்க்கெட்டில் விற்பதைத் தவிர்க்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்கிறதா, புது முறையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[27th July 1964

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது நாம் எடுத்திருக்கும் பல முடிவுகளை ஒட்டி எல்லோரும் கட்டுப்பாடாக, பர்மிட் இல்லாமல் செமெண்ட் வாங்குவதில்லை என்று இருந்தால், கணிசமான அளவுக்குக் குற்றங்கள் குறையும் என்று நம்புகிறேன்.

புதிய ரயில் பாதை

**666 கேள்வி.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :* கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டுக்கல் முதல் போடி வரையில் வத்தலகுண்டு வழியாக ரயில் பாதை அமைக்கும் விஷயமாக மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசு சிபாரிசு செய்துள்ளதா ?

THE HON. SRI V. RAMAIAH : No.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பல ஆண்டுகளுக்கு முன்பே இந்தத் திட்டம் சர்வே செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டது. அப்படியானால் சர்வே செய்யப்பட்டது என்பதாவது உண்மையா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : 1946-ம் வருஷம் இது சம்பந்தமாக ஒரு யோசனை இருந்தது, அது பரிசீலனை செய்யப்பட்டது ; அதன் பிறகு அந்த யோசனை ஏற்றுக்கொள்ளாமல் . . .

கனம் சபாநாயகர் : . . . கைவிடப்பட்டது.

கனம் திரு. வெ. ராமைய்யா : . . . கைவிடப் பட்டது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : 46-ல் யோசனை இருந்து பின்னால் கைவிடப் பட்டது என்று அமைச்சர் சொன்னார்கள். காரணம் என்ன, அது எகனாமிக்காக இல்லையா, அல்லது ரயில் ரூட் தேவையில்லை என்று தள்ளிவிட்டார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த லைனை விட மற்ற லைன்கள் அவசியமாக இருந்ததால், அதற்கு ஹை-ப்ரையாரிட்டியோ அல்லது ப்ரையாரிட்டியோ கூடக் கொடுக்காமல் விட்டு விட்டார்கள்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சுதந்திரம் வருவதற்கு முன்பு பரிசீலனை செய்யப்பட்ட அந்தத் திட்டம், சுதந்திரம் வந்த பிறகு கைவிடப் பட்டதற்குக் காரணம் என்ன என்று அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமையா : அதற்குப் பிறகு அபிவிருத்தி அடைந்து விட்டோம் ; அதைவிட முக்கியமான இணைப்புக்கள் அவசியமாக இருந்தன. ஏதோ பரிசீலனை செய்து விட்டோமே என்பதற்காக இல்லாமல், முறையாக எதையும் செய்ய முன்வந்திருக்கிறோம். ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஏற்பட்டு வரும் அபிவிருத்திகளைப் பார்த்தால், மிக்க நல்ல முறையிலேயே வளர்ச்சி அடைகிறது என்பதைக் காணலாம்.

27th July 1964]

திரு. மா. இராசாங்கம் : திண்டுக்கல்-கூடலூர் இரயில் பாதை தானே பூர்வாங்கமாகப் பேசப்பட்டு வந்தது ? அதில் ஏதாவது மாறுதல் இருக்கிறதா ? 9-00 a.m.

MR. SPEAKER : Is it the same line?

திரு. மா. இராசாங்கம் : அந்தப் பாதை பரிசீலனையில் இருப்பதாகப் பேசப்பட்டதே. அது நடைமுறைக்கு வர வாய்ப்பு இல்லாமல் போனதற்குக் காரணம் என்ன ? இனிமேலாவது இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்கு இதுபற்றிச் சிபார்சு செய்யுமா ?

MR. SPEAKER : Is it the same line or a different line?

SRI M. RAJANGAM : Extenion, Sir.

கனம் திரு. வெ. ராமைய்யா : இதற்கு நான் சற்று முன்பு தான் பதில் சொன்னேன். பரிசீலனை செய்த அந்த நேரத்திலே, அங்கே இருக்கக்கூடியவர்களின் முயற்சி காரணமாகப் பரிசீலனை செய்தார்கள். ஆனால், நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தொழில் வளர்ச்சிக்குத் தகுந்த முறையில், ஆங்காங்குள்ள தேவைக்குத் தகுந்த முறையில் மற்ற அவசியமான இரயில்வே லைன்கள் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அதற்குத் தகுந்தாற்போல் ப்ரையாரிடி கொடுத்திருக்கிறோம்.

திரு. மா. இராசாங்கம் : மத்திய அமைச்சரவையில் எங்கள் பக்கத்து எம்.பி. கேட்டதற்கு, "அது பற்றிப் பரிசீலனையில் இருக்கிறது" என்று சொல்லப்பட்டது. அது பற்றி ஏதாவது தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

கனம் சபாநாயகர் : எது பற்றிய தகவல் ? யாரிடமிருந்து தகவல் ?

திரு. மா. இராசாங்கம் : டெல்லியிலிருந்து, மத்திய அமைச்சரிடமிருந்து.

கனம் திரு. வெ. ராமைய்யா : என்னிடத்தில் ஒன்றும் தகவல் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : அந்த இரயில்வே லைன் கைவிடப் பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தேசீய நெருக்கடி நிலை முடிந்த பிறகு, இதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்யும்படி மத்திய சர்க்காருக்கு இந்தச் சர்க்கார் சிபாரிசு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதற்குத் தேசீய நெருக்கடி காரணமே கிடையாது. இந்த மாநிலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய தொழில் வளர்ச்சிக்குத் தகுந்தபடி, தொழில்களின் தேவைக்குத் தகுந்த முறையில் புது இரயில்வே லைன்களுக்குப் ப்ரையாரிடி கொடுத்து, மாநில அரசாங்கம் பரிசீலனை செய்து, மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்து கொண்டிருக்கிறது.

[27th July 1964

Trees on road sides

* 670 *Q.*—SRI C. M. AMBIKAPATHI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the income realised by the Government every year from the lease of Tamarind and Coconut and other fruit-bearing trees grown on road sides and river banks by the Highways and Public Works Department;

(*b*) whether proper attention is paid to grow more trees every year;

(*c*) the expenditure incurred thereon every year;

(*d*) whether it is a fact that trees get withered on account of the bark of the trees being scraped for numbering them; and

(*e*) whether numbering in black paint on a white painted background will be followed in order to avoid scraping of the barks of trees?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) In respect of Highways and Rural Works Department, a sum of Rupees seven lakhs, three hundred and eighty-five was realised by leasing the avenue trees during 1962–63. No separate accounts are maintained in respect of Public Works Department.

(*b*) Yes.

(*c*) During 1962–63 a sum of Rupees one lakh, eighty-five thousand, five hundred and fifty-four was spent on the planting and maintenance of the avenue trees by the Highways and Rural Works Department. An expenditure of Rupees twenty-nine thousand two hundred and thirteen was incurred by the Public Works Department during the same year.

(*d*) No.

(*e*) Does not arise.

திரு. கே. பொன்னையன் : சாலையோரங்களில் இருக்கும் மரங்களை இரவு நேரங்களில் சில பேர் வெட்டிப் பாழ் பண்ணுகிறார்களே, அப்படிச் சாலையோரங்களில் இருக்கும் மரங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பை பக்கத்துப் பட்டாதார்களுக்குக் கொடுத்தால், மரங்கள் வெட்டப்படுவது நிற்கும் அல்லவா ?

கனம் சபாநாயகர் : பகல் நேரத்தில் வெட்டுவதை கனம் அங்கத்தினர் பார்க்கவில்லையா ?

கனம் திரு. வெ. ராமையா : அப்படிப்பட்ட யோசனை ஒன்றும் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

27th July 1964]

Assignment of Lands to Harijans

* 731 *Q.*—SRI A. DURAIARASAN : Will the Hon. the Minister for Home be pleased to state the action taken on the resolutions passed by the West Thanjavur District Development Council during the year 1963–64 requesting for the assignment of lands to Harijans?

கனம் திரு. பூ. கக்கன் : சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, சபைமுன்வைக்கப்பட்டிருக்கிற ஏட்டில், 'திருப்புனவாசல் பழங்குடி சமூகத்தினரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவில்லை' என்று கண்டிருக்கிறது. விண்ணப்பங்கள் ஏராளமாக அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். நம்முடைய அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் அறந்தாங்கிப் பகுதிக்கு 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் வந்திருந்த போது அவரிடம்கூட விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது, பதிரக்குடியில் பஞ்சாயத்து ஒத்துக் கொள்ள மறுக்கிறது என்று இந்த ஏட்டில் போடப்பட்டிருக்கிறது. அங்கே உயர் ஜாதி இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையே ஏற்பட்டிருக்கிற மனக்கசப்பின் காரணமாகத்தான் அந்த நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்யும்படி அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பதிரக்குடியைப் பொறுத்தவரையில், மேய்ச்சல் தரைக்கு வேண்டியிருப்பதால் கொடுக்க முடியாது என்று பஞ்சாயத்தார்கள் தெரிவித்திருக்கிறார்கள். நான் எங்கு சுற்றுப் பயணம் சென்றாலும், ஏராளமான விண்ணப்பங்கள் வாங்கிக்கொண்டுதான் வருகிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும், கலெக்டர்களிடமும் கொடுத்து, ஜாரி செய்யக்கூடிய நிலங்களை ஜாரி செய்து கொடுக்கவேண்டுமென்றுதான் கேட்டுக் கொண்டு வருகிறேன்.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, இருபது குடிகள் பதிரக்குடியில் இருக்கிறார்கள். 20 ஏக்கரா 8 சென்ட் நிலம் அங்கே இருக்கிறது. பத்து ஏக்கரா நிலத்தை மேய்ச்சல் தரைக்கு வைத்துக்கொண்டு, வேறு புறம்போக்கு நிலம் கிராமத்தில் இல்லாத காரணத்தால், பத்து ஏக்கரையாவது அந்த இருபது குடிகளுக்குத் தர அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : நிலங்களை ஆர்ஜிதம் செய்து கொடுக்கும் போது அந்தந்தப் பஞ்சாயத்தினுடைய அபிப்பிராயத்தைக் கேட்கிறோம். 'கொடுக்க முடியாது' என்று பஞ்சாயத்தார் சொல்லிவிட்டால், அதுபற்றி யோசித்துத்தான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. கனம் அங்கத்தினர் இப்பொழுது சொல்லிய யோசனையைக் கலெக்டரிடம் சொல்லிப் பரிசீலனை செய்யச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

---

[a] *69-70-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.*

[27th July 1964

புலவர் கா. கோவிந்தன் : ஒரு ரெவின்யூ டிவிஷனுக்கு ஒரு தாசில்தாரும், ஒரு தாலூகாவிற்கு ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் இதற்காகப் போடப்பட்டிருக்கிறார்கள். ஒரு ஸ்பெஷல் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ப்ரப்போசல் அனுப்பியிருப்பார். ஆனால், அவர் மாற்றலாகி இன்னொரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போடப்படும்போது, அவர் மறுபடியும் அதே வேலையைத் தொடங்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் பட்டா வழங்கும் வேலையில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, யூ. டி. ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போட அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏதாவது ஓரிடத்தில் கூடுதலாக வேலை இருந்தால், 'தாசில்தார் வேண்டும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வேண்டும்' என்று ஒவ்வொரு ஜில்லாவிலும் அந்தந்த கலெக்டர் அரசாங்கத்தைக் கேட்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளையெல்லாம் கவனித்து, அவர்களுக்குத் தேவையான அதிகாரிகளைக் கொடுத்து உதவி செய்து வருகிறது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : அரிசனங்களுக்கு மனையோ நிலமோ கொடுக்கவேண்டுமென்று கோருகிறபோது, பஞ்சாயத்து போர்டினுடைய அனுமதியைக் கேட்கிறார்கள். வேண்டுமென்றே, 'அரிசனங்களுக்கு நிலம் கொடுக்கக்கூடாது' என்ற கெட்ட எண்ணத்தோடு 'நிலம் கொடுக்க முடியாது' என்று பஞ்சாயத்து போர்டிலுள்ளவர்கள் தீர்மானித்து விடுகிறார்கள். அம்மாதிரி இல்லாமல், அவசியப்பட்ட இடங்களை, பஞ்சாயத்து போர்டின் அனுமதியைப் பெறாமலேயே எடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : பஞ்சாயத்துச் சட்டம் செய்யும்போது சில அதிகாரங்களைப் பஞ்சாயத்திற்குக் கொடுத்திருக்கிறோம். நிலங்களை அஸைன்மென்ட் செய்யும் விஷயத்தில், பஞ்சாயத்தினுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து செய்வது நல்லது என்று அரசாங்கம் கருதுகிறது. குறிப்பிட்ட நிலத்தைக் கொடுக்கலாம் என்று பஞ்சாயத்து சம்மதம் தெரிவித்துவிட்டால், அந்த நிலத்தை நிச்சயமாகக் கொடுத்துவிடுவார்கள். ஆட்சேபணை செய்தால் தான் யோசித்துச் செய்யவேண்டியிருக்கிறது. இருந்தாலும், இதை அரசாங்கம் பரிசீலனை செய்து, பிற்பாடு எப்படிச் செய்யவேண்டுமோ அப்படிச் செய்யலாம். 'வேண்டுமென்றே சில பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் கெடுத்துவிட்டார்கள்' என்று சொல்வதிற்கில்லை. எத்தனையோ பேர்கள் நல்ல மனம் படைத்தவர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 'அரிசனங்களுக்கு நிலம் கொடுக்கவேண்டுமென்றால், பஞ்சாயத்தினுடைய அபிப்பிராயம் தெரிந்துதான் கொடுக்கவேண்டும், ஆட்சேபணை தெரிவித்தால் கொடுக்கக் கூடாது' என்று சொன்னார்கள்.

கனம் சபாநாயகர் : முடிவாகச் சொல்லவில்லை.

27th July 1964]

SRIMATHI A. S. PONNAMMAL : I will come to that point, Sir.

கனம் சபாநாயகர் : 'ஆட்சேபணை இருந்தால் அதையும் பரிசீலித்துத்தான் செய்ய முடியும்' என்று சொன்னார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பஞ்சாயத்தின் ஒப்புதல் கேட்கும்போது, நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பஞ்சாயத்துத் தலைவர்களும், அரிசனங்களுக்கு நிலம் கொடுப்பதை மறுப்பார்கள். ஆகையால், பஞ்சாயத்துக்கே ஒரேயடியாக இந்த அதிகாரத்தைக் கொடுத்துவிடாமல், கலெக்டரை வைத்து, அரசாங்கமும் தலையிட்டு, எங்கெல்லாம் புறம்போக்கு நிலம் இருக்கிறதோ அதை அரிசன மக்களுக்குக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏதாவது வழிவகை செய்வாரா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த அதிகாரத்தைப் பஞ்சாயத்துக்குக் கொடுப்பதா வேண்டாமா என்பதெல்லாம் பஞ்சாயத்துச் சட்டம் கொண்டுவரும்போதே தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டது. இந்தப் பொறுப்பைப் பஞ்சாயத்துக்குக் கொடுத்தால்தான் கிராம மக்களுக்கு, குறிப்பாக ஏழை மக்களுக்கு நன்மை கிடைக்கும், குடி தண்ணீர் வசதி, ரோடு வசதி கிடைக்கும் என்ற காரணத்தால் சட்டத்தை அவ்வாறு செய்தோம். ஏதாவது ஒரு பஞ்சாயத்து போர்டு ப்ரெசிடென்ட் 'கொடுக்க முடியாது' என்று சொன்னால், எல்லாப் பஞ்சாயத்து ப்ரசிடென்டுகளும் அப்படித்தான் செய்துவிட்டார்கள் என்று நினைப்பது நல்லதல்ல. எந்தப் பஞ்சாயத்து போர்டு ப்ரசிடென்ட்டாவது வேண்டுமென்றே கொடுக்கக்கூடாது என்று சொன்னால், கலெக்டரைக் கொண்டு விசாரணை செய்யச் சொல்லி உதவி செய்ய முன்வரலாம்.

திரு. ஆ. துரையரசன் : ஒரு குறிப்பிட்ட பஞ்சாயத்து போர்டில் ஒரு குறிப்பிட்ட புறம்போக்கு நிலம் இருக்கிறது. அதைத் தவிர வேறு நிலமே கிடையாது. அரிசனங்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று மெஜாரிட்டி மெம்பர்கள் தீர்மானம் நிறைவேற்றிவிட்டால் வேறு எந்த வகையில் அரிசனங்களுக்கு நிலங்களை அடமானம் செய்து கொடுப்பது? அப்படியானால், அவர்களை வேறு ஊருக்குக் குடியேற்றி விடுவதா ?

கனம் திரு. பூ. கக்கன் : வேறு ஊருக்குக் குடியேறுகிற பிரச்னை அல்ல. பஞ்சாயத்து எல்லைக்குள்ளே இருக்கும் புறம்போக்கு நிலத்தைக் கொடுக்க முடியாது என்று ஏற்பட்டுவிட்டால், சர்க்காரே பணம் போட்டு, அக்வையர் செய்து வேறு இடங்களை வாங்கிக் கொடுக்கவும் அரசாங்கம் சித்தமாக இருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : சில இடங்களில் அரிசனங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை அரிசனங்களுக்குப் பட்டா செய்து வைப்பதற்குப் பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் தேவையா ?

கனம் திரு. பூ. கக்கன் : அதற்குப் பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் தேவை இல்லை. சாகுபடிக்கான நிலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன, வீட்டு மனைக்கான நிலங்கள் ஒதுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[27th July 1964

Amenities to Harijans

* 732 Q.—SRI K. A. MATHIALAGAN : SRI RAMA ARANGANNAL : } Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Non-official Committee set up by the Government to investigate and report about the acquisition of lands for house-sites, burial grounds, etc., for Harijans, has submitted its report; and

(*b*) if so, whether a copy of the same will be placed on the Table of the House?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : அரிசனங்களுக்கு நிலம் ஒப்படை செய்வதில் நிர்வாக இயந்திரம் ஆமை வேகத்தில் இருப்பதால் பெரிய காலதாமதம் ஏற்பட்டு வருகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அதையெல்லாம் போக்கி விரைவாகச் செய்வதற்கு முயற்சி செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் கமிட்டியை ஏற்படுத்தினோம். அந்தக் கமிட்டி எல்லா ஜில்லாக்களுக்கும் சென்று, அதனுடைய அபிப்பிராயத்தை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கும் கட்டத்திலே இப்பொழுது ரிப்போர்ட் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். ரிப்போர்ட் அரசாங்கத்திற்கு வந்த பிற்பாடு அவர்கள் சொல்லும் ஆலோசனைகளை மேற்கொண்டு துரிதமாக நிலங்களை ஜாரி செய்து கொடுக்க ஏற்பாடு செய்வோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : நாம் பல நன்மைகளை ஹரிஜனங்களுக்குச் செய்திருந்தாலும்கூட, ஹரிஜனங்கள் பிணத்தைத் தூக்கிச் செல்வதற்கு ரோடு வசதி இல்லாமலும், சுடுகாடு இல்லாமலும் கஷ்டப்படுகிறார்கள். இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள்ளாவது இந்த நிலையைச் சீர்திருத்த அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER : This is only a suggestion and not a question.

கனம் திரு. பூ. கக்கன் : மயானம் ஏற்படுத்துவது, மயானம் அமைப்பது எல்லாவற்றையும் அமைக்கப்பட்டிருக்கும் கமிட்டி பரிசீலனை செய்து முடிவு எடுக்கும். இரண்டு வருஷத்தில் என்று அல்ல ; ஒரு வருஷத்திலும் முடிந்து விடலாம் ; இரண்டு வருஷத்திற்கு மேலும் ஆகலாம். ஜனத்தொகை அதிகமாகிக் கொண்டே வர வர கோரிக்கைகள் பெருகிக் கொண்டே போகும்.

27th July 1964]

திரு. மு. கருணாநிதி : ஹரிஜனங்களுக்கு வழங்கப்படும் வீட்டு மனைகள் ஊரின் ஓரப்பகுதிகளில் வழங்கப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்பு அடிப்படையில் ஊரின் மத்தியப் பகுதிகளில் அவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஊரின் மத்தியப் பகுதியில் புறம் போக்கு நிலங்கள் இருந்தால் கொடுக்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த நிலங்களைக் கொடுப்பதில் நிர்வாக இயந்திரத்தால் காலதாமதம் ஏற்படுகிறது. இதற்கு என்னால் பல உதாரணங்களைக் கொடுக்க முடியும். ஆகவே, இதைத் தவிர்க்க அரசாங்கம் உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுக்குமா ?

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் முதலில் போட்ட அதே கேள்வியைத்தான் போடுகிறார்கள். முன்பு 'ஆமை வேகம்' என்று சொன்னார்கள். இப்போது காலதாமதம் ஆகிறது என்று சொல்லுகிறார்கள். அதைவிட 'ஸ்லோ' ஆகப் போகக்கூடிய பிராணி ஒன்றும் கிடையாதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நத்தை வேகம் என்று சொல்லலாம்.

கனம் திரு. பூ. கக்கன் : நில ஆர்ஜிதம் செய்வதைத் துரிதப்படுத்தவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். மாதத்திற்கு ஒரு முறை ரெவின்யூ போர்டார் தகவல் கொடுக்கிறார்கள். இப்போது அமைக்கப்பட்டிருக்கக்கூடிய கமிட்டி இதையெல்லாம் பரிசீலித்து முடிவு கூறுவார்கள். பிறகு மேலும் துரிதப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

* 733 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are constructing houses for those belonging to valayar community in Poolankurichi village in Thirupathur Panchayat Union in Ramanathapuram district;

(*b*) when that scheme was sanctioned;

(*c*) the reason for the delay in completing these houses; and

(*d*) whether the Harijans of that village have applied for a Harijan colony?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம். பூலாங்குரிச்சி கிராமத்தில் உள்ள வலையர் வகுப்பினருக்காக 10 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்திற்கு 1962-63-ல் அனுமதி வழங்கப்பட்டது.

(உ) முதலில் இத்திட்டத்தினால் பயனடையவிருந்த நபர்கள், வேலையை முடிப்பதற்குத் தங்கள் பங்கு சரக்குகளை அல்லது உழைப்பைக் கொடுத்து உதவுவதன்மூலம் கான்ட்ராக்டருடன் ஒத்துழைக்கவில்லை. எனவே, இத்திட்டத்தினால் நன்மை பெறுவதற்காக வேறு நபர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. அவர்

[27th July 1964

களது ஒத்துழைப்புடன் பத்து வீடுகளும் 31-3-1964-க்குள் கட்டி முடிக்கப்பட்டன.

(எ) இல்லை.

நகரசபை அபிவிருத்தி மானியம்

*734 **கேள்வி.—திரு. டி. கடம்பவனசுந்தரம்:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களுக்கு கொடுக்கப்படுவது போன்று நகரசபைகளுக்கும் அபிவிருத்தி மானியம் கொடுக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: நகராட்சிகள், பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அலுவல்கள், அவை செய்த பணி ஆகியவை குறித்து அவற்றிற்குக் கொடுக்கப்பட்ட உதவி மானியங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், ஒரேமாதிரியான சில காரியங்களுக்காக இரண்டிற்கும் மானியங்கள் கொடுக்கப்பட்டு வருவது தெரிகிறது. சாலைகள், தொடக்கக் கல்வி, தாய்-சேய் நல விடுதிகள் ஆகியவை குறித்தும் கூடுதலான அகவிலைப்படியை கொடுப்பதற்கான செலவு குறித்தும் நகராட்சிகளுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் மானியம் கொடுக்கப்படுகிறது. வடிகால் வேலைகளுக்காகவும், இடைநிலைக் கல்விக்காகவும் நகராட்சிகளுக்கு மட்டும் மானியம் வழங்கப்படுகிறது. கிராமக் குடிநீர் வழங்கு வேலைகள், மகளிர்-சேய் நலத் திட்டங்கள், சமூகக் கல்வி ஆகியவற்றிற்காகப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியம் வழங்கப்படுகின்றது. இடைநிலைக் கல்வி பஞ்சாயத்து யூனியன்கள் சம்பந்தப்பட்ட விஷயமல்ல. வேளாண்மை—உள்ளூர் பாசன மானியங்கள் பஞ்சாயத்து யூனியன்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன; நகராட்சிகள் போன்ற நகர நிறுவனங்களுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

ஒரே மாதிரியான காரியங்களுக்காக பஞ்சாயத்து யூனியன்களுக்கும் நகராட்சிகளுக்கும் கொடுக்கப்படும் மானிய வீதங்கள் மானிய அளவு வேறுபடலாம்; பொதுவாகப் பார்க்குமிடத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமான மானியம் கொடுக்கப்படலாம். ஆனால் பஞ்சாயத்து யூனியன்கள் கிராமங்களில் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், சமுதாய நிலையை அபிவிருத்தி செய்யவும் அண்மையில்தான் ஏற்படுத்தப்பட்டன என்பதையும் சமுதாய அபிவிருத்தித் திட்டமும் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். நகராட்சிகள் நகர்புறங்களில் செயல்படுகின்றன. அவற்றின் நிதி ஆதாரங்கள் நிலையானவை; மேலும், மாநில அபிவிருத்தித் திட்டங்கள் நகர்ப்புற மக்களுக்கும் பயன்படுமாகையால், நகராட்சிகளுக்கு அபிவிருத்தி மானியங்களாக விசேஷ மானியம் எதையும் வழங்கும் உத்தேசம் இல்லை.

27th July 1964]

Rice Mill

*735 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any proposal has been received from the Union Government for setting up a modern rice mill in the State; and

(b) the details of the decision taken by the State Government, regarding the same?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்:

(அ) இல்லை.

(இ) வினா எழாது.

திரு. கே. ஏ. மதியழகன்: தனியார் துறையில் இனிமேல் எந்த ரைஸ் மில்களும் ஆரம்பிக்க அனுமதி கொடுப்பதில்லை என்று சர்க்கார் ஏதேனும் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: அப்படி ஒன்றும் இன்னும் குறிப்பாக உத்தரவு வரவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி: மக்கள் கைக்குத்தல் அரிசியைத்தான் சாப்பிடவேண்டுமென்று அரசாங்கம் பிரசாரம் செய்து வருகிறது. அப்படி இருக்கும்போது ஏன் மில்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: இதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. எம். தண்டாயுதபாணி: தஞ்சை மாவட்டத்தில் திருவாரூரில் ஒரு அரிசி மில்லை அரசாங்கத்தார் ஏற்படுத்துவதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது. அது உண்மையா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: அதற்கான ஏற்பாடு இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: கைக்குத்தல் அரிசி சாப்பிடும் முறை இப்போது நம் நாட்டிலே பரவலாக இல்லை. ஏதோ நோயாளிகள் சாப்பிடுகிறார்கள். ரைஸ் மில்லுக்குப் பர்மிட் கொடுக்கும் முறை ஊழல் பொருந்தியதாக இருக்கிறது. அதை உணர்ந்து லைசென்ஸ் கொடுக்கிற முறையை ரத்து செய்யும் நிலைமையை மத்திய சர்க்காருக்கு உணர்த்துவார்களா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. மு. கருணாநிதி: உணவு நிலையில் வளர்ச்சி காண பேசிய டில்லி அமைச்சர் ஒருவர் நவீன அரிசி ஆலைகளைத் தமிழகத்தில், குறிப்பாக தஞ்சாவூரில் திருவாரூரில் வைப்பதற்கு முயற்சி நடைபெறுகிறது என்று பேசியதாகச் செய்தி வந்திருக்கிறது. அதற்குத் திட்டம் இன்னும் வரவில்லையா? மாநில அரசாங்கம் அதில் ஈடுபடுமா?

[27th July 1964

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: தஞ்சையில் அவ்வாறு ஒன்றை ஏற்படுத்த முயற்சி நடந்து கொண்டு வருகிறது. அதற்கு தஞ்சாவூர் பெடரேஷனைச் சேர்ந்த தலைவர் கூட வேண்டிய காரியங்களைச் செய்து வருகிருர்.

திரு. எம். தண்டாயுதபாணி: திருவாரூரில் ஆரம்பிக்கப்பட இருக்கும் அந்த மில்லை அரசினரே ஏற்படுத்த இருக்கிருர்களா? அதனுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: போர்டு பவுண்டேஷன் மூலம் ஆரம்பிப்பதாக இருக்கிருேம்.

*736 **கேள்வி.— திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவு அரிசி மில்கள் ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

(இ) எந்தெந்த மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படும்?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: (அ) ஆம்.

(இ) இந்தத் திட்டம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: தமிழ் நாட்டில் சிதம்பரம், நாமக்கல், ராசிபுரம், கூட்டுறவு அரிசி ஆலைகளில் பங்கு பெற்றிருக்கிருர்களா? அந்த ஆலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டனவா? இல்லையென்ருல் ஏன் காலதாமதப்படுகிறது?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: என்னிடத்தில் தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, with a view to establish rice mills in the co-operative sector, have the Government issued any instructions to the Board of Revenue and the Collectors not to issue licence for private persons?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: அந்த விதமாக ஒன்றும் இல்லையென்று முதல் கேள்விக்கே பதில் சொன்னேன்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணுமூர்த்தி கவுண்டர்: புதிதாக இனிமேல் ரைஸ் மில்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என்று மத்திய உணவு அமைச்சர் திரு. சுப்பிரமண்யம் அவர்கள் சொன்னதாக பத்திரிகையில் படித்தேன். அதன் நிலைமை என்ன?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: அப்படி சொன்னதாக எனக்குத் தெரியவில்லை.

MR. SPEAKER: The hon. Member cannot contradict the Hon. Minister for Food on the basis of a newspaper report of what the Hon. Minister for Food in the Centre has said.

27th July 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தவிதமான உத்தரவை இந்த சர்க்கார் போடவில்லை என்பதைத்தான் நாங்கள் சொல்ல முடியும். அதைச் சொல்லியிருக்கிருேம்.

திரு. கே. ஏ. மதியழகன்: கூட்டுறவு முறையில் ஆரம்பிக்க உத்தேசித்திருப்பதால் தனியார் அரிசி ஆலைகளை படிப்படியாக தேசியமயமாக்கும் திட்டம் ஏதாவது சர்க்காருக்கு உண்டா? அதை பரிசீலனை செய்துகொண்டிருக்கிருர்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: திட்டம் இல்லை. இந்த விதமான ஆலோசனை இருக்கிறது.

திரு. எம். தண்டாயுதபாணி: சென்ற ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் நீடாமங்கலம் பகுதியில் அரசினர் வாடகைக்காக ஒப்புக் கொண்ட அரிசி மில் வேலை செய்கிறதா, இல்லையா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: பெடரேஷன் மூலம் எடுத்து வேலை செய்வதாக இருந்தது. ஆனல் அது எடுத்து வேலை செய்யப்படவில்லை.

புலவர் கா. கோவிந்தன்: அரிசி மில்லுக்கு லைசென்ஸ் வேண்டி ஒவ்வொரு ஊரிலும் இருந்து 10, 15 பேர்கள் அலைந்து கொண்டிருக்கிருர்கள். அரசாங்கக் கொள்கையை திட்டவட்டமாக தெரிந்து கொண்டால் அவர்கள் அலைவது மிச்சப்படும். சர்க்கார் நடத்துவது, கூட்டுறவுத் துறைக்கு அளிப்பது அல்லது வெளியாருக்கு தருவது என்பது பற்றிய அரசாங்கக் கொள்கை என்னவென்று திட்டவட்டமாக தெரிவிக்கப்படுமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: தனியார் துறையிலிருந்து ஒவ்வொரு ஊரிலிருந்து 10, 15 பேர்கள் அல்ல, எவ்வளவோ பேர்கள் போடுகிருர்கள். ஆனல் அரசாங்கம் அங்கு நெல் கிடைக்குமா, அரைக்க போதுமான நெல் கிடைக்குமா என்பதையெல்லாம் பார்த்துத்தான் லைசென்ஸ் கொடுக்கிருர்கள்.

மருத்துவமனை விஸ்தரிப்பு (திட்டக்குடி)

*737 **கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலுகா திட்டக்குடி ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க வேண்டி எவ்வளவு நிதி திரட்டியுள்ளதாக திட்டக்குடி ஆஸ்பத்திரி கமிட்டி சர்க்காருக்கு தெரிவித்துள்ளது?

(இ) திட்டக்குடி ஆஸ்பத்திரி கமிட்டி திரட்டிக் கொடுக்கும் பணத்தைப் பெற்றுக்கொண்டு அரசாங்கம் மேலும் அதிக தொகைபோட்டு ஆஸ்பத்திரி கட்டிடத்தை விஸ்தரித்து அதிக படுக்கை வசதிகளைச் செய்து தர உத்தேசமுண்டா?

[27th July 1964

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) 15,000 ரூபாய் வசூலிக்கப்பட்டு தயாராக இருப்பதாகத் தெரிய வருகிறது.

(இ) மேற்படி மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட கூடுதல் வார்டு ஒன்றைக் கட்டுவதுபற்றி ஆலோசிக்கப்பட்டது. ஆனால் தற்போதைய தேசீய நெருக்கடி காரணமாக இத் திட்டம் தள்ளிப் போடப்பட்டது.

திரு. இரா. நாராயணன்: இந்த திட்டக்குடி மருத்துவ விடுதியை அரசாங்க மருத்துவ விடுதி என்று பெயர் மாற்றப் பட்டிருக்கிறதா? அந்தக் கமிட்டியிலிருந்து கொடுக்கப்பட்ட பணத்தை எப்போது அரசாங்கம் எடுத்து வேலை செய்யும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கமிட்டியிலிருந்து கொடுக்கப்பட்ட பணத்தை பாங்கில் போட்டு வைத்திருக்கிறார்கள். தேசீய நெருக்கடி தளர்ந்த பிறகு அது ஆலோசிக்கப்படும்.

திரு. இரா. நாராயணன்: சுகாதார அமைச்சர் அவர்களே கல் நாட்டு விழா செய்தார்கள். நெருக்கடி நிலை என்று அப்போது சொல்லாமல் கல் நாட்டு விழா செய்து விட்டு . . .

கனம் சபாநாயகர்: கல் நாட்டு விழா செய்தால் என்ன? அது ஒன்றும் ஆளை நெருக்காது. தேசீய நெருக்கடி முடிந்த பிறகு செய்வார்கள்.

பஞ்சாயத்து அலுவலர்கள் மாநாடு

*738 கேள்வி.—திரு. நா. சௌந்தரபாண்டியன்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964 பிப்ரவரியில் நடைபெற்ற தமிழ்நாடு பஞ்சாயத்து அலுவலர்கள் சங்க மகாநாட்டு தீர்மானங்கள் அரசினருக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மேல் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் யாவை?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) இவ்விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

27th July 1964]

SRI C. CHIRANJEEVULU NAIDU: What are the resolutions passed at this Panchayat Conference?

THE HON. SRI S. M. A. MAJID: About 22 resolutions. If the hon. Member desires, a statement will be placed on the table of the House.

சிறப்பு வார விழாக்கள்

*739 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமூகக் கல்வி விஸ்தரிப்பு அதிகாரிகளின் வேலைகளில் ஒன்றான "வார விழாக்கள்" கொண்டாட ஏற்பாடு செய்தலின்படி ஆண்டுக்கு எத்தனை வார விழாக்கள் கொண்டாட ஏற்பாடு செய்யப்படுகின்றன?

(இ) அவ்விழாக்களின் விவரம் சபைமுன் வைக்கப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) & (இ) ஆண்டுதோறும் சுமார் 15 விசேஷ வாரங்களைக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் ஐந்தாண்டுத் திட்ட விளம்பரம், வன மகோற்சவம், உரமிடுதல், தேசிய ஒருமைப்பாடு; கூட்டுறவு; குடும்பத் திட்டம் முதலியவை முக்கியமானவை. மக்கள் மனதில் திட்ட உணர்வு ஏற்படுத்துவதே இவற்றின் முக்கிய நோக்கம். கொண்டாடப்படும் "வாரங்களின்" எண்ணிக்கையும் கொண்டாடும் காலமும் மாவட்டத்திற்கு மாவட்டம் உள்ளூர் நிலைமைகளுக்கேற்ப மாறுபடுகின்றன.

திரு. ஆ. துரையரசன்: இதற்காக வருடத்திற்கு சர்க்காருக்கு ஏற்படுகிற செலவு என்ன என்று அறியலாமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

Panchayats to be converted as Municipalities

*740 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the number and names of Panchayats that are proposed to be converted into Municipalities during the year 1964–65 in Salem district?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சேலம் மாவட்டத்தில் உள்ள அடியிற்கண்ட பஞ்சாயத்துக்களில் அடங்கிய பகுதிகளுக்கு நகராட்சிகள் அமைக்க வேண்டும் என முறையீடுகள் வந்துள்ளன:—

1. எடப்பாடி பஞ்சாயத்து.
2. நெல்லிப்பாளையம் பஞ்சாயத்து உட்பட நாமக்கல் பஞ்சாயத்து.
3. திருச்செங்கோடு பஞ்சாயத்து.
4. கிருஷ்ணகிரி பஞ்சாயத்து.
5. கொமரபாளையம் பஞ்சாயத்து.

இந்த முறையீடுகள்மீது இதுவரை முடிவு எடுக்கப்படவில்லை

[27th July 1964

SRI R. V. SWAMINATHAN : Was there any representation from Sivaganga Panchayat to convert it into a Municipality?

THE HON. SRI S. M. A. MAJID : No. Sir.

திரு. ஆ. துரையரசன் : தஞ்சை மாவட்டத்தில் பட்டுக் கோட்டை, ஐயம்பேட்டை போன்ற பகுதிகளில் 20,000-க்கு மேல் மக்கள் தொகையும், ஒரு லட்சத்திற்கு மேல் வருமானமும் இருப் பதால் அவற்றை நகராட்சிகளாக மாற்றுவதற்கு உத்தேச முண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி தனியாக அந்தந்த பஞ்சாயத்துக்கள் தீர்மானம் செய்து, நகராட்சியாக மாற்ற சம்பந் தப்பட்ட பஞ்சாயத்துக்கள் சம்மதம் கொடுக்கவேண்டும். பின்னர் கலெக்டர் சிபார்சு செய்யவேண்டும். அந்த ஊர் மக்கள் சர்க்காருக்கு முறையீடு செய்யவேண்டும். அது ஒன்றும் செய்ய வில்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : எந்த அடிப்படையில் முனிசிப்பாலிட்டி ஆகிறது? 15 ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்ட விதியின் அடிப்படையை வைத்துத்தான் செயல்படுகிறதா? அல்லது இப்பொழுது வருவாய், ஜனத்தொகை அடிப்படையில் மாற்ற சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : 20,000 ஜனத்தொகையும், ஒரு லட்சத்திற்கு குறையாத வருமானமும் இருந்தால் அது நகராட்சி யாக தகுதியுள்ளது.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : நாமக்கல், நெல்லிப்பாளையம் பஞ்சாயத்து இரண்டும் சேர்ந்து நகராட்சியாக மாற்றப்பட வேண்டும் என்று தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. தாலூகா தலைநகரமாகவும், அதிக ஜனத்தொகையும் கொண்டிருப் பதால் நாமக்கல்லை உடனடியாக நகரசபையாக மாற்ற அரசாங்கம் தனிக் கவனம் செலுத்துமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சமீபத்தில் இம்மாதிரிப்பட்ட பல பிரச்னைகளை எல்லாம் கருத்தில் கொண்டு 7 ஊராட்சி மன்றங்களை நகராட்சி மன்றங்களாக ஆக்க 1—4—1964-லிருந்து முடிவு செய்திருப்பதை அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள். இப்போதும் பல பிரச்னைகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் ஆராஅமற யோசித்துத்தான் முடிவு எடுக்கவேண்டும்.

திரு. இரா. நாராயணன் : நான் போட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலாக வயலூர் பஞ்சாயத்து பிரிக்கப்படுமென்று சொன்னார்கள். இந்தத் தேர்தலுக்குமுன் அது பிரிக்கப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நகராட்சிகளாக உயர்த்துவது பற்றித்தான் கேள்வி. பஞ்சாயத்து பைபர்கேஷன் சம்பந்தமாக தனி கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : 20,000 பேர் ஜனத்தொகை, ஒரு லட்சம் ரூபாய் வருமானம் இவை 15 ஆண்டுகளுக்கு முன்பு விதிக்கப்பட்ட விதி. இப்பொழுது அதை மாற்ற யோசனை இருக் கிறதா?

27th July 1964]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி யோசனை இல்லை.

திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர் : இடப்பாடி பஞ்சாயத்து நீண்ட காலமாக முனிசிப்பாலிட்டியாகும் நிலையில் இருந்தும்கூட அப்பஞ்சாயத்திலிருந்து தீர்மானம் வராததின் காரணமாக இதுவரை காலதாமதம் ஆகிக் கொண்டிருந்தது. இப்போது தீர்மானம் வந்தால் உடனடியாக அதை முனிசிப் பாலிட்டியாக ஆக்க சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்துக் கொள் வார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தீர்மானம் வந்திருக்கிறது. அதை சிப் எலெக்ட்டரல் ஆபீசருக்கு ரிமார்க்ஸ்க்கு அனுப்பி யிருக்கிறோம். கலெக்டருக்கு தகவல் கேட்டு அனுப்பப் பட்டுள்ளது. வந்த பிறகு அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : ஜில்லாவாரியாக இருக் கிறதா? திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து எவ்வளவு பஞ்சாயத் துக்களை முனிசிப்பாலிட்டியாக ஆக்கவேண்டுமென்று கோரிக்கை கள் அனுப்பப்பட்டிருக்கின்றன? ஜில்லாவாரியாக இல்லாவிட்டா லும் திருநெல்வேலிக்கு இருக்கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தகவல் இல்லை. பொதுவாக சேலம் சம்பந்தப்பட்ட வரையில்தான் கேள்வி. ஜில்லா வாரியாக அறிய விரும்பினால் தனிக் கேள்வி வேண்டும்.

UNSTARRED QUESTIONS

Railway level-crossings

238 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the number of unmanned Railway level-crossings in the State ;

(*b*) the details of the instructions received by the Government from the Ministry of Railways for averting accidents, near level-crossings ; and

(*c*) the action proposed to be taken in the matter.

A.—(*a*) Information with the Government is that the total number of unmanned level-crossings in this State is 2,144.

(*b*) & (*c*). The details of the suggestions made by the Government of India for averting accidents at Railway level-crossings and the action taken by the State Government on these suggestions are as follows :—

Suggestion made by the Government of India.	*Action taken by the State Government.*
(1)	(2)
(i) Manning of 46 unmanned level-crossings selected for manning in this State involving a total initial capital outlay of Rs. 4·20 lakhs and recurring expenditure of Rs. 1·43 lakhs per annum and sharing of the cost by the Govern-	(i) The State Government have agreed to meet the entire non-recurring expenditure. They have not, however, agreed to bear any portion of the recurring expenditure which should be met in full by the Railways. The

[27th July 1964

Suggestion made by the Government of India. (1)	*Action taken by the State Government.* (2)
ment of India and the State Government on 50 : 50 basis.	Railways have agreed to this arrangement and have taken up the work of manning the 46 unmanned level-crossings in this State.
(ii) Provision of road signs at approaches to level-crossings and adding the word "STOP" in the regional language in bold letters beneath the road signs.	(ii) Necessary instructions have been issued by the Government to the Transport Commissioner to provide such road signs at all level-crossings.
(iii) Introduction of undulations or bumps at approaches to the level-crossings, so that fast moving vehicles are obliged to reduce speed.	(iii) The State Government have considered that it is not desirable to introduce undulations or bumps at the approaches to the level-crossings, as this will lead to an increase in the number of accidents.
(iv) Amendment of law for stopping buses/lorries short of the level-crossings and to cross the same at slow speed following the cleaner or conductor on foot.	(iv) According to Rule 427-A of the Madras Motor Vehicles Rules prior to its amendment in October 1963 every driver of a public service vehicle should stop the vehicle and should not enter the railway crossing until he had made himself sure that the railway track on both sides was clear. In the case of public service vehicle having a conductor the signal for the vehicle to cross the Railway track should be given by the conductor, after satisfying himself by getting down from the vehicle and seeing that the railway track was clear on both sides. The said rule has been amended extending the above requirement to the lorries also.

(அ) இம்மாநிலத்தில் காவலில்லாத ரயில்-சாலை சந்திப்புகள் மொத்தம் 2,144 இருப்பதாகத் தெரியவருகிறது.

(இ) & (உ) ரயில்-சாலை சந்திப்புகளில் ஏற்படும் விபத்துக்களைத் தடுப்பதற்காக இந்திய அரசாங்கம் தந்துள்ள ஆலோசனைகளின் விவரங்களும், அவ்வாலோசனைகளின் பேரில் மாநில அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளின் விவரங்களும் வருமாறு :—

இந்திய அரசாங்கம் தந்துள்ள ஆலோசனை. (1)	மாநில அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை. (2)
(i) ஆரம்பத்தில் ரூ. 4·20 லட்சம் மொத்த மூலதனச் செலவிலும், பின்னர் ஆண்டுதோறும் ரூ. 1·43 லட்சம் நடைமுதல் செலவிலும்,	(i) மீளா இனச் செலவு பூராவையும் ஏற்றுக்கொள்வதற்கு மாநில அரசாங்கம் ஒப்புக்கொண்டது. இந்த அரசாங்கம் நடை

27th July 1964]

இந்திய அரசாங்கம் தந்துள்ள ஆலோசனை. (1)	மாநில அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை. (2)
இம்மாநிலத்தில், காவலில்லாத தெரிந்தெடுத்த 46 ரயில்-சாலை சந்திப்புகளில் காவல் ஏற்படுத்துவது; மத்திய, மாநில அரசாங்கங்கள் இச்செலவைச் சரிபாதியாக ஏற்றுக்கொள்வது.	முதல் செலவில் எப் பகுதியையும் ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொள்ளவில்லை. இச்செலவு முழுவதையும் இந்திய ரயில்வே ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த ஏற்பாட்டுக்கு ரயில்வே ஒப்புக்கொண்டது. இம் மாநிலத்தில் காவலில்லாத 46 ரயில்-சாலை சந்திப்புகளில் காவல் ஏற்படுத்துவதற்குச் செய்ய வேண்டிய வேலையை மேற்கொண்டது.
(ii) ரயில்-சாலை சந்திப்பிடங்களின் அணுகு சாலைகளில் போக்குவரத்து அடையாளக் குறிகள் ஏற்படுத்துவது. இவற்றின்கீழ் வட்டார மொழியில் கொட்டை எழுத்துக்களில் "நில்" என்னும் சொல்லையும் எழுதி வைப்பது.	(ii) ரயில்-சாலை சந்திப்பிடங்கள் அனைத்திலும் இத்தகைய சாலைப் போக்குவரத்து அடையாளக் குறிகளை ஏற்படுத்துமாறு போக்குவரத்து ஆணையாளருக்கு அரசாங்கம் அவசியமான உத்தரவுகள் பிறப்பித்துள்ளது.
(iii) மிக வேகமாகச் செல்லும் வண்டிகளின் வேகத்தைக் குறைப்பதற்காக, ரயில்-சாலை சந்திப்பிடத்து அணுகு சாலைகளில் அலைவு அல்லது மேடு பள்ளங்களை ஏற்படுத்துவது.	(iii) ரயில்-சாலை சந்திப்பிடங்களின் அணுகுசாலைகளில் அலைவு அல்லது மேடு பள்ளங்களை ஏற்பத்துவதனால் விபத்துக்கள் அதிகமாகும். ஆகவே, இவற்றை ஏற்படுத்துவது உசிதமல்ல என அரசாங்கம் கருதுகிறது.
(iv) ரயில்-சாலை சந்திப்பிடங்களின் அருகில் பஸ்/லாரிகளை நிறுத்தி, கண்டக்டர் அல்லது "க்ளீனர்" இறங்கி நடந்துவர வண்டியை மெதுவாகச் செலுத்திக் கடக்கச் செய்யும் வகையில் சட்டத்தைத் திருத்துவது.	(iv) சென்னை மோட்டார் வண்டி விதிகளைச் சேர்ந்த 427-A விதி 1963 அக்டோபரில் திருத்தப்படுவதற்கு முன்பு, அவ்விதியின்படி, மோட்டார் வண்டி டிரைவர் ஒவ்வொருவரும் ரயில்-சாலை சந்திப்பிடங்களில் வண்டியை நிறுத்த வேண்டும். இரு பக்கங்களிலும் ரயில் பாதை காலியாக இருக்கிறது என்று தெரிந்துகொண்டாலன்றி, ரயில்-சாலை சந்திப்பிடத்தை மோட்டார் வண்டியில் கடக்கக்கூடாது. கண்டக்டர் உடைய மோட்டார் வண்டியின் விஷயத்தில், கண்டக்டர் வண்டியை விட்டிறங்கி இரு பக்கங்களிலும் ரயில் பாதை காலியாக இருக்கிறது எனப் பார்த்துத் தெரிந்து கொண்ட பிறகு, ரயில் பாதையைக் கடப்பதற்கான சைகையை ட்ரைவருக்குக் கொடுக்க வேண்டும். இந்த ஏற்பாடு லாரிகளுக்கும் பொருந்தும் வகையில் மேற்கண்ட விதி திருத்தப்பட்டுள்ளது.

[27th July 1964

Slum Improvement Scheme (Madurai)

239 *Q.*—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Madurai Municipality has submitted a Slum Improvement Scheme for the Dhideernagar Slum, the largest slum in Madurai ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the action taken thereon ?

A.—(*a*) Yes.

(*b*) The Dhideernagar area is required by the Madurai Municipality for the expansion of the Central Bus Stand. The rehabilitation of the slum dwellers in this area numbering about 694 families has already been approved by Government in principle. The proposal submitted by the Madurai Municipality is to provide alternative house-sites to the slum dwellers and involves the acquisition of wet lands.

(*c*) The proposal is under consideration of Government.

(அ) ஆம்.

(இ) மத்திய பஸ் நிலையத்தினை விஸ்தரிப்பதற்காக "திடீர்நகர்ப் பகுதி" மதுரை நகராட்சிக்குத் தேவைப்படுகிறது. இந்தச் சேரிப் பகுதியில் வாழும் சுமார் 694 குடும்பத்தினருக்குப் புனர்வாழ்வளிக்கும் திட்டத்தினை அரசாங்கம் கொள்கை அளவில் ஏற்கெனவே ஒப்புக்கொண்டுள்ளது. சேரிவாழ் மக்களுக்குப் புதிய வீட்டு மனைக்கட்டுகள் கொடுப்பதற்கென மதுரை நகராட்சி, திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் நஞ்செய் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டியுள்ளது.

(உ) இத்திட்டம் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

Inspection Bungalows (Vriddhachalam Taluk.)

240 *Q.*—SRI K. NARAYANASWAMI PILLAI : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் தாலூகாவிலுள்ள தொழுதூர், வேப்பூரிலுள்ள இன்ஸ்பெக்ஷன் பங்களாக்களில் மின்சார விளக்குகள், விசிறிகள் போட உத்தேசமுண்டா ?

A.—தற்சமயம் இது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

The question is under consideration.

Construction of Anicut (Dindigul taluk).

241 *Q.*—திரு. வி. எஸ். எஸ். மணி : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டம், திண்டுக்கல் வட்டம், அய்யன்பாளையம் மலை அடிவாரத்தில் உள்ள மருத நதியின் குறுக்கே அணை கட்டும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

A.—The proposal referred to was considered in 1959 and was dropped, as it was found to be not feasible for the reasons that it would affect the irrigation under the Vaigai lower down and that it would stoutly be opposed by the Vaigai ryots. The Manjalar Scheme and Sathiar Odai Scheme (on the tributaries of Vaigai) have just been taken

27th July 1964]

up for execution. The proposals for modernising the Vaigai channels are under finalisation. Hence the reconsideration of Marudhanadhi Scheme can be taken up only after the completion of the above projects and after studying their effects for some years on the existing Vaigai irrigation.

இந்த திட்டம் 1959-ல் ஆலோசிக்கப்பட்டு கைவிடப்பட்டது. வைகையாற்றிற்குக் கீழ்ப்புறமுள்ள நிலங்களின் பாசனத்தை இது பாதிக்கும் என்பதாலும், வைகையாற்றிலிருந்து பாசனம் பெறும் ரயத்துக்கள் இதைத் தீவிரமாக எதிர்ப்பார்கள் என்பதாலும் இத்திட்டத்தை மேற்கொள்வது சாத்தியமல்லவென்று தெரிந்தது. வைகை கிளை நதிகளின்மீது மஞ்சளாறு திட்டமும், சாத்தியாறு ஓடைத் திட்டமும் இப்போதுதான் நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. வைகை கால்வாய்களைப் புதுப்பிக்கும் திட்டங்கள் முடிவு செய்யப்பட்டு வருகின்றன. எனவே, மேற்சொன்ன திட்டங்களை கட்டிப் பூர்த்தியான பிறகும், தற்போதைய வைகைப் பாசனத்திற்கு அவைகளால் ஏற்படும் விளைவுகளை சில ஆண்டுகளுக்கு ஆராய்ந்து அறிந்த பின்னரும் தான் மருத நதித் திட்டம் மீண்டும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

Cholera

242 கேள்வி,—திரு. கி. நாராயணசாமி பிள்ளை:
திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி:
திரு. எம்.வி. கரிவேங்கடம்:
திரு. எஸ். ஜே. ராமசாமி:
} கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963–64-ம் ஆண்டில் நம் மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் "காலரா" நோய் பரவியது ?

(இ) ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை பேர்களுக்கு "காலரா" கண்டது ?

(உ) காலராவால் இறந்தவர்கள் மாவட்ட வாரியாக எத்தனை பேர் ?

(எ) காலராவைத் தடுப்பதற்கு மாவட்ட வாரியாக செலவான தொகை எவ்வளவு ?

A.—(*a*) All the districts in the State except the Nilgiris district were affected with "cholera" during the year 1963–64.

(*b*) & (*c*). The number of attacks and deaths are given below :—

Name of the district.	*Attacks.*	*Deaths.*
(1)	(2)	(3)
Madras City	156	7
Chingleput	362	96
South Arcot	5,192	2,571
Tiruchirappalli	1,834	802
Thanjavur	4,074	1,924
Madurai	1,323	340
Ramanathapuram	612	238
Tirunelveli	1,212	554
North Arcot	1,216	474
Salem	897	408
Coimbatore	950	356
Kanyakumari	269	99

[27th July 1964

(*d*) Expenditure incurred on cholera control measures in each district during the cholera epidemic in 1963–64 are as follows :—

Name of the district. (1)	*Amount incurred.* (2) RS.	P.
1 Madras City	1,10,796	78
2 Chingleput	49,941	40
3 North Arcot	40,702	63
4 South Arcot	51,357	96
5 Thanjavur	1,23,299	61
6 Tiruchirappalli	36,812	02
7 Madurai	38,069	40
8 Ramanathapuram	30,649	57
9 Tirunelveli	37,670	70
10 Salem	16,485	24
11 Coimbatore	41,884	88
12 The Nilgiris	910	45
13 Kanyakumari	8,355	49

(அ) 1963–64-ம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தைத் தவிர இம் மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் 'காலரா' நோய் கண்டிருந்தது.

(இ) & (உ) காலரா நோயினால் பீடிக்கப்பட்டவர்களும், இறந்தவர்களும் பின்வருமாறு :—

மாவட்டத்தின் பெயர். (1)	பீடிக்கப்பட்டவர்கள். (2)	இறந்தவர்கள். (3)
சென்னை மாநகர் ..	156	7
செங்கற்பட்டு ..	362	96
தென் ஆற்க்காடு ..	5,192	2,571
திருச்சிராப்பள்ளி ..	1,834	802
தஞ்சாவூர் ..	4,074	1,924
மதுரை ..	1,323	340
இராமநாதபுரம் ..	612	238
திருநெல்வேலி ..	1,212	554
வட ஆர்க்காடு ..	1,216	474
சேலம் ..	897	408
கோயம்புத்தூர் ..	950	356
கன்னியாகுமரி ..	269	99

27th July 1964]

(எ) 1963–64-ல் காலரா நோய் பரவியிருக்கையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் காலரா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கான செலவு பற்றிய விவரம் வருமாறு :—

மாவட்டத்தின் பெயர். (1)	செலவாகிய தொகை. (2) ரூ.	பை.
சென்னை மாநகர்	1,10,796	78
செங்கற்பட்டு	49,941	40
வட ஆற்காடு	40,702	63
தென் ஆற்காடு	51,357	96
தஞ்சாவூர்	1,23,299	61
திருச்சிராப்பள்ளி	36,812	02
மதுரை	38,069	40
இராமநாதபுரம்	30,649	57
திருநெல்வேலி	37,670	70
சேலம்	16,485	24
கோயம்புத்தூர்	41,884	88
நீலகிரி	910	45
கன்னியாகுமரி	8,355	49

Ministers Residential telephones

243 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state the expenditure incurred towards the telephone charges of the residential phone connections of the Ministers including the former Chief Minister during 1963, monthwise ?

முன்னாள் முதலமைச்சர் உள்பட அமைச்சர்களின் இல்லங்களில் 1963-ம் ஆண்டில் டெலிபோன் கட்டணங்களுக்காக மாதந்தோறும் ஆன செலவு எவ்வளவு ?

A.—The information required is furnished in the statement [a] placed on the Table of the House separately.

1963-ல் மாதவாரியாகப் பிடித்த செலவு பற்றிய அறிக்கை [a] சபை முன் வைக்கப்பட்டுள்ளது.

Formation of Road (Periakulam taluk)

244 கேள்வி—திரு. மா. இராசாங்கம் : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பெரியகுளம் தாலூகா சாக்குலுத்துமெட்டு ரோடு போடும் வேலை எந்த நிலையில் உள்ளது ?

A.—The cost of the work is Rs. 26·50 lakhs. In view of the excessive cost involved it is found not possible to take up the work at present.

இதற்கு ரூ. 26·50 லட்சம் செலவாகும். செலவு மிகவும் அதிகமாக இருப்பதால், இவ்வேலையை இப்பொழுது எடுத்துக்கொள்வது சாத்தியமல்லவென்று தெரிகிறது.

[a] Printed as Appendix II on page 394, 71

[27th July 1964

Government Hospital

245 கேள்வி.— திரு சி. சிவசுப்பிரமணியன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா, குமராட்சி யூனியனைச் சேர்ந்த புளியங்குடி கிராமத்தில் ஒரு அரசினர் மருத்துவ மனை திறக்க உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில், எப்போது?

A.—(*a*) No.

(*b*) Does not arise.

Match Industry

246 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state, the maximum and minimum amount granted as loan by the Government for the Match Industry and the conditions thereof?

A.—The maximum and minimum amount so far granted as loan for the Match Industry are Rs. 25,000 and Rs. 20,000 respectively.

As regards the conditions for the grant of these loans, the provisions contained in the State-Aid to Industries Act, 1922, and the rules framed thereunder have been followed.

தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு இதுவரை கடனாக அதிக அளவு வழங்கியுள்ள தொகை ரூ 25,000; குறைந்த அளவுத் தொகை ரூ. 20,000.

இத்தகைய கடன்கள் வழங்குவதற்குரிய நிபந்தனைகளைப் பொறுத்த வரையில், 1922-ஆம் ஆண்டு தொழிற்சாலைகளுக்கு அரசாங்க உதவிபற்றிய சட்டத்தின் ஷரத்துக்களும் அச் சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளும் பின்பற்றப்படுகின்றன.

State Seed Farms

247 கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்திலுள்ள விதைப் பண்ணைகள் எத்தனை?

(இ) 1962–63-ல் வந்த வருவாய், செலவு எவ்வளவு?

A.—The total number of farms functioning at present is 200.

The income and expenditure on the State Seed Farms in 1962–63 are given below:—

	RS.
Income	15,76,388·39
Expenditure	19,08,232·99

(அ) தற்போது மொத்தம் 200 விதைப் பண்ணைகள் இருக்கின்றன.

(இ) 1962–63-ஆம் ஆண்டில் அரசாங்க விதைப் பண்ணைகள் மூலம் கிடைத்த வருவாயும் அவற்றிற்கான செலவும் பின்வருமாறு:—

	ரூபாய்
வருவாய்	15,76,388·39
செலவு	19,08,232·99

27th July 1964]

Bridge across Vellar

248 கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியன்: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலூகா புவனகிரியில் வெள்ளாற்றுப் பாலம் புதுப்பித்ததற்கான செலவு எவ்வளவு?

A.—The total expenditure incurred for widening the bridge across Vellar on Chidambaram-Bhuvanagiri road is Rs. 3,04,967·45.

சிதம்பரம்–புவனகிரி சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே பாலத்தை அகலப்படுத்துவதற்கான மொத்தச் செலவு ரூ. 3,04,967·45 ஆகும்.

Road (Pennagaram–Denkanikotta)

249 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to blacktop the road from Pennagaram to Denkanikotta (via) Anchetti in Salem district; and

(*b*) if so, the details thereof?

A.—(*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Coal (Rasipuram taluk)

250 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் வீரபாண்டி தொகுதி இராசிபுரம் வட்டம் கட்ருடம்பட்டி கிராமத்தில் ஒரு கிணறு வெட்டியதில் அதில் நிலக்கரி இருப்பதாக கண்டு அதை தாசில்தார் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது அரசினருக்குத் தெரியுமா?

(இ) ஆமென்றால், அதைப்பற்றி பரிசோதனை செய்யப்பட்டதா?

A.— (*a*) & (*b*) No report of any occurrence of coal in Kattradampatti (or Kuttralampatti) in Rasipuram taluk has been made so far.

(அ) & (இ) ராசிபுரம் தாலூகாவிலுள்ள கற்றுடம்பட்டியில் (அல்லது குத்தாலம்பட்டியில்) நிலக்கரி கிடைப்பதாக இதுவரை அறிக்கை எதுவும் வரவில்லை.

[27th July 1964

Hand-pounded Rice

251. கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென் ஆற்காடு மாவட்டத்தில் கைக்குத்தல் அரிசி ஸ்தாபனம் எங்கெங்கு எத்தனை உள்ளன ?

A.—There are 11 (eleven) Hand-pounding of Paddy Co-operative Societies at the following places in the South Arcot District :—

1. Sethiathope,
2. Avalurpet,
3. Cuddalore,
4. Kattumannarkoil,
5. Kulatheepamangalam,
6. Chinnasalem,
7. Porto Novo,
8. Gandhikuppam,
9. Thiruchitrambalam,
10. Periyakuppam and
11. Srimushnam.

தென் ஆற்காடு மாவட்டத்தில் அடியிற்கண்ட 11 இடங்களில் கைக் குத்தலரிசி கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன:—

1. சேத்தியாதோப்பு,
2. ஆவலூர்பேட்டை,
3. கடலூர்,
4. காட்டுமன்னார்கோயில்,
5. குலதீபமங்கலம்,
6. சின்னசேலம்,
7. பரங்கிப்பேட்டை,
8. காந்திகுப்பம்,
9. திருச்சிற்றம்பலம்,
10. பெரியகுப்பம்,
11. ஸ்ரீமுஷ்ணம்.

Agricultural Income-tax

252. கேள்வி.—திரு. ப. உ. சண்முகம் : கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் 1964-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி முடிய வசூல் ஆகாமல் உள்ள விவசாய வருமான வரி எவ்வளவு ?

A.—Rs. 33,97,979·85

27th July 1964]

Libraries

253. கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்டவாரியாக அமைக்கப்பட்டுள்ள நூலகங்கள் எத்தனை ?

(இ) கடந்த ஐந்தாண்டுகளில் புத்தகங்கள் வாங்குவதற்கு செலவிடப் பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(உ) எந்த அடிப்படையில் புத்தகங்கள் பொறுக்கி எடுக்கப்படு கின்றன ?

A.—(*a*) & (*b*) A statement [a] is placed on the Table of the House.

(*c*) The basis on which the selection of books is made for the use of the libraries is as follows :—

The Local Library Authorities have got full discretion to purchase any book or to subscribe to any magazine for use in the libraries maintained by them provided they conform to the requirements mentioned below :—

(*a*) They should be of general interest and cultural value ;

(*b*) Books, if they are stories or novels, should be by standard authors and should not be of doubtful taste ;

(*c*) Books, magazines and journals abusing communities or religion should not be purchased ;

(*d*) Books, magazines and journals which are of doubtful taste or which contain undesirable pictures should not be purchased ; and

(*e*) Prescribed books should not be purchased.

***Note.*—An asterisk * at the commencement of a speech indicates revision by the Member.]**

II.—CALLING ATTENTION TO EVICTION OF RYOTS FROM KADAMANUR, MADURAI DISTRICT.

SRI M. RAJANGAM : Sir, I wish to call the attention of the Hon. Minister for Food to a matter of urgent public importance viz., the forcible eviction of ryots from Kandamanur, Kadamalaikundu firka in Madurai district due to the measures taken by the Forest Department.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Sir, I wish to make the following statement : Gandamanaickanur Ex-zamin forests extending over about 96,000 acres in Periakulam Taluk was taken over by the Forest Department for administration under the Estates Abolition Act. The area consists of plain portions with scattered hillocks, undulating plateaux and evergreen sholas. These form the catchment area of the Vaigai river. The area adjoins the Kadamalaikundu, Myladumparai, Narasingapuram and Megamalai villages. The area has been notified as Reserved land under Section 26 of the Madras Forest Act in 1882. 9-30 a.m.

[a] Printed as Appendix III on page 395

[Sri N. Nallasenapathi Sarkarai Manradiar] [27th July 1964

In order to notify this area as Reserved Forest under the provision of the Madras Forest Act, preliminary action is being taken by an Assistant Conservator of Forests deputed for this purpose. After the areas were taken over, the Revenue Survey and Settlement was taken up. After the completion of the Revenue Survey and after the areas were settled and allotted by the Revenue Department as forests, the Forest Department is preparing a draft notification under Section 4 of the Madras Forest Act after doing necessary field work for notification purposes.

Meanwhile, there has been unauthorised occupation of the forest areas by the villagers. The villagers were indiscriminately clearing virgin forest lands and cultivating agricultural crops. The situation became alarming and the Government were apprised of the situation. In May 1960, the Government therefore ordered that it was not possible for the Forest Department to desist from taking action under the Land Encroachment Act in these areas. Thus, new encroachment occurring after December 1958, could not be taken lightly.

The present position is that atleast 10,000 acres have been encroached upon, cleared and cultivated after 1958 in Gandamanaickanur alone. Even with regard to sholas in the interior, the entire stretch has been cultivated with cardamom.

The Assistant Conservator of Forests, during the course of his survey work for preparing the draft section for notification, is coming across such encroachments within the forest areas. Action is being taken against these encroachers under the provision of the Madras Forest Act. During the current year, 38 cases of encroachment of over 83 acres involving 91 persons were booked and two cases involving 11 accused were prosecuted. If the catchment areas and sholas are allowed to be cleared indiscriminately, then the cultivation under Vaigai system will have to face a grave situation. The villagers have been sending representation after-representation to allow them to use the lands occupied by them unauthorisedly. It will be thus seen that the evictions ordered were in respect of encroachments which occurred after December 1958.

III. PRIVILEGE MATTER REGARDING DIFFERENCE BETWEEN ANSWERS TO MAIN QUESTIONS AND SUPPLEMENTARY QUESTIONS.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர், கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய சட்டமன்றம் பாராளுமன்ற ஜனநாயக முறைகளை அனுசரித்து, நம்முடைய சட்டத்தில் சலுகைகள், உரிமைகள் கொடுத்து நல்லமுறையில் பெருமையாகவும் நடந்து வருகிறது. இப்போது நம்முடைய மூன்றாவது சட்டசபை தங்களுடைய சீரிய தலைமையின்கீழ் இந்த மன்றம் எல்லா உரிமைகளையும் பெற்று நடந்து வருகிறது. . .

MR. SPEAKER: The hon. Member may come to the point before cajoling or praising.

SRI RAMA ARANGANNAL: It is not cajoling or praising.

MR. SPEAKER : Let me know the point of order first.

27th July 1964]

திரு. கே. ஏ. மதியழகன் : இவ்விதம் நடந்து வருகின்ற சட்டமன்றத்தில் மந்திரிகள் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது, மூலக் கேள்விக்கு சொல்லுகின்ற பதில் ஒருவிதமாகவும், உப கேள்விகளுக்கு சொல்லுகின்ற பதில் வேறொரு விதமாகவும் இருக்கிறது. இவ்விதம் 22-ம் தேதி நடந்த விவாதத்தில் இருக்கிறது.

MR SPEAKER : I have disallowed the privilege matter given notice of by the hon. Member. There was no serious difference in the answer, and therefore I disallowed it. I cannot allow it to be taken up in the form of a ' point of order '. .

திரு. கே. ஏ. மதியழகன் : இவ்விதம் முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது. இதன் பேரில் தாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காகத்தான் இதை கூறுகிறேன்.

MR. SPEAKER : The hon. Member gave notice of a privilege matter with regard to this in writing. As there was no material to admit it, I have not given my consent.

SRI K. A. MATHIALAGAN : I am not raising a privilege issue. It is only for consideration . . .

MR. SPEAKER : In some form or other, the hon. Member wants to speak on the subject.

SRI K. A. MATHIALAGAN : It is not my intention to speak on the subject. With great respect to the Chair, I want only a ruling to that effect, Sir.

MR. SPEAKER : I have already given my ruling to the effect that it is not a matter of ' breach of privilege ' or for ' a point of order.'

IV. ANNOUNCEMENT.

(1) THE MADRAS PUBLIC BUILDINGS (LICENSING) BILL, 1964.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras Public Buildings (Licensing) Bill, 1964.

V.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS PUBLIC BUILDINGS (LICENSING) BILL, 1964.

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That the concurrence of the Legislative Council be obtained for the setting up of a Joint Select Committee of both the Houses, consisting of 21 Members (14 Members of the Legislative Assembly and 7 Members of the Legislative Council) to consider the Madras

[Sri R. Venkataraman] [27th July 1964

Public Buildings (Licensing) Bill, 1964 (L.A. Bill No. 31 of 1964) and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM.
Sri S. RAMASWAMI NAIDU.
Sri K. T. KOSALRAM.
Sri N. RAMACHANDRA REDDY.
Sri K. P. PALANISWAMY.
Sri A. K. KALIAPPA GOUNDER.
Sri P. APPAVOO.
Srimathi T. N. ANANDANAYAKI.
Sri A. CHIDAMBARANATHA NADAR.
Sri K. A. MATHIALAGAN.
Sri M.R. KRISHNAMURTHY.
Sri S. MURUGAIYAN.
Sri SAW GANESAN.
Sri M. KALYANASUNDARAM.
The Hon. Sri R. VENKATARAMAN.

In moving this motion for referring the Madras Public Buildings (Licensing) Bill to a Joint Select Committee, I wish to explain at the outset the salient features of the Bill.

The hon. Members of this House are aware that the collapse of the school buildings in Madurai recently took away the lives of several children and resulted in injury to several others. This has disclosed that some of the private buildings intended to accommodate large number of people are not maintained in a proper condition. Government consider that officers of the Government should be empowered by statute to exercise control over such buildings and that a building should be permitted to be used as a public building such as a school or college only after a licence is obtained therefor from a competent authority who shall satisfy itself that the building is structurally sound before the licence is granted.

The Madras Places of Public Resort Act, 1888 (Madras Act II of 1888) which relates to grant of licences for places and buildings used for public resort and entertainment does not expressly provide that structural soundness of the building is a condition precedent for the grant of a licence. Under the said Act, the licence is to be granted by the executive authority in the municipal town, and by a Revenue Officer not below the rank of Tahsildar in other areas. That Act applies only to the areas outside the City of Madras. So far as the City of Madras is concerned, under sections 34 and 35 of the Madras City Police Act, 1888, a licence is required for using a place or building for public entertainment or resort or as an eating-house, coffee-house, etc. The licence has to be granted by the commissioner of Public under section 36. The said sections do not expressly provide that the structural soundnes of the building is a condition precedent for the grant of a licence.

27th July 1964] [Sri R. Venkataraman]

The Government have, therefore, decided that there should be a separate law providing for the grant of licences for buildings which are proposed to be used as schools, colleges, hospitals, libraries, hotels, etc. Accordingly, the Madras Public Buildings (Licensing) Bill, 1964 (L.A. Bill No. 31 of 1964) provides for the grant of licences for the use of any building as public building by the competent authority, after satisfying itself about the structural soundness of the building in respect of which application is made for licence. The licence has to be obtained within a period of six months from the date of the publication of the proposed Act. The licence will be valid for a period of three years or such shorter period as may be specified in the licence. The licence may be renewed subject to the same terms and conditions. A temporary licence may also be obtained for a period of three months. Provision has also been made in the Bill empowering the licensing authority to cancel or suspend the licence granted by it on the ground that the licence has been obtained by misrepresentation or fraud or that the licensee has contravened or failed to comply with any of the provisions of the proposed Act or the rules made thereunder or the licensee has contravened or failed to comply with any of the conditions of the licence or that the licensee has failed to comply with an order passed under section 8 of the proposed Act preventing the further use of the public building or that the public building can no longer be safely used for the purpose for which the licence was granted.

The Bill also contains provision for appeal against the refusal to grant or renew a licence or cancelling or suspending a licence by the competent authority. The Board of Revenue has power to revise either on its own motion or on the application made by the owner of the building which is to be used or which is being used as a public building to call for and examine the records of any proceeding to satisfy itself as to the regularity of such proceeding or the correctness, legality or propriety of any decision or order passed by any authority under the proposed Act and to modify, annul, reverse or remit for reconsideration any order so passed by any authority under the proposed Act.

The Bill also contains provision empowering the Government to grant exemption if they are of opinion that it will not be in the public interest to apply all or any of the provisions of the proposed Act to any class of public buildings, subject to such conditions and restrictions, as they may, impose. Provision is also made making it obligatory on the authority or officer appointed or having jurisdiction under any other Act or law and is empowered to inspect any building in the discharge of its or his functions under that Act or law to make a report in the prescribed form to the competent authority having jurisdiction over the area in which the public building is situated, if such authority or officer is satisfied after inspecting any pubilc building that it is not structurally sound.

Sir, I request the House to accept the motion for referring the Bill to a Joint Select Committee.

[27th July 1964

MR. SPEAKER : The question is—

'That the concurrence of the Legislative Council be obtained for the setting up of a Joint Select Committee of both the Houses, consisting of 21 Members (14 Members of the Legislative Assembly and 7 Members of the Legislative Council) to consider the Madras Public Buildings (Licensing) Bill, 1964 (L.A. Bill No. 31 of 1964) and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM.
Sri S. RAMASWAMI NAIDU.
Sri K. T. KOSALRAM.
Sri N. RAMACHANDRA REDDY.
Sri K. P. PALANISWAMY.
Sri A. K. KALLAPPA GOUNDER.
Sri P. AFPIVOO.
Srimathi T. N. ANANDANAYAKI.
Sri A. CHIDAMBARANATHA NADAR.
Sri K. A. MATHIALAGAN.
Sri M. R. KRISHNAMURTHY.
Sri S. MURUGAIYAN.
Sri SAW. GANESAN.
Sri M. KALYANASUNDARAM.
The Hon. Sri R. VENKATARAMAN.

The motion was put and carried.

SRI K. A. MATHIALAGAN : Sir, I want to speak on this Bill.

MR. SPEAKER : The motion has already been carried. Probably the hon. Member was then thinking about something else. I waited for half a minute and no Member raised his hand or showed any anxiety to speak. So what can I do now? I pass on to the next item.

(2) THE MADRAS PUBLIC TRUSTS (REGULATION OF ADMINISTRATION OF AGRICULTURAL LANDS) AMENDMENT BILL, 1964.

*THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg leave to introduce the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Bill, 1964 [a], and move—

'That the ill be taken into consideration.'

"Inam land" as defined in clause (13) of section 2 of the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Madras Act 57 of 1961) includes *inter clia* any land in any village specified in Schedule I to that Act. This would mean that every time a village is to be included in the Schedule an amendment to the Act will have to be brought before the Legislature. In order to simplify the procedure, it is considered necessary to make a provision in section 2 of the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 on the lines of clause (27) of section 3 of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Madras Act 58 of 1961) authorizing the Government to include, by notification, from time to time, such other village or part thereof, as may be specified in that notification, in Schedule I to that Act.

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 10th July 1964.

27th July 1964] [Sri R. Venkataraman]

Further, while preparing Schedule I, a lease-hold village by name "Mukthapudupattu" in Saidapet taluk, Chingleput district, was left out. This opportunity has been availed of to include that village in the said Schedule.

I request the House, Sir, that the Bill be taken into consideration.

MR. SPEAKER : The question is—

'That the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Bill, 1964, be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

'That the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Bill, 1964, be passed.'

The motion was put and carried and the Bill was passed.

IV. ANNOUNCEMENTS—*cont.*

(2) THE MADRAS RINDERPEST (AMENDMENT) BILL, 1964.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation to the consideration by the Madras Legislative Assembly of the Madras Rinderpest (Amendment) Bill, 1964.

V. GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS RINDERPEST (AMENDMENT) BILL, 1964.

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Rinderpest (Amendment) Bill, 1964 and move—

'That the Bill [a] be taken into consideration.'

கனம் சபாநாயகர் அவர்களே, நமது நாட்டின் விவசாயப் பொருளாதாரத்தில், விலங்கின வளர்ப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். நமது

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 10th July 1964.

மாநிலத்தில் விலங்கினங்களின் எண்ணிக்கை மிக அதிகமாயிருந்தாலும், காங்கேய இன மாடுகளைத் தவிர மற்ற மாடுகளில் சராசரி தரம் மிகக் குறைவானதுதான். இது தவிர, இவைகளுக்குப் பற்பல நோய்களும் காண்கின்றன. ஆகவே நமது மாடுகளின் தரத்தை உயர்த்தவும், விலங்கினங்களுக்குக் காணும் நோய்களை ஒழிக்கவும், விலங்கின வளர்ப்பு சம்பந்தமான அபிவிருத்தித் திட்டங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

விலங்கினங்களுக்குக் காணும் கோமாரி நோய் அல்லது 'விலங்கின பிளேக்' என்று சொல்லப்படும் இந்நோய் இன்று உலகிலேயே விலங்கினங்களுக்குக் காணும் மிக ஆபத்தான நோய் ஆகும். இந்த நோய் வெகு காலமாகவே இந்த நாட்டில் விலங்கினங்களிடையே பரவி வந்திருக்கிறது. இதற்கு முன்பு நமது நாட்டில் ஆண்டுதோறும் மடிந்து வந்த விலங்கினங்களில், ஏறக்குறைய 50 சதவிகிதம் இந்த நோயாலேயே மடிந்தன. 19-ம் நூற்றாண்டின் மத்தியிலேயே சென்னை அரசாங்கம் இந்தக் கோமாரி நோயைப் பற்றி ஆராய்ச்சி செய்து அதைத் தடுப்பதற்கும், அதற்குச் சிகிச்சை செய்வதற்கும், கட்டுப்படுத்துவதற்குமான ஏற்பாடுகளை மேற்கொள்வதில் முனைந்திருந்தது. 1871-ம் ஆண்டில் நியமிக்கப்பட்ட இந்திய விலங்கின பிளேக் கமிஷன் தனது அறிக்கையில் இதைக் குறித்துப் பாராட்டியிருக்கிறது. அது முதற்கொண்டு சாதரணமாக இந்த நோய் காணும் பகுதிகளில் பற்பல தடுப்பு ஊசிகள் போடும் முறை கையாளப்பட்டு வந்தது. மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் இந்த நோயை முற்றிலும் ஒழித்து விடவேண்டுமென்பதுதான் மூன்றாவது திட்டத்தின் குறிக்கோளாக அமைந்திருக்கிறது.

சமீப ஆண்டுகளில் இம் மாநிலத்தில் கோமாரி நோய் தடுப்பும் கட்டுப்பாடும், 1940-ம் ஆண்டு தமிழ்நாடு கோமாரி நோய்ச் சட்டம் (தமிழ்நாடு சட்டம், 19/1940) நிறைவேற்றப்பட்டதிலிருந்து சட்டபூர்வமான அங்கீகாரம் பெற்றுள்ளன. இச்சட்டத்தின் 5-வது பிரிவில் பின்வரும் அதிகாரம் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதாவது, ஒரு பகுதியிலுள்ள எல்லா விலங்கினங்களுக்கேனும், அல்லது ஒரு பிரிவைச் சேர்ந்த விலங்கினங்களுக்கேனும் தமிழ்நாடு அரசாங்க இதழில் வெளியாகும் அறிவிப்பில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகளை, அல்லது கட்டளைகளை அனுசரித்து அவற்றிற்குக் கட்டாயமாக ஊசி குத்தவேண்டுமென்று அரசாங்கம் அந்த அறிவிப்பின் மூலம் கட்டளையிடலாம். சாதாரணமாக விலங்கினச் சொந்தக்காரர்கள் தங்கள் விலங்கின்ங்களுக்கு கோமாரி நோய்த் தடுப்பு ஊசியை போட்டுக் கொள்வதில் அதிக ஒத்துழைப்பு தந்திருக்கிறார்கள். விலங்கினச் சொந்தக்காரர் யாராவது தனது விலங்கினங்களுக்கு ஊசி போடுவதற்கு ஒத்துழைக்க மறுப்பதாயிருந்தால், அப்போது விலங்கின வளர்ப்புத் துறை பணியாளருக்கு அவசியமான அதிகாரம் வழங்கவேண்டுமென்றுதான் இச் சட்டத்தின் கீழ் அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. நமது மாநிலத்தில் 1951-ம் ஆண்டு முதற்கொண்டே இந்த நோய் காண்பதில்லையென்று நாம் பெருமிதத்துடன் கூறிக்

கொள்ளலாம். 1957-ம் ஆண்டு வரையில் இம் மாநிலத்தில் 20 குவாரண்டைன் நிலையங்கள் பணியாற்றி வந்தன. அவற்றின் உதவியினால் இம்மாநில எல்லைகளிலிருந்து இந்த நோய் பரவாவண்ணம் தடுக்க முடிந்தது. நமது மாநில எல்லைக்கு அடுத்தாற்போலுள்ள மற்ற மாநிலப் பகுதிகளில் கோமாரி நோய் கண்டிருப்பதாக அறிவிக்கப்படும்போதெல்லாம், நமது மாநில எல்லைப் பகுதிகளிலுள்ள விலங்கினங்கட்கு விலங்கின வளர்ப்புத்துறையினரால் தடுப்பு ஊசி போடப்படுகிறது.

கோமாரி நோய் வராமல் ஊசி குத்திய விலங்கினங்கள் எவை, ஊசி குத்தாத விலங்கினங்கள் எவை என்பது தெரிந்தால்தான் இத்தகைய கட்டாய ஊசி குத்தும் முறையால் நல்ல பலன் ஏற்படும் என்று இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மன்றம் எடுத்துக் காட்டியிருக்கிறது. இந்த அரசாங்கமும் ஊசி குத்திய விலங்கினத்துக்குக் குறிப்பிட்ட ஒரு அடையாளம் போடுவது அவசியந்தான் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறது. எனவே, மேற்சொன்ன சட்டத்தின் 5-வது பிரிவைத் திருத்த உத்தேசிக்கிறோம்.

இச்சட்டத்தின்கீழ் செய்துள்ள விதிகளை சட்டப் பேரவையில் வைக்கவேண்டுமென்ற சட்டமன்ற விதிகள் அங்கீகாரக் குழுவினருடைய சிபாரிசுக்கு ஏற்ப இச்சட்டத்தின் 30-வது பிரிவைத் திருத்த இந்த வாய்ப்பு பயன்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கிறது.

எனவே, இம்மசோதா கருத்து வேறுபாடற்ற ஒரு சாதாரண மசோதாவானதால், இம் மன்றத்தினர் இந்தப் பிரேரேபணையை ஏற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய கோமாரி வியாதியை தடுப்பதற்காக அரசாங்கம் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து சில விஷயங்கள் சொல்லுவதற்கு முன்வருகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் கால்நடைகளை தங்களுடைய பிரதான சொத்துக்களாகக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், தஞ்சை மாவட்டத்தில் கோமாரி வியாதி மாத்திரமல்ல, இன்னும் பல வியாதிகள் கால்நடைகளுக்கு வருகின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்வதற்கு ஆசைப்படுகிறேன். கால்நடைகளுக்கு கால்நோய், வாய்நோய் என்ற வியாதிகள் வருகின்றன. அந்த வியாதிகள் எப்பொழுது வருகின்றன என்றால், மழையே இல்லாமல் நல்ல வெய்யில் காலத்தில் திடீரென்று மழை பெய்துவிட்டால் அப்பொழுது வந்துவிடுகின்றன. கால்நோய் என்றால், கால் குளம்பில் பூச்சி வைத்து, கால் புண்ணாகி, திடீரென்று மாட்டுக்கு வியாதி ஏற்பட்டு செத்துவிடுகிற நிலைமை ஏற்படுகிறது. வாய் நோய் என்றால் வாயினால் வாளி வாளியாக ஊற்றிக்கொண்டிருக்கும். சிகிச்சை செய்ய முடியாது. அம்மாதிரி வியாதி வந்து கால்நடைகள் செத்துப் போகக்கூடிய

[திரு. ஆ. கு. சுப்பையா] [27th July 1964

நிலைமை ஏற்படுகிறது. மண்ணையடிப்பான் என்ற வியாதியும் வருகிறது. திடீரென்று தொண்டை அடைத்து, மாடு திடீரென்று செத்துப்போகும். இப்பேற்பட்ட வியாதிகளை தடுப்பதற்கு அரசாங்கம் போதுமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றையதினம் எல்லா கூட்டு மன்றங்களிலும் ஒரு கால்நடை ஆஸ்பத்திரி ஏற்படுத்தவேண்டும் என்று அரசாங்கம் யோசனை செய்திருக்கிறது. அந்த யோசனையையும்கூட, அவசரக் கால நெருக்கடியை உத்தேசம் பண்ணி, அந்த ஆஸ்பத்திரிகள் ஆரம்பிப்பதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். சில இடங்களில் வேலை ஆரம்பித்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஒரு கூட்டு மன்ற ஏரியா 45 அல்லது 50 பஞ்சாயத்துக்களைக் கொண்ட விஸ்தீரணமுள்ள ஏரியாவாக இருப்பதினால், ஒரு கால்நடை ஆஸ்பத்திரியை ஏற்படுத்துவதோடு அல்லாமல், அதை ஒட்டியே இரண்டு, மூன்று உதவி நிலையங்களை ஏற்படுத்துவதாகவும் யோசனை இருந்துகொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் அம்மாதிரி உதவி நிலையங்களை அதிகரிக்கவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். அப்படி அதிகரிப்பதின்மூலம் உடனடியாக வியாதிகள் ஏற்படக்கூடிய சமயத்தில், அந்த வியாதிகளை தடுத்து நிறுத்தி, கால்நடைகளை மீட்கமுடியும். அப்படியில்லை என்றால், கிராமப்புறங்களில் நாட்டு வைத்தியர்களை அறிந்து, அவர்கள் கவனித்து, அந்த வியாதிகளைப் போக்க மருந்து கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அம்மாதிரி வைத்தியர்கள் கிடைக்கவில்லை என்றால் கால்நடைகள் பெரிய அளவுக்கு சேதப்படுகிறது. விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய ஒரேசொத்து அந்தக் கால்நடைகள். அவைகளையும் இழக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இந்தமாதிரி வியாதிகளை தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசாங்கம் ஆலோசனை செய்து, தஞ்சை மாவட்டத்தில் உதவி நிலையங்களை அதிகரித்து, ஒரு பிளாக்கிற்கு 5, 6 நிலையங்களை யாவது ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, I welcome this Madras Rinderpest (Amendment) Bill, 1964. The measures that are being taken by this Government to control diseases amongst cattle is really magnahimous. Already many measures are being taken to arrest this Rinderpest disease. But here it is stated that after the animals are inoculated there will be a mark to show the compulsory marking of animals inoculated against Rinderpest. Mostly the people in the villages who look after these animals feel that if a particular animal has any mark, it is not a good sign. That belief is there. So, I would request Government to ensure that such markings are done by departmental people so as not to exhibit that the particular animal inoculated against Rinderpest is in any way inferior to other animals. Otherwise purchasers of animals feel, that if an animal has any mark on it, it is hopelessly

27th July 1964] Sri C. Chiranjeevulu Naidu]

bad. Precautions may be taken not to disfigure animals by such markings. Rules should be framed under this Act, to the effect that the markings on animals should be made in a very light way and not prominently.

Regarding the measures that are taken by the Veterinary Department under the Key Village Scheme, there are 10 sub-centres to a main centre. In each sub-centre the livestock men think that their duty is over if they do the artifical insemination. I request that these sub-centres should be properly equipped with all medicines so that if any animals come there with any disease, they might be immediately attended to. I also suggest periodical inoculations against Rinderpest. As the hon. Member Sri A. K. Subbiah has said, besides Rinderpest, many diseases come to these animals which take away their lives in minutes or within one hour. In such cases necessary measures should be taken so that the departmental people could go to the spot and take preventive measures. Cattle wealth, the property of agriculturists must be protected by providing proper safeguards against diseases which afflict cattle. I also request Government to consider the desirability of bringing in Cattle Insurance as soon as possible. With these words I conclude my speech.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து, என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். நாம் எப்படி மனிதர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிறோமோ, அதேபோன்று விலங்கினங்களுக்கும் கண்டிப்பாக பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அவைகளுக்கு வரக்கூடிய நோய்களைத் தடுக்கவேண்டும் என்ற அடிப்படையிலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. உண்மையில் இந்த மசோதா விவசாய மக்களுக்கு மிகவும் பாதுகாப்பு அளிக்கக்கூடிய அளவிலே இருக்கிறது. இருந்தாலும், கிராமப்புறங்களைப் பொறுத்த அளவில், இந்த மாடுகளுக்கு வரக்கூடிய வியாதிகளை என்னவென்று எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை, சொல்லவும் முடியவில்லை. மாடு வேலைசெய்து கொண்டே இருக்கிறது, கழுத்துப் பக்கம் வீங்குகிறது, காலை அப்படியே நீட்டி படுத்துக்கொள்கிறது, அப்படியே நீட்டியபடியே இறந்துவிடுகிறது. இன்னும், 3, 4 நாட்களுக்கு தண்ணீர் குடிப்பதில்லை, உணவு உட்கொள்ளுவதில்லை, தீவனமே எடுத்துக்கொள்ளாமல், பேசாமல் படுத்துக்கொண்டு அப்படியே இறந்துவிடுகிறது. மாடுகளை வைத்துத்தான் விவசாயிகள் விவசாயம் செய்யவேண்டியிருக்கிறது. என்னைப் போன்ற விவசாயிகளுக்கு ஒரு ஆண்டில் 10, 12 மாடுகள் இறந்துவிட்டால், அவர்களுக்கு பெருத்த அளவுக்கு நஷ்டத்தை உண்டாக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. கோமாரி என்றால் என்ன என்பதை இப்பொழுதுதான் நாங்கள் புரிந்துகொள்கிறோம். ஏதோ சாணம் போடும்பொழுது தண்ணீராக இருக்கும், அப்படியே இரண்டு நாட்களுக்கு இருந்து, இறந்துவிடும், அதுதான் கோமாரி என்ற விஷயம்கூட நாங்கள் இப்பொழுதுதான் தெரிந்துகொண்டோம். இம்மாதிரி வியாதிகள்

[திரு. இரா. நாராயணன்] [27th July 1964

காரணத்தால் இந்த ஆடுமாடுகளின் விலையும் ஏறிவிட்டது. உழவு மாடு வாங்க வேண்டும் என்று சொன்னால், ரூபாய் 1,000 கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு செம்மறி ஆடு வாங்க வேண்டும் என்றால் ரூபாய் 30 அல்லது 40 கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த நோய்களைத் தீர்க்கும் வகையில் நல்ல மருத்துவ விடுதிகளை ஏற்படுத்துவதில் அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். என்னுடைய பகுதியிலே அரிய லூரிலே ஒரு மாட்டு ஆஸ்பத்திரி இருக்கிறது. பெரம்பூரில் ஒன்று இருக்கிறது. ஆனால் எங்களுடைய ஊரில் இருந்து அந்த ஆஸ்பத்திரி 24 மைல் தொலைவில் இருக்கிறது. எங்கள் ஊரிலே கால்நடைகளுக்கு கோமாரி நோய் ஏற்பட்டபோது நான் தாசில் தாருக்கு ரிபோர்ட் செய்தேன். கால்நடை டைரக்டருக்கும் ரிபோர்ட் செய்தேன். மூன்று நான்கு நாட்கள் வரையிலும் யாரும் வந்து ஊசிகள் போடவில்லை. கடைசியாக அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் மாவட்ட கலெக்டரிடம் ரிபோர்ட் செய்தேன். அதற்குப் பிறகு வந்து ஊசி போட்டார்கள். டாக்டர் வருவதற்குள்ளாக நல்ல ஆடுகளும் மாடுகளும் இறந்துவிட்டன. எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால் கிராமப்பகுதிகளில் 10 மைல் விஸ்தீரணத்திற்கு ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுத்தி உடனுக்குடன் கால்நடைகள் நோயைத் தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்தால் விவசாய மக்கள் அதனால் நன்மை அடைய முடியும். விவசாய உற்பத்தியும் நல்ல முறையில் செய்யலாம்.

கிராமப்புறங்களில் பல புறம்போக்குகளை, ஓடைப்புறம்போக்கு, பாட்டைப்புறம்போக்கு இவைகளை ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, மாடுகள் மேய்வதற்கு இடம் இல்லாமல் விவசாயிகள் கஷ்டப் படுகிறார்கள். தாசில்தார் பி-மெமோ கொடுத்து அவற்றை காலி செய்துவிடுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் பி-மெமோ கொடுக்கப்பட்டு தண்டனை விதிக்கப்படுகிறதே ஒழிய அந்த புறம்போக்குகள் கால்நடை மேய்வதற்கு கிடைப்பதில்லை. சர்க்கார் இதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். விவசாயக் குடி மக்களின் நிலை உயர வேண்டும் என்ற நோக்கம் அரசாங்கத்துக்கு இருக்குமேயானால் இந்த மாதிரி வைத்திய வசதிகளுக்கு ஏற்பாடு செய்வதுடன் இம்மாதிரி புறம் போக்குகளை காலி செய்து கொடுக்க வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஆ. துரையரசன் : கனம் தலைவர் அவர்களே, நம்முடைய உள்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற, கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற கோமாரி நோயைத் தடுக்கும் இந்த மசோதாவை மனப்பூர்வமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்று என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட சில நிலைமைகளை நான் விளக்குவதற்கு கடமைப்பட்டு இருக்கிறேன். என்னுடைய வட்டாரத்தில் அறந்தாங்கி, ஆவுடையார் கோவில், இந்த இரண்டு கூட்டு மன்றங்களுக்கும் இடையில் அறந்

27th July 1964] [திரு. ஆ. துரையரசன்]

தாங்கி தலைநகரில் கால்நடை மருத்துவ மனை இருக்கிறது. அதற்கு என்று சொந்தமாக கட்டிடம் இல்லை. சத்திரம் இலாகாவிற்கு சொந்தமான கட்டிடத்திலே வாடகைக்கு இருந்து வருகிறது. ஆனால் ஆவுடையார் கோவிலில் பல்வேறு கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்காக தனியார் மருத்துவ மனை கட்டிடம் இல்லை. ஆனால் ஆவுடையார் கோவிலுக்கு டாக்டர்கள் வருகிறார்கள். என்னுடைய வட்டத்தில் உள்ள இரண்டு கூட்டு மன்றங்களுக்கும் இடையில் உள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களில் கால்நடைகளுக்கு நோய் ஏற்பட்டால் தேவையான மருந்துகள் கைவசம் இல்லை என்று அறிவித்து விடுகிறார்கள். கால்நடை இலாகா டாக்டர்களைக் கேட்டால், இங்கே அந்த மருந்துகளை ஸ்டாக் செய்வதற்கு வேண்டிய வசதி கிடையாது, அதற்குத் தகுந்த கருவிகள் இல்லாத காரணத்தால், பட்டுக்கோட்டையில் இருந்து எடுத்து வர வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதன் காரணமாக கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் என்னுடைய தொகுதியில் மட்டும், அரந்தாங்கி கூட்டு மன்றம் சம்மந்தப் பட்ட கிராமங்களில், 200-க்கு மேற்பட்ட கால்நடைகள், ஒரு ஜோடி மாடு, 800, 1,000 ரூபாய் மதிப்புள்ளவை இறந்துபோய் இருக்கின்றன. இதைப் பற்றி ஏற்கனவே கூட அறிவித்திருக்கிறேன். அதற்குக் காரணம், இருக்கும் கால்நடை வைத்தியர்கள் போதவில்லை என்பது ஒன்று; இரண்டாவதாக மருந்துகள் ஸ்டாக்செய்து வைக்கப் படவில்லை என்பது. பட்டுக்கோட்டையிலிருந்து தான் எழுதி எடுத்து வர வேண்டும் என்று சொல்கிறார்கள். பட்டுக்கோட்டைக்கும் அரந்தாங்கிக்கும் 30 மைல் அந்தப் புறம் கிட்டத் தட்ட 40 மைல் இருக்கிறது. ஆகவே, மருந்து வருவதற்குள்ளாகவே, வியாதி அதிகமாகப்பரவி விடுகிறது. ஆகவே, கிராமப்புறங்களுக்கு வைத்தியர்கள் சென்று, நடமாடும் வைத்தியசாலை மாதிரி ஏதாவது ஏற்பாடு செய்து கிராமப் புறங்களை முற்றுகையிட ஏற்பாடு செய்ய வேண்டும். எந்தக் காலத்தில் கால்நடைகளுக்கு இந்த வியாதி வருகிறதோ, அதற்கு முன்னதாகவே, தடுப்பு முறைகளைக் கையாள அரசு உத்தரவு இடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆவுடையார்கோயில் கூட்டுறவு மன்றத்தில் சொந்தமாக கால்நடை இலாகா மருத்துவநிலையம் அமைக்க, மேற்படி கட்டடம் கால்நடை இலாகா விதிப்படி கூட்டுமன்ற தலைநகரம் எங்கிருக்கிறதோ அங்கு தான் அமைக்க வேண்டும் என்று இருக்கிறதனால் . . .

MR. SPEAKER : The hon. Member may come to the subject of the bill. He is talking about other things.

திரு. ஆ. துரையரசன் : சம்பந்தப்பட்ட விஷயம் தான். . .

கனம் சபாநாயகர் : சம்பந்தப்பட்டது தான். இப்பொழுது வந்திருக்கும் பில்லுக்கு 'லிமிடட் ஸ்கோப்பு' தான். டைலேட் பண்ணிக்கொண்டே போகக் கூடாது. டீடெய்ல்ஸ் பூரா பேசிக் கொண்டே போனால், இப்பொழுது சரியாகாது.

[திரு. பூ. கக்கன்] [27th July 1964

காடுகள் மாத்திரம் போதும், வைத்தியம் வேண்டாம் என்று சொன்னால் அதை சர்க்கார் ஒத்துக் கொள்ள முடியாது என்று சொல்ல விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. சுப்பையா அவர்கள், தஞ்சையிலே இம்மாதிரி வியாதி அடிக்கடி வருவதாகப் பொதுவாகச் சொன்னார்கள். அப்படி வியாதிகள் வராமல் தடுப்பதற்காகத் தான் நாம் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். வெடரினரி ஆஸ்பத்திரிகள் ஒவ்வொரு ப்ளாக்கிலும் கட்டவேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அது தான் அரசாங்கத்தினுடைய கொள்கையும் திட்டமும் ஆகும்.

மதிப்பிற்குரிய திரு. சிரஞ்சீவிலு நாயுடு அவர்கள் பேசும் போது, நோய் வந்த மாடுகளுக்கு அடையாளம் குத்துவதன் காரணமாக, பின்னால் விவசாயிகள் மாடுகளை விற்கும்போது அவற்றின் விலை குறைந்துவிடக்கூடாது என்றும், கஷ்டம் இல்லாமல் ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். அந்த முறையில் அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளில் பெரும்போலோர் தங்கள் மாடுகளை விற்க்கமாட்டார்கள். மாடுகளை விற்றால் வீட்டிலிருக்கும் செல்வத்தை வேறிடத்தில் கொடுப்பதாகும் என்ற கருத்தில் விவசாயிகள் பொதுவாக மாடுகளை விற்பதில்லை. மேலும், மாடுகளை விற்றால், வாங்கினவர்கள் அவற்றைக் கொன்றுவிடுவார்களோ என்ற எண்ணமும் கூட. நோய்கண்ட மாடுகளை நல்ல முறையில் பாதுகாப்பதற்காகத்தான் அடையாளம் போடுகிறோம். அடையாளம் போட்டுவிட்டால், மறுபடியும் மறுபடியும் வைத்தியத்திற்கு வரும்போது, அவற்றைக் கண்டுபிடித்து, தக்க சிகிச்சை செய்ய முடியும். இம்மாதிரி நோய் கண்ட மாடுகளுக்கு அடையாளம் வைப்பதால், நோய் கண்ட மாடுகளுக்கு அதிக விலை வைத்து விற்று அதிலிருந்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாமலும் பார்த்துக்கொள்ள இந்த அடையாளம் வைப்பது உதவிகரமாக இருக்கும் என்பதையும் நான் இந்தச் சமயத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. நாராயணன் அவர்கள், அரியலூர் கால்நடை ஆஸ்பத்திரியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதனால் அந்த வட்டாரத்திலுள்ள மக்களுக்கு நிச்சயமாக நன்மை கிடைக்கும் என்ற காரணத்தினால்தான் அந்த ஆஸ்பத்திரி அங்கு இருக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். கால்நடைகளுக்கு நோய்கள் வராமல் தடுக்க அது உதவியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய திரு. ராமசாமி நாயுடு அவர்கள் இந்த நோய்க்குப் பெயரிடுவதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். பெயர் எப்படியிருந்தாலும், நோயைத் தடுப்பது தான் முக்கியமான கோரிக்கையாகும். நோயைத் தடுக்க நல்ல மருந்துகள் கண்டுபிடிப்பதற்கு, நம்முடைய நாட்டில் மட்டுமல்ல, இதர நாடுகளுக்குக்கூட

27th July 1964] [திரு. பூ. கக்கன்]

நிபுணர்களை அனுப்பி சில விஷயங்களைத் தெரிந்துகொண்டுவரச் செய்து கால்நடைகளை நோயிலிருந்து பாதுகாக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். மாடுகளை நன்றாகக் கவனிப்பதற்கும் அவற்றுக்கு எந்த விதமான நோயும் வராமல் தடுக்கவும், தக்க நடவடிக்கை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்று தெரிவித்து, இந்த மசோதாவை நிறைவேற்றிக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Rinderpest (Amendment) Bill, 1964, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI P. KAKKAN : Sir, I move—

"That the Madras Rinderpest (Amendment) Bill, 1964, be passed."

The motion was put and carried and the Bill was passed.

IV. ANNOUNCEMENTS—*cont.*

(3) THE MADRAS LEASEHOLDS (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) AMENDMENT BILL, 1964.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for the introduction in and consideration by the Legislative Assembly of the Madras Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964 (L.A.Bill 24 of 1964).

V. GOVERNMENT BILLS—*cont.*

(4) THE MADRAS LEASEHOLDS (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) AMENDMENT BILL, 1964 (L.A. BILL NO. 24 OF 1960).

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I move—

"That the Madras Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964 [a] be taken into consideration."

Section 5 of the Madras Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act XXVII of 1963), provides that the Government shall appoint a Settlement Officer to carry out survey and settlement operations in leaseholds and introduce

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 21st July 1964.

ryotwari settlement therein. According to the First Schedule to the Act there are twelve leaseholds in the State and they lie in three districts, namely, Madras, Chingleput and Salem. If there are any other leaseholds in any other part of the State, the Government have power under Section 2 of the Act to include them in the First Schedule to the Act. It is considered that on administrative grounds it may not be possible for one Settlement Officer to carry out survey and settlement operations in all leaseholds in the State and that more than one Settlement Officer may have to be appointed to cope with the large volume of work involved. It is, therefore, proposed to amend section 5 of the Act so as to enable the Government to appoint more than one Settlement Officer when necessary. A similar provision has also been proposed in a Bill to amend the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, which has been passed by this House.

Sir, I request the House to accept the motion.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, I would like to say a few words on L.A. Bill No. 24 of 1964, which is before the House for consideration.

Sir, in the statement of objects and reasons, it has been stated that one Settlement Officer will not be enough to do the Survey and Settlement work in respect of lease-holds villages. In doing Survey and Settlement work in villages, we have seen, out of experience in the Zamindari Abolition and Conversion into Ryotwari, several lapses have been found and misclassifications have taken place in the survey work. The Survey Department are not having proper co-ordination with the Settlement Officers in classifying the lands, which were being actually enjoyed by the ryots as assessed waste land. The ryots are very often representing about this misclassification. The Government should take care in properly classifying the lands by taking into consideration the 'Adangal' and 'chittas' made available by the Village Officers. The Settlement Officers were issuing only rough pattas to the ryots by giving 15 days' time to raise their objection. They are not properly published in the villages and the ryots were not in a position to point out that particular land has been misclassified. For this, it has been stated that one Settlement Officer will carry out survey and settlement. I don't know whether there is Director of Settlement There is only Director of Survey. When the ryots approach Settlement authorities for certain rectifications they usually say that the particular land has been misclassified and that has to be done by the Revenue Department. Therefore, I request that the Settlement Officers should be given proper powers to the effect that the survey and settlement should be done by him. Instead of giving 15 days' time, the ryots may be given 3 months time and the pattas should also be published with sketch, so that it may enable the ryots to know the correct position. I, therefore, request the Government at least at this stage to take steps in this regard. Even though the villages have been converted into ryotwari more than 12 to 13

years are over still we see several representations and troubles due to defective survey and settlement. The Government may, therefore, properly define the powers of Settlement Officers and also provide facilities to the ryots to represent their grievances to the Settlement Officers.

Thank you, Sir.

THE HON. SRI V. RAMAIAH : The points raised by the hon Member, Sri Chiranjeevulu Naidu, are not mainly pertaining to this Bill. These are all general matters. If the hon. Member writes to me, I will consider those points and also the difficulties experienced by the ryots in the Survey and Settlement.

As far as this Bill is concerned, it is just to expedite the survey and settlement work; one Settlement Officer has to be appointed. It will enable them to do better survey and settlement. As far as general remarks are concerned. I once again inform the hon. Member that I will look into the difficulties, if he writes to me.

MR. SPEAKER : The question is—

"That the Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964 (L.A. Bill No. 24 of 1964) be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried." 10-30 a.m.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

'That the Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964 (L.A. Bill No. 24 of 1964) be passed.

The motion was put and carried and the Bill was passed.

(5) THE MADRAS GENERAL SALES TAX (SECOND AMENDMENT) BILL, 1964 (L.A. BILL NO. 29 OF 1964).

*THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I beg to move—

"That the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1964 (L.A. Bill No. 29 of 1964) [a] be taken into consideration."

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவிலே சில திருத்தங்களை நம்முடைய விற்பனை வரிச் சட்டத்திற்குக் கொண்டு வர முன் வந்திருக்கிறோம்.

a Published in the *Fort St. George Gazette* Extraordinary ,dated 23rd July 1964.

முதலாவது திருத்தம் இப்போது வியாபாரம் என்று சொல்வது லாப நோக்குடன் செயல்பட்டால் தான் அதற்கு விற்பனை வரி போடலாம் என்று தீர்ப்புக் கொடுத்தார்கள்; அந்தத் தீர்ப்பின் பயன் என்னவென்று சொன்னால் சாதாரணமாக ஒருவர் ஹோட்டல் நடத்தினால் சேல்ஸ்டாக்ஸ் கொடுக்க வேண்டும். ஒரு 'கிளப்' என்று வைத்துக் கொண்டு டிபன் விற்பனை செய்தால் சேல்ஸ் டாக்ஸ் கொடுக்க வேண்டிய தேவையில்லை. கிளப்பில் வியாபார நோக்கம் இல்லை. with a view to make profit இல்லை சர்க்காரைப் பொறுத்த அளவில் எந்த விற்பனை நடந்தாலும், லாப நோக்குடன் நடந்தாலும், லாப நோக்கு இல்லாவிட்டாலும் விற்பனை இருக்குமானால் விற்பனை வரி கொடுக்க வேண்டும். அந்த நோக்கத்தை நிறைவேற்ற இப்போது திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். திருத்தம் என்னவென்று சொன்னால் லாப நோக்குடனோ, லாப நோக்கு இல்லாமலோ விற்பனை செய்தார்களானால் விற்பனை வரி கொடுக்க வேண்டும். இதிலே சிலருக்கு ஒரு சந்தேகம் எழலாம். மாணவர்கள் ஹாஸ்டலிலே யிருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு டிவைடிங் ஸிஸ்டத்தை வைத்துக் கொண்டு ஹாஸ்டல்களில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நாங்கள் கொண்டு வருகிற திருத்தம் பதிக்குமா என்ற அச்சம் ஏற்படலாம். அவர்களுக்குத் தனியாக எக்ஸெம்ப்ஷன் கொடுத்திருக்கிறோம். ஹைகோர்ட் இந்த விதமான தீர்ப்புக் கொடுப்பதற்கு முன்பே மாணவர்கள் ஹாஸ்டலில் டிவைடிங் ஸிஸ்டத்தில் நடந்தால் அவர்கள் வரி கட்ட வேண்டியதில்லை என்று எஸ்ஸெம்ப்ஷன் கொடுத்திருக்கிறோம். ஆனால் அதை காண்டிராக்டர்களிடத்தில் விட்டு நடத்தினால் அப்போது விற்பனை வரி கட்ட வேண்டும். ஆகவே, இந்தத் திருத்தித்தினால் மாணவர்கள் விடுதி எந்த விதத்திலும் பாதிக்கப்படாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது திருத்தம், இப்போது ஒரு சரக்கை விற்பனை செய்கிறார்கள். விற்பனை செய்த பிறகு அதை வாங்கியவர் கொஞ்ச நாள் பொறுத்து இந்தச் சரக்கு வேண்டாமென்று திருப்பி கொடுத்து விடுகிறார்கள். அப்போது அந்தச் சரக்குக்கான விற்பனை வரியைக் குறைத்துக் கொள்கிறார்கள். ஒரு 'பினான்ஷியல் இயரில்' இந்த விதமான டிரான்ஸாக்ஷன் நடந்தால் எந்த விதமான கஷ்டமும் ஏற்படாது. ஜூன் மாதத்தில் ஒரு பேனாவை விற்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பேனா நன்றாக இல்லையென்று சொல்லி ஜூலை மாதத்தில் கொண்டு போய்க் கொடுத்து விட்டால் என்னிடத்தில் வாங்கிய சேல்ஸ்டாக்ஸ், விலை இரண்டையும் திருப்பிக் கொடுத்து விடுவார்கள். கணக்கிலும் திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டது என்று எழுதிவிடுவார்கள். ஆனால் 'பினான்ஷியல் இயர்' இறுதியில் மார்ச் மாதம் 31-ம் தேதி விற்று விட்டு, அதை ஏப்ரல் மாதத்தில் கொண்டு போய்க் கொடுத்தால் இப்போதிருக்கிற சட்டப்படி அந்தப் பேனாவுக்கு விற்பனை வரி கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அடுத்த வருஷத்தில் சரக்கை

வாபஸ் பண்ணி விட்டாலும் டர்ன் ஓவரில் இருந்து டிரான்ஸாக்ஷனைக் குறைக்க வேண்டும். இந்த மாதிரிச் சலுகை கொடுத்தால் ஷனைக் குறைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த இரண்டாவது திருத்தம். இந்த மாதிரிச் சலுகை கொடுத்தால் ஐந்து வருஷம், ஆறு வருஷம், பொறுத்துக்கூடக் 'க்ளெய்ம்' போடலாம். அதனால் அதற்கு ஒரு காலவரையறை இருக்க வேண்டுமென்பதற்காக ஆறு மாத காலத்திற்குள் திருப்பிக் கொடுத்தால் டர்ன் ஓவரில் இருந்து குறைத்துக் கொள்ள அனுமதி கொடுத்திருக்கிறோம்.

மூன்றாவது திருத்தம், இப்போது டிக்கேளர்டு குட்ஸ் என்று இருக்கிறது. டிக்கேளர்டு குட்ஸ் சம்பந்தமாக ஏதாவது வரி விதிக்கப்பட்டால் அதற்கு அப்பீல் போடுவதற்கு இப்போது புரொவிஷன் இல்லை. அந்த புரொவிஷன் இப்போது இல்லாததைச் சேர்த்து அப்பீல் போடும் உரிமையைக் கொடுத்திருக்கிறோம். அடுத்தது வியாபாரிகளுக்கு நாம் ஒரு நல்ல சலுகையைக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாராவது குற்றங்கள் செய்தால் அவர்கள் கம்பவுண்ட் செய்து கொள்ள உரிமை இருக்கிறது. அதிகாரிகள் 'கம்ப்பவுண்ட் செய்ய மாட்டேன்' என்று சொல்லிவிட்டால் இப்போது இருக்கிற சட்டத்தில் எந்த விதமான அப்பீல் செய்யுவோ, ரிவிஷன் போடவோ உரிமை இல்லை. அதற்காக இப்போது சட்டத்தைத் திருத்தி, அதிகாரி கம்ப்பவுண்ட் செய்ய மறுத்தால் காரணம் என்னவென்று சொல்ல வேண்டும். அதற்கு மேல் ரிவிஷன் போடலாம். இது வியாபாரிகளுக்குச் சலுகை கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டது.

அடுத்தாற்போல் ஷெட்யூலில் சில திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறோம். தேயிலை சம்பந்தமாக இன்றைக்கு இருக்கிற சட்டப்படி 'க்ரீன் டீ' என்பது 'டீ' என்பதில் வாராது என்று சொல்லிவிட்டால் பச்சை இலைத் தேயிலைக்கு 2 சதவீதம் கொடுத்தால் போதும். அப்போது மல்டி பாயிண்ட் டாக்ஸ் வந்து விடும். இதற்கு ஒரு பெரிய சரித்திரம் இருக்கிறது. க்ரீன் டீ மான்யுபாக்சர் செய்யும்போது அதற்கு எக்ஸெம்ஷன் கொடுக்க வேண்டுமென்று முன்பு சட்டம் வைத்திருந்தோம். அதை நடைமுறையில் அமல் நடத்த முடியாமல் போய்விட்டது. காரணம் என்னவென்று சொன்னால் டீ எல்லாவற்றையும் வாங்கி இன்றைக்கு அவர்கள் மான்யுபாக்சர் செய்கிறார்கள். அந்த 'டீ'-யிலிருந்து இது செய்யப்பட்டது என்று சொல்வதற்கில்லை. பெரிய தோட்டங்களை எடுத்துக் கொண்டால் சொந்தமாகக் 'கார்டன்' இருக்கிறது. வெளியில் இருந்து வாங்கிய டீ எவ்வளவு, பதனிடப்பட்ட டீ எவ்வளவு, எப்படி எந்த அளவுக்குச் சலுகை கொடுக்க முடியும் என்றே கண்டு பிடிக்க முடியாமல் தொல்லைகள் ஏராளமாக ஏற்பட்ட காரணத்தால் தான் 'க்ரீன் டீ' வாங்கினால் அதற்கு மல்டி பாயிண்ட் டாக்ஸ் என்றும், 'மெய்டு டீ' வாங்கினால் அதற்கு ஐந்து சதவிகிதம் வரி என்றும் இப்போது செய்திருக்கிறோம்.

[Sri R. Venkataraman] [27th July 1964

அடுத்து இந்த மின்சாரக் கருவிகள் சம்பந்தமாக ஒரு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இப்போதிருக்கிற டெபனிஷன் பிரகாரம் எலக்ட்ரிக்கல் குட்ஸ், எலக்ட்ரிஸிட்டியால் ஓட்டக் கூடிய வைக்குத்தான் வரி போட வேண்டும் என்ற ஒரு அபிப்பிராயம் எழக் கூடும். நம் வரி விதிப்பின் நோக்கம் என்னவென்றால் எலக்ட்ரிக்கல் குட்ஸ் எதுவாக இருந்தாலும் அதற்கு 6 சதவிகிதம் வரி வேண்டும். மற்ற இயந்திரங்கள், கருவிகள் எல்லாம் எலக்ட்ரிஸிட்டி இல்லாமல் ஓட்ட முடியாது என்று இருந்தால் அவற்றிற்கும் 6 சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்பது அதை விளக்க இந்தத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். மூன்றாவது, ரோமம் சம்பந்தமாக முதலில் நமக்கு 'உல்' ப்ரோஸஸ் செய்வதில் சில ரக "உல்"-களுக்கு 2 சத விகிதம், சிலவற்றிற்கு 1 சதவிகிதம் என்றிருக்கிறது. எல்லாவற்றையும் மாற்றி "உல்" ஷீப், கோட் எதுவாக இருந்தாலும் சரி 1 சத விகிதம் என்று செய்து விட்டால் தொல்லை இருக்காது என்று 1 சத விகிதம் ஆக செய்திருக்கிறோம். எல்லா ரோடித்திற்கும், குறிப்பாக இந்த மசோதா வியாபாரிகளுக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட ஒரு மசோதா இதை ஏற்றுக் கொள்ளும்படியாக கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : What about the Governor's recommendation for the consideration of this Bill?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I will look into the file and verify it.

The opinion of the Law Department is that this does not require the recommendation of the Governor because there is no expenditure from the Consolidated Fund of the State. Sub-section (3) of Article 207 of the Constitution says—

'A Bill which, if enacted and brought into operation, would involve expenditure from the Consolidated Fund of a State shall not be passed by a House of the Legislature of the State unless the Governor has recommended to that House the consideration of the Bill.

But this does not involve any expenditure from the Consolidated Fund of the State. Therefore, it does not require any recommendation of the Governor.

MR. SPEAKER : Is there any appointment made under this Bill?

THE HON. SRI R. VENKATARAMAN : No.

MR. SPEAKER : According to Article 199 of the Constitution, it is a Money Bill.

THE HON. SRI R. VENKATARAMAN : Of course, it is a Money Bill.

27th July 1964] [Sri R. Venkataraman]

But the various clauses of the Bill except the Schedule do not involve any financial implications. Firstly, we only define what is 'business'. Secondly, we say that compounding facilities should be given. So far as the Schedule is concerned, I think it involves even a reduction of taxes. We are reducing the tax from two per cent to one per cent.

MR. SPEAKER : I think for reduction no recommendation is required.

THE HON. SRI R. VENKATARAMAN : Yes Sir no recommendation is required.

MR. SPEAKER : According to the proviso to sub-section (1) of Article 207, no recommendation is necessary for the 'moving of an amendment making provision for the reduction or abolition of any tax'.

THE HON. SRI R. VENKATARAMAN : That is, in cases where there is a reduction or abolition of the tax.

In respect of item 3, 'wool' the reduction is from two per cent to one per cent. No new items are brought forward in this Bill.

MR. SPEAKER : Motion moved—

'That the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1964 (L.A. Bill No. 29 of 1964), be taken into consideration.'

திரு. பி. வி. சீராமுலு : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விற்பனை வரி இரண்டாவது அமென்ட்மென்ட் பில்லைப் பற்றி இரண்டொரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். விற்பனை வரி முன்பிருந்து இதுவரையிலும் கடந்த 16 ஆண்டுகளாக நாளுக்குநாள் ஏறிக்கொண்டே வருகிறதே தவிர இந்த விற்பனை வரியால் மக்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறார்கள், எப்படி இந்த விற்பனை வரியினால் விலை ஏற்றங்கள் ஏற்படுகின்றன என்பதைப்பற்றி ஒவ்வொரு கூட்டுத் தொடரிலும் இந்த மன்றத்தில் பேசி உள்ளோம். அதோடு மட்டுமல்லாமல் இந்த விற்பனை வரிச் சட்டம் கிட்டத்தட்ட நம் மாநிலத்தில் உருவாக்கப்பட்டதாக இருந்தாலும் அண்டை மாநிலங்களில் விற்பனை வரிச் சட்டம் உருவாகும்போது அங்கு ஒரு விற்பனைக்கு, வாங்குபவர்களுக்கும், கொடுப்பவர்களுக்கும் 5 சதவிகிதம் என்றிருந்தால் அந்த மாநிலத்தை அனுசரித்து நம் மாநில சர்க்கார் 2 சதவிகிதம் ஆக உள்ள ஒரு விற்பனை வரியை அண்டை மாநிலத்தில் 5 சதவிகிதம் வாங்குகிறார்கள், அதற்காக நாமும் 5 சதவிகிதம் என்று ஏற்ற வேண்டும் என்பதைக் குறிக்கொளாகக் கொண்டு ஒவ்வொரு தடவையும் இந்த அமென்ட்மென்ட் பில் இந்த அவையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அப்படிக் கொண்டு வருங்கால் கிட்டத்தட்ட இந்த மாநில சர்க்கார் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டபடி 32 கோடி ரூபாய் விற்பனை வரியாக வாங்கப்பட்டு அதில் 2 கோடி அதற்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 32 கோடி ரூபாய் விற்பனை வரியாக வாங்கப்படுகிறது. ராஜாஜி காலத்தில் சேலம் மாவட்டத்தில் அல்ல, இந்த மாநிலம் பூராவும் கள் வேண்டாமென்று குறிக்கோளை வைத்துக்

கொண்டு கள் வேண்டாமென்ற எண்ணத்திற்காக விற்பனை வரியை உருவாக்கி அதற்கு ஈடு செய்யத்தான் வந்திருக்கிறது. ஆனால் இப்போதுள்ள சர்க்கார் விற்பனை வரி என்பதை ஒரு தொழிலாகவே கொண்டு, நாட்டில் விற்பனை வரி வசூல் செய்தால் நம் மாநில வருவாயில் ஐந்தில் ஒரு பங்கு அதிலிருந்து கிடைக்கிறது என்ற லாபத்தின் பெயரால்தான் இப்போது வசூல் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறதே தவிர அது மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியதாக இல்லை. முதல் அமெண்ட் மெண்டில் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதாவது இன்று பிள்ளைகள் ஹாஸ்டலில் கான்டீன் முறையில் கான்டீன் என்றால் ஓரளவு டிவைடிங் லிஸ்டம் என்று சொல்கிறோம்—டிவைடிங் லிஸ்டத்தில் வந்தால் விற்பனை வரி இல்லை. சிறிய தொழில் நடத்தும் ஒரு தொழிற்சாலையில் அங்கு 21 பேர்களுக்கு மேல் இருந்தால் அவர்களுக்கு வைத்திய வசதி வேண்டும், மேற் கொண்டு கான்டின் லிஸ்டம் வேண்டும். வேண்டிய சலுகைகள் வேண்டும் என்பது அரசாங்கத்தின் உத்தரவு. அப்படியிருக்க 21-லிருந்து கிட்டத்தட்ட 200, 300 ஆள்களை வைத்து நடத்தப்படும் ஒரு தொழிற்சாலையில் கான்டீன் லிஸ்டம் இருந்தால் நிலை என்ன? தொழிலாளர்களும் முதலாளிகளும் சேர்ந்து தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் குறைந்த விலையில் கிடைப்பதற்குரிய வகையில் நம் மாநிலத்தில் இன்னும் பல கான்டின்கள் நடந்துகொண்டிருக்கின்றன. வெளியில் வாடகைக்கு அல்லது இட்லிக்கு 7 பைசா என்றால் கான்டினில் 3 பைசாவிற்கு கொடுக்கிறார்கள் தொழில் அதிபர்கள். அதுபோன்ற கான்டின்களுக்கு விற்பனை வரி வருகிறது என்றால் அது தொழிலாளர்கள் பேரில்தான் ஏறுகிறதே தவிர, தொழிலாளர்கள் சமுதாயத்தின் மேல்தான் ஏறுகிறதே தவிர, அது மக்களுக்கு நன்மை பயக்குவதாக அர்த்தமல்ல. கான்டின்கள் நடத்தும் தொழில் ஸ்தாபனங்களுக்கு, பல ஆண்டுகளாக நடத்தி வந்திருந்தாலும் சரி அங்கும் விற்பனை வரி வசூல் செய்யவேண்டுமென்ற எண்ணம் இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி இதுவும் கூடாது, கூடியவரையில், தொழிலாளர்கள் இருக்கும்படியான இடத்தில் இருக்கின்ற கான்டீன்களுக்கு விதிவிலக்கு அளிக்கும்படியாக கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இதில் காம்பௌண்ட் ஸேல் ஸ்டாக்ஸ் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். வாஸ்தவத்தில் அதிகாரிகள் நல்ல முறையில் வேண்டுமென்ற எண்ணத்தோடு, மேல் உத்தரவின் பேரில் "நீங்கள் இந்தத் தடவை 2 கோடி ரூபாய் அளவுக்கு ஸேல்ஸ் டாக்ஸ் வசூல் செய்யவேண்டும் என்றும், அப்படி வசூல் செய்தால் உங்களுக்கு ப்ரமோஷன் கொடுக்கப்படும்" என்ற குறியீட்டின் கீழ் அரசாங்கம் சொல்லி வருவதாக சொல்லப்படுகிறது. ஆனால் ஒரு வியாபாரத்தை நடத்தும் போது, ஒரு ஆண்டு ஐந்து லட்சத்திற்கு வியாபாரம் நடத்தியிருக்கலாம், அடுத்த வருடம் பத்து லட்சத்திற்கு நடத்தியிருக்கலாம், ஆனால் அதற்கடுத்த ஆண்டு 2 லட்சத்திற்குத்தான் நடத்த முடிந்திருக்கலாம். அப்போது போய் நீங்கள் இப்போது இரண்டு லட்சம் என்று சொல்வது தவறு, ஐந்து லட்சம் தான் வியாபாரம்

ஆகியிருக்கும் என்று சொல்லி அதற்கு காம்பௌண்ட் டாக்ஸ் போடுகிறார்கள். ஆனால் அதன் பேரில் அப்பீல் செய்வதற்கு வழி வகை செய்திருக்கிறார்கள். அதே சமயத்தில் ஒரு நிலச்சுவான்தார் ஒரு வருடத்தில் தன்னுடைய விவசாயம் நடத்துவதற்கு மழை பெய்யவில்லை என்று சொன்னால் அந்த வருடத்திற்கு தான் செலுத்த வேண்டியவரியை ரத்து செய்து தர வேண்டும் என்று அரசாங்கத்தினிடம் கேட்டுக் கொள்வதற்கு வழியிருக்கிறது. ஆனால் வியாபாரம் செய்கின்றவர்கள், அவருடைய வியாபாரம் முன் போல் நடந்தாலும் சரி, நடக்காவிட்டாலும் சரி, ஒரே முறையில் தான் வரி விதிக்கிறார்கள். இதைப் பற்றி அதிகாரிகள் நல்ல முறையில் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இல்லையென்றால் தங்களுடைய உயர்வை மட்டும் நம்பிக் கொண்டு, அதிகாரிகள் வேலை செய்து வருவார்கள். ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, மெஷினரியைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது ஒவ்வொரு எலக்டிரிக் கருவிகளுக்கும் ஆறு சதமானம் என்று வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சரக்கைக்கொண்டு அல்லது ஒரு பொருளைக்கொண்டு வேறு பல பொருள்களை செய்தாலும், அந்தப் பொருளுக்கு மட்டும் தான் வரி, செய்யப்பட்ட மற்ற பொருட்களுக்கெல்லாம் விற்பனை வரி இல்லை என்று சொல்லப்பட்டிருந்தது. இதைப்பற்றி நான் சென்றக் கூட்டத் தொடரிலேயே சொல்லியிருக்கிறேன். ஒரு வியாபாரம் செய்கின்றவர், இந்துஸ்தான் லிவர் கம்பெனி அல்லது மேட்டூர் கெமிக்கல்ஸ் இந்த கம்பெனிகளுக்கு வியாபாரம் செய்துள்ளார். இதற்காக செலுத்த வேண்டிய ஸேல்ஸ் டாக்ஸை கட்டிவிட்டு பொருட்களை சப்ளை செய்கின்றார். அவரிடத்தில் 17-ம் நம்பர் பாரம் கொடுத்து மனு செய்த பின்னால் அது சரியல்ல என்று மாநில சர்க்காரால் சொல்லி இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இதற்காக உயர் நீதின்றத்தில் வழக்கும் போடப்பட்டிருக்கிறது. அதனுடைய ரிஸல்ட் இன்னும் வரவில்லை. சாதாரணமாக எ-நமூனா பிரகாரம் மனு செய்யவேண்டும் என்று இருந்தாலும், எலக்ட்ரிக்ஸ் குட்ஸ் என்று சொல்லும்போது, ஒவ்வொன்றுக்கும் ஆறு சதமானம் என்று போடப்படும். இதன்படி பார்த்தால், எலக்ட்ரிக் கரண்ட் மூலம் ஓட்டக்கூடிய மெஷினை எடுத்துக்கொண்டால், அது ஓட்டப்பட்டிருந்தாலும், இல்லையென்றாலும் ஆறு சதமானம் வரி கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதுவும் இதில் சொல்லப்பட்டிருப்பது எல்லாம் லிங்கிள் பாயின்டாக இருக்கிறது, மல்டி பாயின்டாக இல்லை. ஒரு மெஷினை கல்கத்தாவில் வாங்கி சேலத்திற்கு கொடுக்கும் போது இரண்டு ஆறு சதமானம் அதாவது 12 சதமானம் கொடுக்கவேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது. இதற்கு ஓவர் ஆயில் அல்லது ஹார்ம் ஆயில் போடுவது என்று சொல்லும் போது, புதுமெஷின் என்ற அளவில் வரி கொடுக்கவேண்டிய நிலைமையும் ஏற்படும். இதனால் வருகின்ற லாபத்தைவிட அதிகமாக விற்பனை வரி கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும்.

[திரு. பி. வி. சீராமுலு] [27th July 1964

எப்போதுமே கிடைக்கின்ற லாபத்திற்கு அதிகமாக வரி கொடுக்கக் கூடிய சூழ்நிலை இருக்கக்கூடாது. அதற்குத் தகுந்த வாறு வரி இனங்களை விதிக்கவேண்டும், அது தான் மக்களுக்கும் நல்லதாக இருக்கும் என்பதைக் கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவில் இருக்கின்ற பிரச்னைக்கும் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதற்கும் சம்பந்தம் அதிகமாக இல்லை. இதில் இல்லாத பல விவரங்களைப்பற்றியும் கனம் அங்கத்தினர் அவர்கள் பேசினார்கள். இதிலுள்ள விவரங்களைப்பற்றி ஆரம்பத்திலேயே சொன்னேன். அதாவது பொதுவாக எலக்ட்ரிக் குட்ஸ்க்கு ஆறு சதவிகிதம் என்று போட்டிருப்பதால், அதிலுள்ள இயந்திரங்கள், கருவிகள், எலக்ட்ரிக் கரண்டினால் ஓட்டக்கூடிய இயந்திரங்கள் இவைகளுக்கு எல்லாம் ஆறு சதமானம் என்று விளக்கமாகப் போடப்பட்டிருக்கிறது. இப்போது இருப்பதில் அவ்வளவு விளக்கமாக இல்லை. முதலாவது எலக்ரிக் எனரஜி குட்ஸ் என்று சொல்லும்போது விளக்கமாக இதில் என்னென்ன கருவிகள் இயந்திரங்கள் அடங்கும் என்பது தெளிவாகாமல் இருந்தது . . .

Even if they are electrical goods you will have to use electrical energy. Then you have to bring it under the definition.

எப்போதுமே ஸிங்கிள் பாயின்ட் என்று வரி போடும்போது பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. மல்டி பாயின்ட் என்று போட்டு விட்டால் மொத்த டர்ன் ஓவரில் இரண்டு சதமானம் என்று போட்டு விடலாம். ஸிங்கில் பாயின்ட் என்று போடும் போது, இதில் வரக்கூடிய பொருட்களைப்பற்றி சரியானபடி டெஃபினிஷன் கொடுக்க வேண்டும். அதில் தான் அடிக்கடி பல சிக்கல்கள் வருகின்றன. இதன் காரணமாக பல கேஸ்களும் வருகின்றன. கனம் அங்கத்தினர் அவர்களும் தனிப்பட்ட கேஸ் ஒன்றை சொன்னார்கள். அது கோர்டில் இருந்தால், கோர்ட் என்ன தீர்ப்பு கொடுக்கிறதோ அது தான் பொருந்தும், அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

திரு. பி. வி. சீராமுலு: தலைவர் அவர்களே, தனிப்பட்ட கேஸைப்பற்றி நான் குறிப்பிட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதும் . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கோர்டில் இருக்கக்கூடிய விஷயம் என்றால் அதற்கு கோர்ட் தான் தீர்ப்புக் கொடுக்க வேண்டும். சட்டசபையில் அதற்கு விளக்கமும் கொடுப்பதற்கில்லை . . .

திரு. பி. வி. சீராமுலு: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் அங்குள்ள டி.ஸி.டி.ஓ. அவர்கள் தவறுதலாகப் பாரம் கொடுத்ததின் காரணமாக, அதாவது ஸிங்கிள் பாயிண்ட் என்றிருந்ததை மல்டி பாயிண்ட் என்று தவறுதலாக எடுத்துக் கொண்டதின் காரணமாக அதை நிறுத்தியிருக்கிறார்கள். இதற்காக வரி செலுத்திய வியாபாரிக்கு நியாயம் கிடைக்காததின் காரணமாகத்தான் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது . . .

27th July 1964]

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் சொல்லுகின்ற விவரங்கள் எல்லாம் கோர்ட்டில் இருக்கும்போது, இங்கு விளக்கம் ஒன்றும் சொல்வதற்கில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதன் பிறகும் கனம் அங்கத்தினர் அவர்கள் அதையே திருப்பித் திருப்பி கேட்பதில் என்ன பிரயோஜனம்?

திரு. மு. கருணாநிதி: கனம் தலைவர் அவர்களே, மசோதாவில் உற்சாகத்திற்காக, பொழுது போக்கிற்காக இருக்கின்ற க்ளப்களுக்கு, காண்டீன்களுக்கு எல்லாம் இப்போது விற்பனை வரி புகுத்துவதின் மூலமாக, அங்கு இருக்கின்ற மெம்பர்களுக்கு குறைந்த கட்டணத்தில் பொருட்கள் கிடைப்பதற்கு ஏதுவில்லாமல் ஆகலாம் என்று நினைக்கிறேன். மட்டுமல்ல ஆலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு அங்கே நடத்தப்படக்கூடிய சிற்றுண்டி விடுதிகள் மூலமாக தொழிலாளர்களுக்கு மலிவான விலையில் பொருள்கள் கிடைப்பதற்கு தகுந்த முறையில் பயன்தரத் தக்கதாய் இருக்கின்றன. அவ்விடங்களுக்கெல்லாம் இப்போது விற்பனை வரி புகுத்துவதின் மூலமாக தொழிலாளர்களுக்கு கிடைத்துக்கொண்டிருந்த பண்டங்களின் விலைகள் அதிகமாகின்ற விதிவிலக்குக் கொடுத்திருப்பது போல், ஆலைத் தொழிலாளர்களுக்கு நடத்தப்படும் சிற்றுண்டி விடுதிகளுக்கும் விதிவிலக்கு அளிக்கப்படுமா என்கிற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே இந்தச் சட்டம் நிறைவேறினால்தான் இனிமேல் அதற்கு அளிக்க வேண்டுமா, வேண்டாமா என்று பரிசீலனை செய்ய வேண்டும். அந்த விதமாக நம் ராஜ்யத்தில் இருக்கிற தொழில் ஸ்தாபனங்களிலிருந்து கோரிக்கை வந்தால், சில விஷயங்களை நாம் பரிசீலிக்க வேண்டும். ஒன்று அவர்கள் ஸப்ஸிடைஸ் செய்கிறார்களா? இரண்டு சட்டப்படி அவர்கள் காண்டீன் நடத்த வேண்டுமா என்று இத்தகைய விஷயங்களையெல்லாம் பார்த்து, தகுதியுள்ள கேஸாக இருக்குமானால் அவற்றுக்குத் தக்க நிவாரணம் அளிக்கப்படும். 11-00 a.m.

Mr. SPEAKER: The question is—

"That the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1964 (L.A. Bill No. 29 of 1964), be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 9 were put and carried.

Clause 1 was about to be put to the vote of the House.)

THE HON. SRI R. VENKATARAMAN: I request that the Schedule may please be put.

[27th July 1964

MR. SPEAKER : It is found that in Clause 8, the schedule is embodied.

THE HON. SRI R. VENKATARAMAN : Then all right.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1964 (L.A. Bill No. 29 of 1964) be passed."

The motion was put and carried and the Bill was passed.

11-02 a.m. MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

† 260. *Notification issued with G.O. Ms. No.* 1713, *Home, dated 1st June* 1964 *amending Rule* 2 (*ii*) *of the Madras Spirituous Essences Rules*, 1959. [*Laid on the Table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act*, 1937 (*Madras Act X of* 1937).]

† 261. *Notification issued with G.O. Ms. No.* 1712, *Home, dated 1st June* 1964 *amending Rule* 2 (1) (*b*) *of the Madras Denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules*, 1959. [*Laid on the Table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act*, 1937 (*Madras Act X of* 1937).]

† 262. *Notification issued with G.O. Ms. No.* 658, *Food and Agriculture, dated 2nd March* 1964 *regarding market area and notified market area at Pudur and Tuticorin for the purposes of the Madras Agricultural Produce Markets Act*, 1959 *in respect of Chillies and Cotton.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

263. *Notification issued with G.O. Ms. No.* 1440, *Revenue, dated* 18*th May* 1964 *framing "The Madras Urban Land Tax Rules*, 1963" *under section* 47 *of the Madras Urban Land Tax Act*, 1963. [*Laid on the Table of the House under section* 49 (2) *of the Madras Urban Land Tax Act*, 1963 (*Madras Act* 34 *of* 1963).]

27th July 1964]

B. Reports, Notifications and other papers.

*202. *The Madras General Sales Tax (Second Amendment) Bill*, 1964 (*L.A. Bill No.* 29 *of* 1964) *with Annexure.*

* 203. *Annexure to the Madras City Tenants Protection (Amendment) Bill*, 1964.

† 204. *Report and Proceedings of the Committee of Privileges on "Tamil Seithi" Case.*

† 205. *Notification issued with G.O. Ms. No.* 43, *Health, dated 9th January* 1964 *amending the Public Health Establishment (Local Authorities) Regulations*, 1940 *as subsequently amended, the same having been published under the Madras Public Health Act III of* 1939.

206. *List of Unstarred Questions and Answers from S. Nos.* 238 *to* 253.

* Sent to Members on 24th July 1964.
† Laid on the table of the House on 25th July 1964.

APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 731 on page 339]

Resolutions relating to assignment of lands to Harijans passed in the West Thanjavur District Development Council in 1963–64 and action taken thereon :—

	Item number and subject number.	*Extract of Resolution.*	*Nature of action taken.*
	(1)	(2)	(3)
1	12	To assign the Government dry lands nearly 36 acres to the Harijans who are cultivating these lands who are residing in Tirupunavasal colony in Arantangi taluk.	No applications for assignment of Government dry lands for Harijans were pending with Revenue Divisional Officer, Pattukkottai, on the subject. Immediate steps will no doubt be taken if applications are received for assignment in the village.
2	121	To expedite disposal of applications for assignment of lands in R. S. No. 113 to the 23 families of Harijans in Padirakkudi village.	R. S. No. 133 of Padarakudi village measuring 20·08 acres is classified as "grazing ground poramboke". The Tahsildar, Arantangi has not recommended the request for the following reasons :— (i) It is vested in the Local Panchayat which is objecting to its assignment ; (ii) Villagers insist on its continuance for use as grazing ground for which it is at present used ; and (iii) This available grazing ground is still found not adequate for the 700 and odd cattle in the village.
3	122	To expedite assignment of lands and house-sites to the 75 Scheduled Castes families in Vadakku Manamelkudi village and to the landless poor in R. S. No. 152-2 of North Manamelkudi village.	There are no assignment applications pending with Revenue Divisional Office, Pattukkottai, relating to Vadakkumanamelkudi village. The Divisional Welfare Officer has taken steps for the allotment of house-sites to the Harijans.
	126	To expedite the desposal of applications for assignment of poramboke lands in Rethinakottai village by the Harijans.	Six Harijans of Rethinakottai village applied to Revenue Divisional Officer, Pattukottai, for assignment of lands in R.S. No. 185 of the village on behalf of 26 persons. As these were no individual applications assignment was not possible. Action has since been taken to obtain separate applications specifying the extents required by each and to assign the lands.

Item number and subject number.	*Extract of Resolution.*	*Nature of action taken.*
(1)	(2)	(3)
127	Assignment of 17 acres in S. No. 1 of Velivayal village to Cheena Thomas and assignment of house-sites to 17 Nadar families in R.S. No. 5-2 of Velivayal village.	A petition was received by the Revenue Divisional Officer, Pattukottai, from the Nadar Mahajana Sangam for assignment of lands to the Nadars of Velivayal village and the Sangam was duly instructed to put in individual applications for taking further action thereon.
28	Assignment of lands to 17 Harijan families of Velvarai village and Harijans of Thalanur.	There are no assignment petitions pending with the Revenue Divisional Officer, Pattukottai, in respect of Thalanur village.

APPENDIX II.

[*Vide* Answer to Unstarred Question No. 243 on page 357]

Statement showing the monthwise expenditure incurred during 1963.

Month and year.	*Trunk Call.*	*Rental for the main telephones.*	*Rental for the accessories.*	*Local Call charges.*	*Miscellaneous expenditure (i.e. Installation, shifting and other charges).*
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	RS. P.	RS. P.	RS. P.	RS. P.	RS. P.
January 1963 ..	352 43	1,704 00	1,229 80 (*Vide* note below).	6,272 37	138 89
February 1963 ..	312 73				
March 1963 ..	156 24				
April 1963	443 60				
May 1963	706 00				
June 1963	510 95				
July 1966	542 95				
August 1963 ..	547 45				
September 1963 ..	644 95				
October 1963 ..	329 25				
November 1963 ..	204 60				
December 1962 ..	352 25				
Total expenditure	5,103 40	1,704 00	1,229 80	6,272 37	138 89

NOTE.—The rental for the accessories is charged annually and the rental for the main telephones and the local call charges are collected for the quarter ending on different dates. Hence, it is not possible to furnish monthwise figures in respect of these items. The figures furnished in columns (3)-(6) of the above statement represent the total expenditure incurred during 1963.

APPENDIX III.

[*Vide* Answer to Unstarred Question No. 253 on page 361]

(*a*) Statement showing district-wise figures of branch Libraries opened by the Local Library Authorities in the Madras State as on 31st March 1964 :—

Name of the Local Library Authority.	Total number of Libraries as on 31st March 1964.
(1)	(2)
1 Madras	83
2 Chingleput	57
3 North Arcot	41
4 South Arcot	48
5 Thanjavur	43
6 Tiruchirappalli	61
7 Ramanathapuram	45
8 Madurai	94
9 Tirunelveli	65
10 Coimbatore	113
11 Salem	74
12 The Nilgiris	23
Total	747

(*b*) A total amount of Rs. 28,45,364 was spent on the purchase of books for the Branch Libraries during the past five years. The details for each of the five years are as follows :—

	Rs.
1959–60 ..	5,19,753
1960–61 ..	5,50,115
1961–62 ..	5,03,898
1962–63 ..	5,21,532
1963–64 ..	7,50,066
	28,45,364

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Tuesday, 28th July 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, MR. SPEAKER (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

தலைமை மருத்துவ மனை (தென்னாற்காடு)

**10 குறுகியகால கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :* கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு தலைமை மருத்துவ மனை ஒப்பந்தக்காரரால் ஏற்பட்ட நஷ்டமான ஒரு லட்சத்து ஒன்பதாயிரத்தினை வசூல் செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

(இ) அவருடைய ஒப்பந்தத்தினை ரத்து செய்தது எப்போது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The contract was terminated on 30th September 1960 due to the delay on the part of the contractor in the execution of the work. There is no provision in the rules for directly recovering any loss incurred by the Government from the contractor. A sum of Rs. 84,793 due to the contractor is liable to be forfeited as penalty. Besides, an amount of Rs. 23,243 is also due to Government by way of recovery from the contractor. Certain claims made by the contractor have been referred to arbitration. A decision on the question of forfeiture of the amount due can be taken up only after the Arbitrator passes his award.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : 1960-ம் ஆண்டிலிருந்து நான்கு ஆண்டுகள் காலமாக அந்தப் பணத்தை வசூல் செய்யாமல், இந்த விஷயம் ஆர்பிட்ரேஷனில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இதனை எவ்வளவு சீக்கிரம் முடிப்பார்கள், எப்படி அதனை வசூல் செய்வார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : 1960-ம் ஆண்டில் இந்தக் காண்டிராக்டை ரத்து செய்தோம். அதற்குப் பிறகு டிபார்ட்மெண்டிலே பீஸ் வோர்க்கர்சை வைத்து இந்த வேலை முடிக்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் அவர் அரசாங்கத்திற்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை நிர்ணயம் செய்ய முடிந்தது. எந்தவிதமான

[28th July 1964

காலம். கடத்தாமல், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த நேரத்தில் இருக்கக்கூடிய விதிமுறைகளின்படி அவர்கள் ஆர்பிட்ரேஷனுக்குக் கேட்டு ஆர்பிட்ரேட்டர் முன்னால் இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த வேலை எப்பொழுது முடிந்தது? ஆர்பிட்ரேஷனுக்கு இந்த விவகாரம் எப்பொழுது அனுப்பப் பட்டது?

கனம் திரு. வெ. ராமைய்யா: ஆர்பிட்ரேஷனுக்கு அனுப்பப் பட்டது 10—10—1963-ல். காண்டிராக்ட் ரத்து செய்தது 1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில். அதற்குப் பிறகு 'ஜாப் வொர்க்கர்சை' வைத்து இந்த வேலை முடிக்கப்பட்டது. இந்த வேலை எப்பொழுது முடிந்தது என்று நிச்சயமான தேதி பற்றிய 'புல் ரிபோர்டு' இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. ப. உ. சண்முகம்: அமைச்சர் அவர்கள் பதில் படிக்கும் பொழுது காண்டிராக்டர் பாதியிலே வேலையை விட்டுவிட்டால், அதனால் சர்க்காருக்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் காண்டிராக்டரிட மிருந்து நேரடியாக வசூலிக்க ரூல்ஸ் இல்லை என்று சொன்னார். இந்த வேலைக்காக வகுக்கப்பட்ட தனி ரூலா, இது? அல்லது சர்க்காருடைய கட்டிடங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பொதுவான விதிமுறைதானா இது? அப்படியிருந்தால் இது ஆபத்தா யிற்றே? நகராட்சியில் கூட அப்படியில்லையே? சர்க்காருடைய விதிகள் மட்டும் அப்படி இருப்பானேன்?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்த விதி இந்தக் கட்டடத்திற்கு மட்டும் இல்லை. அரசாங்கம் காண்டிராக்டர்களுக்குக் கொடுக்கக் கூடிய ஒப்பந்தங்களுக்கு ஏற்பட்டுள்ள பொதுவான விதிமுறை யாகத்தான் இருக்கிறது. காண்டிராக்டர் தவறு செய்தாலும் அல்லது அரசாங்கம் தான் செய்ய வேண்டிய காரியங்களை நிபந்தனைப்படி செய்யாவிட்டாலும், ஆர்பிட்ரேட்டருக்கு முன் போக முடியும். நாம் இந்தக் காண்டிராக்டை ரத்து செய்தவுட னேயே அவரிடமிருந்து ஆர்பிட்ரேஷனுக்குப் போக வேண்டும் என்ற கோரிக்கை வந்தது. ஏனென்றால், அவருடைய கிளைம்ஸ் படி, அவருடைய கணக்குப்படி அவருக்கு அதிகமாக தொகை வரவேண்டும் என்று சொல்லுகிறார். ஆகவே, இதற்கெல்லாம் நேரடியாக நடவடிக்கை எடுக்காமல், ஆர்பிட்ரேட்டர் என்ன முடிவு செய்கிறார்களோ அதற்குத் தகுந்த முறையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. ப. உ. சண்முகம்: ஆர்பிட்ரேஷனுக்குப் போகவேண்டும் என்று இதற்காக விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார். நகராட்சியில் ஒரு கட்டடம் கட்டுவது காண்டிராக்டருக்கு விடப்பட்டால், அந்தக் கட்டடத்தை சரிவர முடிக்காவிட்டால், நேரடியாக அந்த காண்டிராக்டர்தான் ஜவாப்தாரி என்று டெண்டரில் கண்டிஷன் விதிக்கிறோம்.

28th July 1964]

கனம் திரு. வெ. ராமைய்யா: நகராட்சியில் இருக்கக்கூடிய விதி முறைகளைப் பற்றி எனக்குச் சரியாகத் தெரியாது. இப்பொழுது இருக்கக்கூடிய 'பி.டபிள்யூ.டி. கோடின்'-படி, விதி முறைகளின்படி, தகுந்த முறையில் இது நடக்கிறது.

திரு. ம. கமலநாதன்: இந்தக் காண்டிராக்டை ரத்து செய்த பிறகு, அரசாங்கம் மேற்கொண்டு அந்த வேலையைச் செய்து முடித்த பிறகுதான் காண்டிராக்டர் இவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்ற அளவுக்குக் கணக்கு தெரிந்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தக் காண்டிராக்டர் எந்த அளவுக்கு வேலை செய்திருக்கிறார் என்று அளவு எடுத்து, அதற்குப் பணம் போக மீதித் தொகையை அவரிடமிருந்து வசூலிக்கலாம் என்ற அளவுக்கு அப்பொழுதே கணக்குப் போட்டிருக்கலாமே?

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் அங்கத்தினர் ஆலோசனையை ஏற்றுக்கொண்டால் அரசாங்கத்திற்கு பெருத்த நஷ்டம் வரும். ஒரு கட்டடம் கட்டி முடிப்பதற்கான ஒப்பந்தத் திற்கு இடையே, கண்டிராக்டர் வேலையை முடிக்க தவறிவிடுகிறார் என்றால், மீதம் வேலையைப் பூர்த்தி செய்யக்கூடிய பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, வேலையை முடித்த பிறகு அதிகத் தொகைக்குக் கண்டிராக்டர் பொறுப்பாளியாகிறார். இப்பொழுது இருக்கக்கூடிய அந்த முறைதான் சிறந்தது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: சம்பந்தப்பட்ட கண்டிராக்ட் ருக்கு எக்ரிமெண்டில் இருக்கிற 6-வது ஷரத்துப்படி 'ரெகவரி ஆர்டர்' என்ஜினியர் கொடுத்தார்களா? அப்படி கொடுக்கப் பட்டால் எப்பொழுது கொடுக்கப்பட்டது? அப்படிக் கொடுக்கப் பட்ட தேதியிலிருந்து வசூல் செய்யாததற்குக் காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில் நான் பூர்வாங்கமாகப் பரிசீலித்ததிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வேண்டிய நடவடிக்கைகளை அவ்வப்பொழுது இருக்கக்கூடிய விதிமுறைகளுக்குத் தகுந்தபடி எடுத்திருக் கிறார்கள். இருந்தாலும், ஒப்பந்தத்தில் இருக்கக்கூடிய அடிப் படையிலே அவர்களுக்கு ஆர்பிட்ரேஷன் கேட்க உரிமை இருக் கிறது. ஆகையால் அதை யெல்லாம் அனுசரித்துத்தான், இப்பொழுது இருக்கும் முறையில் பார்த்தோமானால், கண்டிராக் டருக்குச் சேரவேண்டிய பணம், ரூ. 84,000 சொச்சம் அரசாங்கத் தின் கையில் இருக்கிறது, பிறகு ஆர்பிட்ரேட்டர் எப்படி சொல்லுகிறார்களோ, அதற்குத் தகுந்த முறையில் நாம் முடிவு எடுக்க வேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: பொதுவாகக் கண்டிராக்டர்கள் வேலை செய்த பிறகு கூட, வருஷக் கணக்கில் இழுக்கிறார்களே அவர்களுக்குப் பணம் கொடுப்பதற்கு. அப்படியிருக்கும்பொழுது, இந்தக் காண்ராக்டருக்கு சர்க்கார் எப்படி முன் பணம் கொடுத்தது? வேலை செய்த பிற்பாடுதானே கொடுக்கவேண்டும், எப்படி முன்பணம் கொடுத்தார்கள்?

கனம் சபாநாயகர்: அப்படி முன்பணம் கொடுத்ததாக ஒன்று மில்லை. முன்பணம் கொடுத்ததாகச் சொன்னதாக இதுவரையில் எனக்குக் காதில் ஒன்றும் கேட்கவில்லை.

[28th July 1964

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இந்தக் கடலூர் ஆஸ்பத்திரி காண்டிராக்ட் சம்பந்தமாக ரூபாய் ஒரு லட்சத்து ஒன்பதனாயிரம் வசூல் செய்த விஷயத்தைப் பற்றி அரசாங்கம் முடிவு செய்த பிறகு இந்தச் சபையில் அது பற்றி ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினர் பிறகு அது பற்றி ஒரு கேள்வி போட்டால், அப்பொழுது இருக்கக்கூடிய விவரத்தைச் சொல்ல முடியும்.

Nehru's ashes

* 11 *S.N. Q.*—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of the immersion of fake ashes of Pandit Jawaharlal Nehru, former Prime Minister of India at Coimbatore and Ootacamund; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) No immersion took place at Ootacamund. In Coimbatore, the local people collected a few flowers which adorned the Urn containing the ashes of the late Prime Minister which was in transit to Laccadives, and immersed them in the river Noyyal at Perur, in the belief that the flowers acquired sanctity by their proximity to the Urn.

(*b*) No cognizable offence had been committed to warrant action by the Government.

* 761. கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி
திரு. மு. கருணாநிதி
திரு. க. ர. நல்லசிவம்
} கனம் முதல் அமைச்சர்

தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் நேருவின் அஸ்தி என்று சொல்லி பொது மக்களை ஏமாற்றியது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா?

(இ) ஆம் என்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, Sir.

(*b*) No cognizable offence had been committed to warrant action by the Government.

* 762 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether immersion of late Prime Minister Nehru's ashes was authorised in any place other than Kanyakumari in the State;

(*b*) whether the Government have information about unauthorized 'immersion ceremonies' organised or attempted to be organised in some districts with fake ashes;

(*c*) the details of such fake ceremonies; and

28th July 1964]

(*d*) the legal action taken on persons responsible for such hoax on the people on such a solemn occasion?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) No, Sir.

(*b*) Yes, Sir.

(*c*) No immersion took place in the Nilgiris district. In Coimbatore, the local people collected a few flowers which adorned the Urn containing the ashes of the late Prime Minister, which was in transit to Laccadives, and immersed them in the river Noyyal at Perur, in the belief that the flowers acquired sanctity by their proximity to the Urn.

(*d*) No cognizable offence had been committed to warrant action by the Government.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் சபாநாயகர் அவர்களே, லட்சத் தீவுக்கு அனுப்பப்பட்ட அஸ்தியிலே சில மலர்களை எடுத்து அதை அஸ்தி என்று தான் கரைத்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், நேரு அவர்களின் அஸ்தி என்று கோயம்புத்தூரில் விளம்பரப்படுத்தப்பட்டு, ஒரு லட்சம் மக்களுக்கு மேல் திரட்டி, இது நேருவினுடைய அஸ்தியினுடைய அம்சம்தான் என்று மக்களை ஏமாற்றினார்கள் என்று அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா? இது உண்மையான அஸ்திதானா என்பதைப் பார்ப்பதற்கு அங்கு இருக்கிற கலெக்டரும் மற்ற போலீஸ் அதிகாரிகளும் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN: I answered that no cognizable offence has been committed. Therefore, it is not necessary to do anything in the matter.

திரு. ம. கமலநாதன்: நேருவின் அஸ்தி என்று எடுத்துச் சென்றதும், கலெக்டர் அவர்கள் 'சீப் செகரடரிக்கு' போன் செய்து நேருவின் அஸ்தியைக் கரைப்பதற்குத் திட்டம் ஏதாவது உண்டா என்று கேட்டதற்கு, அப்படி ஒன்றுமில்லை என்று சொன்ன பிறகு, கலெக்டர் அவர்கள் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து அந்த அஸ்தியை 'சீஸ்' செய்வதற்குப் போனதாகவும், அதற்கு முன்னாலேயே அவர்கள் 'சரண்டர்' ஆகி, அந்த அஸ்தியைக் கலெக்டரிடம் ஒப்படைத்து விட்டு, ஒரு ஸ்டேட்மெண்டும், கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறதே? அது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் சொல்லியதில் ஒவ்வொரு 'டீடைலும்' சரி என்று சொல்ல முடியாவிட்டாலும், ஜெனரலாக, பொதுவாக அவர் சொன்னது உண்மை.

திரு. கே. ஏ. மதியழகன்: இம்மாதிரி தவறு செய்துவிட்டோம், இம்மாதிரி போலி அஸ்தியைக் கரைத்து விட்டோம் என்பதற்காக கோயம்புத்தூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ராஜிநாமா செய்ததும், அதை விசாரிக்க வேண்டும் என்று கட்சியிலே ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதும் உண்மைதானா?

[28th July 1964

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member must familiarise himself with the rules. He can put only questions relating to administrative responsibility of the Minister. The Government has nothing to do with what all the party does.

புலவர் கா. கோவிந்தன் : உதகையில் நடந்த நிகழ்ச்சி ஒரு தனிக் கட்சிக்கு சட்பந்தப்பட்ட நிகழ்ச்சியாக இருந்தாலும், ஏமாற்றப்பட்டது பொது மக்கள். பொது மக்களை ஏமாற்றிய ஒரு நிகழ்ச்சி குறித்து, போலீஸ் நடவடிக்கை எடுக்க வேண்டியது நியாயமில்லையா ? அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சட்டப்படிக் குற்றமில்லை. ஏமாற்றுவதெல்லாம் குற்றம் ஆகாது. இந்தியன் பீனல் கோடுபடி எது குற்றம் என்று இருக்கிறதோ, அதைத்தான் குற்றம் என்று எடுத்துக் கொள்ள முடியும்.

திரு. ம. கமலநாதன் : அப்படிச் செய்தது குற்றமில்லை என்றால், கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமென்ன ? அமைச்சர் அவர்கள் சொன்னபொழுது, பூவைத்தான் சாம்பலாகக் கொண்டு போனார்கள் என்று தெரிவித்தார்கள். தர்ப்பப் பில்லை சாம்பலாக்கிக் கரைக்க போவதாக . . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்த நடவடிக்கை என்று நான் கேட்கிறேன். கலெக்டர் அவர்கள் இது உண்மையா என்று விவரம் கேட்டு அதைப் பற்றி விசாரித்திருக்கலாம். அது சாதாரணமாக செய்யக் கூடிய விஷயம். சட்டப்படி குற்றம் என்று எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

MR. SPEAKER : It is not a criminal investigation.

திரு. கே. ஏ. மதியழகன் : காலம் சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் மறைவு குறித்து துக்கத்தைச் சர்க்காரே பல நாட்கள் கொண்டாடியது. அப்படிக் கொண்டாடுகிற நேரத்தில் அதற்கு அவமதிப்பு நேருகிற வகையிலும், ஒரு பெரும் தலைவருக்கு அபகீர்த்தி ஏற்படுகிற வகையிலும், இப்படி மக்களை மௌடீகமாக அழைத்துச் செல்வது குற்றமில்லை என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சட்டப்படி அது குற்றமில்லை. அந்த மாதிரி எந்தக் காரியம் நடந்தாலும், அது இந்தியன் பீனல் கோடின் கீழ் வந்தால்தான் சர்க்கார் நடவடிக்கை எடுக்க முடியும். மற்றபடி கட்சியிலே என்ன விதிகள் இருக்கின்றனவோ, அதன்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள். அதற்கும் சட்டசபைக்கும் சம்பந்தமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்க மருத்துவ மனைகள்

***677 கேள்வி.—திரு. கு. கோபால் கவுண்டர் :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

செஞ்சி தாலூகா தலைநகரான செஞ்சியிலிருக்கும் சர்க்கார் ஆஸ்பத்திரியில் முப்பத்திரண்டு படுக்கைகள் கொண்ட வார்டு,

28rh July 1964]

ஆபரேஷன் தியேட்டர், எக்ஸ்ரே வார்டு முதலியன கட்டுவதற்கு 1964-65 நிதி ஆண்டில் வேலை துவக்கப்படுமா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : No.

திரு. கு. கோபால கவுண்டர்: செஞ்சித் தலைநகர் ஆஸ்பத்திரியில் இடமில்லாமல், திண்டிவனம், விழுப்புரம் போக வேண்டியதாக இருப்பதால், எப்பொழுது அந்தக் கட்டிடத்தைக் கட்ட ஏற்பாடு செய்யப்படும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்பொழுது இந்தச் செஞ்சி ஆஸ்பத்திரியை எக்ஸ்பாண்டு பண்ணுவதற்கு இடமில்லை. சில இம்ப்ரூவ்மெண்ட்ஸ் மட்டும் செய்யலாம் என்ற அடிப்படையில் இப்பொழுதிருக்கிறது. 24 பெட்கள் கொண்ட ஒரு அடிஷனல் வார்டு கட்ட வேண்டுமென்று ஆரம்பத்தில் உச்தேசம் செய்தார்கள். இடமில்லாத காரணத்தால் அது ஒத்திப் போடப் பட்டிருக்கிறது. இப்பொழுது முக்கியமாக ஒரு சமையல் அறை, ஒரு ஆப்பரேஷன் தியேட்டர், ஒரு லம்பர் ரூம் இவைகள் மூன்றும் கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

*** 678 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலூகா, வல்லம்படுகையில் ஒரு மருத்துவ மனை திறக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : No.

திரு. சீ. சிவசுப்பிரமணியன் : அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இதை எடுத்து நடத்த உச்தேசம் உண்டா ?

MR. SPEAKER : It is only a suggestion.

***679 கேள்வி.—திரு. பி. ஜெயராஜ் :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பேரளம் மருத்துவ மனையைச் சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலிலிருந்து வந்ததா?

(இ) அப்படியானால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) No.

(b) Does not arise.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : லோகல் போர்டு ஆஸ்பத்திரிகளை அரசாங்க ஆஸ்பத்திரிகளாக எடுத்துக் கொள்வதில் அரசாங்கத்தின் திட்டம் என்ன ? எப்படி எடுக்கப்பட்டு வருகிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த டிஸ்பென்சரிகளை எல்லாம் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் நடத்த வேண்டியது.

[28th July 1964

அவர்களிடம் பணம் பற்றுக்குறையாக இருக்கிற காரணத்தினால், அவற்றை நடத்துவதற்கு இயலாது என்று தெரியப்படுத்தி இருக்கிறார்கள். அதை உத்தேசித்து அரசாங்கம் கிராண்டு-இன்-எயிடாக, அவற்றின் பராமரிப்புச் செலவுக்காக 50 சதவிகிதம் கொடுப்பதற்கு யோசித்தார்கள். அந்த 50 சதவிகிதமும் ரூ. 5,000-க்கு உள்பட்டு இருக்க வேண்டுமென்று அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

Water-supply to Madras City

* 699 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to bring to Madras City water pumped out from lignite mines at Neyveli; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. கே. ஏ. மதியழகன் : சென்னை நகர் குடிதண்ணீர்த் திட்டம் சம்பந்தமாக, வேறு மாற்றுத் திட்டமாக கிருஷ்ணா-பெண்ணாறு தண்ணீரையோ அல்லது காவிரித் தண்ணீரையோ கொண்டு வர வேண்டும் என்பதைக் குறித்து, திட்டக் கமிஷனின் துணைத் தலைவர் திரு. அசோக் மேதா இங்கு வந்திருந்தபொழுது, நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சென்னைக்குக் குடிதண்ணீர் கொண்டு வருவது பற்றிப் பல திட்டங்கள் இருக்கின்றன. அவைகளைப்பற்றி நான் சொல்லுவதற்குத் தயாராக இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்னை நகருக்குக் காவிரியிலிருந்து குடி தண்ணீர் கொண்டு வருவது சம்பந்தமாக, சர்க்கார் ஒரு விசேஷ அதிகாரியை நியமித்து ஆலோசனை பெற்றார்களா? அப்படியானால் அந்த ஆலோசனை என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸிடி வாட்டர் சப்ளைக்காக ஒரு டிவிஷனைப் போட்டு; இன்வெஸ்டிகேஷன் செய்து கொண்டிருக்கிறார்கள். ரிப்போர்ட் வந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : சென்னை நகருக்கு கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கான ஒரு ஆலோசனை இருந்ததே, அது எந்த அளவில் இருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதுவும் ஆலோசனையில் இருக்கிறது. மேற்கொண்டு விவரம் கூறுவதற்கில்லை.

MR. SPEAKER : Next question.

28th July 1964]

திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் கேள்விகள் அதிகமாக இருப்பதனாலும், வேறு மசோதாக்கள் இல்லாததினாலும், கேள்வி நேரத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிகமான உப கேள்விகளை அனுமதிக்க வேண்டுமென்று . . .

கனம் சபாநாயகர் : எப்படி இருந்தாலும் 1-1/2 மணி நேரத்திற்கு மேல் போக முடியாது. ஒரே கேள்வி மயமாக இருந்தாலும் நாம் இங்கே இருக்க முடியாது.

திரு. கே. ஏ. மதியழகன் : 60, 70 கேள்விகள் இருப்பதால், இரண்டு மணி நேரமாவது ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் வேறு மசோதாக்கள் இல்லை.

கனம் சபாநாயகர்: சும்மா கேள்விகளைப் போட்டுக்கொண்டே இருக்க முடியாது. வேறு மசோதாக்கள் இல்லாவிட்டாலும்கூட, ஒரு கேள்விக்கு எவ்வளவு நேரம் கொடுக்கலாமோ, அவ்வளவு நேரம்தான் கொடுக்கலாம். இல்லாவிட்டால் எந்தக் கேள்வி வேண்டுமானாலும் போடலாம் என்ற நிலைமை ஏற்படும்.

திரு. கே. ஏ. மதியழகன்: முக்கியமான கேள்விகளுக்காவது . . . .

கனம் சபாநாயகர் : முக்கியமான கேள்விகளுக்கு அவகாசம் கொடுக்கிறேன். Regarding water-supply, a large number of questions have been put and answered in this House.

Water-supply (Dharmapuri)

* 700 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state the Plan in which the Dharmapuri Water-supply Scheme will be included for execution?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : The Dharmapuri Water-supply Scheme is likely to be included in the Fourth Five-Year Plan.

பஸ் பெர்மிட்டுகள்

*741 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கட்டண விகிதம் கட்டுப்படியாகாது என்ற காரணம் காட்டி முதலாளிகள் Surrender செய்த பஸ் ரூட்டுக்கள் எத்தனை?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பஸ் சர்வீஸ் நஷ்டத்தில் நடக்கிறதென்கிற காரணத்தால் பஸ் முதலாளிகள் 27 பஸ் பெர்மிட்டுகளைத் திரும்ப ஒப்படைத்துவிட்டனர்.

[28th July 1964

புலவர் கா. கோவிந்தன் : நம்முடைய மாநிலத்திலுள்ள மொத்த பஸ் ரூட்கள் எத்தனை ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்கு என்னிடத்தில் விவரம் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : பஸ் ரூட்டுகளை சரண்டர் செய்தவர்களில் பெரிய பஸ் முதலாளிகள் இருக்கிறார்களா, அல்லது ஓரிரண்டு பஸ்கள் வைத்திருக்கிற சாதாரண முதலாளிகள் இருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எல்லோரும் இருக்கிறார்கள். பெரிய முதலாளிகளும் இருக்கிறார்கள். சிறிய முதலாளிகளும் இருக்கிறார்கள்.

புலவர் கா. கோவிந்தன் : கட்டுப்படி ஆகாது என்ற காரணத்திற்காக இந்த பஸ் ரூட்டுகள் சரண்டர் செய்யப்பட்டன என்று கூறப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் இருக்கிற மொத்த பஸ் ரூட்டுகளைப் பார்த்தால், இது ஒரு பெரிய கணக்காக இல்லை. ஆகவே ஒரு சில ரூட்டுகள் கட்டுப்படியாகாமல் இருந்து, சரண்டர் செய்யப்பட்டிருக்கலாம். அதற்காக, பொதுவாகக் கட்டுபடி ஆகாமல் இருக்கிறது என்று சொல்லுவது . . . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் தமது அபிப்பிராயத்தைச் சொல்லுகிறார். இது கேள்வி இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : தயவு செய்து கனம் அமைச்சர் அவர்கள் அந்த முதலாளிகளின் பட்டியலை இங்கே சொல்லுவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவசியமில்லை என்று நான் நினைக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : லாபகரமாக நடைபெறவில்லை என்பதற்காக சர்க்காரிடம் கொடுத்துவிட்ட விவரங்களை மட்டும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதே சமயத்தில் ரூட் ஒன்றுக்கு 1½ லட்சம் ரூபாய்க்கு ரகசியமாக விற்பனை செய்வது அமைச்சரின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

MR. SPEAKER : The next question deals with it.

திரு. மீ. கலியாணசுந்தரம் : பஸ் வசதி இழந்த பகுதிகளுக்கு பஸ் வசதி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பஸ்கள் ஓடவில்லை என்று நிறுத்திய இடங்களில் மற்றவர்கள் அப்ளிகேஷன் போட்டால், பரிசீலனை செய்து கொடுக்கப்படும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : What are the reasons for surrendering these bus routes? Is it due to the fact that it is uneconomic or is it due to keen competition between bus-owners operating a large number of buses in the same route which has resulted in these routes becoming uneconomical?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government do not know what the reasons are. They only know what those persons have stated to be the reasons. They state that it is

28th July 1964]

uneconomical and have surrendered the routes. Therefore we are offering to others who think that it is economical to run those routes.

திரு. மு. கருணாநிதி : சரண்டர் செய்யப்பட்ட 27 பஸ் ரூட்டுகளும் மறுபடியும் கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டு விண்ணப்பங்கள் வந்துள்ளனவா ? வந்திருந்தால் எவ்வளவு விண்ணப்பங்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கொள்கையை விளக்கினேன். எந்த பஸ்ரூட்டுகள் சரண்டர் செய்யப்பட்டிருக்கின்றனவோ, அங்கு அப்ளை செய்தால் கொடுக்கப்படும். அப்ளிகேஷன் வந்ததற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. ப. உ. சண்முகம் : இப்படி வேண்டாம் என்று சரண்டர் செய்துவிட்டது குறுகிய தூர பஸ் ரூட்டுக்கள்தான். அவற்றை நெடுந்தூரம் போகும் ரூட்டுகளோடு இணைக்க ஏதாவது யோசனை உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படி இணைக்காமலேயே மற்றவர்கள் விடுகிறோம் என்று வந்தால் அவர்களுக்குக் கொடுக்கலாம் என்பது யோசனை.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், இனைக் கூட்டுறவு முறையில் விட, பஸ் பர்மிட் கேட்டால், அப்படிக் கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனியாகச் சலுகை கொடுக்க இயலாத நிலைமை சட்டத்தில் இருக்கிறது.

திரு. பி. முருகையன் : வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை ரூட்டுகள் சரண்டர் செய்யப் பட்டன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனிக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்ல முடியும்.

திரு. ஜே. மாதா கவுடர் : சாதாரணமாகச் சிறிய ரூட்டுகள்தான் கட்டுப்படியாகவில்லை, நஷ்டம் ஏற்படுகிறது என்று சரண்டர் செய்யப் படுகின்றன என்று கேள்விப் படுகிறேன். சிறிய ரூட்டை அதிகமாக வேரியேஷன் கொடுக்க சர்க்காரிலே இயலவில்லை என்றும் தெரிகிறது. கொள்கை அளவிலே அப்படிச் செய்யப்பட்டிருக்கிறதா ?

(பதில் இல்லை.)

திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் : சேலம் ஜில்லாவில் பஸ் போகிற ரூட்டுகளிலே பெரிய முதலாளிகள் 4, 5 பஸ்ஸுகளை ஓட்டுகிறார்கள். புதிதாக ஒருவர் பஸ் ரூட்டு வேண்டும் என்று கேட்டால் முதலில் இருப்பவருக்கே கிடைக்கிறதே அல்லாமல் புதிதாகக் கேட்பவருக்கு ஒரு ரூட்டு என்றால் கூட கிடைப்பதில்லை 4, 5 பஸ் வைத்திருப்பவர்கள் பின்னால் கேட்டால்கூட அவர்களுக்குக் கிடைக்கிறது. பின்னால் கேட்டாலும் புதிதாகக் கேட்கிறவர்களுக்கு முதலில் கொடுக்க வேண்டும் என்று சர்க்கார் உத்தரவு போடுவார்களா ?

[28th July 1964

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இதற்கெல்லாம் விதிகள் இருக்கின்றன. ஆர்.டி.ஏ. அவர்கள் யாருக்கு கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்வார்கள். யாருக்காவது மனக்குறை இருந்தால், எஸ்.டி.ஏ.டி-க்கு அப்பீல் செய்யலாம்; அதற்கு மேல் ஹைகோர்ட்டு, அதற்கும் அப்பால் சுப்ரீம் கோர்ட்டு இருக்கிறது.

* 742 **கேள்வி.—திரு. ப. உ. சண்முகம்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஸ் பெர்மிட்டுகளை விற்பதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN : The matter is under consideration.

திரு. ப. உ. சண்முகம்: ஆலோசனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆலோசனை எப்பொழுது முடியும்? இப்பொழுது பஸ் முதலாளிகள் ரூட்டுகளை விற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அதைத் தடுக்க தாற்காலிகமாகச் சட்டம் பிறப்பிக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: யார் யாரிடத்தில் விற்றாலும் ட்ரான்ஸ்போர்ட் கமிஷனர் உத்தரவு பெறாவிட்டால் ட்ரான்ஸ்பர் செல்லாது. உடனடியாக இப்பொழுது செய்யப்படுவது, ஒரு குடும்பத்தில் தந்தை இறந்து பிரிவினை ஏற்பட்டால், அப்பொழுது மாறுதல்கள் அனுமதிக்கப்படும். மற்றவைகளெல்லாம் பற்றி ஆலோசித்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அதுவரையில், அரசாங்கம் இறுதி முடிவு எடுக்கும்வரை எந்த ட்ரான்ஸ்பரும் செய்யக் கூடாது என்று உத்தரவிட உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ட்ரான்ஸ்போர்ட்டு கமிஷனர் இந்த மாதிரி பார்டிஷன் செய்து கொண்டவர்கள், ஃபாமிலியில் இறந்துவிட்டால், அதுபோன்ற காரியங்களில்தான் அனுமதிக்கிறார்கள். மற்றபடி சர்க்கார் முடிவு எடுக்கும் வரை எதையும் அங்கீகாரம் செய்யமாட்டார்கள்.

Plan Outlay for 1964-65.

* 743 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the details of tentative proposals made by the State Government to the Planning Commission; and

(*b*) the details of Plan Outlay as approved by the Planning Commission for Madras State for the year 1964-65?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement [a] giving the relevant details is placed on the table of the House.

[a] Printed as Appendix I on page 479.

28th July 1964]

வெளிநாட்டு கார்கள்

* 744 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:**
திரு. ப. உ. சண்முகம்: } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் புதியதாக அரசாங்கம் எத்தனை வெளிநாட்டு கார்கள் வாங்கியுள்ளது? விவரமென்ன?

(இ) என்ன காரணத்திற்காக வாங்கப்பட்டன?

(உ) இப்போது அந்தக் கார்கள் யார் யார் உபயோகத்தில் உள்ளன?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) to (*c*) A statement [a] is placed on the table of the House

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: நாம் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கிறோம். நம்முடைய பிரதம மந்திரி கூட உள்நாட்டிலே செய்யப்பட்ட காரிலேயே போவதாக அறிகிறேன். நம் மந்திரிகளும் இந்தியாவிலேயே செய்யப்படும் கார்களிலேயே இனிமேல் பிரயாணம் செய்வார்களா? அந்நியக் கார்கள் வாங்குவதால் ஏற்படும் லட்சக்கணக்கான அன்னியச் செலாவணியைக் குறைக்க அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்பொழுதும் வெளிநாட்டிலிருந்து கார் வாங்கவில்லை. அந்நிய நாட்டிலிருந்து வருகிறவர்கள் இங்கே கார்களை விற்க வேண்டும் என்று சொன்னால், அதை நம்முடைய ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பொரேஷனுக்கு விற்க வேண்டும். அப்படி விற்ற கார்களை சர்க்கார் உபயோகிப்பதினால் அந்நியச் செலாவணி ஒன்றும் இல்லை. இரண்டாவதாக, சிறிய கார்களை உபயோகிக்க வேண்டும் என்று பிரதம மந்திரி அவர்கள் சொல்லி இருப்பதை இந்திய நாடு பூராவும் வரவேற்கிறது. ஆனால் இப்பொழுது இருக்கும் கார்களை விற்றுவிட்டு சிறிய கார்களை வாங்குவதால் இன்னும் அதிகப் பணச் செலவுதான் ஆகிவிடும்.

திரு. கே. ஏ. மதியழகன்: ரூபாய் 41,000 செலவில் வாங்கிய முதலமைச்சர் கார் இப்பொழுது என்ன நிலையில் இருக்கிறது? உபயோகத்திற்கு உதவுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அது ஆக்ஸிடெண்டில் டாமேஜ் ஆகிவிட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா: சர்க்காருக்குச் சொந்தமான ஓடாத கார்கள் விற்பனை செய்யப் படுகிறதா, ஓர்க்ஷாப்பில் இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஏலம் மூலம் விற்கப்படுகிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: மத்திய சர்க்காரில் அமைச்சர்களுக்கு அரசாங்கம் கார்கள் வழங்குவது கிடையாது; காருக்குள்ள பணத்தை அவர்கள் தங்கள் சம்பளத்திலிருந்து கொடுத்து சொந்தத்தில் கார்கள் வாங்கி இருப்பதாக அறிகிறேன். அதே போல நம்முடைய அமைச்சர்களும் செய்தால் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : It is only a suggestion.

[a] Printed as Appendix II on page 480.

[28th July 1964

திரு. ம. கமலநாதன் : முதல் அமைச்சருடைய கார் ஆக்ஸிடென்டில் டாமேஜ் ஆகிவிட்டதாகச் சொன்னார்கள். முதல் அமைச்சருக்கு வேறு கார் வாங்கும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைப் பற்றி ஒன்றும் முடிவு எடுக்கவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : இனிமேல் கார்கள் சாதாரண விலையில் வாங்க சர்க்கார் முயற்சி எடுக்க உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வாங்கும்போது அது கவனிக்கப்படும்.

MR. SPEAKER : Does the hon. Member Sri Mathialagan want to put any more questions?

SRI K. A. MATHIALAGAN : No, Sir.

வீராணம் ஏரி (தென் ஆற்காடு)

*745 கேள்வி.— திரு. எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி :
திரு. சீ. சிவசுப்பிரமணியன் : } கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு ஜில்லாவில் உள்ள வீராணம் ஏரியின் பரப்பளவு பூராவும் தண்ணீர் தேங்கும் நிலையில் உள்ளதா ?

(இ) இல்லையெனில் காரணமென்ன ?

(உ) வீராணம் ஏரிக் கரைகளை உயர்த்துவதற்கும், பாதுகாப்பிற்கும் நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The original storage capacity of the tank has been reduced slightly due to silting up of the tank.

(*c*) There is no proposal to raise the tank bund. The bund of the Veeranam tank is being maintained to the required standards under maintenance estimates and special repairs estimates. During rainy season, patrolling is also being done to avoid possible breaches in the bund.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : வீராணம் ஏரியில் முன்பெல்லாம் தண்ணீர் பிடிக்கும் நிலையைவிட இப்பொழுது மிகக் குறைந்திருக்கிறது. அதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த ஏரியை ஆழப்படுத்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : முன்பு இருந்த கபாசிடியைவிட இப்பொழுது குறைந்திருக்கிறது என்று நானே சொன்னேன். வீராணம் ஏரிக்கு லோயர் அணைக் கட்டிலிருந்து தொடர்ந்து தண்ணீர் வருகிற காரணத்தினால் விவசாயம் பாதிக்கப்படவில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

Small-scale steel rolling mills

* 746 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that nearly 60 per cent of the small-scale steel re-rolling mills in our State is lying idle owing to inadequate supply of essential raw materials; and

(*b*) if so, the reasons therefor?

28th July 1964]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir. The small-scale steel rolling mills in this State have been idle to the extent referred to in 1963.

(*b*) This is due to the fact that the demand for re-rollable scrap far exceeds the availability and allotment.

Theft in Government Press

* 747 *Q.*—SRI K. A. MATHIALAGAN :
SRI M. MAYANDI NADAR : } Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether it is a fact that many packets of new and unused types (English) worth about thousands of Rupees had been stolen from the Government Press, Mint Street, Madras, during the last week of January 1964; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) 27-1-1964-ல் அரசாங்க அச்சகத்திலிருந்து ரூ. 270 மதிப்புள்ள லேனோ டைப் ஸ்லக்குகள் திருட்டு போய் விட்டன.

(இ) போலீசார் மூன்று பேர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர். மேலும் விசாரணை நடந்து வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : சார், சென்னை நகரத்திலுள்ள சர்க்கார் அச்சகத்தில் இப்படிப் பல்லாயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அச்செழுத்துக்கள் அடிக்கடி காணமல் போய் விடுகிறது என்பது . . .

கனம் சபாநாயகர் : அவர்கள் சொல்லியிருப்பது ரூபாய் 270 தான். அது சரியில்லை என்றால் அங்கத்தினர் வேறு கேள்வி கொடுக்க வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன் : அப்படி அடிக்கடி காணமல் போகிறது என்ற புகார் இருக்கிறது. அமைச்சர் அவர்களிடமும் சொல்லத் தயார். எத்தனை அச்செழுத்துக்கள் என்பதை எல்லாம் இன் வெண்டரி எடுக்க என்ன ஏற்பாடு இருக்கிறது என்று அமைச்சர் சொல்ல முடியுமா? இனியாவது சரியான முறைகளை மேற்கொள்வார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : சர்க்கார் அச்சகத்தில் பல்லாயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அச்செழுத்துக்கள் உள்ளன. அவை எல்லாம் களவு போகவில்லை. களவு போன எழுத்துக்கள், மார்க்கட் ரேட் பிரகாரம் ரூபாய் 270 என்று நான் கூறினேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்தக் கேள்வியில் "அரசாங்க அச்சகத்திலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அச்செழுத்துப் பாக்கெட்டுகள் திருட்டுப் போய்விட்டன என்பது உண்மையா ?" என்று இருக்கிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் "ஆம்" என்று சொன்னார்கள். அதாவது ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ளவை திருட்டுப் போயிருக்கின்றன என்று கொள்ளவேண்டும். ஆனால், ரூ. 270 மதிப்புள்ளவை தான் திருட்டுப் 9-00 a.m.

[28th July 1964

MR. SPEAKER : These facts are before the Court for decision.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அதைப்பற்றிக் கேட்கவில்லை. அச்சகத்தில் இருப்பவர்கள் முன் முயற்சி எடுத்ததைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அவர்களைப் பாராட்டி அவர்களுக்குச் சன்மானமும் வழங்கப்படுமா?

கனம் சபாநாயகர் : கேள்வி எண் 748-ஐ எடுத்துக் கொள்ளலாம்.

பள்ளி நமூனாக்கள் அச்சிடுதல்

* 748 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள எல்லா பள்ளிகளுக்கும் தேவையான பாரங்களை அரசாங்கமே அச்சிட்டு விநியோகிக்கும் உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

Pension

* 749 Q.—DR. B. NATARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of pension cases relating to Government servants retired in the years 1957 to 1961, 1962 and 1963 which are still pending in Kanyakumari district; and

(*b*) if so, the reasons for the delay?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 54.

(*b*) Due to various administrative reasons such as non-availability of service particulars, delay in fixation of pay, confirmation, etc., and also due to correspondence with the Accountant-Generals, Madras and Kerala, in connection with the verification of services up to 31st October 1956.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Regarding integration of services of persons previously serving in Kanyakumari, regarding their pay scales integration, etc., may I know what is the department in the Secretariat which is dealing with it?

THE HON. SRI R. VENKATARAMAN : Public Department.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கேரளா அரசாங்கம் பதில் தெரிவிக்காத காரணத்தால் மட்டும் 'பெண்டிங்' ஆக இருக்கக் கூடியவை எத்தனை என்று கூற முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்கு ப்ரேக்-அப் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அதிகக் காலதாமதம் ஆகக்கூடிய காரணத்தால் விசேஷ அதிகாரியைக் கேரளத்திற்கு அனுப்பியாவது இந்தத் தகவலைப் பெற்று உடனடியாகப் பைசல் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : It is a suggestion and Government will examine that.

28th July 1964]

வேலைக்கமர்த்தப்பட்ட ஓய்வுபெற்ற அதிகாரிகள்

* 750 கேள்வி.—திரு. சா. ராமசாமி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் ஓய்வு பெற்ற அதிகாரிகள் திரும்ப வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனரா?

(இ) அப்படியானால் எந்தெந்த இலாக்காக்களில் எந்தெந்த உத்தியோகத்தில் நியமிக்கப்பட்டு இப்பொழுது வேலையில் இருக்கின்றனர்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) 1963 ஜூலை முதல் தேதியன்றிருந்தபடி விவரங்கள் தரும் ஓர் அறிக்கை * சபையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சா. ராமசாமி : இப்படி ஓய்வு பெற்ற அதிகாரிகளை மீண்டும் நியமிக்கும் நிலைமை எந்த அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப் படுகிறது என்பதை விவரமாகக் கூற முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பொதுவாக, அப்படிப்பட்டவர்களுடைய சேவை இன்னும் ஓராண்டு, இரண்டாண்டுகளுக்கு மிகவும் அத்தியாவசியம் எனச் சர்க்கார் கருதுகிறபோது அவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : நியமிக்கப்பட்டவர்களில் எச்.ஆர்.ஈ. போர்டு சம்பந்தப்பட்ட டெபுடி கமிஷனர் முதல் கிரேடு எக்சிக்யூடிவ் ஆபீசர் ஆகியவர்களுடைய உத்தியோக காலத்தை நீடித்திருக்கிறார்கள். அதற்கான அவசியம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எச்.ஆர்.ஈ. போர்டில் வேலை பார்க்கும்படி டெபுடி கமிஷனரை திரும்ப எடுத்தது, அவருடைய சேவை அந்த இலாக்காவிற்கு இன்னும் ஒரு வருஷம் தேவை என்று இலாக்கா கருதிய காரணத்தால்தான்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : பதவியிலிருந்து விலகியவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்வதில் என்ன கோட்பாடுகள் வகுக்கப்பட்டிருக்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சாதாரணமாக, டெக்னிகல் ஆபீசர்களாயிருந்தால் அவர்கள் ஏதாவது ஸ்கீம், ப்ரொக்ராம், ப்ராஜெக்ட் ஆகியவைகளில் ஈடுபட்டிருந்தால் இடையிலே அவர்களை மாற்றுவது உதிதம் அல்ல என்பது ஒரு கோட்பாடு. இரண்டாவது அட்மினிஸ்ரேடிவ் ஆபீசராக இருந்து, அவருடைய தேவை அரசாங்கத்திற்குத் தொடர்ந்து தேவையாக இருக்கலாம். அவர்கள் ஏதாவது ஒரு துறையிலே ஈடுபட்டிருந்தால், அவர்கள் அதைக் கம்ப்ளீட் செய்ய வேண்டும் என்ற நிலைமை இருக்குமானால், அப்பொழுது அவர்களை வைத்துக்கொள்கிறோம். இலாக்காக்களிலிருந்து எந்த அதிகாரிகளின் சேவையானது அவர்களுக்கு இன்னும்

* 481–84-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[28th July 1964

ஓராண்டுக் காலத்திற்கு அவசியம் என்று காரணங்கள் காட்டியிருந்து, அந்தக் காரணங்கள் தகுதியானவை என்று அரசாங்கம் நினைத்தால் அப்பொழுதும் அரசாங்கம் அனுமதிக்கும்.

பாலிடெக்னிக் (காஞ்சீபுரம்)

*751 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காஞ்சீபுரத்தில் உள்ள பக்தவசலம் பாலிடெக்னிக்கை விரிவுபடுத்தும் உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில், விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No.

(b) Does not arise.

பஞ்சாயத்து போர்டுகள்

*752 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழக்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து போர்டுகளை மேற்பார்வையிடும் அதிகாரிகளாக அரசாங்கம் யாரை நியமித்திருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட பஞ்சாயத்துக்களைக் கண்காணிப்பதற்கும், மேற்பார்வையிடுவதற்குமான அதிகாரிகளாக ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தவிர, கலெக்டர்கள் அல்லது இது சார்பாக அரசாங்கமோ அல்லது கலெக்டரோ அதிகாரமளிக்கும் யாதொரு அதிகாரியோ கண்காணிப்பு அதிகாரியின் அதிகாரங்களைச் செலுத்தலாம்.

பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளிகள்

*753 கேள்வி.—திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளிகளுக்காக வாடகையின்றி ஒதுக்கப்பட்டுள்ள கட்டிடங்களைச் செப்பனிட பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களை ரூ. 200 மட்டுமே செலவு செய்ய வேண்டுமென்று அரசாங்கம் அனுமதித்துள்ளது உண்மையா?

(இ) அப்படியாகில், அதை அதிகப்படுத்த ஏதேனும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) Yes.

28th July 1964]

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: இந்தத் தொகை போதாது என்று கருதப்படுகிறது. சில கட்டிடங்கள் அதிகப் பழுது அடைந்திருப்பதனால், அதைப் பழுது பார்ப்பதற்கு எஸ்டிமேட் தயாரித்து அனுப்பினால் அதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தமாதிரி ஒரு தீர்மானம் மேல் தஞ்சையில் இருந்து வந்திருக்கிறது. அதை சீப் இன்ஜினியருக்கு அனுப்பி அவரது அபிப்பிராயத்தைக் கோரியிருக்கிறோம். அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ப. உ. சண்முகம்: ஒரு ஆண்டுக்கு 200 ரூபாயா? அல்லது ஒரு முறைக்கு 200 ரூபாய்தான் செலவு செய்ய வேண்டுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒரு ஆண்டுக்கு என்றுதான் நினைக்கிறேன்.

Employees of ex-Travancore-Cochin State

* 754 Q.—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the rank and pay of the Ex-Travancore-Cochin Employees who have opted to Madras Service and who have been transferred from the Excise department to the Commerical Sales Tax department have been fixed; and

(b) whether it is a fact that the clerks who have so opted and who have been transferred to the Commercial Sales Tax Department are declared to be unfit for promotion as Upper Division Clerks in the Tirunelveli Circle?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) No.

கிராம வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கம்

*755 கேள்வி.—திரு. அ. துரையரசன் } கனம் கைத்தொழில்
திரு. வி. அருணாசலம்: } அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பட்டுக்கோட்டை வட்டம் (1) குருவிக்கரம்பை (2) கீரமங்கலம் கிராமங்களில் வீடு கட்டும் சங்கம் சர்க்கார் கடன் உதவியின்றி செயலற்றுக் கிடப்பது உண்மையா?

THE HON. SRI R. VENKATARAMAN : In respect of the Kuruvikarambai Rural Co-operative Housing Society, five loan applications were received by the Registrar of Co-operative Societies in March 1963. They could not be sanctioned in view of the ban imposed in December 1962 on the sanction of fresh loans

[28th July 1964

under various Housing Schemes including the Rural Co-operative Housing Scheme. As the ban in respect of the Rural Co-operative Housing Scheme has since been lifted in April 1964, the Registrar of Co-operative Societies has specifically instructed the Deputy Registrar of Co-operative Societies, Pattukkottai, to obtain and forward to him the applications of the Kuruvikarambai Co-operative Rural Housing Society for according necessary sanction.

As regards Keeramangalam Rural Co-operative Housing Society, no loan applications have been received by the Registrar of Co-operative Societies, since its inception, i.e., 15th September 1956.

தொழில் கல்லூரிகள்

** 756 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் தொழில் அமச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

தனியார் துறையில் இயங்கும் தொழில் கல்லூரிகளுக்கு ஆகும் செலவை அரசு மூன்றில் இரண்டு பாகத்தையும், உரியார் மூன்றில் ஒரு பாகத்தையும் ஏற்றுக் கொள்ளுமாறு விதிகளைத் திருத்த வேண்டும் என்ற மதிப்பீட்டுக் குழு பரிந்துறையினை ஏற்று அமுலாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? ஆமெனில் எந்த ஆண்டு முதல்?

THE HON. SRI R. VENKATARAMAN : The recommendation has been implemented with effect from 1964-65.

Motor Accidents Claims Tribunals

* 757 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of applications during 1962 and 1963 respectively, dealt with by the Motor Accidents Claims Tribunals in the State;

(*b*) the number of applications dismissed without awarding any compensation;

(*c*) whether any appraisal was made of the enforcement of the Madras Motor Accidents Claims Tribunals Rules, 1961; and

(*d*) if so, the details of the same?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 580 applications in 1962 and 955 applications in 1963.

(b) 100 in 1962 and 182 in 1963.

(*c*) No.

(*d*) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம் : விபத்துக்கு உள்ளானவர்கள் கோரும் நஷ்ட ஈட்டு மனு நூற்றுக்கணக்கானவை தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கின்றன. அவை எந்தக் காரணத்தைக் கொண்டு தள்ளுபடி செய்யப்பட்டன? எல்லோரும் நஷ்ட ஈடு பெறும்படியாகச் சட்டத்தைத் திருத்த முடியுமா?

28th July 1964]

THE HON. SRI R. VENKATARAMAN : This is done by a Tribunal and if it is rejected, it must be rejected on merits.

மருத்துவ மனைகள் (தென் ஆற்காடு)

** 758 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள பெரிய அரசாங்க மருத்துவ மனைகளில் இருக்கும் அறுவை நிலையங்களில் குளிர் சாதன வசதிகள் அமைக்கப் பெற்றுள்ளனவா?

(இ) ஆமெனில், எந்தெந்த இடங்களில்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No.

(*b*) Does not arise.

University Chancellor

* 759 Q.—PULAVAR K. GOVINDAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Central Government has conveyed to the State Government its view that the Governor shall not be the Chancellor of the University; and

(*b*) if so, the decision taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

புலவர் கா. கோவிந்தன் : கவர்னர் அவர்கள் ஓர் அரசினரால் நியமனம் செய்யப்படுகிறவர். பல்கலைக்கழகம் ஓர் தனி ஸ்தாபனம் ஆகவே கவர்னரை பல்கலைக் கழகம் முதல்வராக நியமிப்பது பொருந்தாது என்பதை அரசாங்கம் உணர்கிறதா? உணர்ந்தால் இப்போது இருக்கிற முறையை மாற்றுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லையென்று சொன்னேன்.

Surprise inspections by Commercial Tax Department

* 760 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a large contingent of staff of the Commercial Tax Department, raided several shops in Tiruchirappalli Town on 22nd June 1964;

(*b*) whether the Government have received any complaint from a Member of this Asembly regarding the raids;

(*c*) whether any enquiry was conducted; and

(*d*) if so, the finding of the enquiry?

[28th July 1964

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) It is a fact that the Officers of the Commercial Taxes Department made surprise inspections of the places of main business as well as branches of eleven dealers in Tiruchirappalli town on 22nd June 1964.

(*b*) Yes.

(*c*) The Government called for a report from the Board of Revenue (Commercial Taxes) and found that the circumstances did not warrant the ordering of an open enquiry, as requested by the Member.

(*d*) The Government have received a report from the Board of Revenue (Commercial Taxes). They consider that as the Commercial Taxes Department authorities have carried out only surprise inspections under the provisions of the Madras General Sales Tax Act, 1959, no further action is called for at Government level.

திரு. ப. உ. சண்முகம் : அப்படி திடீரென்று சோதனை போட்டதில் எத்தனை சர்க்காருக்கு வரிவசூல் செய்கின்ற அளவு கணக்கு பிடிக்கப்பட்டது. அப்படியானால் எவ்வளவு வசூலித்து இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது திட்டவட்டமாக சொல்ல முடியாது. அம்மாதிரி சோதனைபோட்டு எடுத்த கணக்குப் படி எத்தனை ரூபாய் சட்டப்படி கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்வார்கள். அதற்கு அவர்கள் ஆட்சேபணை சொல்லலாம். அதற்குப் பிறகு தீர்ப்புக்கொடுப்பார்கள். அதற்கு மேலும் அவர்களுக்கு அப்பீல் போட வாய்ப்பு இருக்கிறது. இந்த பார்மாலிடி எல்லாம் ஆனபிறகு அவர்கள் கட்டுகிற தொகையை முடிவில் பார்த்துத்தான் சர்க்காருக்கு எவ்வளவு வசூல் ஆயிற்று என்று சொல்ல முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சில சட்ட மன்ற உறுப்பினர்களிடமிருந்து புகார் வந்திருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் வீடும் சோதனை போடப்பட்டதா ? எத்தனை ரூபாய்க்கு வரி கட்டவேண்டுமென்ற கணக்கு அகப்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யாராக இருந்தாலும் மேலர் வீட்டில் சோதனை போடப்பட்டது என்று சொல்ல முடியும். அதற்கு மேல் சொல்ல விரும்பவில்லை.

திரு. செ. மாதவன் : சட்டமன்ற உறுப்பினர்களின் புகார்களில் அதிகாரிகள் தவறாக நடந்து கொண்டார்கள் என்று சொல்லப்பட்டதா, என்ன குறிப்பிடப்பட்டு இருந்தது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்த இடத்தில் சோதனை நடந்தாலும் அதிகாரிகள் தவறாக நடந்து கொண்டார்கள் என்று புகார் வருவது வழக்கம். அந்தமாதிரி இது ஒரு புகார்.

திரு. எ. கோ. பால கிருஷ்ணன் : அம்மாதிரி புகார் செய்த சட்டமன்ற உறுப்பினர்கள் யார் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. வெங்கட்டராமன் : சொல்வதற்கில்லை.

28th July 1964]

திரு. ஆ. கு. சுப்பையா : திடீரென்று சோதனை போட்டதில் வரியாக சர்க்காருக்கு எத்தனை ரூபாய் வசூலாயிற்று என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது சொல்ல முடியாது என்று தான் சொன்னேன். பிரிலிமினரி நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அவர்கள் objection செய்து கொள்வார்கள். ஸி.டி.ஓ. முடிவில் தீர்ப்பளிப்பார்கள். அதற்குப் பிறகும் அவர்கள் அப்பீல் செய்ய இடமிருக்கிறது. ஆகவே முடிவில் தான் சொல்ல முடியும்.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த திடீர் சோதனையினால் சர்க்காருக்கு வருட முடிவில் எத்தனை ரூபாய் வரும் என்று உத்தேசமாக எதிர்பார்க்கிறார்கள் என்றாவது சொல்ல முடியுமா ?

கனம் சபாநாயகர் : அதைத்தான் இப்போது சொல்லமுடியாது என்று கனம் அமைச்சர் சொன்னார்கள்.

பொற்கொல்லர்கள்

*763. கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பொற்கொல்லர்களின் குழந்தைகளுக்குக் கல்லூரிவரை இலவசக்கல்வி அளிக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : பொற்கொல்லர்களின் குழந்தைகளுக்கு வேலைகள் அளிப்பதில் ஆண்களோ, பெண்களோ எல்லோருக்கும் முதல் சலுகை கொடுக்கப்படவேண்டும் என்று சொல்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நாம் அப்படிச் செய்கிறோம். எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேன்ஜில் கூட இவர்களுக்கு பிரையாரிடி லிஸ்ட்டு கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

திரு. ம. கமலநாதன் : பொற்கொல்லர்களின் குழந்தைகளுக்குக் கல்லூரிப் படிப்பு தேவை இல்லையென்று அரசாங்கம் கருதுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யாருக்கும் தேவை இல்லை என்று அரசாங்கம் கருதவில்லை. ஆனால் விதிகளுக்குட்பட்டு படிக்கவேண்டுமென்று கருதுகிறோம்.

திரு. வை. சங்கரன் : தற்போது கொடுக்கப்படுகிற சலுகைகளில் பாக்வர்ட் க்ளாசில் ஏற்கனவே பொற்கொல்லர்கள் இருக்கிறார்கள். ஆகவே மோஸ்டு பாக்வர்ட் லிஸ்டில் அவர்களைச் சேர்த்து அதிகச் சலுகை அளிப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ஒரு ஸஜெஷன் தான்.

[28th July 1964

ரெவின்யூ இலாகாத் தேர்வுகள்

*764 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ல் சென்னை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ரெவின்யூ டெஸ்ட் பாகம் 3-ல் மறு பரீட்சை நடத்தவேண்டிய காரணங்கள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN: It was represented to the Madras Public Service Commission that the question paper for the Revenue Test, Part-III held on 7th November 1963 was not in conformity with the syllabus prescribed for the test. The Commission after examining this representation, conducted a re-examination in the Test.

சிங்கவரத்திலுள்ள கோவில் (செஞ்சி தாலூகா)

*765 கேள்வி.—திரு. கு. கோபாலக் கவுண்டர்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலூகா சிங்கவரத்திலுள்ள ஸ்ரீரங்கனாதசுவாமி கோவில் புராதான கோவிலாகவும், சரித்திர பிரசித்திபெற்ற ஸ்தலமாகவும் இருந்து போதுமான வருமானமில்லாமல் கோவில் கட்டிடங்கள் பாழடைவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(இ) இந்தக் கோவிலை பழுது பார்க்கவும், நிர்வகிக்கவும் அரசாங்கம் ஏற்பாடு செய்யும் உத்தேசமுண்டா?

கனம், திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) தென் ஆற்காடு மாவட்டம், செஞ்சி தாலூகா, சிங்கவரத்திலுள்ள ஸ்ரீரங்கநாதசுவாமி கோவில் பழுதடைந்த நிலையில் இருக்கிறது.

(இ) சென்னையில் உள்ள இந்து அறநிலைய ஆட்சித் துறை இது குறித்து அவசியமான நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கு. கோபாலக் கவுண்டர்: அந்தக் கோவிலைப் பழுது பார்க்க 40,000 ரூபாய் சர்க்கார் கொடுப்பதாகவும், ஒரு ரிடையர்டு என்ஜினியரிடம் எஸ்டிமேட் தயார் செய்யும்படி உத்தரவு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதன்படி எஸ்டிமேட் தயார் செய்து அனுப்பிவிட்டார்களா? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் பரிசீலித்துப் பதில் சொல்ல முடியும்.

அனைத்திந்தியப் பணியாளர்கள்

*766 கேள்வி.—புலவர், கா. கோவிந்தன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போலவே பிற துறைகளிலும் அனைத்திந்தியப் பணியாளர்களை ஏற்படுத்தும் திட்டம்பற்றி மத்திய அரசு மாநில அரசினரின் கருத்தைக் கேட்டுள்ளதா?

28th July 1964]

(ஆ) ஆமெனில், விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Yes. There is, under consideration, a proposal to create All India Services in Engineering, Education, Forestry and Medical and Public Health;

(b) In public interest, the details of the Scheme cannot be disclosed.

புலவர் கா. கோவிந்தன்: இப்படி அனைத்திந்திய சர்வீஸ்களாக ஏற்படுத்துவதன் காரணமாக தென்னிந்தியர்களுக்குக் கேடு நிகழும் என்று அரசு உணருகிறதா? உணர்ந்து இந்தத் திட்டத்தைக் கைவிட முன் வருமா?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன்: அந்த மாதிரிக் கேடு ஏற்படாது என்று அரசு உணருகிறது. அந்தக் காரணத்திற்காகக் கைவிட வேண்டுமென்று சொல்லமாட்டோம்.

திரு. செ. மாதவன்: அனைத்து இந்திய சர்வீஸ்களை நிறுவுவதில் நம்முடைய அரசாங்கத்தின் கருத்து என்ன? மத்திய அரசாங்கத்திற்கு என்ன கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மத்திய சர்க்காரிடம் தெரிவிக்கிற கருத்துக்களை எல்லாம் சட்டசபையிலே சொல்வது வழக்கம் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் தெரிவித்த கருத்துக்களை இந்தச் சபையில் சொல்லாவிட்டாலும், இப்படி அகில இந்திய சர்வீஸ் என்று இணைத்து விட்டால் ராஜ்ய சர்க்கார்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்பதற்கு விரோதமானதாகி விடும் என்ற முறையில் அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: என்ன தெரிவித்தோம் என்று சொல்ல முடியாது. இந்தப் பிரச்சினைகள் எல்லாம் சர்க்காருடைய கவனத்தில் இருக்கின்றன.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த மாதிரி இணைப்பது தேசிய ஒருமைப்பாட்டுக்கு உகந்தது அல்ல. இது ஒரு முக்கியமான பிரச்சினை. இந்தி பேசாத மற்றப் பகுதிகளில் இருக்கக்கூடியவர்களுக்குத் தங்களுடைய உத்தியோக வாய்ப்புக் குறைந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படும் சந்தர்ப்பம் இருக்கக்கூடிய காரணத்தால் இந்தச் சபையில் என்ன யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை வைப்பார்களா? இதிலே தெரிவிக்கப்பட்டிருக்கும் யோசனைகளிலே என்ன ரகசியம் இருக்கிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: முதல் கேள்விக்குப் பதில் சொல்லும்போதே 'இன் பப்ளிக் இண்டரஸ்ட்' வைக்க முடியாது என்று சொல்லிவிட்டேன். மந்திரி சபைதான் எது பப்ளிக் இண்டரஸ்ட் என்பதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறது.

[28th July 1964

மாநில சர்க்கார் ஊழியர்களின் சம்பளம்

*767 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: திரு. து. ப. அழகமுத்து : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் முதல் அமைச்சர் அவர்கள் டெல்லி சென்றிருந்த போது மாநில சர்க்காரின் ஊழியர்களின் சம்பள உயர்வுக்கான வழிவகைகள் பற்றி மத்திய சர்க்காரிடம் பேச்சு வார்த்தை நடத்தினார்களா ?

(இ) ஆமெனில், அதன் முடிவென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The State Government have already revised the scales of pay of their servants with effect from 1st June 1960 on the recommendations made by the Pay Commission. Hence there is no question of further revision of their pay scales. However, the State Government have since issued orders enhancing further the rates of Dearness Allowance of the State Government Servants, employees of local bodies and teachers in aided educational institutions, with effect from 1st May 1964.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: அண்மையில் முதலமைச்சர் அவர்கள் 'அரசாங்க சிப்பந்திகளுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்பதை உணருகிறோம். அதற்காக மத்திய அரசாங்கத்தை நிதி உதவி கேட்டிருக்கிறோம். அவர்கள் நிதி வசதி செய்து கொடுத்தால் கொடுக்க முடியும்' என்று சொன்னார்கள். அதை இந்த அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னதைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஸ்கேல்ஸ் ஆப் பே வேறு; டியர்னஸ் அலவன்ஸ் வேறு. கேள்வி ஸ்கேல்ஸ் ஆப் பே-ஐ உயர்த்த முடியுமா என்பதைப் பற்றியது. இதை ஐந்து வருஷத்திற்கு மாற்றுவதில்லை என்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : இப்போது நம்முடைய மாநில அரசு ஊழியர்களுக்குக் கொடுத்திருக்கும் உயர்வானது மத்திய அரசு ஊழியர்களுக்குக் கொடுத்திருப்பதைவிடக் குறைவாக இருக்கிறது. இந்தக் குறையை நிவர்த்திக்க அரசு முன் வருமா ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : குறைவு இருப்பது உண்மைதான். 'பெடரல் கான்ஸ்டிடியூஷன்' இருக்கும் எல்லா நாடுகளிலும் இந்த விதமான வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். பே கமிஷன் ரெகமன்டேஷன்படி டியர்னஸ் அலவன்ஸ் சமமாகக் கொண்டு வரவேண்டுமென்று கூறியிருப்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

28th July 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம் : பஞ்சப்படி உயர்வை ஸ்தல ஸ்தாபனங்கள் இருக்கக்கூடிய நகராட்சி மன்றங்களில் வேலை செய்யக்கூடிய சிப்பந்திகளுக்கும் உயர்த்துவதற்கு உத்தரவிட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஸ்தல ஸ்தாபனங்களில் ஆபீஸ்களில் வேலை செய்யக்கூடிய உத்தியோகஸ்தர்களுக்குத்தான் பஞ்சப்படி உயர்த்தப்பட்டிருக்கிறதே தவிர, சுகாதார இலாகாவில் வேலை செய்யக்கூடிய ஸ்வீப்பர் போன்றவர்களுக்கு உயர்த்திக் கொடுக்கவில்லை. அவர்களுக்கும் உயர்த்திக் கொடுக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சம்பந்தமாகக் கனம் அங்கத்தினர் அவர்கள் கடிதம் எழுதினால் சர்க்கார் பரிசீலனை செய்யும்.

திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய சர்க்கார் ஊழியர்களுடைய டியர்னஸ் அலவன்ஸ் உயர்த்துவதற்கு சமீபத்தில் ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. வை. சங்கரன் : மத்திய சர்க்கார் ஊழியர்கள், மாநில சர்க்கார் ஊழியர்கள் இடையே உள்ள டியர்னஸ் அலவன்ஸ் ஏற்றத் தாழ்வை ஈடு செய்ய மத்திய சர்க்காரிடம் சப்சிடி கேட்டு நமது அரசாங்கம் அணுகியுள்ளதா ? பலன் என்ன ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : நடவடிக்கை என்று சொன்னால் கடன் கேட்பது, மானியம் கேட்பது எல்லாம் நடவடிக்கைகள்தான்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நம்முடைய ராஜ்ய சர்க்கார் நியமித்த முதல் சம்பளக் கமிஷன் சிபாரிசுகள் அமல் நடத்தப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகின்றன. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சம்பள விகிதத்தை உயர்த்தும் வகையில் இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு பே கமிஷனை ஏற்படுத்த முன் வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதற்கு நான் இப்போது உடனடியாக இங்கே பதில் சொல்ல முடியாது. இதெல்லாம் சர்க்கார் நிதி வசதியைக் கவனித்துச் செய்ய வேண்டிய விஷயங்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: அரசாங்க சிப்பந்திகளுக்குச் சம்பளமாகவோ டியர்னஸ் அலவன்சாகவோ ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்பதுதான் எங்களுடைய விருப்பம். இதைப் பரிசீலனை செய்து கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். இவர்கள் கட்ட வேண்டிய 'கம்பல்சரி டெபாசிட்' டையாவது நிறுத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பார்லிமெண்டில் போட வேண்டிய கேள்வி.

[28th July 1964

Vigilance Commission

* 768 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to make changes in the organisation of the Directorate of Vigilance Commission; and

(*b*) whether there is any proposal to recruit from the Judiciary for the Directorate of Vigilance Commission?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) No.

திரு. செ. மாதவன் : மத்திய சர்க்காரிலே இது போன்ற கமிஷன் நியமிக்கும்போது அதிலே நியமிக்கப்படுகிறவர் நீதிபதிகளாக இருக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத்திற்கும் அது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் நம்முடைய அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்ய முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தப் பிரச்னை இந்த மன்றத்தில் இரண்டு முறை விவாதிக்கப்பட்டது. அதிலே சர்க்காருடைய கொள்கையை விளக்கியிருக்கிறேன். இப்போது இருக்கிற முறை நம்முடைய ராஜ்யத்திற்கு உகந்ததாக இருக்கிறது. எந்தக் கேசை இன்வெஸ்டிகேஷன் செய்கிறார்களோ அவற்றை நீதி ஸ்தலத்திற்கும் அனுப்புகிறார்கள். டிரிப்யூனல் ஃபார் டிசிப்ளினரி ப்ரொசீடிங்ஸ் அல்லது கோர்ட்டுக்கு அனுப்புகிறார்கள். ஆகவே இதிலே மாற்றம் தேவையில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : லஞ்ச ஒழிப்பு அமைப்பு என்பது உணர்வு பூர்வமாக மேற்கொள்ளப்பட்ட ஒன்று. இன்று இலாகாவின் தலைவராக போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர் இருக்கிறார். போலீஸ் இலாகாவில் ஏற்கனவே இருக்கின்ற 'எக்ஸ் ப்ராஞ்சு' விஸ்தரிக்கப்பட்ட உணர்ச்சிதான் இன்று மக்களிடத்திலே இருக்கிறது. ஆகவே, அதனுடைய தலைவராக நீதிபதி அந்தஸ்து உள்ள ஒருவரை நியமிக்க சர்க்கார் முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'இல்லை' என்று சொன்னேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தக் கமிஷன் ஒரே அதிகாரியைக் கொண்டதாக இருக்குமா அல்லது அவருக்கு உதவி செய்ய வேறு அதிகாரிகளும் நியமிக்கப்படுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : உதவி செய்ய அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். இந்த ராஜ்யம் பூராவையும் இரண்டு பிரிவாகப் பிரித்து இரண்டு டெபுடி டைரக்டர்கள் இருப்பார்கள். ஜில்லாக்களிலும் அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். இதெல்லாம் தனியாக அமைக்கப்படும்.

Medium of Instruction in Colleges

* 769 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce Tamil as medium of Instruction in all Arts Colleges throughout the State from the academic year 1964-65; and

(*b*) if not, the reason therefor?

28th July 1964]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Tamil medium course could not be started in two colleges, viz., Government Arts College, Madras and the Queen Mary's College, Madras during 1963-64 for want of students. It may not therefore be practicable to introduce Tamil medium courses in all Arts Colleges in the State during 1964-65.

திரு. கே. ஏ. மதியழகன் : 1963-ம் ஆண்டிலே எல்லாக் கல்லூரிகளிலும் தமிழை போதனாமொழியாக ஆக்குவோம் என்று முன்னாலிருந்த கல்வி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் வெள்ளை அறிக்கை மூலம் இங்கு வாக்குறுதி அளித்திருந்தார்கள். அதை எல்லாம் கல்லூரிகளிலும் ஒரே நேரத்தில் புகுத்தாததினால்தான் இப்படி நிலைமை இருக்கிறது. சர்க்காருக்கு கொள்கை ஒன்றுமில்லை. இதை அமுல் படுத்துவதில் தயக்கம் காட்டுவதுதான் காரணம் என்பதை மறுக்கிறார்களா? 9-30 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அங்கத்தினர் அவர்கள் என்ன காரணம் வேண்டுமானாலும் சொல்லலாம். சர்க்காரைப் பொறுத்த வரையில் மாணவர்கள் வரவில்லை என்று சொன்னால் எப்படி நாம் நடத்துவது என்று புரியவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மாணவர்கள் வரவில்லை என்பதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்தார்களா? மாணவர்களுக்குத் தமிழில் படிக்க விருப்பம் இல்லாத காரணமா? அல்லது தமிழில் படித்தால் உத்தியோகம் கிடைக்காது என்ற பயமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : காரணம் என்னவோ, எது வேண்டுமானாலும் இருக்கலாம். அவர்கள் வரவில்லை, அதனால் இந்த கோர்ஸ் ஆரம்பிக்கப்படவில்லை.

திரு. மு. கருணாநிதி : மாணவர்கள் வராமல் இருப்பதற்கு உபகாரச் சம்பளம் நிறுத்தப்பட்டிருப்பதும், அதோடு உத்தியோக உயர்வு அல்லது உத்தியோகத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படாதது தான் காரணம் என்று சொல்லப்படுகிறது. அதை அரசாங்கம் அறியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : உபகாரச் சம்பளம் கொடுத்துக் கொண்டிருந்தபோதும் தான் குறைவான மாணவர்கள் வந்தார்கள். மாணவர்கள் வரவில்லை என்ற காரணத்திற்காகத் தான் நிறுத்தப்பட்டது. எந்தக் காலேஜில் படித்த மாணவர்களுக்கும் உத்தியோகம் கொடுக்கிறோம் என்ற உத்தரவாதம் கொடுக்கவில்லை. தமிழில் படித்தவர்களுக்கு மட்டும் உத்திரவாதம் கொடுப்பது என்பது இயலாது.

திரு. ஜே. மாதா கவுடர் : தமிழ் போதனா மொழியாக இருக்கக் கூடிய கல்லூரிகளில் தமிழில் படித்தால் அகில இந்தியாவில் அல்லது வேறு நாடுகளுக்குச் சென்றால் உத்தியோகம் செய்வது முடியாது என்ற நிலைமை இந்தத் தமிழால் ஏற்படும் என்பதை மாணவர்கள் உணந்து இருக்கும் காரணத்தினால் தான் அவர்கள்

[28th July 1964

இக் கல்லூரிகளுக்கு வரவில்லை என்பது அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்திருக்கிறதா? ஆகவேதான் இந்தக் கல்லூரிகளில் இப் போதனாமொழி நிறுத்தப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அங்கத்தினர் அவர்களும் ஒரு காரணம் சொல்கிறார்கள்.

திரு. மு. கருணாநிதி: தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்குவோம் என்று ஆளும் கட்சியினர் தேர்தல் பிரகடனமாக முதலில் வைத்திருந்தார்கள். இப்போது தமிழ் போதனாமொழியாக உள்ள இடங்களில் மாணவர்கள் வரவில்லை என்று அதற்கான காரணங்களை அடிக்கடி கூறிக் கொண்டிருக்கிறார்கள். இறுதியாகத் தமிழ் பயிற்சி மொழி தோல்வி அடைந்து விட்டது என்பதைப் பகிரங்கமாக ஒத்துக்கொள்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அப்படிச் சொல்ல தேவையில்லை. எதுவும் மக்களுக்குத்தான் செய்யப்படுகிறது. மக்கள் ஒரு திட்டத்தை விரும்பவில்லை என்று சொன்னால் அதைக் கைவிடுவதில் தோல்வி கிடையாது. மாணவர்கள் தமிழ் மீடியம் எடுத்துக் கொள்ள அதிகமாக வரவில்லை என்பதற்காக அப் பகுதி மட்டும் கைவிடப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் சுப்பிரமணியம் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தபோது இந்த மன்றத்தின் முன்னால் வைத்து நிறைவேற்றப்பட்ட வெள்ளை அறிக்கையில் தமிழை போதனா மொழியாக எடுத்துப் படிக்கிற பட்டதாரிகளுக்கு முதல் சலுகையாக மாநில சர்க்காரில் வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் அதோடு இல்லாமல் மத்திய சர்க்காரில் கிடைக்கிற வேலைகளுக்கும் இந்தச் சர்க்கார் தாங்களே பொறுப்பேற்று வேலை வாய்ப்புக்கள் வாங்கித் தர சிபார்சு செய்வார்கள் என்றும் ஒரு உறுதி மொழி, உத்தரவாதம் இந்த மன்றத்தின் முன்னால் அறிவிக்கப்பட்டது. இப்போது புதிதாக வந்திருக்கிற அமைச்சரவை அந்தக் கொள்கையை மாற்றி அதைக் கைவிட்டதற்கு என்ன சமாதானம் சொல்லுகிறார்கள்.

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன்: இது க்வஸ்சின் அல்ல ஒரு க்ரிட்டிசம், எந்தச் சமயத்தில் வேண்டுமானாலும் சர்க்காரைப் பற்றிக் குறை கூறிக் கொண்டிருப்பது. திரு. சுப்பிரமணியம் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பது எனக்கு இப்போது ஞாபகம் இல்லை. அந்த மாதிரி அவர்கள் மத்திய சர்க்காரிலிருந்து உத்தியோகம் வாங்கிக் கொடுக்கிறேன் என்று உத்தரவாதம் கொடுப்பதற்கு அவர்களுக்கு எவ்வளவு தூரம் அதிகாரம் இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. அப்படிச் செய்ய எனக்கு முடியாது, யாருக்கும் முடியாது. இன்று மாணவர்கள் வரவில்லை, மாணவர்கள் விரும்பவில்லை ஆகவே சேர்க்க வில்லை என்று சொன்னால் மறுபடியும் மறுபடியும் அதை வைத்துக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அன்று கல்வி அமைச்சர் அவர்கள் என்ன உறுதிமொழி கொடுத்தார்கள் என்பது இருக்கட்டும். மத்திய சர்க்காரில் உத்தியோகம் வாங்கிக் கொடுப்பேன் என்று சொல்லவில்லை.

28th July 1964]

SRI K. A. MATHIALAGAN : It is in the White Paper placed on the table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம்: மத்திய சர்வீஸ் கமிஷனில் ரீஜனல் லாங்வேஜ் சேர்க்கப்படும் என்ற நம்பிக்கையை ஊட்டியதால் தமிழ்ப் பயிற்சி மொழியாக விருந்தால் நமக்கு உத்தியோகம் கிடைக்க வாய்ப்பு இருக்கும் என்ற உறுதிமொழி இருந்தது. இன்று யூனியன் சர்வீஸ் கமிஷனில் ரீஜனல் லாங்வேஜ் சேர்க்கப்படாத காரணத்தினால் ஆங்கிலம் படித்தவர்கள்தான் உத்தியோக வாய்ப்பிற்கு உயர்ந்தவர்களாகக் கருதப்படுவார்கள்; தமிழ் எடுத்துக் கொண்டவர்கள் உத்தியோக வாய்ப்பில் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுவார்கள் என்ற அச்சம் மாணவர்களிடையே ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் உணருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தவிதமான தகவல் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: மாணவர்கள் வரவில்லை என்று காரணம் காட்டினார்கள். தமிழைப் பயிற்சிமொழி ஆக்குவது பற்றி நம் அரசாங்கத்தின் கொள்கை என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பட்ஜட் டிபேட்டில் விளக்கப்படும்.

புலவர் கா. கோவிந்தன்: மாணவர்கள் வரவில்லை என்று சொன்னார்கள். மாணவர்கள் ஏன் வரவில்லை என்ற காரணத்தைக் கண்டு ஆராய அந்தத் திட்டத்திலிருந்த கல்லூரிப் பேராசிரியர்களையும், கல்லூரி மாணவர்களையும் கேட்டு அறிய ஒரு குழு அமைத்து விசாரிக்க அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன்: இது ஒரு "ஸஜஷன்". அதுபற்றி இப்போது முடிவு சொல்ல இயலாது.

* 770 **கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-65-ம் கல்வி ஆண்டில் சேலம் அரசினர் கல்லூரியில் தமிழைப் பயிற்சிமொழியாகச் செயல்படுத்தும் திட்டம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

* 771 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state the details of communication sent to Government of India on the question of change over from English to the regional language as the medium of instruction in colleges and the reply received from the Government of India?

THE HON. SRI R. VENKATARAMAN : During 1961, certain suggestions were made to the Government of India for the formulation of an all-India policy in regard to the medium of instruction in colleges. No reply was received from the Government of India nor was any reply expected.

[28th July 1964

திரு. மீ. கலியாணசுந்தரம்: அனுப்பிய யோசனைகளில் மத்திய சர்விஸ் கமிஷனில் பரீட்சை எழுதுவதற்குப் பிரதேச மொழிகளும் அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற யோசனையை நம் அரசாங்கம் தெரிவித்தார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, in the extract which I am having at present, I do not have that information. If the hon. Member puts a separate question with regard to this, I will have it examined.

*772 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பல்கலைக் கழக வகுப்புகளில் ஆங்கிலமே பாடமொழியாக இருக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநில அரசாங்கத்திற்கு யோசனை கூறப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN: No, Sir.

ஆதாரப் பள்ளிகள்

*773 கேள்வி.—திரு. முனு. ஆதி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆதாரப் பள்ளிகள் மட்டுமே இனி திறக்கப்படுதல் வேண்டும், இருக்கும் சில பள்ளிகளையும் ஆதாரக் கல்வி அடிப்படைக்கு மாற்றுதல் வேண்டும் என்ற உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: No, Sir.

புலவர் கா. கோவிந்தன்: இந்த ஆதாரப் பள்ளித் திட்டம் நன்கு செயல்படவில்லை என்ற கருத்துப்பட அரியநாயகம் அவர்கள் ஒரு கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதை இந்த அரசாங்கம் ஆராய்ந்து பார்த்தா? அதன் மேல் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது அரசாங்கம் முடிவு எடுத்தது, சாதாரணப் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்ற வேண்டும் என்பது அவசியமில்லை என்ற முடிவு தான் எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அவ்வாறு இருக்க ஆசிரியர் பயிற்சிக்கு மட்டும் ஆதாரப் பயிற்சி முறை அவசியம் என்று உத்தரவு இடக் காரணம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது ஆதாரப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றிற்கு ஆசிரியர்கள் வேண்டும். ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள் இல்லாவிட்டாலும் சாதாரணப் பள்ளிக்கூடங்களுக்கும் இது உபயோகமானது என்று சர்க்கார் நினைக்கிறது.

28th July 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம்: சாதாரண பயிற்சியை விட ஆதாரப் பயிற்சி சிறந்தது என்று அரசாங்கம் கருதுகிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN: That is a question of opinion. I am not able to say now.

அட்வகேட்-ஜெனரல் நியமனம்

*774 கேள்வி—திரு. செ. மாதவன்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழக அரசாங்கத்தின் Advocate-General ஐயும் Public Prosecutor ஐயும் நியமிப்பதில் அரசாங்கம் பின்பற்றும் கொள்கையாது?

THE HON. SRI R. VENKATARAMAN: The Advocate-General, Madras, is appointed by the Governor, under Article 165 of the Constitution of India. Appointment to the post of Public Prosecutor, Madras, is made by Government either by direct recruitment from the Bar or by transfer of a Judicial Officer. In both the cases, the Chief Justice of the High Court of Madras is consulted before making the appointments.

திரு. செ. மாதவன்: அட்வெக்கேட்-ஜெனரலும், பப்ளிக் ப்ராசிக்யூட்டரும் நியமிக்கப்படுவதற்கு முன்னாலே அவர்களுக்கு க்ரிமினல் லா அல்லது காண்ஸ்டிட்யூஷன் லாவில் எக்ஸ்பீரியன்ஸ் இருக்க வேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் அனுசரிக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் அவர்களுக்கு காண்ஸ்டிட்யூஷன் நன்கு தெரியும். அட்வெக்கேட் ஜெனரலாக நியமிக்கப்பட வேண்டியவர்கள் ஹைகோர்ட் ஜட்ஜ் ஆக நியமிக்கப்படக் கூடிய தகுதி உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றுதான் இருக்கிறது. அதற்கு மேல் ஒன்றும் இல்லை. அத்தகுதி பார்த்து நியமிக்கப்பட்டது.

திரு. இராம. அரங்கண்ணல்: பப்ளிக் ப்ராசிக்யூட்டராக இன்றைய தினம் நியமிக்கப்பட்டிருப்பவர் முதல் அமைச்சர் அவர்களின் வழக்கில் ஆஜரானார் என்ற காரணத்தினால் தான் அவர்களுக்கு அந்தச் சலுகை தரப்பட்டது என்று வக்கீல்கள் பேசிக் கொள்வது.

MR. SPEAKER: I am not allowing that Supplementary Question.

திரு. மு. கருணாநிதி: பப்ளிக் ப்ராசிக்யூட்டரை நியமிப்பதில் வயது நிர்ணயம் என்ற ஒரு மரபு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு விரோதமாக பப்ளிக் ப்ராசிக்யூட்டர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தமாதிரி விதிகள் ஒன்றுமில்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: அனுபவம் நிறைந்தவர்களும், இன்னும் ஆற்றல் நிறைந்தவர்களும் ஆன பல வழக்கறிஞர்கள் இருந்தும் ஹைகோர்ட்டிடம் பானல் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார்களா?

[28th July 1964

அப்படியானால் யார் யார் பெயர்கள் கொடுக்கப்பட்டது? அந்தப் பெயர்களில் இவர் பெயரை எப்படித் தேர்ந்தெடுத்தார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது, சீப் ஜஸ்டிஸிடம் கலந்து ஆலோசிக்கப்பட்டது. இதற்கு மேல் யார் யார் பெயர்களைக் கொடுத்தார்கள் என்று சொல்வதற்கு இயலாது.

திரு. செ. கோ. விஸ்வநாதன்: இதற்கு முன்பிருந்த அட்வக்கேட் ஜெனரல் அவர்களின் ராஜிநாமா செய்ததற்குக் காரணம் என்ன? சர்க்காருக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு இருந்ததாகச் சொல்லப்படுவது உண்மையா?

கனம் சபாநாயகர்: இதைப்பற்றி சில நாட்களுக்கு முன்னால் பதில் சொல்லியாகி விட்டது. இப்போதும் அதைத் திரும்பவும் கிளப்ப வேண்டியதில்லை.

திரு. செ. மாதவன்: தற்போது பப்ளிக் ப்ராசிக்யூட்டராக யார் நியமிக்கப்பட்டிருக்கிறார்? அவருக்கு கிரிமினல் சட்ட அனுபவம் இருக்கிறதா? அவருக்கு இந்தத் துறையில் போதிய அனுபவம் இல்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தகுதியுள்ளவர்களைப் பார்த்து சர்க்கார் சீப்-ஜஸ்டிஸ் அவர்களோடு கலந்து இந்த நியமனத்தைச் செய்திருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், பப்ளிக் ப்ராசிக்யூட்டர் நியமனம் செய்கின்ற விஷயத்தில், சர்க்காருடைய அபிப்பிராயத்தை பிரதம நீதிபதி ஏற்றுக்கொண்டார்களா அல்லது பிரதம நீதிபதி அவர்களின் அபிப்பிராயத்தைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டதா?

THE HON. SRI R. VENKATARAMAN: These are all confidential matters and they cannot be disclosed.

திரு கே. ஏ. மதியழகன்: இது பப்ளிக் ஆபிஸ் சம்பந்தமானது தான். சர்க்கார் வக்கீல் உத்யோகமானது, பொதுப் பிரச்னை தான்.

கனம் சபாநாயகர்: இதைப் பற்றித்தான் திரு. கலியாண சுந்தரம் அவர்கள் கேட்டுவிட்டார்கள், அதைத் திருப்பித் திருப்பிச் சொல்வதில் பிரயோசனம் இல்லை.

திரு. மு. கருணாநிதி: பப்ளிக் ப்ராசிக்யூட்டர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பவருக்குக் கிரிமினல் லா தெரியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: வக்கீல் உத்யோகத்திற்கு படித்து வெற்றி பெற்றிருந்தால், எல்லாச் சட்டமும் தெரியும் என்பது தான் பொதுவான கருத்து அது தான் accepted presumption.

Building grant to schools

* 775 Q.—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Chief Minister be pleased to state:—

(a) the details of the new scheme of giving grant towards construction of school-buildings; and

(b) the number of schools approved by the Government for such grant during 1963-64?

28th July 1964]

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The Honourable Member refers to the new Scheme for the sanction of matching grants from State Funds towards construction of buildings to Board High Schools. Under this Scheme the Government would give a 50 per cent grant upto a maximum of Rs. 12,500 towards construction of individual school building to an equal matching local contribution in cash and kind. The local contribution may be from the Panchayat or Panchayat Union Funds up to a maximum of Rs. 10,000 and Rs. 2,500 from the public.

(b) 200.

திருமதி சி. குழந்தையம்மாள்: தலைவர் அவர்களே, ஜில்லாவுக்கு இத்தனை உயர்நிலைப் பள்ளிகளுக்குத்தான் கட்டிட மான்யம் கொடுக்க முடியும் என்று சர்க்கார் ஏதாவது வகுத்திருக்கிறதா? அல்லது கேட்கின்ற எல்லா உயர்நிலைப்பள்ளிகளுக்கும் போதுமான அளவு சர்க்கார் மான்யம் கொடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தற்போது 200 பள்ளிக்கூடங்களுக்கு மானியம் கொடுப்பது என்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. இதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதோ, அவ்வளவு தான் மான்யம் கொடுக்க முடியும். அதற்கு மேல் செலவு செய்ய முடியாது.

திரு. ம. கமலநாதன்: பொதுவாக பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்கப்படும் மான்யத்தைப் பற்றித்தான். அந்த அளவில் ஆரம்ப பள்ளிகளுக்கு அளிக்கப்படும் கட்டிட மான்யம் எவ்வளவு என்பதை அறிவிக்க முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது உயர்நிலைப் பள்ளிக் கட்டிட மான்யம் பற்றிய விவரங்கள் தான் இப்போது இருக்கிறது. ஆரம்பப் பள்ளிகள் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் பதில் தெரிவிக்கலாம்.

ஓய்வு காலத்திற்குப் பிறகு பதவி நீடிப்பு.

* 776 கேள்வி—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை செகரட்டேரியட்டில் சூப்பரின்டெண்டாக பணியாற்றும் யாருக்கேனும் 55 வயதுக்கு மேலும் பதவி நீடிப்பு கொடுக்கப்பட்டதா?

(இ) ஆமெனில், காரணமென்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) சென்னைச் செயலகத்தில் 1964-ல் ஒரு சூப்பரின்டெண்டுக்கு ஓய்வு காலத்துக்கு மேல் ஓராண்டுக்குப் பதவி நீடிப்பு கொடுக்கப்பட்டது.

(இ) இந்த ஆண்டில் மிக முக்கியமானதொரு வேலையைச் செய்வதற்கென அவருடைய சேவை தேவைப்பட்டது

[28th July 1964

கலவரம் (உடையார்பாளையம் வட்டம்)

*777 கேள்வி—திரு. செ. மாதவன்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் உடையார்பாளையம் வட்டத்தில் சிலம்பனூர் கிராமத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் 16-ம் நாள் சாதிக் கலவரம் ஏற்பட்டதில் உண்டான சேதங்களின் விவரமென்ன?

(இ) கலவரத்திற்கான காரணங்கள் யாவை?

(உ) பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Seventy- four houses with thatched roofs were burnt, two bullock-carts and some hayricks belonging to the Harijans were destroyed and a goat was burnt to death. A few Calicut tiles of a pump-set room were also damaged. The total estimated loss on account of the arson is about Rs. 9,000. Sixty-one persons were reported to be injured in the clash and arson, 3 suffered serious injuries and of these one succumbed to the injuries on 18th April 1964.

(b) The cause of trouble is traced to the ill-feeling existing between the two communities for about a year. On 15th April 1964 one Govindaswamy Konar was assaulted by some Harijans and enraged at this, the Caste Hindus raided the Harijan Colony the next day.

(c) Arrangements were made to provide the victims with food and clothing and also to give them free grant for the reconstruction of lost houses.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அந்த கிராமத்தில் கருத்து வேறுபாடு இருந்ததாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியிருந்தால் அதைப்பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதை நீக்குவதற்கான ஓராண்டு காலமாக அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கருத்து வேறுபாடு இருக்கிற இடங்களில் எல்லாம் சர்க்கார் தலையிடுவதற்கில்லை. இந்தச் சம்பவம் எதிர்பாராத விதமாக நடந்திருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் வேண்டிய முயற்சிகள் எடுத்திருக்கிறது. பொதுவாக எல்லா கிராமங்களிலும் கருத்து வேறுபாடுகள் இருந்துக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் எல்லாக் கிராமங்களிலும் கலவரங்கள் நடந்துக் கொண்டிருக்கின்றன என்று எடுத்துக் கொள்வதற்கில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இது சம்பந்தமாக எத்தனை பேர்கள் மீது வழக்கு போடப்பட்டது. வழக்கின் முடிவு என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: The persons responsible for these riots—45 Caste Hindus including 8 from other villages—have been arrested and cases are under investigation.

28th July 1964]

திரு. செ. மாதவன்: கருத்து வேறுபாடு காரணமாகத்தான் கலவரம் வந்தது என்று சொன்னார்கள். இந்த இடத்தில் ஓராண்டு காலத்திற்கு மேலாக இவ்விதம் கருத்து வேறுபாடு இருப்பதாகவும் தெரிகிறது. அப்படியானால் இதற்கு முன்னால் இந்த இடத்தில் ஏதாவது ஜாதிக் கலவரம் ஏற்பட்டிருக்கிறதா? அப்படி ஏற்பட்டிருந்தால், அதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. மேலும் இம்மாதிரிக் கலவரங்கள் நிகழக் கூடாது, சமூகமாக எல்லோரும் இருக்க வேண்டும் என்று முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

அருப்புக்கோட்டை உப-தேர்தல்

*778 கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை பார்லிமெண்ட் உப-தேர்தலை ஒட்டி யாராவது கைது செய்யப்பட்டார்களா?

(இ) ஆமென்றால், எத்தனை பேர்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No.

(b) Does not arise.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை உப-தேர்தலில் "மலையாளிகளுக்கு வோட்டு போடாதீர்" என்று சொல்லி, ஜாதிப் பிரச்னையை அங்குள்ள ஆளும் கட்சியினர் கிளப்பினார்கள், அதில் அமைச்சர்களுக்கு பங்கு உண்டா?

MR. SPEAKER: The question does not arise here.

Appointment of Deputy Commissioners, Hindu Religious and Charitable Endowments Department.

*779 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state on what principle Deputy Commissioners of the Hindu Religious and Charitable Endowments Department are appointed?

THE HON. SRI R. VENKATARAMAN: Appointment as Deputy Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department is regulated by the provisions in Section 9 of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 as amended by the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1961 (Madras Act 12 of 1961) and the Madras Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Act, 1961 (Madras Act 40 of 1961).

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, இப்போது துணை ஆணையாளராக இருப்பவர், இந்தத் துறையில் பணியாற்றியிருக்கிறாரா, அல்லது அரசாங்கத் துறையில் ஏதாவது அனுபவம் உண்டா? இப்போது இருப்பவர்கள் 1938-39-ம் ஆண்டில் ஆளும் கட்சி உறுப்பினராக இருந்திருக்கிறார் என்பது உண்மையா? எந்த முறையில் இந்த துணை ஆணையாளரை நியமித்திருக்கிறார்கள்?

[28th July, 1964.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது மூன்று டெபுடி கமிஷனர்கள் இருக்கிறார்கள். அதில் ஒருவருக்குத்தான் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகின்ற டெஸ்க்ரிப்ஷன் எல்லாம் இருக்கிறது என்று நினைக்கிறேன். அவர் பி.எ.பி.எல். (வக்கில்) படித்தவர். இந்தத் துறையில் பணியாற்றுவதற்குத் தகுதியுள்ளவர் என்று கருதி, கான்டிராக்ட் முறையில் அரசாங்கம் அவரை நியமித்திருக்கிறது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: டெபுடி கமிஷனராக இருப்பதற்கு என்ன தகுதி இருக்க வேண்டும்? அந்தத் துறையிலே அனுபவமுள்ள, அந்தத் துறையிலேயே பணியாற்றுகின்றவர்களுக்கு இம்மாதிரி உத்தியோகத்தில் உயர்வு கொடுக்க அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தகுதி என்னென்ன வேண்டும் என்று சட்டத்தில் போட்டிருக்கிறார்கள். அட்மினிஸ்ட்ரேஷன் அனுபவம் இருக்க வேண்டும், ஜுடிஷியல் அனுபவம் இருக்க வேண்டும், இவ்விதம் இருக்கின்றவர்களை நியமனம் செய்யலாம், டைரக்ட் முறையிலும் நியமனம் செய்யலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறையில்தான் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த உத்தியோகத்திற்கு ஆட்களை நியமிக்கிற போது, சர்வீஸ் கமிஷன் மூலமாக நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தற்போது டைரக்ட் ரிக்ரூட்மெண்ட் என்ற முறையில்தான் விதிகள் இருக்கின்றன. இதை மாற்றுவதற்கு இப்போது யோசனை இல்லை.

கடலூரில் கிளர்ச்சி

*780 **கே.—திரு. செ. மாதவன்:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூரில் அரசியல் அமைப்புச் சட்டத்தை எரித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

(இ) ஆமெனில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) Six persons were arrested.

திரு. செ. மாதவன்: இந்த 6 பேர்களைக் கைது செய்து எத்தனை நாட்களுக்குப் பின் அவர்கள் மீது சார்ஜ்-ஷீம் போட்டப்பட்டது? சார்ஜ்-ஷீட் போடுவதில் காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : I do not have the details. Six persons have since been convicted and sentenced to undergo rigorous imprisonment for one month.

28th July 1964]

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தில் அரசியல் சட்டத்தை எரித்த 6 பேர்கள் மீதும் வேறு மாவட்டங்களில் இல்லாத அளவுக்கு ராஜத்திரோகக் குற்றத்தைச் சேர்க்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டார்களா? அரசாங்கம் அனுமதித்து அதை நீதி மன்றம் ஏற்றுக் கொண்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் அதைப் பார்த்துச் சொல்ல முடியும்.

திரு. கே. ஏ. மதியழகன்: வேறு மாவட்டங்களில் அரசியல் சட்டத்தைக் கொளுத்தியவர்கள் மீது வழக்குகள் விரைவாகப் பதிவு செய்து நீதி மன்றங்களுக்கு அனுப்பப்பட்டது. இங்கு மட்டும் 3-4 மாதங்கள், வெளியே ஜாமீனில் போகாமல் சிறையில் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக விரைவாகப் பதிவு செய்து நீதி மன்றத்திற்கு அனுப்பாமல் நீட்டப்பட்டது என்பது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த மாதிரி நோக்கம் எதுவும் இல்லை.

திரு. செ. மாதவன்: சார், இந்த வழக்கில் போலீசார் அதிகக் கால தாமதம் செய்தார்கள் என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா? அதைப் பற்றி உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது உண்மையா?

THE HON. SRI R. VENKATARAMAN : I have no information on that.

அகில இந்திய பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரீட்சைகள்

*781 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் டெல்லிக்கு சென்றிருந்த முதல் அமைச்சர் அவர்கள் அகில இந்திய பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரீட்சைகளை இந்தியில் வைப்பதற்குச் சம்மதம் தெரிவித்தாரா?

(இ) இது விஷயத்தில் ஏற்பட்ட முடிவென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No.

(b) It was generally agreed that English should continue to be the medium for I.A.S. and Higher Central Services Examinations but that Hindi might be introduced as an alternative medium with effect from the examination to be held in September 1965, provided a formula for moderation in the matter of Standards in the evaluation of answer books written in English and in Hindi can be evolved meanwhile. The intention is that the candidates, who have English as medium of examination should not suffer from a disadvantage when Hindi is introduced as alternative medium. If a satisfactory formula cannot be evolved in time, the introduction of Hindi as an alternative medium may be postponed further.

திரு. கே. ஏ. மதியழகன்: தமிழையும் மீடியம்களில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளுமாறு நமது முதல் அமைச்சர் அவர்களால் சிபாரிசு செய்யப்பட்டதா?

[28th July 1964

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்ல முடியும்.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்தப் பிரச்னையில் யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷனை ஆலோசனை கேட்ட நேரத்தில் இந்தியை ஆல்ட்டர்னெடிவ் லாங்குவேஜாக வைக்க வேண்டாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒரு முக்கியமான பிரச்னை. 1965-ம் ஆண்டிலிருந்து ஹிந்தி ஆல்ட்டர்னெடிவ் லாங்குவேஜ்ஜாக ஆகி விடும் என்று சொன்னால் தமிழ்நட்டில் இருக்கிற மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இப்போதே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வு களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பெறக் கூடிய இடங்களைப் பார்த்தால் பெரும் வேதனையாக இருக்கிறது. ஆகவே 1965-ம் ஆண்டிலிருந்து ஹிந்தியைக் கொண்டுவரும் கொள்கையை மாற்ற வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் கூறுவார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : It is a suggestion for action. Governmet will have to consider various aspect before accepting it.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஹிந்தியும் இப்போது மத்திய சர்விஸ் கமிஷனின் தேர்வுகளை எழுதும் ஒரு மொழியாக அங்கி கரிக்கப்பட்டுள்ளது. இது ஹிந்தி பேசாத மக்களுக்கு காலம் சென்ற பிரதம மந்திரி நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதியை மீறியதாகாதா? ஹிந்தி பேசாத மக்களின் சம்மதம் பெறும் வரையில் ஆங்கிலமே நீடிக்கும் என்று உறுதிமொழி கொடுக்கப் பட்டது. அதைச் சுட்டிக்காட்டி, ஹிந்தியைச் சேர்க்கக் கூடாது என்று நமது முதல் அமைச்சர் கூறினார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது பற்றி முடிவு என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ளுவது நல்லது. முதல் அமைச்சர் மாநாடு கூடியபோது ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் எழுதக் கூடிய புத்தகங்களை (ஆன்சர்புக்ஸ்) சரியான முறையில், சமமான முறையில் வேல்யூ செய்யப்பட்டு அதற்கான மாடரேஷன் முறைகள் கண்டுபிடிக்கப்படும் வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று பேசி முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவுக்கு மாறாக எந்தவிதமான சிபாரிசும் செய்ய இயலாது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் அமைச்சர் அவர்களுடைய பதிலை நான் சரியாகப் புரிந்துகொண்டேனா என்பது சந்தேகமாக இருக்கிறது. இப்போது ஹிந்தியில் பரீட்சை எழுத அனுமதிக்கப் படுகிறதா, இல்லையா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது இல்லை, இனி மேல் 1965-ம் வருஷத்தில் தான். அதுவும் பேப்பரில் பார்த்திருக் கிறேமே தவிர, அந்தத் தகவல் அஃபிஷியலாகக்கூட வரவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்தப் பிரச்னை தற்காலத்தையும், எதிர்காலத்தையும் பாதிக்கும் பிரச்னை. இதைப்பற்றி அரசாங்கமே யோசனை செய்து முடிவு எடுப்பதாக இல்லாமல், சட்ட மன்றத்தைக் கூட்டி இதிலே ஒருமித்த முடிவு எடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

28th July 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்கு அதிகாரம் அங்கத் தினர்களிடமே இருக்கிறது. ஒரு நான்-அஃபிஷியல் ரெசலூஷன் கொடுத்தால் அதை விவாதிக்கலாம் அடுத்த கூட்டத்தில்.

திரு. ப. உ. சண்முகம்: இப்படிப் பொதுவான முறையில் வகுக்கும் வரையில் தேர்வு மொழியாக வராது என்று உறுதி அளிக்க நமது அரசியலமைப்பில் 1965-ம் ஆண்டுக்குள் கண்டிப்பாக வர வேண்டும் என்ற பகுதியைத் திருத்த அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்லுவார் களா?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன்: அரசியல் சட்டத்தில் அந்த மாதிரி ஒன்றும் இல்லை. 1965-ம் ஆண்டுக்குள் வரவேண்டும் என்று எந்தவிதமான பிரிவும் இல்லை. ஏனென்றால் ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று சட்டம் செய்திருக்கிறோம். ஆகையால் சர்விஸ் கமிஷன் ஹிந்தியில்தான் எழுத வேண்டும் என்பது அல்ல.

திரு. மு. கருணாநிதி: ஹிந்தி பரீட்சை பற்றி பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது, அதிகார பூர்வமாக வரவில்லை என்று கனம் அமைச்சர் சொன்னார். அப்படி வரும்போது அரசாங் கத்தின் நிலை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : It is a hypothetical question.

திரு. கே. ஏ. மதியழகன்: ஆங்கிலத்துடன் ஹிந்தியும் பரீட்சைக்கு அனுமதிப்பதாக இருந்தாலும், மாடரேஷன் என்று எவ்வளவு சொன்னாலும்கூட ஹிந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு அதனால் ஒரு அனுகூலமிருக்கிறது. ஆகவே மற்றவர்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுவதால் இந்த டிஸ்க்ரி மினேஷன் இருக்கக் கூடாது என்பதை மத்திய சர்க்காரிடத்தில் நமது அமைச்சரவை வற்புறுத்துமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் அபிப் பிராயத்தை ஆரம்பத்திலேயே சொன்னார்கள். இதை நன்றாக விவாதிக்கலாம். நான்-அஃபிஷியல் ரெசலூஷன் கொடுத்தால், அப்போது எல்லாவற்றையும் சொல்ல உதவியாக இருக்கும். சட்ட சபையின் அபிப்பிராயங்களை விளக்கி எடுத்துச் சொல்ல அது உதவியாக இருக்கும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஆங்கிலத்தை ஆட்சிமொழியாகவும், பரீட்சை மொழியாகவும் 1965-க்குப் பிறகு 1975-ம் ஆண்டு வரை யில் நீடிக்க சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க அவசரப்பட்டு, இப்போது ஹிந்தி அல்லாத இந்திய மொழிகளில் எதையும் சேர்க்காதபொழுது, ஹிந்தியை மட்டும் சேர்க்க வேண்டு மென்று மத்திய அரசாங்கம் முடிவு செய்திருப்பது ஹிந்தி பேசு கிறவர்களுக்குச் சலுகை கொடுப்பதாக ஆகாதா? அதைப்பற்றி நமது முதல் அமைச்சர், மாநாட்டில் ஏன் வற்புறுத்தவில்லை?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் கேட்பது ஆச்சரியமாக இருக்கிறது. அவர் வற்புறுத்தினாரா, அல்லது வற்புறுத்தவில்லையா என்பது அவருக்கு எப்படித் தெரியும்? நான் அவர்கள் வற்புறுத்தினார்கள் என்று சொல்ல

[28th July 1964

முடியாது, வற்புறுத்தவில்லை என்றும் சொல்ல முடியாது. நம் ராஜ்ய மக்கள் உரிமை பாதிக்கப்படாத முறையில் நம் முதல் அமைச்சர் நடவடிக்கை எடுத்துக்கொண்டார் என்று நான் சொல்ல முடியும்.

திரு. இராம. அரங்கண்ணல்: ஹிந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழகத்தில் ஒரு கொந்தளிப்பே ஏற்பட்டிருக்கிறது. இன்றைய தினம் நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார். இவைகளை எடுத்துக் காட்டி, அதோடு பெரும்பாலானவர்கள் திரு. சி. பி. ராமசுவாமி அய்யர் போன்றவர்களெல்லாம் ஹிந்தியை எதிர்க்கிறார்கள் என்ற காரணத்தினால், இந்த ஹிந்தித் திணிப்பை ஒத்திப் போடுவதற்கு நமது அரசாங்கம் வற்புறுத்த இயலுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் எங்களுக்கு ஆர்குமெண்ட்ஸ் தெரியாது என்று நினைத்து ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. மு. கருணாநிதி: ஹிந்தியில் பரீட்சை நடத்தினால் ஹிந்தி பேசுகிறவர்களுக்குத் தான், ஹிந்தி பேசுகிற மாநிலங்களுக்குத் தான் சங்கடம் என்று இந்த மன்றத்தில் பேசும்போது நமது முதல் அமைச்சர் கூறினார்கள். அந்த முறையில் தான் ஹிந்தியை ஒத்துக் கொண்டு வந்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சந்தேகங்கள், ஹேஷ்யங்கள் எல்லாவற்றுக்கும் சட்டசபையில் பதில் சொல்ல இடமில்லை.

உதவிச் சம்பளச் சலுகை

*782 கேள்வி—திரு. புலவர் கா. கோவிந்தன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

Post-Graduate படிப்புக்குக் கொடுக்கப்படுவது போலவே Post-Diploma படிப்புக்கும் உதவிச் சம்பளம் கொடுக்க வேண்டும் என மதிப்பீட்டுக் குழு செய்த பரிந்துரைமீது அரசு எடுத்திருக்கும் முடிவு யாது?

THE HON. SRI R. VENKATARAMAN: Fifty per cent of the Post-Diploma courses in the Government and Private Polytechnics are now being given stipends at the rate of Rs. 50 per mensem for 18 months of the course.

போலீஸ் நிலையத்தில் மரணம்

*783 கேள்வி—திரு. செ. மாதவன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் தஞ்சை வட்டத்திலுள்ள தோள்ரிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த துரைச்சாமி உடையார் என்பவர் கந்தர்வக் கோட்டை போலீஸ் நிலையத்தில் 18—7—1963-ம் தேதி இறந்தது உண்மையா? அப்படியானால் காரணமென்ன?

28th July 1964]

THE HON. SRI R. VENKATARAMAN: Yes. One Doraisami Odayar of Tholripatti village in Thanjavur district died in police lock-up at Gandarvakottai Police Station on 18th July 1963 by committing suicide by hanging.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அவருடைய உறவினரிடமிருந்து தஞ்சை மாவட்ட கலெக்டருக்கு அவர் அப்படி தூக்குப் போட்டுக் கொண்டு சாகவில்லை, போலீசாரின் கொடுமையினால் செத்தார் என்று 'கம்ப்ளைண்டு' வந்திருக்கிறதா? அதுபற்றி கலெக்டர் விசாரித்தாரா? விசாரித்து, ரிப்போர்ட்டு அனுப்பியிருக்கிறாரா? 10-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அம்மாதிரி புகார் வந்து, கலெக்டரால் விசாரிக்கப்பட்டது. விசாரித்து, அந்தவிதமான புகார் சரியல்ல என்று அவர்கள் தீர்மானம் கொடுத்தார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: துரைசாமி உடையார் என்பவர் எந்தவிதமான குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டார்? கைது செய்யப்பட்டு எவ்வளவு நேரம் போலீஸ் லாக்கப்பில் வைக்கப்பட்டிருந்தார்? தற்கொலை செய்து கொள்வதற்கு அங்கே என்ன வசதிகளைப் போலீசார் செய்து கொடுத்திருக்கிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தற்கொலை செய்து கொள்வதற்கு வசதி எல்லோரிடமுமே இருக்கிறது. எல்லோரும் வேஷ்டி கட்டிக்கொண்டிருக்கிறோம். அவர் அவருடைய வேஷ்டியைக் கட்டி தற்கொலை செய்துகொண்டார். அங்கே கதவில் ஒரு பார் இருக்கிறது. அதிலே கட்டியதாகத் தகவல் இருக்கிறது. சர்க்கார் இதற்கு ஒன்றும் உதவி செய்து கொடுப்பது வழக்கமில்லை. ஆனால், அங்கத்தினர் அவர்கள் ஏதாவது சர்க்கார் மீது புகார் செய்ய வேண்டுமென்றால், எந்தச் சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்துவதிலும் தவறுவது இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: முதலில் அமைச்சர் அவர்கள் கூறின பதிலில் அமைச்சர் அவர்களுக்கே நம்பிக்கை இருக்கிறதா என்பது எனக்குச் சந்தேகம். போலீஸ் ஸ்டேஷன் கதவில் இருக்கிற கம்பியில் வேஷ்டியைக் கட்டிக்கொண்டு போலீசார் கவனம் இல்லாமலேயே தற்கொலை செய்து கொண்டு செத்துவிடும் படியான அற்புதமான காரியத்தை எப்படிச் செய்தார் என்று எனக்குப் புரியவில்லை. இது சம்பந்தமாக போஸ்டு மார்டெம் நடத்தப்பட்டதா? போஸ்டு மார்டெத்தில் தீர்ப்பு என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது சம்பந்தமாக உடனே போஸ்டு மார்டெம் நடத்தப்பட்டது. The Professor of Forensic Medicine in Thanjavur Hospital performed the autopsy. அவருடைய "finding" இது "Suicide" என்பதுதான்.

திரு. மு. கருணாநிதி: கதவின் கம்பியில் தூக்குப்போட்டுக் கொண்ட நேரத்தில், கதவின் பக்கத்தில் காவல் புரிந்த போலீஸ்காரர் அங்கு இல்லையா? அல்லது இந்த வழக்கு விசாரணையில் அவர் தூங்கிவிட்டார் என்ற செய்தி கிடைத்ததா?

[28th July 1964

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒவ்வொரு கதவின் பக்கத்திலும் ஒரு போலீஸ்காரர் காவலில் இருப்பதில்லை. பொதுவாக ஒரு 'சப்' ஜெயிலுக்கு அந்த இடத்திற்கு ஒருவர் தான் காவல் இருப்பார்.

திரு. மு. கருணாநிதி: இந்த 'சப்' ஜெயிலில் எத்தனை லாக்கப்புகள் இருந்தன என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதில் இருக்கிற தகவல்படி ஒரு போலீஸ்காரர்தான் காவலில் இருந்தார் என்றும், அவர் ஸ்டேஷனில் இருந்து கொண்டிருந்தார் என்றும், இந்த சம்பவம் நடந்தது அவருக்குத் தெரியாது என்றும் சொல்லப்படுகிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: வழக்கமாக ஒவ்வொரு சட்டமன்ற தொடர் கூட்டத்திலும் இப்படிப்பட்ட போலீஸ் லாக்கப் மரணங்கள் வருகின்றன. மந்திரிகளும் வழக்கமாக இதே பதில் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட அபாயம் ஏற்படாமல் இருப்பதற்கு நிரந்தரமாக ஏதாவது நடவடிக்கை எடுப்பதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நிரந்தரமான நடவடிக்கை என்னவென்று கனம் அங்கத்தினர் சொன்னால், சரியாக இருக்கும்.

திரு. ஆ. கு. சுப்பையா: அமைச்சர் அவர்கள் 'சப்' ஜெயில் இருக்கிறது, பல ரூம்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். கந்தர்வக் கோட்டையில் போலீஸ் ஸ்டேஷன் தான் இருக்கிறது, ஒரே ஒரு லாக்கப் தான் இருக்கிறது. அங்கே ஒரு போலீஸ்காரர் பாரா இருப்பார். அந்தப் பாரா இருந்த போலீஸ்காரர் அன்று அங்கேயே இருந்தாரா? அல்லது வேறு எங்கேயாவது போய் விட்டாரா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: போலீஸ்காரர் அங்கே இருந்தார் என்று தான் ரிப்போர்ட்டில் இருக்கிறது.

MR. SPEAKER: There is no allegation that he has aided this man to commit suicide.

Teachers in schools

* 784 Q.—SRI M. S. SELVARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state:—

(a) whether any case has been brought to the notice of the Educational authorities that Teachers of 58 and above in age serving in Private management schools are asked to be transferred to Panchayat Union Schools on the ground that they are the junior-most teachers; and

(b) whether it is a fact that teachers cannot be employed in Panchayat Union Schools, after the age of 58?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No.

(b) Yes.

28th July 1964]

திரு. எம். எஸ். செல்வராஜன்: தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இருக்கக்கூடிய, 60 வயது வரையிலும் வேலை செய்யலாம் என்ற உரிமையை, பஞ்சாயத்து யூனியன், முனிசிபாலிடி, சர்க்கார் பள்ளிகளுக்கும் விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: The Government have fixed the age of superannuation for Teachers as 58. Therefore, it is not extended up to 60.

Non-teaching staff in schools

* 785 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Chief Minister be pleased to state:—

(a) whether there is any proposal to extend the benefits of pensions, conditions of service, etc., given to teaching staff, to the non-teaching staff also in the aided schools; and

(b) whether the non-teaching staff in the Government schools are entitled to the benefits given to the teaching staff?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No.

(b) Yes. The non-teaching staff in the Government schools are entitled to those benefits enjoyed by the teaching staff which are common to all Government servants of Education Department.

Teachers' salary (Tiruchendur)

*786 Q.—SRI M. S. SELVARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state:—

(a) whether it is a fact that the Tiruchendur Panchayat Union authorities showed discrimination towards the aided school teachers in regard to the payment of their salary; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No.

(b) Does not airse.

திரு. எம். எஸ். செல்வராஜன்: பஞ்சாயத்து யூனியன் பொறுப்பிலே இருக்கக்கூடிய பள்ளி ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளியில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும் ஒரு போல சரிசமமாக நினைத்து சம்பளம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்ற தாக்கீதை அரசாங்கம் ஆலோசனையாக பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுப்பிவைப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அது தான் சர்க்காருடைய முறையும் கூட. கனம் அங்கத்தினர் ஏதோ ஒரு தனிப்பட்ட சம்பவத்தை வைத்து இந்தக் கேள்வி போட்டிருக்கிறார். அந்தச் சம்பவத்தில் செக்கு புஸ்தகம் உடனே கிடைக்காத காரணத்தினால், கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது, அந்தப் பணம் பின்பு அனுப்பப்பட்டது.

[28th July 1964

தமிழ் பண்டிதர்கள் நியமனம்

* 787 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்றவர்கள் பண்டிதர் பயிற்சி பெறாமலேயே உயர்நிலைப்பள்ளிகளில் பணிபுரிய அனுமதிக்கப்படுகின்றனரா?

(இ) அப்படியானால், உயர் துவக்கப்பள்ளிகளில் பணி புரியும் அதே தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு அச்சலுகை மறுக்கப்படுவது உண்மையா? காரணமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b): Oriental title holders may be appointed as Tamil Pandits in High Schools as well as in Higher Elementary Schools if Tamil Pandits with the prescribed qualifications are not available.

Incident at Tambaram Railway Station

* 788 Q.—SRI M. S. SELVARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state:—

(a) whether it is a fact that a worker by name Sri Narasimhan employed in the Standard Motor Factory at Vandalur was assaulted by certain military personnel on 28th February 1964 in the Trivandrum Express train at Tambaram Railway Station; and

(b) if so, the action taken thereon?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) & (இ) 28—2—1964-ல் தாம்பரம் ரயில் நிலையத்தில் ராணுவத்தினர் சிலருக்கும் ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை ஊழியர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இது சம்பந்தமாக போலீசார் இரண்டு வழக்குகளைப் பதிவு செய்தனர். ஆனால், ராணுவத்தினரோ அல்லது மேற்படி தொழிலாளர்களோ தங்களைத் தாக்கிய நபர்கள் யார் என்று அடையாளம் காட்ட முடியாமற்போனதால், இந்த இரு வழக்குகளும் துப்புத் துலக்க முடியாத வழக்குகள் எனக் கருதப்பட்டன.

திரு. எம். எஸ். செல்வராஜன்: இந்த சம்பவத்திற்குப் பின்னரும் கூட மதுரையில் இது போன்ற சம்பவம் நடந்ததாக பத்திரிகையில் ரிப்போர்ட்டு வந்தது. ஆகவே, மிலிடரி பெர்ஸனலுக்கு நாடு முழுவதும் இருக்கக்கூடிய மக்களிடத்தில் அபிமானம் ஏற்படக் கூடிய நிலைமையில், மிலிடரி பெர்ஸன்ஸ் இதுபோன்று பிரயாணம் செய்யும்பொழுது சில 'பிரின்ஸிபில்ஸ்' படி நடந்து கொள்வதற்கு ஒரு 'ஸ்டிரிக்ட் கோட்' விதிக்கவேண்டுமென்று இந்த ராஜ்ய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அம்மாதிரி செய்யவேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. எல்லோரும் சட்டத்திற்கு உட்பட்டுத் தான் நடந்து கொள்ளவேண்டும். ராணுவ பெர்ஸனலாக இருந்தாலும் சரி, சிவில் பெர்ஸனலாக இருந்தாலும் சரி, அவர்கள் தவறு செய்தால், சாதாரண சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள்.

28th July 1964]

UNSTARRED QUESTIONS

Bus-stand, etc., to Panchayat

254 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்துக்களில் உந்துவண்டி நிலையம் (பஸ் ஸ்டாண்டு), சந்தை முதலியவைகள் ஏற்படுத்துவதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

(இ) இதுவரையில் எந்தெந்த பஞ்சாயத்துக்களுக்கு எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டுள்ளது?

A.—A statement[a] is placed on the Table of the House.

சபையில் ஓர் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

State Housing Board

255 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-ம் ஆண்டில் தமிழ்நாடு வீட்டுவசதி போர்டார் செய்த பணிகள், எடுத்துக்கொண்டு முடித்த காரியங்கள், அவைகளுக்கான செலவுகளைப்பற்றிய விவரமென்ன?

A.—A statement[b] is placed on the Table of the House.

சபையில் ஓர் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

Publication of books by teachers

256 கேள்வி.—திரு. எஸ். மணி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்ட அளவில் மன்றப் பள்ளி ஆசிரியர்கள் நூல்கள் எழுத, அல்லது வெளியிட தடை அல்லது விதிமுறைகள் ஏதேனும் உண்டா?

(இ) அனுமதி மறுக்கப்படுவதாக வரும் புகார் பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா?

A.—(a) Yes.
(b) No.

(அ) ஆம்.
(இ) இல்லை.

Beggars Home

257 கேள்வி.—திரு. சா. ராமசாமி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் நம் மாநிலத்தில் மாவட்டவாரியாக எங்கெங்கு அரசினரால் நிர்வகிக்கப்படும் பிச்சைக்காரர் விடுதிகள் இருக்கின்றன?

(இ) ஒவ்வொன்றிலும் எத்தனை பேர் உள்ளனர்?

---

[a] Printed as Appendix IV on pages 488–490.
[b] Printed as Appendix V on pages 491–516.

[28th July 1964

(உ) இவைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகும் செலவென்ன ?

(எ) 1962-63-ல் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஐ) தனியார் நடத்தும் பிச்சைக்கார விடுதிகள் எங்கெங்கு உள்ளன ?

(ஒ) இதற்காக அரசாங்கம் தரும் உதவி என்ன ?

A.—(*a*) Two in all—one at Kancheepuram and the other at Melpakkam—both in the district of Chingleput.

			*As on 31st December 1963.
(*b*)	(i) Kancheepuram		36 *
	(ii) Melpakkam ..		477 *
(*c*)	(i) Kancheepuram	Rs.	39,212 (Average)
	(ii) Melpakkam ..	Rs.	3,33,302 (Average)
(*d*)	(i) Kancheepuram	Rs.	46,505
	(ii) Melpakkam ..	Rs.	2,87,625

(*e*) A statement[a] is placed on the Table of the House.

(*f*) The Government pay the local bodies concerned in respect of the inmates detained in the Special Home or Work House a grant of Rs. 10 per month per inmate subject to a maximum of 50 inmates, in the case of a Special Home and 100 inmates in the case of a Work House at a time.

(அ) காஞ்சீபுரத்தில் ஒன்றும், மேல்பாக்கத்தில் ஒன்றுமாக மொத்தம் இரண்டு. இரண்டும் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளன.

			*31-12-1963-ல் இருந்தபடி.
(இ)	(1) காஞ்சீபுரம்	..	36*
	(2) மேல்பாக்கம்	..	477
(உ)	(1) காஞ்சீபுரம்	..	ரூ. 39,212 (சராசரி)
	(2) மேல்பாக்கம்	..	ரூ. 3,33,302 (சராசரி)
(எ)	(1) காஞ்சீபுரம்	..	ரூ. 46,505
	(2) மேல்பாக்கம்	..	ரூ. 2,87,625

(ஐ) சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

(ஒ) தனி விடுதி அல்லது பணி மனையில் உள்ளவர்களுக்கு தனி விடுதியைப் பொறுத்தவரை அதிக அளவு 50 பேருக்கு உட்பட்டும், பணிமனையைப் பொறுத்தவரை 100 பேருக்கு உட்பட்டும், ஒவ்வொரு மாதமும் நபருக்கு ரூ. 10 என்று அரசாங்கம் சம்பந்தப்பட்ட ஸ்தல ஸ்தாபனங்களுக்கு உதவித் தொகை வழங்குகிறது.

Soda Ash, etc., to washermen

258 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் சலவைத் தொழிலாளர்கட்கு சோடா, நீலம் போன்றவைகளை எந்த முறையில் விநியோகிக்கப்படுகிறது ?

[a] Printed as Appendix VI on pages 517–518

28th July 1964]

(இ) இதற்கென அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் பெயர்கள் யாவை ? மாவட்டவாரியாக.

(உ) இதன்மூலம் பயன்பெறும் சலவைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை என்ன ?

பதில்.—(அ) 1962-ம் ஆண்டுக்கு முன்பாக சோடாக் காரமும், நீலமும் வாங்க சலவைத் தொழிலாளர் சங்கங்களுக்கு பர்மிட்டுகள் வழங்கப்பட்டு வந்தன. பின்னர் இப்பொருள்கள் மார்க்கெட்டில் சிரமமின்றி கிடைப்பதாகத் தெரிய வந்ததால், பர்மிட் வழங்கும் முறை கைவிடப்பட்டது.

(இ) & (உ) வினாவிற்கு இடமில்லை.

(*அ*) Prior to 1962 permits were being issued to associations of washermen for purchase of Soda Ash and Ultramarine Blue. Subsequently as it was reported that these materials were freely available in the open market, this practice has been discontinued.

(*இ*) & (*உ*) Do not arise.

Income from Industries

259 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-63-ல் தொழில் துறை மூலமாக (பொதுத் துறை தனித் துறை) தமிழ் நாட்டிற்குக் கிடைத்த மொத்த வருமானம் எவ்வளவு ?

(இ) அதில் (1) கனரகத் தொழில், (2) சிறு ரகத் தொழில், (3) குடிசைத் தொழில் மூலமாக கிடைத்த வருமானம் எவ்வளவு ?

(உ) 1963-64-ல் கனரக, குடிசைத் தொழில்கள் மூலமாக ஒவ்வொன்றிலும் எத்தனை பேர் வேலைவாய்ப்பைப் பெற்றனர் ?

A.—(*a*) Rs. 230 crores according to preliminary estimates.

(*b*) The break up of the income from Industries sector under organised industries and Small-scale Industries including Cottage Industries only is available and they are Rs. 116 crores and Rs. 114 crores respectively.

(*c*) The particulars for 1963-64 have not yet been compiled.

பதில்.—(அ) பூர்வாங்க மதிப்பீடுகளின்படி ரூ. 230 கோடி.

(இ) முறையான பெருந்தொழில்கள், குடிசைத்தொழில்களும் சிறு தொழில்களும் என்ற இரண்டு பாகுபாட்டின்படியே வருமான புள்ளி விவரங்கள் இப்போது கிடைத்திருக்கின்றன. அவை முறையே ரூ. 116 கோடி, ரூ. 114 கோடியாகும்.

(உ) 1963-64-ம் ஆண்டுக்குரிய விவரங்கள் இன்னும் எடுக்கப்படவில்லை.

[28th July 1964

Radios of Panchayats

260. கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வானொலிப் பெட்டிகளை பழுதுபார்க்கின்ற தற்போதைய முறையை மாற்றி பழைய மாதிரியே கிராமத்திற்கு சூப்ரவைசரை அனுப்பி பழுதுபார்க்கும் முறையைக் கொண்டுவருவாரா?

(இ) வானொலிப் பெட்டி பழுதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் ரூ. 20 கட்டணம் செலுத்தவேண்டும் என்ற உத்தரவை மாற்ற உத்தேசமுண்டா?

பதில்.—(அ) & (இ): இல்லை, ஐயா.

Yarn

261 Q.—SRI T. P. ALAGAMUTHU: Will the Hon. the Minister for Industries be pleased to state the total quantity of yarn produced in the State during 1963-64, count-wise.

A.—

Year.	Nf. 1-9.	Nf. 10-17.	Nf. 12-26.	Nf. 27-34.	Above Nf. 34.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1963	9,340	47,604	31,783	31,814	31,248	151,789
1964 January	921	4,129	2,586	2,945	2,793	13,374

(Particulars for the subsequent months of 1964 have not been received.)

Model foundries, Tool rooms etc.

262 கேள்வி.—திரு. மு. கருணாநிதி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிறுதொழில் துறையின்கீழ் தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் மாதிரி வார்ப்பட சாலைகள், கருவிப்பட்டறைகள் ஆகியவற்றை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது?

A.—Model foundries have been established at Guindy, Erode, Thanjavur, Katpadi and Pettai. Tool Rooms have been established at Guindy, Erode, Tiruchirappalli, Pettai and Virudhunagar. Schemes for the establishment of Tool Rooms at Madurai, Thanjavur, Coimbatore and Ambathur have also been sanctioned by the Government and are under implementation.

கிண்டி, ஈரோடு, தஞ்சாவூர், காட்பாடி, பேட்டை ஆகிய இடங்களில் மாதிரி வார்ப்படச் சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. கிண்டி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, பேட்டை, விருதுநகர் ஆகிய இடங்களில் கருவிப் பட்டறைகள் நிறுவப்பட்டுள்ளன. மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், அம்பத்தூர் ஆகிய இடங்களிலும் கருவிப்பட்டறைகளை நிறுவுவதற்கான திட்டங்கள் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

28th July 1964]

Fair price shops

263 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to place on the Table a statement showing the number of fair price shops in each district and state how long these shops would be continued.

A.—A statement showing the number of fair price shops allotted to each district in this State is given below. The Government of India have permitted this Government to continue the existing fair price shops up to the end of September 1964 for the present.

District.	Number of shops allotted.
(1)	(2)
Madras	100
Chingleput	110
North Arcot	20
South Arcot	11
Tiruchirappalli	15
Madurai	16
Ramanathapuram	73
Tirunelveli	69
Kanyakumari	16
Salem	30
Coimbatore	25
Nilgiris	70
Reserve	25
Shops for industrial workers	100
Total	700

Roads (Madras City)

264 கேள்வி.—திரு. மு. கருணாநிதி: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை மாநகராட்சியின் அதிகாரத்திற்குட்பட்ட எந்தெந்த சாலைகள் சென்னை மாநில நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்பட்டிருக்கின்றன?

A.—

A.—The following roads, lying within the city limits were transferred from the control of the Corporation of Madras to the Highways and Rural Works Department:—

	KM.
1 Mount Road	12·070
2 Poonamalle High Road	8·852
3 The Great Northern Trunk Road	7·443
4 The New Avadi Road from the Kilpauk Corporation Water Works to the City limit	3·057
5 The Madras-Ennore Road from the Customs House to the City Limit.	6·421

[28th July 1964

கீழ்க்கண்ட நெடுஞ்சாலைகளின் நகர எல்லைக்குட்பட்ட பகுதிகள் சென்னை மாநகராட்சியின் அதிகாரத்திலிருந்து, சென்னை மாநில பொதுவழி கிராம பணிகள் துறைக்கு மாற்றப்பட்டுள்ளன.

	கிலோமீட்டர்
1. மவுண்ட் ரோடு	12,070
2. பூந்தமல்லி நெடுஞ்சாலை	8,852
3. சென்னை-கல்கத்தா நெடுஞ்சாலை (கிரேட் நார்தர்ன் டிரங்க் ரோடு)	7,443
4. புது ஆவடி சாலை	3,057
5. சென்னை-எண்ணூர் சாலை	6,421

Elementary Schools at Tiruchirappalli

265 கேள்வி—திரு. சா. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் உடையார்பாளையம் வட்டத்தில் 1961-62-ல் எந்தெந்த ஊர்களில் புதிதாக துவக்கப் பள்ளிகள் துவக்கப்பட்டன ?

(இ) அதில் எத்தனை பள்ளிகள் தற்பொழுது நடந்து வருகின்றன ?

(உ) அவைகளில் கல்வி இலாகாவில் அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் எத்தனை ?

A.—(*a*) *to* (*c*) A statement[a] is placed on the table of the House.

(அ) (உ) சபையில் ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

Communal clash in Madras City

266 *Q.*—SRI T. P. ALAGAMUTHU : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that there was a clash in the City of Madras between members of a minority community and the Jan Sangh organisation on 27—4—1964.

(*b*) if so, how many were injured; and

(*c*) what steps have been taken to prevent such occurrences ?

A.—(*a*) *and* (*b*) No. However, a clash occurred on 26th April 1964 between some Muslims and the volunteers of the Barathiya Jan Sangh at Pulianthope in Madras City, as a result of which 10 Muslims, 4 Hindus and 5 Police personnel sustained injuries.

(*c*) Necessary instructions have been issued to all Police Officers to maintain a strict watch in areas where there are minorities and where there is likelihood of any tension.

(அ) & (இ) இல்லை. ஆயினும், 26—4—1964-ல் சென்னை புளியந்தோப்பில் பாரதீய ஜன சங்கத் தொண்டர்களுக்கும் சில முஸ்லீம்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதன் விளைவாக 10 முஸ்லீம்கள், 4 ஹிந்துக்கள், போலீஸ் படையினரைச் சேர்ந்த ஐந்து நபர்கள் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது.

[a] Printed as Appendix VII on pages 519–520

28th July 1964]

(உ) சிறுபான்மை வகுப்பினர் வாழுமிடங்களிலும், கொந்தளிப்பு ஏற்படக்கூடிய இடங்களிலும் மிக விழிப்புடன் இருக்குமாறு போலீஸ் அதிகாரிகள் அனைவருக்கும் அவசியமான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—CALLING ATTENTION TO NON-AVAILABILITY OF TEACHERS IN FORMER DISTRICT BOARD HIGH SCHOOLS IN NORTH ARCOT DISTRICT.

புலவர் கா. கோவிந்தன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் மாவட்டக் கழகத்தின் பொறுப்பிலிருந்து அரசாங்கம் மேற்கொண்ட உயர்நிலைப்பள்ளிகளில் உயர் வகுப்புகளில் பாடம் கற்பிக்க ஆசிரியர்கள் (பயிற்சி பெற்ற அல்லது பயிற்சி பெறாத) கிடைக்கப் பெறாமை பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I wish to make the following statement.

At the beginning of the current year (1964-65) there are 130 posts of B.T. Assistants vacant in the North Arcot district. The vacant posts are 48 posts of B.T. Mathematics Assistants, 55 posts of B.T. Science Assistants and 27 posts of B.T. Assistants for Social Studies. A few vacancies have occurred on account of opening of additional new standards and additional sections in the higher standards. Additional sections have to be opened this year on account of the rush of admissions in the IX standard due to the wholesale promotion of VIII standard pupils of the Higher Elementary Schools in the district and on account of the abolition of E.S.L.C. Examination conducted hitherto. The vacancies pointed out were however filled up by posting the qualified B.Ts., failed B.Ts. and Graduates from the list of candidates recommended by the District Employment Officer, Vellore. Out of 130 vacancies, 101 have so far been filled up. The remaining vacancies yet to be filled up is 29. This is due to the fact that some of the candidates who were posted, did not join duty for some reason or other. There is already dearth of qualified Mathematics and Science B.T. candidates and the vacancies could not be filled up then and there. Steps are also being taken to post the candidates nearer to their native places. The District Employment Officer, Vellore and other District Employment Officers have also been addressed to recommend as many candidates as possible, to fill up the few vacancies pointed above. These vacancies will be filled up as soon as the candidates are sent by the Employment Exchange. It may also be mentioned in this connection that untrained graduates were also deputed for B.T. Training and with completion of such training, it is hoped that the deficiency of teachers will be overcome shortly.

III. GOVERNMENT BILLS.

THE MADRAS CITY TENANTS' PROTECTION (AMENDMENT) BILL, 1964 (L.A. BILL NO. 25 OF 1964).

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

"That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 25 of 1964)[a] be taken into consideration."

The Madras City Tenants' Protection Act, 1921 (Madras Act III of 1922) was enacted with the main object of protecting the tenants from eviction from any building (residential or non-residential) which they have constructed on lands belonging to others in the City of Madras. In 1955 the Act was amended to empower the Government to extend the Act to the other municipal towns and also any specified village within five miles of the City or of the municipal towns. The Act was accordingly extended to several municipal towns in the State. The position then was that the Act applied to residential as well as non-residental buildings in the municipal towns where the Act was in force. In 1960 the Act was further amended to restrict its application to non-residential and residential buildings in the City of Madras and in the municipal towns of Coimbatore, Madurai, Salem and Tiruchirappalli and to residential buildings only in any other area.

Representations have been received by the Government for the extension of the benefits of the Act to non-residential buildings in certain other municipal towns also. The Government have carefully examined the above representations. They consider that in the context of growth of trade and industry involving new enterprise and business ventures, a protection similar to the one available in respect of residential buildings should be available also in respect of non-residential buildings in certain municipal towns. They have accordingly decided further to amend the definition of buildings in clause (1) of section 2 of the Act so that upon the issue of a notification specifying the municipal town or village, the provisions of the Act would apply to non-residential buildings also situated in the municipal town or village so specified. Necessary provision in this regard is proposed in clause 2. When the provisions of the Act are thus made applicable to non-residential buildings also in specified municipal towns, the protection afforded by the Act would ensure to the tenants of such buildings. In other words, the tenants would not become liable to eviction from their non-residential buildings under the general law. There may be proceedings for eviction of the tenants pending before Courts at the time of issuing the notification referred to above. Those proceedings should not be allowed to be continued but should abate so that the tenants get the protection afforded by the Act. Necessary provision in this regard is proposed in clause 3.

I request the House, Sir, that the motion be accepted.

MR. DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 25 of 1964) be taken into consideration."

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 22nd July 1964.

திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நகர வாடகை குடியிருப்பவர்கள் திருத்த மசோதாவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். நகர்ப் புறங்களிலுள்ள மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னால், 1960-ல் நல்ல முறையில் இதைத் திருத்தி அமைத்தோம். அப்பொழுது எந்தெந்த முனிசிபாலிடிகளை ஒட்டி 5 மைலில் இருக்கிற கிராமங்களுக்கும் விஸ்தரிக்கலாம் என்பதை அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு விட்டிருக்கிறோம். அவர்கள் நோடிபை செய்து, இந்தச் சட்டம் விஸ்தரிக்கப் பட வேண்டும் என்று சொன்னால்தான், இந்தச் சலுகைகளை மற்ற முனிசிபாலிடிகளுக்கும், முனிசிபல் எல்லைக்கு 5 மைல்களுக்குள்ளே இருக்கும் கிராமப் புறங்களுக்கும் விஸ்தரிக்கலாம். அரசாங்கம் அந்த அதிகாரத்தைத் தன் கையில் வைத்திருப்பது வரவேற்கத் தக்கது. இருப்பினும் கூட சில நகரப் புறங்களில் உள்ள மக்கள் பல தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். எப்பொழுதோ எடுத்த காலி நிலத்தில் சொந்தப் பணம் போட்டு தொழில்களை ஆரம்பித்து, பின்னால் காலி பண்ண வேண்டுமென்று சொன்னால், பல கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள் என்ற காரணத்திற்காக இந்தப் பாதுகாப்புக் கொடுக்க முன்வந்தோம். மற்றொரு முறையிலும் இதைத் தீய வழியில் பயன்படுத்துகிறார்கள். காலி இடம் கொடுத்தால், அதிகப் பரப்புள்ள நிலத்தை சொந்தக்காரர்களே வைத்துக்கொண்டு, ஏதோ ஒரு மூலையில் தொழிலை நடத்திக் கொண்டிருக்கும் குடியிருப்புக்காரரிடமிருந்து முழு வாடகையையும் வாங்கிக் கொள்ளுகிறார்கள். இந்தச் சட்டத்தை புதுப்பித்தபடி, எந்த அளவுக்கு அவர்கள் பயன் படுத்துகிறார்களோ, அந்த அளவுக்குத்தான் வாடகை வாங்க உரிமை உண்டு. மற்ற இடத்தை காலி நிலத்தின் சொந்தக்காரர் கேட்டால் விட்டு விட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஆக இரண்டு வகையிலே பார்த்தாலும், இன்னும் பல நன்மைகளைச் செய்வது நல்லது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் சில இடங்களிலே நகர சபைத் தலைவரோ, அல்லது தலைவர் இல்லாவிட்டால் செல்வாக்குப் படைத்த அங்கத்தினரோ இருந்தால், அவரிடத்தில் யாராவது இப்படிக் கேட்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வராமலேயே மறைத்து விடக்கூடிய நிலை ஏற்படுகிறது. இந்த அதிகாரத்தை அரசாங்கத்துக்குக் கொடுத்திருப்பதினால், அவர்கள் தீர்மானம் போட்டு அது வந்த பிறகுதான் இந்த சட்டத்தை குறிப்பிட்ட முனிசிபாலிட்டிகளுக்கு விஸ்தரிக்கலாம். இப்படி பல இடங்களில் பல கஷ்டங்களுக்கு மக்கள் உள்ளாகிறார்கள். ஆகவே இந்த விஸ்தரிக்கும் பொறுப்பை அரசாங்கத்தின் கையில் வைத்துக் கொள்ளாமல் முதல் தர முனிசிபாலிடிகளுக்கெல்லாம் இந்த சட்டம் விஸ்தரிக்கப் படும் என்று போடுவது வரவேற்கத் தக்கது. எல்லா முனிசிபாலிடிகளிலும் இந்தக் குறைகள் இருக்கின்றன. விஸ்தரிக்கப்பட்ட நகரங்களில் எல்லாம் இந்தத் தொல்லைகள் இருக்கின்றன. அரசாங்கமே நோட்டிபை செய்து கொடுக்க வேண்டும் என்றால் அவர்கள் இதை எடுத்து பரிசீலித்து நோட்டிபை செய்வதற்குள்ளே எத்தனையோ ஆண்டுகள் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே பலருடைய கஷ்டங்களை போக்க வேண்டுமானால் இந்தச்

[திருமதி டி. என். அனந்தநாயகி] [28th July 1964.

சட்டம் எல்லாம் முதல் தர முனிசிபாலிட்டிகளுக்கும் அமுல் நடத்தப்படும் என்று போட்டு விடுவது நலமாக இருக்கும்.

அதே போன்று ஐந்து மைல் சுற்றளவுக்கு விஸ்தரிக்கலாம் என்று போட்டிருக்கிறோம். நகர்ப்புறத்தைச் சார்ந்து ஐந்து மைல்களுக்குள்ள கிராமங்களுக்கு விஸ்தரித்து வருகிறோம். சென்னை நகரை எடுத்துக் கொண்டால் சிடி லிமிட் 20 மைல் தூரத்திற்கு மேல் போய் விட்டது. பல முனிசிபாலிடிகளை எடுத்துக் கொண்டாலும் குறைந்தது 10 மைல் சுற்றளவுக்கு இந்த வாடை வீசத் தொடங்கி விட்டது. ஆகவே 5 மைல் சுற்றளவு என்று வைத்திருப்பதைக் காட்டிலும் இன்னும் சில மைல்களுக்கு விஸ்தரிக்கலாமா என்று யோசித்துப் பார்ப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். இந்த திருத்த மசோதாவை மற்ற முனிசிபாலிடிகளுக்கு விஸ்தரிக்கும் போது ரெஸிடென்ஷியல் பில்டிங்களுக்கு மட்டும் அல்லாமல், வியாபாரத் துறையில் இருக்கும் நான்-ரெஸிடென்ஷியல் பில்டிங்களுக்கும் விஸ்தரிப்பது வரவேற்கத்தக்கது. ஏன் என்றால் வியாபாரத்திற்குக் குடியிருப்பு பாதுகாப்புக் கொடுப்பது மிக மிக அவசியம். ஒரு இடத்தில் வியாபாரம் செய்து கொண்டு பிழைப்பவர் அந்த இடத்தை விட்டு வெளியேற்றப்பட்டால் அவர் வியாபாரம் சீர்குலைந்து போய் குடும்பமே அழிந்து விடும். ஆகவே, நான்-ரெசிடென்ஷியல் பில்டிங்களுக்கும் இதை விஸ்தரிப்பது வரவேற்கத் தக்கது. அதே சமயத்தில் 5 மைலுக்குப் பதிலாக 10 மைல் சுற்றளவுக்கு விஸ்தரிக்க முடியுமோ என்பதையும் பரிசீலிக்க வேண்டும். நாமே நோட்டிபை செய்து விஸ்தரிப்பதைக் காட்டிலும் எல்லா ஏ-கிளாஸ் முனிசிபாலிடிகளுக்கும் இதை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து மனை வாடகையைப் பொறுத்தவரையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை ஒரு ரூபாய்க்கு 4 அணா உயர்த்தலாம் என்று பழைய சட்டத்திலே இருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் காலி நிலங்களை வைத்திருப்பவர்கள் வசதியாக இருக்கிறார்கள். சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால் பல தேவாலயங்களுக்குச் சொந்தமான இடங்களிலே பல ஊர்கள் விஸ்தரிக்கப்பட்டு உள்ளன. அந்த இடத்திற்குக் கிடைக்கும் வாடகை மிகக் குறைவாக இருப்பதனால், அந்த அற நிலையங்களை நடத்துவது கஷ்டமாக இருக்கிறது. இந்த சட்டத்தின்படி 4 அணாதான் ஏற்றலாம் என்று சொன்னால் அது உகந்ததாக இல்லை. காலி இடங்களுக்கு உள்ள வாடகையைச் சற்று அதிகமாக உயர்த்துவதற்கு அதிகாரம் கொடுத்தால் நலமாக இருக்கும். ஆகவே இந்த அற நிலையங்களின் வருமானத்தை ஓர் அளவு பெருகக்கூடிய வகையில் இன்னும் ஓர் அளவு இந்த வாடகையை உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். இதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த மசோதாவின் கீழ் கேஸ்கள் போடப்பட்டு இருந்தால் அவைகள்

28th July 1964] [திருமதி டி. என். அனந்தநாயகி]

மேல் நடத்தப்பட மாட்டாது என்று சொல்லியிருப்பது வரவேற்கத் தக்கது. பலவித தொல்லைகளுக்கு உள்ளானவர்களுக்கு இந்தச் சட்டம் விடுதலையாக இருக்கும். இந்தத் திருத்த மசோதாவை இவ்வளவு துரிதமாகக் கொண்டு வந்ததற்கு சர்க்காருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் சென்னை மாநில வாடகை குடியிருப்பு பாதுகாப்பு மசோதாவை நான் வரவேற்பதற்காக இந்த மன்றத்தின் முன்பு இப்பொழுது எழுந்து நிற்கிறேன்.

இந்த சென்னை மாநகர குடியிருப்போர் பாதுகாப்பு மசோதா ஏற்கனவே உள்ள நகரங்களோடு மற்ற நகரங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்பதற்காக கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்று அமைச்சர் சொன்னார்கள். இது 55-ல் தொடங்கி 60-ல் மறுபடியும் திருத்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும் சொன்னார்கள். இந்த மசோதாவை நல்லவகையிலே அமுல் நடத்த வேண்டும் என்று கொண்டு வந்த போதிலும் பல கட்டங்களில் ஆலோசித்துப் பார்த்தால் இன்னும் பரிபூரணமாக திருத்த வேண்டிய பல அம்சங்கள் இருக்கின்றன என்பது தெரியவரும். இதை ஒரு வாய்ப்பாக எண்ணி பின்னால் நல்ல முறையில் இதை பூரணமாக திருத்தி அமைக்க வேண்டும் என்று சொல்லக்கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த சட்டத்தின் பூர்வீகத்தை எடுத்துப் பார்த்தால் 21-ம் ஆண்டிலேயே இரண்டு மூன்று தெருக்களில் இருந்து மக்களை அப்புறப்படுத்தக் கூடிய நிலைமையில் இருந்து அவர்களை பாதுகாக்க முதலிலே சட்டமன்றத்திலே இந்த சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்பொழுது டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர் போன்றவர்கள் இதைத் தாற்காலிக பரிகாரமாகக் கொண்டு வந்தபோதிலும் சமுதாயம் முன்னேற்றம் அடைந்து வளர்ச்சி பெறும் நேரத்திலே இம்மாதிரி பலருக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காக நல்ல பல மசோதாக்கள் வரவேண்டி இருக்கும் என்று அன்றைக்கே சொன்னார்கள். 1960-ல் கனம் மாணிக்கவேலு நாயக்கர் அவர்கள் அமைச்சராக இருந்தபோது இந்த பாதுகாப்புச் சட்டம் மீண்டும் திருத்தி நிறைவேற்றப்பட்டது. அப்பொழுது அவர்கள் சொன்னார்கள் இது ஒரு பர்மனென்ட் சட்டம் அல்ல, இதில் பல காரியங்கள் செய்ய வேண்டி வரும் என்று எடுத்துக் காட்டினார்கள். அந்த சட்டத்திற்குப் பிறகும் பல சிக்கல்கள் கஷ்டங்கள் இருதரப்பினருக்கும் ஏற்பட்டு இருக்கின்றன. இன்றைக்கு சென்னையில் பார்த்தால் காலி மனையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அங்கே விறகுத் தொட்டியை கட்டியும், பட்டறை வைத்தும் அப்படிப்பல வகையில் வியாபாரத்தின் பொருட்டு பல காரியங்களில் மக்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள். இன்றைக்கு நிலத்தின் விலை ஏறியதன் காரணமாக அவர்கள் வெளியேற்றப்படும் நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அது சம்பந்தப்பட்ட நூற்றுக் கணக்

[Sri Chiranjeevulu Naidu] [28th July 1964

the landlord and also to get some benefits. In such cases, the Government should make some provisions in the amending Bill to the effect that the officer should give his discretion properly. Otherwise, it would affect the people, who are solely depending on particular land. With these words, I conclude my speech, Sir.

11 a.m. *திரு. ஆ. கு. சுப்பையா: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நகரசபைகளில் இருக்கக்கூடிய வீடுகளுக்கும், தொழில்களுக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒரு சட்டத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். நகரசபைகளில் உள்ளவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. கிராமப் புறங்களில் உள்ள விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் குடியிருப்பு பாதுகாப்பு கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் நூற்றுக்கணக்கான நகரப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. நகரப் பஞ்சாயத்துக்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. நகரங்களில் சிறு தொழில்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி தொழில் செய்பவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் முறையில் இச்சட்டத்தை மேஜர் பஞ்சாயத்துக்களுக்கும் விஸ்தரிப்பது உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, தஞ்சையில் நான்கு நகரசபைகள்தான் இருக்கின்றன. மற்ற நகரங்களை எடுத்துக் கொண்டால் மேஜர் பஞ்சாயத்துக்களாக இருக்கின்றன. திருத்துறைப்பூண்டியில் மட்டும் அல்லாது வேதாரண்யம் இம்மாதிரி நகரங்களை எடுத்துக் கொண்டால் மேஜர் பஞ்சாயத்துக்களாக இருக்கின்றன. அங்கு கோவில்களுக்கு சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. அங்கு குடியிருப்பவர்களுக்கு எந்தவிதமான சொந்தமும் பாத்தியதையும் கிடையாது. அவர்கள் குத்தகை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கோவிலார்கள் அவர்களுக்கு தேவையில்லாதபோது குடியிருப்பவர்களை குடியிருப்பில் இருந்து வெளியேற்றும் பரிதாபகரமான நிலை திருத்துறைப்பூண்டி போன்ற இடங்களில் இருக்கின்றன. அதேபோல் தொழிலையும் அபிவிருத்தி செய்ய முடியாத நிலையும் இருக்கிறது. ஆகவே தொழில் செய்து கொண்டிருப்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் முறையில் திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், தலநாயர், முத்துப்பேட்டை, வேளாங்கண்ணி, நீடாமங்கலம், அதிராம்பட்டணம் போன்ற மேஜர் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அங்கிருக்கக்கூடிய குடிகளுக்கும் குடியிருப்பு பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்வதால் பெரிய நகரங்களில் உள்ளவர்களுக்கும், கிராமங்களில் உள்ள விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் எல்லோருக்கும் நிரந்தர பாதுகாப்பு அளிக்கும் நிலை ஏற்படும். ஆகவே, மேஜர் பஞ்சாயத்துக்களுக்கும் இந்தச் சட்டத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

28th July 1964]

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்ட அங்கத்தினர்கள் பொதுவாக இந்த மசோதாவிற்கு வரவேற்பு சொன்னார்கள். திரு. சிரஞ்சீவுலு நாயுடு அவர்களைத் தவிர அவர்களுக்கு இந்த மசோதாவைப் படித்துப் பார்க்கும்போது சிறிது சந்தேகம். அவர்களுடைய ஆட்சேபணை பூராவும் இப்போது வந்திருக்கக்கூடிய திருத்த மசோதாவிற்கு மட்டுமல்ல. அசல் மசோதாவிற்கே அவர்களுடைய எதிர்ப்பு, சந்தேகங்கள் எல்லாம். அது இப்போது பரிசீலனையில் இல்லை. இப்போது நாம் விஸ்தரிக்கிறோமே, மற்ற நகரங்களுக்கு குடியிருப்பிற்கு மட்டும் அல்லாமல் தொழில் அல்லது வர்த்தகம் சம்பந்தப்பட்டிருக்கக் கூடிய நிலங்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். அவர் சந்தேகமே, அசல் சட்டமே எங்கே நிலச்சொந்தக்காரர்களுக்கு ஒன்றுமே இல்லாது செய்துவிடுமோ என்ற அச்சம். அதற்குப் பதில் சொல்லும் முறையில் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள், இது கான்பிஸ்கேட் செய்யும் சட்டமல்ல, அவர்களுக்கும் பாதுகாப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். மற்ற அங்கத்தினர்கள் அசல் சட்டத்தை நல்ல முறையில் அமல் செய்வது பற்றியும், அதில் மாறுதல்கள் செய்யவேண்டியது பற்றியும் சொன்னார்கள். திரு. கலியாணசுந்தரம் அவர்கள் இந்த மூலச் சட்டத்தையே அமுல் நடத்துவதில் உள்ள குறைபாடுகள்பற்றி சொன்னார்கள். அமுல் நடத்துவதில் குறைபாடுகள் ஏதாவது இருந்தால் அதை அரசாங்கம் கவனித்து செம்மையாக அமுல் நடத்த என்னென்ன முயற்சிகள், நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவற்றை அரசாங்கம் எடுக்க ஒருபோதும் தயங்காது. அதேபோல் ஒரு அங்கத்தினர் மட்டுமல்ல, இந்த சபையில் உள்ள அத்தனை அங்கத்தினர்களும், பொது மக்களும் இந்தச் சட்டத்தை அமல் நடத்துவதில் உள்ள கஷ்டங்கள், சிரமங்கள் ஏதாவது இருப்பின் அவைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க முடியும். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இதன் சரித்திரத்தைப்பற்றி நான் ஆரம்பத்தில் முகவுரையிலேயே சொல்லியிருக்கிறேன். தொழில் வளர்ச்சி அதிகமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் நகர எல்லையில் இருக்கக் கூடிய அதுபோல் மற்றவர்கள் நிலத்தில் கட்டடங்கள் கட்டி தொழில் நடத்துபவர்களுக்கு உள்ள சங்கடங்களை போக்கும் முறையில் எந்தெந்த நகர எல்லைக்கு தேவையோ அங்கு விஸ்தரிக்கும் அதிகாரத்தை எடுத்துக் கொள்கிறோம். இப்போதுள்ள சட்ட அடிப்படையில் சென்னை நகரம், கோவை, திருச்சி, மதுரை, சேலம் இதுபோன்ற நாலைந்து இடங்களுக்கு மட்டும்தான் இச்சட்டம் அமுலில் இருக்கிறது. இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய சட்ட அடிப்படையில் தொழில் வளர்ச்சிக்கு தேவையான மற்ற நகர எல்லைக்கு விஸ்தரிக்க அதிகாரம் கேட்கப்படுகிறது. அதைக் கொடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் அங்கத்தினர்கள் தெரிவிக்கவில்லை என்பது குறித்து சந்தோஷம். திரு. செல்வராஜ் அவர்கள் பேசியதோடு அல்லாமல் ஒரு திருத்தம் கூட கொடுத்திருக்கிறார்கள்; சப்-டெனன்ட்ஸ்க்கு ப்ரொட்டக்ஷன்

[Sri Chiranjeevulu Naidu] [28th July 1964

the landlord and also to get some benefits. In such cases, the Government should make some provisions in the amending Bill to the effect that the officer should give his discretion properly. Otherwise, it would affect the people, who are solely depending on particular land. With these words, I conclude my speech, Sir.

11. a.m. *திரு. ஆ. கு. சுப்பையா: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நகரசபைகளில் இருக்கக்கூடிய வீடுகளுக்கும், தொழில்களுக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒரு சட்டத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். நகரசபைகளில் உள்ளவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. கிராமப் புறங்களில் உள்ள விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் குடியிருப்பு பாதுகாப்பு கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் நூற்றுக்கணக்கான நகரப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. நகரப் பஞ்சாயத்துக்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. நகரங்களில் சிறு தொழில்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி தொழில் செய்பவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் முறையில் இச்சட்டத்தை மேஜர் பஞ்சாயத்துக்களுக்கும் விஸ்தரிப்பது உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, தஞ்சையில் நான்கு நகரசபைகள்தான் இருக்கின்றன. மற்ற நகரங்களை எடுத்துக் கொண்டால் மேஜர் பஞ்சாயத்துக்களாக இருக்கின்றன. திருத்துறைப்பூண்டியில் மட்டும் அல்லாது வேதாரண்யம் இம்மாதிரி நகரங்களை எடுத்துக் கொண்டால் மேஜர் பஞ்சாயத்துக்களாக இருக்கின்றன. அங்கு கோவில்களுக்கு சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. அங்கு குடியிருப்பவர்களுக்கு எந்தவிதமான சொந்தமும் பாத்தியதையும் கிடையாது. அவர்கள் குத்தகை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கோவிலார்கள் அவர்களுக்கு தேவையில்லாதபோது குடியிருப்பவர்களை குடியிருப்பில் இருந்து வெளியேற்றும் பரிதாபகரமான நிலை திருத்துறைப்பூண்டி போன்ற இடங்களில் இருக்கின்றன. அதேபோல் தொழிலையும் அபிவிருத்தி செய்ய முடியாத நிலையும் இருக்கிறது. ஆகவே தொழில் செய்து கொண்டிருப்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் முறையில் திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், தலநாயர், முத்துப்பேட்டை, வேளாங்கண்ணி, நீடாமங்கலம், அதிராம்பட்டணம் போன்ற மேஜர் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அங்கிருக்கக்கூடிய குடிகளுக்கும் குடியிருப்பு பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்வதால் பெரிய நகரங்களில் உள்ளவர்களுக்கும், கிராமங்களில் உள்ள விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் எல்லோருக்கும் நிரந்தர பாதுகாப்பு அளிக்கும் நிலை ஏற்படும். ஆகவே, மேஜர் பஞ்சாயத்துக்களுக்கும் இந்தச் சட்டத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

28th July 1964]

கனம் திரு. வெ. ராமையா: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்ட அங்கத்தினர்கள் பொதுவாக இந்த மசோதாவிற்கு வரவேற்பு சொன்னார்கள். திரு. சிரஞ்சீவுலு நாயுடு அவர்களைத் தவிர அவர்களுக்கு இந்த மசோதாவைப் படித்துப் பார்க்கும்போது சிறிது சந்தேகம். அவர்களுடைய ஆட்சேபணை பூராவும் இப்போது வந்திருக்கக்கூடிய திருத்த மசோதாவிற்கு மட்டுமல்ல. அசல் மசோதாவிற்கே அவர்களுடைய எதிர்ப்பு, சந்தேகங்கள் எல்லாம். அது இப்போது பரிசீலனையில் இல்லை. இப்போது நாம் விஸ்தரிக்கிறோமே, மற்ற நகரங்களுக்கு குடியிருப்பிற்கு மட்டும் அல்லாமல் தொழில் அல்லது வர்த்தகம் சம்பந்தப்பட்டிருக்கக் கூடிய நிலங்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். அவர் சந்தேகமே, அசல் சட்டமே எங்கே நிலச்சொந்தக்காரர்களுக்கு ஒன்றுமே இல்லாது செய்துவிடுமோ என்ற அச்சம். அதற்குப் பதில் சொல்லும் முறையில் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள், இது கான்பிஸ்கேட் செய்யும் சட்டமல்ல, அவர்களுக்கும் பாதுகாப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். மற்ற அங்கத்தினர்கள் அசல் சட்டத்தை நல்ல முறையில் அமல் செய்வது பற்றியும், அதில் மாறுதல்கள் செய்யவேண்டியது பற்றியும் சொன்னார்கள். திரு. கலியாணசுந்தரம் அவர்கள் இந்த மூலச் சட்டத்தையே அமுல் நடத்துவதில் உள்ள குறைபாடுகள்பற்றி சொன்னார்கள். அமுல் நடத்துவதில் குறைபாடுகள் ஏதாவது இருந்தால் அதை அரசாங்கம் கவனித்து செம்மையாக அமுல் நடத்த என்னென்ன முயற்சிகள், நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவற்றை அரசாங்கம் எடுக்க ஒருபோதும் தயங்காது. அதேபோல் ஒரு அங்கத்தினர் மட்டுமல்ல, இந்த சபையில் உள்ள அத்தனை அங்கத்தினர்களும், பொது மக்களும் இந்தச் சட்டத்தை அமல் நடத்துவதில் உள்ள கஷ்டங்கள், சிரமங்கள் ஏதாவது இருப்பின் அவைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க முடியும். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இதன் சரித்திரத்தைப்பற்றி நான் ஆரம்பத்தில் முகவுரையிலேயே சொல்லியிருக்கிறேன். தொழில் வளர்ச்சி அதிகமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் நகர எல்லையில் இருக்கக் கூடிய அதுபோல் மற்றவர்கள் நிலத்தில் கட்டடங்கள் கட்டி தொழில் நடத்துபவர்களுக்கு உள்ள சங்கடங்களை போக்கும் முறையில் எந்தெந்த நகர எல்லைக்கு தேவையோ அங்கு விஸ்தரிக்கும் அதிகாரத்தை எடுத்துக் கொள்கிறோம். இப்போதுள்ள சட்ட அடிப்படையில் சென்னை நகரம், கோவை, திருச்சி, மதுரை, சேலம் இதுபோன்ற நாலைந்து இடங்களுக்கு மட்டும்தான் இச்சட்டம் அமுலில் இருக்கிறது. இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய சட்ட அடிப்படையில் தொழில் வளர்ச்சிக்கு தேவையான மற்ற நகர எல்லைக்கு விஸ்தரிக்க அதிகாரம் கேட்கப்படுகிறது. அதைக் கொடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் அங்கத்தினர்கள் தெரிவிக்கவில்லை என்பது குறித்து சந்தோஷம். திரு. செல்வராஜ் அவர்கள் பேசியதோடு அல்லாமல் ஒரு திருத்தம் கூட கொடுத்திருக்கிறார்கள்; சப்-டெனன்ட்ஸ்க்கு ப்ரொட்டக்ஷன்

[திரு. வெ. ராமையா] [28th July 1964

கொடுக்கவேண்டுமென்று. அது இப்போதுள்ள சட்டத்திற்கு முரண்பாடாக இருக்கிறது. சப்-டெனன்ட்ஸ்க்கு, இந்தச் சட்டத்தில் மட்டுமல்ல, வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தை இந்த ஏடை பரிசீலனை செய்யும்போது சப்-டெனன்ட்ஸ்-ஐ ரெக்கக்னைஸ் செய்தால் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி திரு. கல்யாண சுந்தரம் அவர்கள் சொன்னார்கள்; இருந்தாலும் சிக்கல்கள் இருக்கின்றன. அதையெல்லாம் பூர்வாங்கமாக அவசியம் செய்தாக வேண்டும். கனம் செல்வராஜன் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தம் இந்தச் சட்டத்திற்கு புறம்பானதாக இருக்கிறது. ஆகவே அதை இப்போது வற்புறுத்த மாட்டார்கள் என்று நம்புகிறேன். மேலும் இதில் என்னென்ன மாற்றங்கள் செய்யவேண்டும், என்னென்ன திருத்தம் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கலாம். நான்கு வருஷத்திற்கு முன்பே இயற்றப்பட்ட சட்டம் என்று, கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் சொல்லுகிறார்கள், மீண்டும் நாம் திருத்தம் கொண்டு வந்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், அது எதைக் காட்டுகிறது, அரசாங்கம் இதைப்பற்றி தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது. சில நேரங்களில் அவசரமாகவும் போக வேண்டியிருக்கிறது, சில நேரங்களில் நிதானமாகப் போக வேண்டியிருக்கிறது. இப்போது இவ்வளவு வேகமாக கொண்டு வந்ததற்கு அரசாங்கத்திற்கு நன்றி என்று சொன்னார்கள். இப்படி சில சட்டங்களை நாம் அவசரமாக கொண்டு வரவேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது. நடைமுறையில் கொண்டுவரும்போது என்னென்ன கஷ்டங்களை தருகிறது என்பதைப் பார்த்து, அதற்கு தகுந்தவாறு திருத்தங்களை கொண்டு வருவதற்கு அரசாங்கம் எப்போதும் தயங்காது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். கடைசியாக, இந்த விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள், பொதுவாக இந்த மசோதாவை வரவேற்றதற்காக என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் திரு. மதியழகன், திரு. ஏ. கே. சுப்பையா இவர்கள் பேசிய கருத்துக்களை எல்லாம் மனதில் கொண்டு அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 25 of 1964) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 2 do stand part of the Bill.'

28th July 1964]

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

'In clause 2, in the proposed clause (1) of section 2 of the principal Act—

(a) in item (i), for the portion commencing with the words "in the municipal towns of Coimbatore" and ending with the word "aforesaid" *substitute* the following, namely :—

"in the municipal towns of Coimbatore, Madurai, Salem or Tiruchirappalli, or such other municipal town as the Government may, by notification, specify, and in any village within five miles of the City of Madras or of the municipal towns or town aforesaid" ;

(b) omit item (iii).'

MR. DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், ஒரு விளக்கத்தை மட்டும் கேட்டுக்கொள்கிறேன். அதாவது இப்போது அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற திருத்தத்தில் in the municipal towns of Coimbatore, Madurai, Salem or Tiruchirappalli or such other municipal town என்றிருக்கிறது. பொதுவாக எல்லா முனிசிபாலிட்டிகளையும் தேவைப்படுகிற பொழுது நோட்டிஃபை செய்து கொள்ளக்கூடிய உரிமையை, அதிகாரத்தை அரசாங்கம் இதன் மூலம் எடுத்துக் கொள்கிறது. இப்போது ஏற்கெனவே இருக்கின்ற நான்கு முனிசிபாலிட்டிகளுக்கும் அதோடு அரசாங்கம் விரும்புகிற எந்த முனிசிபாலிட்டிகளுக்கும் வேண்டுமென்றால் இதை நீட்டித்து, நோட்டிஃபை செய்கின்ற அதிகாரத்தை எடுத்துக் கொள்ளலாம் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அப்படியிருக்கும்போது இந்தத் திருத்தத்தில் "or" என்று போட்டிருப்பதை "and" என்று போட்டிருந்தால் சரியாக இருக்கும், இல்லையென்றால் மறுபடியும் திருத்தம் கொண்டுவரக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே இப்போ திருப்பதில் . . . .

"in the municipal town of Coimbatore, Madurai, Salem and Tiruchirappalli or such other municipal town."

என்று போட்டால் சரியாக இருக்கும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, first of all, I support the point raised by the hon. Member, Sri Kalyanasundaram. I think it is a typographical error. It must be "and" and not "or".

[Srimathi T. N. Anandanayaki] [28th July 1964

Apart from that, I would like to state that the Madras City Tenants Protection Act was brought forward to protect the interests of the tenants in the City of Madras from eviction. According to sub-section (2) of section 1 of the Act, as amended by the Madras City Tenants' Protection (Amendment) Act, 1955, the State Government may by notification in the *Fort St. George Gazette* extend the Act to any other municipal town and any specified village within five miles of the City of Madras or of such municipal town with effect from such date as may be specified in the notification. So, this Act can be extended only to such municipal town and villages within five miles from the municipal town as notified by the Government. Then, the Act was further amended to extend the provisions of the principal Act to residential and non-residential buildings in the City of Madras, in the municipal towns of Coimbatore, Madurai, Salem and Tiruchirappalli and in any village within five miles of the City of Madras or of the municipal towns aforesaid and to residential buildings only in any other area. Now, the Government have thought that protection should be given to non-residential buildings in any other area also. It is stated in the Statement of Objects and Reasons appended to the Bill that representations have been received by the Government for the extension of the benefits of the Act in respect of no-residential buildings also in municipal towns other than the municipal towns aforesaid. So, they want to give protection to the extended area of the notified area for both residential and non-residential purposes. My submission is that, instead of having two clauses, clause 2 and clause 3, they could have one compact clause by recasting the two clauses and by making provision for residential or non-residential purposes in any other municipal town or any other village within five miles from the municipal town. That would be all right.

MR. DEPUTY SPEAKER: But the hon. Member has not moved any amendment.

SRIMATHI T. N. ANANDANAYAKI: I am only suggesting to the Government. I have not moved any amendment because I am a Member of the party in power. The Government can move it.

Since the Government have though that protection to residential buildings is not sufficient, they have brought forward this amending Bill. But why should we retain Clause 2? The Government may still think over it and if it is necessary they can retain it. Otherwise, they can delete it.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், இந்தச் சட்டத்தை விஸ்தரிக்கக்கூடிய அதிகாரம் கிளாஸ் இரண்டில் இருக்கிறது. அரசாங்கம் விரும்பும்போது, எந்த முனிசிபல் டௌன்-னுக்கு வேண்டுமென்றாலும் நோட்டிஃபை பண்ணுவதற்குள்ள அதிகாரம்,

28th July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

இதன் மூலம் கொடுக்கப்படுகிறது. இப்போது இருக்கின்ற வாசகத்தின் அடிப்படையில் பார்த்தால், ஒவ்வொரு முறையும் விஸ்தரிக்கும்போது அரசாங்கம் நோட்டிஃபை செய்யவேண்டியிருக்கும். அப்போது, அதாவது அந்த நோட்டிபிக்கேஷன் வரும்போது இருக்கின்றவர்கள், அதாவது அன்று வரைக்கும் யார் யார் இருக்கிறார்களோ அவர்களுக்கு பாதுகாப்பு இருக்கும், அதன் பின்னால் வருகின்றவர்களுக்கு பாதுகாப்பு கிடையாது. இதில் திருத்துகிறபொழுது, இப்போது இருக்கின்ற அடிப்படையில் பார்த்தால், சென்னை, கோயம்பத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி இந்த இடங்களில் குடியிருக்கின்றவர்களும், தொழில் நடத்துகின்றவர்களுக்கும், டெனன்டாக இருந்தால் பாதுகாப்பு உண்டு. அதே நேரத்தில், வேறு பகுதிகளுக்கும் முனிசிபல் டௌன்-னாக இருந்தாலும் சரி, டௌன் பஞ்சாயத்துகளாக இருந்தாலும் சரி, இந்த இடங்களுக்கெல்லாம் விஸ்தரிக்கலாம். அரசாங்கம் எது அவசியம் என்று கருதுகிறார்களோ, அந்த இடங்களுக்கெல்லாம் விஸ்தரிக்கலாம் என்று தெரிகிறது. புதிதாக இதில் என்ன ஏற்பட்டிருக்கிறது என்று பார்க்கும்போது, முன்பு ரெஸிடென்ஷியல் ஏரியாவுக்கும் மற்ற இடங்களுக்கும் என்று இருந்ததோடு, இப்போது நான்-ரெசிடென்ஷியல் அவசியத்திற்கும் எடுத்துக் கொண்டு நோட்டிஃபை செய்வதற்கான அதிகாரத்தை கேட்கிறார்கள். அதை நாம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். என்னுடைய ஆட்சேபனை, இந்த நான்கு நகரங்களுடைய பெயர்களைச் சொல்லி இவைகளை 'ஆர்' என்று போட்டு விட்டால் இந்த நகரங்களை ஒரு நோட்டிஃபிகேஷன் செய்து கான்ஸல் செய்ய அதிகாரம் ஏற்படுகிறது. இன்னொரு நோட்டிஃபிகேஷன் போட்டு இவைகளை கான்ஸல் செய்ய அதிகாரம் இருக்கக் கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். இல்லையென்றால் 'ஆர்' என்று போட்டிருப்பதில் அவசியம் என்ன இருக்கிறது. 'அண்ட்' என்று போட்டுவிட்டு, நான்கு நகரங்களைப் பொறுத்த வரையில் அது ஏற்கெனவே தீர்ந்துள்ள பிரச்னை, இனி வருகின்றவைகளுக்கு 'ஆர்' என்று போட்டால் என்ன என்றுதான் நான் கேட்கிறேன். 'ஆர்' என்பதற்கு பதில் 'அண்ட்' என்று போட்டுவிட்டு 'ஆர் ஸச் அதர் முனிஸிபல் டவுன்' என்று போடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு நான் ஏன் அமெண்ட்மெண்ட் கொடுக்கவில்லை என்று கேட்கலாம். எதிர் கட்சியைச் சேர்ந்தவர்கள் கொடுத்தால் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; ஆகையால் அவர்களே கொண்டு வந்துகொள்ளட்டும் என்றுதான் நான் கொடுக்கவில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ரெஸிடென்ஷியல் பில்டிங்ஸாக இருந்தால் நாம் எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் விஸ்தரிக்கலாம் இந்தச் சட்டத்தை. அதற்காகத்தான் இதிலே சொல்லியிருக்கிறோம் 'இன் எனி அதர் ஏரியா' என்று. அதாவது, இந்த ராஜ்யம் பூராவிலும், கிராமமாக இருந்தாலும், நகரமாக இருந்தாலும், டவுன்ஷிப்பாக இருந்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [28th July 1964

தாலும், முனிஸிபல் டவுனாக இருந்தாலும் விஸ்தரிக்க அதிகாரம் இருக்கிறது. அதற்காகத்தான் 'இன் ஏனி அதர் ஏரியா' என்று போட்டிருக்கிறோம்.

நான்-ரெஸிடென்ஷியல் பில்டிங்ஸைப் பொறுத்த மட்டில் ஒரு லிமிட்டேஷன் இருக்கவேண்டும். அதனுடைய அப்ளிகேஷன் குறைக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறோம். அதாவது, கடைகள், மற்றப்படி வியாபாரத்திற்கு உபயோகப்படுத்தும் ஸ்தலங்களைப் பொறுத்தமட்டில் அதற்கு ஒரு லிமிட்டேஷன். லிமிட்டேஷன் என்ன என்றால் குறிப்பிட்ட முனிசிபாலிட்டிகளும், அதோடு இனிமேல் நோட்டிஃபை செய்கிறோமே அந்த முனிசிபாலிடிகளும் அதற்கு சுற்றுச் சார்பில் 5 மைல் அளவுக்குள் இருக்கின்ற கிராமங்களும் என்று போட்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர் கலியாண சுந்தரம் அவர்கள் பேசியபோது ஸ்ரீரங்கம் வராது என்று சொன்னேன் என்று சொன்னார்கள். இப்போது ஸ்ரீரங்கம் ஒரு முனிசிபாலிடி (குறுக்கீடு) ஒரு முனிசிபாலிட்டிக்குப் பக்கத்தில் மற்றொரு முனிஸிபாலிட்டி இருக்குமானால் அந்த முனிஸிபாலிட்டிக்குத் தேவையா இல்லையா என்று பரிசீலனை செய்து எக்ஸ்டெண்ட் செய்யவேண்டும். அதற்காக முனிஸிபாலிட்டியின் பெயரைக் குறிப்பிட்டு அதனுடைய சுற்றுப்புறத்தில் 5 மைல் அளவுக்கு இருக்கக் கூடிய அளவுக்கும் எக்ஸ்டெண்ட் செய்யலாம். எக்ஸ்டெண்ட் செய்யும்போது 5 மைல்களுக்குத்தான் செய்ய வேண்டும் என்பதல்ல. ஒரு மைல் சுற்றளவுக்கு எக்ஸ்டெண்ட் செய்யலாம், இரண்டு மைல் சுற்றளவுக்கு எக்ஸ்டெண்ட் செய்யலாம். அல்லது எக்ஸ்டெண்ட் பண்ணாமலேயேகூட இருக்கலாம். ஆகவே நான்-ரெஸிடென்ஷியல் பில்டிங்ஸைப் பொறுத்த வரையில் வியாபார ஸ்தலங்களைப் பொறுத்த அளவுக்கு முனிஸிபாலிடிகளுக்கும், சுற்றி இருக்கிற இடங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டும் என்று போட்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர் அனந்தநாயகி அவர்கள் நன்றாக கவனிக்கவேண்டும். எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. ரெசிடென்ஷியல் பில்டிங்ஸைப் பொறுத்த வரையில் எல்லா இடங்களுக்கும் போட முடியும். அதுதான் சப்-க்ளாஸ் இரண்டு (குறுக்கீடு) அந்த மாதிரி பவர்ஸ் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ரெஸிடெஷியல் பில்டிங்ஸுக்கு அந்த மாதிரி பவர்ஸ் எடுத்துக்கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) ஸிட்டி டெனெண்ட்ஸ்' என்று போட்டிருப்பதை விஸ்தரித்திருக்கிறோம்.

அடுத்தபடியாக டிராஃப்ட்டிங் பற்றி 'அண்ட்' போட வேண்டுமா, 'ஆர்' போடவேண்டுமா என்று சொன்னார்கள். அது ஒரு டிபோக்ராஃபிகல் எர்ரர். நாம் க்ளாஸைப் படித்துப் பார்த்தோமானால் 'அண்ட்' என்று தான் போட்டிருக்கிறோம். டைப் செய்கிறபோது 'அண்ட்' என்பதற்கு பதில் 'ஆர்' என்று தவறி போட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் வருவது 'ஆர்' தான். இந்த இடத்தில் 'அண்ட்' என்பதற்கு பதில் 'ஆர்' என்று போட்டிருப்பது ஒரு டிபோக்ராஃபிகல் எர்ரர். அதைத் திருத்திக் கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

28th July 1964]

MR. DEPUTY SPEAKER: I think it is not a mistake in the Assembly Office.

THE HON. SRI R. VENKATARAMAN: I think during drafting stage there has been some mistake. The Legislature, during its session, can always correct any typographical error. To the amendment moved by the Hon. Minister, I move the following amendment:

For the words 'Salem or' substitute the words 'Salem and'.

The amendment was put and carried.

The amendment as amended was put and carried.

Clause 2 as amended was put and carried.

Clause 3.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That Clause 3 do stand part of the Bill"

THE HON. SRI V. RAMAIAH: Sir, I move the following amendment:—

In clause 3, in the first paragraph, for the portion commencing with the words "in any area" and ending with the words "shall not be enforceable", substitute the following, namely:—

"In any muncipal town specified in the notification issued under sub-clause (i) of clause (1) of section 2 of the principal Act as amended by this Act and the village within five miles of such municipal town and pending before any Court or other authority or officer, on the date on which the said notification takes effect shall, in so far as the proceeding relates to any matter falling within the scope of the principal Act as amended by this Act in respect of such building or part, abate; and all rights and privileges which may have accrued to that landlord in respect of any such building or part and subsisting immediately before the date on which the notification aforesaid takes effect shall, in so far as such rights and privileges relate to any matter falling within the scope of the principal Act as amended by this Act, cases and determine and shall not be enforceable."

The amendment was put and carried.

Clause 3 as amended was put and carried.

Clause 1; the Enacting Formula and the Long title were put and carried.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I move:—

"That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 25 of 1964), as amended, be passed."

[28th July 1964.

MR. DEPUTY SPEAKER : Motion moved :—

"That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 25 of 1964), as amended, be passed.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That Madras City Tenants Protection (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 25 of 1964), as amended be passed."

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தத் திருத்த மசோதா சட்டமாகும் சமயத்தில் இரண்டொரு யோசனைகள் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சபையில் பல அங்கத்தினர்கள் இந்தச் சட்டத்தை இன்னும் பரிசீலனை செய்து உண்மையான பாதுகாப்பு அளிப்பதற்கு என்னென்ன திருத்தங்கள் வேண்டுமோ அவைகளைச் செய்யவேண்டும் என்று யோசனைகள் கூறியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின் பெயரைப் பொறுத்த அளவிலே 'ஸிடி டெனண்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்ட்' என்று சொல்லுவது பொருந்தாது. எந்தப் பகுதியில் இருந்தாலும் அவர்களுக்கு சட்டத்தின் மூலம் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் பெயரே சட்டத்தின் உள்நோக்கத்திற்கு முரணாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, பெயரிலிருந்து உள்ளடக்கம் வரையிலே பல விஷயங்களில் சில மாறுதல்கள் ஏற்படுத்த வேண்டும். இதற்கு உறுதியாக என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து இந்தச் சட்டத்தை உறுதியாக அமுல் செய்வதற்கு நிர்வாகத் துறையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டம் செய்வதன் மூலம் யாருடைய சொத்தையும் அரசாங்கம் பரிமுதல் செய்துவிடவில்லை. நஷ்டஈடு கொடுப்பதில் கூட அரசாங்கம் தலையிடுவதில்லை. நிலத்திற்குச் சொந்தக்காரர், மேல் கட்டடம் கட்டிக்கொண்டிருப்பவர் இரண்டு பேர்களும் சம்மதித்து விட்டுக்கொடுக்கும் பட்சத்தில், கட்டடம் கட்டிக்கொண்டிருப்பவர் நிலத்தை கிரயத்திற்கு வாங்கிக்கொள்ளலாம். நிலம் தனக்கு வேண்டும் என்று வற்புறுத்தினால், கோர்ட்டு மூலம் இன்றைக்கு இருக்கக்கூடிய 'மார்கெட் வால்யூ' பிரகாரம், 5 வருஷ சராசரி எடுத்து அந்த விலையைக் கொடுத்துவிட்டு நிலத்தை எடுத்துக் கொள்ளலாம். இஷ்டப்படி செய்ய முடியாது. இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை ரூபாய்க்கு நான்கு அணாவுக்கு மேற்படாமல் வாடகையை உயர்த்துவதற்கு சட்டத்தில் இடமிருக்கிறது. நாங்கள் கூட ரூபாய்க்கு இரண்டு அணாவாக திருத்த வேண்டுமென்று சொன்னோம்.

நிலச்சுவான்தாரர்களுக்கு இதனால் பெரிய நஷ்டம் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. திட்டம் காரணமாக ஏற்பட்டிருக்கிற அபிவிருத்தி பலன்களை எல்லோரும் பங்கிட்டுக்கொள்ளவேண்டுமென்பது முக்கியம். இந்தச் சட்டம் குடியிருப்பவர்களுக்கு ஏற்படுகிற வெளியேற்றப்படுகிற ஆபத்திலிருந்து அவர்களை பாதுகாக்கிறது. நிலத்தை அபகரிப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. குறைந்த விலைக்கு, மலிவான விலைக்குக்கூட

28th July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

வாங்கிக் கொடுக்கும் சலுகைகூட இந்தச் சட்டத்தின் மூலம் அளிக்கப்படவில்லை. முன்னாலே அப்படி ஒரு சலுகை இருந்தது. 1955-ம் ஆண்டுக்கு முன்னால் ஐந்து வருஷ சராசரி மதிப்பு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்பொழுது, தற்சமயம் இருக்கக்கூடிய 5 வருஷ சராசரி மார்கெட் வால்யூ கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு, நிலத்திற்கு கிரயம் நிர்ணயம் செய்யப்படுகிறது. நிலத்தை வைத்திருப்பவர்களிடமிருந்து நிலத்தை அபகரிக்கக்கூடிய சட்டம் என்று யாரும் இதற்காக பயப்படவேண்டிய அவசியமில்லை. குடியிருப்பவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு இந்தச் சட்டம் அவசியம். இந்தச் சட்டத்தை உறுதியாக அமுல் நடத்தவேண்டியதும் அவசியமாக இருக்கிறது.

குறிப்பாக, நான் ஆரம்பத்தில் எடுத்துக்கூறியபடி, முனிசிபல் கமிஷனர்களுக்கு இது சம்பந்தமாக நிலைமையை எடுத்துச் சொல்லி, நிலத்தில் யார் கட்டடம் கட்டிக்கொண்டிருக்கிறார்களோ அவர்களிடமிருந்து முனிசிபல் வரி வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Madras City Tenants Protection (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 25 of 1964), as amended be passed."

The motion was put and carried and the Bill, as amended, was passed. 11-30 a.m.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn *sine die*.

The House then adjourned *sine die*.

IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

† 264. *Notification issued with G.O. Ms. No.* 1753, *Home, dated* 3rd *June* 1964 *amending the Madras Liquor (Licence and Permit) Rules*, 1960, *as subsequeunting amended. Laid on the Table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act*, 1937 (*Madras Act X of* 1937).]

B. Reports, Notifications and other papers.

* 207. *The Disclosure of Assets of the Members of the Legislature Bill*, 1964 (*L.A. Bill No.* 30 *of* 1964).

* 208. *The Madras Public Buildings (Licensing) Bill*, 1964 (*L.A. Bill No.* 31 *of* 1964).

[28th July 1964

† 209. *Notification issued with G.O. Ms. No. 1129, Home, dated 16th April 1964 amending certain rules of the Madras Traffic Rules, 1938, as subsequently amended, the same having been published under the Madras Traffic Act, 1938 (Madras Act V of 1938).*

† 210. *Notification issued with G.O. Ms. No. 519, Revenue, dated 25th January 1964 amending the Central Sales Tax (Madras) Rules, 1957, as subsequently amended, the same having been published under the Central Sales Tax, 1956 (Central Act 74 of 1956).*

211. *List of Unstarred questions and answers from S. Nos. 254 to 266.*

---

* Circulated to Members on 25th July 1964.
† Placed on the Table of the House on 27th July 1964.

28th July 1964]

APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 743 on page 408.]

Plan Outlay for 1964–65.

Head of Development. (1)	Outlay as recommended by this Government. (2)	Outlay as approved by Planning Commission. (3)	Outlay as provided for in Budget 1964–65. (4)
	(RUPEES IN LAKHS)		
1 Agricultural Programme ..	943·45	930·00	935·21
2 Community and Co-operation	541·74	530·00	545·80
3 Irrigation	724·02	650·00	699·16
4 Power	2,908·80	2,450·00	2,500·00
5 Industries	517·85	480·00	514·61
6 Transport and Communication.	242·73	235·00	222·58
7 General Education	736·55	630·00	719·35
8 Technical Education	179·80	156·00	160·23
9 Health	558·62	501·00	517·01
10 Welfare of Backward Classes..	101·34	101·00	99·20
11 Other Social Services ..	145·51	142·00	118·72
12 Miscellaneous	16·42	10·00	20·79
Total ..	7,616·83	6,815·00	7,052·66

பதில்.—1964–65-ம் ஆண்டிற்கான திட்டச் செலவு.

அபிவிருத்தித் தலைப்பு. (1)	இந்த அரசாங்கம் திட்டக் கமிஷனுக்குச் சிபாரிசு செய்த திட்டச் செலவு. (2)	திட்டக் கமிஷன் அனுமதித்த திட்டச் செலவு. (3)	1964–65-ம் ஆண்டு பட்ஜெட்டில் வகை செய்துள்ள திட்டச் செலவு. (4)
	(ரூபாய் லட்சத்தில்)		
1 வேளாண்மைத் திட்டம் ..	943.45	930·00	935·21
2 சமுதாயம், கூட்டுறவுச் சங்கம்	541·74	530·00	545·80
3 பாசனம்	724·02	650·00	699·16
4 மின்சாரம்	2,908·80	2,450·00	2,500·00
5 தொழில்	517·85	480·00	514·61
6 சாலைப் போக்குவரத்து ..	242·73	235·00	222·58
7 பொதுக் கல்வி	736·55	630·00	719·35
8 தொழிற் கல்வி	179·80	156·00	160·23
9 சுகாதாரம்	558·62	501·00	517·01
10 பின்னிலை வகுப்பினர் நலன்.	101·34	101·00	99·20
11 மற்ற சமூகப் பணிகள் ..	145·51	142.00	118·72
12 பலவகை இனங்கள் ..	16·42	10·00	20·79
மொத்தம் ..	7,616·83	6,815·00	7,052·66

APPENDIX II.

[*Vide* answer to Starred Question No. 744 on page 409]

Statement showing the imported cars purchased from the State Trading Corporation, Madras.

(*a*) & (*c*) : 4 additional imported second hand cars were purchased from the State Trading Corporation, Madras, the details of which are given below :—

Serial number and name of car, number and model.	Date of purchase.	Total cost (including sales tax).	In use by.
(1)	(2)	(3)	(4)
		RS. NP.	
1. MSV 7575 Dodge 1962 model.	7th February 1964	41,053·93	Chief Minister.
2. MSV 7777 Chevrolet 1961 model.	7th February 1964	28,718·05	Minister for Food.
3. APY 6385 Chevrolet Impala 1960 model.	19th March 1964	32,792·30	Allotted to State Guest House.
4. MSV 9119 Ford Zephyr 1960 model.	19th March 1964	13,038·62	Minister for Local Administration.

(*b*) These cars were purchased with a view to providing adequate and good transport facilities for visiting V.I.Ps. and also to replace the old cars which were giving constant trouble.

பதில்.—(அ), (உ) வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 4 பழைய கார்கள் சென்னை, ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனிடமிருந்து கூடுதலாக வாங்கப்பட்டன. அவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

தொடர் எண், காரின் பெயர், மாதிரி.	வாங்கிய தேதி.	மொத்த அடக்க விலை (விற்பனை வரி உள்பட).	யார் பயன்படுத்தி வருகிறார்.
(1)	(2)	(3)	(4)
		ரூ. நயை.	
1 MSV 7575 டாட்ஜ் 1962 மாடல்.	7—2—1964	41,053·93	முதல் அமைச்சர்.
2 MSV 7777 ஷெவர்லே 1961 மாடல்.	7—2—1964	28,718·05	உணவு அமைச்சர்.
3 APY 6385 ஷெவர்லே இம்பால 1960 மாடல்.	19—3—1964	32,792·30	அரசாங்க விருந்தினர் மாளிகைக்கு ஒதுக்கப் பட்டுள்ளது.
4 MSV 9119 போர்டு ஜெ.ஃபீர் 1960 மாடல்.	19—3—1964	13,038·62	தல நிர்வாக அமைச்சர்.

(இ) நமது மாநிலத்திற்கு வருகை தரும் முக்கிய பிரமுகர்களுக்கு நல்ல முறையில் போதிய பயண வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கும், அடிக்கடி சீர் செய்ய வேண்டியிருந்த பழைய கார்களை மாற்றிப் புதிய கார்கள் பெறுவதற்கும் இந்தக் கார்கள் வாங்கப்பட்டன.

APPENDIX III.

[*Vide* Answer to Starred Question No. 750 on page 415]

Statement showing the number of officers re-employed after retirement as on 1st July 1963.

Serial number and Department or Office.	Post in which re-employed.	Number of Officers re-employed.
(1)	(2)	(3)
1 Raj Bhavan, Guindy.	House Steward	1
2 Board of Revenue ..	Special Officer for Urban Taxation.	1
3 Public Department ..	Personal Assitant to Chief Minister.	1
4 Madras Record Office.	Binder	1
5 Official Language.	Secretary	4
	Special Officer (Inspections)	
	Special Officer (Translations)	
	Junior Superintendent ..	
6 Cinchona Department.	Director	1
7 Animal Husbandry Department.	Veterinary Assistant surgeons	7
	Assistant Lecturer in Animal Husbandry.	1
8 Food Production Department.	Draftsmen	2
9 Madras Dairy and Milk Project.	Veterinary Officer	2
	Milk Distribution Officer ..	
10 Agriculture Department.	Cotton Specialist, Agricultural College and Research Institute, Coimbatore.	1
11 Rural Development and Local Administration Deparment.	Municipal Engineers ..	3
12 Public Works Department. ..	Draftsmen including Special Grade Draftsmen.	7
	Chief Electrical Inspector to Government.	1
	Chief Engineer for Irrigation.	1
	Director, Research Station, Madras.	1
	Superintending Engineer (Rural Works).	1
13 Medical Department.	Medical Officers	37
	Pharmacist	1
	Sergeant, Madras Medical College.	1
14 Sanitary and Public Health Engineering Deparment.	Draftsmen	2
	Tracer	1
15 Public Health Department.	Health Officers	12
	Filaria Officer	1

APPENDIX III—*cont.*

Statement showing the number of Officers re-employed after retirement as on 1st July 1963—cont.

Serial number and Department or Office.	Post in which re-employed.	Number of Officers re-employed.
(1)	(2)	(3)
16 Industrial Tribunal.	Industrial Tribunal and Special Industrial Tribunal.	2
17 Industries Department.	Principal, Industrial Training Institute. Guindy.	1
18 Hindu Religious and Charitable Endowments (Administration) Department.	Deputy Commissioner ..	1
	Grade I Executive Officer ..	1
19 Education Department.	Lecturers and Assistant Lecturers.	5
	Principal, Institute of Leather Technology, Madras.	1
	Professor of Structural Engineering, College of Engineering. Guindy.	1
20 High Court	Special Officer for work relating to Pondicherry.	1
	Bench Clerk	1
	Attenders	2
21 Harijan Welfare Department.	Watchmen	2
	Wardens of Government Boy's Hostels.	5
	Matron, Government Girls Hostel.	1
	HigherGrade Teacher, Harijan Welfare School.	1
	Total ...	116

28th July 1964]

1963-ம் ஆண்டு ஜூலை முதல் தேதி அன்றுள்ளபடி, ஓய்வு பெற்றபின் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்ட அதிகாரிகள் எத்தனை பேர் என்பதைக் காட்டும் அறிக்கை.

தொடர் எண்ணும் துறை அல்லது ஆபீஸ் பெயரும்.	மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பெற்றிருக்கும் பதவி.	மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்ட அதிகாரிகள்.
(1)	(2)	(3)
1 ராஜ்பவன், கிண்டி ..	ஹவுஸ் ஸ்டீவர்டு	1
2 ரெவின்யூ போர்டு ..	நகரவரி, விசேஷ அதிகாரி ..	1
3 பொதுத் துறை ..	முதலமைச்சரின் தனி உதவியாளர்.	1
4 ரெக்கார்டு ஆபீஸ் ..	பைண்டர்	1
5 ஆட்சிமொழிக் குழு ..	செயலாளர்	4
	விசேஷ அதிகாரி(மேற்பார்வை).	
	விசேஷ அதிகாரி (மொழி பெயர்ப்பு).	
	ஜூனியர் சூப்பிரண்டு ..	
6 சின்கோனா துறை ..	டைரெக்டர்	1
7 கால்நடை அபிவிருத்தித் துறை.	கால்நடை வைத்திய உதவி சர்ஜன்கள்	7
	கால்நடை அபிவிருத்தி உதவி விரிவுரையாளர்.	1
8 உணவு உற்பத்தித் துறை.	டிரா.ப்ட்ஸ்மென்	2
9 சென்னை பாற்பண்ணை பால் திட்டம்.	கால்நடை மருத்துவ அதிகாரி. பால் விநியோக அதிகாரி ..	2
10 விவசாயத் துறை ..	பருத்தி வல்லுநர், விவசாய்க் கல்லூரி, ஆராய்ச்சி நிறுவனம், கோயம்புத்தூர்.	1
11 கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறை.	முனிசிபல் எஞ்ஜினியர்கள் ..	3
12 பொதுப்பணித் துறை ..	ஸ்பெஷல் கிரேடு ட்ராப்ட்ஸ்மென் உட்பட ட்ராப்ட்ஸ்மென்.	7
	மின்துறைத் தலைமை இன்ஸ்பெக்டர்.	1
	பாசனத் தலைமை என்ஜினியர்.	1
	டைரெக்டர், ஆராய்ச்சி நிலையம், சென்னை.	1
	மேற்பார்வை என்ஜினியர் (கிராமப் பணிகள்).	1
13 மருத்துவத் துறை ..	மருத்துவ அதிகாரிகள் ..	37
	பார்மசிஸ்டு	1
	சார்ஜண்டு, சென்னை மருத்துவக் கல்லூரி.	1
14 துப்புரவு, பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை.	ட்ராப்ட்ஸ்மென்	2
	ட்ரேஸர்	1
15 பொதுச் சுகாதாரத் துறை.	சுகாதார அதிகாரிகள் ..	12
	ப்.பைலேரியாத் தடுப்பு அதிகாரி.	1

தொடர் எண்ணும் துறை அலுவலகத்து ஆபீஸ் பெயரும்.	மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பெற்றிருக்கும் பதவி.	மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்ட அதிகாரிகள்.
(1)	(2)	(3)
16 தொழில் நடுவர் மன்றம்.	தொழில் நடுவர், விசேஷத் தொழில் நடுவர்.	2
17 தொழில் துறை ..	முதல்வர், தொழில் பயிற்சி நிலையம் கிண்டி.	1
18 ஹிந்து சமயக்கட்டளை அறக்கட்டளை (நிர்வாகத் துறை).	துணைக் கமிஷனர்	1
	நிர்வாக அதிகாரி (கிரேடு 1)	1
19 கல்வித் துறை ..	விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள்.	5
	முதல்வர், தொழில் நுட்ப இயல் நிறுவனம், சென்னை.	1
	கட்டுமானப் பொறியியல் பேராசிரியர், கிண்டி இன்ஜினியரிங் கல்லூரி.	1
20 உயர்நீதி மன்றம், சென்னை.	புதுச்சேரி சம்பந்தப்பட்ட விசேஷப் பணிக்குரிய விசேஷ அதிகாரி.	1
	பெஞ்ச் குமாஸ்தா	1
	அட்டெண்டர்கள்	2
21 ஹரிஜன நலத்துறை ..	காவலாளிகள்	2
	சிறுவர் ஹாஸ்டல் வார்டன்கள்.	5
	பெண்கள் ஹாஸ்டல், மேட்ரன்.	1
	ஹரிஜன நலப்பள்ளி, ஹையர் கிரேடு ஆசிரியர்.	1

APPENDIX IV.

[*Vide* Answers to unstarred Question No. 254 on page 445.]

(*a*) & (*b*). Only the two schemes relating to the payment of subsidies to local bodies for improvement to fish markets and for improvements to slaughter houses and meat markets have been included in the Third Five-Year Plan and the following provision has been made for these schemes :—

Improvements to fish market—Rs. 5 lakhs.

Improvements to slaughter houses—Rs. 8 lakhs.

The scheme for improvements to slaughter houses has not yet been implemented under the Plan. As regards the scheme for improvements to fish markets, so far four panchayats have been granted subsidies under this scheme, as per details furnished in the statement in Annexure I.

2. Loans to local bodies for remunerative enterprises like construction of bus stands, cart stands, markets, etc., are given outside the Third Plan.

Details of the loans sanctioned during the years 1961–62 and 1962–63 and upto 15th March 1964 during 1963–64 are given in the statement in Annexure II.

ANNEXURE I.

Particulars about the subsidies paid to the panchayats for improvements to fish markets during the Third Five-Year Plan period (till 1st February 1964) :—

Serial number and name of the panchayat. (1)	Amount paid. (2) RS.
1961–62.	
Nil.	
1962–63.	
1 Krishnagiri	10,000
2 Thiruvattar	1,475
3 Tirukalikundram	10,000
4 Thovalai	2,850
1963–64.	
Nil—so far.	

Particulars about the loans paid from the State Funds to Panchayats after 1st April 1961 for remunerative enterprises :—

(*i*) *Amounts paid during the financial year* 1961–62.

Name of the Panchayat. (1)	District. (2)	Purpose. (3)	Amount (4) RS.
1 Kaveripakkam	North Arcot ..	Market ..	5,000
2 Kurinjipadi	South Arcot ..	Market and slaughter house ..	30,000
3 Kallakurichi	Do. ..	Bus-stand and market	10,000
4 Nellikuppam	Do. ..	Market ..	10,000

Name of the panchayat. (1)	District. (2)	Purpose. (3)	Amount. (4) RS.
5 Arni	Chingleput	Bus stand	10,000
		Market	5,000
6 Usilampatti	Madurai	Bus stand	10,000
7 Ayyampalayam	Do.	Do.	8,000
8 Sithayyankottai	Do.	Bus stand and market	10,000
9 Vasudevanallur	Tirunelveli	Market.	5,000
10 Vaitheeswarankoil	Thanjavur	Do.	3,000
		Slaughter house	1,000
11 Tirukattupalli	Do.	Bus stand	20,000
12 Sattur	Ramanathapuram	Market	10,000
13 Palayampatti	Do.	Do.	5 000
14 Kilakarai	Do.	Do.	7,000
15 Sulur	Coimbatore	Bus stand	10,000
16 Mohanur	Salem	Do.	25,000
17 Jalakantapuram	Do.	Market and bus stand.	20,000
18 Thammampatti	Do.	Market	10,000
19 Puvalur	Tiruchirappalli	Do.	5,000
20 Kotagiri	Nilgiris	Do.	10,000
			2,29,000

(ii) Amounts paid during the financial year 1962–63.

1 Ulundurpet	South Arcot	Bus stand	10,000
2 Vasudevanallur	Tirunelveli	Market	5,000
3 Andipatti	Madurai	Bus stand	10,000
4 Perambalur	Tiruchirappalli	Do.	40,000
5 Krishnagiri	Salem	Do.	25,000
6 Koradacheri	Thanjavur	Do.	10,000
7 Vickramasingapuram	Tirunelveli	Market	5,000
8 Namagiripet	Salem	Do.	20,000
9 Kotagiri	Nilgiris	Do.	10,000
10 Thevaram	Madurai	Bus stand	20,000
			1,55,000

(iii) Amounts sanctioned during 1963–64.

1 Adirampattinam	Thanjavur	Bus stand	15,000
2 Yetapur	Salem	Market	5,000
3 Vilavancode	Kanyakumari	Do.	30,000

Name of the panchayat. (1)	District. (2)	Purpose. (3)	Amount. (4) RS.
4 Andipatti	Madurai	Bus stand	10,000
5 Kodavasal	Thanjavur	Do.	35,000
6 Irugur	Coimbatore	Market	10,000
7 Vedakkuvalliyoor	Tirunelveli	Bus stand	99,750
8 Pachaimalayankottai	Madurai	Do.	20,000
9 Pallapatti	Tiruchirappalli	Weekly market	15,000
10 Pallapatti	Do.	Bus stand	10,000
11 Devarshola	Nilgiris	Market	7,000
12 Taramangalam	Salem	Bus stand	40,000
13 Tiruthani	Chingleput	Market	18,000
14 Karamadai	Coimbatore	Daily market	10,000
15 Kallakurichi	South Arcot	Daily vegetable market.	25,000
16 Kallakurichi	Do.	Bus stand	20,000
17 Punjaipuliampatti	Coimbatore	Daily market	34,100
18 Pennagaram	Salem	Bus stand	10,000
19 Vickramasingapuram	Tirunelveli	Daily market	5,000
20 Dharmapuri	Salem	Bus stand	30,000
21 Vempatty	Coimbatore	Market	2,000
22 Bramadesham	Do.	Slaughter house	1,000
23 Ulundurpet	South Arcot	Bus stand	20,000
24 Poonamallee	Chingleput	Shops	20,000
25 Kaveripakkam	North Arcot	Market	5,000
26 Modakkur	Tiruchirappalli	Do.	2,000
27 Erumarappatti Thettupatti.	Do.	Do.	2,000
28 Devarshola	Nilgiris	Bus stand	10,000
29 Punnam	Tiruchirappalli	Market	15,000
30 Ponnampatti	Do.	Bus stand	10,000
31 Alangudi	Do.	Market	27,000
32 Nelliyalam	Nilgiris	Weekly market	25,000
33 Zamin Pallavaram	Chingleput	Market	25,000
34 S. Kannanoor	Tiruchirappalli	Do.	10,000

(அ) & (இ). மீன் சந்தைகட்கும், ஆடுமாடு அடிக்கும் தொட்டிகளுக்கும், இறைச்சி சந்தைகட்கும் அபிவிருத்திகள் செய்வதற்காக ஸ்தல ஸ்தாபனங்களுக்கு உதவித் தொகைகள் கொடுப்பதுபற்றிய இரு திட்டங்கள் மட்டுமே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் இத் திட்டங்களுக்காகப் பின் வருமாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது :—

மீன் சந்தைக்கு அபிவிருத்திகள்—ரூ. 5 லட்சம்.

ஆடு மாடு அடிக்கும் தொட்டிகளுக்கு அபிவிருத்திகள்—ரூ. 8 லட்சம்.

ஆடுமாடு அடிக்கும் தொட்டிகளுக்கு அபிவிருத்திகள் செய்யும் திட்டம் இன்னும் அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை. மீன் சந்தைக்கு அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் சம்பந்தமாய், 1-வது இணைப்பில் கண்ட அறிக்கையில் கொடுத்துள்ள விவரப்படி. இதுவரை நான்கு பஞ்சாயத்துக்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

[28th July 1964

2. பஸ் நிலையங்கள், வண்டிப்பேட்டைகள், சந்தைப்பேட்டைகள் முதலியவற்றைக் கட்டுவது போன்ற லாபகரமான வேலைகளுக்காக ஸ்தல ஸ்தாபனங்களுக்கு மூன்றாவது திட்டத்துக்குப் புறம்பாகக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன.

1961–62, 1962–63-ம் ஆண்டுகளிலும், 1963–64-ம் ஆண்டில் 15—3—1964 வரையிலும் வழங்கிய கடன்களின் விவரம், II-வது இணைப்பின் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

இணைப்பு I.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மீன் சந்தை அபிவிருத்திக்காகப் பஞ்சாயத்துக்களுக்கு வழங்கியுள்ள உதவித் தொகை பற்றிய விவரம் :—

தொடர் எண். (1)	பஞ்சாயத்தின் பெயர். (2)	வழங்கிய தொகை. (3)
	1961–62.	
	(ஒன்றுமில்லை.)	
	1962–63.	
		ரூ.
1	கிருஷ்ணகிரி	10,000
2	திருவட்டாறு	1,475
3	திருக்கழுக்குன்றம்	10,000
4	தோவாளை	2,850
	1963–64.	
	(இதுவரை ஒன்றுமில்லை.)	

இணைப்பு II.

லாபகரமான வேலைகளுக்காக 1—4—1961-க்குப் பிறகு மாநில நிதியிலிருந்து பஞ்சாயத்துககளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடன்களின் விவரம் :—

(i) 1961–62 நிதி ஆண்டில் கொடுக்கப்பட்ட தொகை.

பஞ்சாயத்தின் பெயர். (1)	மாவட்டம். (2)	நோக்கம். (3)	தொகை. (4)
			ரூ.
1 காவேரிப்பாக்கம்	வட ஆற்காடு	சந்தை	5,000
2 குறிஞ்சிப்பாடி	தென் ஆற்காடு	சந்தை, ஆடுமாடு அடிக்கும் தொட்டிகள்.	30,000
3 கள்ளக்குறிச்சி	ஷை	பஸ் நிலையம், சந்தை.	10,000
4 நெல்லிகுப்பம்	ஷை	சந்தை	10,000
5 ஆரணி	செங்கற்பட்டு	பஸ் நிலையம்,	10,000
		சந்தை	5,000
6 உசிலம்பட்டி	மதுரை	பஸ் நிலையம்	10,000
7 அய்யம்பாளையம்	ஷை	பஸ் நிலையம், சந்தை.	8,000
8 சித்தையன்கோட்டை ..	ஷை	பஸ் நிலையம்	10,000
9 வாசுதேவநல்லூர் ..	திருநெல்வேலி	சந்தை	5,000
10 வைத்தீஸ்வரன்கோயில் ..	தஞ்சாவூர்	சந்தை,	8,000
		ஆடுமாடு அடிக்கும் தொட்டி.	1,000
11 திருக்காட்டுப்பள்ளி ..	ஷை	பஸ் நிலையம்	20,000

28th July 1964]

பஞ்சாயத்தின் பெயர். (1)	மாவட்டம். (2)	நோக்கம். (3)	தொகை. (4)
			ரூ.
12 சாத்தூர்	இராமநாதபுரம் ..	சந்தை ..	10,000
13 பாளையம்பட்டி	ஷை ..	ஷை ..	5,000
14 கீழக்கரை	ஷை ..	ஷை ..	7,000
15 சூலூர்	கோயம்புத்தூர் ..	பஸ் நிலையம் ..	10,000
16 மோகனூர்	சேலம்	ஷை ..	10,000
17 ஜலகண்டபுரம்	ஷை	ஷை ..	25,000
18 தம்மம்பட்டி	ஷை	சந்தை ..	10,000
19 பூவரூர்	திருச்சிராப்பள்ளி ..	ஷை ..	5,000
20 கோத்தகிரி	நீலகிரி ..	ஷை ..	10,000
			2,29,000

(ii) 1962–63 நிதி ஆண்டில் கொடுக்கப்பட்ட தொகை.

1 உளுந்தூர்	தென் ஆற்காடு ..	பஸ் நிலையம் ..	10,000
2 வாசுதேவநல்லூர்	திருநெல்வேலி ..	சந்தை ..	5,000
3 ஆண்டிப்பட்டி	மதுரை ..	பஸ் நிலையம் ..	10,000
4 பெரம்பலூர்	திருச்சிராப்பள்ளி ..	ஷை ..	40,000
5 கிருஷ்ணகிரி	சேலம் ..	ஷை ..	25,000
6 கொரடாச்சேரி	தஞ்சாவூர் ..	ஷை ..	10,000
7 விக்கிரமசிங்கபுரம் ..	திருநெல்வேலி ..	சந்தை ..	10,000
8 நாமகிரிப்பேட்டை	சேலம் ..	ஷை ..	20,000
9 கோத்தகிரி	நீலகிரி ..	ஷை ..	10,000
10 தேவாரம்	மதுரை ..	பஸ் நிலையம் ..	20,000
			1,55,000

(iii) 1963–64 நிதி ஆண்டில் வழங்கியுள்ள தொகை.

1 அதிராம்பட்டினம் ..	தஞ்சாவூர் ..	பஸ் நிலையம்	15,000
2 எடப்பூர்	சேலம் ..	சந்தை ..	5,000
3 விளவன்கோடு	கன்னியாகுமரி ..	ஷை ..	30,000
4 ஆண்டிப்பட்டி	மதுரை ..	பஸ் நிலையம் ..	10,000
5 குடவாசல்	தஞ்சாவூர் ..	ஷை ..	35,000
6 இருகூர்	கோயம்புத்தூர் .	சந்தை ..	10,000
7 வடக்கு வள்ளியூர் ..	திருநெல்வேலி ..	பஸ் நிலையம் ..	99,750
8 பச்சைமலையன்கோட்டை ..	மதுரை ..	ஷை ..	20,000
9 பள்ளப்பட்டி	திருச்சிராப்பள்ளி ..	வாரச்சந்தை ..	15,000
10 பள்ளப்பட்டி	ஷை ..	பஸ் நிலையம் ..	10,000
11 தேவர்ஷோலா	நீலகிரி ..	சந்தை ..	7,000
12 தாராமங்கலம்	சேலம் ..	பஸ் நிலையம் ..	40,000
13 திருத்தணி	செங்கற்பட்டு ..	சந்தை ..	18,000

பஞ்சாயத்தின் பெயர். (1)	மாவட்டம். (2)	நோக்கம். (3)	தொகை. (4)
			ரூ.
14 காரமடை	கோயம்புத்தூர் ..	அன்றாடச் சந்தை ..	10,000
15 கள்ளக்குறிச்சி	தென் ஆற்காடு ..	அன்றாடக் காய்கறிச் சந்தை.	25,000
16 கள்ளக்குறிச்சி ..	ஷை ..	பஸ் நிலையம் ..	20,000
17 புஞ்சை புளியம்பட்டி ..	கோயம்புத்தூர் ..	அன்றாடச் சந்தை	34,100
18 பென்னகரம்	சேலம் ..	பஸ் நிலையம் ..	10,000
19 விக்கிரமசிங்கபுரம் ..	திருநெல்வேலி	அன்றாடச் சந்தை	5,000
20 தர்மபுரி	சேலம்	பஸ் நிலையம் ..	30,000
21 வேம்பட்டி	கோயம்புத்தூர்	சந்தை ..	2,000
22 பிரமதேசம்	ஷை ..	ஆடுமாடு அடிக்கும் தொட்டி.	1,000
23 உளுந்தூர்பேட்டை ..	தென் ஆற்காடு ..	பஸ் நிலையம் ..	20,000
24 பூந்தமல்லி	செங்கற்பட்டு	கடைகள் ..	20,000
25 காவேரிப்பாக்கம்	வட ஆற்காடு ..	சந்தை ..	5,000
26 மொடக்கூர்	திருச்சிராப்பள்ளி ..	ஷை ..	2,000
27 எருமாரப்பட்டி தெத்துப்பட்டி.	ஷை	ஷை ..	2,000
28 தேவர்ஷோலா	நீலகிரி ..	பஸ் நிலையம் ..	10,000
29 புன்னம்	திருச்சிராப்பள்ளி ..	சந்தை ..	15,000
30 பொன்னம்பட்டி	ஷை ..	பஸ் நிலையம் ..	10,000
31 ஆலங்குடி	ஷை	சந்தை ..	27,000
32 நெல்லியாலம்	நீலகிரி ..	வாரச் சந்தை ..	25,000
33 ஜமீன் பல்லாவரம் ..	செங்கற்பட்டு ..	சந்தை ..	25,000
34 ச. கண்ணனூர்	திருச்சிராப்பள்ளி ..	ஷை ..	10,000

APPENDIX V.

[*Vide* Answers to unstarred Question No. 255 on page 445.]

The Madras State Housing Board was constituted on a statutory basis with effect from the 22nd of April 1961. The Board has four Housing Units at Madras, Madurai, Coimbatore and Tiruchirappalli. The implementation of various Housing and Slum Improvement Schemes is attended to by the Board. It plans and co-ordinates all Housing Schemes and also provides technical advice, besides scrutinising all projects under Housing and Improvement Schemes.

The State Housing Board and its units are responsible for the implementation of the following Housing Schemes both Plan and Non-Plan :—

PLAN SCHEMES :

1. Land Acquisition and Development Scheme;
2. Subsidised Industrial Housing Scheme;
3. Low Income Group Housing Scheme; and
4. Slum Clearance/Improvement Scheme.

NON-PLAN SCHEMES :

1. Middle Income Group Housing Schemes;
2. Rental Housing Scheme for low-paid employees of the State Government; and
3. Non Plan Schemes of the State Housing Board.

The projects undertaken for execution by the State Housing Board and its Housing Units in 1962 are as furnished below :—

I. MADRAS STATE HOUSING BOARD.

1. *Land Acquisition and Development Scheme.*—The State Housing Board proposed to acquire about 4,000 acres of land on the fringes of Madras City and develop them into City Neighbourhoods as follows :—

(*a*) Kodambakkam–Pudoor Neighbourhood—1,000 acres.

(*b*) South Madras Neighbourhood—410 acres.

(*c*) West Madras Neighbourhood—1,300 acres.

(*d*) North Madras Neighbourhood—1,100 acres.

(*a*) *Kodambakkam—Pudur Neighbourhood (Part I).*—The porject contemplates the development of 320 acres of land, of which 290 acres of land were taken possession of. A sum of Rs. 12.49 lakhs has been spent to the end of December 1962, towards cost of land and about Rs. 4.63 lakhs, on general levelling. Provision has been made in this part of Neighbourhood for 3,000 plots (about

2,000 for Slum Improvement Scheme and about 1,000 for the construction of Low Income Group and Middle Income Group Houses). The Madras Housing Unit has re-housed 1,200 families from slums. Two-hundred and sixty plots were taken up by them for construction of Low Income Group and Middle Income Group Houses. About 100 plots were auctioned to the public and 295 plots were allotted to Co-operative Societies. The balance was allotted to the public by the Allotment Committee of the Board. Work relating to laying of roads and provision of water supply was pushed through and was nearing completion in 1962. Work relating to Sewage and street-lighting was undertaken.

(b) *South Madras Neighbourhood—Schemes.*—The scheme is estimated to cost Rs. 160 lakhs. The layout of the Scheme was finalised. One hundred and seventy plots intended for slum improvement, were utilized by the Madras Housing Unit for re-housing slum families. The work of forming roads was taken up. One hundred Low Income Group and Middle Income Group houses are under construction. Eighty plots have been allotted to Co-operative Societies, and also lands sufficient for 600 multi-storeyed flats on hire-purchase on a Co-operative basis.

2. *Subsidized Industrial Housing Scheme.*—The State Housing Board has taken up the maintenance of the Subsidized Industrial Housing Colonies, viz., Sarmanagar and Tiruvika Nagar Colonies (900 houses) in the City, constructed under Government Projects, (as well as 116 in Virudhunagar and 200 in Sivakasi. The Board is completing the construction of 200 tenements in Pasumalai, Madurai and 96 in Peelamedu, Coimbatore).

3. *Middle Income Group Housing Scheme.*—The State Housing Board took up the construction of 120 numbers of storeyed, rental flats in the Hamilton Bridge Road (Llyods Road) Scheme area at an estimated cost of Rs. 14.79 lakhs. The first batch of rental flats will be let out to the public in April this year.

4. *Rental Housing Scheme for low-paid employees of the State Government.*—Under the Government of India's Rental Housing Scheme, the State Housing Board undertook the construction of 192 numbers of storeyed rental apartments in the Hamilton Bridge Road (Lloyds Road) Scheme area, at an estimated cost of Rs. 17.46 lakhs. The details of these schemes in the Hamilton Bridge Road area as they stood by the end of December 1962 are furnished in Appendix I.

II. MADRAS HOUSING UNIT.

1. *Slum Clearance/Improvement Scheme.*—Under the scheme, there are two patterns of development, one is by providing open developed plots for each family and the other is by constructing tenements. The Madras Housing Unit has taken up the rehabilitation of Slum dwellers in the Kodambakkam-Pudoor Neighbourhood and South Madras Neighbourhood Scheme areas, in addition to the Slum Clearance Schemes taken over for execution from the Corporation of Madras.

A statement showing the expenditure incurred on open developed plots and tenements constructed under the scheme is shown in Appendix II.

2. *Middle Income Group Housing Scheme.*—The Madras Housing Unit undertook construction of Middle Income Group Houses/flats, both on hire-purchase basis and on rental basis in the various Scheme areas.

3. *Rental Housing Scheme for low-paid employees of the State Housing Board.*—In addition to the 500 apartments constructed by the former City Improvement Trust under the Slum Clearance Scheme in the Foreshore Estate, Santhome, which were transferred to this Rental Housing Scheme, the Madras Housing Unit undertook the construction of 168 more apartments in the Foreshore area. Five hundred and ninty-six apartments have been allotted to the low-paid employees of the State Government.

A project for the construction of 96 three storeyed, rental flats (16 blocks) in the Kilpauk Garden area was sanctioned and 96 flats have been completed. These flats have been allotted to the State Government Servants.

4. *Low Income Group Housing Scheme.*—The Madras Housing Unit is constructing (1963–64) about 300 Low Income Group Houses/flats, both on hire-purchase basis and on rental basis, in the various Scheme areas.

5. *Non-Plan Schemes of the State Housing Board.*—In addition to the various Plan and Non-plan Schemes of the Government of India and the State Government, the Madras Housing Unit is executing certain Housing and Improvement Schemes which are met entirely from State funds.

A statement showing the various Housing Schemes under execution during 1962–63 and physical and financial achievements thereof, from 1st April to 31st December 1962 is shown in Appendix III.

III. COIMBATORE HOUSING UNIT.

1. *Low Income Group Housing Scheme.*—The Unit took up the construction of 24 three storeyed (rental) flats at an estimated cost og Rs. 1,62,500 in R.S. Puram, Coimbatore.

2. *Middle Income Group Housing Scheme.*—The Unit also took up the construction of four blocks of 24 houses (on rental basis) in three-storeyed buildings in R. S. Puram at an estimated cost of Rs. 3,92,175. The first batch will be released to the public in a month.

[28th July 1964

3. *Subsidised Industrial Housing Scheme.*—Proposals for the construction of tenements for the Industrial Workers were formulated as shown below under the subsidised Industrial Housing Scheme.

Serial number and name of places. (1)	Estimates. (2)	Tenements. (3)
	RS.	
1 Tiruppur	6,21,000 ..	100 singlestoreyed one roomed.
2 Peelamedu ..	6,87,375 ..	96 two-storeyed one roomed.
Singanallur (Phase III Project).	6,70,300 ..	100 single-storeyed one roomed.

In respect of Peelamedu, 272 acres of land with incomplete tenement were purchased from the Peelamedu Industrial Workers Co-operative House Construction Society at the cost of Rs. 62,920. In respect of Tiruppur and Peelamedu Schemes, tenders were invited. But, the proposals were deferred by Government due to National Emergency. Subsequently, Government permitted the Peelamedu scheme and it is nearing completion.

The 100 houses constructed by the Public Works Department under the Singanallur (Phase I) project were taken over by the Unit.

4. *Slum Clearance Improvement Scheme.*—The Unit took up the following three schemes at Coimbatore sanctioned for execution at a cost of Rs. 18,48,750 and the Socio-Economic Survey was in progress.

1. Slaughter House Area Slum;
2. Lingai Gowder Thottam Slum; and
3. Balian Thottam Slum.

An estimate for Rs. 6,68,645 for provision of 40 open developed plots and 96 two storeyed tenements in the Slaughter House area was prepared and an extent of 1.50 acres of land in the area was taken over from the Municipality. Five Slum Improvement Schemes in Salem, already sanctioned for Rs. 5,17,400 were taken up and possession of all the slum-sites and alternate sites excepting the Nalukalmandapam site and site north of Victoria Talkies, were taken over. An estimate for Rs. 5,15,000 has been prepared for rehabilitating the slum-dwellers in the Erumapalayam site.

5. *Land Acquisition and Development Scheme.*—Under the Land Acquisition and Development Scheme of the Government of India, about 5000 acres of land in Sundakkamuthur village were proposed to be acquired and developed into a "Township" "Kovai Pudoor". The acquisition proceedings were in progress and nearing completion.

28th July 1964]

6. *Non-Plan Schemes.*—The Unit formulated proposals for running a non-mechanized brick-kiln in Seeranaickenpalayam and proposals for acquisition of land for the purpose have also been initiated.

IV. MADURAI HOUSING UNIT.

1. *Subsidized Industrial Housing Scheme.*—About 8·44 acres of land were acquired for construction of 50 blocks consisting of 200 tenements for industrial workers under the Subsidized Industrial Housing Scheme at a cost of Rs. 1,14,455 and taken possession of. Construction of building at an estimated cost of Rs. 12.15 lakhs was entrusted on contract. By the end of 1962, Random Rubble Masonry basement were put up in 40 blocks and brick work was started in 20 blocks and brought up to lintel level. The value of work done is Rs. 1,49,000.

Out of three small items of maintenance work relating to Sivakasi colony Phase I, II works were completed and the third one was nearing completion. The annual maintenance and repair works in respect of Sivakasi Colonies for the year 1962–63 have been completed and the work of special repairs to Virudhunagar Subsidized Industrial Housing Colony which had been entrusted on contract was in progress. The work of deepening the well in Gopuram Colony was in progress. Expenditure for the year 1962 on the maintenance of and improvement to Industrial Colonies, is given below :—

Sivakasi Colony—Rs. 44,889.

Virudhunagar Colony—Rs. 2,886.

Proposals were initiated for acquiring lands for constructing 100 tenements at a cost of Rs. 5.00 lakhs at Rajapalayam, Ramanathapuram District and estimates also were prepared. Due to State of National Emergency, this project was deferred.

2. *Land Acquisition and Development Scheme.*—Proposals for the acquisition of about 500 acres in Sathamangalam and Thallakulam Villages were taken up. The acquisition proceedings are in progress.

3. *Brick-Kiln.*—One ordinary brick-kiln has been started near Madurai.

4. *Rental Housing Scheme for low-paid employees of State Government.*—Proposals for the construction of 100 houses for the low-paid State Government employees of the Madurai and Ramanathapuram Districts in the 7 acres of land in T.S. No. 842 of

Madurai, Race Course Road and for putting up rental houses in the 7 acres of land purchased in the Maharajanagar Colony at Palayamkottai were initiated. Construction work is in progress for about 250 storeyed flats.

V. TIRUCHIRAPPALLI HOUSING UNIT.

The following works were undertaken by the Tiruchirappalli Housing Unit in 1962 :—

1. Acquisition of about 250 acres of land for the implementation of Tiruchirappalli Neighbourhood Scheme under the Land Acquisition and Development Scheme.

2. Peechankulam and Kalamandai Slum Improvement Schemes.

3. Maintenance of the Subsidised Industrial Housing Colony at Vellanoor.

4. Construction work is in progress for construction of 150 storeyed, rental flats for low-paid Government Servants at Sengulam and 150 such rental flats for the public in Khajamalai.

The Board also took up the following works.

GENERAL.

PRODUCTION.

(i) *Lime.*—Due to acute shortage of cement experienced, the State Housing Board decided to replace cement by using lime or lime mortar. With the object, a 'Lime-Kiln' has been started since December 1962.

(ii) *Doors and Windows.*—The State Housing Board, in order to bring down the cost of construction, has begun using treated country wood in lieu of teax, for wood items. A departmental (mechanised) production Unit for wood working was started.

Brick-Kiln.—In order to have good quality chamber bricks for use on schemes at reasonable prices, a licence has been procured from the Government of India, for the establishment of a mechanised "Brick Plant." and action pursued to establish the plant. Meanwhile, an ordinary brick-kiln has been started by the Board in Kodambakkam-Pudoor,

Stores.—With a view to derive the advantage of procuring in bulk, building materials and thus make available good quality stores for use on works, a store was built up and various materials like electrical goods, sanitary and water supply materials, etc., are being procured, centrally by the Board for supply to individual works as and when required.

Office.—A suitable building to house the office of the rapidly expanding organisation is nearing completion on Mount Road, Madras-35.

APPENDIX I.

The State Housing Board has undertaken construction of rental flats in the Hamilton Bridge Road area, Lloyds Road, Mylapore, under the Middle Income Group Housing Scheme and Union Government Rental Housing Scheme for Low-paid employees of the State Government and also shops, garages, garages with bachelors quarters, etc.

The details of these schemes as they stood by the end of the December 1962 are furnished below :—

Serial number and name of work.	Number of blocks sanctioned and taken up for construction in 1962.	Number of tenements or apartments in the blocks mentioned in column (2).	Number of tenements or apartments constructed in 1962.	Estimated cost.	Expenditure incurred up to December 1962.	Remarks.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
				(Rs. in Lakhs).		
1 Construction of Rental Blocks for Middle Income Group persons.	20	120	Nil.	14·79	4·26	..
2 Construction of Rental Flats under the Union Government Rental Housing Scheme for low paid employees of the State Government.	18	168	36 flats nearing completion. 132 flats under construction.	16·53	1·79	..
3 Care takers office	—	..	Nil.	Completed.	0·15	..
4 Reading Room	1	..	Nil.	Completed except finishing items.	0·15	..
5 Garages	2	..	Nil.	Under construction.	0·76	..
6 Garages with bachelors quarters. ..	3	..	Nil.	Foundation excavation was in progress.	2·37	0.56
7 Shops	7	..	Nil.	Roof slab to be laid.	0·38	..
8 Community Hall	1	..	Nil.	Up to basement level.	1·11	..

APPENDIX II.

Statement showing the Expenditure incurred, Open Development Plots and Tenements constructed by Madras Housing Unit under the Slum Improvement/Clearance Scheme during the year 1962:—

Serial number and name of the scheme.	Expenditure incurred during 1962, i.e., from 1st April to 31st December 1962.	Number of open developed plots/tenements completed during the year.		Number of open developed plots/tenements under construction during the year.		Remarks.
		Open developed plots.	Tenements.	Open developed plots.	Tenements.	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
	Rs.					
1 Namasivayapuram ..	40,389	..	..	..	..	Road works were under progress.

APPENDIX III.

Statement showing the housing schemes under execution during 1962–63 and physical and financial achievements thereof from 1st April to 31st December 1962.—

Serial number and name of scheme. (1)	Expenditure incurred from 1st April to 31st December 1962. (2)	Number of houses/plots completed. (3)	Under construction/development. (4)	Remarks. (5)
	RS. IN LAKHS.			
1 Low Income Group Housing Scheme.	15·96	147 plots and 89 houses.	55 plots and 111 houses.	Expenditure shown in column (2) includes cost of provision of amenities for houses and plots already completed during previous years.
2 Middle Income Group Housing Scheme.	11·69	18 houses and 6 flats.	44 houses and 120 flats.	Do.
3 Union Government Rental Housing Scheme for State Government low-paid employees.	6·07	112 apartments	132 apartments	Do.
4 Other Non-Plan Schemes of State Government.	10·54	54 plots, 28 houses and 18 apartments.	3 rental blocks and shops and stalls in different areas.	Do.

பதில்.—சென்னை வீட்டு வசதி போர்டு, 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ம் தேதி சட்ட பூர்வமாக அமைக்கப்பட்டது. இந்த போர்டிற்கு சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் நான்கு வீட்டு வசதி யூனிட்டுகள் உள்ளன. பற்பல வீட்டு வசதித் திட்டங்கள், சேரி அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவது இந்தப் போர்டின் வேலையாகும். வீட்டு வசதித் திட்டங்கள் அனைத்திற்கும் திட்டம் வகுத்து, ஒன்றிணைத்து, தொழில் நுணுக்க அறிவுரைகளும் அளிக்கின்றது. மேலும் வீட்டு வசதி, அபிவிருத்தித் திட்டங்களின் கீழுள்ள அனைத்துத் திட்டங்களையும் சரிபார்க்கின்றது.

திட்டத்தில் சேர்ந்த, திட்டத்தில் சேராத கீழ்க்கண்ட வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு மாநில வீட்டு வசதி போர்டு மற்றும் அதன் யூனிட்டுகளைச் சார்ந்ததாகும்.

திட்டத்திலுள்ள வேலைத் திட்டங்கள்.

1. நில ஆர்ஜித, நில அபிவிருத்தித் திட்டம்.
2. மானிய உதவி பெறும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம்.
3. குறைந்த வருவாயுள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்.
4. சேரி ஒழிப்பு, சேரி அபிவிருத்தி வேலைத் திட்டம்.

திட்டத்தில் அடங்காத வேலைத் திட்டங்கள்.

1. நடுத்தர வருவாயுள்ளவர்கள் வீட்டு வசதி வேலைத் திட்டம்.
2. மாநில அரசின் குறைந்த சம்பளம் பெறும் ஊழியர்களுக்கான வாடகை வீட்டு வசதி வேலைத் திட்டம்.
3. மாநில வீட்டு வசதி போர்டின் திட்டத்திலடங்காத வேலைகள்.

1962-ல் மாநில வீட்டு வசதி போர்டு மற்றும் அதன் யூனிட்டுகளால் மேற்கொள்ளப்பட்ட திட்ட விவரங்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

I. தமிழ்நாடு வீட்டு வசதி போர்டு.

1. நில ஆர்ஜிதத் திட்டம், நில அபிவிருத்தித் திட்டம்.—சென்னை நகரின் எல்லைகளையொட்டி சுமார் 4,000 ஏக்கரா நிலங்களை ஆர்ஜிதம் செய்து நகரை அடுத்த சிறு நகர்ப்பகுதிகளாக அபிவிருத்தி செய்ய, மாநில வீட்டு வசதி போர்டின் திட்டம் பின் வருமாறு :—

(அ) கோடம்பாக்கம்-புதூர் சிறு நகர்ப்பகுதி (பாகம் 1) 1,000 ஏக்கரா.
(இ) தென் சென்னை சிறு நகர்ப்பகுதி .. 410 „
(உ) மேற்கு சென்னை சிறு நகர்ப்பகுதி 1,300 „
(எ) வட சென்னை சிறு நகர்ப்பகுதி .. 1,100 „

[28th July 1964

(அ) கோடம்பாக்கம்-புதூர் சிறு நகர்ப்பகுதி. (பாகம் 1)—முந்நூற்று இருபது ஏக்கரா நிலத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய இத் திட்டத்தில், 290 ஏக்கரா நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்டுள்ளது. 1962-ம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை ரூ. 12.49 லட்சம் நிலத்தின் கிரயத்திற்காக செலவிடப்பட்டுள்ளது. மற்றும் நிலத்தைச் சமன் செய்ய ரூ. 4.63 லட்சமும் செலவிடப்பட்டுள்ளது. இச் சிறு நகர்ப்பகுதியில் 3,000 மனைக்கட்டுகளுக்கு வசதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (சேரி அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்காக சுமார் 2,000 மனைக்கட்டுகளும், குறைந்த வருவாயுள்ளவர்கள், நடுத்தர வருவாயுள்ளவர்களுக்கு வீடு கட்ட சுமார் 1,000 மனைக்கட்டுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.) சென்னை வீட்டு வசதி யூனிட் 1,200 குடும்பங்களை சேரியிலிருந்து புதிதாகக் கட்டிய வீடுகளில் குடியமர்த்தியுள்ளது. குறைந்த வருவாயுள்ளவர்களுக்கும் நடுத்தர வருவாயுள்ளவர்களுக்கும் வீடு கட்ட 260 மனைக்கட்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சுமார் 100 மனைக்கட்டுகள் பொது மக்களுக்கு ஏலத்தில் விற்கப்பட்டன. மற்றும் 295 மனைக்கட்டுகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. மீதியுள்ளவை பொது மக்களுக்குப் போர்டின் மனைக்கட்டு ஒதுக்கீட்டுக் கமிட்டியால் அளிக்கப்பட்டுள்ளன. சாலைகள் அமைத்தல், தண்ணீர் வசதி செய்து தருதல் போன்ற வேலைகள் துவக்கப்பட்டு 1962-ல் முடியும் தருவாயில் இருந்தன. சாக்கடை, தெரு விளக்குகள் போடுதல் போன்ற வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

(இ) தென் சென்னை சிறு நகர்ப்பகுதித் திட்டங்கள்.—இத்திட்டத்திற்கு ரூ. 160 லட்சம் செலவாகுமென மதிப்பிடப் பட்டுள்ளது. இத் திட்டத்தின் வரைப்பட அமைப்பு முடிவு செய்யப்பட்டது. சேரி அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட 170 மனைக்கட்டுகள், சென்னை வீட்டு வசதி யூனிட்டால், சேரி வாழ் குடும்பங்களுக்கு வீட்டு வசதியளிக்கப் பயன்படுத்தப்பட்டன. சாலை அமைக்கும் வேலை துவங்கப்பட்டுள்ளது. குறைந்த வருமானம், நடுத்தர வருமானமுள்ளவர்களுக்காக 100 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு 80 மனைக் கட்டுகள் அளிக்கப்பட்டுள்ளன. மற்றும் பல மாடிகள் கொண்ட தனிக் குடியிறுப்புப் பகுதிகள் 600 கட்டப் போதுமான நிலங்கள் தவணை-கிரய முறையில் கூட்டுறவுச் சங்க அடிப்படையில் அளிக்கப்பட்டுள்ளன.

2. மானியம் பெறும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம்.—மாநில வீட்டு வசதி போர்டு நகரில், சர்மா நகர், திரு.வி.க. நகர் முதலிய காலனிகளில் 900 வீடுகளை அரசாங்கத் திட்டப்படி கட்டி மானிய உதவிபெற்ற இத் தொழிலாளர் காலனிகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது. மேலும் விருதுநகரில் 116 தொழில் நிறுவனங்களுக்கான வீடுகளும் சிவகாசியில் 200-ம் போர்டின் பராமரிப்பில் உள்ளன. பசுமலையில் (மதுரை) 200 குடியிருப்பு மனைகளையும், பீளமேட்டில் (கோயம்புத்தூர்) 96 குடியிருப்பு மனைகளையும் போர்டு கட்டிமுடித்து வருகிறது.

28th July 1964]

3. நடுத்தர வருமானம் பெறுவோர் வீட்டு வசதித் திட்டம்.—மாநில வீட்டு வசதி போர்டு, ஹாமில்டன் பிரிட்ஜ் ரோடில் (லாய்ட்ஸ் ரோடு) வாடகைக்கு 120 மாடிக் கட்டிட தனிக் குடியிருப்பு பகுதிகளை ரூ. 14.79 லட்சம் உத்தேச செலவில் கட்டும் வேலையை மேற்கொண்டது. தனிக் குடியிருப்பு வாடகைப் பகுதிகளின் முதல் தொகுதி இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பொதுமக்களுக்கு வாடகைக்கு விடப்படும்.

4. மாநில அரசின் குறைந்த வருவாயுள்ள ஊழியர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம்.—மத்திய அரசாங்கத்தின் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், மாநில வீட்டு வசதி போர்டு, ஹாமில்டன் பிரிட்ஜ் ரோடில் (லாயிட்ஸ் ரோடு) 192 மாடிக் கட்டிடங்களும், வாடகைக் குடியிறுப்பு மனைகளும் ரூ. 17.46 லட்சம் உத்தேச செலவில் கட்டும் வேலையை மேற்கொண்டது. ஹாமில்டன் பிரிட்ஜ் ரோடில் மேற்கொள்ளப் பட்ட வேலைத் திட்டம் சம்பந்தமாய் 1962, டிசம்பர் இறுதிவரைக் கான முழு விவரம் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

II. சென்னை வீட்டு வசதி யூனிட்

1. சேரி ஒழிப்பு அபிவிருத்தி வேலைத் திட்டம்.—இவ்வேலைத் திட்டத்தின்கீழ் இருவகைப்பட்ட அபிவிருத்திகள் உள்ளன. ஒன்று, ஒவ்வொரு குடும்பத்திற்கும் அபிவிருத்தி செய்த திறந்த வெளி மனைக்கட்டுகளைக் கொடுத்தல். மற்றொன்று குடியிருப்பு மனைகளைக் கட்டிக் கொடுத்தல். சென்னை வீட்டு வசதி யூனிட், சென்னை மாநகராட்சியிடமிருந்து மேற்கொண்ட சேரி ஒழிப்பு வேலைத் திட்டங்களுடன், கோடம்பாக்கம் புதூர் சிறு நகர்ப்பகுதியிலும், தென் சென்னை சிறு நகர்பகுதியிலும் சேரிவாழ் மக்களின் புனரமைப்பு வேலையையும் சென்னை வீட்டு வசதி யூனிட் மேற்கொண்டுள்ளது.

இவ்வேலைத் திட்டத்தின்கீழ் திறந்த வெளி விஸ்தரிப்புக் குடியிருப்பு பகுதிகள், குடியிருப்பு மனைகள் முதலியவை கட்டுவதற்கு ஆன செலவு விவரங்களின் அறிக்கை இணைப்பு 2-ல் காட்டப் பட்டுள்ளது.

2. நடுத்தர வருவாயுள்ளவர்கள் வீட்டு வசதித் திட்டம்—சென்னை வீட்டு வசதி யூனிட், நடுத்தர வருவாயுள்ளவர்களுக் கான வீடுகள், குடியிருப்பு மனைகள் இவற்றைத் தவணை-கிரய முறையில் வாங்கும் அடிப்படையிலும், வாடகை அடிப்படையிலும் கட்டும் பணியை, பற்பல வேலைத் திட்டப் பகுதிகளில் மேற்கொண்டுள்ளது.

3. மாநில வீட்டு வசதி போர்டின் குறைந்த வருமானம் பெறும் ஊழியர்களுக்கான வாடகை வீட்டு வசதி வேலைத் திட்டம்.—முந்திய, நகர அபிவிருத்தி டிரஸ்டின் சேரி ஒழிப்புத் திட்டத்தின்கீழ் சாந்தோம் கடற்கரை எஸ்டேட்டில் கட்டப்பட்ட 500 குடியிருப்புப் பகுதிகள் கொண்ட கட்டிடங்களை வாடகை வீட்டு வசதி வேலைத் திட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இதைத் தவிர சென்னை வீட்டு வசதி யூனிட் கடற்கரை எஸ்டேட்டில் மேலும் 168 குடியிருப்பு பகுதிகளுக்கான கட்டிடங்கள் கட்டும் வேலையையும் மேற்கொண்டுள்ளது. மாநில அரசாங்கத்தின் குறைந்த வருவாயுள்ள ஊழியர்களுக்காக 596 குடியிருப்புப் பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

கீழ்ப்பாக்கம் கார்டன் பகுதியில் 96, மூன்று மாடி, வாடகைக் குடியிருப்பு (16 தொகுதிகள்) மனைகளைக் கட்டும் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 96 குடியிருப்பு பகுதிகள் முடிக்கப்பட்டன. இக் குடியிருப்பு பகுதிகள் மாநில அரசாங்கத்தின் ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

4. குறைந்த வருவாயுள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்.—சென்னை, வீட்டு வசதி யூனிட் (1963-64-ல்) சுமார் 300 குறைந்த வருவாயுள்ள வீடுகள்/குடியிறுப்புப் பகுதிகள் இவற்றைத் தவணை-கிரய முறையில் வாங்கும் அடிப்படையிலும், வாடகை அடிப்படையிலும் பல்வேறு வேலைத் திட்டப் பகுதிகளில் கட்டி வருகிறது.

5. மாநில வீட்டு வசதி போர்டின், திட்டத்தில் சேராத வேலைத் திட்டங்கள்.—மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் இவற்றின் திட்டத்தில் சேர்ந்த, திட்டத்தில் சேராத வேலைத் திட்டங்களைத் தவிர, சென்னை வீட்டு வசதி யூனிட் முழுவதும் மாநில அரசாங்க நிதியைப் பயன்படுத்தி மற்ற சில வீட்டு வசதி, விஸ்தரிப்பு வேலைத் திட்டங்களையும் நிறைவேற்றுகிறது.

1962-63-ம் ஆண்டில் நிறைவேறிவரும் பற்பல வீட்டு வசதி வேலைத் திட்டங்கள், 1962-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1962-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரைக்கான திட்டக் குறியளவு, நிதி நிலைமை இவை இணைப்பு 3-ல் காட்டப்பட்டுள்ளன.

III. கோயம்புத்தூர் வீட்டு வசதி யூனிட்.

1. குறைந்த வருவாயுள்ளவர்கள் வீட்டு வசதி வேலைத் திட்டம்.—இந்த யூனிட் கோயம்புத்தூர் ஆர்.எஸ். புரத்தில் 24 மூன்று மாடிக் குடியிருப்புப் பகுதிகளை ரூ. 1,62,500 மதிப்பீட்டுச் செலவில் கட்டும் வேலையை மேற்கொண்டுள்ளது.

2. நடுத்தர வருவாயுள்ளவர்களுக்கான வீட்டு வசதி வேலைத் திட்டம்.—இந்த யூனிட் ஆர்.எஸ். புரத்தில் இருபத்து நான்கு வீடுகள் கொண்ட நான்கு தொகுதிகளை (வாடகை அடிப்படையில்) ரூ. 3,92,175 மதிப்பீட்டுச் செலவில் கட்டி முடிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. முதல் தொகுதி பொதுமக்களின் உபயோகத்திற்கு இன்னும் ஒரு மாதத்தில் விடப்படும்.

3. மானிய உதவி பெறும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம்.—மானிய உதவி பெறும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் குடியிறுப்பு மனைகள் கட்டும் யோசனை கீழ்க்கண்டவாறு முறைப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர் எண்.	இடங்கள்.	மதிப்பீடுகள்.	குடியிருப்பு மனைகள்.
		ரூ.	
1	திருப்பூர்	6,21,000	ஒரு மாடியுள்ள ஓர் அறை வசதியுள்ள 100 குடியிருப்புகள்.
2	பீளமேடு	6,87,375	இரு மாடியுள்ள ஓர் அறை வசதியுள்ள 96 குடியிருப்புகள்.
3	சிங்கநல்லூர் III-ம் நிலை திட்டம்	6,70,300	ஒரு மாடியுள்ள ஓர் அறை வசதியுள்ள 100 குடியிருப்புகள்.

பீளமேட்டில், பீளமேடு தொழிற்சாலைத் தொழிலாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திடமிருந்து 2.72 ஏக்கர் நிலம் கட்டி முடிக்கப்பெறாத குடியிறுப்புகளுடன் ரூ. 62,920-க்கு விலைக்கு வாங்கப்பட்டது. திருப்பூர், பீளமேடு வேலைத் திட்டங்களைப் பொறுத்த வரையில், டெண்டர்கள் வரவழைக்கப்பட்டன. ஆனால் தேசிய நெருக்கடி நிலை காரணமாக, இந்த யோசனைகளை அரசாங்கம் தள்ளி வைத்தது. இதையடுத்து பீளமேடு வேலைத் திட்டத்திற்கு அரசாங்கம் இசைவளித்துள்ளது. இந்த வேலை முடியும் தருவாயிலுள்ளது.

சிங்கநல்லூர் (நிலை 1) திட்டத்தின்கீழ் பொதுப் பணித்துறை கட்டியுள்ள 100 வீடுகளை இந்த யூனிட் எடுத்துக்கொண்டது.

4. சேரி ஒழிப்பு வளர்ச்சித் திட்டம்.—இந்த யூனிட் கோயம்புத்தூரில் இசைவு அளிக்கப்பட்ட கீழ்க்காணும் மூன்று வேலைத் திட்டங்களையும் ரூ. 18,48,750 செலவில் நிறைவேற்ற மேற்கொண்டது. மற்றும் சமூக-பொருளியல் சர்வே நடைபெற்று வந்தது :—

(1) கசாப்புக் கடை பகுதிச் சேரி.

(2) லிங்கை கவுண்டர் தோட்டம் சேரி.

(3) பாலையன் தோட்டம் சேரி.

ரூ. 6,68,645 செலவில் கசாப்புக் கடைப் பகுதியில், நாற்பது திறந்த வெளி அபிவிருத்தி நிலப் பகுதிகளும், 96 இரண்டு மாடிக் குடியிருப்புக் கட்டிடங்களும் கட்டும் ஏற்பாடுகளுக்கும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மற்றும் நகராட்சியிடமிருந்து 1.60 ஏக்கர் பரப்புள்ள நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டது. சேலத்தில் முன்பே ரூ. 5,17,400-க்கு அனுமதிக்கப்பட்ட ஐந்து சேரி அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, நாலுகால் மண்டபம் மனைப் பகுதியும், விக்டோரியா டாக்கீசின் வடக்கு புற மனைப் பகுதியும் தவிர, மற்ற எல்லாச் சேரி மனைகளும், மாற்று மனைகளும் அனுபோகத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன. எருமைபாளையம் மனையில், சேரி வாழ் மக்களின் மறு வாழ்வு வசதிக்காக ரூ. 5,15,000-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

5. நில ஆர்ஜிதம், நில அபிவிருத்தி வேலைத் திட்டம்.—மத்திய அரசாங்கத்தின் நில ஆர்ஜித அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ், சுண்டக்காமுத்தூர் கிராமத்தில் சுமார் 500 ஏக்கரா நிலத்தை ஆர்ஜிதம் செய்து நகர்ப்புறமாக (Township) ("கோவை புதூர்") அபிவிருத்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டது. நில ஆர்ஜித வேலைகள் துவங்கப்பட்டு முடியவிருக்கின்றன.

6. திட்டத்தில் சேராத வேலைகள்.—இயந்திரங்களால் இயங்காத செங்கற்சூளை ஒன்றை சீரநாய்க்கன் பாளையத்தில் நடத்தவும், அதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யவும் யோசிக்கப்பட்டது.

IV. மதுரை வீட்டு வசதி யூனிட்.

1. மானியம் பெறும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம்.—மானியம் பெறும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ரூ. 1,14,455 செலவில், 200 குடியிருப்புப் பகுதிகளுள்ள 50 தொகுதிகளைக் கட்டுவதற்கு சுமார் 8.44 ஏக்கா நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. ரூ. 12.15 லட்சம் உத்தேச செலவில் கட்டிடம் கட்டும் வேலை ஒப்பந்த அடிப்படையில் விடப்பட்டுள்ளது. 1962-ம் ஆண்டு முடிவில் 40 தொகுதிகளுக்கு சல்லிக்கல் அஸ்திவாரம் போடப்பட்டது. மற்றும் 20 கட்டிடத் தொகுதிகளில் செங்கல் கட்டிட வேலை துவங்கப்பட்டு, வாயில் உத்திர அளவிற்கு வந்துள்ளது. ரூ. 1,49,000 மதிப்பிற்கு வேலை செய்யப்பட்டுள்ளது.

சிவகாசி காலனி, கட்டம் 1, சம்பந்தப்பட்ட மூன்று சிறிய பராமரிப்பு வேலைகளில், இரண்டு வேலைகள் முடிக்கப்பட்டன. மூன்றாவது விரைவில் முடியவிருக்கிறது. சிவகாசி காலனி சம்பந்தமான 1962-63-ம் ஆண்டுக்கான, வருடாந்திர பராமரிப்பு, மராமத்து வேலைகள் முடிக்கப்பட்டன. மற்றும் ஒப்பந்த அடிப்படையில் விடப்பட்ட விருதுநகர், மானியம் பெறும் தொழிலாளர் வீட்டு வசதிக் காலனிக்கான விசேஷ மராமத்து வேலை நடைப்பெற்றது. கோபுரம் காலனியில் கிணற்றை ஆழமாக்கும் வேலை

நடைபெற்றது. தொழிலாளர் காலனிகளைப் பராமரிக்கவும், மேம்படுத்தவும் 1962-ம் ஆண்டிற்கான செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சிவகாசி காலனி—ரூ. 44,889.

விருதுநகர் காலனி—ரூ. 2,886.

ராஜபாளையம், ராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ. 5.00 லட்சம் செலவில் 100 குடியிருப்புப் பகுதிகளைக் கட்டத் தீர்மானிக்கப்பட்டு மதிப்பீடும் தயாரிக்கப்பட்டது. தேசீய நெருக்கடியை முன்னிட்டு இந்தத்திட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

2. நில ஆர்ஜிதம், நில அபிவிருத்தி வேலைத் திட்டம்.—சாத்தமங்கலம், தல்லாகுளம் கிராமங்களில் சுமார் 500 ஏக்கராக்கள் ஆர்ஜிதம் செய்யும் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது. நில ஆர்ஜித வேலைகள் நடைப்பெற்று வருகின்றன.

3. செங்கற் சூளை.—மதுரைக்கருகே சாதாரண செங்கற் சூளையொன்று தொடங்கப்பட்டுள்ளது.

4. மாநில அரசாங்கத்தின் குறைந்த வருவாயுள்ள ஊழியர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம்.—மாநில அரசாங்கத்தின் குறைந்த வருவாயுள்ள மதுரை, ராமநாதபுரம் மாவட்ட ஊழியர்களுக்கு மதுரை, ரேஸ்கோர்ஸ் ரோட்டில், டி.எஸ். 842-ம் இலக்கத்தில் ஏழு ஏக்காவில், நூறு வீடுகள் கட்டவும், பாளையம் கோட்டை மஹாராஜநகர் காலனியில் வாங்கப்பட்ட ஏழு ஏக்காக்களில் வாடகை வீடுகள் கட்டவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுமார் இருநூற்றைம்பது மாடிக் கட்டிட குடியிருப்புப் பகுதிகளில் வேலை நடைப்பெற்று வருகிறது.

V. திருச்சிராப்பள்ளி வீட்டு வசதி யூனிட்.

கீழ்க்காணும் பணிகள் திருச்சி வீட்டு வசதி யூனிட்டால் 1962-ல் மேற்கொள்ளப்பட்டன :—

1. நில ஆர்ஜித, நில அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ், திருச்சி சிறுநகர்ப் பகுதித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகச் சுமார் 250 ஏக்கரா நில ஆர்ஜித வேலை.

2. பீச்சான்குளம், கல்மந்தை சேரி மேம்பாடு வேலைத்திட்டம்.

3. வெள்ளனூரிலுள்ள மானியம் பெறும் தொழிலாளர்கள் வீட்டு வசதிக் காலனிப்பராமரிப்பு.

4. அரசாங்கத்தின் குறைந்த வருவாய் பெறும் ஊழியர்களுக்காக செங்குளத்தில் 150 மாடிக் கட்டிடங்களும், வாடகைக் கட்டிடப் பகுதிகளும், மற்றும் பொதுமக்களுக்காக காஜாமலைப் பகுதியில் 150 வாடகைக் கட்டிடப்பகுதிகளும் கட்டும் வேலை நடைப்பெறுகிறது. இந்த போர்டு கீழ்க்கண்ட பணிகளையும் மேற்கொண்டது.

[28th July 1964

பொது

உற்பத்தி

(1) சிமெண்ட் பற்றுக்குறை காரணமாக, மாநில வீட்டு வசதி போர்டு சிமெண்ட்டிற்குப் பதில் சுண்ணும்பு அல்லது காரையைப் பயன்படுத்தத் தீர்மானித்துள்ளது. இதற்காக 1962, டிசம்பரில் இருந்து சுண்ணும்புக் காளவாய் ஒன்று துவக்கப்பட்டுள்ளது.

(2) **கதவுகள், ஜன்னல்கள்.**—மாநில வீட்டு வசதி போர்டு கட்டிடச் செலவைக் குறைக்கும் பொருட்டு, மரவேலைகளுக்கு தேக்கு மரங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, பதப்படுத்தப் பட்ட நாட்டு மரங்களை உபயோகிக்கத் துவங்கியுள்ளது. மரவேலைகளுக்காக அலுவலக உற்பத்தி யூனிட் (விசையில் இயங்குவது) துவங்கப்பட்டது.

செங்கற் சூளை.—கட்டிட வேலைகளில் பயன்படுத்துவதற்கான நியாயமான விலையில் செங்கற்களைப் பெற, விசையில் இயங்கும் 'செங்கற் சூளை' ஒன்று நிறுவ மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற்று, இயந்திர அமைப்பு வேலை துவங்கப்பட்டுள்ளது. இதற்கிடையே கே. புதூரில் சாதாரண செங்கற் சூளையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிடங்குகள்.—கட்டிட சாமான்களை மொத்தமாக வாங்குவதால் உண்டாகும் நன்மைக்காகவும், உயர்தர சாமான்களை பணிகளில் பயன்படுத்த வசதியாகவும் இந்த போர்டு ஒரு கிடங்கு கட்டி அதில் மின்சார சாமான்கள், சுகாதார மற்றும் நீர் சப்ளை வசதிக்கான சாமான்கள், இவற்றை வாங்கிச், சேகரித்து அவ்வப்போது தேவையான சமயங்களில் தனிப்பட்ட பணிகளுக்கு வழங்குகிறது.

அலுவலகம்.—விரைவில் விரிவடைந்துவரும் இந்த நிறுவனத்தின் அலுவலகத்திற்காக சென்னை-35, மவுண்ட் ரோடில் தகுந்த கட்டிடம் ஒன்று கட்டப்பட்டு விரைவில் முடிவடையவிருக்கிறது.

28th July 1964]

இணைப்பு I.

மாநில வீட்டு வசதி போர்டு மயிலாப்பூர் ஹாமில்டன் ப்ரிட்ஜ் ரோடு (லாயிட்ஸ் ரோடு), நடுத்தர வருவாயுள்ளவர்கள் வீட்டு வசதி வேலைத் திட்டத்தின் கீழும், மாநில அரசாங்கத்தின் குறைந்த வருவாயுள்ள ஊழியர்களுக்கான மத்திய அரசாங்கத்தின் வாடகை வீட்டு வசதி வேலைத் திட்டத்தின் கீழும், வாடகைக் குடியிருப்புப் பகுதிகளைக் கட்டும் பணியை மேற்கொண்டுள்ளது. மற்றும் கடைகள், காரேஜுகள், காரேஜுகளுடன் கூடிய மணமாகாதவர்களுக்கான குடியிருப்புப் பகுதிகள் முதலியவற்றையும் கட்டி வருகிறது.

இவ்வேலைத் திட்டங்களின் விவரங்கள் 1963-ம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிவரை உள்ளபடி கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தொடர் எண்ணும் வேலையின் பெயரும்.	1962-ல் அனுமதி அளிக்கப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கையும் கட்டுவதற்கு எடுத்துக் கொள்ளப் பட்டவற்றின் எண்ணிக்கையும்.	(2)-ம் பத்தியில் கூறப்பட்ட தொகுதிகளில் உள்ள வாடகைக் குடியிருப்பு அறைகள் எண்ணிக்கை.	1962-ல் கட்டப்பட்ட குடியிருப்புப் பகுதிகள் அல்லது அறைகள்.	உத்தேச செலவு.	1962 டிசம்பர் குறிப்புகள். வரை செலவு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1 நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்காகக் கட்டப்படும் வாடகைத் தொகுதி.	20	120	இல்லை.	14·79	4·26	..
2 மாநில அரசாங்கத்து குறைந்த ஊதியம் பெறும் ஊழியர்களுக்காக மத்திய அரசாங்கத்தின் வாடகை வீட்டு வசதி வேலைத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வாடகைக் குடியிருப்புப் பகுதி.	18	168	36 குடியிருப்புப் பகுதிகள் கட்டி முடிய விருக்கின்றன. 132 பகுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.	16·53	1·79	..
3 பாதுகாப்பாளர் அலுவலகம்.	1	இல்லை	முடிக்கப்பட்டது.	0·15	..	..

தொடர் எண்ணும் வேலையின் பெயரும்.	1962-ல் அனுமதி அளிக்கப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கையும் கட்டுவதற்கு எடுத்துக கொள்ளப் பட்டவற்றின் எண்ணிக்கையும்.	(2)-ம் பத்தியில் கூறப்பட்ட தொகுதிகளில் உள்ள வரடகைக் குடியிருப்பு அறைகள் எண்ணிக்கை.	1962-ல் கட்டப்பட்ட குடியிருப்புப் பகுதிகள் அல்லது அறைகள்.	உத்தேச செலவு.	1962 டிசம்பர் வரை செலவு.	குறிப்புகள்.
(1)	(2)	(3)	(4)	(5) ரூபாய் லட்சத்தில்.	(6)	(7)
4 நூல் நிலையம்	1	இல்லை ..	இறுதியான சிறு வேலைகள் தவிர முடிந்து விட்டது.	0·15	..	..
5 காரேஜுகள்	2	இல்லை ..	கட்டப்பட்டுவருகின்றன.	0·76	..	..
6 காரேஜுகளுடன் கூடிய மணமாகாதவர்களுக்கான குடியிருப்புப் பகுதிகள்.	3	இல்லை ..	அஸ்திவாரம் தோண்டும் வேலை நடைபெறுகிறது.	2·37	0·56	..
7 கடைகள்	7	இல்லை ..	கூரைப் பலகை போடப் படவேண்டும்.	0·38	..	..
8 பொதுக்கூடம்	1	இல்லை ..	நிலமட்டம் வரை.	1·11	..	..

இணைப்பு II.

1962-ம் ஆண்டில் சென்னை வீட்டு வசதி யூனிட்டால், சேரி அபிவிருத்தி/ஒழிப்பு வேலைத் திட்டத்தின்கீழ், அபிவிருத்தி செய்யப்பட்ட திறந்தவெளி மனைப் பகுதிகள், கட்டப்பட்ட குடியிருப்புப் பகுதிகளுக்கு ஆன செலவு, விவரம், இவற்றைக் காட்டும் அறிக்கை:—

தொடர் எண்ணும் வேலைத்திட்ட விவரமும்.	1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதியிலிருந்து 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரை உண்டான செலவு.	இந்த ஆண்டில் முடிக்கப்பட்ட திறந்தவெளி அபிவிருத்தி மனைகள் குடியிருப்புப் பகுதிகள் எண்ணிக்கை.		இந்த ஆண்டில் கட்டப்படும் திறந்தவெளி மனைகள் குடியிருப்புப் பகுதிகள் எண்ணிக்கை.		குறிப்புகள்.
		திறந்தவெளி அபிவிருத்தி மனைகள்.	குடியிருப்புப் பகுதிகள்.	திறந்தவெளி அபிவிருத்தி மனைகள்.	குடியிருப்புப் பகுதிகள்.	
(1)	(2) ரூ.	(3)	(4)	(5)	(6)	(7)
1 நமசிவாயபுரம் ..	40,389	..	..	..	..	சாலை வேலைகள் நடந்து வருகின்றன.
2 குமாரராஜபுரம் புஷ்ப நகர்.	81,906	..	16	..	16	32 குடியிருப்புப் பகுதிகள், சாலை வேலைகள் நடைபெறுகின்றன.
3 அரசாங்க வாய்க்கால் சந்து குடிசை நிலப் பகுதி.	10,662	..	..	..	..	சாலை வேலைகள் நடைபெற்றன.
4 கஜபதிலாலா பகுதி	..	..	..	..	..	கோர்ட்டிலிருந்து தடுப்பு ஆணை வந்ததால் வேலை நிறைவேற்றப்படவில்லை.
5 ராஜு பிள்ளை தோட்டம்.	79,428	80	..	40	...	..
6 புது கன்னியப்ப நகர் ..	11,62,429	728	..	42	..	..
7 எல்லீஸ்புரம்	289	...	..	32	30	..

தொடர் எண்ணும் வேலைத்திட்ட விவரமும்.	1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதியிலிருந்து 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரை உண்டான செலவு.	இந்த ஆண்டில் முடிக்கப்பட்ட திறந்தவெளி அபிவிருத்தி மனைகள் குடியிருப்புப் பகுதிகள் எண்ணிக்கை.		இந்த ஆண்டில் கட்டப்படும் திறந்தவெளி மனைகள் குடியிருப்புப் பகுதிகள் எண்ணிக்கை.		குறிப்புகள்.
		திறந்தவெளி அபிவிருத்தி மனைகள்.	குடியிருப்புப் பகுதிகள்.	திறந்தவெளி அபிவிருத்தி மனைகள்.	குடியிருப்புப் பகுதிகள்.	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
	ரூ.					
8 காமராஜபுரம் எக்ஸ்டென்ஷன்.	10,593	..	..	..	..	சாலை வேலைகள் நடைபெற்றன.
9 பல வகைகள் கொண்ட பெருந்தொகுதி.	5,24,686	20	..	..	..	..
10 ராமகாமத்புரம் ..	27,275	72	..	..	72	..
11 வண்ணன்துறை ரோடு.	41,701	50	..	1	..	..
12 உரூர்	4,840	..	..	..	..	இவ்வேலைத் திட்டம் மறு ஆய்வில் உள்ளது.
13 கபாலீசுவரர் கோயில் நிலங்கள்	625	..	..	..	..	நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டன.
14 விசாலாட்சி அம்மாள் ..	..	..	..	..	..	ஷை
15 பல்லாக்கு மானியம் ..	..	..	..	..	..	நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படுகின்றன.
16 மாம்பலம் குளக்கரை ..	1,265	..	..	..	..	நிலங்கள் ஒப்படைக்கப்படவில்லை.
17 அப்போலோ நகர் ..	20,853	..	..	..	..	கோர்ட்டின் தடுப்பு ஆணையால் வேலை நடைபெறவில்லை.
18 வெங்கடபுரம்	1,283	56	..	..	..	நிலங்கள் சமீபத்தில் ஒப்படைக்கப்பட்டன.
19 தாண்டவராய சத்திரம்..	4,53,387	..	120	..	152	..
20 வெங்கடேசபுரம் ..	71,399	..	..	..	46	..
21 காசிபுரம் தொகுதி ..	56,310	..	..	..	..	..
22 நடைபாதை வாசிகள் (வியாசர்பாடி).	121	331	..		..	..
	25,89,401	1,337	136	122	316	

குறிப்பு.—மேற்கண்ட 22 வேலைத்திட்டங்கள் தவிர, சென்னை வீட்டு வசதி யூனிட் மேலும் 22 வேலைத் திட்டங்களுக்கான ஆரம்ப வேலைகளை மேற்கொண்டுள்ளது. அவை முறைப்படுத்தல், ஆர்ஜிதம செயதல் போன்ற ஆரம்பக் கட்டங்களில் இருந்தன.

இணைப்பு III.

திட்டங்களும், 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ந் தேதி வரையுள்ள திட்டக் குறிப்பேடுகளையும், நிதி நிலையையும் காட்டும் அறிக்கை:—

1962–63-ம் ஆண்டில் செயலிலுள்ள வேலைத் திட்டத்தின் தொடர் எண்ணும் வேலைத் திட்டத்தின் பெயரும்.	1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரை ஆன செலவு.	வீட்டு வசதி வேலைத் திட்டக் குறிப்பேடுகளில் காட்டப்பட்ட வீடுகள்/மனைகள் எண்ணிக்கை.	குறிப்புகள்.
(1)	(2)	(3)	(4)
	ரூ. லட்சத்தில்.		
1 குறைந்த வருவாயுள்ளவர்களுக்கான வீட்டு வசதி வேலைத் திட்டம்.	15·96	147 மனைகள், 89 வீடுகள்.	55 மனைகள், 111 வீடுகள்.
2 நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதி வேலைத் திட்டம்.	11·69	18 வீடுகள், 6 மனைகள்.	44 வீடுகள், 120 மனைகள்.
3 மாநில அரசாங்கத்தின் குறைந்த ஊதியம் பெறும் ஊழியர்களுக்கான, மத்திய அரசாங்கத்து வாடகை வீட்டு வசதி வேலைத் திட்டம்.	6·07	112 அறைகள்.	132 அறைகள்.
4 மாநில அரசாங்கத்தின் திட்டத்திடம் காத மற்ற வேலைத் திட்டங்கள்.	10·54	54 மனைகள், 28 வீடுகள், 18 அறைகள்.	பல பகுதிகளில் 3 வாடகைத் தொகுதிகள், கடைகள், ஸ்டாலுகள்.

28th July 1964]

APPENDIX VI.

[*Vide* Answer to Unstarred Question No. 257 on page 446]

Statement showing the particulars of Beggar Homes in the State of Madras.

	Strength as on 31st December 1963.	*Remarks.*
Care Home at—		
1 Corporation Special Home, Krishnampet, Madras.	201	Run by the Corporation of Madras.
2 Virudhunagar	8	Run by the Municipal Council.
3 Ootacamund	22	Do.
4 Coimbatore	20	Do.
5 Pudukkottai	..	Do.
6 Tiruchirappalli	25	Do.
7 Madurai	18	Do.
8 Chingleput	13	Do.
9 Nagercoil	22	Do.
10 Palayamcottai	25	Do.
Care Camps at—		
11 Daya Sadan, Otteri, Madras.	435	Private Institution aided by Government.
12 Pudukkottai	19	Run by the Municipal Council.
13 Tiruchirappalli	80	Do.
14 Chidambaram	Started functioning from 2nd February 1964.	Do.
15 Sirkali (Special-*cum*-Work House).	Not yet opened.	Sirkali Panchayat.

சென்னை மாநிலத்தில் உள்ள பிச்சைக்காரர் விடுதிகள் பற்றிய விவரங்களைக் காட்டும் அறிக்கை.

	1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி இருந்தபடி எண்ணிக்கை.	குறிப்புகள்.
பாதுகாப்பு விடுதி உள்ள இடம்—		
1 மாநகராட்சி தனி விடுதி, கிருஷ்ணம்பேட்டை, சென்னை.	201	சென்னை மாநகராட்சியால் நடத்தப்படுகிறது.
2 விருதுநகர்	8	நகராட்சியால் நடத்தப்படுகிறது.

	1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி இருந்தபடி எண்ணிக்கை.	குறிப்புகள்.
பாதுகாப்பு விடுதி உள்ள இடம்—தொடர்ச்சி.		
3 உதகமண்டலம் ..	22	நகராட்சியால் நடத்தப் படுகிறது.
4 கோயம்பத்தூர் ..	20	ஷை
5 புதுக்கோட்டை ..	..	ஷை
6 திருச்சிராப்பள்ளி ..	25	ஷை
7 மதுரை	18	ஷை
8 செங்கற்பட்டு	13	ஷை
9 நாகர்கோயில்	22	ஷை
10 பாளையம்கோட்டை ..	25	ஷை
பாதுகாப்பு கூடாரங்கள் உள்ள இடம்—		
11 தயாசதன், ஒட்டேரி, சென்னை.	435	அரசாங்க உதவிபெறும் தனியார் நிறுவனம்.
12 புதுக்கோட்டை ..	19	நகராட்சியால் நடத்தப் படுகிறது.
13 திருச்சிராப்பள்ளி ..	80	ஷை
14 சிதம்பரம்	1964-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ந் தேதியிலிருந்து நடைபெற்று வருகிறது.	ஷை
15 சீர்காழி (பணி மனை சொந்த தனி விடுதி.)	திறக்கப்படவில்லை.	சீர்காழி பஞ்சாயத்து.

APPENDIX VII.

[Vide answer to unstarred question No. 265 on page 450.]

(*a*) *to* (*c*)—New Elementary Schools were opened in the thirty villages mentioned below and all the thirty are working of which the first 19 have been granted recognition :—

Serial number and name of the village.
1 Authichanoor.
2 Parppanacheri.
3 Mathur.
4 Thenoor.
5 Kudikkadu
6 Munithiriyanpatti.
7 Kangeyankurichy.
8 Settakulippallam.
9 Natthaveli.
10 Poovanthikkollai.
11 Poomudaiyamankudikkadu.
12 Alathippallam.
13 South Ayuthakkavalan.
14 Piranseri.
15 Thalaiyarikkudikkadu.
16 Aranoor.
17 Sindhidaiyar.
18 Kattayankudikkadu.
19 Vaippam.
20 Kalvettu.
21 Rengasamudram.
22 Eruthukaranpatti.
23 Thavutthakulam.
24 Orathur.
25 Kunjaveli.
26 Koraikkuli.
27 Mazhavarayanallur.
28 Matthumadakki.
29 Chinna Melakkudikkadu.
30 Ilayaperumalnallur.

(அ) முதல் (உ) வரை : கீழ்க் கண்டுள்ள முப்பது கிராமங்களில் புதிய துவக்கப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. அந்த முப்பது துவக்கப் பள்ளிகளும் தற்பொழுது நடந்துவருகின்றன. அவற்றில் முதல் பத்தொன்பது துவக்கப் பள்ளிகள் அங்கீகாரம் பெற்றுள்ளன :—

1 ஆதிச்சனூர்.
2 பார்பனச்சேரி.
3 மாத்தூர்.
4 தேனூர்.
5 குடிக்காடு.
6 முனிதிரியன்பட்டி.
7 காங்கேயன்குறிச்சி.
8 செட்டக்குளிப்பள்ளம்.
9 நத்தவெளி.
10 பூவந்திக்கொல்லை.
11 பூமுடையமன் குடிக்காடு.
12 ஆலத்திப்பள்ளம்.
13 தெற்கு ஆயுதக்கவலன்.
14 பிரான்சேரி.
15 தலையாரிக் குடிக்காடு.
16 ஆரனூர்.
17 சிந்திடையார்.
18 கடையன் குடிக்காடு.
19 வைப்பம்.
20 கல்வெட்டு.
21 ரெங்கசமுத்திரம்.
22 எருதுக்காரன்பட்டி.
23 தவுத்தாக்குளம்.
24 ஓரத்தூர்.
25 குஞ்சாவெளி.
26 கோரைக்குழி.
27 மழவராயநல்லூர்.
28 மத்துமடக்கி.
29 சின்னமேலக்குடிக்காடு.
30 இளையபெருமாள் நல்லூர்.

INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

FOURTH SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA

23rd to 25th, 27th and 28th July 1964

(Volume XXIII Nos. 1 to 5.)

PAGES

A

ACCIDENTS—
Fire, subsidy to victims 228–233
Motor, applications disposed of by Claims Tribunal 418–419
Railway-level crossings 351–353

ACT(S)—
Land Ceiling Act, case in Supreme Court *re* validity 122–124
Minimum Wages Act, Review of working 238

ADVOCATE-GENERAL—
Appointment 431–432

AGRICULTURE—
Agricultural Income-tax, Arrears 360
Agriculturists in Parambikulam-Aliyar Project, Financial aid .. 243–244
Pumpsets, installation 115–117
Southern Regional Conference on Agricultural Production 226–228
Tractor Factory, Establishment 240–241

ALAGAMUTHU SRI T. P.—
Communal clash in Madras City 450–451
Corporation Councillor, arrest 7–14
Government servants, scales of pay 424–425
Industries, income 447
Minimum Wages Act, Review of working 238
Special Week celebrations, details 349
Tamil pandits, appointment 444
Teak, planting 114–115
Tourism, decision taken by South Zone Tourist Advisory Committee for promotion 23
Tourist Home, Tiruchirappalli 23
Village Officers (Thanjavur district), resignation 132–134
World Fair in New York, products of Madras State, Exhibition .. 249
Yarn, production 48

A—*cont.*

PAGES.

ALL-INDIA SERVICES—
Creation 422–423

AMBIKAPATHY, SRI C. M.—
Avenue trees, lease income, realisation 338
Co-operative Farming Societies, Thiruthuraipoondi and Nagappattinam taluk 25–26
Nallaru, Diversion and draining into Vedaranyam Canal 238
Sales Depots (Industries Department) 249–250

ANANDAN, SRI L.—
Gomukhi river Project, irrigational facility 135
Gur (Movement Control) order, repealing 132
Scheduled castes, assignment of lands 137–138
Swamikulam Eri, improvements 115
Tractor Factory, Establishment 240–241
Water-supply Scheme, Kallakurichi Taluk 250

ANANDANAYAKI, SRIMATHI T. N.—
Cinemas (Regulation) Amendment Bill, 1964 311–313
City Tenants' Protection (Amendment) Bill, 1964 .. .. .. 453–455, 471, 472
Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964 (L. A. Bill No. 23 1964) 318–319
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 .. .. 277–279, 289, 290, 291

ARANGANNAL, SRI RAMA.—
Accounts Branch, Education Department 236
Explosion in godown in Madras City, number of deaths 2–7
Goldsmiths, free education to children 421
Harijans, amenities 342–343
Renaming the State of Madras as Tamilnad, Amendment of the Constitution (R) 95–100
State Housing Board, activities 445
University classes, English as medium of instruction 430

ARREST—
Corporation Councillor 7–14

ARUMUGAM, SRI A.—
Madras City roads, taking over 329–330
Pumpsets, installation 115–117

ARUMUGAM, SRI S.—
Coal, Rasipuram Taluk, occurrence 359
Village servants, emoluments 132

ARUNACHALAM, SRI V.—
Rural Co-operative Housing Societies, Pattukottai taluk 417–418

B

PAGES

BABY FOOD—
Factory, Establishment at Ootacamund 233–234

BALAKRISHNAN, SRI A. G.—
Electricity, extension to Marakanam and Vanur 118–119
Electricity, supply to villages 118
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 .. 198
Radios in Panchayats, repairs 448

BEGGAR HOMES—
Chidambaram 18
Details 445–446

BILL(S)—
Appropriation (No. 4) Bill, 1964 :—
Consid. 141–155
Consid. cl. 155
Motion to pass 155–156
Passed 156
Message from L. C. agreeing without recommendation 320

Appropriation (No. 5) Bill, 1964 —
Consid. .. .. } 156
Consid. cl. .. .. }
Motion to pass .. .. }
Passed .. .. }
Message from L. C. agreeing without recommendation 320

Cinemas (Regulation) Amendment Bill, 1964—
Consid. 309–314
Consid. cl. 314–317
Motion to pass 317
Passed 317

City Tenants' Protection (Amendment) Bill, 1964—
Consid. 452–470
Consid. cl. 470–475
Motion to pass 475–476
Passed 477

Compulsory Labour (Amendment) Bill, 1964—
Int. .. .. } 305
Consid. .. .. }
Consid. cl. .. .. }
Motion to pass .. .. }
Passed .. .. }

Disclosure of the Assets of the Members of the Legislature Bill 1964—
Int 30

PAGES

B—*cont.*

BILLS—*cont*

General Sales-Tax (Second Amendment) Bill, 1964—
- Message from Governor 29
- Int. 29
- Consid. 381–389
- Consid. cl. 389–390
- Motion to pass 390
- Passed 390

Hackney Carriage (Amendment) Bill, 1964—
- Message from Governor 297
- Int. 297
- Consid. 297–304
- Consid. cl. 304
- Motion to pass 304
- Passed 304

Hindu Marriage (Madras Amendment) Bill, 1964—
- Consid .. .. .. — 41–54
- Withdrawn 54

Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964—
- (L.A. Bill No. 5 of 1964) Consid 30–41
- Lost 41

Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964 (L.A. Bill No. 23 of 1964)—
- Consid 317–319
- Consid. cl. 319
- Motion to pass 319
- Passed 319

Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964—
- Message from Governor 379
- Consid. 379–381
- Consid. cl. .. .. } 381
- Motion to pass .. .. }
- Passed .. .. }

Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms (Amendment) Bill, 1964—
- Int. 306
- Consid. 306–307
- Consid. cl. 307
- Motion to Pass 307
- Passed 307

Maternity Benefit (Repeal) Bill, 1964—
- Consid 307–309
- Consid. cl. 309
- Motion to Pass 309
- Passed 309

PAGES

B—*cont.*

BILLS—*cont.*

Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1964—
- Consid. 157–170
- Consid. cl. 170
- Motion to pass 170
- Passed 170

Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964—
- Consid. 170–212, 253–257
- Consid. cl. 257–294
- Motion to pass 294–297
- Passed 297

Prevention of Begging (Amendment) Bill, 1964—
- Message from Legislative Council agreeing without amendment .. 319

Public Buildings (Licensing) Bill, 1964—
- Int. 141
- Message from Governor 363
- Consid. 363–366

Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Bill, 1964—
- Int. .. .. } 366–367
- Consid. .. .. }
- Consid. cl. .. .. }
- Motion to pass .. .. }
- Passed .. .. }

Rinderpest (Amendment) Bill, 1964—
- Message from the Governor 367
- Int. .. .. } 367–379
- Consid. .. .. }
- Consid. cl. .. .. } 379
- Motion to pass .. .. }
- Passed .. .. }

Travancore-Cochin Limeshells (Control) Repeal Bill, 1964—
- Int. 253

BOOKS—
- Publication by teachers 445

BRIDGE (S)—
- Bridge across Vellar—expenditure for widening 359
- Over-bridges, Construction 327–328

BUILDING(S)—
- Panchayat Union, Kumaratchi, Construction of Office Building .. 24–25
- School Buildings, Grants 432–433

PAGES

B—*cont.*

BURMA REPATRIATES—
Rehabilitation 218–226

BUS PERMITS—
Sale 408

BUS ROUTES—
Surrender 405–408

C

CALLING ATTENTION—
Colleges, difficulties in securing admission 28
Crops, failure in East Ramanathapuram district 251–252
Eviction of Ryots from Kandamanur 361–362
Former District Board High Schools, North Arcot district, non-availability of teachers 451
State Transport Buses—increase in fares 139–140

CANCER—
Supply of Radium to Erskine Hospital, Madurai 16

CARS—
Foreign-made cars, Purchase 409–410

CELEBRATIONS—
Special Weeks, details 349

CEMENT—
Distribution 330–336

CEYLON REPATRIATES—
Educational concession forms 127–128

CHAIR—
Announcement—
B.O.H 102

RULINGS AND OBSERVATIONS—
Division—
During division on an amendment to a Bill, a Member was seen neither fully sitting nor fully standing when his name was called. Thereupon, the Chair held that in future, if a Member was seen neither fully sitting nor fully standing, he would be considered as 'neutral. 287

OBJECTIONABLE EXPRESSION—
'மோசடி' (Fraud) in the expression 'fraud on the Constitution'—
Held not in order 68

CHEEMAICHAMI, SRI K.—
Baby Food Factory, Establishment at Octacamund 233–234
By-election in Aruppukkottai constituency, arrests 435
Crops, Failure in East Ramanathapuram district (C.A.) 251
Jawaharlal Nehru's ashes, hoax played in Coimbatore 400
Kanmois, Madurai and Ramanathapuram district, Damages .. 226
Revenue Test—Part III, *re*-examination 422
Village Officers (Thanjavur district), Resignation 132–134

PAGES

C—*cont.*

CHINNASAMY, SRI T.—
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 .. 193

CHIRANJEEVULU NAIDU, SRI C.—
City Tenants' Protection (Amendment) Bill, 1964 467–468
Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964 380–381
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 .. 173, 203–204, 257–258, 262–263, 268, 269, 287–288, 290, 291–293, 295–296
Rinderpest (Amendment) Bill, 1964 370–371
Southern Regional Conference on Agricultural Production 226–228

CHOLERA—
Tindivanam taluk 19

CINEMA THEATRES—
Municipalities, Running 125–127

COAL—
Rasipuram taluk, occurrence 359

COLLECTORS—
Public grievances, instructions to 244–246

COLLEGES—
Arts College, Salem, introduction of Tamil as medium of instruction 429
Difficulties in securing admission (C.A.) 28
Medium of instruction 429–430
Private Technological Colleges, Grant-in-aid 418

COMMERCIAL TAXES DEPARTMENT—
Surprise inspection in Tiruchirappalli 419–421

COMMITTEE(S)—
Estimates, Association of Council Members (R) 29
Estimates, Nomination of Council Members (Ann.) 320
Privileges, Report on 'Tamil Seithi' Case, presentation 252
Public Accounts—, Association of Council Members (R) 29
Public Accounts, Nomination of Council Members (Ann.) .. 320
Washermen—to study working conditions 235–236

COMMUNAL DISTURBANCES—
Clash in Madras City 450–451
Clash in Silambanur village 434–435

PAGES

C—*cont.*

CONFERENCE(S)—
Chief Ministers' Cooference, stablisation of prices 105–114
Food Ministers' Conference Conclusions 105
Panchayat officers, conference, resolutions 348–349
Southern Regional Confernece on Agricultural Production .. 226–228

CONSTITUTION—
Amendment, Renaming State of Madras as 'Tamilnad' (R) .. 54–101
Burning of Constitution, action taken against offenders 436–437

CO-OPERATION—
Farming Societies, Thiruthuraipoondi and Nagapattinam taluks .. 25–26
Hand-pounding Paddy Co-operative Societies, South Arcot district. 360
Tea Factories, Establishment in Nilgiris district 241–242

CORPORATION—
Councillor, arrest 7–14

CROPS—
Damage in Udayarpalayam taluk 135
East Ramanathapuram district, Failure (C.A.) 251–252

D

DEGREE COURSE—
Nursing 16–17

DEPARTMENTAL TESTS—
Revenue Test—Part III, re-examination 422

DHAKSHINAMOORTHY GOUNDER, SRI A.S.—
Renaming the State of Madras as Tamilnad, Amendment of the Constitution (R) 54–62

DHANDAYUTHAPANI, SRI M.—
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964. 193–195

DHARMALINGAM, SRI A. P.—
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1964 161–162
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 .. 174–180

DISEASES—
Cholera, number of deaths 355–357

DIVISION(S)—
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 Amendment to Clause 12 284–287

DURAIARASAN, SRI A.—
Lands, assignment to Harijans 339–341
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1964 166–168
Rindorpest (Amendment) Bill, 1964 374–376
Rural Co-operative Housing Societies, Pattukottai taluk 417–418
Work-charged personnel, provincialisation 119–120

E

PAGES

EDUCATION—
Special Accounts Branch to assist the Deputy Director of Public Instruction (Finance) 236
University classes, English as medium of instruction 430

ELECTIONS—
By-election in Aruppukkottai constituency, arrests 435
Panchayats 215–218

ELECTRICITY—
Inspection bungalows, Vriddhachalam taluk 35
Marakanam and Vanur Union areas 118–119
Supply to villages 118

ELLAMA NAIDU, SRI V.—
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 .. 192–193

EMPLOYEES (GOVERNMENT)—
Employees of ex-Travancore-Cochin State, fixation of rank and pay 417

ENGINEERING—
Prize Fund for inventions of new techniques 241

EXPLOSION—
Godown in Madras City, Causes 1–7

F

FACTORIES—
Baby Food, Ootacamund 233–234
Pump Compressor —, Starting 243
Tea —, Establishment in Nilgiris district 241–242
Tractor—, Establishment 240–241

FAIR PRICE SHOPS—
Details 449

FAMILY PLANNING—
Fecundity, regaining after operation 14–15

FILMS—
Censorship of Tamil Films, Regulations 18

FIRE ACCIDENTS—
Subsidy to victims 228–233

FIREWOOD—
Scarcity 16

FISHERIES—
Fishing Harbour, Leepuram 130–131

FIVE-YEAR PLANS—
Plan Outlay for 1964–65 408
Third Five-year Plan, Chinnar and Thoppaiar Schemes 131

FLOOD BANK—
Vaigai river 124–12

F—*cont.*

PAGES

FOOD—
Chief Ministers' Conference, stabilisation of prices 105-114
Food Ministers' Conference, conclusions 105

FOODGRAINS—
Fair Price Shops, details 449

G

GANESAN, SRI SAW—
Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964 (L.A. Bill No. 5 of 1964) 34-36
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1964 160-161
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 .. 209-210
Renaming the State of Madras as Tamilnad, Amendment of the Constitution, (R) 83-87, 101

GOLDSMITHS—
Free education to children 421

GOPALA GOUNDER, SRI K,—
Sri Ranganathaswami temple, Singavaram, renovation 422
Taluk Headquarters Hospital, Gingee 402-403

GOVERNMENT PRESS—
Theft 411-414

GOVERNMENT SERVANTS—
Rental flats at Coimbatore 235
Scales of pay 424-425
Secretariat Superintendent, re-employment after retirement .. 433

GOVINDAN, PULAVAR K.—
All India Services, creation 422-423
Bus routes, surrender 405-408
Cinemas (Regulation) Amendment Bill, 1964 315
Fire Accidents, Subsidy to victims 228-233
Former District Board High Schools, North Arcot district, non-availability of teachers (C.A.) 451
Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill 1964 (L.A. Bill No. 5 of 1964) 30-32, 40
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 .. 188-189
Private Technological Colleges, grant-in-aid 418
Prize Fund for inventions of new techniques in Engineering .. 241
Renaming the State of Madras as Tamilnad, Amendment of the Constitution (R) 62-64
Rinderpest (Amendment) Bill, 1964 372-373
Scholarships, Post-Diploma courses 440
Smallpox in Cheyyar taluk, Prevalence in epidemic form 15
University, Governor being the Chancellor 419

GRANTS—
Development Grants, Municipalities 344

G—*cont.*

PAGES

GUR (MOVEMENT CONTROL) ORDER—
Repealing 132

H

HARIJANS—
Amenities 342-343
Lands, assignment 339-341

HIGHWAYS—
Lease income, avenue trees, realisation 338
Research station, recruitment of Research Assistant 326-327

HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS DEPARTMENT—
Deputy Commissioners, appointment 435-436

HOSPITAL(S)—
Government—, Chidambaram 239
Government—, Puliyangudi 358
Government—, Sendamangalam 239-240
Headquarters—, South Arcot 397-400
Peralam Hospital, taking over 403-404
South Arcot, air-conditioning of operation theatres 419
Taluk Headquarters Hospital, Gingee 402-403
Thittagudi, expansion 347-348
Vallampadugai, opening 403

HOUSING—
Rental flats for low-paid Government employees at Coimbatore .. 235
Rural Co-operative Housing Societies, Pattukottai taluk 417-418
State Housing Board, activities 445
Urur Scheme (State Housing Board) 236-237
Valayar Community, Poolankurichi, Construction 343-344

I

INDUSTRIES—
Income 447
Industrial Development Corporation, starting 120 121
Match Industries, grant of loans 358
Sales Depots 249-250

INSPECTION BUNGALOWS—
Vridhachalam Taluk, Electrification 354

INVENTIONS—
Prize Fund for—of new techniques in Engineering 241

IRRIGATION—
Agriculturists in Parambikulam-Aliyar Project, Financial aid .. 243-244
Anicut across Marudha river, Construction 354-355
Gomukhi river project 135
Mettur dam, water level 325-326
Nallaru, Diversion and draining into Vedaranyam Canal 238

I—*cont.*

PAGES

IRRIGATION—*cont.*

Rama Nadhi, Gatana Nadhi, Keeriyar and Vaippar River Schemes, Tirunelveli District 242–243
Sethiyathope Anicut, connection to Vadavar channel 237
Sethiyathope Anicut, widening 237
Tambaraparani, harnassing river-bed water 135–136
Tank near Ummiampatti, Construction 237–238
Thennal Project near Kappiayambuliyur 234–235

J

JAWAHARLAL NEHRU—

Ashes, hoax played in Coimbatore 400
Ashes, immersion 400–402

JAYARAJ, Sri P.—

Aduthurai—Porayar road, taking over 330
Peralam Hospital, taking over 403–404

JOTHI VENCATACHELLUM, Srimathi—

Cinemas (Regulation) Amendment Bill, 1964 .. .. 309–310, 314–315, 317
Maternity Benefit (Repeal) Bill, 1964 309

K

KADAMBAVANASUNDARAM, Sri T.

Municipalities, Development grants 344

KAKKAN, Sri P.—

Rinderpest (Amendment) Bill, 1964 .. .. 367–369, 376–379

KALYANASUNDARAM, Sri M.—

Appropriation (No. 4) Bill, 1964 .. .. 142–147, 155–156
Burma Repatriates, Rehabilitation 218–226
Cement, distribution 330–336
Chief Minister's conference, stabilisation of prices 105–114
City Tenants' Protection (Amendment) Bill, 1964 .. .. .. 460–465, 472, 473, 476, 477
Colleges, medium of instruction 429–430
Commercial Tax Department, surprise inspection in Tiruchirappalli 419–421
Explosion in godown in Madras City, causes 1–7
Fair price shops, details 449
Food Ministers' conference, conclusions 105
Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964 (L.A. Bill, No. 5 of 1964) 36–37
Jawaharlal Nehru's ashes, immersion 400–402
Mettur Dam, water level 325–326
Modern Rice mill, setting up 345–343
Motor accidents, applications disposed of by the Claims Tribunal .. 418–419
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1964 157–160

K—*cont.*

PAGES

KALYANASUNDARAM, Sri M.—*cont.*

Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 173, 204–208, 257, 258–262, 271, 275–277
Plan Outlay for 1964–65 408
Railway level crossings, accidents 351–353
Renaming the State of Madras as Tamilnad, Amendment of the constitution (R) 80, 83–101
Salem Iron ore, Dasthur companys' report 128–130
State Transport System, Appointment of a Committee to enquire into the working (R) 103

KAMALANATHAN, Sri M.—

Panchayats (Amendments and Miscellaneous provisions) Bill, 1964 195–196

KANMOIS—

Madurai and Ramanathapuram districts, Damages 226

KARCHA GOWDER, Sri T.—

Baby Food Factory, Establishment at Ootacamund 233–234
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 186–187
Tea Factories in Nilgiris District, Establishment 241–242

KARIVENGADAM, Sri M. V.—

Cholera, number of deaths 353–357
Firewood, Scarcity 16
Renaming the State of Madras as Tamilnad, Amendment of the Constitution (R) 75–76
State Seed Farms, Income and expenditure 358
Vigilance Institutions, women Committed 121

KARUNANITHI, Sri M.—

Drinking Water-Supply Scheme, Coimbatore Town 250–251
General Sales Tax (Second Amendment) Bill, 1964 389
Industrial Development Corporation, starting 120–121
Jawaharlal Nehru's ashes, hoax played in Coimbatore 400
Model Foundries and Tool Rooms, establishment 448
Roads, transfer from Madras Corporation to Highways Department. 449–450
State Transport records, Consultation by the Research Students .. 20

KOSALRAM, Sri K. T.—

Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 .. 198–200
Renaming the State of Madras as Tamilnad, Amendment of the Constitution (R) 70–73

KRISHNAMOORTHI, Sri M. R.—

Cholera, number of deaths 355–357
Veeranam tank, South Arcot District 410

KRISHNAMOORTHY, Sri V.

Cinemas (Regulation) Amendment Bill, 1964 311
Foreign-made cars, purchase 409–410
Government Servants, scales of pay 424–425

K—*cont.*

PAGES

KRISHNAMOORTHY, SRI V.—*cont.*
Headquarters Hospital, South Arcot district 397–400
Hindu Marriage (Madras Amendment) Bill, 1964 46–49
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964.. 184–186, 270, 271–273
Secretariat Superintendent, re-employment after retirement .. 433
Union Public Service Commission, conduct of examination in Hindi 437–440

KRISHNASWAMI, SRI K. M.—
Thennal Project near Kappiyambuliyur 234–235

KULANDAIAMMAL, SRIMATHI C.—
Renaming the State of Madras as Tamilnad, Amendment of the Constitution (R) 65–67

KULANDAISWAMY GOUNDER, SRI M.—
Occupants of Kudiyiruppu (Protection from eviction) Amendment Bill, 1964 166

L

LANDS—
Assignment to Harijans 339–341

LIBRARIES—
Districtwar particulars 361

LOANS—
Match Industries, granting 358

LODGINGS—
Construction with Central aid 23–24

M

MADHAVAN, SRI S.—
Advocate-General, appointment 431–432
Aided Schools, benefits to non-teaching staff 443
Burning of Constitution in Cuddalore, action taken against offenders 436–437
Cinemas (Regulation) Amendment Bill, 1964 315–316
Colleges,—difficulties in securing admission (C. A.) 28
Communal clash in Silambanur village 434–435
Disclosure of assets of the Members of the Legislature Bill, 1964 .. 30
Explosion in godown in Madras City, number of deaths 2–7
Hindu Marriage (Madras Amendment) Bill 1964 .. .. .. 41–46, 51–54
Houses to Valayar Community, Construction 343–344
Land Ceiling Act, Case in Supreme Court *re*—validity 122–124
Lion Sanctuary 136–137

M—*cont.*

PAGES

MADHAVAN, SRI S.—*cont.*
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964. 173, 200–202, 257, 263–264, 266, 267, 270–271, 274–275, 288
Police Station, Gandarvakottai, death 440–442
Small-scale steel rolling mills, non-functioning.. 410
State Transport, Kanyakumari District, Employees strike 20–23
Vigilance Commission, change in Directorate 426
Village officers (Thanjavur District), resignation 132–134
Water-supply to Madras City, augmentation 404–405

MAJID, SRI S. M. A.—
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 .. 170–173, 253–256, 294, 296–297

MANI, SRI K. S.—
Village Officers (Thanjavur District), resignation 132–134

MANI, SRI M. S.—
Drinking Water-supply Scheme, Coimbatore Town 250–251
Lodgings, Construction with Central aid 23–24

MANI, SRI S.—
Books, publication by teachers 445

MANI, SRI V. S. S.—
Anicut across Marudha river, Construction 354–355
Cancer, supply of Radium to Erskine Hospital, Madurai 16

MATHA GOWDER, SRI J.—
Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964 (L. A. Bill No. 5 of 1964) 32–34
Maternity Benefit (Repeal) Bill, 1964 308–309
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 .. 189–190
Renaming the State of Madras as Tamilnad, Amendment of the Constitution (R) 76–78

MATHIALAGAN, SRI K. A.—
Agriculturists in Parambikulam-Aliyar Project, Financial aid .. 243–244
Arts Colleges, introduction of Tamil as medium of instruction .. 426–429
Cinemas (Regulation) Amendment Bill, 1964 310–311
City Tenants Protection (Amendment) Bill, 1964 455–457
Difference in answers to main questions and supplementary questions (Privilege matter).. 362–363
Government Press, Madras, theft 411–414
Hackney Carriage (Amendment) Bill, 1964 298–301

M—*cont.*

PAGES

MATHIALAGAN, SRI K.A.—*cont.*
Harijans, amenities .. 342–347
Jawaharlal Nehru's ashes, immersion .. 400–402
Ministers' residential telephones charges .. 357
Nursing, Degree Course .. 16–17
Renaming the State of Madras as Tamilnad, Amendment of the Constitution (R) .. 67–70, 94–95
School buildings, grants .. 432–433
Slum improvement, Madurai, action taken .. 354
Storeyed rental flats for low-paid Government employees at Coimbatore .. 235
U.P.S.C. Examination, Inclusion of Tamil as one of the media (R) .. 101–102

MAYANDI NADAR, SRI M.—
Government Press, Madras, theft .. 411–414

MEDICAL—
Medicinal Herbs Farm, starting at Kollimalai .. 17

MEDIUM OF INSTRUCTION—
University Classes, English as medium of instruction .. 430

MINES AND MINERALS—
Salem Iron ore, Dasthur Company's report .. 128–130

MINIMUM WAGES ACT—
Review of working .. 238

MINISTERS—
Residential telephones, charges .. 357

MOOKIAH THEVAR, SRI P. K.—
Explosion in godown in Madras City, number of deaths .. 2–7
Highways Research Station, recuitment of Research Assistant .. 326–327
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 .. 202–203

MOTION(S)—
B.O.H., Change in order .. 156, 252

MUNICIPALITIES—
Cinema Theatres, running .. 125–127
Development grants .. 344
Tiruchirappalli Municipality, Resolution to transfer the D. M. O., Tiruchirappalli .. 240

MUNU ADHI, SRI—
Basic Schools, starting .. 430–431
Schools, supply of printed forms .. 414

N

PAGES

NALLASENAPATHI SARKARAI MANRADIAR, SRI N.—
Eviction of ryots from Kandamanur (C.A. St.) .. 361–362

NALLASIVAM, SRI K. R.—
Jawaharlal Nehru's ashes, hoax played in Coimbatore .. 400
Washermen, Committee to study the working conditions .. 235–236
Washermen, supply of soda ash, etc. .. 446–447

NARAYANAN, SRI R.—
Panchayats (Amendment and Miscellaneous (Provisions) Bill, 1964 .. 182–183
Rinderpest (Amendment) Bill, 1964 .. 373–374

NARAYANASWAMY PILLAI, SRI K.—
Cholera, number of deaths .. 355–357
Hospital, Thittagudi, expansion .. 347–348
Inspection bungalows, Vriddhachalam taluk, Electrification .. 354
Panchayats, bus-stands .. 445

NATARAJAN, Dr. B.—
Pension cases, pendancy in Kanyakumari district .. 414

NEDUNCHEZHIYAN, SRI V. R.—
Appropriation (No. 4) Bill, 1964 .. 147–151
Hackney Carriage (Amendment) Bill, 1964 .. 302–303
Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill 1964 (L.A. Bill No. 5 of 1964) .. 37–38
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 .. 211–212, 267, 279–281
Panchayats, Election .. 215–218
Renaming the State of Madras as Tamilnad, Amendment of the Constitution (R) .. 87–91, 101
State Transport Buses, increase in Fares (C.A.) .. 139

NEWSPAPERS—
Privileges Committee Report on 'Tamil Seithi' case, presentation .. 252

NURSING—
Degree Course .. 16–17

O

OBITUARY REFERENCE—
Hanumanthaya Gounder Sri A. K., Ex-M.L.A. .. 1

OFFICERS (GOVERNMENT)—
District Medical Officer, Tiruchirappalli, Transfer .. 240
Re-employment after retirement .. 415–416

P

PAGES

PANCHAYAT(S)—
Boards Inspecting Officers 416
Bus-stands 445
Conversion as Municipalities 349–351
Election 215–218
Officers' Conference, resolutions 348–349
Union buildings, Construction 130

PAPERS LAID ON THE TABLE—
Agricultural Produce Markets Act, 1959, Notification 390
Appropriation (No. 4) Bill, 1964 320
Appropriation (No. 5) Bill, 1964 320
Central Sales Tax, 1956, notification 478
Cinemas (Regulation) Amendment Bill, 1964 104
Cinemas (Regulation) Amendment Bill, 1964, Annexure 320
City Tenants' Protection (Amendment) Bill, 1964 213
Committee of Privileges, report and proceedings on "Tamil Seithi" case 391
Disclosure of Assets of the Members of the Legislature Bill, 1964 .. 477
General Sales Tax (Second Amendment) Bill, 1964 391
Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964 213
Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964 213
Madras City Tenants' Protection (Amendment) Bill, 1964 391
Maternity Benefit (Amendment) Bill, 1964 104
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 .. 104
Prohibition Act, 1937, Notifications 390, 477
Public Buildings (Licensing) Bill, 1964 477
Public Health Act III of 1939, Notification 391
Traffic Act, 1938, Notification 478
Unstarred questions and answers, list 391, 478
Urban Land Tax Act, 1963, Notification 390

PARTHASARATHI, Sri K.—
Privileges Committee, Report on 'Tamil Seithi' case, presentation. 252

PENSIONS—
Pension cases, pendency in Kanyakumari district 414

PERIANNAN, Sri V. R.—
Arts College, Salem, introduction of Tamil as medium of instruction. 429
Govenment Hospital, Sendamangalam 239–240
Medicinal Herbs Farm, starting at Kollimalai 17

POLICE—
Police Station, Gandarvakottai, death 440–442

POLYTECHNICS—
Bhaktavatsalam Polytechnic, Kancheepuram, expansion 416

P—*cont.*

PAGES

PONNAMMAL, Srimathi A. S.—
Flood bank, Vaigai river 124–125
Protected Water Supply Scheme, Palamedu firka 17–18
Railway line (Dindigul—Bodinayakkanur), laying 336–337
Rinderpest (Amendment) Bill, 1964 371–372

PRIVILEGE(S)—
Difference between answers to main questions and supplementary questions 362–363
Report on 'Tamil Seithi' case, presentation 252

PUBLIC GRIEVANCES—
Instructions to Collectors 244–246

PUBLIC SERVICES—
All-India Services, creation 422–423

PUBLIC WORKS—
Inspection Bungalows, Vriddhachalam, taluk, electrification .. 354
Work-charged establishment, provincialisation 119–120

R

RADIOS—
Radios in Panchayats, repairs 448

RAGHAVA REDDI, Sri A.—
Housing, Urur Scheme (State Housing Board) 236–237

RAILWAY(S)—
Dindigul—Bodinayakkanur Railway line, laying 336–337
Level crossings, accidents 351–353
Tambaram Railway station, clash between military personnel and some workers of a factory 444

RAJANGAM, Sri M.—
Chakloothumettu Road, formation 357
Eviction of ryots from Kandamanur (C.A.) 361
Films (Tamil), Censorship Regulation 18
Municipalities, running of Cinema Theatres 125–127
Renaming the State of Madras as Tamilnad, Amendment of the Constitution (R) 78–80

RAJANGAM, Sri N.—
Renaming the State of Madras as Tamilnad, Amendment of the Constitution (R) 73–74

RAMACHANDRA RAYAR, Sri A.—
Sethiyathope Anicut, connection to Vadavar channel 237
Sethiyathope Anicut, widening 237

RAMAIAH, Sri V.—
City Tenants' Protection (Amendment) Bill, 1964 .. .. .. 452, 469–471, 475

PAGES

SRINIVASAN, Sri C.—
Salaigramam—Serugani Road, improvement 329

STATE TRANSPORT—
Kanyakumari district, Employees' strike 20–23
Records, Consultation by Research students 20
Stoppage of Express buses at Kariamangalam 19–20

SELVARAJAN, Sri M. S.—
Ceylon repatriates, Educational concession forms 127–128
City Tenants' Protection (Amendment) Bill, 1964 457–460
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964. 180–182, 294–295
Panchayat Union schools, transfer of teachers from private management schools 442–443
River schemes, Tirunelveli district 242–243
Tambaram Railway station, clash between military personnel and workers of a factory 444
Tambaraparani, harassing river-bed waters 135–136
Teachers in aided schools, Tiruchendur Panchayat Union, payment of salary 443
Water-supply, Koilpatti taluk 238–239

SERVICES—
Work charged personnel, provincialisation 119–120

SHANMUGAM, Sri P. U.—
Bus permits, sale 408
Foreign-made cars, purchase 409–410
Salem iron ore, Dasthur company's report 128–130

SIVASUBRAMANIAN, Sri S.—
Chidambaram taluk, surveying 135
Government Hospital, Chidambaram 239
Hospital, opening at Vallampadugai 403
Hospitals in South Arcot, air-conditioning of operation theatres .. 419
Panchayat Boards, Inspecting Officers 416
Panchayat Union buildings, construction 130
Sethiyathope Anicut, widening 237
Veeranam tank, South Arcot district 410

SOUNTHARAPANDIAN, Sri N.—
Fishing Harbour, Leepuram 130–131
Panchayat officers' conference, resolutions 348–349

SRIRAMULU, Sri P. V.—
General Sales-tax (Second Amendment) Bill, 1964 385–388

STATE HOUSING BOARD—
Activities 445
Urur Scheme 236–237

PAGES.

STATUES—
——— of Foreigners, removal 246–248

STEEL ROLLING MILLS—
Small-scale steel rolling mills, non-functioning 410–411

SUBBIAH, Sri A. K.—
City Tenants' Protection (Amendment) Bill, 1964 468
Co-operative Rice Mills, starting 346–347
District Medical Officer, Tiruchirappalli, transfer 240
Occupants of Kudiyirappu (Protection from Eviction) Amendment Bill, 1964 162–163
Public grievances, instructions to Collectors 244–246
Pump Compressor Factory, starting 243
Rinderpest (Amendment) Bill, 1964 369–370
Sales Depots (Industries Department) 249–250
Statues of foreigners, removal 246–248
Village Officers (Thanjavur district), resignation 132–134

SUBRAMANIAM, Sri R.—
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1964 163–166

SURVEY—
Chidambaram taluk, surveying 135

T

'TAMIL SEITHI'—
Privileges Committee Report on———Case, presentation 252

TANK(S)—
Swamikulam Eri, improvements 115
Veeranam tank, South Arcot district 410

TEA—
Factories, establishment in Nilgiris district 241–242

TEACHERS—
Former District Board High Schools, North Arcot district, non-availability of teachers in (C.A.) 451
Harijan Welfare School 26–27
Publication of books 445
Tamil pandits, appointment 444
Teachers in aided schools, Tiruchendur Panchayat Union, payment of salary 443
Transfer from private management schools to Panchayat Union schools 442–443

TEAK—
Planting 114–115

T—*cont.*

PAGES

TELEPHONES—
Ministers residential telephones, charges 357

TEMPLES—
Sri Ranganathaswami Temple, Singavaram, renovation 422

THANGAVELU, SRI A.—
Cholera in Tindivanam taulk 19

TOURIST—
Decision taken by South Zone Tourist Advisory Committee for promotion 23
Tourist Home, Tiruchirappalli 23

TRANSPORT AND COMMUNICATIONS—
State Transport Buses, increase in fares (C.A.) 139-140

TREES—
Avenue trees, lease income, realisation 338

U

UNION PUBLIC SERVICE COMMISSION—
Conduct of Examination in Hindi 437-440

UNIVERSITY—
Governor being the Chancellor.. 419

V

VADIVELU, SRI M.P.—
Panchayats (Amendment and Miscellane ous Provisions) Bill, 1964.. 190-192

VEERAPPA CHETTIAR, SRI R.S.—
Chinnar and Thoppaiar Schemes, inclusion in Third Five-Year Plan 131
Elementary schools of Panchayat Unions, repairs. 416-417
Hindu Religious and Charitable Endowments Department, Deputy Commissioners, appointment. 435-436
Irrigation tank near Ummiampatty, construction 237-238
Match industries, grant of loans 358
Panchayats, conversion as municipalities 349-351
Ponnagaram—Denkanikotta Road, black topping 358
State Transport, stoppage of Express at Kariamangalam 19-20
Water-supply scheme for Dharmapuri, inclusion in Five-Year Plan .. 405

VENKATARAMAN, SRI R.—
Appropriation (No. 4) Bill, 1964 .. .. 141, 151-155
Appropriation (No. 5) Bill, 1964 156
B.O.H., Change in order.. .. .. 156, 252
Cinemas (Regulation) Amendment Bill, 1964 .. .. 313-314, 316
City Tenants' Protection (Amendment) Bill, 1964 .. .. .. 459, 473-475

V—*cont.*

PAGES

VENKATARAMAN, SRI R.—*cont.*
Colleges, difficulties in securing admission (C.A.St.) 28
Committee on Estimates, Association of Council Members (R) .. 29
Committee on Public Accounts, Association of Council Members (R) 29
Disclosure of the Assets of the Members of the Legislature Bill, 1964 30
Former District Board high schools, North Arcot district, non-availability of teachers in (C.A.St.) 451
General Sales-tax (Second Amendment) Bill, 1964 .. .. .. 29, 381-385, 386-390
Hackney Carriage (Amendment) Bill, 1964 .. .. 297-298, 303-304
Hindu Marriage (Madras Amendment) Bill, 1964 50-54
Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964 .. .. 38-41, 317, 318-319
Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms (Amendment) Bill, 1964 306-307
Maternity Benefit (Repeal) Bill, 1964 307
Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964.. 264-266, 267, 268, 269, 273, 274, 281, 284, 289, 290, 293, 294
Public Buildings (Licensing) Bill, 1964 .. .. 141, 363-366
Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Bill, 1964 366-367
Renaming the State of Madras as Tamilnad, Amendment of the Constitution (R) 91-94, 101
State Transport Buses, increases in fares (C.A. St.,) 139-140
Travancore-Cochin Limeshells (Control) Repeal Bill, 1964 253
U.P.S.C. Examination, inclusion of Tamil as one of the media (R) .. 101-103

VIGILANCE COMMISSION—
Change in Directorate 426

VIGILANCE INSTITUTIONS—
Women committed, number 121

VILLAGE OFFICERS—
Emoluments 132
Resignation 132-134

W

WASHERMEN—
Committee to study the working conditions 235-236
Supply of soda ash, etc. 446-447

WATER SUPPLY—
Coimbatore Town 250-251

W—*cont.*

PAGES

WATER-SUPPLY—*cont.*
Dharmapuri, inclusion of Scheme in Five-Year Plan 405
Kallakurichi Taluk 250
Koilpatti Taluk 238–239
Madras city, augmentation 404–405
Palamedu firka 17–18

WILD LIFE—
Lion Sanctuary 136–137

WILLIAM, SRI M.—
Employees of ex-Travancore-Cochin State, fixation of rank and pay 417

WORKSHOPS—
Model foundries and Tool rooms, establishment 448

WORLD FAIR—
Products of Madras State, Exhibition 249

Y

YARN—
Production 448

D
N211,31 N64
N64.23

138007

1311
2556